வெளியீடு—13-1-1981]

[Issued—13-1-1981

80 | 81

1634.

# தமிழ் நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES

## பணித்துறை வெளியீடு—OFFICIAL REPORT

புதன்கிழமை 1980 ஜூலை 30 Wednesday 30th July 1980
தொகுதி VI—எண் 4 — Volume VI—No. 4.

©
தமிழ்நாடு அரசு—GOVERNMENT OF TAMIL NADU
1981

சட்டமன்றப் பேரவைத் துறை, சென்னை-600 009
Legislative Assembly Department, Fort, St. George, Madras-600 009

[Price 3.15 Paise

விலை 3 15 காசுகள்]

12.3.079

உள்ளடக்கம்.

30—7—80.


பக்கங்கள்

1. வினாக்கள் — விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள் .. .. 569—602

2. பாராட்டுரை—

ஒலிம்பிக் ஹாக்கி விளையாட்டில் இந்தியா தங்கப்பதக்கம் பெற்றுள்ளது .. .. 602—604

3. கவன ஈர்ப்புகள்—

(அ) மணலி எண்ணெய் சுத்திகரிப்பு ஆலைக்கு குழாய்மூலம் வரும் கச்சா எண்ணெய் திருடப் பெறுவது.. .. .. .. .. 604—607

(ஆ) கலசப்பாக்கம் தொகுதி சாணார்பாளையத்தில் அரசினர் உயர்நிலைப்பள்ளி கட்டிடம் சேதம் அடைந்துள்ளது .. 607—609

4. அரசினர் சட்ட முன்வடிவுகள்—

(அ) பொதுப் பொறுப்புக் கழகங்கள் (வேளாண்மை நிலங்கள் நிர்வாகத்தை முறைபடுத்துதல்) இரண்டாம் திருத்த சட்ட முன்வடிவு, 1980 .. .. 609

(ஆ) கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அதிகாரிகள் நியமனம்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1980 .. .. .. .. 609—610

பக்கங்கள்.

(இ) நிதி ஒதுக்கம் (எண். 2) சட்ட முன்வடிவு, 1980 .. .. .. .. 610—725

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன். 610,711—725

திரு. பெ. சு. திருவேங்கடம் 610—615

திரு. கா. கோபாலகிருஷ்ணன். 615—617

திரு. க. வெ. வீரனம்பலம். 617—621

திரு. ஆர். டி. கோபாலன். 621—624

திரு. என். சங்கரய்யா. 624—635

திரு. டி. கே. கபாலி. 635—644

மாண்புமிகு திரு. பா. குழந்தைவேலு. 636—637

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன். 639,708—709

திரு. இரா. கருப்பையா. 644—651

திரு. இ. முத்துராமலிங்கம். 651—654

திரு. தா. சாமிக்கண்ணு. 654—655

திரு. மே. அ. இராசகுமார். 655—656

திரு. கே. எஸ். ஜி. ஹாஜா செரீப். 656—663

திரு. பெ. திருமாறன். 663—666

திரு. கெ. சொக்கலிங்கம். 666—670

திரு. பொ. விஜயராகவன். 670—674

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள். 674—678

திரு. பி. எம். வெங்கடேசன். 678—680

திரு. பி. எஸ். துரைசாமி. 680—683

திரு. த. வீராசாமி. 603—686

திரு. அ. ரகுமான்கான். 686—710

5. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள் .. 726


## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

### புதன்கிழமை 1980 ஜூலை, 30.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9–00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

“ சொற்கோட்டம் இல்லது செப்பும் ஒருதலையா
உட்கோட்டம் இன்மை பெறின். ”

சொல்லில் குற்றம் இல்லாமல் இருப்பதே நடுநிலைமை. ஒருவனது உள்ளம் நடுநிலைமையில் உறுதியாக இருக்குமானால், சொல்லில் குற்றம் இல்லாத நடுநிலைமை வெளிப்படும்.

### 1. வினாக்கள்— விடைகள்.

### உடுக்குறியிட்ட வினாக்கள்.

### இடிந்தகரைப் பகுதியில் கடல் அரிப்புத் தடுப்புத் திட்டம்.

* வினா எண் 71—திரு. இ. முத்துராமலிங்கம் : மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருநெல்வேலி மாவட்டம் ராதாபுரம் தொகுதியில் உள்ள இடிந்தகரை என்னும் மீனவ கிராமத்தில் கடல் அரிப்பதை தடுக்க தடுப்புச் சுவர் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும் ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) மற்றும் (ஆ) : இத்திட்டத்திற்கான தேவையினை ஆய்வு செய்வதற்கு அரசு ரூபாய் 30,000-க்கு ஆய்வு மதிப்பீட்டிற்கு ஒப்புதல் அளித்துள்ளது. இப்பணியினை பொதுப்பணித் துறை கடல் தடுப்புக்கோட்டம், நாகர் கோவில், ஆய்வு செய்கிறது. ஆய்வுப்பணி முடிந்தவுடன், தடுப்புச் சுவர் கட்ட தலைமைப் பொறியாளரிடமிருந்து ஒரு மதிப்பீடு பெறப்பட்டு, அரசினால் ஒப்புதல் அளிக்கப்பட்டவுடன் வேலைகள் துவங்கப்படும்.

[1980 ஜூலை 30

<u>திரு. இ. முத்துராமலிங்கம்</u> ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடல் அரிப்பினால் கிட்டத்தட்ட 50-க்கும் மேற்பட்ட குடிசைகள் பாதிக்கப்பட்டுள்ளன. அப்படிப் பாதிக்கப்பட்ட குடிசைகளுக்கு ஏதாவது மானியம் வழங்க முடியுமா ? இந்தத் திட்டத்தை இந்த நிதி ஆண்டிலேயே நிறைவேற்றுமா என்று அறியவிரும்புகிறேன்.

<u>மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பகுதியில் தென்மேற்குக் கடற்கரைப் பகுதியில் கடலில் எழும் பெரும் அலைகள் காரணமாக கடற்கரை பாதிக்கப்பட்டு, அங்கே இருக்கிற குடிசைகள் பூராவும் பாதிக்கப்பட்டு, அதைக்குறித்து ஆய்வு செய்வதற்காக 30,000 ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அந்த ஆய்வு வந்தவுடன், அது தலைமைப் பொறியாளரிடம் அனுப்பப்பட்டு, அந்தத் தலைமைப் பொறியாளர் அவர்களுடைய மதிப்பீட்டைப் பெற்று, அதன் பின்னர் அரசு ஒப்புதல் பெற்றுத்தான் இதைத் துவக்க வேண்டும். எந்தக் கால அளவுக்குள் இது முடியும் என்று கூற முடியாது. அந்தப் பணிகளை எல்லாம் எவ்வளவு விரைவில் முடிக்கின்ற சூழ்நிலை இருக்கிறதோ அவ்வளவு விரைவில் இதை முடிப்பதற்கு முயற்சிக்கப்படும்.

<u>திரு. கெ. சொக்கலிங்கம் :</u> தலைவர் அவர்களே, இந்தக் கடல் அரிப்பால் மீனவ சமுதாயத்தினர் வாழ்கின்ற குடிசைகள் பாதிக்கப்படுகின்றன. என்னுடைய தொகுதியில் இருக்கக்கூடிய மாமல்லபுரத்தில் இருந்து திருவான்மியூர் வரையில் கடல் அரிப்பு ஏற்பட்டு அங்குள்ள குடிசைகள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. அந்தக் கடல் நீரால் ஏற்படுகின்ற பாதிப்பைத் தடுத்து நிறுத்துவதற்கு அரசிடம் ஏதாவது மாற்றுத் திட்டம் இருக்கிறதா என்பதைக் கேட்கவிரும்புகிறேன். அந்த மீனவர்களுக்கு மாற்று இடம் கொடுக்கப்படுமா ?

<u>மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :</u> தலைவர் அவர்களே, இந்தத் தடுப்புச் சுவர் கடற்கரையிலே எழுப்பப்படுவது குறித்து, திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் தொகுதியில் உள்ள இடிந்தகரை என்னும் மீனவ கிராமத்தில் கடல் அரிப்பைத் தடுக்க தடுப்புச் சுவர் கட்டப்பட அது ஆய்வில் இருக்கிறது என்று எடுத்துச் சொன்னேன். மற்ற இடங்களில் அரிப்புகள் ஏற்படுகின்ற இடங்களில் எல்லாம் என்னென்ன முயற்சிகள் மேற்கொள்ளப்படுகிறது என்பது குறித்து இங்கே குறிப்பில் இல்லை.



1980 ஜூலை 30]

ஆனால் அவர்களுக்கு மாற்று இடம் கொடுப்பார்களா என்று கேட்டார்கள். ஆங்காங்கே இருக்கின்ற சூழ்நிலையை ஒட்டித் தான் கவனிக்கவேண்டும் அங்கே இருக்கிற மீன் துறை அதிகாரிகள் மாவட்ட ஆட்சித் தலைவர்களிடத்திலே விவாதித்து அங்கே இருக்கிற மீனவப் பெருங்குடி மக்களுக்கு உதவிகள் செய்யப்படும்.

<u>திரு. மு. அம்பிகாபதி:</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருநெல்வேலி மாவட்டத்தில் இந்த இடிந்தகரை பகுதி மட்டுமல்ல. பெரும்பாலான மீனவ மக்கள் வாழ்கின்ற பகுதிகள் முழுவதிலும் அரிப்புகள் இருக்கின்றன. அதுமட்டுமல்லாமல் அங்கே இருக்கின்ற சர்ச்சுகள் கூட கடல் அரிப்பால் பாதிக்கப்படுகின்ற நிலை இருக்கின்றது. எனவே திருநெல்வேலி மாவட்டத்தில் மீனவர்கள் வாழுகின்ற பகுதிகளில், சிறப்பான ஒரு திட்டத்தின் மூலம் இந்தக் கடல் அரிப்பைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

<u>மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடற்கரை முழுவதும் அரிப்பு ஏற்படுகின்ற எல்லா இடங்களிலும் தடுப்புச் சுவர் கட்டுவது என்பது இயலாத ஒன்று. தமிழகம் முழுவதும் கடற்கரை பகுதி 1,000 கிலோ மீட்டர் அளவிற்கு இருக்கிறது. எந்தெந்த இடத்தில் அரிப்புகள் ஏற்படுகின்றனவோ அங்கே தான் பாதுகாப்பு தரும் முயற்சிகளில் அரசு ஈடுபடுகிறது. இடிந்த கரைப்பகுதியில் அதிகமாக கடல் அரிப்பு ஏற்படுவதன் காரணமாக, அங்கே தடுப்புச் சுவர் எழுப்பி, அதைக் கட்டவேண்டிய அவசியம் ஏற்படுகிறது. அதற்காக அந்த மதிப்பீடுகள் தீட்டப்பட்டு இருக்கின்றன. மற்றமற்ற இடங்களில் அரிப்பின் தன்மை எந்த அளவிற்கு இருக்கிறது என்பதைப் பார்த்து அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டியிருக்கிறது. மீனவர்கள் குடிசைகளைப் பொறுத்தவரையில், நாம் அவர்களுக்குச் சிறப்பான முறையில் பாதுகாப்பான வகையில் வீடுகட்டித் தரும் வாய்ப்பு ஏற்படுமானால் அதை அரசு கவனிக்கும்.

<u>திரு. ரா. கிருஷ்ணன் :</u> தலைவர் அவர்களே, இடிந்தகரை பகுதியில் அடிக்கடி இப்படி கடல் அரிப்பு ஏற்படுகிறது. அடிக்கடி அங்கே கடலரிப்பால் பாதிப்பு ஏற்படுகிற காரணத்தால் தான் அந்தப் பெயரே இடிந்தகரை என்று வந்திருக்கிறது. ஆகவே, இப்படி அடிக்கடி பாதிப்பு ஏற்படுகின்ற காரணத்தால் பாதிக்கப்படுகின்ற அந்த மீனவர்களுக்கு நிரந்தரமான ஒரு பாதுகாப்புத் திட்டத்தை அங்கே அமல்படுத்த அரசு முன்வருமா?

[1980 ஜூலை 30

<u>மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடலரிப்பைத் தடுப்பதற்கு தடுப்புச் சுவர் எழுப்புவது பற்றிய திட்டம் தான் இப்போது அரசின் ஆய்வில் உள்ளது. அது பற்றிய நடவடிக்கைகளை அரசு ஆய்வு முடிந்தபின் எடுக்கும். அவர்களுக்குப் பாதுகாப்பு என்று வருகிறபோது, கடலிலே புயல் ஏற்படுகிறபோதும் மற்றவற்றின் போதும் அவர்களுக்குப் பாதுகாப்பு ஏற்றவகையில் செய்யவேண்டும் என்கிறபோது வீடு கட்டித் தரும் திட்டம் வருகிறது. அத்தகைய தன்மையில் வருகிறபோது மாண்புமிகு உறுப்பினரின் கருத்தை மனதில் வைத்து, அதைச் செய்யலாம்.

<u>திரு. சேலம் மு. ஆறுமுகம் :</u> தலைவர் அவர்களே, திருநெல்வேலி மாவட்டம் இடிந்தகரையில் மட்டுமல்ல, சென்னை திருவொற்றியூர் நெடுஞ்சாலையிலும் இப்படிப்பட்ட கடலரிப்பு ஏற்பட்டுள்ள காரணத்தால், அந்தப் பகுதி மக்கள் வாழும் குடிசைகளுக்கு மிகவும் ஆபத்து ஏற்பட்டு இருக்கிறது. ஆகவே, அந்தப் பகுதியிலும் கடல் அரிப்பைத் தடுப்பதற்கான சுவர் கட்டுவதற்கு அரசுக்கு உத்தேசம் உண்டா?

<u>மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :</u> தலைவர் அவர்களே, திருவொற்றியூர் நெடுஞ்சாலைப்பகுதியில் கடலரிப்பைத் தடுப்பதற்காக சிலபல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு இருக்கின்றன. அது எந்தநிலையில் இருக்கிறது என்பதைப்பற்றியும், எப்படியெப்படி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு இருக்கின்றன என்பதைப் பற்றியும் தனிக் கேள்வி போட்டால் அதற்காக விடையைத் தரலாம்.

<u>திரு. பி. முகமது இஸ்மாயில் :</u> தலைவர் அவர்களே, இடிந்தகரைப் பகுதியில் கடல் அரிப்பைத் தடுப்பதற்கான சுவர் கட்டுவதற்கான திட்டம் இருப்பதைப்போல், ஏறத்தாழ 37 கிலோ மீட்டர் அளவிற்கு உள்ள கன்னியாகுமரி மேற்குக் கடற்கரைப் பகுதியிலும் கடல் அரிப்பு அடிக்கடி ஏற்படுவதால். அங்கேயும் தடுப்புச் சுவர் கட்டுவதற்கான திட்டம் அரசிடம் இருக்கிறதா? என்பதை அறிய விரும்புவதோடு, இதற்காகத் தனிக்கேள்வி போட வேண்டுமா என்பதையும் அறியவிரும்புகிறேன்.

<u>மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :</u> தலைவர் அவர்களே, இடிந்தகரை பற்றிய குறிப்பு தான் இருக்கிறது. மற்ற இடங்களில் தடுப்புச் சுவர் கட்டுவதற்கான முயற்சிகள் என்னென்ன என்பது பற்றிய குறிப்புகள் இல்லை. தனிக்கேள்வி போட்டால் அது பற்றி அறிவிக்கப்படும்.



1980 ஜூலை 30]

<u>திரு. இல. பலராமன் :</u> தலைவர் அவர்களே, பெயரே இடிந்தகரை என்று குறிப்பிட்டு இருப்பதால், அந்தப் பகுதியில் மக்கள் அங்கே வாழ்வதற்கான சூழ்நிலை இல்லாத காரணத்தால் அந்த மக்களை வேறு இடத்திற்கு மாற்றும் திட்டம் அரசிடம் உண்டா ?

<u>மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :</u> பேரவைத் தலைவர் அவர்களே, அது நீண்டகாலமாகவே கடல் அரிப்பால் இடிந்து இடிந்து இடிந்தகரை என்று பெயர் பெற்று இருக்கலாம். அது இடியாத கரையாக இருக்கவேண்டும் என்ற எண்ணத்தில் தான் அங்கே தடுப்புச் சுவர் எழுப்ப அரசு திட்டமிட்டுள்ளது. அவர்களை வேறு இடத்திற்கு மாற்றுவதைப் பொறுத்த வரையில் அந்த மீனவர்கள் வேறு இடத்திற்குப் போக இசைவு தருவார் களா என்கிற சூழ்நிலை இருக்கிறது. பெரும்பாலும் மீனவர்கள் அந்தப் பகுதியில் தான் வாழ்வதற்கு விரும்புகிறார்கள். காரணம் அவர்கள் மீன்பிடித் தொழில் செய்வதற்கு அது தான் சரியான இடமாக அவர்களுக்கு இருக்கிறது. அவர்கள் தொழில் செய்வதற்கு பாதிப்பு இல்லாத சூழ்நிலையில் இடம் இருக்குமா னால், அங்கே வீடுகள் கட்டிக்கொடுப்பதற்கான முயற்சிகளை மீனளத் துறை முறைப்படி மேற்கொள்ளும்.

<u>பிச்சாவரத்தில் இரால் வளர்ப்பு நிலையம் அமைத்தல்.</u>

*வினா எண் 72.—<u>திரு. த. வேணுகோபால் :</u> மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

பிச்சாவரம் ஏரியில் மத்திய அரசின் உதவியோடு இரால் வளர்ப்பு நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

<u>மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :</u> சிதம்பரம் வட்டம், பிச்சாவரம் ஏரியின் அருகிலுள்ள கிள்ளைக் கிராமத்திலுள்ள சதுப்பு நிலத்தில் மத்திய அரசின் நிதி உதவியுடன் உவர் நீர் மீன் வளர்ப்பு நிலையம் அமைக்கப்பட்டு வருகிறது. தற்போது சிறிய அளவில் இரால் வளர்ப்புப் பணி துவக்கப் பட்டுள்ளது.

<u>திரு. த. வேணுகோபால் :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிச்சாவரம் ஏரியில் மத்திய அரசின் உதவியோடு இரால் வளர்ப்பு செய்யும் பணி சிறிய அளவில் நடைபெறுகிறது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறினார்கள். அங்கே தனியார் துறையில் இரால் வளர்ப்புப் பணி செய்வதற்கு அரசாங்கம் அனுமதி அளிக்குமா ?

(முற்பகல் 9–10)

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, இப்போது செய்து வருகின்ற முயற்சி மத்திய அரசின் உதவியுடன் மாநில அரசு செய்துவருகிறது. தனியார் துறை விரும்பினால், அதற்குரிய வாய்ப்பு ஏற்படுமானால் அதுபற்றி தனியாக ஆராயவேண்டும்.

திரு. ந. சிவஞானம் : தலைவரவர்களே, இரால் மீன் வளர்ப்பதினால் அந்நியச் செலாவணி கிடைப்பதாகச் சொல்கிறார்கள். ஆகவே, இதுபற்றி அரசு தீவிர முயற்சி எடுக்குமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, இரால் மீன்களை, எங்கெல்லாம் வாய்ப்பு இருக்கிறதோ அங்கெல்லாம் பிடிப்பதற்கான முயற்சிகளை மீனளத் துறை மேற்கொண்டிருக்கிறது. அதனால் தான் இந்த இரால் உற்பத்தியைப் பெருக்கும் முயற்சியிலும் ஈடுபட்டிருக்கிறது. கிட்டதட்ட 29 கோடி ரூபாய் அளவுக்கு இரால் மீன் ஏற்றுமதி செய்யக்கூடிய நிலைமை இப்போது இருக்கிறது. ஆகவேதான் இந்த இரால் வளர்ப்பில் அரசு அதிக முயற்சி எடுத்து வருகிறது.

திரு. க. பாலசுப்பிரமணியன் : தலைவரவர்களே, பிச்சாவரத்திற்கு அருகில் கிள்ளை கிராமத்திலே மத்திய அரசு உதவியுடன் சில தனிப்பட்ட நிறுவனங்கள் வடநாட்டில் இருந்துவந்து இரால் வளர்ப்பு முயற்சியில் ஈடுபட்டு வருவதாகத் தெரிகிறது. அது உண்மையா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, இதற்கான முயற்சிகளை அரசுத் துறைதான் செய்து வருகிறது. கிள்ளை கிராமத்தில் இந்த இரால் வளர்ப்புக்காக 50 ஹெக்டேர் பரப்பில் 10 குளங்களை அமைக்க ஏற்பாடு செய்து, அவற்றிலே இந்த இரால் மீன்களை வளர்த்து, அதன் மூலம் உற்பத்தியைப் பெருக்கும் முயற்சியில் ஈடுபட்டார்கள். 75,60,000 ரூபாய் அதற்கு செலவாகும் என்று மதிப்பிடப்பட்டது. 1979 ஆம் ஆண்டு முயற்சி மேற்கொள்ளப்பட்டு, அதற்கான சுவர்கள் எல்லாம் எழுப்பப்பட்டது. பெரும் புயல் வீசியதின் காரணமாக 285 மீட்டர் கரை இடிந்துவிட்டது. மறுபடியும் ஆய்வு நடத்தி உறுதியான வகையில் அந்தக் கரைகளை அமைப்பதற்கு முயற்சி எடுக்கப்பட்டது. இப்போது 6 ஹெக்டேர் பரப்பில் இரண்டு குளங்களை அமைக்க, ஒவ்வொரு குளமும் சுமார் 3·3 ஹெக்டேர் பரப்பு, 11,82,000 ரூபாய் ஆகும் என்று மதிப்பிடப்பட்டு, குளங்களை அமைக்க முயற்சி செய்து வருகிறார்கள். அதற்கான பொதுப்பணித் துறையின் மதிப்பீடு அரசின் பரிசீலனையில் இருக்கிறது. பரிசீலனைக்குப் பிறகு முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.





திரு. ப. பொன்னுரங்கம் : தலைவரவர்களே, நிதியமைச்சர் அவர்கள் குளம் குட்டைகளில் இரால் வளர்ப்பதுபற்றிச் சொன்னார்கள். அதனால் அந்நியச் செலவாணி அதிகமாக கிடைக்கிறது என்றும் சொல்லியிருக்கிறார்கள். விதை விதைக்காத கழனி இந்த கடல் என்று அவர்களே ஏற்கெனவே சொல்லியிருக்கிறார்கள். அந்தக் கடலிலிருந்து இயற்கையாகக் கிடைப்பது இரால். நாம் செயற்கை முறையில் உற்பத்திச் செய்வதுபற்றி முயற்சி செய்கிறோம். இந்தமாதிரி செயற்கையாக உற்பத்திச் செய்து ஏற்றுமதி செய்தால் அது தரமானதாக இருக்குமா? இல்லை என்றால் அந்நியச் செலவாணி கிடைக்கும் வாய்ப்பே போய்விடும். இங்கிருந்து அனுப்புவதை வெளிநாட்டார் வாங்கமாட்டார்கள். லெகான் முட்டைக்கும், நாட்டுக்கோழி முட்டைக்கும் உள்ள ஒற்றுமைபோல் ஆகிவிடக் கூடாது. இதுபற்றி எல்லாம் அரசு நன்கு ஆலோசனை செய்துள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, இது உள்நாட்டு குளம் குட்டைகளில் வளர்க்கும் முயற்சி அல்ல. கிள்ளை கிராமத்தில் உப்பங்களிகளிலுள்ள உவர் நீர்ப் பரப்பில் கடலிலிருந்து இரால் மீன் குஞ்சுகளைக் கொண்டு வந்து விட்டு, வளர்த்து, உற்பத்தியைப் பெருக்கும் திட்டம் இது. பிற நாடுகளில் அந்த முயற்சி மேற்கொள்ளப்பட்டு வெற்றி கண்டிருப்பதால் அதைப் பின்பற்றி இங்கே உற்பத்தியைப் பெருக்க முயற்சி மேற்கொண்டிருக்கிறோம். இதில் நாம் வெற்றி பெற்றால் வேறுபல இடங்களிலும் விரிவுபடுத்த முயற்சி மேற்கொண்டிருக்கிறோம். முதல் கட்டமாக இந்த முயற்சிக்கு கிள்ளை கிராமம் ஏற்ற இடமாக தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. செ. சிவசாமி : தலைவரவர்களே, பிச்சாவரம் ஏரியில் அரசு உதவியுடன் இரால் வளர்ப்பு நிறுவனம் அமைப்பது சம்பந்தமாக சொல்லும்போது, குறிப்பாக திராவிட முன்னேற்றக் கழக நண்பர் பிரைவேட் பார்ட்டிக்கு இரால் வளர்ப்பு நிலையம் அமைக்க அனுமதி கொடுக்க முடியுமா என்று கேட்டார்கள். பிரைவேட் பார்ட்டி மூலமாக இரால் வளர்ப்பது என்பது அவர்களுடைய கொள்கையா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதற்கு அந்த உறுப்பினரைத்தான் கேட்க வேண்டும் ; அமைச்சரை கேட்டு பயனில்லை.

திரு. த. வேணுகோபால் : தலைவரவர்களே, பிச்சாவரம் ஏரியில் மத்திய அரசு உதவியுடன் இரால் வளர்ப்பதை விட நம்முடைய மாநில அரசே முழுவதுமாக செலவு செய்து, இரால் வளர்க்குமா? அதோடு ஆண்டுதோறும் எவ்வளவு இரால் உற்பத்தியாகிறது என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, மாநில அரசானாலும் மத்திய அரசானாலும் நமது அரசுதான். மத்திய அரசு எவ்வளவு நிதி தந்தாலும் அதைப் பயன்படுத்தி மாநில அரசு தன்னுடைய முயற்சிகளை மேற்கொள்ளவேண்டும். ஆகவே இந்தத் திட்டத்தைப் பரிசீலனை செய்து இதிலே வெற்றி காண முடியுமா என்ற வகையிலே தான் ஈடுபட்டிருக்கிறோம். பொதுப்பணித்துறை மதிப்பீடு தயாரித்திருக்கின்றது. அதைப் பரிசீலனை செய்த பிறகுதான் இதை யார் ஏற்றுக்கொள்வது என்பது பின்னால் தெரியும். இந்த முயற்சியினால் கிடைக்கின்ற இரால் மீனை மீனளத் துறை ஏற்றுக்கொண்டால் அந்தத் துறைக்கு அதிகமான வருவாயைக் கூட ஈட்டித் தரலாம். ஆகவே இத்திட்டம் வெற்றி அடைந்த பின்னர்தான் இதை யார் ஏற்றுக் கொள்வது என்ற முடிவைச் செய்ய வேண்டும். ஆகவே வெற்றி கிட்டுமானால் இதனை மற்றவர்கள் பயன்படுத்துவதை விட மீனளத் துறையே பயன்படுத்துகின்ற வாய்ப்புகளை ஏற்படுத்தலாம்.

திரு. இல. பலராமன் : தலைவரவர்களே, 6 மாதத்திற்கு மேல் நீர் தேங்கக்கூடிய இடங்களில்தான் இரால் மீன் நன்றாக வளரக் கூடிய சூழ்நிலை இருப்பதாகக் கூறப்படுகிறதே. அந்த வகையில் இந்த இரால் மீன் எந்தெந்தச் சூழ்நிலையில் அதிகமாக வளருகிறது என்ற விவரம் அரசினடத்திலே இருக்கின்றதா? அப்படிப்பட்ட சூழ்நிலைகள் உள்ள இடங்களிலேயும் இந்தத் திட்டங்களை உருவாக்கி அதற்கான ஏற்பாடுகளைச் செய்வதற்குத் திட்டம் ஏதாவது இருக்கின்றதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, அதைப் பற்றி முழுக் குறிப்பு என்னிடத்தில் இல்லை. ஆனால் தமிழகத்தினுடைய கடற்கரையோரப் பகுதிகளில் பிற நாட்டார் விரும்பத்தக்க இரால் மீன்கள் ஏராளமாக இருக்கின்றன என்பது கண்டுபிடிக்கப்பட்டு, அந்த இரால் மீன்கள் ஏற்றுமதிக்கும் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

திரு. எல். இளையபெருமாள் : பேரவைத் தலைவரவர்களே, பிச்சாவரம் பகுதியில் இருக்கின்ற ஆராய்ச்சி நிலையத்திற்கு செல்லக்கூடிய ரோடுகள் பழுதுபார்க்கப்படாமல் இருப்பது





நம்முடைய அரசுக்குத் தெரியுமா? அப்படியானால் அந்த ரோடுகளைப் பழுதுபார்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று பல ஆண்டுகளாக வேண்டுகோள் வைக்கப்பட்டும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. அதற்கான காரணம் என்ன?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, அது பற்றிய குறிப்புகள் இப்போது இந்த வினாவைப் பொறுத்தவரையில் இல்லை. ஆகவே தனிக் கேள்வி போட்டால் பதில் கிடைக்கும்.

## பரிசுச் சீட்டுக் குலுக்கல்.

*வினா எண் 73 : திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழக அரசால் நடத்தப்பட்டு வரும் பரிசுச்சீட்டுக் குலுக்கலை வேறு மாவட்ட தலை நகரங்களில் நடத்தும் செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன!

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :

(அ) 1976 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநில பரிசுச்சீட்டு விதிகளிலுள்ள விதி எண் 28-ல் தமிழ்நாடு பரிசுச்சீட்டு திட்டத்தின் கீழ் நடத்தப்படும் பரிசுசீட்டு குலுக்கல்களை சென்னை நகரிலோ அல்லது ஏதாவது ஒரு மாவட்டத் தலைநகரிலோ நடத்தலாம் என்ற விதிமுறை ஏற்கனவே உள்ளது.

(ஆ) பின்வரும் ஆறு சிறப்புக் குலுக்கல்கள் சென்னை நீங்கலான பிற மாவட்டத் தலை நகர்களில் நடத்தப்பட்டுள்ளது.

| சிறப்புக்குலுக்கல் விவரம். (1) | குலுக்கல் நாள். (2) | குலுக்கல் நடத்தப்பட்ட இடம். (3) |
|---|---|---|
| 1. பொங்கல் சிறப்புக் குலுக்கல். | 31—1—1977 | மதுரை. |
| 2. தமிழ் புத்தாண்டு சிறப்புக் குலுக்கல். | 25—5—1977 | கோயம்புத்தூர். |

| | | |
|---|---|---|
| 3. சுதந்திர தின சிறப்புக் குலுக்கல். | 19 – 8 – 1978 | திருச்சிராப்பள்ளி |
| 4. பொங்கல் சிறப்புக் குலுக்கல். | 24 – 1 – 1979 | திருநெல்வேலி. |
| 5. தமிழ் புத்தாண்டு சிறப்புக் குலுக்கல். | 20 – 4 – 1979 | நாகர்கோவில். |
| 6. பொங்கல் சிறப்புக் குலுக்கல். | 23 – 2 – 1980 | சேலம். |

மேற்கூறிய 6 சிறப்புக் குலுக்கல் தவிர மற்ற சிறப்புக் குலுக்கல்களும் சாதாரண குலுக்கல்களும் சென்னை நகரிலேயே நடத்தப்பட்டன. அடுத்து 30 – 9 – 1980 அன்று நடைபெறவிருக்கும் சிறப்புக் குலுக்கலை ஏதாவது ஒரு மாவட்டத்தலைநகரில் நடத்தலாமா என்பது பரிசீலனையில் உள்ளது.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவரவர்களே. சிறப்புக் குலுக்கல்கள் மட்டும்தான் மாவட்ட தலைநகர்களில் நடத்தப்படுகின்றன என்று மாண்புமிகு அமைச்சரவர்கள் சொன்னார்கள். சாதாரண குலுக்கல்களையும் மாவட்ட தலைநகர்களிலே நடத்தினால் அதிக அளவில் சேல்ஸ் ஆகும். மக்களும் புரிந்துகெள்ாள்ளக்கூடிய வாய்ப்பு இருக்கும். ஆகவே இதை மீண்டும் பரிசீலனை செய்து சாதாரண குலுக்களையும் மாவட்டத் தலைநகர்களில் நடத்துவதற்கு அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, சாதாரண குலுக்கல்களையும் மாவட்டத் தலைநகர்களிலே நடத்தலாம், ஆனால் அவ்வாறு நடத்துவதன்மூலமாக ஏற்படுகின்ற செலவுகள் அதிகமாக இருக்கும். சாதாரண குலுக்கல்களின்மூலம் கிடைக்கின்ற நிதியின் பெரும் பகுதியை இதற்கே நாம் செலவழிக்க வேண்டிய சூழ்நிலை ஏற்படவேண்டாம் என்று கருதித்தான், சிறப்பு குலுக்கல்களின் மூலமாக அதிகமான வருவாய் வருவதால் அது ஓரளவு செலவினைத் தாங்கும் என்பதால் அந்த சிறப்பு குலுக்கல்கள் மட்டும் மாவட்ட தலைநகர்களில் நடத்தப்படுகின்றன. இதன்மூலம் ஆங்காங்குள்ள மக்களுக்கு ஒரு ஊக்கமும், ஆக்கமும் தரவேண்டும் என்பதற்காகத்தான் இவ்வாறு நடத்தப்படுகின்றது. ஆகவே இந்த முறையிலே சந்தேகத்திற்கு எந்த இடமும் இல்லை என்பதை நேரடியாக அந்த மக்கள் அறிந்து கொள்ளும் வாய்ப்பு ஏற்படும் என்பதால்தான் மாவட்ட தலைநகர்களில் சிறப்புக் குலுக்கல்களை



மட்டும் நடத்தி வருகிறார்கள். ஆகவே சிறப்புக் குலுக்கல்களை மட்டும் அவ்வாறு மாவட்ட தலைநகர்களில் நடத்துவதுதான் பொருத்தமாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[முற்பகல் 9–20]

திரு. ந. குலசேகர பாண்டியன் ; பேரவைத் தலைவர் அவர்களே, வேறு மாநிலங்களின் பரிசுச் சீட்டுகள் இங்கே அதிக அளவில் இருப்பதால், நம்முடைய மாநிலத்தின் பரிசு சீட்டுகள் அதிகமாக விற்பனை ஆவதில்லை என்று சொல்லுகிறார்கள். ஆகவே அவைகளை தடை செய்ய முடியுமா என்றும், முன்பு முதல் பரிசு 1 லட்சம் என்று இருந்ததை இப்போது 50,000 என்று குறைக்கப்பட்டு விட்டதே, அதை மீண்டும் 1 லட்சமாக உயர்த்த அரசு வழி செய்யுமா என்றும் அறியவிரும்புகிறேன்?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, எந்தெந்த மாலநிலங்களிலே நம்முடைய பரிசுச் சீட்டுகள் விற்க அனுமதி இருக்கிறதோ, அந்தந்த மாநிலங்களிலே இருக்கும் பரிசுச் சீட்டுகளையும் நம்முடைய மாநிலத்திலே விற்க அனுமதி கொடுத்திருக்கிறோம். நாம் ஏதாவது ஒரு மாநிலத்தின் பரிசுச் சீட்டை இங்கே தடை செய்தால் நம்முடைய சீட்டுகள் அந்த மாநிலத்தில் விற்க முடியாது. இங்கே கூட பத்திரிகைகளில் நாம் பார்த்து வருகிறோம். வேறு மாநிலங்களின் சீட்டுகளில் நம்மவர்கள் ஏராளமாக பரிசு பெற்று வருவதை. ஆகவே நம்முடைய சீட்டுகளும் அதிகமாக விற்பனை ஆகும். மற்ற மாநிலங்களின் சீட்டுகளும் அதிகமாக விற்பனை ஆகும். அந்த அளவிலே தான் மாநிலங்களுக்கிடையே உடன் பாடு ஏற்பட்டு பரிசு சீட்டுகள் விற்கப்படுகின்றன. இதனால், இரு தரப்பிலும் லாபம் இருக்கிறது.

அடுத்து தொகையை உயர்த்த முடியுமா என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டார்கள். அதற்கான வாய்ப்பு வசதிகளை கண்டு ஆராய்ந்து, தொகையை உயர்த்துவதன் மூலம் விற்பனை அதிகமாகும் என்று நிலை ஏற்பட்டால், தொகையை உயர்த்தலாம்,

[1980 ஜூலை 30

திரு. என்.எஸ்.வி. சித்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த தமிழக அரசு பரிசுச் சீட்டினால் அரசுக்கு கிடைக்கிற வருவாய் விகிதம் குறைந்திருக்கிறதா? உயர்ந்துக் கொண்டிருக்கிறதா? அப்படி குறைந்திருக்கிறது என்று சொன்னால், மக்களை இன்னும் அதிகமாக கவர்கிற வகையில் கவர்ச்சிகரமான பரிசுகளை வழங்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, சில சாதாரணமான குலுக்கல்களில் வருவாய் குறைந்து கொண்டுதான் வருகிறது. ஆனால் சிறப்பு குலுக்கல்கள் அதை ஈடுகட்டிவிடுகின்றன. ஆனால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப் போல், செம்மை படுத்த, சீர்படுத்த, மக்களுடைய கவனத்தை அதிகமாக ஈர்க்க தக்க நடவடிக்கை எடுக்க என்னென்ன செய்யலாம் என்று நானே யோசித்துக் கொண்டு தான் வருகிறேன். மற்ற மாலநிங்களின் பரிசுச் சீட்டுகளின் அமைப்பு கவர்ச்சிகரமாக இருப்பதாகவும், நம்முடைய மாநில பரிசுச் சீட்டின் அமைப்பு அவ்வாறு கவர்ச்சியாக இல்லை என்றும் கூட ஒரு குறை இருக்கிறது. ஆகவே அதை நிவர்த்திக்கும் வகையிலும், கவர்ச்சிகரமான பரிசுகளை அளிப்பதினாலும், விற்பனை அதிகம் ஆகும் என்ற நிலை இருந்தால் அவற்றையும் ஆராய்ந்து விற்பனை உயர்த்த என்னவெல்லாம் செய்யலாம் என்று ஆராய்வதற்கான ஒரு திட்டம் அரசின் பரிசீலனையில் இருக்கிறது.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக அரசின் பரிசுச் சீட்டின் சிறப்புக் குலுக்கல்களை பல மாவட்டங்களிலே நடத்தியதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். குறிப்பாக திருநெல்வேலி மாவட்டத்தில் இந்த ஆண்டு பொங்கல் சிறப்புக் குலுக்களை நடத்த அமைச்சர் அவர்கள் ஆவன செய்ய முன் வருவாரா என்று அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற ஆண்டு 24—1—1979 அன்று நடந்த பொங்கல் சிறப்புக் குலுக்கல் திருநெல்வேலியில் தான் நடைபெற்றிருக்கிறது. ஆகவே, இதுவரை நடைபெறாத மாவட்டங்களாகப் பார்த்து நடத்துவதுதான் பொருத்தமாக இருக்கும்.



1980 ஜூலை 30]

திரு. வி. பாலகிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மாவட்டங்களின் தலை நகரங்களிலே சிறப்பு குலுக்கல்கள் நடத்தி வருவதாகச் சொன்னார்கள். முகவை மாவட்டத்தின் தலை நகரம் மதுரையாக இருக்கிறது. ஆகவே முகவை மாவட்டத்திற்கென்று நடத்தும் சிறப்புக் குலுக்கலை சிவகாசியில் அல்லது விருதுநகரில் நடத்த ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : பேரவைத் தலைவர் அவர்களே, அதைப்பற்றி யோசனை வருகிற நேரத்தில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய யோசனையும் உள்அடக்கி முடிவு செய்யப்பெறும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவர் அவர்களே, பரிசுச் சீட்டுக் குலுக்கல்களில் முதல் பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி யார் என்றே தெரிவதில்லை, கண்டு பிடிக்கவும் முடிவதில்லை. ஆகவே நடுவில் வேறு யாரோ வந்து அந்த சீட்டை அவர்களிடமிருந்து பிடுங்கிக் கொண்டு போய்விடுகிற சந்தர்ப்பங்களும் நேரிடுகிறது. ஆகையினால் பரிசுச் சீட்டின் ஒரு பகுதியிலேயே வாங்குபவரின் பெயர், தெரு, விலாசம் ஆகியவைகள் எழுதக் கூடிய வகையில் வசதி செய்து பரிசீச் சீட்டை வெளியிட அரசு முன் வருமா. தவிரவும் நான் இது வரை 22,151 ரூபாய்க்கு பரிசுச் சீட்டு வாங்கியிருக்கிறேன். ஆனால் ஒரு சீட்டு கூட விழவில்லை. எது எதற்கோ நஷ்டஈடு வழங்குவது போல் அரசு இதற்காக எனக்கும் நஷ்டஈடு வழங்க முன் வருமா ? அப்படி வந்தால் சீட்டுகளை வேண்டுமானால் கொண்டு வந்து கொடுக்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் தாமரைக்கனி அவர்களை பரிசுச் சீட்டுகளை வாங்க வேண்டும் என்று இந்த அரசு கேட்டுக் கொண்டதே இல்லை. வாங்கினால் பரிசு விழும் என்ற ஒரு நம்பிக்கையின் அடிப்படையில் அவர் பரிசுச்சீட்டுகளை வாங்கியிருக்கலாம். விழவில்லை என்றால் அவருக்கு அதிர்ஷ்டம் இல்லை என்று தெரிகிறது. அதற்கு யாரும் எதுவும் செய்ய இயலாத நிலையில் இருக்கிறோம். ஆகவே அந்தந்த வழிகளிலே அவரவர் விருப்பப்படி செல்வதில், வாழ்வதில் யாரும் தலையிட முடியாது. வேறு வழி இல்லை. (சிரிப்பு)

திரு. எஸ். ஆண்டித் தேவர் : தமிழ்நாடு பரிசுச் சீட்டுகள் போன்று அச்சிட்டு ஏழை எளிய மக்களிடம் ரூபாய்க்கு இரண்டு சீட்டு என்று தெருக்களில் விற்றுக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் மீது இந்த அரசு எந்தவிதமான நடவடிக்கையும் எடுத்ததாகத் தெரியவில்லை. ஆகவே அவர்கள் மீது கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அப்படிப்பட்ட தவறுகள் எங்கேயாவது நடைபெறுமானால் அரசின் கவனத்திற்கு அல்லது ஆங்காங்கிருக்கிற காவல் துறையினரின் கவனத்திற்குக் கொண்டுவரப்படுமானால் தக்க நடவடிக்கைகள் எடுக்கப்படும். அதற்கு இடம் கொடுக்கக்கூடாது. அப்படிப்பட்ட தவறுகளுக்கு இடம் தருவோமானால் நமது நோக்கம் நிறைவேறாது. அது பற்றி கடுமையான நடவடிக்கைகளை அரசு எடுக்கும்.

திரு. பொ. உத்திராபதி : சிறப்புக் குலுக்கல் சீட்டு குலுக்க வேண்டியது ஆறு மாவட்டங்கள் என்று சொன்னார்கள். அடுத்து குலுக்கக் கூடிய சீட்டு, தஞ்சை மாவட்டம் இதுவரை இடம் பெறாதிருப்பதால் தஞ்சை மாவட்ட தலைநகரில் அடுத்த குலுக்கலை நடத்துவார்களா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அதைப் பற்றி இன்னும் முடிவு செய்யவில்லை. முடிவு செய்யும்போது உறுப்பினர் கூறிய கருத்தையும் சேர்ந்து பரிசீலனை செய்யப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கே. எம். எஸ். சுப்பிரமணியன் : பரிசுச் சீட்டுகள் விற்பனை அதிகரித்திருப்பதால் அவற்றை விற்பனை செய்யக் கூடிய ஏஜென்ட்களையும் அதிகப்படுத்துவது குறித்து அரசின் பரிசீலனையில் இருக்கிறதா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அது பற்றிய குறிப்புகள் இல்லை. ஆனால் அதிகமான ஏஜென்ட்டுகள் தேவைப்படுகிற ஒரு சூழ்நிலை ஏற்பட்டால் அது பற்றியும் இத்துறை ஆலோசிக்கும்.

திரு. தி. கா. நல்லப்பன் : பரிசுச் சீட்டுக்களை தனி நபர்கள் விற்கும் போது குற்றம் என்று சொல்கிறோம். அதே காரியத்தை அரசாங்கம் செய்யும்போது அது குற்றமில்லையா என்று அறிய விரும்புகிறேன்.





மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : எப்படியோ பொதுமக்கள் பெரும்பாலோர்க்கு தங்கள் தங்கள் அதிருஷ்டத்தில் நம்பிக்கை இருக்கிறது. ஆகவே அப்படி அதிருஷ்டத்தில் இருக்கிற நம்பிக்கையைப் பயன்படுத்தி பல பேர்கள் பணம் ஈட்ட முயல்கிறார்கள். அவரவர்கள் ஆங்காங்கு அப்படி முயல்றார்கள் என்பது மட்டுமல்ல, பலர் ஏமாற்றவும் செய்கிறார்கள். பரிசுச் சீட்டு என்று வைத்து நடத்தி பணம் திரட்டிய பிறகு அதை எடுத்துக்கொண்டு போய் விடுகிறார்கள். இப்படிப்பட்ட குறைபாடுகள் எல்லாம் நடைபெற வேண்டாம் என்ற காரணத்தினால் தான் நம்பிக்கை மூலம் பெறுகிற பணம் அரசின் வளர்ச்சிக்கும் மற்றவைகளுக்கும் பயன்படுவது நல்லது என்ற காரணத்தாலும் இந்த பரிசுச் சீட்டு முறையை அரசே ஏற்று நடத்துகிற முறையில் இந்தியாவில் எல்லா மாநிலங்களும் மேற்கொண்டு இருக்கின்றன. தமிழ்நாடு அரசும் மேற்கொண்டிருக்கிறது. இதில் பரிசுச் சீட்டு விழுமானால் அவரவர்களுக்கு லாபம், விழா விட்டால் இந்த அரசுக்கு ஒரு ரூபாய் நன்கொடை கொடுத்தோம் என்ற மன திருப்தியோடு இருக்கலாம். தனி நபர்களுக்கு நன்கொடை போய் சேருவதைவிட அரசுக்கு நன்கொடை கிடைக்கக்கூடிய நிலை ஏற்படுகிறது. அதற்காகத்தான் அரசாங்கம் இதை நடத்துகிறது.

## மதுரையில் வானொலி நிலையம்.

*வினா எண் 56—திரு. என். எஸ். வி. சித்தன், திரு. கே. எம். எஸ். சுப்பிரமணியன் : மாண்புமிகு செய்தி-அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா ?

மதுரையில் ரேடியோ நிலையம் அமைக்கும் திட்டம் தற்போது எந்த நிலையில் உள்ளது என்பதை மாநில அரசு அறியுமா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மதுரையில் வானொலி நிலையத்தை 6-வது திட்ட காலத்தில் அமைத்திட இந்திய அரசு ஒத்துக் கொண்டுள்ளது. ஆனால் இந்திய அரசின் நிதி அமைச்சகத்தைச் சேர்ந்த செலவு-நிதிக் குழுவின் ஒப்புதலையும் நிதி ஒதுக்கீட்டையும் எதிர்பார்த்திருப்பதாக செய்தி ஒலி பரப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

திரு. என். எஸ். வி. சித்தன் : பண்டைத் தமிழர்களின் நாகரீகமான கட்டடக்கலை, சிற்பக் கலை இவற்றிற்கு சான்று கூறி நிற்கிற வரலாற்றுப் புகழ்மிக்க மதுரை நகரம் தமிழ் நாட்டின் இரண்டாவது பெரிய நகராக இருக்கிறது. ஆகவே

மதுரை திருநகரில் வானொலி நிலையத்தை அமைக்க வேண்டுமென்றகோரிக்கை நீண்ட நெடுங்காலமாக இருந்து வருகிறது. ஆகவே மத்திய அரசு திட்டத்தில் சேர்ந்தாலும் கூட அல்லது நிதி அமைச்சகத்தின் ஒப்புதல் பெறுவது ஒருபுறமிருந்தாலும் கூட இதன் முக்கியத்துவத்தைக் கருதி ஐந்தாண்டுகளுக்குள்ளாக—ஐந்தாண்டுகள் என்பது அதிகப்படியாகும்—இரண்டுமூன்று ஆண்டுகளுக்குள்ளாக அரசாங்கம் முயன்று இதைச் செயல்படுத்த முன் வருமா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : அநேகமாக இந்தத் திட்டம் இனிமேல் நீட்டிக் கொண்டிருக்க அல்லது காலம் தாழ்த்தி இழுத்துக் கொண்டு இருக்காது என்று தெரிகிறது. மத்திய அமைச்சர் ஒருவர் சென்னை வந்தபோது உறுதியளித்து சென்று இருக்கிறார். வானொலித் துறையும் அதற்கான முயற்சியில் ஈடுபட்டிருக்கிறது. நாமும் இடத்தை ஒதுக்கி வைத்திருக்கிறோம். ஆகவே விரைவில் அந்த வானொலி நிலையம் அமைப்பதற்கான முயற்சிகள் இந்திய அரசு எடுத்துக்கொள்ளும் என்று நிச்சயமாக நம்பலாம்.

திரு. கே. எம். எஸ். சுப்பிரமணியன் : மதுரையில் அமைக்கக் கூடிய இந்த வானொலி நிலையம் தனிப்பட இயங்கக் கூடிய வானொலி நிலையமா? அல்லது சென்னை, திருச்சி அஞ்சல் செய்யக்கூடிய வானொலி நிலையமா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மதுரையில் தனி வானொலி நிலையமாக அமைப்பதுதான் இந்தத் திட்டம்.

திரு. வ. சத்தியமூர்த்தி : தமிழ்நாட்டில் தனித்து இயங்கும் இரண்டு வானொலி நிலையங்கள் இருக்கின்றன. வட மாநிலங்களில் இதே நிலைதானா ? பிற மாநிலங்களைப் பார்க்கும் போது நம் மாநிலத்தில் வானொலி நிலையங்கள் அதிகமாக நிறுவப்பட்டிருக்கிறதா அல்லது குறைவாக இருக்கிறதா

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : அதுபற்றிய தகவல் என்னிடம் இல்லை. தனிக் கேள்வி போட்டால் சேகரித்துத் தர இயலும்.

[முற்பகல் 9-30]

திரு மு. அம்பிகாபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய வானொலி நிலையங்களில் ஒலிபரப்பப்படுகின்ற நிகழ்ச்சிகளைவிட, சிலோன் வானொலி நிலையம் ஒலி பரப்புகின்ற நிகழ்ச்சிகளை மக்கள் அதிகம் கேட்கிறார்



கள். எனவே, சிலோன் வானொலி நிலையம் ஒலிப்பரப்புகின்ற நிகழ்ச்சிகளைப் போல் இங்கேயும் ஒலி பரப்புவதற்கு நடவடிக்கை எடுக்க இந்த அரசு முன்வருமா? இந்த ஒலிப் பரப்பு நிகழ்ச்சிகளை கேட்காத நிலை இருக்கிற இப்போது மதுரையில் ஒன்று திறக்க இருப்பதுபோல், மன்னார் குடியிலும் ஏற்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அம்பிகாபதி அவர்கள் இந்தக் கேள்வியை டெல்லி நாடாளுமன்றத்தில் கேட்க வேண்டுமென்று தெரிவித்துக் கொள்கிறேன். மன்னார் குடியில் ரேடியோ நிலையம் வருகின்ற அளவிற்கு இன்னும் எத்தனை ஆண்டுக் காலம் ஆகும் என்பதை இப்போது சொல்ல முடியாது.

திரு செ. சிவசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, மதுரையில் வானொலி நிலையம் அமைக்கப்படும் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இது வரவேற்கக் கூடிய அம்சம். எந்த இடத்தில் அமைக்கப்பட இருக்கிறது? அதனுடைய சக்தி என்ன என்பதை தெரிவிப்பார்களா?

மாண்புமிகு திரு ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது அதற்காக தேர்ந்தெடுக்கப்பட்ட இடம் சொக்கிக்குளம் கிராமக் கண்மாய் சர்வே டி.எஸ். எண் 974/1ல் உள்ள சுமார் 4.15 ஏக்கர் நிலத்தில் அந்த வானொலி நிலையம் அமைக்கப்பட இருக்கிறது. அங்கே அமைக்கப் பட இருக்கின்ற வானொலி நிலையத்தில் சக்தி என்ன என்பதைப் பற்றிய விவரம் இல்லை.

திரு என். ஏ. பூங்காவனம்: பேரவைத் தலைவர் அவர்களே, 27 ஆம் தேதி அன்று பிற்பகல் 12 மணி அளவில் நடைபெற்ற சூரியகாந்தி கலை நிகழ்ச்சியில் தொழிற்சங்க இயக்கத்தைப் பற்றியும், தொழிற் சங்கத் தலைவர்களைப் பற்றியும், தொழிலாளர் குடும்பத்தைப் பற்றியும் எவ்வளவு கேவலமாகச் சொல்ல முடியுமோ ........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி மதுரையில் வானொலி நிலையம் வேண்டுமா, வேண்டாமா 'என்பதைப் பற்றியது. எனவே, அடுத்த கேள்வி,

## திருப்போரூர் அருள்மிகு கந்தசாமி கோவில்.

*வினா எண் 57—திரு. கெ. சொக்கலிங்கம்: மாண்புமிகு செய்தி-அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கல்பட்டு மாவட்டத்தில் உள்ள திருப்போரூரில் அருள்மிகு கந்தசாமி கோவில் கட்டிட வேலை பாதியில் நிறுத்தப்பட்டது, அரசுக்கு தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதற்கான காரணம் யாது?

(இ) அந்தவேலை எப்போது மறுபடியும் துவங்கப்படும்?

மாண்புமிகு திரு. ஆர்.எம். வீரப்பன்: (அ) & (ஆ) திருப்போரூரி லுள்ள அருள்மிகு கந்தசாமி ஆலய இராஜகோபுரத் திருப்பணி மற்றும் சுவாமி சந்நிதி விமானம் பழுது பார்த்தல் வேலைகளுக்கு மதிப்பீடு 12—11—1977ல் அங்கீகரிக்கப்பட்ட போதிலும், இராஜகோபுரத் திருப்பணி வேலை மட்டும் தொடங்கப்பட்டது. ஒப்பந்தம் நடைமுறையில் இருக்கும்போது முக்கால் பாகம் வேலை செய்த பிறகு, ஒப்பந்தக்காரர் புதிய விகிதத்தில் கூடுதல் பணம் தரவேண்டுமென்று கேட்டுக் கொண்டதாலும் போதிய நிதி வசதி குறைவாலும் மேற்கண்ட திருப்பணி வேலைகள் முடிக்கப்படாமல் உள்ளன.

(இ) திருப்பணிக்காக அனுமதிக்கப்பட்ட திருப்பணிக் குழுவின் பதவிக்காலம் முடிந்து விட்டபடியால் புதிய திருப்பணிக் குழு அமைத்து, ஒப்பந்தக்காரரின் கோரிக்கை மீது முடிவெடுத்து விரைவில் திருப்பணி வேலைகள் தொடங்க வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

திரு. கெ. சொக்கலிங்கம்: பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் அளித்த விளக்கத்திற்கு நன்றி. ஆனால், இந்த திருப்போரூர், அருள்மிகு கந்தசாமி ஆலயம் கிட்டத் தட்ட இரண்டு ஆண்டு காலமாக துவங்கப்பட்ட அந்த வேலை, முடிவடையாமல் இருக்கிறது. இதற்கு ரிவைஸ்ட் எஸ்டிமேட், கூடுதல் மதிப்பீட்டுத் தொகை அளிக்கப்படுமா? அது மட்டு மல்ல. இராஜகோபுர வேலை நடைபெறாமல் நிறுத்தப்பட்டி ருக்கிறது. அந்த டெண்டர் கால்பார் பண்ணியதில், கூடுதல் இல்லை என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதை யும், கூடுதலாகக் கொடுத்து, அந்த வேலை துவக்கப்படுமா? அது மட்டுமல்ல. கோவிலினுடைய கும்பாபிஷேகம் நடை-



பெறவில்லை. அதற்கும், உடனடியாக அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா? அது மட்டுமல்ல. எனக்குக் கிடைத் துள்ள தகவல்படி, இந்த வேலைகளைத் துவங்கக் கூடிய பொறியாளர்கள் இந்த இலாகாவிலே கூடுதலாக இல்லாத காரணத்தினால்தான் இந்த வேலைகள் தாமதமாகின்றன என்று சொல்லப்படுகிறது. எனவே, இது உண்மையா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. ஆர்.எம்.வீரப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1975 ஆம் ஆண்டிலே ஒரு மதிப்பீடும் பிறகு 1977 ஆம் ஆண்டிலே திருத்த மதிப்பீடும் அதற்கு அளிக்கப் பட்டு, ஒப்புதல் அளிக்கப்பட்டிருக்கிறது. ஆனால், ஒப்பந்தம் எடுத்துக்கொண்டு, வேலையைத் துவங்கிய அந்த ஒப்பந்தக்காரர் இடையிலே அதிகத் தொகை கேட்டதாலே தகராறு எழுந்து அந்த வேலை நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. தேவையான பொருளாதாரம் இல்லையென்ற காரணத் தால் வேலை தவக்கம் ஏற்பட்டிருக்கிறது. ஆனால் விரைவில் அதற்காக அறநிலையத் துறை ஆணைகள் பிறப்பித்து திருப் பணி முடிக்கப்படும். திருப்பணி முடிந்தால் கும்பாபிஷேகம் நடைபெறும்.

திரு. எல். இளையபெருமாள்: திருப்போரூரில் இருந்த நிர்வாக அதிகாரிக்கும் முன்பு இருந்த ஒப்பந்தக்காரர்களுக்கும் ஏற்பட்ட தகராறு காரணமாக வேலை பாதிக்கப்பட்டதாக அரசுக்குத் தகவல் வந்ததா? பொதுமக்கள் வந்து புகார் கூறி நிர்வாக அதிகாரியை மாற்ற ஏதாவது முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டனவா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: திருப்பணி சம்பந்தப் பட்ட கேள்வியான காரணத்தால் அதன் தகவல்கள் இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் இளையபெருமாள் அவர்கள் புதிய தகவலைத் தந்திருக்கிறார்கள். ஆதாரங்களோடு தகவல்களைத் தந்தால் அதைப் பற்றி விரிவாக விசாரித்து நடவடிக்கை எடுக்கப்படும். தேவைப்பட்டால் சபைக்கும் வேறு கேள்வி கள் போட்டால் அந்த தகவல்கள் தரப்படும்.

## +2 வகுப்புகள்

*வினா எண் 74—திரு. பாபு ஜனார்த்தனன்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா—

[1980 ஜூலை 30

(அ) + 2 வகுப்புகளில் மாற்றுமுறை ( Shift ) திட்டத்தில் நடைபெற்று வருகின்றனவா?

(ஆ) ஆம் எனில், இதனை மாற்றி முழு நேரமும் நடத்த அரசு நடவடிக்கை ஏதும் எடுத்துள்ளதா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) தற்பொழுது 176 மேல் நிலைப்பள்ளிகளில் மட்டும் மாற்றுமுறைத் திட்டம் நடைபெற்று வருகிறது.

(ஆ) அரசு மேல்நிலைப்பள்ளிகளில் இட வசதி ஏற்படுத்த ஒரு வகுப்பறையும், ஒரு அறிவியல் ஆய்வுக்கூடமும் கட்டித்தரும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அதுபோல் தனியார் மேல்நிலை பள்ளியில் கட்டிட மானியம் (40 Per cent grant) வழங்கப்படுகிறது. போதுமான இடவசதி ஏற்படும்போது மாற்று முறைத்திட்டத்தில் வகுப்புகள் நடைபெறுவது கைவிடப் படும்.

திரு. பாபு ஜனார்த்தனன் : நம்முடைய அமைச்சர் அவர்கள் சொன்ன இட நெருக்கடியை அனுசரித்து பிளஸ் 2 வகுப்புகள் மட்டுமல்லாமல் மற்ற வகுப்புகள் எல்லாம் கூட இரு வேளைகளாக நடக்கும் காரணத்தால் பிள்ளைகளின் படிப்பின் தரம் குறைகிறது. பிளஸ் 2 வகுப்புகள் மிக முக்கியமான படிப்பாக இருக்கும் காரணத்தால் இந்த மாற்று முறைத் திட்டம் இல்லாமல் ஒரே வேளையாக நடத்த அரசு உத்தரவிடுமா ? இப்படி மாற்று முறைத் திட்டம் இருப்பதன் காரணமாக பிள்ளைகள் சினிமாக் காட்சிகளுக்குச் சென்று படிப்பு கெட்டுவிடுகிற நிலை ஏற்படுகிறது. ஆகவே பிளஸ் 2 படிப்புக்கு முழு நேரமும் பள்ளி நடத்தும் வகையில் தலைமையாசிரியர் முயற்சித்தால் அதற்கான வழிவகைகள் செய்யப் படுமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : போதிய இட வசதி இல்லாத காரணத்தால்தான் இத்தகைய ஏற்பாடு செய்திருக்கிறோம். இது தொடர்பாக அரசு வெளியிட்டிருக்கும் ஆணை நிலை எண் 880, கல்வி, நாள் 16–5–1978ல் ஆணையிடப்பட்டுள்ளதில் இரண்டு முறைகளைச் சொல்லியிருக்கிறார்கள். ஒரு முறை–பள்ளிகளில் பத்தாம் வகுப்புக்கு கீழே சில வகுப்புகளைச் சேர்த்து ஒரு முறையும் மேல் நிலைப் பள்ளி வகுப்புகளுக்கு மற்றொரு முறையும் ஆகும். இன்னொரு முறை–சில உயர் நிலைப் பள்ளி வகுப்புகளுக்கு ஒரு முறையும் 10 ஆம் வகுப்புக்கு கீழே சில வகுப்புகளுக்கு ஒரு நேரமும் மீதம் உள்ள பிற வகுப்புகளுக்கு இன்னொரு



1980 ஜூலை 30]

நேரமும் நடத்தலாம் என்ற அறிவுரையைத் தந்து அரசாணையாகச் சொல்லியிருக்கிறார்கள். அந்தந்தப் பள்ளிகளில் இருக்கும் பல்வேறு வசதிகளைக் கருத்தில் கொண்டு தலைமையாசிரியரும் மற்ற ஆசிரியர்களும் எந்த முறையில் செயல்படுவது என்று பார்த்து செய்ய வேண்டும். இன்னொரு ஆணையும் வெளியிட்டிருக்கிறோம். இந்த மாதிரி நடத்தும் பள்ளிகள் 225 நாட்கள் ஓராண்டில் வேலை செய்ய வேண்டும். நாள் ஒன்றுக்குக் குறைந்தது நான்கு மணி நேரம் வேலை செய்ய வேண்டும். வாரத்திற்கு 45 நிமிஷங்கள் கொண்ட 35 பீரியடுகள் வேலை செய்ய வேண்டும். இந்த மாதிரி முறைகள் கடைப்பிடிக்கப்படுகிறபோது ஆசிரியர்கள் பணி அளவு அதிகம் இருக்கக்கூடாது. ஆரம்பப் பள்ளி வகுப்புகளுக்குத் தேவைப்பட்டால் ஒரு முறையும் மற்ற வகுப்புகளுக்கு ஒரு முறையும் நடைபெறச் செய்யலாம் என்ற அறிவுரையையும் வழங்கியிருக்கிறோம். இட வசதி இல்லாத பள்ளிகளில் இடவசதி பூர்த்தி செய்தவுடன் இந்த முறை மாற்றப் படும்.

[முற்பகல் 9–40]

திரு. மி. வின்சென்ட் : பேரவைத் தலைவர் அவர்களே, பிளஸ் 2 வகுப்புகளில் அதிகமாக என்ன என்ன தொழில் நுட்பப் பாடங்கள் சொல்லித்தரப்படுகின்றன. மாணவர்கள் அதிகமாக விரும்பிப் படிக்கும் தொழில் நுட்பப் பாடங்கள் என்ன என்ன ? கல்லூரிகளிலே பி. யு. சி. படித்த மாணவரிகளின் எண்ணிக்கையை விட பிளஸ் 2 மாணவர்களின் எண்ணிக்கை எவ்வளவு அதிகமாயிருக்கிறது ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, தனிக் கேள்வி போட வேண்டும், அந்த விவரம் என்னிடத்திலே இல்லை.

திரு. எம். ஆறுமுகம் : பிளஸ் 2 வகுப்புகள் ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் முதலாவது ஆண்டில் சேருகின்ற மாணவர்கள் அனைவரும் தேறியவர்கள் என்று அரசே அறிவித்திருந்தது. ஆனால் அவினாசி, தாராபுரம் உடுமலைப்பேட்டை ஆகிய இடங்களிலே உள்ள பள்ளிகளிலே இருக்கக்கூடிய பிளஸ் 2 மாணவர்கள் முதல் ஆண்டு பரிட்சை எழுதவில்லை, அவர்கள் பரிட்சை எழுதாமலேயே தேறவில்லை என்று ஆசிரியர்கள்

[1980 ஜூலை 30

குறிப்பிட்டிருக்கிறார்கள். தேர்ச்சி என்பதே இல்லாமல் ஆல் பாஸ் என்ற முறையிலே அறிவிக்கப்பட்டுப்படட. இந்த 3 பள்ளிகளிலே மட்டும் பெயில் என்று அறிவித்திருக்கிறார்களே அப்படி அரசு ஏதாவது ஆணை பிறப்பித்திருக்கிறதா? பெயில் என்றால் எந்த அடிப்படையிலே பெயில், எந்த அடிப்படையிலே அவர்கள் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறார்கள்? அவர்கள் 2-வது ஆண்டு தேர்வு பெறுவதற்கு நடவடிக்கைகளை அரசு எடுக்க முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : எல்லோரை பாஸ் போட வேண்டும் என்ற உத்திரவை அரசு பிறப்பிக்க வில்லை. ஆனால் பல்வேறு காரணங்களினால் அப்படி அவர்கள் செய்யலாம் என்ற கருத்தை நாம் சொல்லியிருந்தோம். அந்தக் கருத்தை ஏற்றுக் கொள்ள வேண்டுமென்ற நிலைமை தலைமை ஆசிரியர்களுக்கு கிடையாது, பாஸ் அல்லது பெயில் போடுகிற பொறுப்பு அந்த அதிகாரம் அவர்களுக்கு உண்டு. ஒரு அடிப்படையை வைத்து அவர்கள் பாஸ் போடலாம், இன்னொரு பள்ளியிலே இன்னொரு அடிப்படையை வைத்து அவர்கள் பாஸ் போடலாம். ஆகவே, அந்த அதிகாரம் தலைமை ஆசிரியர்களுக்குத்தான் சேரும்.

திரு. ஏ. இராமலிங்கம் : பிளஸ் 2 படிக்கின்ற மாணவர்களுக்கு அந்தப் பள்ளிக்கூடங்களிலே சோதனைச் சாலைகள் இல்லாத காரணத்தால், அந்தப் பள்ளிக்கூடங்களுக்கு அருகாமையிலே உள்ள கல்லூரிகளிலே உள்ள சோதனை சாலைகளைப் பயன்படுத்த வேண்டும் என்று அரசு உத்தரவு பிறப்பித்து இருக்கிறது. இருந்தாலும் பிளஸ் 2 மாணவர்களை ஆசிரியர்கள் அந்த சோதனை சாலைகளுக்கு அழைத்துச் செல்லாமல் அவர்களுக்கு சோதனைச் சாலைகளில் செய்ய வேண்டியதற்கான மார்க்குகளைப் போடுவதாகத் தகவல் வந்திருக்கிறது. அப்படி நடைபெற்றது உண்மையா? அதை மாற்றியமைப்பதற்காக அரசு வேறு ஏதேனும் திட்டத்தை வைத்திருக்கிறதா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, எந்தப் பள்ளிகளிலே, அவ்வாறு நடந்தது என்ற விவரத்தைத் தெரிவிப்பார்களானால் அதைப் பற்றி விசாரித்து அரசு நடவடிக்கை எடுக்கும். கல்லூரிகளிலே உள்ள சோதனை சாலைகள், பி.யு.சி. வகுப்பு எடுக்கப்பட்டதற்குப் பிறகு, பயன்படுத்தப்படாமல் இருக்கின்றன. அவற்றை சுற்றிலும் இருக்கின்ற அத்தகைய வசதிகளைப் பெறாத மேல் நிலைப்



1980 ஜூலை 30]

பள்ளிகள் பயன் படுத்திக் கொள்கிற, காலேஜ் காம்ப்ளக்ஸ் திட்டத்தை நாம் உருவாக்கியிருக்கிறோம். பல இடங்களிலே அது வெற்றிகரமாக நடந்துவருகிறது, சில இடங்களிலே அது போன்ற குறைபாடுகள் இருந்தால் அரசு கவனத்திற்கு வந்தால் அதைச் சரி செய்து கொள்வோம்.

திரு. ஏ. டி. கருப்பையா : தலைவர் அவர்களே, பள்ளிகளிலே மாணவர்களுக்கு பாஸ் அல்லது பெயில் போடுவது தலைமை ஆசிரியர்களுடைய பொறுப்பு என்று அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். திருச்சி மாவட்டத்திலே தோகமலை உயர் நிலைப் பள்ளியில் ஒரு மாத காலத்திற்கு முன்னாலே பெயில் போடப்பட்டு மாவட்ட கல்வி அதிகாரி அதை மாற்றியமைக்க வேண்டுமென்ற நடவடிக்கை எடுத்து மாற்றப்பட்டதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அந்த விவரம் தற்போது என்னிடம் இல்லை.

திரு. ஆ. வெள்ளைச்சாமி : பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்று மாற்று முறை, ஷிப்ட் சிஸ்டம் தனியார் பள்ளிகளில் அதிகமாக இருக்கிறதா அரசுப் பள்ளிகளிலே அதிகமாக இருக்கிறதா அரசுப் பள்ளிகளிலே அந்த எண்ணிக்கை எவ்வளவு? தனியார் பள்ளிகளிலே அந்த எண்ணிக்கை எவ்வளவு?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, என்னிடத்திலே தரப்பட்டிருக்கிற விவரம் அரசு மற்றும் தனியார் மேல் நிலைப் பள்ளிகளில் 176 பள்ளிகளில் இந்த மாற்றுமுறை ஷிப்ட் சிஸ்டம் செயல்பட்டு வருகிறது.

## வேலூர் கோட்டையில் உள்ள கோவில்.

*வினா எண் 75 — திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வட ஆற்காடு மாவட்டம், வேலூர் கோட்டையில் உள்ள பாழடைந்து வரும் இந்து கோவிலை புதுப்பித்து சீரமைக்கும் திட்டம் பற்றி மாநில அரசு நடவடிக்கை ஏதும் எடுத்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அத்திட்டம் உடனடியாக செயற்படுத்தப் படுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. பெ. சு. திருவேங்கடம் : பேரவைத் தலைவரவர்களே, வேலூரில் இருக்கின்ற அந்தக் கோயில் புராதனம் வாய்ந்ததாகும் அது மத்திய அரசாங்கத்தினுடைய பாதுகாப்பிலே இருந்தாலும் கூட, அதனைப் புதுப்பித்து, அங்கே பக்தர்கள் சென்று தொழுகின்ற வகையிலே, மாநில அரசாங்கம் மத்திய அரசாங்கத்திற்குச் சிபாரிசு செய்தாகிலும் அந்தப் பணிகளைச் செய்வதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, இப்பொழுது அந்தக் கோயில் ஒரு புராதனச் சின்னமாகக் கருதப்பட்டு, மத்திய தொல்பொருள் ஆய்வுத் துறையின் கீழே இருந்து பாதுகாக்கப்பட்டு வருகிறது. அதைப் புதுப்பிக்கின்ற கருத்துருவோ அல்லது அதிலே ஒரு சிலையை வைத்து அதைக் கோயிலாக மாற்றும் திட்டமோ, எண்ணமோ நம்முடைய அரசுக்கு இல்லை. அதற்காகச் சிபாரிசு செய்கின்ற எண்ணமும் இல்லை.

திரு. இல. பலராமன் : தலைவர் அவர்களே, இந்த ஆலயத்திலே சிலையை வைத்து வணங்க வேண்டுமென்ற கோரிக்கையை எழுப்பி, ஒரு குழு அமைக்கப்பட்டு, மத்திய அரசுக்கும், மாநில அரசுக்கும் வேண்டுகோள் விடப்பட்டது. அது எந்த நிலையில் இன்றைக்கு இருக்கிறது? மேலும், அதைப் புதுப்பிப்பதற்கான செயற் குறிப்பு ஏதாகிலும் அரசிடம் இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலைவரவர்களே, புராதனச் சின்னத்தைப் பாதுகாக்கலாமே தவிர, புதுப்பித்தால் அது புராதனச் சின்னமாக இராது.

## கல்வராயன் மலைப்பகுதியில் கடுக்காய் எண்ணெய் தொழிற்சாலை.

* வினா எண் 60— திரு. சோ. கலிதீர்த்தான், திரு. க. ரங்கசாமி :—மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—





(அ) கல்வராயன் மலைப்பகுதியில் அதிகமாக கிடைக்கும் கடுக்காய் கொட்டையிலிருந்து எண்ணெய் எடுக்கும் தொழிற்சாலை ஏற்படுத்த அரசு உத்தேசித்துள்ளதா

(ஆ) ஆம் எனில், எப்போது துவங்கப்படும் ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. சோ. கலிதீர்த்தான் : பேரவைத் தலைவரவர்களே, கல்வராயன் மலைப்பகுதியில் அதிகமாகக் கடுக்காய் கொட்டை விளைகிறது. அதைத் தனியார்கள் வாங்கி, மேலைநாடுகளுக்கு ஏற்றுமதி செய்கிறார்கள். இங்கேயும் சில தொழிற்சாலைகளுக்குப் பயன்படுத்துகிறார்கள். எனவே, அதுபற்றி நம்முடைய அரசாங்கம் பரிசீலனையில் எடுத்துக் கொள்ளுமா என்பதனை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, இந்தப் பணியை வேளாண் தொழில் கழகம் மேற்கொள்ள ஏற்கனவே முயற்சி செய்தது. ஆனால் அதற்குப் பிறகு அதற்கு மலைவாழ் பழங்குடி மக்களுடைய துணைத் திட்டத்தின்கீழ் மானியம் கிடைக்காது. அப்படிக் கிடைக்காத சூழ்நிலையிலும் அதை ஆரம்பிக்க வேளாண் தொழில் கழகம் தயாரா என்று அரசு கேட்டதற்குப் பிறகு அதனுடைய நிர்வாகக் குழு அந்தத் திட்டத்தைக் கைவிட்டு விட்டது.

திரு. என். பழனிவேல் : பேரவைத் தலைவரவர்களே, கடுக்காய் உற்பத்தி எங்களுடைய மாவட்டத்தில் அதிகமாக இருக்கிறது. அதிலும் குறிப்பாக பழனிமலைப் பகுதியில் அதிகமான கடுக்காய் கிடைத்து தனியார் அதை மிகச் சீப்பாகக் கொள்முதல் செய்து எங்கேயோ கொண்டு செல்கிறார்கள். ஆகவே, இந்த மாதிரி தொழிற்சாலையை ஏற்படுத்துவதற்கு அரசு உத்தேசிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, இப்பொழுது உத்தேசம் இல்லை.

[1980 ஜூலை 30

கொடிவேரியிலிருந்து குடி தண்ணீர் வழங்கும் திட்டம்.

* வினா எண் 76—திரு. தி. கா. நல்லப்பன் : மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) பெரியார் மாவட்டம் கொடிவேரியில் இருந்து கோபி வட்டம், சிறுவலூருக்கும் பெருந்துறை வட்டம் குன்னத்தூர், வெள்ளரவள்ளி, திங்களூர் ஆகிய பகுதிகளுக்கும் குடிநீர் கொண்டு வருவதற்கான திட்டம் ஏதும் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், இத்திட்டம் எப்போது செயல்பட உள்ளது ?

(இ) இத் திட்டம் விரிவுபடுத்தப்படும் பொழுது ஊத்துக் குளி, விஜயமங்கலம் பகுதிகளும் சேர்த்துக் கொள்ளப்படுமா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :

(அ) இல்லை.

(ஆ) மற்றும் (இ) : கேள்விக்கிடமில்லை.

திரு. தி. கா. நல்லப்பன் : பேரவைத் தலைவரர்களே, இந்தத் திட்டம் சம்பந்தமாக ஏற்கெனவே திங்களூரில் ஒரு போராட்டம் நடந்தபொழுது அங்கே மாவட்ட கலெக்டரினுடைய ஒப்புதலின்பேரில், இவ்வாறு ஒரு திட்டம் இருக்கிறது. அதி விரைவில் செயல்படும் என்று கூறினார்கள். அது உண்மையா பொய்யா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவ ரவர்களே, பெரிய கொடிவேரி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தினின்று மேற்கண்ட பகுதிகளுக்குக் குடிநீர் வழங்கும் வழிமுறைகளை ஆய்வு செய்தபோது, பெரிய கொடிவேரி திட்டத்தின் தலைமைப் பணியிடத்திலிருந்து சுமார் 50 கிலோ மீட்டர் தூரத்தில் அவைகள் அமைந்துள்ளபடியாலும் பெரிய கொடிவேரி திட்டத்தால் பயனடையும், வழியோரக் குடியிருப்புகளின் வரிசையில் மேற் கண்ட பகுதிகள் சேர்க்கப்படாததாலும், மேலும் பெரிய கொடிவேரி தலைமைப் பணியிடத்திலிருந்து இத் திட்டத்தைச் செயல்படுத்துவதால் அதிக செலவினங்கள் ஏற்படக்கூடும் என்ப தாலும் பெரிய கொடிவேரிலிருந்து குன்னத்தூர், சிறுவலூர் திங்களூர் ஆகிய பேரூராட்சிகளுக்குக் குடிதண்ணீர் வழங்க இயலவில்லை.



1980 ஜூலை 30]

ஆனால், பவானி ஆற்றிலிருந்து கோபிசெட்டிப்பாளையம் தலைமை நீர் நிலையத்திற்கு அருகாமையில் இருந்து குன்னத்தூர், சிறுவள்ளூர், கொளப்பலூர், ஊத்துக்குளி ஆகிய பேரூராட்சி களுக்கும், 22 ஊராட்சிகளுக்கும் தண்ணீர் வழங்குவதற்கான ஆய்வுப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இத் திட்டத்தின்கீழ் திங்களூர், விஜயமங்கலம் ஆகிய ஊராட்சிகளுக்கும் தண்ணீர் கொடுக்க ஆய்வு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. ஆய்வுப் பணிகள் ஆகஸ்ட் 80-க்குள் முடிவு பெற்று செப்டம்பர் 80-க்குள் வாரியத்திற்கு அனுப்பப்பட்டு திட்டத்திற்கு அரசு அனுமதி தந்தபின் நிறைவேற்றத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும்.

திரு. தி. கா. நல்லப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர [அவ]ர்களே, இந்தப் பகுதிகள் அனைத்தும் வறண்ட பகுதிகளாக இருக்கின்றன. குடிதண்ணீருக்கு மிகவும் கஷ்டமாக இருக்கும் பகுதியாக இருப்பதால் அதிவிரைவில் இத்திட்டத்தை நிறைவேற்ற அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

[முற்பகல் 9—50]

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: பேரவைத் தலைவலர் அவர்களே, முடிந்தவரையில் விரைவுபடுத்துகிறோம்.

திரு. கு. அ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதனுடைய மதிப்பீட்டுத் தொகை என்ன? இந்தத் திட்டம் உலக வங்கியினுடைய லோன் மூலமாக எடுத்து [ந]டத்தப்படுகிறதா ? அல்லது எல். ஐ. சி. லோன் மூலம் எடுக்கப்படு [கி]றதா ? என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தலைவர் அவர்களே ஆய்வுப் பணிகளே இப்பொழுதுதான் ஆரம்பம் ஆகின்றன.

திரு. என். பழனிவேல் : பேரவைத் தலைவலர் அவர்களே, [இ]தே மாதிரித் திட்டங்களுக்கு, இன்வெஸ்டிகேஷன் முடிந்து, [அ]தற்குப் பின்னால், ஊராட்சிகளுடைய அனுமதி கிடைத்த பிறகு [அ]தற்குப் பின்னால்தான் வேலைகள் செய்து முடிக்கப்படும் என்று [அ]மைச்சர் அவர்கள் சொன்னார்கள். இப்போழுது ஆய்வுத் [தொ]தாகைகள் ஊராட்சிகளால் கட்டப்பட்டு விட்டதா ? [அ]ல்லது இன்னும் கட்டவில்லையா ? அப்படியிருக்கும்போது, [ஆ]கஸ்ட், செப்டம்பர் மாதங்களில் முடியும் என்று அமைச்ச [ர]வர்கள் சொல்கிறார்கள். இது எப்படி பொருத்தமாக இருக்கும் [எ]ன்று கேட்கிறேன்.

[1980 ஜூலை 30

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : ஆய்வுப் பணிகள் ஆகஸ்ட் 1980-க்குள் முடிவு பெற்று, செப்டம்பர் 1980-க்குள் வாரியத்திற்கு அனுப்பப் பெற்று, திட்டத்திற்கு அரசு அனுமதி தந்த பின் நிறைவேற்றுவதற்கு ஏற்பாடு செய்யப்படும் என்று இருக்கிறது. ஆய்வுப் பணிகள் ஆரம்பிக்கப்பெற்றிருக்கின்றன. ஆய்வுப் பணிகள் முடிந்த பிறகு, எவ்வளவு ரூபாய் மொத்தமாக செலவாகும் என்று சொல்வார்கள். பராமரிப்புக்கு எவ்வளவு ஆகும் என்று சொல்வார்கள். பிறகு அவர்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும். இந்தச் சடங்குகள் எல்லாம் இருக்கின்றன.

## பொய்கை அணைத் திட்டம்.

*வினா எண் 77—திரு. சு. முத்துக்கிருஷ்ணன் : மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா?

(அ) கன்னியாகுமரித் தொகுதியில் பொய்கை அணைத் திட்ட செயற் குறிப்பு எந்த நிலையில் உள்ளது ?

(ஆ) இதற்கு எவ்வளவு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது ?

(இ) இதனால் எவ்வளவு ஏக்கர் நிலம் நிரந்தர பாசன, வசதி பெறும் ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : (அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் பொய்கை மேம்பாட்டுத் திட்டம் ரூ. 21·60 லட்சம் செலவில் துவக்கப்பட்டு பணிகள் நடந்து வருகின்றன.

(ஆ) 1980—81-ஆம் ஆண்டில் கன்னியாகுமரி மாவட்டத்தில் பொய்கை மேம்பாட்டுத் திட்டம் உள்பட மற்ற சிறிய நீர்ப் பாசன திட்டங்களையும் செயல்படுத்த ரூ. 21 லட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

(இ) இத்திட்டத்தின் மூலம் கன்னியாகுமரி மாவட்டத்தில் பயிர் செய்யப்படாமல் உள்ள 582.45 ஏக்கர் தரிசு நிலங்கள் பாசன வசதி பெறுவதுடன் மேலும் 716.49 ஏக்கர் நிலங்கள் பாசன உறுதி பெறும்.



1980 ஜூலை 30]

திரு. சு. முத்துக்கிருஷ்ணன் : தலைவர் அவர்களே, 1980—81 நடப்பு ஆண்டில் இந்தத் திட்டத்தினைச் செயல்படுத்த எவ்வளவு நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது ? ஏற்கெனவே நிதி ஒதுக்கப்பட்டு வேலைகள் நடைபெற்றுள்ளனவா ? ஆரல் வாய்மொழியில் ஏற்படுத்தப்படும் இந்தப் பொய்கை அணைத் திட்டம் சீக்கிரமாக முடிக்கப்படுமா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவர் அவர்களே, என்னுடைய விடையிலேயே, ஏற்கெனவே இந்தத் திட்டம் செயல்பட வேண்டுமென்ற அடிப்படையில், ரூ. 21·60 இலட்சம் செலவில் பணிகள் நடந்து வருகின்றன ; 1980—81 ஆம் ஆண்டுக்கு ரூ. 21 இலட்சம் நிதி மேலும் கூடுதலாக ஒதுக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னேன். இந்தத் திட்டத்திலுள்ள ஒரு முக்கியமான அம்சம் பொய்கை ஆற்றுத் தண்ணீரை சமமாக தோவாளை கால்வாய்க்கும் செண்பகராமன்புதூர் கால்வாய்க்கும் அனுப்பி; தொவாளை கால்வாய் பிரியும் இடத்தில் திருப்பு அணை கட்டுவது, இக்கால்வாயை மேம்படுத்தி சீர்செய்வது, இக்கால்வாயின் கீழ் உள்ள 9 ஏரிகளை மேம்படுத்துவது ஆகிய குறிக்கோளுக்காக இந்தப் பணம் ஒதுக்கப்பட்டு, ஏற்கனவே ஒரு பகுதி செலவிடப்பட்டு வருகிறது. இந்த ஆண்டுக்கு மேலும் நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது.

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில், மற்ற திட்டங்களையும் 1980-81-ல் துவங்குவதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். மற்ற எந்த நீர்பாசனத் திட்டங்கள் 1980—81-லே நடத்தப்பட இருக்கின்றன என்று அமைச்சர் சொல்வாரா ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவர் அவர்களே, சிறப்பு, சிறிய நீர்ப்பாசனத் திட்டம் என்ற அளவில் அரசு, மாமன்றத்தின் முன்னாலே வைத்த கொள்கை விளக்கக் குறிப்பிலே, கிட்டத்தட்ட ரூ. 70 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது, இந்த ஆண்டிற்காக, சிறிய பாசனங்கள் என்ற அளவிலே என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. நடுத்தர பாசனங்கள் விஷயமாக ஆய்வுகள் நடத்தப்பட்டு வருகின்றன. அதையும் கொள்கை விளக்கக் குறிப்பிலேயே நாம் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறோம்.

## மதுரை மில் காலனியில் உள்ள தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் அடுக்கு வீடுகள்.

* கு. கா. வி. எண் 49—திரு. உ. சுப்பிரமணியன், திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை ஜெயில்ரோடு மில் காலனியில் உள்ள தமிழ் நாடு வீட்டுவசதி வாரியத்தின் அடுக்கு வீடுகள் (Flats) ஒதுக்கப்பட்டவர்கள் பலர் அவ்வீடுகளில் குடியில்லாமல் சட்டத்திற்குப் புறம்பாக அதிக தொகை பெற்றுக்கொண்டு குடியிருப்பதற்கு பிறரை அனுமதித்துள்ளதால், உண்மையிலேயே குடியிருக்க வீடின்றி தவிப்பவர்களுக்கு தங்க வசதி கிடைக்கவில்லை என்பது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், இதை தடுக்க என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) மற்றும் (ஆ) மதுரை ஜெயில்ரோடு மில்காலனியில் உள்ள 174 வீடுகளும், தொழிலாளர்களுக்கு, நீண்ட கால தவணை முறையில் விற்கப்பட்டுள்ளன. இவர்களில் சுமார் 40 நபர்கள், வேலை மாற்றம் காரணமாக மதுரைக்கு வெளியே குடியேறிய காரணத்தால், தங்களது வீடுகளை வாடகைக்கு விட்டிருக்கின்றனர். வாடகைக்கு விட்டிருப்பவர்கள் வசூலிக்கும் பெரும் மாத வாடகை (Maximum rent) ரூ. 130 மட்டுமே. ஆனால் இவர்கள், இவ்வீடுகளின் விலைக்காக செலுத்தும் மாதத் தவணையோ சில இனங்களில் ரூ. 126.50-ம், மற்றும் சில இனங்களில் ரூ. 151-ம் ஆகும். எனவே, வாடகைக்கு விட்டு அதிக வாடகை வசூலித்து இலாபம் அடைகிறார்கள் என்ற கூற்று சரியல்ல. நீண்ட காலத்தவணை முறையில் அவர்களுக்கு விற்றிருந்த போதிலும், வாரிய ஒதுக்கீடு விதிகள், வாரியத்தின் அனுமதியின்றி அவர்களே வாடகைக்கு விட அனுமதிக்கவில்லை. எனவே, மேற்கூறிய வாரிய ஒதுக்கீடு விதிகளைச் சுட்டிக் காட்டி அவர்களுக்கு அறிக்கை அனுப்பப்பட்டுள்ளது.

திரு. என். எஸ். வி. சித்தன் : பேரவைத் தலைவர் அவர்களே, வீட்டு வசதி வாரியத்தின் அடுக்கு வீடுகளைப் பொறுத்த வரையில் அவர்கள் அதிகப்படியான வாடகைக்கு விடவில்லை என்றாலும் கூட, அவர்கள் அறிவுறுத்தப்பட்டிருகிறார்கள் என்று சொன்னார். இது மதுரை மில் காலனியில் மட்டும் அல்லாமல் தமிழகம் முழுவதும் உள்ள இத்தகைய இடங்களில், பல்வேறு முறைகேடுகள் குறைபாடுகள் நடக்கின்றன. எனவே இப்படி சப்-ரெண்டுக்கு விடுகின்ற முறையை நீக்க அரசு முயற்சி எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவர் அவர்களே, இதை சப்-லெட்டிங் என்று சொல்ல முடியாது. இது தவணை முறையில் வாங்கப்பட்ட வீடுகளாகும். அவர்கள் பணம்



கட்டிக் கொண்டு இருக்கிறார்கள். எங்கேயாவது அவர்கள் மாற்றலாகப் போய்விட்டால் வாரியத்தின் அனுமதி பெற்று வாடகைக்கு விடுகிறார்கள். எனவே, இது சப்-லெட்டிங் என்ற தலைப்பில் வரும் என்று நான் கருதவில்லை.

நாகர்கோவில் அரசு மருத்துவமனை.

* கு. கா. வி. எண் 50—திரு. மி. வின்சென்ட்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) நாகர்கோவில் பெரிய அரசு மருத்துவமனையில் (Anaesthetist (அனஸ்தடிஸ்ட்), (Skin specialist, தோல் வியாதி நிபுணர்) Orthopaedic specialist (எலும்பு முறிவு வல்லுனர்) ஆகியோர் உள்ளனரா ?

(ஆ) இல்லை என்றால் உடனே நியமிக்கப்படுவார்களா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) சரும நோய் மருத்துவர் மட்டும் தற்போது உள்ளார்.

(ஆ) மற்ற காலி இடங்கள் விரைவில் நிரப்பப்படும்.

திரு. மி. வின்சென்ட் : பேரவைத் தலைவர் அவர்களே, பெரிய அறுவை சிகிச்சை செய்யும் காலங்களில் நோயாளிகள் சொரணை இல்லாமல் செய்யக்கூடிய மருத்துவர், அனஸ்தடிஸ்ட் இல்லாததால், சில மருத்துவமனைகளில் அறுவை சிகிச்சை செய்து கொளும் நோயாளிகள் நிரந்தரமாகவே சொரணை இல்லாமல் போய், மாண்டுவிடுகிறார்கள். ஆகவே எல்லா தனியார், அரசு மருத்துவமனைகளிலும் பெரிய அறுவை சிகிச்சை செய்யும் போது அனஸ்தடிஸ்ட் இருக்கவேண்டும் என்றும், அப்படி அனஸ்தடிஸ்ட் இல்லாத மருத்துவமனைகளில் அறுவை சிகிச்சையே செய்யக்கூடாது என்றும் பொதுவான ஒரு ஆணை பிறப்பிக்கப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது அனஸ்தீசியா குவாலிபைடு டாக்டர் அங்கே இல்லை என்றாலும் கூட, அங்கே இருக்கின்ற எம்.பி.பி.எஸ். படித்த டாக்டர்கள், அனஸ்தீசியாவில் ஓரளவுக்கு பயிற்சி பெற்றவர்கள் அந்த பணியை நடத்திக் கொண்டு இருக்கிறார்கள். அதனால் எந்தவிதமான தொல்லையும் இல்லை.

என்றாலும், கூட, அனஸ்தடிஸ்ட்டை போடவேண்டும் என்று இப்போது ஆணை பிறப்பித்திருகிறோம். அனஸ்தடிஸ்ட் பயிற்சி பெற்ற, டிக்ரி வாங்கிய டாக்டர் ஒருவர் அந்த இடத்தில் போடப் படுவார் என்று இந்த நேரத்தில் கூறிக்கொள்ளுகிறேன்.

திரு. மி. வின்சென்ட் : தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களுக்கு நன்றி. மாண்புமிகு அமைச்சர் அவர்கள், நாகர் கோவிலிலே அறுவை சிகிச்சை ஸ்பெசலிஸ்ட் மட்டும் தான் இருக் கிறார்கள் என்று சொன்னார்கள். ஆனால் அங்கே ஆர்த்தோ பிடிக் டாக்டரும், அனஸ்தீசியா டாக்டரும் முன்பு இருந்தார்கள். இன்று இல்லை. அந்தஇல்லாத குறையை மிகுந்த குறைந்த நாட்களில் இந்த அரசு நிறைவு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : பேரவைத் தலைவர் அவர்களே, 1980 ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 22 ஆம் நாளன்று ஒரு ஆர்த்தோபிடிக் சர்ஜன் நியமிக்கப்பட்டி ருக்கிறார். நான் வேண்டுமானால் அவர் பெயரைக்கூட சொல்லுகிறேன்.

Dr. K. Rajapandian, M. B. B. S., D. Ortho. 1980ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 23ஆம் நாள் அன்றுதான் Public Service commission மூலம் தேர்வு செய்யப்பட்டவர். இன்னும் இரண்டொரு நாட்களில் அவர் அங்கே சேர்ந்துவிடுவார் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அது மட்டுமல்ல E. N. T., Eye, Siddha, Dental, Blood Bank, X-ray, Paediatrics, Ortho departments.

இந்தப் பதவிகள் எல்லாம் பார்ட் 2 ஸ்கீமில் சாங்ஷன் செய்து முடித்துவிட்டு இருக்கிறார்கள். அவர்களும் அந்தப் பதவியில் நிரப்பப்படுவார்கள். அது மட்டுமல்ல Government have sanctioned the construction of building for maternity ward and outpatient block

அந்த அளவுக்கு புதிதாக ஸ்பெஷல் சாங்கஷன் செய்யப்பட்டிருக் கிறது. இந்தக் தகவல் நிச்சயமாக மாண்புமிகு வின்சென்ட் அவர்களுக்கு மன நிறைவைத் தரும் என்று கருதுகிறேன்.

(முற்பகல் 10.00)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவையின் அனுமதியோடு வினா நேரம் நீட்டிக்கப்படுகிறது.



திரு. பாபு ஜனார்த்தனன் : தலைவர் அவர்களே, நாகர் கோவில் பெரிய அரசு மருத்துவ மனைக்கு ஸ்பெஷலிஸ்ட்டுகளும், பல லட்ச ரூபாய் அளவிற்கு கட்டிட வசதியும் ஏற்படுத்திக் கொடுக்க அரசு முடிவு செய்துள்ளது உள்ளபடியே வரவேற்கத் தக்கதொன்றாகும். மகிழ்ச்சிக்குரிய ஒன்றாகும். அதேபோல், பல்வேறு நகராட்சி பகுதிகளிலும் இது போன்ற வசதிகளை அமைச்சர் அவர்கள் உடனடியாக நிறைவேற்றுவார்களா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவர் அவர் களே, நாகர் கோவிலில் மட்டுமல்ல, கன்னியாகுமரி மாவட்டத் திற்கு ஒரு தனி வகையிலேயே எல்லாவற்றையும் ஆராய்ந்து, எந்தெந்த இடங்களில் விரிவுபடுத்தி, நல்ல நிபுணர்களை அனுப்ப லாம் என்று சிந்தித்துக் கொண்டு இருக்கிறோம். ஏனெனில் இதிலே ஓரளவிற்கு அந்த மாவட்டத்தில் உள்ள மருத்துவ மனை களில் நிபுணர்கள் போடாமல் இருக்கிற காரணத்தால், விரைவில் அதற்குரிய ஏற்பாடு செய்யப்படும் என்பதை மாண்புமிகு உறுப் பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : தலைவர் அவர்களே, டி. பி. நோயாளிகளுக்கு ஒரு பிரிலிமினரி டெஸ்ட் நடத்துவதற்குத் தகுந்த அளவில் ஒரு டி. பி. ஸ்பெஷலிஸ்ட் பதவியைஅந்த நாகர் கோவில் தலைமை மருத்துவ மனையில் அரசு ஏற்படுத்துமா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவர் அவர் களே, அங்கே டி.பிக்காக ஒரு தனிப்பட்ட மருத்துவ மனை இல்லையென்றாலும்,. அதற்காக ஒரு டிப்பார்ட்மென்ட் இருக் கிறது. அந்த டிப்பார்ட்மென்டில் எல்லாப் பணிகளும் நடை பெற்று வருகின்றன. ஒரு எம். டி. செஸ்ட் டிஸீஸ் இல்லை என் றாலும், அங்குள்ள டாக்டர் எம். டி. படித்தவர், டி.பி. வியா தியை நன்றாக கவனித்து அதற்குத் தகுந்த சிகிச்சைச் செய்வதற் காக இருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## சென்னை-கொடைக்கானல் இடையே குளு, குளு பேருந்துப் போக்குவரத்து.

கு. கா. வி. எண். 51—திரு. என். பழனிவேல் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) சென்னையிலிருந்து கொடைக்கானலுக்கு ஈரோடு, திருப்பூர், பழனி வழியாக குளு குளு பேருந்து விடும் செயத் குறிப்பு ஏதேனும் உண்டா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு சு. முத்துசாமி :

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

திரு. என். பழனிவேல் : தலைவர் அவர்களே, ஏற்கெனவே, பல்லவன் டிரான்ஸ்போர்ட் இரண்டு பஸ்களை பழனிக்கு விட்டுக் கொண்டு இருந்தார்கள். அதிலே ஒன்று இப்போது நின்று விட்டது. சென்ற ஆண்டு இதே மன்றத்தில் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் பழனிக்கு குளு குளு வசதி பஸ் விடப்படும் என்று சொன்னார்கள். அதை மனதில் வைத்துத்தான் இந்தக் கேள்வியைக் கேட்டேன். கொடைக்கானல் மிகப்பெரிய கோடை வாசஸ்தலமாக இருப்பதால், ஆயிரக்கணக்கான வெளிநாட்டுப் பயணிகள் அங்கே செல்கிறார்கள். ஆகவே, திருப்பூர், ஈரோடு பழனி வழியாக ஒரு குளு குளு பஸ் விடுவதற்கு அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, இங்கே சென்னையில் இருந்து கோடைக்கானல் வரை பஸ் வசதி வேண்டும் என்று தான் கேள்வி கேட்டு இருக்கிறார்கள். பழனி வரை என்ற வினா எழவில்லை. எனவே, குளு குளு வண்டி விடுவதில் என்ன சிரமம் என்றால், கொடைக்கானலுக்கு கொடைக்கானல் பாதையில் பெரிய வண்டிகளை விடமுடியாது. அந்தக் சிறிய வண்டிகளுக்கு குளு குளு இயந்திரங்கள் பொருத்துவது என்று சொன்னால், அது மிகக் குறைந்த அளவில் உள்ள பயணி களைத்தான் எற்றிச் செல்லமுடியும். எனவேதான் அது முடியாது என்று சொல்லியிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள் - விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற் றது என்பதைக் குறிக்கும்.]

## 2. பாராட்டுரை.

### ஒலிம்பிக் ஹாக்கி விளையாட்டில் இந்தியா தங்கப் பதக்கம் பெற்றுள்ளது.

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு பேரவைத் தலை வர் அவர்களே, ஈரெட்டு ஆண்டுகளுக்குப் பின்னால் இந்திய நாட்டு ஹாக்கி விளையாட்டு வீரர்கள் மாஸ்கோவில் நடந்த ஒலிம்பிக் விளையாட்டில் வெற்றிபெற்று, தங்கப் பதக்கம் பெற்று,



தாய்நாட்டிற்குப் பெருமை தேடித் தந்து இருக்கிறார்கள். அந்த குழுவின் தலைவர் திரு. பாஸ்கரன் தமிழ் நாட்டைத் சேர்ந்தவர் என்பதைக் கேட்டு நாம் மேலும் பூரிப்பு அடைகிறோம். அத் தகைய வெற்றியைத் தேடித் தந்த வீரர்களுக்கு பாராட்டுக் களையும் வாழ்த்துக்களையும் இந்த அவை மூலம் தெரிவித்துக் கொள்வதன் மூலம் நாம் அவர்களுடைய மகிழ்ச்சியில் பங்கு பெறவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சித்தன் அவர் கள் குறிப்பிட்டது போல் இன்று காலை செய்தித் தாள்களில் எல்லாம் ஒரு மகிழ்ச்சிகரமான செய்தி வந்தது. மாஸ்கோவில் நடைபெற்ற ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகளில் 80-க்கும் மேற்பட்ட நாடுகள் கலந்து கொண்டன. இந்தியா ஒரு இடத்தி லாவது வெற்றி பெறும் என்று எதிர்பார்த்துக்கொண்டு வந் தோம். நாளுக்கு நாள் ஒவ்வொரு நாட்டின் பெயரும் வந்து கொண்டு இருந்தன. இந்தியாவின் பெயர் இடம் பெறாமல் இருந்தது. ஆனால் எப்படியும் இந்தியா ஒரு விளையாட்டிலா வது வெற்றி பெறும் என்று எதிர்பார்த்து வந்தோம். ஹாக்கி விளையாட்டில் ஸ்பெயின் நாட்டோடு போட்டியிட்ட நேரத்தில், நிச்சயம் இந்தியா வெற்றி பெறும் என்று எதிர்பார்த்துக்கொண்டு இருந்தோம். கடைசி நேரம் வரையில் இந்திய விளையாட்டு வீரர்கள் நல்ல முறையில் விளையாடி இந்தியாவிற்குப் பெருமை தேடித் தரும் வகையில் ஹாக்கி பந்தயத்தில் வெற்றி வாகை சூடி இருக்கிறார்கள். கடைசி நேரம் வரையிலும் சிறப்பாக ஆடி, எல்லோரும் வியக்கத்தக்க அளவுக்கு விளையாடி, 4 கோல்களை இந்திய வீரர்கள் போட்டிருக்கிறார்கள். அவர்கள் 3 கோல்கள் போட்டிருக்கிறார்கள். ஒரு கால் ‘ட்ரா’ ஆகிவிடுமோ என்ற அச்சம் ஏற்பட்டு, கடைசி நேரத்தில் மிகச் சிறப்பாக ஆடி, ஹாக்கி பந்தயத்தில் இந்தத் தடவை வெற்றிபெற்றிருக்கிறார்கள். 16 ஆண்டுகளுக்கு முன்னால்தான் இந்திய ஹாக்கி வீரர்கள் உலக ஒலிம்பிக் விளையாட்டில் வெற்றி பெற்றார்கள். அதன் பின் னால் இந்தியாவுக்கு வெற்றிவாய்ப்பு இல்லை. இப்போது மீண்டும் அந்த வெற்றியை நிலைநாட்டியிருக்கிறார்கள். முக்கியமான இந்த ஒலிம்பிக் போட்டியில் வேறு எந்தப் பந்தயத்திலும் வெற்றி பெறாவிட்டாலும் ஹாக்கி போட்டியில் இந்தியா வெற்றிபெற் றிருக்கிறது. 16 ஆண்டுகளுக்குப் பின்னால் இப்படிப்பட்ட ஒரு நல்ல வெற்றியை இந்திய வீரர்கள் தேடித் தந்திருக்கிறார்கள். தங்கப் பதக்கத்தையும் பெற்றுத் தந்திருக்கிறார்கள். இது நமக்கெல் லாம் பெருமையை அளிக்கிறது; பூரிப்பை அளிக்கிறது. இந்த வெற்றியைத் தேடித்தந்த அந்த வீரர்களையும் பாராட்டுகி றோம்; அந்தக் குழுவுக்குத் தலைமை தாங்கிச் சென்றவரையும் பாராட்டுகிறோம். இந்த வெற்றி எதிர்காலத்திலே நாம்

பெறவேண்டிய பல வெற்றிகளுக்குத் துணையாக அமைய வேண்டுமென்று விரும்புகிறோம். அந்த வகையிலே இந்த விளையாட்டு வீரர்கள் ஊக்கம் பெற, ஆக்கம் பெற மீண்டும் மீண்டும் அவர்களைப் போற்றி, பாராட்டி அவையின் முன்னவர் என்ற முறையில் அவையின் சார்பாக நம்முடைய வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாஸ்கோ ஒலிம்பிக் இறுதி ஆட்டத்தில் இந்தியா 4 கோல்கள் போட்டு ஸ்பெயினை வெற்றி கொண்டது. சிறப்பாக விளையாடி, இந்த வெற்றியைத் தேடிந்தந்த விளையாட்டு விரர்களைப் பாராட்டுவதில் என்னுடையமகிழ்ச்சியையும் பாராட்டையும் இணைத்துக்கொள்கிறேன். அதிலும் நிறைய இளைஞர்கள் கூடி இருக்கிற இந்த மாமன்றம் தனது பாராட்டுதலையும் போற்றுதலையும் தெரிவித்துக் கொள்வது சிறப்புக்குரியது. சுரீந்தர்சிங் சோதி 2 கோல்களும, ஹரிகிருஷ்ணன் கவுசிக், முகமது ஷாகித் ஆகியோர் தலா ஒரு கோலும் போட்டு ஸ்பெயினை வென்றனர். 16 ஆண்டுகளுக்குப் பிறகு இந்தியா ஹாக்கிப் போட்டியில் இப்போதுதான் தங்கப் பதக்கத்தைப் பெறுகிறது என்பது மிகப்பெரும் வெற்றி என்று சொல்லி, உங்களுடைய உணர்வுகளோடு என்னுடைய உணர்வையும் இணைத்து, மகிழ்ச்சியடைகிறேன்.

## 3. கவன ஈர்ப்புகள்.

### (அ) மணலி எண்ணெய் சுத்திகரிப்பு ஆலைக்கு குழாய் மூலம் வரும் கச்சா எண்ணெய் திருடப்பெறுவது.

திரு. இரா. தாமரைக்கனி : தலைவரவர்களே, சென்னை துறைமுகத்திலிருந்து சென்னை மணலி எண்ணெய் சுத்திகரிப்பு ஆலைக்கு குழாய் மூலம் வரும் கச்சா எண்ணெய் குழாயிலிருந்து திருடப்படுவது குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, சென்னை துறைமுகத்தில் உள்ள கப்பல்களிலிருந்து குழாய் மூலம் மணலி சுத்திகரிப்பு ஆலைக்கு செல்லும் எண்ணெய் வழியில் பல இடங்களில் சமூக விரோதிகளால் துளையிடப்பட்டு திருடப்படுவதாக புகார் ஒன்று அரசுக்கு இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் ஜெனரல் மானேஜர் அவர்களால் கொடுக்கப் பட்டது. எண்ணெய் திருட்டுப்போவதைத் தடுக்க உடன் எடுக்கப் பட





வேண்டிய நடவடிக்கைகளைப்பற்றி விவாதிக்க உள்துறைச் செய
லர் 17—7—80 அன்று ஆலோசனைக் கூட்டம் ஒன்றை
நடத்தினார். அந்தக் கூட்டத்தில் துணைக் காவல் தலைலம
அதிகாரியும் (Deputy Inspector General of Police, Crime), நகர
காவல் துறை ஆணையரும், குற்றப்பிரிவு துணை ஆணையரும்,
மற்றும் முக்கிய காவல் துறை அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.
இந்தத் திருட்டை ஒழிக்கக் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. இரா. தாமரைக்கனி : தலைவரவர்களே, அரசாங்கத்
தின் பணம் பல கோடி ரூபாய் இதில் சம்பந்தப்பட்டிருக்கிறது.
ந்த கச்சா எண்ணெய் எடுத்துச் செல்லப்படுகின்ற குழாயில்
துளை போட்டு சுமார் 20 இலட்சம் ரூபாய் பெறுமானமுள்ள
எண்ணெய் திருடப்பட்டிருக்கிறது. ஒரு இடத்தில் போடப்பட்ட
துளைதான் இப்போது கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. இன்னும்
12 இடங்களில் துளை போடப்பட்டிருப்பதாகச் சொல்லப்படு
கிறது. இது சம்பந்தப்பட்ட நிர்வாகிக்கும் தெரிந்திருக்கும்.
அங்கே இருக்கின்ற போலீசும் இதற்கு உடந்தையாக இருப்பதாகத்
தெரிகிறது. ஆகவே, இந்தக் கொள்ளையை ஒரு முடிவுக்குக்
கொண்டுவர அரசு விசாரணை கமிஷன் அமைக்க முன்வருமா
என்று அறிய விரும்புகிறேன்.

[முற்பகல் 10–10]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : பேரவைத்
தலைவரவர்களே, துறைமுகத்திலிருந்து குழாய்கள் மூலமாக
எண்ணை சுத்திகரிப்பு ஆலைக்கு எண்ணை கொண்டு வரப்படு
கின்றது. ஆனால் இடையிலே ஆங்காங்கே சமூக விரோதிகள்
துளைபோட்டு எண்ணை எடுக்கிறார்கள் என்ற குறிப்பு மட்டும்
இருந்தது. ஆனால் பின்னர் சோதித்துப் பார்த்ததில் அனுப்பப்
படுகின்ற எண்ணைக்கும் வந்து சேர்கின்ற எண்ணைக்கும் வித்தி
யாசம் ஏற்பட்டு குறைந்ததன் காரணமாக அதனுடைய பொது
நிர்வாகி அதுபற்றிய புகார் முறையீடு செய்து கொண்டார்.
அதற்குப் பிறகு இதைக் கண்டுபிடிக்கின்ற பணியிலே நாம் ஈடு
பட்டபோது துளைபோட்டு எடுக்கிறார்கள் என்பது கண்டுபிடிக்
கப்பட்டு நேற்றுக்கூட இருவர் கைதாகி இருக்கிறார்கள். பூமிக்
குக் கீழே செல்கின்ற குழாய்களில் துளைபோட்டு எண்ணை
எடுத்து பீப்பாய் பீப்பாயாக விற்கின்ற நிலை இருந்தது
கண்டுபிடிக்கப்பட்டது. ஒரு பீப்பாயின் விலை கிட்டத்தட்ட
2 ஆயிரம் ரூபாய் வரை இருக்கின்றது. அந்த அளவுக்குப் பெரும்
திருட்டிலே ஈடுபட்டிருக்கிறார்கள். இதற்காக ஒரு பெரும்
கோஷ்டியினரே ஈடுபட்டிருக்கிறார்கள் என்று தெரிய வருகிறது.
மேலும் அவர்களிலே இரண்டு கோஷ்டியினர் இருந்த காரணத்
தினால் அவர்களுக்குள்ளே சண்டை ஏற்பட்டதன் காரணமாக

உண்மை பலவகைகளில் தெளிவாக வெளிவந்திருக்கின்றது. இப்போது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எங்கெங்கே இந்த மாதிரி திருட்டுக்கள் நடைபெறுகின்றன என்ற குறிப்புக்கள் அவர்களிடம் இருப்பதாகக் குறிப்பிட்டார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்களிடத்திலே இருக்கின்ற அத்தனை குறிப்புக்களையும் மாண்புமிகு முதல்வர் அவர்களிடத்திலே உடனடியாகக் கொடுத்தால் அதன்மீது என்னென்ன நடவடிக்கை எடுக்க வேண்டுமோ அதை எடுப்பதற்கு அரசு ஆயத்தமாக இருக்கின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் இப்படிப்பட்ட சமூக விரோதக் குற்றங்களில் ஈடுபட்டுத் திருடுகின்றவர்களை ஆங்காங்கே இருக்கின்ற பொதுமக்கள் கண்டறிந்து அரசுக்குஉதவி செய்தால்தான் பொதுச் சொத்துக்கள் பாழாகாமல் இருக்கும். இதற்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் எடுத்துக்காட்டாக இருந்து ஒத்துழைப்பு தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மற்றவர்களும் கிடைக்கின்ற தகவல்களை அரசுக்கு அவ்வப்போது தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவரவர்களே, இந்த கொள்ளை அடிக்கும் கோஷ்டியினர் சென்னையில் தண்டையார் பேட்டை, வால்டேக்ஸ் ரோடு, மாம்பலம், கிண்டி போன்ற பகுதிகளிலே பெரிய பெரிய கிடங்குகளை வைத்துக் கொண்டு இதிலே ஈடுபட்டிருக்கிறார்கள். அதிலே பல பெரிய மனிதர்கள் அரசியல் போர்வையிலே ஒளிந்து கொண்டு பல பெரிய மாளிகைகளை எல்லாம் கட்டிக்கொண்டு வருகிறார்கள். நான் அவர்களுடைய பெயரைத் தந்தால் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : பேரவைத் தலைவரவர்களே, நான் முதலிலே கூறியபடி எண்ணை திருடுகின்றவர்கள் யார் யார் என்ற அவர்களின் பெயர்களையும் அவர்களுக்கு உடந்தையாக இருக்கின்ற அதிகாரிகள் யார் யார் என்ற விவரத்தையும், எண்ணை வாங்கியவர்கள் யார் யார் எந்த விவரத்தையும் கொண்ட பட்டியலை அவர்கள் அரசுக்கு உடனடியாக அளிப்பார்களேயானால் அரசு அதுபற்றி நடவடிக்கை எடுத்து குற்றவாளிகளைத் தண்டிப்பதற்குரிய ஏற்பாடுகளைச் செய்யும், மேலும் இப்படிப்பட்ட குற்றங்கள் நடைபெறாமல் இருக்கின்ற வகையிலே பாதுகாப்பாகவும் இருக்கும். அந்த வகையிலே அரசுக்கு உதவியாக இருக்கும், ஆகவே அந்தப் பணியைச் செய்யவேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்,





திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவரவர்களே,
]தனைக் கண்டுபிடித்த போலீஸ் ஸ்டேஷனையே தாக்கி
]ருக்கிறார்கள். சட்டமன்ற உறுப்பினர் இதுபற்றிக் கூறி இருக்
]றார் என்று தெரிந்தால் ஹாஸ்டலும் தாக்கப்படும்.
]தனால் எங்களுக்குப் பாதுகாப்பு கொடுக்கப்படுமா? கொருக்குப்
]பட்டையில் இந்தத் திருட்டுக்கொள்ளை நடக்கின்றது.
]மலும் கொருக்குப்பேட்டை சாராயக் கலவரம் ஏற்பட்ட பகுதி.
]கொருக்குப்பேட்டையில் நான்கு நாட்கள் தொடர் கலவரம்
]பான்ற நிலைகள் எல்லாம் இருப்பதன் காரணத்தால் அந்த
]கொருக்குப்பேட்டையை கலவரப் பகுதியாக அரசு அறிவிக்க
முன்வருமா என்பதை அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : பேரவைத் தலைவரவர்களே, இப்படிப்பட்ட உண்மைகளை அரசுக்குக் கொண்டு வந்து தருவதன்மூலம் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு ஆபத்து ஏற்படுமோ என்று அச்சப்படுகிறார்கள். ஆகவே எங்கெங்கே அப்படிப்பட்ட பாதுகாப்புக்களைத் தரவேண்டுமோ அப்படிப்பட்ட பாதுகாப்புக்களைத் தருகின்ற வகையில் காவல் துறையினர் ஈடுபடுவார்கள். அதற்கான நடவடிக்கைகளை மாண்புமிகு முதலமைச்சரவர்களும் எடுத்துக்கொள்வார்கள். ஆகவே அச்சம் இல்லாமல் அந்தப் பணியிலே ஈடுபடவேண்டும். மேலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எங்கெங்கு பாதுகாப்பு வேண்டும் என்று குறிப்பிடுகிறார்களோ அதையும் ஆராய்ந்து எங்கெங்கே பாதுகாப்பு தேவைப்படுகிறதோ அந்த இடத்தில் பாதுகாப்பைத் தருவதற்கு அரசு முயலும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## (ஆ) கலசப்பாக்கம் தொகுதி, சாணார்பாளையத்தில் அரசினர் உயர்நிலைப்பள்ளிக் கட்டிடம் சேதம் அடைந்துள்ளது.

*திரு. பெ. சு. திருவேங்கடம் : பேரவைத் தலைவரவர்களே, வடஆற்காடு மாவட்டம் கலசப்பாக்கம் சட்டமன்றத் தொகுதியில் உள்ள சாணார்பாளையம் அரசினர் உயர்நிலைப் பள்ளி சுழற்காற்றில் சேதமடைந்தது குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன் :—

128 197—6

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : பேரவைத் தலைவரவர்களே, இவ்வாண்டு ஜூன் திங்களின் கடைசி வாரத்தில் அடித்த பெருங்காற்றினால் இப்பள்ளியில் கட்டிடங்கள் சேதமடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் மாணவர்களின் படிப்பு பாதிக்கப்படாவண்ணம் வேறு சில மாற்று ஏற்பாடுகள் செய்யப்பட்டு வகுப்புகள் தொடர்ந்து நடைபெற்று வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், பொதுப்பணித்துறை அதிகாரிகள் இவ்விடத்தை உடனடியாகப் பார்வையிட்டு கட்டிடத்தைச் சீர் செய்வதற்கு திட்ட மதிப்பீடுகள் தயாரித்து வருகிறார்கள்.

திரு. பெ.சு. திருவேங்கடம் : பேரவைத் தலைவர் அவர்களே, மே மாதம் 28ஆம் தேதியன்று அடித்த சுழற் காற்றிலே அந்தப் பள்ளியில் இருந்த நிரந்தர கட்டிடமும், இரண்டு கொட்டகைகளும் விழுந்து விட்டன. இன்றுவரை அங்கே எந்தவிதமான மாற்று ஏற்பாடும் செய்யப் பெறாத நிலையில், 200-க்கும் மேற்பட்ட மாணவர்கள் மரத்தடியில் இருந்துதான் படித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே அமைச்சர் அவர்கள் நிரந்தர ஏற்பாடு ஒன்றை அவர்களுக்குச் செய்யவும் அதற்கிடையில் தற்காலிக முறையில் விழுந்த கொட்டகைகளை புதுப்பித்துத் தரவும் ஏற்பாடு செய்ய முன் வருவாரா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுப்பணித் துறையினர் அதற்கான மதிப்பீட்டைத் தயாரித்து அனுப்புவார்களேயானால் அரசு அதில் மேற்கொண்டு நடவடிக்கையை விரைவாக எடுக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. பெ. சு. திருவேங்கடம்: தலைவர் அவர்களே, நிரந்தர கட்டிடத்திற்குத்தான் அவர்கள் மதிப்பீடுகள் தயார் செய்து அனுப்ப முடியும். ஆனால் அது தவிர தாற்காலிக கொட்டகைகள் இரண்டு விழுந்துவிட்டன. வகுப்புகள் பெரும்பாலும் அங்கேதான் நடைபெற்றன. ஆகவே அந்தக் கொட்டகைகளைத் திரும்ப அமைக்க ஏதாவது நடவடிக்கை எடுக்க வேண்டும். இதற்காக அதிகாரிகளைச் சந்தித்துக் கேட்டபோது, கல்வி அதிகாரிகளுக்கு இப்படிப்பட்ட காலங்களில் தனியாக நிதி ஒதுக்கீடு அதிகமாக செய்யும் வகையில் அரசாங்கம் ஏற்பாடு செய்திருந்தால், நாங்கள் எடுத்து இந்த வகையில் செய்ய முடியும் என்று சொல்கிறார்கள். ஆகவே மாண்புமிகு அமைச்சர்



அவர்கள் அங்கே அந்த தற்காலிக கொட்டகைகளையாவது உடனடியாக கட்டித்தரும்படி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். எடுக்க முன் வருவாரா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, அது பற்றி அரசு உடனடியாகக் கவனம் செலுத்தும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

## 4. அரசினர் சட்ட முன்வடிவுகள்.

### (அ) பொதுப் பொறுப்புக் கழகங்கள் (வேளாண்மை நிலங்கள் நிர்வாகத்தை முறைபடுத்துதல்) இரண்டாம் திருத்தச் சட்ட முன்வடிவு, 1980.

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம் : தலைவர் அவர்களே, தமிழ்நாடு, 1980ஆம் ஆண்டு பொதுப் பொறுப்புக் கழகங்கள் (வேளாண்மை நிலங்கள் நிர்வாகத்தை முறைப் படுத்துதல்) இரண்டாம் திருத்தச் சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம் : இச்சட்டமுன்வடிவை பேரவை முன் அறிமுகப்படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

### (ஆ) கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அதிகாரிகள் நியமனம்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1980.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவர் அவர்களே, தமிழ்நாடு, 1980ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அதிகாரிகள் நியமனம்) திருத்தச் சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

[1980 ஜூலை 30

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: இச் சட்ட முன்வடிவை
பேரவை முன் அறிமுகப்படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச் சட்ட முன்வடிவு
அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

## (இ) நிதி ஒதுக்க (எண்-2) சட்டமுன்வடிவு, 1980.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்
களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

" தமிழ்நாடு 1980 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண்-2) சட்ட
முன்வடிவு சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 32/80
ஆய்வுக்கு * எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும் "

திரு. பெ. சு. திருவேங்கடம் : பேரவைத் தலைவர் அவர்
களே, இந்த 1980–81 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க சட்ட முன்
வடிவின் மீது திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் என்னு
டைய கருத்துக்களைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

ஆளுநர் அவர்களுடைய உரையின் மீது நன்றி தெரிவிக்கிற
தீர்மானத்தின் மீது சொல்கிற போது மாண்புமிகு முதல் அமைச்
சர் அவர்கள், " இங்கே பல்வேறு சட்டமன்ற உறுப்பினர்கள்
பேசினார்கள். விவசாயிகளுடைய பிரச்னை தீர்க்கப்பட வேண்
டும் என்று விரும்பினார்கள். நீங்கள் பட்ஜெட்டிலே அதற்கான
விளக்கத்தைப் பாருங்கள் " என்று சொன்னார்கள். என்னைப்
போன்ற சட்டமன்ற உறுப்பினர்கள் மிக மகிழ்ச்சியோடு பட்
ஜெட் தாக்கல் செய்கிறபோது விவசாயிகளுடைய பிரச்னைகள்
தீர்த்து வைக்கப்பெறும் என்று நம்பிக் கொண்டிருந்தோம்.

[முற்பகல் 10-20]

ஆனால் இன்றைய தினம் எங்களைப் போன்ற சட்டமன்ற
உறுப்பினர்கள் மட்டுமல்ல; இலட்சக்கணக்கான தமிழ்நாடு
விவசாயப் பெருங்குடி மக்கள் ஏமாற்றப்பட்டிருக்கிறார்கள்
என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இன்றைய தினம் நம்
முதல் அமைச்சர் அவர்களும், வேளாண்மைத் துறை அமைச்சர்
அவர்களும் டெல்லி சென்று விலை நிர்ணயம் செய்யப்பட
வேண்டும் என்று கேட்டார்கள் என்று பத்திரிகையில் பார்த்தேன்.

---

* 1980, ஜூலை 29 ம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு
அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.



1980 ஜூலை 30] [திரு. பெ. சு. திருவேங்கடம்]

மத்திய அரசானாலும் சரி அல்லது மாநில அரசானாலும் சரி
விவசாயிகள் உற்பத்தி செய்கிற விளைபொருள்களுக்கு ஒரு
நியாயமான விலை கிடைக்க வேண்டும் என்று சொல்லிக் கொண்
டிருந்தால் போதாது, உடனடியாக அதற்கு தீர்வு காணவேண்டும்.
உற்பத்தியாகக் கூடிய நெல்லானாலும் சரி, கரும்பானாலும் சரி
அவற்றிற்கு நியாயமான விலை நிர்ணயிப்பதற்கு இந்த அரசு
விரைவாக நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்று கேட்டுக்
கொள்ள விரும்புகிறேன்.

அதே போன்று விவசாயிகளுக்கு கடன் தள்ளுபடி செய்வது
குறித்து நம் அவை முன்னவர், நிதி அமைச்சர் அவர்கள் இங்கே
விளக்கமாக எடுத்துச் சொன்னார்கள். தேர்தலுக்காக நாங்கள்
சொன்னோம், ஆனால் அவைகள் அனைத்தையும் அரசாங்கம்
தள்ளுபடி செய்ய முடியுமா என்று கேட்டார்கள். உள்ள
படியே நம் நிதி அமைச்சர் அவர்கள் மனதில் ஒன்றை வைத்துக்
கொண்டு வேறு ஒன்றைச் சொல்லாமல் அரசாங்கம் என்ன
நினைத்துக் கொண்டிருக்கிறதோ அதை அப்படியே சொன்னார்
கள். அதற்காக நான் அவர்களுக்கு நன்றி செலுத்தக் கடமைப்
பட்டிருக்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் தலைமை)

இன்றைய தினம் தமிழ்நாட்டிலிருக்கிற விவசாயிகள் பற்றி
ஆளும் கட்சி உறுப்பினர்களும் சொன்னார்கள், பல்வேறு எதிர்க்
கட்சி உறுப்பினர்கள், கம்யூனிஸ்ட் கட்சியைச் சார்ந்த உறுப்
பினர்கள் கூடச் சொன்னார்கள். ஏதோ திராவிட முன்னேற்றக்
கழகம் நிலச்சுவாந்தார்களுக்காக வாதாடுகிறது என்ற வாதத்தை
இங்கே எடுத்து வைத்தார்கள். நாங்கள் நிலச்சுவாந்தார்களுக்
காகவோ அல்லது நிலக்கிழார்களுக்காகவோ இங்கே பேசவில்லை.
நீங்கள் எந்தச் சிறிய விவசாயிகள் பற்றிச் சொல்கிறீர்களோ அதே
விவசாயிகளுக்காகத்தான்—நாங்கள் அவர்கள் கஷ்ட நஷ்டங்களை
இந்த மன்றத்தில் எடுத்துச் சொல்லி இருக்கிறோம், சொல்லி
வருகிறோம்.

இன்றைய தினம் கடன்கள் எல்லாம் தள்ளுபடி செய்யப்
படும் என்று எதிர்பார்த்திருந்த விவசாயப் பெருங்குடி மக்கள்
உங்களுடைய அறிவிப்பை எதிர்பார்த்து ஏமாந்திருக்கிறார்கள்;
கொதித்துக் கொண்டிருக்கிறார்கள். அதே சமயத்தில் கூட்டு
றவுத் துறையைச் சார்ந்த அதிகாரிகள், தாலூகா அலுவலகங்
களில் இருக்கிற அதிகாரிகள், வட ஆற்காடு மாவட்டத்தில் உள்ள
தாலூக்காக்களில் இன்றைய தினம் ஜப்தி நடவடிக்கையில் ஈடு
பட்டிருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்தில் தங்கள் மூலம்
இந்த அரசுக்கு நினைவூட்ட விரும்புகிறேன். அதிகாரிகள்
சொல்கிறார்கள், ஏதோ சட்டப் பேரவைக் கூட்டம் நடை

பெற்றுக் கொண்டிருக்கிறது, இந்தப் பேரவை கூட்டத் தொடர்
முடிந்ததற்குப் பிறகு ஜப்தி நடவடிக்கைகள் மிகக் கடுமையாக
எடுக்கப்படும் என்று அதிகாரிகள் சொல்லிக் கொண்டிருக்கிறார்
கள். அதற்கான நோட்டீஸ்கள் எல்லாம் புதுக்கோட்டை
போன்ற மாவட்டத்தில் இருக்கிற அரசாங்க ப்ரஸ்ஸில் அடிக்கப்
படுவதாகக்கூடச் சொல்லப்படுகின்றன. அப்படி நீங்கள்
தேர்தல் நேரத்தில் சொன்ன வாக்குறுதிகளை, சட்டமன்றத்தில்
சொல்லியதற்குப் பிறகு அதை நிறைவேற்றாத வண்ணம் நீங்கள்
இப்படிப்பட்ட காரியங்களில் ஈடுபடுவீர்களானால் விவசாயிகள்
கொதித்தெழுந்திருக்கிற இந்த நேரத்தில் இந்த அரசு பெரிய
தொரு போராட்டத்தை விவசாயிகள் மத்தியில் நீங்களே
ஏற்படுத்துவதற்கு காரணமாக இருப்பீர்கள் என்பதை இந்த
நேரத்தில் நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதே போல் விவசாயிகள் பயன்படுத்துகிற உரத்தின் விலை
இன்றைய தினம் ஏற்றப்பட்டிருக்கிறது. நம் மாநில அரசு மத்திய
அரசுக்குத் தெரிவித்து உரத்தின் விலையைக் குறைப்பதற்கு
நீங்கள் கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று
கேட்டுக் கொள்கிறேன்.

விவசாயிகளின் கடன் பிரச்னையில் நாம் மெத்த அக்கறை
எடுத்துக் கொண்டு ஒரு சுமுகமான நிலை ஏற்படுகிற வகையில்
நீங்கள் பாடுபட வேண்டும், அந்த வகையில் உங்கள் நடவடிக்கை
கள் இருக்க வேண்டும் என்று இந்த நேரத்தில் நான் அரசைக்
கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

நம்முடைய அரசாங்கம் கருவுற்றிருக்கிற தாய்மார்களுக்கு
ஒரு பிரத்தியேகமான திட்டத்தை அறிவிக்கும் என்று எதிர்
பார்த்துக் கொண்டிருந்தார்கள். ஏற்கனவே கிராமங்களில்
ஆரம்ப சுகாதார நிலையங்கள் இருக்கின்றன. அந்த ஆரம்ப
சுகாதார நிலையங்களில் பேறுகால உதவியாளர்கள் இருக்கிறார்
கள். சுகாதாரப் பார்வையாளர்கள் இருக்கிறார்கள். அவர்
களெல்லாம் கிராமங்களில் முகாமிட்டு கருவுற்றிருக்கிற தாய்
மார்களுக்கு, ஆறு மாதம், ஏழு மாதம் என்று கணக்கிட்டுப்
பார்த்து ஊட்டச் சத்து மாத்திரைகள் அளித்து பிரசவ காலம்
வரை ஒத்துழைக்கிற திட்டம் நல்ல முறையில் நடந்து வந்தது.
சமீப காலத்தில் ஆரம்ப சுகாதார நிலையங்களில் இருக்கிற
மருத்துவ அதிகாரிகள் சப் சென்டர்களுக்குச் செல்கிற பணியை
அறவே நிறுத்திவிட்டார்கள். காரணம், ஒதுக்கப்பட்டிருக்கிற
வண்டிகள் சரியான முறையில் இயங்கவில்லை, அவைகள் எல்லாம்
பழுதடைந்திருக்கின்றன. ஆகவே நீங்கள் புதிய திட்டத்தைச்
செயல்படுத்தாவிட்டாலும் ஏற்கனவே இருந்த நல்ல திட்டத்தை
நல்ல முறையில் செயல்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்
கிறேன்.



திருவண்ணாமலை மருத்துவ மனையில் ஒரு முறை நாய்
கடிக்கப்பட்ட நபரை எடுத்துச் செல்கிறார்கள். அங்கே இருந்த
டாக்டர் என்ன சொல்கிறார்? அங்கே அதற்கான தடுப்பு ஊசி
இல்லை என்று சொல்கிறார். இப்படிப்பட்ட நிலை இன்றைய
தினம் பல்வேறு மருத்துவ மனைகளில் இருந்து வருகின்றது
என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ள விரும்பு
கிறேன்.

அதே போன்று, வட ஆற்காடு மாவட்டத்தில் நம்முடைய
அரசாங்கம் சட்டக் கல்லூரி ஆரம்பிக்க இருப்பதாக சென்ற
ஆண்டு இந்த மாமன்றத்தில் அறிவித்தார்கள். அதைப் பற்றிய
தகவல் ஒன்றும் இங்கே சொல்லப்படவில்லை. எனவே, அர
சாங்கம் வட ஆற்காடு மாவட்டத்தில் ஒரு சட்டக் கல்லூரியை
ஆரம்பிப்பதற்கு உண்டான நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ள
வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதே நேரத்திலே, அரசாங்கத்தின் பல்வேறு மேல்நிலைப்
பள்ளிகளிலே, உயர்நிலைப் பள்ளிகளிலே, அது 10-வது வகுப்
புள்ள உயர்நிலைப் பள்ளியானாலும் அதே போல் ஹையர்
செகண்டரி பள்ளிகளிலும் தேர்விலே தேறுகின்ற மாணவர்களின்
எண்ணிக்கை மிகமிகக் குறைவாக இருக்கிறது. காரணம், அந்த
மாவட்டத்திலே ஒரு அதிகாரிதான் இந்த மாவட்டத்திலே இருக்
கின்ற அத்தனை பள்ளிகளையும் கண்காணிக்க வேண்டிய சூழ்
நிலையிலே இருந்து வருகிறார். ஆகவே, அரசாங்கம் இதிலே
உடனடியாகக் கவனம் செலுத்த வேண்டும். தலைமை ஆசிரியர்
கள் எந்தப் பள்ளிகளிலே நல்ல முறையிலே பணியாற்றுகின்றார்
களோ, அந்தப் பள்ளிகளில் மாணவர்கள் தேர்விலே தேர்வு
பெறுகின்ற சதவிகிதம் அதிகமாக இருக்கிறது. அப்படிக் குறை
வான சதவிகிதம் பெறுகின்ற பள்ளித் தலைமை ஆசிரியர்களின்
மீது அரசாங்கம் கவனம் செலுத்தியாக வேண்டும். அப்படிப்
பட்ட பள்ளிகளின் மேல் நல்ல முறையிலே கவனம் செலுத்தி,
அங்கேயும் அதிகமான மாணவர்கள் தேர்விலே தேறுகின்ற
அளவிற்கு இந்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும்
என்று நான் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்ள விரும்பு
கிறேன்.

அடுத்து, ஊராட்சி ஒன்றியங்களிலும், ஊராட்சி மன்றங்களி
லும் தேர்தல் வரும் வரும் என்று சொல்லிக் கொண்டிருக்கிறீர்கள்.
தவிர, எத்தனையோ முறை கிராமங்களிலே இருக்கின்ற நிலை
மைகளைப் பற்றிச் சொல்லிக் கொண்டு வருகிறோம். அங்கே,
தெரு விளக்குகள் அறவே இல்லை. எப்போது தெரு விளக்குகள்

[திரு. பெ. சு. திருவேங்கடம்] [1980 ஜூலை 30

போடப்படும் என்று கேட்டபோது, சுமார் இரண்டு மாத காலத்தில் போடப்படும் என்று சொல்லியிருக்கிறீர்கள். இந்த இரண்டு மாத காலத்தில் தமிழ்நாட்டில் எல்லா இடங்களிலும் ஒழுங்காக தெரு விளக்குகள் எரிகின்ற நடவடிக்கைககளை எடுக்க வேண்டும் என்று நான் இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அதே நேரத்தில், கால்நடைகளைப் பற்றிச் சொல்லியாக வேண்டும். கால்நடைத் துறையிலே இருக்கின்ற அதிகாரிகள், கிராமங்களிலே உள்ளவர்கள் கால்நடைகளை எடுத்துக்கொண்டு போய், அங்குள்ள டாக்டர்களைச் சந்திக்கின்றபோது, அந்த ஏழை எளிய விவசாயிகளைப் பார்த்து, மருந்து இல்லை, வெளியே வாங்கிக் கொண்டு வாருங்கள் என்று சொல்லக்கூடிய நிலைமை இருக்கிறது. ஆகவே, இந்த ஏழை விவசாயிகள் கால் நடைகளைக் கொண்டு செல்லுகின்றபோது, அங்கே எந்தவித மான வசதியும் இல்லாத நிலைதான் இருக்கிறது. எனவே, அப்படிப்பட்ட கால்நடைகளுக்குத் தேவையான மருந்துகள் இருக்கின்ற வகையிலே அரசாங்கம் பார்த்துக் கொள்ளவேண்டும் என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

திருவண்ணாமலையிலே இருக்கின்ற ரேணு செட்டியார் என்ற ஒருவர் சென்ற 1979 ஆம் ஆண்டு திருவண்ணாமலை யிலே இருக்கின்ற கால்நடை டாக்டர்கள் தான் வைத்திருக்கும் 10, 15 கறவை மாடுகளுக்கு, தடுப்பு ஊசி போடுவதாகச் சொல்ல வந்ததாகவும் வந்து ஊசி போட்டதனால் மாடுகள் இறந்துவிட்டதாகவும் புகார் கொடுத்துள்ளார் அவரது தொழிலே பால் கறந்து ஜீவனம் செய்வதுதான். அப்படிப் போடப்பட்ட பிறகு, ஒன்றைத் தவிர மற்ற மாடுகள் அனைத்தும் இறந்து விட்டன. அந்த நபர் இதைக் குறித்து அரசாங்கத்திற்கும், சம்பந்தப்பட்ட கால்நடைத் துறைக்கும் விண்ணப்பித்து இருக் கிறார். அரசாங்கம் அந்த நபருக்கு ஏதாவது நஷ்ட ஈடு தரவேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

அதே போன்று, ஜவ்வாது மலை கலசபாக்கம் தொகுதியிலே இருக்கிறது. ஜவ்வாது மலையில் மேலும் சில கிராமங்கள், போளூர், செங்கம் ஆகிய தொகுதிகளைச் சேர்ந்ததாகவும் இருக் கின்றன. இன்றைய தினம் அரசாங்கத்திலே அங்குள்ள சிறு விவசாயிகளுக்கும், பழங்குடி மக்களுக்கும் அவர்கள் வாழ்க்கையைச் செம்மைப்படுத்துவதற்காக ஏராளமான கறவை மாடுகள், செம்மறி ஆடுகள், இது போன்ற கால்நடைகளை வாங்கித் தந்திருக்கிறார்கள். அப்படியிருந்தும், அங்கே ஒரு கால்நடை மருத்துவ மனை இருக்கின்றதா என்றால் இல்லை. ஏற்கனவே, நானும், சென்ற முறை அமைச்சராக இருந்த திரு. சௌந்திர



1980 ஜூலை 30] [திரு. பெ. சு. திருவேங்கடம்]

பாண்டியன் அவர்களும் அங்கே ஒரு விழாவிற்காகச் சென்ற போது, அங்கே ஒரு மருத்துவ மனை துவக்கப்படும் என்று அன்றைய அமைச்சர் அவர்கள் உறுதியளித்தார்கள். ஆனால், இன்றுவரை அது துவக்கப்படவில்லை. எனவே, அந்தப் பழங்குடி மக்களின் நலனைக் கருதி, ஜமுனாமத்தூரில் ஒரு கால்நடை மருத்துவ மனையைத் திறப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று நான் இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன். (மணி அடிக்கப்பட்டது.)

[முற்பகல் 10-30]

வட ஆற்காடு மாவட்டம் மிகப் பெரிய மாவட்டம். அந்த மாவட்டத்தை இரண்டாகப் பிரித்து திருவண்ணாமலையைத் தலைநகராகக் கொண்ட புதிய மாவட்டத்தை அமைக்கவேண்டு மென்று கோரிக்கை இருந்து வருகிறது. அது பெரிய மாவட் டமாக இருக்கும் காரணத்தால் நிர்வாகம் சரியான முறை யில் நடைபெற முடியவில்லை. அந்த மாவட்டத்தை இரண் டாகப் பிரித்து திருவண்ணாமலையைத் தலைநகராகக் கொண்ட புதிய மாவட்டத்தை ஏற்படுத்தி அந்த மாவட்டத்திற்குப் பேரறிஞர் அண்ணா அவர்கள் பெயரைச் சூட்ட வேண்டு மென்று அரசைக் கேட்டு துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி வணக்கத்தைக் கூறி முடிக்கிறேன்.

*திரு. கா. கோபாலகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பாரம்பரியம் மிக்க இச்சபை யிலே அங்கத்தினராக இருந்து செயலாற்றுவதற்கு என்னைத் தேர்ந்தெடுத்த பெரியகுளம் தொகுதி வாக்காளப் பெருமக்க ளுக்கும், பொன்மனச் செம்மல் அவர்களுக்கும் பேச வாய்ப்ப ளித்த துணைத் தலைவர் அவர்களுக்கும் நன்றி கலந்த வணக் கத்தை முதலில் தெரிவித்துக் கொள்கிறேன்.

அண்ணாவின் காலத்திற்குப் பின் அண்ணாவின் எண்ணங் களைப் பிரதிபலிக்கும் வகையில் அண்ணாவின் அரசை அமைத்து எல்லாத் துறைகளிலும் புரட்சிகரமான சாதனை களைத் தமிழக அரசு செய்து கொண்டிருப்பதை நான் மிகவும் பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறேன்.

''கேளுங்கள் கிடைக்கும், தட்டுங்கள் திறக்கப்படும்'' என்ற அடிப்படையில் என்னுடைய தொகுதியில் உள்ள சில குறை களை இந்தச் சபை முன் வைக்க விரும்புகிறேன். அந்தக் குறைகளைப் போக்கித் திட்டங்களை நிறைவேற்ற மானியத்தில் நிதி ஒதுக்கும்படி கேட்டுக் கொள்கிறேன். பெரியகுளம் தொகுதி மக்களின் நீண்டகாலக் கோரிக்கை சோத்துப்பாறை

குப்பம்பாறை அணைக்கட்டை கட்ட வேண்டுமென்பதாகும். அந்த அணை கட்டுவதால் லாபம் இல்லை. செலவுக்கேற்ப பலன் கிடையாது என்று கூறப்படுகிறது. குடிநீர்த்துறை, நீர்ப் பாசனத் துறையில் எவ்வளவு பணம் செலவாகிறது என்று பார்க்காமல் எவ்வளவு மக்கள் பலன் அடைகிறார்கள் என்பதை மட்டுமே பார்க்கவேண்டுமென்று பேரறிஞர் அண்ணா அவர்கள் கூறியிருப்பது போல் அந்த சோத்துப்பாறை, குப்பம்பாறை அணையை விரைவில் ஏற்படுத்தித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கொடைக்கானலைச் சுற்றியுள்ள பகுதிகளை சீசன் மற்ற நேரங்களில் வரக்கூடிய மக்கள் கண்டு களிக்க மினி டவுன் பஸ் விடுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் மஞ்சளாறு அணைக்கட்டு உள்ளது. ஆனால் என்னுடைய தொகுதிக்கு அந்த அணையால் எந்தவிதமான பயனும் இல்லை. அந்த அணை பார்த்து ரசிப்பதற்காகத்தான் இருக்கிறது. அந்த அணையினுடைய வடக்குப் பகுதியில் ஒரு வாய்க்கால் வெட்டினால் என்னுடைய தொகுதியிலுள்ள கிராம மக்களுக்குச் சிறிது பயன் ஏற்படும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

கோடை வாசஸ்தலமான கொடைக்கானல் என்னுடைய தொகுதியில்தான் இருக்கிறது. அழகான ஏரி இருக்கிறது. கவர்ச்சிகரமான கண்காட்சி இருக்கிறது. பல ஏரிகள் சுற்றி இருக்கின்றன. ஆனால் அவற்றைச் சுற்றியுள்ள கிராமங் களுக்கு போக்குவரத்து வசதி இல்லை. சாலை வசதி இல்லை, குடி தண்ணீர் வசதி இல்லை. மற்ற வசதிகள் எதுவும் இல்லை. அந்தக் குறைகளைப் போக்கி கொடைக் கானல் ஒன்றியத்தைத் தன்னிறைவுத் திட்டத்தின்கீழ் எடுத்துச் செயல்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நான் ஓட்டுக் கேட்கப்போகும்போது கொடைக்கானல் தாலுகாவில் ஒவ்வொரு ஊருக்கும் 6 மைல், 8 மைல் தூரம் நடந்து போகக்கூடிய அளவுக்கு ஒத்தையடிப் பாதைகளில் சரிவான பாதைகளில் கரடுமுரடான பாதைகளில் சென்று ஓட்டுக் கேட்க வேண்டியிருந்தது. அப்படி ஓட்டுக் கேட்டு நான் வெற்றி பெற்று சட்டசபைக்கு வந்த பிறகு 10 நாட்கள் ஆஸ்பத்திரியில் தங்கி காலுக்குச் சிகிச்சை செய்ய வேண்டிய நிலைமை ஏற்பட்டது. அந்த நிலைமையைப் போக்க என்னுடைய தொகுதியில் சாலை வசதி இல்லாத கிராமங் களுக்குச் சாலை வசதியும், குடி தண்ணீர் வசதி இல்லாத கிராமங்களுக்குக் குடிதண்ணீர் வசதியும் செய்து தரும்படி கேட்டுக் கொள்கிறேன்.





பழம்புத்தூர் ஊர்களை பூம்பாறையுடன் இணைக் கூக்கால், கீழ்ப்பள்ளம் முதல் பாச்சலூர் வரை பல கக்கூடிய சாலை, இணைக்கக்கூடிய சாலை, கே.சி. பட்டி-பாய்ச்சலூர் ஊர்களை இணைக்கும் சாலை ஆகியவற்றைப் போட்டுத் தர ஏற்பாடுகள் செய்து தரும்படி கேட்டுக் கொள்கிறேன். என்னுடைய தொகுதி மலைப்பாங்கான தொகுதி. அந்தத் தொகுதியில் மேல்மலைப் பகுதி, கீழ்மலைப் பகுதி, நடுவில் கோடைக் கானல் இருக்கிறது. மேல் மலைப் பகுதியில் ஒரு ஆஸ்பத் திரியும் கீழ்மலைப்பகுதியில் ஒரு ஆஸ்பத்திரியும் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். தற்போது அந்த மக்கள் ஆஸ்பத்திரிக்குச் செல்ல வேண்டுமென்றால் கோடைக்கானலுக்குத்தான் செல்ல வேண்டும். பதினைந்து மைல்கள், இருபது மைல்கள் நடந்து செல்ல வேண்டும். பிரசவத்திற்கும் கோடைக்கானல் ஆஸ்பத் திரிக்குத்தான் செல்ல வேண்டும். கடுமையான நோய் இருந்தாலும் கோடைக்கானலுக்குத்தான் செல்ல வேண்டும் என்ற நிலை இருக்கிறது.

வரும்பொழுது நடந்தேதான் வரவேண்டும். இப்படிப் பட்ட கஷ்டங்களைப் போக்குகின்ற முறையிலே அங்கே மேல்மலைப் பகுதியிலே ஒரு ஆஸ்பத்திரியும், கீழ்மலைப் பகுதியிலே ஒரு ஆஸ்பத்திரியும் கட்டிக்கொடுப்பதற்கு ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தமிழ்நாட்டிலே கோடை வாசஸ்தலங்களாக இருப்பவை ஊட்டியும், கோடைக்கானலும்தான், அதிலே ஊட்டியை சுற்றுலா வாரியம் ஊட்டி ஊட்டி வளர்க்கிறது. ஆனால் கோடைக்கானலுக்குச் சரியான முறையிலே செலவழிக்கப்படுவ தில்லை. ஆகவே நல்லமுறையிலே செலவழித்து வருகிறவர் களை கவரக்கூடிய வசதிகளை அமைத்துத் தர வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதிதான் தமிழ்நாட்டிலேயே மிகப் பெரிய தொகுதி என்று கருதுகிறேன். என்னுடைய தொகுதியை கோடைக்கானல் மலைப்பகுதியை ஒரு தொகுதியாகவும், தரைப்பகுதியை ஒரு தொகுதியாகவும் பிரிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு எனக்குப் பேச வாய்ப் பளித்த துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொண்டு முடித்துக்கொள்கிறேன், வணக்கம்.

* திரு. க. வெ. வீராசாமி அம்பலம்: மாண்புமிகு சட்டப்பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1980–81 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க சட்ட முன்வடிவு விவாதத்தின் மீது என்னுடைய சில கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

[திரு. க. வெ. வீரானம்பலம்] [1980 ஜூலை 30

முதற்கண் தமிழ்நாடு சட்டப் பேரவைக்கு மேலூர் தொகுதியிலிருந்து என்னைத் தேர்ந்தெடுத்து அனுப்பிய மேலூர் தொகுதி மக்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ்நாட்டில் மின் வசதி உற்பத்திக்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். தமிழ்நாட்டில் ஆறுகள் மூலம் மின் சக்தி உற்பத்தி பூராவும் பயன்படுத்தப்பட்டுவிட்டது. ஆகையால் வேறு வழியில் மின் உற்பத்தி செய்ய, தெர்மல் ஸ்டேஷன் மூலமாகவோ அல்லது அனல் மின்சாரம் மூலமாகவோ முயற்சிகள் மேற்கொள்ளப்படவேண்டும.

அடுத்து விவசாயிகளின் கடன்களை பூராவும் ரத்து செய்ய வேண்டும். விவசாயிகளுக்கு தாங்கள் உற்பத்தி செய்யும் பொருள்களுக்கு நேரடியாக விற்பனை செய்துகொள்ள விற்பனை நிலையங்களை அமைக்க உதவ வேண்டும். மேலும், நிலங்களில் தற்போது உற்பத்தி செய்யும் அளவை விஞ்ஞான முறையில் அதிக விளைச்சலுக்கு நடவடிக்கைகள் எடுக்கவேண்டும்.

கிராமங்களுக்கு குடிநீர் வசதி அவசியமாகவும் கட்டாயமாகவும் அளிக்க நடவடிக்கை எடுக்கவேண்டும்.

தமிழ்நாட்டில் கிராமப்புற மக்களுக்கு மருத்துவ வசதிகள் கிடைக்க நடவடிக்கைகள் எடுக்கவேண்டும்.

இரண்டாவதாக என்னுடைய தொகுதியில் சில பிரச்சினைகளை இந்தச் சந்தர்ப்பத்தில் அரசின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

மேலூர் தொகுதி, கொட்டாம்பட்டி யூனியனில் கோட்டாம்பட்டி ஊராட்சியில் மரவரி அதாவது தென்னை மரம், புளிய மரம் முதலிய மரங்களுக்கு 1371 பசலி முதல் 1377 வரை வரி வசூல் செய்த தொகையை வரவு வைக்காமல் இருக்கிறது. மேலூர் தாசில்தார் அவர்களை இதுபற்றி விசாரித்தபோது மேற்குறிப்பிட்ட கணக்குகள் காலக்கிரமத்தில் எரிந்து போய்விட்டன என்றும் காலிபண்ண வேண்டிய கணக்கு என்றும் தெரிவித்துள்ளார். மேற்படி வரித் தொகையிலிருந்து சுமார் 15 ஆயிரம் மேற்படி பஞ்சாயத்து ஒன்றியத்தில் உள்ள ஊராட்சிக்கு வரவேண்டிய தொகை. ஆகையால் இந்த அரசு இந்த விஷயத்தை விசாரணை செய்து தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



1980 ஜூலை 30] [திரு. க. வெ. வீரானம்பலம்]

அடுத்து நான் தெரிவித்துக் கொள்வது என்னவென்றால் கோட்டாம்பட்டி யூனியன் பஞ்சாயத்திலுள்ள புறம்போக்கு குவாரி (மலைகளில்) கல் உடைக்க ரெவின்யூ இலாகாவினர் 1966 முதல் ஏலத்திற்கு விடப்பட்டது. 1376 பசலி முதல் 1390 பசலி வரையில் வசூலித்த தொகையிலிருந்து பஞ்சாயத்துக்குச் சேரவேண்டிய தொகை 1388 பசலி தவிர மற்றவைகளுக்கு வந்து சேரவில்லை. இந்த விஷயத்தையும் அரசு கவனிக்க வேண்டும்.

அடுத்து, குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலமாக அடிக்குழாய் பம்புகள் எல்லா ஊராட்சி ஒன்றியத்திலும் சுமார் 100-க்கு மேல் இயங்காமல் மேலூர் தொகுதியில் இருக்கின்றன. மேற்படி பழுதடைந்த பம்புகளை பழுதுபார்க்க வேண்டுமானால் மதுரையிலுள்ள ஒரே எஞ்சினியர்தான் கவனிக்க வேண்டும். இதனால் பழுது பார்க்க மிகுந்த காலதாமதம் ஆகிறது. ஆகையால் ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் பழுது பார்க்கக் கூடிய அதிகாரிகளை மெக்கானிக் ஒருவரை ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் நியமனம் செய்தால் அவ்வப்போது பம்புகள் ரிப்பேர் செய்து குடிநீர் தடங்கல் இல்லாமல் வழங்க உதவும். அரசு தகுந்த நடவடிக்கை எடுக்கவேண்டும்.

அடுத்து, கீழ்க்கண்ட கிராமங்களுக்கு ஆமூர், மருதூர், கூத்தப்பன்பட்டி, அட்டப்பட்டி பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி குழாய் மூலம் கொண்டுவந்து கொடுக்கப்படவேண்டும். காரணம் என்னவென்றால் மேற்படி கிராமங்களில் குடி. தண்ணீர் கிடைக்க வழியில்லை. பூமி களிமண் பூமி. நல்ல தண்ணீர் கிடைப்பதில்லை. ஆகவே வேறு இடத்தில் கிணறு தோண்டி மேல்தொட்டி மூலம் குழாய் அமைத்து தண்ணீர் கொண்டு வந்து தர நடவடிக்கை எடுக்கக் கோருகிறேன்.

அடுத்து, மேலூரில் கூட்டுறவு நூற்பாலை இருக்கிறது. அதன் கிளையை ஆரம்பிக்க பரிந்துரை செய்யப்பட்டிருக்கிறது.

[முற்பகல் 10-40]

மேற்படி கிளை கூட்டுறவு நூற்பாலையை கோட்டாம்பட்டி யூனியனில் ஆரம்பிக்க அரசு உத்தரவு பிறப்பிக்கக் கோருகிறேன். அதனால் பின் தங்கிய ஏழை மக்களுக்கு அதிக வேலை வாய்ப்பு கிடைக்க உதவியாய் இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[திரு. க. வெ. வீரானம்பலம்] [1980 ஜூலை 30

மேலூர் தொகுதி கோட்டாம்பட்டியில் தீப்பெட்டித் தொழிற்சாலை அல்லது சிறு தொழில்கள் ஆரம்பிக்க அரசு உதவ வேண்டும். அதனால் அதிக ஏழை மக்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்க உதவும். இந்தப் பகுதி பிற்பட்ட பகுதி.

மேலூர் தாலூக்கா பிற்பட்ட பகுதி. விவசாயத்தையே நம்பி வாழ வேண்டியிருக்கிறது. விவசாய காலம் முடிந்தவுடன் மக்கள் அன்றாட வாழ்க்கை நடத்த மிகவும் சிரமமாக இருக்கிறது.

ஆகையால் விவசாயம் இல்லாத காலங்களில் ஏழை மக்களுக்கு வருவாய் கிடைக்கும் வகையில் வெள்ளலூர் பிர்க்காவில் ஏராளமான கரும்பு சாகுபடி செய்து வெல்லம் ஆட்டிய பிறகு கரும்பு சக்கை அதிகமாகக் கிடைப்பதால் மேற்படி மூலப் பொருளை உபயோகித்து, அப்பகுதியில் ஒரு பேப்பர் ஆலை ஆரம்பிக்க அரசு முன் வரவேண்டும்.

அடுத்து பெரும்பாலான அரிசன மக்களுக்குக் குடியிருக்க மனை ஒதுக்கிப் பட்டா வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மேலூர் தாலூக்கா தொழிற் துறையில் மிகவும் பின் தங்கிய நிலையில் உள்ளதால் மேலூர் சட்டமன்றத் தொகுதியில் உள்ள கொட்டாம்பட்டியில் ஒரு தொழில் மையம் அமைக்க வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

கொட்டாம்பட்டியில் உலக வங்கி உதவியுடன் நடைபெறும் ஊட்டச் சத்துணவுத் திட்டத்திற்கு உதவியாக இங்கு பெரிய அளவில் பால் பண்ணையும், குழந்தைகள் உணவுப் பண்ட உற்பத்தி நிலையமும் அமைக்க வேண்டுமாய்க் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, பெரும்பாலான கிராமப் பகுதிகளில் தெரு விளக்கு சரியாக எரிவதில்லை. கிராமப் புறங்களுக்குச் சாலை வசதியும் இல்லை. இவைகளையும் கவனித்து அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மேலூர் பிற்பட்ட பகுதி. இங்கு தொழில்கள் மிகவும் குறைவு. வேலைவாய்ப்பின்றி இருப்போர் எண்ணிக்கை மிகவும் அதிகம். மேலும் இலங்கை அகதிகள் குடும்பம் சுமார் 300-க்கு இருக்கிறார்கள்.



1980 ஜூலை 30] (திரு. க. வெ. வீரானம்பலம்)

ஆகையால் வேலைவாய்ப்புக் கிடைக்கும் வகையில் மேலூரில் ஒரு தீப்பெட்டிச் தொழிற்சாலை, கூட்டுறவு முறையில் ஆரம்பிக்க எல்லா நடவடிக்கையும் எடுத்து உதவுமாறு கோருகிறேன்.

என் தொகுதியில் பெரியாறு மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் புதிய கால்வாய் விஸ்தரிப்பு வேலை சிறிது காலமாக நடைபெறவில்லை. அந்த வேலையை உடனடியாகத் துவங்கி முடிக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கோருகிறேன்.

அரசு பஸ்களில் சட்டமன்ற உறுப்பினர்களுடன் மனைவியை அழைத்துச் செல்லலாம் என்பதுடன் உறவினரை அழைத்துச் செல்லலாம் என்று மாற்ற வேண்டும்.

எனக்குப் பேச சந்தர்ப்பம் அளித்த பேரவைத் தலைவருக்கு நன்றி கூறி எனது உரையை முடித்துக் கொள்கிறேன்.

* திரு. ஆர். டி. கோபாலன் : மாண்புமிகு பேரவைத் துணை தலைவர் அவர்களே, தமிழகத்தில் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களின் தலைமையில் நல்லாட்சி நடை பெறுவதைப் பாராட்டிடவும், கம்பம் தொகுதி மக்களுக்குத் தொண்டாற்றிடவும், எனக்கு இம்மாமன்றத்தில் உரையாற்றும் வாய்ப்பு கிடைத்திடச் செய்த மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுக்கும், வாக்களித்து என்னைத் தேர்ந்தெடுத்த கம்பம் தொகுதி மக்களுக்கும் எனது இதயங் கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழகத்தின் நல் வளர்ச்சிக்காகப் பல்வேறு திட்டங்களைத் தீட்டி, அதற்கான மானியக் கோரிக்கைகளை நிறைவேற்றி வருவதைப் பாராட்டக் கடமைப்பட்டுள்ளேன்.

ஏழை எளியவர் வாழ்வுயர. தாழ்த்தப்பட்டோர் தரம் உயர, மற்றும் சமுதாயத்தில் பின் தங்கிய அனைவரது நலத்தினைப் பேணிடும் நல்லரசாய், பேரறிஞர் அண்ணா வழியில் மாண்புமிகு புரட்சித் தலைவரின் ஆட்சி நடைபெறுவதைப் பெருமையுடன் பாராட்டக் கடமைப்பட்டுள்ளேன்.

எனது கன்னி உரையினிலே, கம்பம் தொகுதியின் உடனடி தேவைகளையும் தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன்.

சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்திற்குப் பல இலட்சம் ரூபாய் செலவிடத் திட்டமிடப்படுகிறது. கம்பம் தொகுதியில் கோம்பை அடிவாரத்திலிருந்து ராமக்கல் மெட்டுக்கு ஏற்கனவே நடைபாதையாக உள்ள 4 கிலோ மீட்டர் தூரமுள்ள கேரள மாநிலத்துடன் இணைக்கும் பாதையைப் புதுப்பித்து, தார்

போட வேண்டுகிறேன். இதனால் கேரளாவில் சுமார் 2,000 ஏக்கர் ஏலம் மற்றும் கிரிசித் தோட்டங்களில் வேலை செய்யும் ஆயிரக்கணக்கான தமிழகத் தொழிலாளர்களுக்கும், ஏல விவசாயிகளுக்கும், வர்த்தகர்களுக்கும் பயன் உண்டாகும்.

மதுரையிலிருந்து குமுளி வழியாகச் செல்லும் சாலையைத் தேசிய நெடுஞ்சாலையாக மாற்றவும், கம்பத்திலிருந்து கம்பம் மெட்டிற்குச் செல்லும் பாதையைப் பழுது பார்க்கவும், தேனியிலிருந்து கூடலூர் செல்லும் சாலையைச் சீரமைக்கவும் வேண்டுகிறேன்.

லோயர் கேம்பிலிருந்து குமுளிக்குச் செல்லும் சாலையில் ஆண்டுதோறும் பஸ் விபத்துக்கள் ஏற்பட்டு, பலர் மரணமடையும் நிகழ்ச்சிகள் தொடர்ந்து நடைபெறுகின்றன. ஆகவே, அச்சாலையில் தடுப்புச் சுவர்களை வலிமையாக அமைக்க வேண்டுகிறேன்.

கம்பம் தொகுதியிலுள்ள பல கிராமங்களில் தெருக்கள், மிகவும் மோசமான நிலையில் உள்ளன. அவற்றை விரைவில் சரி செய்து, நல்ல தெருக்களாக அமைத்திட வேண்டுகிறேன்.

கம்பத்திலுள்ள மருத்துவ மனைக்குக் கேரளாவிலுள்ள தமிழகத்தைச் சேர்ந்த, தோட்டத் தொழிலாளர்களும், சுற்றுப்புற 25 கிராமங்களிலிருந்து பொதுமக்களும் ஏராளமான பேர் சிகிச்சை பெற வருகின்றனர். ஆகவே, தற்போதுள்ள அரசினர் மருத்துவ மனையில் கண், காது, மூக்கு, தொண்டை, எலும்பு, குழந்தைகள் நலம் போன்ற பிரிவுகளை அமைத்தும், படுக்கைகளை அதிகரித்தும், விரிவாக்க வேண்டுகிறேன்.

காமயகவுண்டன்பட்டியில் உள்ள அரசினர் மருத்துவ மனைக்கு எம். பி. பி. எஸ்., படித்த பெண் மருத்துவரை நியமிக்கவும், இங்கு கால்நடை மருத்துவமனை அமைக்க போதிய இடத்தைத் தானமாகத் தர நல்லார் ஒருவர் முன் வந்துள்ளார், அதனை ஏற்று கால்நடை மருத்துவமனை அமைக்கவும் வேண்டுகிறேன்.

கம்பம் தொகுதியில் பல கல்வி நிலையங்கள் இருந்தும், இப்பகுதியில் கணிசமான அளவு வசிக்கின்ற அரிசனங்களின் குழந்தைகளுக்கான விடுதிகள் இல்லை என்பதைச் சுட்டிக் காட்டி, உடனடியாக அரிசன குழந்தைகளுக்கு விடுதியும், மேலும் பல அரிசன காலனிகளும் அமைக்க வேண்டுகிறேன்,



கூடலூரில் முல்லையாற்றைக் கடந்து சென்று சுமார் 5,000 விவசாயிகள் விவசாயம் செய்கின்றனர். மழைக் காலங்களில் வெள்ளப் பெருக்கெடுப்பதால் நூற்றுக்கணக்கான கால்நடைகளும், பல மனிதர்களும் மரணமடையும் பரிதாப நிலை உள்ளது. ஆகவே, காஞ்சி மரத் துறையில் ஒரு பாலம் அவசியம் அமைக்க வேண்டுகிறேன். அதுபோல சுருளிப்பட்டிறகும் கம்பத்திற்கும் இடையே பெரியாற்றின் குறுக்கே அமைந்துள்ள பாலத்தை அகலப்படுத்த வேண்டுகிறேன்.

உத்தமபாளையத்திலிருந்து குள்ளப்ப கவுண்டன்பட்டி வரையுள்ள ஒரே சாலையில் 12 கிராமங்கள் உள்ளன. இக் கிராமங்களில் ஏற்படும் கொலை, கொள்ளை, களவு, திருடு, கலவரம் போன்ற சமூக விரோத செயல்களைத் தடுக்க, மையப் பகுதியில் உள்ள காமயகவுண்டன்பட்டியின் ஒரு அவுட் போஸ்ட் போலீஸ் ஸ்டேஷன் அமைக்க வேண்டுகிறேன்.

சுருளி நீர்வீழ்ச்சிக்கு நாள்தோறும் ஆயிரக்கணக்கானோர் வெளியூர்களிலிருந்து வந்து நீராடிச் செல்கின்றனர். ஆகவே, இப்பகுதியைச் சுற்றுலா மையமாக்க வேண்டுகிறேன்.

கூடலூர் வண்ணாத்திப் பாறை பகுதியிலுள்ள கண்ணகிக் கோட்டத்தை, 1981 ஆம் ஆண்டில் நடைபெறவிருக்கும் உலகத் தமிழ் மகாநாட்டின் நினைவுச் சின்னமாக அமைத்திட வேண்டுகிறேன்.

பச்சைகுமாச்சி ஹைவேஸ் மலைப் பகுதியிலுள்ள கால்நடை மருத்துவமனையைக் கட்டி 4 ஆண்டுகள் ஆகின்றன. ஆனால், மருத்துவர் நியமிக்கப்படவில்லை. எனவே, உடனடியாக, அங்கே கால்நடை மருத்துவரை நியமிக்கும்படி வேண்டுகிறேன்.

கூடலூரில் ஒரு தீயணைப்பு நிலையம் நிறுவவும், கம்பம் நகர் குடிநீர் பிரச்சினையைத் தீர்க்கவும் ஆவன செய்ய வேண்டுகிறேன்.

பெரியாறு, சுருளியாறு மின் திட்டப் பகுதியிலுள்ள பள்ளி ஆசிரியர்களுக்கு மட்டும், மின்வாரிய ஊழியர்களுக்குரிய பல சலுகைகள் வழங்கப்படுவதில்லை. இது சம்பந்தமாக பல ஆண்டுகளாக ஆசிரியர்கள் விண்ணப்பித்து வருகின்றனர். ஆகவே, அப் பள்ளிகளை அரசே ஏற்று, அனைத்துச் சலுகைகளையும் ஆசிரியர்களுக்கும் வழங்குமாறு வேண்டுகிறேன்.

எனது தொகுதியிலுள்ள அநுமந்தன்பட்டியில் தீப்பெட்டித் தொழிற்சாலை அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டுகிறேன்.

எனது தொகுதியில் உடனடியாக செய்யப்பட வேண்டிய முக்கியமான கோரிக்கைகளை, மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களின் தலைமையிலான அரசு ஏற்று செயல்படுத்தி மக்களுக்கு நன்மை செய்யும் என்று கூறி எனது உரையை முடிக்கிறேன்.

*திரு. என். சங்கரய்யா : சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஏறத்தாழ ஒரு மாதகாலமாக விவாதிக்கப்பட்டு வந்த மானியக் கோரிக்கைகளுடைய மானியங்கள் நிறைவேற்றப்பெற்று, அவைகளை எல்லாம் ஒட்டுமொத்தமாக சேர்த்து, அரசிற்கு வருகிற ஆண்டிற்கு நிதி ஒதுக்கீடு செய்யக்கூடிய இந்தச் சட்ட முன்வடிவின் மீது, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் பின்வரும் கருத்துகளை நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

எதேச்சாதிகார சக்திகள் தமிழகத்திலே இருந்த ஆட்சியையும், சட்டமன்றத்தையும், ஜனநாயகத்திற்கு விரோதமாக கலைத்ததை எதிர்த்து, மக்களுடைய ஆதரவைப் பெற்று ஜனநாயக சக்திகளின் உதவியோடு, ஆட்சிக்கு வந்திருக்கக்கூடிய அரசிற்கு தமிழகத்திலே உள்ள மக்கள், அவர்களுடைய முதலாவது ஆண்டு இன்று துவங்குகிற நேரத்திலே, சிறந்த நல்லெண்ணங்களையும் ஆதரவையும் தெரிவித்துக் கொள்கிறார்கள் என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன். அந்த நல்லெண்ணமும், ஆதரவும் கொண்டுள்ள மக்கள், இந்த அரசாங்கத்திடமிருந்து பல நல்ல காரியங்களை எதிர்பார்க்கிறார்கள். ஆகவே, மக்களுக்குச் சாதகமான கொள்கைகளையும் நடைமுறைகளையும் நிறைவேற்ற, அவர்களுடைய அவசரமான பிரச்சினைகளை இந்த அரசு தீர்க்க வேண்டுமென்ற மக்களுடைய எதிர்பார்ப்பையும், இந்த ஆட்சி ஒரு மாநில அரசாங்கத்திற்கு, தன்னுடைய அதிகாரத்திற்கு உட்பட்ட அளவிலே, நிறைவேற்றுவதற்கு பாடுபட வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் குறிப்பிட விரும்புகிறேன்.

மத்திய சர்க்காருடைய கொள்கைகளிலே சீரான மாற்றங்களை இந்த அரசாங்கம் இன்றைக்கு வற்புறுத்த வேண்டி இருக்கிறது. இந்தியாவிலே இருக்கிற இதர காங்கிரஸ் அல்லாத ஜனநாயக அரசாங்கங்களோடு சேர்ந்து, மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்களையும், நிதி வசதிகளையும் பெற்றுக் கொள்வதற்காக தொடர்ச்சியான முயற்சிகளை இந்த அரசாங்கம் மேற்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். அப்படிச் செய்தால்தான் பெரும்பாலான சேவைகளை, ஒரு மாநில அரசு தன் மக்களுக்குச் செய்ய வேண்டியிருக்கக்கூடிய காரணத்தால், இந்த அதிகப்படியான நிதி வசதிகளை நம்முடைய



மாநில சர்க்கார்கள் பெற்றால்தான் மக்களுடைய எதிர்பார்ப்புகளை ஓரளவுக்காவது நிறைவேற்ற முடியும் என்பதை நான் மனதிலே வைத்து, அதற்கான முயற்சியிலே தொடர்ந்து ஈடுபட வேண்டுமென்று நான் குறிப்பிட விரும்புகிறேன்.

அதற்காக, வருகின்ற ஆகஸ்ட் மாதம் 17 ஆம் தேதி மதுரையில், பல்வேறு ஜனநாயக சக்திகளும் சேர்ந்து, மத்திய சர்க்காரிலிருந்து, மாநில சர்க்கார்களுக்கு அதிகப்படியான நிதி வசதிகளும் உரிமைகளும் வேண்டுமென்று நடைபெற இருக்கக் கூடிய மாநாட்டைப் போல, பல மாநாடுகளை இதிலே அக்கறை கொண்டுள்ள ஜனநாயக சக்திகள் தொடர்ந்து நடத்த முயற்சிகள் எடுத்துக் கொள்ள வேண்டுமென்று குறிப்பிட விரும்புகிறேன்.

பிரச்னைகள் வரக்கூடிய காலத்தில், குறிப்பாக, உணவுப் பொருள்களின் விலைகளைக் கட்டுப்படுத்துவதிலே மத்திய சர்க்காருக்குப் பிரதான பொறுப்பு இருக்கிறது என்பதை நாம் அறிவோம். ஆயினும் ஒரு மாநில சர்க்காரினுடைய அதிகாரத்திற்கு உட்பட்டு இந்த உணவுப் பொருள்களின் விலையையும், அத்யாவசியப் பண்டங்களின் விலைகளையும் ஒரு கட்டுக்குள்ளே கொண்டு வருவதற்கும், நியாயவிலைக் கடைகள் மூலம், அவைகள் சிறப்பாக விநியோகப்படுத்துவதற்கும் இந்த அரசாங்கம் தக்க நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்று நான் குறிப்பிட விரும்புகிறேன்.

[முற்பகல் 10-50]

இன்று விலைவாசிகள் உயர்ந்து கொண்டிருக்கின்ற காரணத்தாலே நியாய விலைக் கடைகளிலே தங்களுடைய குடும்ப அட்டைகளை பதிவு பண்ணுவதிலே அக்கறை காட்டாமல் இருந்தவர்கள் எல்லாம் இப்போது அக்கறைக் காட்டி பதிவு செய்ய வருகிறார்கள். அவர்களுக்கு எல்லாம் உரிய விசாரணை வைத்து அதன்பிறகு கால தாமதம் இல்லாமல் அந்த குடும்பக் கார்டுகளை வழங்க வேண்டும் என்று வற்புறுத்துகிறேன்.

நேற்றைய தினம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். பினாமி நிலங்களை எடுப்பதற்கு அரசாங்கம் ஒரு சட்ட முன்வடிவைக் கொண்டு வந்தால் அதை இந்த மாநிலத்திலே இருக்கக் கூடிய நிலப் பிரபுக்கள் எவ்வாறு திட்டம் இட்டு அதற்கான கூட்டங்களை கூட்டி, அதற்கு எதிரான நிலையை உருவாக்குகிறார்கள் என்று இங்கே வேதனையோடு குறிப்பிட்டார்கள். நான் இங்கே மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இன்றைக்கு பெரும் உடைமை வர்க்கங்களிடம் இருந்து அவர்களுடைய உபரி நிலங்களை எடுத்து ஏழை விவசாயிகளுக்குக் கொடுக்க

வேண்டும் என்ற காரியம் வரும்போது நிச்சயமாக அவர்கள் அதற்கு எதிர்ப்பு தெரிவிப்பார்கள். அது இயற்கை. அந்த எதிர்ப்பை சமாளித்தும், அதை முறியடித்தும், உறுதியாக மக்களைத் திரட்டியும்தான் இப்படிப்பட்ட சீர்திருத்த நடவடிக்கைகளை நாம் நிறைவேற்ற முடியும் என்பதை அரசாங் கத்திற்கு இந்த நேரத்திலே தெரிவித்துக் கொண்டு அதற்காக தங்கள் நோக்கங்களை மக்கள் மத்தியிலே விரிவாக கூறி, இந்தச் சட்டங்களினால் என்ன பயன் என்பதை மக்களிடத்திலே தெளிவாக விளக்கி அதற்கான ஆதரவைத் திரட்டுகிற வகையில், அரசாங்கம் தனது செய்தி—மக்கள் தொடர்பு துறையை ஈடுபடுத்த வேண்டும் என்று இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

அதுமட்டுமல்ல. விவசாயத் தோழர்களுக்கு குறைந்த பட்சக் கூலி சட்டத்தை அமல் நடத்துவதற்கு பெரும் இயக்கத்தை நடத்த வேண்டும். மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் இங்கே கூறும்போது இந்தக் குறைந்த பட்ச கூலி சட்டத்தை மத்திய சட்டத்தின்கீழ் பிறப்பிக்கப்பட்ட உத்தரவு, 1979 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் முதற் கொண்டு அமலில் இருந்தாலும், இன்றைக்கும் நான் சொல்லிக் கொள்வேன். தமிழ்நாட்டிலே மிகப் பெரும்பான்மையான பகுதிகளில் இந்தச் சட்டம் அமல் படுத்தப்படவில்லை. அதற்கு அவர்கள் ரெவினியூ அதிகாரிகளை கூட நியமித்திருக்கிறார்கள் என்றாலும் அதற்கு ஒரு விரிவான ஏற்பாட்டை செய்து நாமே ஏற்றுக் கொண்டிருக்கிற குறைந்த பட்ச கூலி, தமிழகத்திலே உள்ள விவசாயிகளுக்குக் கிடைப்பதற் கான ஒரு தீவிரமான ஏற்பாட்டை நாம் செய்ய வேண்டும் என்பதை நான் உங்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

இன்றைக்குக் குத்தகைதாரர் விவசாயப் பிரச்னைப் பொருத்த அளவில் அவர்களுடைய நன்மையைக் கருதி, அவர் களுடைய உரிமைகளை பதிவு செய்வதற்கான ஏற்பாடுகள் முடிந்து விட்டது என்ற முடிவுக்கு வராமல் மீண்டும் அவர்கள் தங்கள் உரிமைகளை பதிவு செய்வதற்கான ஏற்பாட்டை இந்த அரசாங்கம் நடத்த வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து கூட்டுறவுக் கடன்களைப் பொறுத்தவரையில் மத்திய சர்க்காரின் நிலை எவ்வாறு இருக்கிறது என்பதை தெளிவாகப் பார்த்தோம். அவர்கள் எந்தவிதமான அனுதாபமும் காட்ட வில்லை. இம்மாதிரியான மாநில சர்க்காருடைய உணர்வுகளை, ஏழை விவசாயிகளுடைய கூட்டுறவுக் கடன்களை—கடந்த காலத்தில் ஏற்பட்ட இயற்கை இடற்பாடுகள் காரணமாக அவைகளை ஓரளவு ரத்து செய்யலாம் என்பதற்குக்கூட அவர்கள் ஆதரவு தெரிவிக்கவில்லை. இப்படிப்பட்ட சூழ்நிலையிலே



தொடர்ந்து மத்திய அரசாங்கம் இதிலே அக்கறை செலுத்தா ததற்கும் அதனுடைய பொறுப்பை ஏற்றுக்கொள்ளுவதற்கும் நாம் வலியுறுத்த வேண்டும். அதே நேரத்திலே இன்றைக்கு இந்த அரசாங்கத்தை'ப் பொறுத்தவரையில் ஒரு குறிப்பிட்ட அளவு ஏக்கருக்கு குறைவாக இருக்கக்கூடிய விவசாயிகளுக்கு ஓரளவு கடன்களை ரத்து செய்தார்கள். ஆனால் நான் அறிந்து கொள்ள விரும்புகிறேன், இப்படிப்பட்ட விவசாயிகளுக்கு இப்போது நடை பெற்று வரும் ஆண்டுக்குக் கூட்டுறவு பயிர் கடன்களை கொடுப்ப தற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

கூட்டுறவு சொசைட்டிகள் மூலம் இந்த ஆண்டு விவசாயத் துக்கு பணம் ஏதும் கொடுக்கப்படவில்லை என்று அறிகிறேன். இது மிகவும் வருந்தத்தக்க நிலை. ஆகவே நாம் மற்றவர்களுக்கு கொடுக்காவிட்டாலும் யாருக்காக இந்தக் கூட்டுறவுக் கடன்களை ரத்து செய்தோமோ, அந்தப் பகுதி யினருக்கு—ஏனென்றால் அவர்களைப் பொறுத்தவரைக்கும் அந்தக் கடன்களை ரத்து செய்திருக்கிற காரணத்தால் அவர் களுக்குப் பாக்கி எதுவும் இல்லை—மட்டும் அரசாங்கம் இந்த விவசாயம் பயிர் கூட்டுறவுக் கடன்களை கொடுப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

கடந்த ஒரு மாத காலமாக வற்புறுத்திக் கொண்டு வரக் கூடிய காரியங்களிலே மிகவும் முக்கியமானது கிராமப்புறங்களிலும் நகர் புறங்களிலும் ஏழைமக்களுக்கு வீட்டு மனைகள் கொடுக்கப்பட வேண்டும் என்பதுதான். வீடு கட்டிக் கொடுக்க முடியுமா என்பதெல்லாம் பெரிய பிரச்சினை. அதற்கு ஏராளமான கோடிக் கணக்கான ரூபாய்களை நாம் ஈடுபடுத்த வேண்டி வரும். ஆனால் அவர்கள் குடியிருப்பதற்கு மனைகளை வழங்க வேண்டும். இதை ஒரு போர்க்கால நடவடிக்கையாக அந்த அடிப்படையிலே எடுத்து செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதே நேரத்தில் பல கிராமங்களில், நகரங்களில் மற்ற வசதிகளை நாம் செய்து கொடுப்பதற்கு முன்னால், தெருவில் உள்ள மின் விளக்குகள் ஒழுங்காக எரிகின்றதா என்பதற்கு உத்தரவாதம் வழங்குவதற்கு ஏற்பாடு செய்தால் மிகவும் நலமாக இருக்கும்.

அதே போன்று தான் குடிநீர் பிரச்சினை. அரசாங்கம் அவசர உணர்வோடு செயல்பட வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

உணவுக்கு வேலை கொடுக்கும் திட்டம், வேலை உறுதி திட்டம் இந்த இரண்டையும் ஒன்றாகச் சேர்த்து விவசாய பெருங் குடி மக்கள் வேலையின்றி இருக்கக்கூடிய காலத்திலே நாட்டுக்கு நல்லது செய்யக்கூடிய அடிப்படையான வசதிகளை உண்டாக்கு

கின்ற பணியிலே அவர்களை ஈடுபடுத்த வேண்டும். அவர்களாலே என்னென்ன நன்மைகள் விளைகின்றன என்பதைஎல்லாம் அந்தந்த வட்டாரத்திலே உள்ள மக்கள் அறிந்து கொள்ளும் வகையிலே அதற்குப் பிரச்சாரம் செய்யப்பட வேண்டும். அவைகளை ஒன்று படுத்தி தாலூகா அல்லது பஞ்சாயத்து யூனியன் வட்டத்திலே செய்தால் பல்லாயிரக்கணக்கான பேர்களுக்கு வேலை கிடைக்கும். அவர்களை அதில் ஈடுபடுத்தியும் அவர்கள் பிரத்தியட்சமான நிலையில் காண்பதற்கு நாம் ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்த நேரத்தில்தான் மதுவிலக்குக் கொள்கையைப் பற்றி மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் நிலையை நான் தெளிவு படுத்த வேண்டும். 25 ரூபாய்கள் ஆண்டுக்குக் கட்டணம் கட்டினால் ஒரு குறிப்பிட்ட வயதுக்கு மேல் உள்ளவர்கள் பர்மிட் வைத்துக் கொள்ளலாம் என்று நாம் அனுமதி தந்திருக்கிறோம். ஆகவே உண்மையிலேயே நாம் மதுவிலக்குக் கொள்கையை தளர்த்தி இருக்கிறோம். இது சரியான நடவடிக்கை இல்லாமல் போனால் ஒரு சீர்திருத்தம் என்ற பெயரால் பல லட்சக் கணக்கான பேர்களை தண்டனைக்கு உள்ளாக்க வேண்டிய நிலைமைக்குத்தான் இந்த அரசாங்கம் வரும். இது ஏற்பட்ட பிறகு. அப்படி வசதி இல்லாதவர்கள் ஏன் கள்ள சாராயத்தை சாப்பிட்டு சாக வேண்டும் என்ற கேள்விதான் ஏற்படுகிறது. ஆகவேதான் இன்றைக்கு அரசாங்கம் வேண்டுமானால் உயர் மட்டத்தில் தங்களுடைய பல்வேறு இலாக்காக்களின் மூலம் இது எவ்வாறு செயல்படுகிறது என்று பார்க்கட்டும்.

நான் அரசாங்கத்திற்குச் சொல்ல விரும்புகிறேன். நாங்கள் பல இடங்களுக்குச் சென்று வருகிற நேரத்தில் மக்கள் கூறு கிறார்கள். ஒவ்வொரு தெருவிலும் கள்ளச் சாராயம் விற் பவர்கள் இருந்து, பல அக்கிரமமான செயல்கள் செய்து வருகிறார்கள். அதனால் அந்தத் தெருவில் அமைதி பாதிக்கப் படுகிறது, நிம்மதி குலைக்கப்படுகிறது என்று சொல்கிறார்கள். இது சமுதாயத்தை பாதிக்கும் பிரச்னையாக இருப்பதால், இதைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற் கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

நான் நினைப்பது என்னவென்றால், இந்தக் கள்ளச் சாராயம் காய்ச்சுபவர்களுக்கும், அரசாங்கத்தின் பல்வேறு ஏஜென்சிகளுக்கும் இடையே உள்ள தொடர்பு காரணமாக, அவர்கள் மூலமாக அந்த அதிகாரிகளுக்கு ஆயிரக்கணக்கான ரூபாய் ஆதாயம் ஏற்படுகிறது என்கிற காரணத்தாலே, அதை நீடிக்கவேண்டும் என்று விரும்புகிறார்கள். நாம் நினைப்பது வேறு, நடப்பது வேறு ஒன்றாக இருக்கிறது. உண்மையான



நிலையை அரசாங்கம் கண்டறியவேண்டும் என்று சொன்னால், இந்தத் திட்டம் எவ்வாறு செயல்படுகிறது, போலீஸ் இலாகா இதற்கு எவ்வளவு பொறுப்பாக இருக்கிறது என்பதை ரகசி யமாக கண்டறிய முன் வந்தால், அதில் பெரிய அளவில் ஊழல் இருப்பது அரசாங்கத்திற்குத் தெரியவரும் என்று தெரிவித்துக்கொள்கிறன்.

ஆகவே, மதுவிலக்குக் கொள்கையை அரசாங்கம் இன்றைக்கு கைவிட்டு விட்டு, அரசாங்கத்தின் ஒப்புதல் பெற்ற கடைகள் மூலம் ஏழை எளிய மக்கள் மது அருந்த வாய்ப்பு ஏற்படுத் தினால், கள்ளச்சாராயம் குடித்து விட்டு இறப்பவர்களின் எண்ணிக்கையையும் குறைக்க முடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், தமிழகத்தின் வளர்ச்சிக்குத் தேவையான நிதியை பெறுவதற்கும் வசதியாக இருக்கும். இன்றைக்கு மது குடிப்பவர்கள் குடித்துக்கொண்டு இருக்கிறார்கள். அதன் பலன் அரசுக்கு வராமல், வேறு பலருக்குப் போய்க்கொண்டு இருக்கிறது. அதன் மூலம் அரசாங்கத்திற்கு கோடிக்கணக் கான ரூபாய் வருமானம் வருவதற்கு வழி இருப்பதால், அதை அரசாங்கம் சிந்திக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

போலீஸ் கிளர்ச்சியில் ஈடுபட்டவர்களுக்கு அவர்கள் மீது இருந்த ஒழுங்கு நடவடிக்கைகள் ரத்து செய்ததைப் பற்றி நான் பாராட்டுகிறேன். ஆனால் ஒரே ஒரு பிரச்சினை இருப்பதாக நான் அறிகிறேன். பல இடங்களில் பல அதிகாரிகள் அந்தக் கிளர்ச்சியில் சம்மந்தப்பட்டவர்களை எல்லாம் வேறு பல மாவட்டங்களுக்கு மாற்றி இருக்கிறார்கள். அவர்களுடைய குடும்பத்தின் நிலையைக்கூட கருத்தில் கொள்ளாமல் அந்த மாற்றங்கள் நடைபெறுகின்றன. இந்தப் பிரச்னையில் அர சாங்கத்தின் தலையீடு அவர்களுக்கு அவசியம் தேவைப் படுகிறது. ஆகவே, நான் முதலமைச்சர் அவர்களிடத்தில் கேட்டுக்கொள்ள விரும்புவது, ஏற்கனவே அவர்கள் எந்தெந்த யூனிட்டுகளில் பணியாற்றி வந்தார்களோ அந்த இடங்களி லேயே அவர்களுக்குப் போஸ்டிங்ஸ் கொடுக்கவேண்டும். இந்த ஒழுங்கு நடவடிக்கைகளை ரத்து செய்ததோடு, அவர் களுக்குப் பல்வேறு சலுகைகள் அளித்ததோடு, இந்தக் காரியத்தையும் அரசாங்கம் செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். பல தந்திகள் எனக்கு வந்தன. அவற்றை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்தில் நான் கொடுத்து இருக்கிறேன். கோயம்புத்தூரில் இருந்து வந்தன. அரசாங்கம் இதிலே தலையிடவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. என். சங்கரய்யா] [1980 ஜூலை 30

போலீஸ் இலாகா பற்றி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கூறிய பதிலை நான் கூர்ந்து கவனித்தேன். ஓரிரு விஷயங்கள் குறித்து நான் பேச விரும்புகிறேன்.

போலீஸ் லாக்கப்பில் மரணம் என்று தெரிந்தால், உடனடியாக 'ப்ரைமா பேசி' அது கொலை என்று கருதப்பட வேண்டும். அப்படி செய்தால்தான் இந்த நாட்டில் அந்தக் கைதிகளுக்கு நல்லதொரு பாதுகாப்புக் கொடுக்க முடியும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

கும்பகோணத்தில் நடைபெற்ற நிகழ்ச்சி பற்றி சொன்னார்கள். கைது செய்யப்பட்டவனைப் பிடித்து லாக்கப்பில் தள்ளிவிட்டு தன்னுடைய துணியில் தீயைப் பற்ற வைத்து விட்டு விட்டார் என்கிறார்கள். இது சாத்தியமா? யோசித்துப் பார்க்கவேண்டும். ஆகவே நான் சொல்கிறேன், கைது செய்யப்பட்ட ஒருவர் போலீஸ் லாக்கப்பில் மரணம் அடைந்தால், அது எடுத்த எடுப்பிலேயே சந்தேகத்திற்குரிய மரணம்—கொலை என்பதாக கருதப்படவேண்டும். அதற்கு முதன்மைப் பொறுப்பை அந்த நிலைய அதிகாரிகள் ஏற்றுக்கொள்ள வேண்டும். அப்படி வந்தால்தான் இந்த நாட்டிலே அப்படிப் பட்ட சம்பவங்கள் தமிழகத்தில் குறையும் என்பதை நான் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

இன்னொன்று நடைபெறுகிறது— நீண்டகாலமாக. அது என்ன என்று கேட்டால்—கைது செய்வதை பதிவு செய்வது கிடையாது.—அன்-ரிஜிஸ்டர்ட் அரெஸ்ட்—அவர்கள் மூன்று நாட்களுக்கு ஒருவனை கைது செய்து வைத்து இருப்பார்கள். ஆனால் கைது செய்தது குறித்து ரிக்கார்ட் செய்து இருக்கமாட்டார்கள். அது தவறானது. உரிமைகளை மனிதனுக்கு அதிகமாக அளிக்க நாம் விரும்புகிறபோது, இப்படி நிகழ்ச்சிகள் நடப்பது சரியல்ல. அவர் கைது செய்யப்படுகிறார் என்று சொன்னால், அவருடைய குடும்பத்திற்குத் தகவல் தெரிவிக்கும் பொறுப்பும் அந்தப் போலீஸ் நிலையத்தைச் சார்ந்ததாக இருக்க வேண்டும். இல்லாவிட்டால் பலர் வீட்டுக்கு அவர் கைது செய்யப்பட்டு இருப்பது தெரியாது. நான் இதைச் சொல்வதற்குக் காரணம், இதிலே பாதிக்கப்படுகிறவர்கள் குறிப்பாக ஏழை எளிய சாதாரண மக்கள்தான் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ட்ராபிக் வயலேஷன் என்ற முறையில் ரோடுகளை க்ராஸ் செய்கிறவர்களைப் பிடிக்கிறார்கள். அவர்கள் அவசரமாக உத்தியோகத்திற்குப் போகின்ற நேரத்தில், இப்படி மத்திய தர ஊழியர்கள் பிடித்து வைக்கப்பட்டு விட்டால் அவர்கள் அலுவலத்திற்குத் தொடர்பு கொள்ளக்கூட அனுமதி கொடுப்



1980 ஜூலை 30] [திரு. என். சங்கரய்யா]

பது கிடையாது. காரில் போகிறவர்களாக இருந்தால் கார் நம்பரைக் கொடுத்துவிட்டு, கோர்ட்டில் வந்து பார்த் துக்கொள்கிறேன் என்று போய்விடுகிறார்கள். ஆனால் இவர் கள் தங்களுடைய ஆபீஸ் விலாசம், செய்யும் தொழில் சொன்னாலும் விடமாட்டார்கள். போலீஸ் ஸ்டேஷனில் இரு ந்து வீட்டுக்கும் போன் செய்ய முடியாது. இது எல்லாம் பெய்லபிள் அபன்ஸ். ஆகவே, உடனடியாக அவர்களுடைய விலாசம், தொழில், பெயர் முதலியவற்றைப் பதித்துக் கொண்டு, வழக்கு பதிவு செய்து கொண்டு அவர்களை விட்டு விட வேண்டும் என்று அரசாங்கம் உத்தரவிடவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

[முற்பகல் 11-00]

ஏற்கெனவே இந்த மொபைல் கோர்ட் சென்னையில் வைத்திருந்ததைப் பற்றியும் அதனால் ஏற்படுகின்ற ஊழல்களைப் பற்றியும் நாங்கள் வலியுறுத்திச் சொன்னோம். அந்த மொபைல் கோர்ட்டை நீக்கிவிட வேண்டுமென்று கேட்டோம்; அது நீக்கப்பட்டு விட்டது. அதனால் பாதிக்கப்பட்டவர்கள் சாதாரண மக்கள்தான் என்பதை நாம் கண்டோம். ஆகவே, தேவையில்லை, என்பதை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

இன்னொன்று, நீர்பாசனத்திற்கு கருத்தரங்கு நடத்துவதுபற்றி சொன்னார்கள். அதேமாதிரி போலீசாருக்கும் மக்களுக்கும் இருக்கிற உறவுகளைப்பற்றி மாவட்ட அளவிலே பேசுவதற்கு கருத்தரங்குகளுக்கு ஏற்பாடு செய்ய வேண்டும். Let us expose the Police force to the criticism of the people. போலீசாரைப் பற்றி மக்களுடைய விமரிசனம் என்ன என்பதை அவர்கள் தெரிந்துகொள்ள வேண்டும். போலீஸ் அதிகாரிகள் அதற்கு பதில் சொல்லட்டும். இப்படிச் செய்தால் தான் போலீசார் என்ன தவறு செய்கிறார்கள் என்பதும், மக்கள் அவர்களைப்பற்றி என்ன நினைக்கிறார்கள் என்பதும் அவர்களுக்குத் தெரியும்; தவறுகளை திருத்திக் கொள்வதற்கு வாய்ப்பு ஏற்படக்கூடும். தாசில்தார் ஆபீசுக்கு என்றால் மக்கள் விரும்பி போகிறார்கள். ஆனால் போலீஸ் ஸ்டேஷனுக்கு போகமாட்டேன் என்கிறார்கள். ஏன்? அவர்கள் நடந்து கொள்ளும் நிலைமைதான் அதற்குக் காரணம். அப்படி இருந்தால் போலீசாரை எப்படி பொதுமக்கள் நண்பர்களாக நினைப்பார்கள்? நண்பர்கள் என்ற நிலையை ஏற்படுத்த வேண்டுமானால் இப்படிப்பட்ட கருத்தரங்கு தேவை என்று நான் கருதுகிறேன். அங்கே பிரச்சினைகள் பேசப்பட்டு, மன நிறைவு ஏற்பட்டு, நல்ல சூழ்நிலை உருவாகும்.

மற்றொன்று, பல வழக்குகளை வாபஸ் பெறவேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சரிடம் கேட்டோம்; பல மனுக்கள் கொடுத்திருக்கிறோம். அரசாங்கத்தின் கொள்கை அறிவிக்கப்பட்டது. தொழிற்சங்கங்கள், விவசாய சங்கம் சம்பந்தப்பட்ட வழக்குகளை எல்லாம் வாபஸ் பெற வேண்டுமென்று கேட்டோம்,. செக்ஷன் 307-ல் பதிவு செய்யப்பட்ட வழக்குகளைத் தவிர மற்ற வழக்குகளை வாபஸ் பெறுவதாக அரசாங்கம் சொன்னது. ஆனால் போலீஸ் அதிகாரிகள் சாதாரண வழக்குகளையும் செக்ஷன் 307-ல் பதிவு செய்திருக்கிறார்கள். இப்போதும் பதிவு செய்து கொண்டிருக்கிறார்கள். 307-ல் வழக்கு இருப்பதால் போலீசார் வாபஸ் பெறமாட்டோம் என்கிறார்கள். ஆகவே, மதுரை பஞ்சாலைத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்தபோது போட்ட வழக்குகளை வாபஸ் பெறவில்லை. தொழிற்சங்கத் தலைவர்கள்மீது கூட வழக்குப் போட்டிருக்கிறார்கள் 307-செக்ஷன் கீழ், சி.ஐ.டி.யு. தலைவர் குமார். அவர் உட்பட செக்ஷன் 307-ன்கீழ் வழக்கு பதிவு செய்துவிட்டார்கள். நடந்தது மறியல்தான். அதற்கு 307 செக்ஷன் கீழ் வழக்கு போட்டிருக்கிறார்கள். இப்படிப்பட்ட வழக்குகளை எல்லாம் வாபஸ் பெற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல கோவை ஆட்டோரிக்சா தொழிலாளர்கள், தூத்துக்குடி ஸ்பிக் தொழிலாளர்கள் மீது வழக்கு இருக்கிறது. வாலிபர் முன்னணியினர் அடையாள வேலை நிறுத்தம் நடத்தினார்கள். இதைப்போன்று இன்னும் பாக்கி இருக்கிற தொழிலாளர்கள் மீதுள்ள வழக்குகளை எல்லாம் வாபஸ் பெற அரசாங்கம் உள்துறை, சட்டத் துறைகளுடன் கலந்து பேசி, நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில் அங்கே ஒரு விசேஷ முறையீடு, புகார் வந்திருக்கிறது. அங்கே இருக்கக்கூடிய ஒரு இன்ஸ்பெக்டர், குறிப்பாக குழித்துறையில் இருக்கும் சர்க்கிள் இன்ஸ்பெக்டர் தொழிற்சங்க இயக்கத்தினர்மீது கடுமையான நடவடிக்கை எடுத்து வருகிறார். 23-7-80 அன்று கூட, சாராய வியாபாரிகளுக்கும் போலீசுக்கும் ஏற்பட்ட தகராறு காரணமாக அங்கு இருக்கக்கூடிய அரசாங்க ஊழியர்கள் உட்பட பொதுமக்கள் தாக்கப்பட்டிருக்கிறார்கள் என்று புகார் வந்திருக்கிறது. இதே சர்க்கிள் இன்ஸ்பெக்டர் கம்யூனிஸ்ட் மார்க்சிஸ்ட் கட்சி தேர்தல் காரியாலயத்தில் தேர்தலுக்கு இரண்டு நாட்களுக்கு முன்பு சுமார் 11 மணிக்கு புகுந்து, தேர்தல் வேலைகளுக்கு





தடங்கல் செய்ய முயற்சி செய்திருக்கிறார். அந்த மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி ஊழியர்கள்மீது பொய்வழக்கு போட்டிருக்கிறார். அவரை அங்கிருந்து மாற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் தோட்டத் தொழிலாளர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு சாதகமாக அரசாங்கத்தில் இருந்து ஏதாவது நடவடிக்கை எடுத்தால், முதலாளிகள் அதிகாரிகளுக்கு நிறைய பணம் கொடுக்கத் தயாராக இருக்கிறார்கள். ஆனால் பாதிக்கப்படுகிறவர்கள் மக்கள். ஆகவே, கன்னியாகுமரி மாவட்ட போலீஸ் அமைப்பைப்பற்றி விசாரணை செய்து, மக்களுக்கு சாதகமாக ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இன்றைக்கு தொழிலாளர் கொள்கை பற்றி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கூறினார்கள். மாண்புமிகு கருணாநிதி அவர்கள் கூட குறிப்பிட்டார்கள். மார்க்சிஸ்டு கம்யூனிஸ்ட் கட்சியினர் அன்று வாதாடினார்கள். இன்று விட்டுவிட்டார்கள் என்றாலும் அவர்களுக்காக நான் கேட்கிறேன் என்று சொன்னார்கள். மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி எதையும் விட்டுவிடவில்லை. அன்றைக்கு நடந்த போராட்டங்கள் — சிம்கோ மீட்டர்ஸ், சேஷசாயி நிறுவனம் சம்பந்தப்பட்டவை உலகம் பூராவுக்கும் தெரியும். அதைப்பற்றி நாங்கள் வற்புறுத்தினோம். எதேச்சாதிகார சக்தியை எதிர்த்து போராடும்போது, இந்தியா பூராவுக்கும் ஆபத்து ஏற்படும்போது.........

திரு. அ. ரகுமான்கான் : தலைவரவர்களே, ஒரு விளக்கம் சிம்கோ மீட்டர்ஸ் விவகாரம பற்றி காவல் துறையினுடைய ஆய்வறிக்கையில் தரப்பட்டிருக்கிற கருத்து நம்முடைய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் சங்கரய்யா அவர்களுக்கு உடன்பாடா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

திரு. என். சங்கரய்யா : நேற்றே நான் அதைப் பற்றி சொன்னேன். அந்த அறிக்கையில் இருக்கிற பல விஷயங்கள் தவறானவை. உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமானால் மார்ச் 2-ந் தேதி அண்ணா தி. மு. க. தோழர்களும் கம்யூனிஸ்ட் தோழர்களும் ஊர்வலம் சென்றபோது போலீஸ் தடியடிப்பிரயோகம் நடத்தியது. அதுபற்றி முதலமைச்சரே சொன்னார்கள். வழக்குகள் வாபஸ் வாங்கப்பட்டன. ஆக அந்த அறிக்கையில் பல தவறுகள் வந்திருப்பது உண்மை.

[திரு. என். சங்கரய்யா] [1980 ஜுலை 30

இன்னொன்றையும் நான் குறிப்பிட விரும்புகிறேன். மாண்பு மிகு கருணாநிதியும் தி.மு.க.வும் ஒரு காலத்தில் எதேச்சாதிகார சக்தியை எதிர்த்துப் போராடினார்கள். அவர்கள் இப்போது விட்டுவிட்டார்கள். அவர்கள் போராடுவதை விட்டுவிட்டாலும் நாங்கள் விடமாட்டோம் எதேச்சாதிகார சக்தியை எதிர்ந்து தொடர்ந்து போராடுவோம் என்பதைத் தெரிவித்துக் கொள் கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இன்னும் 15 பேர்கள் பேச வேண்டும். உங்களுக்கு 15 நிமிடம் ஆகிவிட்டது, முடித்துக்கொள்ளுங்கள்.

திரு. என். சங்கரய்யா : திராவிடக் கழகத்தின் ஒருபிரிவினர் பார்ப்பன எதிர்ப்பு மாநாடு நடத்துகிறார்கள். அவ்வாறு பார்ப்பன எதிர்ப்பு மகாநாடு நடத்துவதன் மூலம் மக்களைத் தூண்டிவிடுகின்ற நிலைமையிலே பலர் பலவிதமான நடவடிக்கை களிலே இறங்குகிறார்கள். டாக்டர் ஹாண்டே மந்திரி சபையில் இருக்கக்கூடாது என்கிறார்கள். எய்தவரை விட்டுவிட்டு அம்பை மட்டும் நொந்து பயன் என்ன? இதை இந்த அரசாங்கம் சிந்திக்க வேண்டும். ஜாதி முறையினைத் தூண்டிவிடுகின்ற நிலை வேண்டுமா ? ஜனநாயக அரசியலை எல்லோரும் ஏற்றுக் கொண்டிருக்கிறோம். ஆகவே அந்த ஜனநாயக அரசியலுக்கு அது பாதிப்பை ஏற்படுத்தாதா ? ஆகவே அரசாங்கம் இதுபற்றி சிந்திக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக இரண்டு மூன்று விஷயங்களை மட்டும் சொல்லி முடித்துவிடுகிறேன். அரசாங்கம் ஒரு முக்கியமான விஷயத்திற்கு பதில் சொல்லாமல் இருக்கிறார்கள். சப்ஜெக்ட்ஸ் கமிட்டி, ஆலோசனைக் கமிட்டி என்று ஏற்படுத்த வேண்டும் என்று விவாதங்களிலே \கலந்துகொள்ளும்போது பலர் எடுத்துக் கூறி இருக்கிறார்கள். \ கேரளாவிலே அவ்வாறு சப்ஜெக்ட்ஸ் கமிட்டி என்று இருக்கிறது. ஒரு மானியக் கோரிக்கை வரு கின்றது. அந்த இலாக்கா குறித்து அப்போது மட்டும்தான் பேச முடியும். அதற்கு அடுத்த முறை பேசவேண்டும் என்றால் அடுத்த ஆண்டுதான் அந்த இலாக்கா குறித்துப் பேச முடியும். இந்த நிலை சரியா ? சாதாரணமாக ஒரு 20 பேர் 15 பேர் என்று போட்டு ஒரு சப்ஜெக்ட் கமிட்டி ஏற்படுத்தினால் அந்தக் கமிட்டி யினர் அந்தந்த இலாக்காவின் அமைச்சரவர்களுக்கு ஆலோசனை கூறுவதற்கு அவ்வப்போது வாய்ப்புக்கள் ஏற்படும். அப்படிப் பட்ட வாய்ப்பினை ஏற்படுத்தித் தந்தால் அரசாங்கத்தின் பணி மேலும் சிறப்பாக அமையும் என்பதை அரசின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.



1980 ஜுலை 30] [திரு. என். சங்கரய்யா]

அடுத்து, மதுரையிலே உலகத் தமிழ் மாநாடு நடக்க இருக் கின்றது. நூறாண்டுகளுக்கும் மேலாக நகராட்சி வந்தும் அங்கே பாதாளச் சாக்கடைத் திட்டம் நிறைவேற்றப்படவில்லை. மேலும் அங்கே குடிதண்ணீர் மிகவும் அவசியம். ஆகவே வைகை நதியிலே மேலும் இரண்டு ஆழ்குழாய் கிணறுகளைத் தோண்டி நீர்த்தேக்கம் அமைக்கின்ற வகையிலே ஒரு திட்டத்தைத் தீட்ட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மதுரை மாநகரம் சென்னையைப்போல வளர்ந்துகொண்டிருக்கிற ஒரு நகரமாகும். அதற்கு ஒரு நீண்டகாலத் திட்டம் வேண்டும்.

அடுத்து மாண்புமிகு கைத்தறித்துறை அமைச்சரவர்களிடத் திலே ஒன்றைக் கேட்டுக்கொள்கிறேன். கைத்தறித் தொழி லாளர்களுக்காக ஒரு சட்டம் கொண்டு வரப்பட்டு பின்னர் அது பொறுக்குக் குழுவிற்கு விடப்பட்டது. அந்தச் சட்டம் அப்படியே நின்றுவிட்டது. இங்கே கொண்டுவரப்பட்ட சட்ட முன்வடிவுகளிலே அது இடம் பெறவில்லை. ஆகவே கைத்தறித் தொழிலாளர்களுக்குப் பாதுகாப்பு தரக்கூடிய அந்த சட்டத்தை உடனடியாகக் கொண்டுவர வேண்டும் என்று கேட்டுக்கொண்டு என்னுடைய பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

*திரு. டி. கே. கபாலி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, பல மானியக் கோரிக்கைகள் முடிந்து ஒட்டு மொத்தமாக இன்றையதினம் பேசுகின்ற வாய்ப்பைப் பெற்ற மைக்காக நான் மகிழ்ச்சி அடைவதற்கு முன்பாக நான் வெற்றி பெற்ற மைலாப்பூர் தொகுதி மக்களுக்கு நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இதற்குக் காரணம் என்னவென்றால் தமிழகத்திலே இல்லாத ஒரு பெருமையை எனக்கு எதிர்க்கட்சி வரிசையிலே இருப்பவர்கள் கொடுத்திருக்கின்றார்கள், அதாவது எனக்காக தூக்குக் கயிறைத் தமிழ்நாடு எங்கும் தொங்கவிட்டிருந் தார்கள் என்பதை நான் ஞாபகப்படுத்திக்கொள்ள விரும்பு கிறேன். அந்தத் தூக்குக் கயிறு என்னுடைய கழுத்திற்கு இல்லாமல் வேறு யார் கழுத்திற்குப் போனதோ அது குறித்து எனக்குக் கவலை இல்லை. ஆனால் அந்த இடத்திலே வெற்றி பெறுகின்ற வாய்ப்பினை எனக்கு மயிலையிலே வாழ்கின்ற மக்கள் தந்திருக்கிறார்கள் என்பதையும் அதே நேரத்திலே.......

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : தலைவரவர்களே, பாயின்ட் ஆஃப் ஆர்டர், அருமைச் சகோதரர் கபாலி அவர்கள் தூக்குக் கயிறு பற்றிக் குறிப்பிட்டார். வேறு யாரும் அப்படிச் சொல்ல வில்லை. அவரேதான் பாராளுமன்றத் தேர்தலிலே தோற்று விட்டால் தூக்கு மாட்டிக்கொள்வேன் என்று சொன்னார்.

திரு. டி. கே. கபாலி : நான் அந்த இடத்திற்குப் போக வேண்டாம் என்று நினைத்தேன். அருமை நண்பர் திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்களின் * * * * வெளியிலே காட்டுவதுபோல இங்கே சட்டமன்றத்திலேயும் எடுத்துச் சொல்லி இருக்கிறார்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : தலைவரவர்களே, என்னுடைய * * * ஒரே * * கட்சியினை விட்டு வேறு கட்சிக்குப் போகின்ற * * * கட்சி எனக்குக் கிடையாது.

(கூச்சல் குழப்பம்.)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : * * என்ற அந்த வார்த்தையை நீக்கும்படி உத்தரவிடுகிறேன்.

திரு. டி. கே. கபாலி : தலைவரவர்களே, நான் பேசுவதே அரிது. இப்போதுதான் பேச ஆரம்பித்தேன். அதிலேயும் குறுக்கீடு . . . . . . . . . . . . .

(கூச்சல் குழப்பம்).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அவர் பேசி முடிக்கட்டும். அதற்குப் பிறகு வேண்டுமானால் மற்றவர்கள் ஏதாவது சொல்ல வேண்டுமானால் சொல்லலாம்.

திரு. டி. கே. கபாலி : தலைவரவர்களே, நான் பேசுகின்றபோது அவர்களாலே அமைதியாக இருக்க முடியவில்லை. இந்த நிலைமை இருந்தால் பிறகு அவர்கள் பேசுகின்றபோது என்னாலேயும் குறுக்கிட முடியும். . . . . . . . . .

(கூச்சல், குழப்பம்).

(முற்பகல் 11-10)

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : துணைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்தில் சில மரபுகளை நாம் கடைப்பிடித்தே ஆகவேண்டும். ஏனென்றால் மாண்புமிகு உறுப்பினர் கபாலி அவர்கள் கடந்த 2 மாத காலமாகவே பேசவில்லை. இப்

* *மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.



பொழுதுதான் பேச வருகிறார்கள். அப்படிப்பட்ட நேரத்தில் கூட அவர் தனிப்பட்ட குற்றச்சாட்டுகள் எதையும் இதுவரையில் சொல்லவும் இல்லை. ஆனால் எதிர்க்கட்சி வரிசையிலே இருக்கிறவர்கள் அதிலும், குறிப்பாக திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் அவரை பேசவிடாமல் குறுக்கிட்டுக் கொண்டே இருக்கிறார்கள். அவர் பேச்சை தடை செய்ய வேண்டும் என்ற நோக்கத்தில் அப்படிச் செய்கிறார்களோ என்னவோ தெரியவில்லை. ஆகவே, நான் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். தயவுசெய்து மாமன்ற உறுப்பினர் திரு. கபாலி அவர்களை முழுமையாக பேசவிடுங்கள். அவர் பேச்சை முழுவதும் கேட்டபிறகு அதிலே நீங்கள் சொல்ல வேண்டியது ஏதாவது இருந்தால் சொல்லுங்கள். அதுதான் நியாயமாக இருக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இரண்டு பக்கமும் இருக்கும் உறுப்பினர்களையும் கேட்டுக் கொள்கிறேன். தயவு செய்து அமைதியாக இருக்க வேண்டும். விவாதத்தின் நடுவில் குறுக்கீடுகள் வேண்டாம்.

திரு. டி. கே. கபாலி : துணைத் தலைவர் அவர்களே, நான் பெருந்தன்மையான பாரம்பரியத்தில் வந்தவன் என்பதை முதலில் சொல்லிக் கொள்கிறேன். இல்லையென்றால் என்னாலும் இப்படி பல குறுக்கீடுகளை அடிக்கடிச் செய்ய முடியும். அப்படி முன்பு செய்து வந்தவன் என்பதையும் என்னுடைய பழைய கட்சித் தலைவர் நன்கு அறிவார். ஆனால் திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் கேட்டதற்கு நான் பதில் சொல்லியாக வேண்டும்.

நடந்து முடிந்த பராளுமன்ற தேர்தலில் எனது மதிப்பிற்குரிய அண்ணியார் திருமதி சுலோசனா சம்பத் அவர்கள் வெற்றி பெறாவிட்டால் நாம் அனைவரும் தூக்கில் தொங்க வேண்டும் என்று தான் சொன்னேன். ஏனென்றால் காங்கிரஸ் கட்சிக்காரர்களும் அவர்களை எங்களைச் சேர்ந்தவர்கள் என்று சொன்னார்கள், திராவிட முன்னைற்றக் கழகக்காரர்களும் எங்களைச் சேர்ந்தவர்கள் என்று சொன்னார்கள், நாங்களும் சொன்னோம் அவர்களை எங்களைச் சேர்ந்தவர்கள் என்று. அதனால் இப்படி அனைவராலும் சொந்தம் கொண்டாடப்படும் அவர் ஜெயிக்காவிட்டால் நாம் அனைவரும் தூக்கில் தொங்க வேண்டும் என்று தான் சொன்னேன். பத்திரிகைக்காரர்களுக்கு எனக்கு விளம்பரம் வாங்கிக் கொடுக்க வேண்டும் என்று ஆசை இருந்து, அவர்கள் தான், ' நான் தூக்கில் தொங்குவேன் ' என்று சொன்னதாக செய்தி வெளியிட்டார்கள்.

[திரு. டி. கே. கபாலி] [1980 ஜூலை 30

சமீபத்தில் கூட அவர்கள் என்னைப் பார்த்து பாராட்டு
தெரிவித்தார்கள். உங்களுக்கு நல்ல காலம் ஆரம்பம் சார்
என்று பாராட்டினார்கள். அப்படி அவர்களுக்கு என்மீது இருக்கும்
அன்பில் எனக்கு விளம்பரம் கிடைக்க வேண்டும் என்று போட்
டிருக்கிறார்கள். என்னுடைய மதிப்பிற்குரிய திராவிட முன்
னேற்றக் கழகத் தலைவர் கூட என்னுடைய தொகுதியில்
பேசும்போது, 'இந்தத் தொகுதியினுடைய வேட்பாளர் கூட
தூக்கிலே தொங்குவதாக சொல்லியிருக்கிறார். பாவம் என்ன
செய்வாரோ என்று' சொன்னதாகச் சொன்னார்கள். நான்கூட
அவரா அப்படிச் சொன்னார்? அவர் அப்படிச் சொல்லியிருக்க
மாட்டாரே என்று சொன்னேன். இல்லை சொன்னார்கள்
என்று தெரிவித்தார்கள். எனக்கு வருத்தமாக இருந்தது.
வருத்தப்படுவதை தவிர அப்போது வேறு வழி இல்லை......

திரு. மு. கருணாநிதி : பேரவைத் தலைவர் அவர்களே,
நான் அப்படிச் சொல்லவில்லை. நான் சொன்னது எல்லாம்,
''திராவிட முன்னேற்றக் கழகத்திலே இருந்தால் கருணாநிதி
வீட்டின் காவல்காரன், அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்
தில் இருந்தால் சக்கரவர்த்தித் திருமகன்'' என்று ஆகிவிடுகிறது
என்று தான் சொன்னேன்.

திரு. டி. கே. கபாலி : பேரவைத் தலைவர் அவர்களே,
நான் திராவிட முன்மனறறக் கழகத்தில் இருந்தபோதும் சக்கர
வர்த்தி திருமகனாக இருக்கவில்லை. அண்ணா திராவிட முன்
னேற்றக் கழகத்திற்கு வந்த பிறகும் சக்கரவர்த்தி திருமகனாக
ஆகிவிடவில்லை. அங்கேயும் தொண்டனாகத்தான் இருந்தேன்.
இங்கேயும் தொண்டனாகத்தான் இருக்கிறேன். சக்கரவர்த்தித்
திருமகன் என்று முதல்வரையும் சொல்லுகிறார்கள். என்னை
யும் சொல்லுகிறார்கள். அதனால் எனக்குப் பெருமைதான்.
நான் இந்த தேர்தலிலே, எனக்கு எம். எல். ஏ. பொறுப்பு வேண்
டாம் என்று சொன்னேன். ஏதாவது கட்சிப் பணிகள் இருந்தால்
கொடுங்கள் என்று தான் கேட்டேன். புரட்சித் தலைவர் அவர்
கள் தான் எனக்கு தேர்தலிலே நிற்கும் பணியையும், அதன் மூலம்
மக்களுக்கு தொண்டாற்றும் பணியையும் தந்து விட்டார்கள்.

அவர்களாக தந்த பதவிதான் இதுவே தவிர எனக்கு ஒன்றும்
இல்லை. நான் அங்கேயும் தொண்டனாகத்தான் இருந்தேன்.
இங்கேயும் தொண்டனாகத்தான் இருக்கிறேன். தொடர்ந்து
இருக்க விரும்புகிறேன். அங்கே இருந்த போதும் சரி, இங்கே
இருக்கிற போதும் சரி கபாலி 4 அடி லைட் போட்டுத்தான்
தன் பிழைப்பை நடத்திக் கொண்டிருந்தானே தவிர எந்தவித
தவறும் செய்து விட வில்லை. அது எதிர்க்கட்சித் தலைவர்



1980 ஜூலை 30] [திரு. டி. கே. கபாலி]

அவர்களுக்கும் தெரியும். செய்திருந்தால் அவர்கள் என்னை சும்மா விட்டிருக்க மாட்டார்கள். அவர் பேனாவும் என்னை சும்மா விட்டிருக்காது. ஆகவே அதை விட்டு விட்டு பிரச்னைக்கு வருகிறேன்.

டாக்டர் கலைஞருக்குத் தெரியும் என்னைப் பற்றி. நான் என் தொகுதி பற்றிய பிரச்சினைகளுக்கு வருகிறேன். (குறுக்கீடு) நான் மனிதனாக ஆக்கப்பட்டிருக்கிறேன். என்னை உயர்ந்த ஆசனத்தில் அமர்த்தி வைத்திருக்கிறவர் யார்? புரட்சித் தலைவர் அவர்கள். தமிழ்நாடு சுற்றுப் பயணம் செய்கிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : மாண்புமிகு உறுப்பினர் பிரச்னைக்குப் போகவேண்டும் என்று தாங்கள் கட்டளையிட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அப்ராப்ரியேஷன் பில் பற்றிப் பேசுங்கள்.

திரு டி. கே. கபாலி : என் தொகுதியில் பெசன்ட் நகர் என்ற பகுதி இருக்கிறது. படித்தவர்கள் இருக்கிறார்கள் அங்கே. நான் ஹைஸ்கூல் வரைதான் படித்திருக்கிறேன். படித்த மேதாவி ஒருவர் என்னை எதிர்த்து போட்டி போட்டார். அங்குள்ள படித்த வாக்காளப் பெருமக்கள் எனக்கு வோட்டளித்து என்னை இங்கே அனுப்பியிருக்கிறார்கள். ஆகவே அந்த வாக்காளப் பெருமக்களுக்காக என் கடமையைச் செய்ய வேண்டும் என்பதற்காக சில பல கருத்துக்களைச் சொல்ல நான் முன்வந்திருக்கிறேன். அங்கே ஒரு மருத்துவ மனை கூடக் கிடையாது. பரந்து விரிந்த இடத்திலே, தேவலோகம் மாதிரி இருக்கிற இடத்திலே ஒரு சிறிய வியாதி வந்து மருத்துவ உதவி தேவை என்றால் அங்குள்ள மருத்துவர்கள் உடனடியாக வரமாட்டேன் என்று சொல்கிறார்கள். ஆகவே அங்கே ஒரு சிறிய மருத்துவ மனை அமைக்க சர்க்கார் ஆவன செய்யவேண்டும் என்று விரும்பி வேண்டி கேட்டுக்கொள்கிறேன்.

அந்தப் பெரிய பகுதியில் சுடுகாடு ஒன்று நடுவில் இருக்கிறது. அதனால் மக்கள் மிகவும் வேதனைப்படுகிறார்கள். ஆகவே அதை ஒரு ஒதுக்குப் புறமான இடத்தில் அமைத்துத் தருவதற்கு வழிவகை செய்யவேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

அந்தப் பகுதியில் இருக்கிற பெரியவர்கள் குறிப்பாக அலுவலகங்களுக்கு வந்து விடுகிறார்கள். தாய்மார்கள்தான் அங்கே அப்போது இருக்கிறார்கள். பகல் நேரங்களில் தாய்மார்கள் கதவைப் பூட்டிக்கொண்டிருந்தாலும் கூட இப்போது

[திரு. டி. கே. கபாலி] [1980 ஜூலை 30

களவுகள், கொலைகள் அதிகமாக இருக்கின்றன என்பதை முதல்வர் அவர்கள் உங்கள் கவனத்திற்குக் கொண்டு வந்தார்கள். ஆகவேஅங்கே ஒரு காவல் நிலையத்தை அமைத்துத் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பக்கத்தில் சலவையாளர்புரம் என்றயிடத்தில் அவர்கள் துணிகள் தோய்ப்பதற்கு ஒரு தோபிகானா கட்டித் தரவேண்டும் என்று 1959-ம் ஆண்டு நான் நகரமன்ற உறுப்பினராக இருந்த காலத்தில் இருந்து கேட்டு வருகிறேன். ஆனால் இதுவரை அதற்கான எந்த முயற்சியும் செய்யப்படவில்லை, அந்த முயற்சி இப்போதுதான், கிட்டும் என்று, நினைக்கிறேன். ஆகவே அங்கு ஒரு தோபிகானா அமைவதற்கு சர்க்கார் துணை புரிய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

சென்னை நகரில் ரேஷன் கார்ட்ஸ் வழங்குவதில் மிகவும் கடுமைப் படுத்துகிறார்கள் என்பதை நான் அரசின் கவனத்திற்குக் கொண்டு வரவேண்டியவனாக இருக்கிறேன். சட்டமன்ற உறுப்பினர் கடிதம் கொடுத்தாலும் கூட அதை தூக்கி எறிவதாகச் சொல்கிறார்கள். அந்த நிலையை மாற்றி சென்னையில் ரேஷன் கார்ட்ஸ் வழங்குவதை துரிதப்படுத்தும் வகையில் தக்க நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்திரா நகர், நேரு நகர் பகுதிகளில்—ஏற்கனவே ஒரு கொலை நடந்து இன்றுவரை அந்த கொலைக்கு காரணமானவர்களைக் கண்டுபிடிக்காத சூழ்நிலை இருந்துகொண்டிருக்கிறது. நான் அதற்குள்ளே செல்ல விரும்பவில்லை. ஆகவே அங்கே ஒரு காவல் நிலையம் அமைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பட்டினப்பாக்கம் கடற்கரை ஓரத்தில் இருக்கிற மீனவர்கள் வாழ் பகுதியில் இரண்டு மாதங்களுக்கு முன்பு கூட அங்கே கோஷ்டி சண்டை ஏற்பட்டு ஒரு கொலையே நடந்தது என்பதை பத்திரிகை வாயிலாக நீங்கள் அறிந்திருப்பீர்கள். அந்தப் பகுதியில் அப்படிப்பட்டதொரு நிலை ஏற்படாது தடுத்து நிறுத்துகிற வகையில் அங்கே ஒரு காவல் நிலையம் அமைத்துத் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

முள்ளிக்குப்பம்-திருவான்மையூர் இணைப்புப் பாலம் பல ஆண்டுகளாக பழுதடைந்து இருக்கிறது. கடந்த சட்டமன்றக் கூட்டத்தில் கூட இதுபற்றிச் சொல்லியிருக்கிறேன். அது குறித்து எந்தவிதமான நடவடிக்கையும் எடுத்ததாகத் தெரியவில்லை. ஆகவே உடனடியாக அந்த இணைப்புப் பாலத்தை ஏற்படுத்த முனைய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.



1980 ஜூலை 30] [திரு. டி. கே. கபாலி]

நொச்சிக்குப்பம்-முள்ளிக்குப்பம் பகுதியில் மழை காலங்களில் புயல், பெருவெள்ளம் வருகிறபோது கடலரிப்பு ஏற்படுகிறது. கடந்த முறை கடலரிப்பு ஏற்பட்டு அந்த மதில் சுவர் கட்டாத நிலையில் இருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்டி அதை உடனடியாக கட்டுவதற்கான சூழ்நிலையை உருவாக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்வதோடு கூட கடலரிப்பால் பாழடைந்த ரோடுகளை செப்பனிடவேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

[முற்பகல் 11-20]

முள்ளிக்குப்பம் பகுதியில் சுமார் 20, 25 ஆண்டுகளாக தண்ணீர் பஞ்சம் இருந்துகொண்டு வருகிறது. குறிப்பாக, நொச்சிக்குப்பம் பகுதியில் தண்ணீர் வசதி செய்து தரவேண்டுமென்று, நான் குடிசை மாற்று வாரியத்தின் தலைவனாக இருக்கின்ற காரணத்தினால், அந்தப் பகுதிக்கு தண்ணீர் கொண்டு வரமுடியும் என்று அதிகாரிகள் சொன்னதன் பேரில், 4·5 லட்சம் ரூபாய் ஒதுக்கி, அந்த வேலையை துரிதமாக எடுக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. ஆனால் முள்ளிக்குப்பம் பகுதியில் தண்ணீர் வராத சூழ்நிலை இருப்பதால், அதற்கு உடனடியாக அந்தப் பகுதி மக்களுக்கு தண்ணீர் வருவதற்கான வசதியை செய்து தரவேண்டும் என்று நான் அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கிறேன்.

மயிலைப் பகுதியில் குடிசைப் பகுதிகள் அதிகமாக இருக்கின்றன என்பதை எல்லோரும் அறிவர். அந்த குடிசைப் பகுதிகளில் சில நேரங்களில், அதிலும் தேர்தல் முடிந்தவுடன், திடீர் திடீரென்று தீப்பற்றிக் கொள்கிறது. ஆகவே, மந்தைவெளிப்பாக்கத்தில் ஒரு தீயணைப்பு நிலையம் ஏற்படுத்தித் தரவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

திருவள்ளுவர் சிலையிலிருந்து முண்டக்கண்ணி அம்மன் கோவில் சாலையை இணைக்கின்ற இணைப்புப் பாலம், அது எப்போது இடிந்து விழுந்து விடுமோ என்ற நிலையில் இருக்கிறது. எனவே, அந்தப் பாலத்தை புதுப்பித்துத் தரவேண்டும் என்று நான் இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

மயிலையிலே சுடுகாடு நல்ல நிலைமையிலே இல்லை. அது பெரிய சுடுகாடு. எல்லோரும் ஒரு நாளைக்கு போகக்கூடிய கடைசி இடம் அதுதான். இந்த இடத்திலே, சரியான முன்ற விளக்கு வசதிகள் இல்லை. யாராவது கவர்னர் ஜெனரலைப் போன்ற முக்கியஸ்தர்கள் இறக்கும்போது தான் அந்த

[திரு. டி. கே. கபாலி] [1980 ஜூலை 30

சுடுகாடு பகுதி சுத்தமாக இருக்கிறது. மற்ற நேரங்களில் பாழடைந்து கிடக்கிறது. எனவே, அதையெல்லாம் பழுது பார்த்து, விளக்கு வசதிகள் செய்து, செம்மையான முறையிலே அந்த சுடுகாடு இருப்பதற்கான நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். எல்லோரையும் வரவேற்கக்கூடியவனாக இருக்கின்ற காரணத் தினால், இதை நான் குறிப்பிட விரும்புகிறேன்.

அதைப்போலவே, செயின்ட் மேரீஸ் ரோடிலுள்ள கிறிஸ்துவ கல்லறையின் மதிற் சுவர் பல ஆண்டு காலமாக இடிந்த நிலையிலேயே இருந்துவருகிறது. இந்த மதிற் சுவரைக் கட்டித் தரவேண்டுமென்ற கோரிக்கை பல ஆண்டுகளாகவே இருந்து வருகிறது. எனவே, அதையும் கட்டித் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இதைத் தங்கள் கவனத்திற்கும் கொண்டு வர விழைகிறேன்.

என்னுடைய தொகுதியிலே, வெளிநாடுகளிலே இருந்து வரக்கூடியவர்களுக்கெல்லாம் குறிப்பாக ஆலயத்தைத் தான் காண்பிப்பார்கள். கபாலீஸ்வரர் சித்தரக் குளம் என்று ஒரு குளம் உள்ளது. அதற்குப் பக்கத்தில் களாக பாழடைந்து, அந்தப் பகுதியிலே தண்ணீரே இல்லா மலும் அந்த குளத்திற்கு சுற்றுப்புற சுவர் இல்லாமலும், படிக்கட்டுகள் செம்மையாக இல்லாமலும் இருக்கிறது. அதையும் செம்மைப்படுத்தித் தருவதோடு, அந்தக் குளத்திற்கு தண்ணீர் வருவதற்கும், தண்ணீர் வெளியே செல்வதற்குமான ஏற்பாடுகளை செய்து தரவேண்டும் என்று கேட்டுக் கொள் கிறேன்.

அதோடு, கபாலீஸ்வரர் தெற்கு மாட வீதியில் மாலை நேரங்களில் கார்கள் போக முடியாது. அங்கே காய்கறி கடைகள் இருக்கின்றன. அவர்கள் அப்படி விற்றால்தான், அவர்கள் குடும்பங்களை நடத்த முடியும். அக்கடைகளை யெல்லாம் அகற்ற வேண்டுமென்று நான் சொல்லவில்லை. அந்தப் பகுதியிலே அவர்கள் நிரந்தரமாக குடிசைகளை அமைத்துக் கொண்டிருக்கிறார்கள். நிரந்தரமாக அவர்களுக்கு இடத்தை ஒதுக்கி, மாம்பலம் பகுதியிலே உள்ளதைப்போல், அஸ்பெஸ்டாஸ் போன்றவைகளால் அமைத்தால், வாடகையும் வசூலித்துக் கொள்ளலாம். அதை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.



1980 ஜூலை 30] [திரு. டி. கே. கபாலி]

அரசியல் நெருக்கடி 1976-லே இருந்தபோது, சென்னையிலே, எல்லா வீடுகளுக்கும் என்று சொன்னால் பொருந்தாது என்று கருதுகிறேன், குறிப்பாக சில வீடுகளுக்கு, அதிலும் குறிப்பாக என் வீட்டிற்கும், பழைய தலைவர் டாக்டர் கலைஞர் குடும்பம் இருக்கின்ற அந்த வீட்டிற்கும் வரியை உயர்த்தியிருக்கிறார் கள். எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் பேசும்போது மதுரையை சுட்டிக்காட்டிப் பேசும்போது, சென்னையைப் பற்றி வாயைத் திறப்பார் என்று எண்ணிக் கொண்டிருந்தேன். மதுரைப் பக்கத்திலே கோபம் என்பதால், அந்தப் பக்கத்திற்கே, மதுரைக்கே சென்றுவிட்டது. சென்னையிலே, என் வீட்டிற்கும் அவரது வீட்டிற்கும் வரியை உயர்த்தியிருக்கிறார்கள். உதாரண மாக, என் வீட்டிற்கு 231 ரூபாய் இருந்ததை ரூ. 1,000 சில்லரையாக உயர்த்தியிருக்கிறார்கள். அந்த மாதிரி இந்த இரண்டு இடங்களுக்குப் போடப்பட்டிருக்கிறது. வருமான வரி இலாகா இந்த வருமானத்தைப் பெற்றுக் கொள்கிறது என்பது சரியல்ல என்று எதிர்க் கட்சித் தலைவர் கூறினார். ஆகவே, நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களை பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். இந்த நகராட்சி அதிகாரி களை அழைத்து, ஏன் இந்த நிலைமை ஏற்பட்டது, அதற்கான காரணங்கள் என்ன என்பதை அறிந்து, வருகின்ற தேர்தலுக்கு முன்பாக தயவு செய்து இதை முறைப்படுத்தி, வரிகளை ஒழுங்காக விதிக்க வேண்டுமென்று சென்னை மக்களின் சார்பாக கேட்டுக் கொள்கிறேன்.

கடந்த இரண்டு ஆண்டுகளாக வீட்டு வரியை வங்கியில் கட்ட வேண்டுமென்று புதிய உத்தரவை நகரசபை தந்திருக் கிறது. என்னைப் பொறுத்தமட்டில் நான் 15 ஆண்டுகள் நகரசபையில் எல்லாப் பொறுப்பிலும் இருந்தவன். திராவிட முன்னேற்றக் கழகத்தில் இருக்கும்போது, வங்கியில் போய்ப் பணம் கட்டும் அளவுக்கு—நான் தமிழக மக்களைக் குறை சொல்லவில்லை—எல்லா மக்களாலும் முடியாது. வசதி படைத் தவர்கள் கூட சில நேரங்களில் மறந்து விடுகிறார்கள், வரி வசூலிப்போர் மூலம் தொடர்ந்து வசூலிப்பதன் மூலம் அதிகமாக வருவாயைப் பெற முடியும். தற்போது வங்கியில் கட்டும் முறை வந்த பிறகு வசூலானதையும் முன்பு வசூலானதையும் கணக்கு பார்த்தால் பல கோடி ரூபாய் வசூலிக்கப்படாமல் இருப்பது நன்கு தெரியும். இதை நான் சபையின் கவனத்திற்குக் கொண்டு வருவது என்னுடைய கடமை என்று கருதுகிறேன்.

குடிசை மாற்று வாரியப் பொறுப்பை எங்கள் அருமை புரட்சித் தலைவர் அவர்கள் என்னிடத்தில் ஒப்படைத்திருக் கிறார்கள். சிலவற்றைக் குறிப்பிடலாம் என்று பார்த்தால் தலைவர் கட்டளை இருக்கிறது—எதிர்க்கட்சித் தலைவர்

அவர்களும் என்னையே பார்க்கிறார்கள். நான் அவரிடத்தில் தொண்டனாக இருந்தவன். இன்று நான் சக்கரவர்த்தி இல்லை.. தொண்டர்களுக்குத் தொண்டாற்றும் பொறுப்பை புரட்சித் தலைவர் அவர்கள் தந்திருக்கிறார்கள். அதை நான் சொல்லாமல் இருந்தால் நன்றி கெட்டவனாக இருப்பேன். குடிசை மாற்று வாரியத் தலைவர் பொறுப்பை என்னிடம் ஒப்படைத்திருக்கிறார்கள்.

குடிசை மாற்றுவாரியத் தலைவராகிவிட்ட காரணத்தால் எல்லாவற்றையும் நான் செய்துவிடுவேன் என்று உறுப்பினர்கள் யாரும் நினைக்க வேண்டாம். அதற்கு உங்கள் அனைவருடைய ஒத்துழைப்பும் தேவை. ஆளுநர் ஆட்சியின்போது இரண்டாயிரம் குடிசைகள் போடப்பட்டதாக குடிசை மாற்று வாரியக் குறிப்புகள் கூறுகின்றன. இன்றைக்கு கபாலிதானே தலைவர் என்று நினைத்துக் கொண்டு சிலர் குடிசைகள் போட முயற்சிக்கிறார்கள். ஒரு சில பிரச்சனைகளை நான் சொல்லாமல் இருக்க முடியவில்லை. கட்டப்பட்ட வீடுகள் யாருக்காகக் கட்டப்பட்டனவோ யாருக்காக ஒதுக்கப்பட்டிருந்தனவோ அவர்கள் குடியேற முடியாமல் அவர்களைத் தடுத்து அனுமதியின்றி சிலர் ஆக்கிரமித்துக் கொண்டிருந்தார்கள். அவர்களை மூன்று முறை காலி செய்தும் நான்காவது முறையும் அந்த வீடுகளிலே சென்று இருந்த காரணத்தால் காவல் நிலையத்தார் உதவியுடன் சென்று அவர்களை வெளியேற்ற வேண்டிய நிலைமைகள் ஏற்படுகின்றன. அவர்கள் தங்களுக்கும் வீடுகள் ஒதுக்கித் தரவேண்டுமென்று கேட்டால் பரவாயில்லை. நியாயம். ஆகவே, இந்த நிலைமைகளை ஏற்படுத்தாமல் இருக்கவேண்டுமென்று மன்ற உறுப்பினர்கள், கழக முக்கியஸ்தர்கள் மற்றும் அனைவரையும் கேட்டுக் கொள்கிறேன். தினந் தினம் குடிசைகள் வளர்ந்து கொண்டிருக்கின்றன. அந்தக் குடிசைகளை அகற்றி அவர்களுக்கு மாடி வீடுகள் கட்டிக்கொடுக்க அனைவரும் உதவி புரிய வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, நன்றி கூறி, அமைகிறேன்.

திரு. இரா. கருப்பையா : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சர்வாதிகாரத்திற்கு அடிகோலக் கூடிய முறையில் எதேச்சாதிகாரமாக, ஐந்தாண்டுகளுக்குத் தமிழகத்தில் ஆட்சி புரியவேண்டுமென்று 1977 ஆம் ஆண்டில் தமிழக மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அகில இந்திய அண்ணா தி. மு. க. அரசைப் பதவியினின்று நீக்கச் செய்தது ஜனநாயக விரோதச் செயல்—இதை தமிழக மக்கள், நாங்கள் அங்கீகரிக்கவில்லை என்ற முறையில் நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில் தமிழக மக்கள் தெளிவாகத் தீர்ப்பளித்திருக்கிறார்கள். அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தையும் அதோடு சேர்ந்திருக்கிற தோழமைக் கட்சிகளையும் சேர்ந்த உறுப்



பினர்களைப் பெருவாரியாகத் தேர்ந்தெடுத்து அனுப்பியிருக்கிறார்கள், இந்த ஆட்சியும் அமைந்திருக்கிறது. இந்த அணிக்கு வாக்களித்திருக்கக்கூடிய மக்கள் சமுதாயத்திலே அடித்தளத்தில் இருக்கக்கூடிய மக்கள், உழைக்கக்கூடிய மக்கள், தொழிலாளர்கள், விவசாயத் தொழிலாளர்கள், அரிசனங்கள் மற்றும் சாமானிய மக்கள் தாங்கள் பெரிதும் எதிர்பார்த்த தங்களுடைய பிரச்சனைகள் பெரிதும் தீர்க்கப்படும் என்ற நம்பிக்கையோடு தங்கள் வாக்குகளை அளித்திருக்கிறார்கள்.

அந்த முறையில் ஆட்சிப் பொறுப்பை ஏற்றிருக்கக்கூடிய இந்த அரசு தங்களுடைய முதலாவது பட்ஜெட்டைச் சமர்ப்பித்திருக்கிறது. அது சம்பந்தமாக இந்திய கம்யூனிஸ்டு கட்சியினுடைய கருத்தை இந்த மன்றத்தின் முன் தெரிவிக்க விரும்புகிறேன். இந்த பட்ஜெட்டில் மக்களுடைய உணர்வுகளை, எதிர்பார்ப்புகளை பிரதிபலிக்கக்கூடிய முறையில், அதற்கான அம்சங்கள் இடம் பெற்றிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதைப் பற்றிய கருத்தைத் தெரிவிக்கக்கூடிய அதே நேரத்தில் நம்முடைய தமிழகம் இந்தியாவின் ஒரு பகுதியாக இருக்கிறது என்பதும் மத்திய பேரரசின் கொள்கைகள் தமிழகத்தையும் தமிழக மக்களையும் வெகுவாகப் பாதிக்கிறது என்பதையும் இங்கிருக்கக்கூடிய மன்ற உறுப்பினர்கள் அறிவார்கள், தமிழக மக்களும் நன்றாக அறிவார்கள்.

[முற்பகல் 11–30]

அதிலும் குறிப்பாக, சமீப காலத்திலே சென்ற பட்ஜெட்டிலேகூட மத்திய அரசு போட்டிருக்கக்கூடிய வரிகள் அதன் காரணமாக உயர்ந்திருக்கக்கூடிய விலைவாசி எல்லாம் தமிழக மக்களைப் பெரிதும் பாதித்து இருக்கிறது என்பதையும் ஏற்கெனவே தமிழக அரசினிடத்திலே—மாநில அரசினிடத்திலே உள்ள அதிகாரங்களிலே மேலும் பல புதிய குறுக்கீடுகள் வந்திருக்கின்றன என்பதையும் நாம் அறிவோம். இந்நிலையில், மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் தேவை என்ற பிரச்சினை இன்றைக்கு என்றைக்கும் இல்லாத அளவுக்கு முன்னுக்கு வந்திருக்கிறது. மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் தேவை என்ற கொள்கையிலே தமிழக அரசும் முன்னின்று, இந்திய தேசத்திலே அதற்காக போராடக்கூடிய, செயல்படக்கூடிய மேற்குவங்கம், கேரளம், திரிபுரா போன்ற இடதுசாரி ஜனநாயக அரசுகளோடு சேர்ந்து இந்த இயக்கத்தில் நிற்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. இரா. கருப்பையா] [1980 ஜூலை 30

இந்தச் சந்தர்ப்பத்திலே மத்திய அரசினுடைய மாற்றாந்
தாய் போக்குபற்றி குறிப்பிட வேண்டும். தமிழகத்திலே
தொழில் வளர்ச்சி ஏற்படுவதிலே எந்த அளவுக்கு குறைவு ஏற்
பட்டிருக்கிறது என்பதையும் தமிழகத்தின் தொழிற் வளர்ச்சிக்கு
அதிக நிதி ஒதுக்கீட்டைப் பெற வேண்டும் என்பதையும் சிந்
தித்துப்பார்த்து, ஆளக்கூடிய கட்சி, எதிர்க்கட்சி என்ற பேதம்
இல்லாமல் மத்திய அரசிடமிருந்து அதிகமான நிதி ஒதுக்கீட்டை
தொழில் வளர்ச்சிக்காகப் பெற்றாக வேண்டுமென்றும் அனைத்
துக் கட்சிகளும் ஒருமுகமாகக் குரல் எழுப்பி அதிக நிதி ஒதுக்
கீட்டைப் பெறுவதற்கான முயற்சிகளிலே ஈடுபடவேண்டுமென்று
கேட்டுக்கொள்கிறேன்.

தூத்துக்குடி பிராட்கேஜ் பாதை, தமிழகத்திலே உள்ள கடல்
வளத்தைப் பயன்படுத்தி கடல் உப்பு, அவற்றின் மூலமாக பெட்
ரோ கெமிக்கல் இன்டஸ்ட்ரீஸ் தொழில்களை துவக்குவதற்கான
நடவடிக்கைகளை எடுக்கப்பட வேண்டும்.

அடுத்து, விவசாயிகள் சம்பந்தமாக, விவசாயிகளுக்கு நிவா
ரணம் அளிக்கப்பட வேண்டுமென்பதற்காக மத்திய அரசிடம்
மாநில அரசு கோரிய தொகையை அவர்கள் கொடுக்கவில்லை
என்பது யாவரும் அறிந்த யதார்த்தமான உண்மை. இருந்தா
லும் மாநில அரசு 60 கோடி ரூபாய் கடன் தள்ளுபடி செய்
வோம் என்று அறிவித்திருக்கிறது. இந்த அறிவிப்பு விவசாயி
களுக்கு முழுமையாகப் பயன் அளிக்கக்கூடிய வகையிலே இல்லை
என்பதைச் சொல்லிக் கொள்கிறேன். முழுமையாக இல்லை
என்று நான் சொல்லக்கூடிய நேரத்திலே அனைத்து விவசாயி
களுக்கும் அனைத்துக் கடன்களையும் தள்ளுபடி செய்ய வேண்டு
மென்று நான் சொல்லவில்லை. குறைந்த பட்சம் 5 ஸ்டாண்
டர்டு ஏக்கர், அதற்குக் குறைவாக வைத்திருக்கக்கூடிய விவசாயி
களுடைய பயிர்க் கடன்களைத் தள்ளுபடி செய்ய வேண்டும்
என்றும் அதற்காக விவசாயச் சங்கத் தலைவர்களோடு பேசித்
தீர்வு காணவேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன். அதற்கு
அதிகமாக இருக்கக்கூடிய விவசாயிகளைப் பொறுத்தவரையில்
கடன்களுக்கான வட்டியைத் தள்ளுபடி செய்து அந்தக் கடன்களை
நீண்டகால கடன்களாக மாற்றிக்கொடுக்க ஏற்பாடுகளைச் செய்ய
வேண்டும்.

இப்படிக் கடன் தள்ளுபடி என்று அறிவிக்கப்பட்டதற்குப் பின்
னாலே இன்றைய தினம் கிராமங்களிலே உள்ள விவசாயிகளுக்கு
எந்தக் கடனும் எந்த இடத்திலும் கிடைப்பதே கிடையாது.
கூட்டுறவுச் சங்கங்களிலே கடன் பட்டுவாடா இல்லாத நிலைமை
ஏற்பட்டு இங்கே விவசாயமே ஸ்தம்பித்துப் போகக்கூடிய நிலைமை
ஏற்பட்டிருக்கிறது. அதன் காரணமாக தஞ்சை மாவட்டத்திலே



1980 ஜூலை 30] [திரு. இரா. கருப்பையா]

யும் மற்ற மாவட்டங்களிலேயும் விவசாயிகள் தங்களுக்கு கடன்
கள் தேவை, கூட்டுறவுச் சங்கங்கள் கடன் கொடுக்க வேண்டும்
என்பதற்காக ஒரு இயக்கமே பல்வேறு இடங்களிலே பல்வேறு
முறைகளிலே நடந்துகொண்டு இருக்கிறது. இன்றைய தினம்
விவசாய வேலை ஆரம்பமாகிவிட்டது. அதை முறையாகக்
செய்ய வேண்டுமென்றால் மாற்றுக் கடன் வசதி ஏற்பாடுகளைச்
செய்வது அவசியமாகிறது. அதைச் செய்யக்கூடிய முறையிலே
கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக உடனடியாக கடன் வழங்க
நடவடிக்கைகள் மேற்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்
கிறேன்.

விவசாயிகள் உற்பத்தி செய்யக்கூடிய பொருட்களுக்குக்
கொடுக்கப்படுகிற விலை கட்டுப்படியாகக்கூடியதாக இல்லை.
சென்ற இரண்டு தினங்களுக்கு முன்பு டெல்லியில் நடைபெற்ற
மாநில உணவு அமைச்சர்கள் மாநாட்டில் விவசாய விளைபொருட்
களுக்கு விலை கொடுப்பது சம்பந்தமாக தமிழக அரசு எடுத்துச்
சொல்லி 130 ரூபாய் கொடுக்கப்பட வேண்டுமென்று வாதாடி
இருக்கிறது. அதைப் பெறக்கூடிய அளவுக்கு நடவடிக்கை எடுக்
கப்பட வேண்டும். நெல்லுக்கு கட்டுப்படியாகிற விலை கொடுக்
கப்பட வேண்டும். அதைப்போன்றே கரும்புக்கும் மற்றப்
பொருட்களுக்கும் கட்டுபடியாகக்கூடிய விலை கொடுக்கப்பட
வேண்டும். ஒரு கிலோ சர்க்கரை 7½ ரூபாய்க்கு இன்றைக்கு
விற்கிறது. ஒரு டன் கரும்புக்கு 117 ரூபாய் கொடுக்கப்படுகிறது.
ஆலைகளில் வேலை செய்யும் தொழிலாளிக்குச் சம்பள உயர்வு
இல்லை. கரும்பு கொடுக்கக்கூடிய விவசாயிகளுக்குக் கட்டுப்
படியாகக் கூடிய விலையும் இல்லை. இடையிலே எங்கே பணம்
கொள்ளை போகிறது என்று தெரியவில்லை. ஆகவே, விவசாயி
களுக்குக் கரும்புக்கு நியாயமான கட்டுப்படியான விலை கிடைப்
பதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்
கொள்கிறேன்.

விவசாயத் தொழிலாளர்கள் சம்பந்தமாக அரசு குறைந்த
பட்சக் கூலியை நிர்ணயித்து அறிவித்திருக்கிறது. ஆனால், பெரு
வாரியான இடங்களில் அமல் செய்யப்படவில்லை. தஞ்சை
மாவட்டத்தில் கூலி நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. ஆனால், அங்கே
இருக்கின்ற 14 நிலப் பிரபுக்கள் கோர்ட்டுக்குச் சென்று ஸ்டே
வாங்கியிருக்கிறார்கள். அந்த ஸ்டே ஆர்டரை ரத்து செய்து
அந்தத் தொழிலாளர்களுக்குக் கூலி கிடைப்பதற்கான ஏற்பாடு
களைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அங்கே
வேலை செய்கின்றவர்கள் இவ்வாறு நிர்ணயிக்கப்பட்டிருக்கின்ற
கூலி வேண்டுமென்று கேட்டால், உள்ளூரிலே இருக்கின்ற விவ
சாயத் தொழிலாளிக்கு வேலை கிடையாது என்று சொல்லக்
கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது, ஆகவே, சட்டத்தில் உள்ள

கூலி கிடைப்பதற்கான உத்தரவாதம் இல்லாத நிலைமை இருக்கிறது. ஆகவே, வேலை என்று வரும் சமயத்தில் அந்தந்தக் கிராமங்களிலுள்ள விவசாயத் தொழிலாளர்களுக்கு முதலிடம் கொடுத்து, அந்தக் கூலி கிடைப்பதற்கான உத்தரவாதமான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, தொழிலாளர்கள் சம்பந்தப்பட்டவரையில், அரசு தன்னுடைய கொள்கையை அறிவித்திருக்கிறது. தொழில் தகராறுகள், சீக்கிரமாகத் தீர்க்கப்பட்டு பைசல் செய்யப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். போலீஸ் தலையீடு என்பது,—நேற்று முதலமைச்சரவர்கள் அறிவித்திருக்கிறார்கள்—தொழிலாளர் போராட்டங்களில் போலீஸ் தலையீடு கூடாது என்பதையும், ஏற்கெனவே முதல்வரவர்கள், சென்ற ஆண்டு தொழிலாளர் பேராட்டங்களில் ஈடுபட்ட தொழிலாளர் சம்பந்தப்பட்ட வழக்குகளை வாபஸ் பெறுவோம் என்று அறிவித்திருக்கிறார்கள். இன்னும் வாபஸ் பெறப்படாத வழக்குகள் அனைத்தையும் வாபஸ் பெறுவதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். குறிப்பாக டி.ஐ. சைக்கிள் போராட்டத்தில் வாபஸ் பெறப்படாத நிலைமை இருக்கிறது. ஆகவே, அவற்றை வாபஸ் பெறவும் நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, வேலையில்லாத பட்டதாரிகளுக்கு நிவாரணம் அளிக்கப்படும் என்று ஏற்கெனவே அறிவிக்கப்பட்டது. அதைத் துரிதமாகக் கொடுக்க ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும்.

பஞ்சாயத்துத் தேர்தல் ஆறு மாத காலத்திலே நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. 18 வயது வந்த அனைவருக்கும் வாக்குரிமை கொடுத்து, ஆறு மாத காலத்திற்குள்ளே அந்தத் தேர்தலை நடத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதே மாதிரி, கூட்டுறவு சம்பந்தமாக தனி அதிகாரிகளின் போக்கு எப்படி இருக்கிறது என்பதைப் பார்க்க வேண்டும். இது சம்பந்தமாக விளக்கமாக இந்த மன்றத்தில் பேசப்பட்டிருக்கிறது. அது பற்றி நான் சில விவரங்களை இந்த மன்றத்திற்குக் கூறி இருக்கிறேன். பாமணி ஜெனரல் மானேஜரும், புரொடக்ஷன் மேனேஜரும் உற்பத்திக்கு உதவிகரமாக இல்லை. ஆகவே, அது சம்பந்தமாக நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். அந்தத் தேர்தல் நடைபெறுவதற்கு இடையிலே, ஆலோசனைக் குழு அமைப்பது என்ற முறையில் அமைக்க இருக்கும் குழுவில் அனைத்துக் கட்சிகளும் இடம் பெறும் வகையிலே அமைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



கைத்தறி சம்பந்தமாகத் தொழிலாளர்கள் பாதுகாக்கப்படும் வகையிலே, கூலி உத்திரவாதம் கிடைக்க, போனஸ் கிடைக்க அரசு இயற்ற உத்தேசித்துள்ள சட்டத்தை உடனடியாகக் கொண்டுவர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பிரதம கூட்டுறவுச் சங்கங்களைப் பாதிக்கின்ற முறையிலே கோவாப்டெக்ஸின் கொள்முதல் கொள்கை இருக்கிறது. பிரதம சங்கங்கள் நஷ்டத்தில் இயங்கும் அளவிற்கு நிர்பந்தம், கொள்முதல், நூல் விலை ஆகியவற்றால் ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, இந்தக் கொள்முதல் விலையைப் பரிசீலித்து அடிப்படை மாற்றங்களைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதே மாதிரி கல்லூரிகள் சம்பந்தமாகப் பார்த்தால், இன்றைய தினம் வளர்ந்து வரும் சமுதாயத்தில் கல்லூரிகளின் தேவையும், பள்ளிக்கூடங்களின் தேவையும் அதிகரித்து வருகிறது. அந்தத் தேவைகளை ஈடு செய்யும் வகையிலே அவைகள் இருக்க வேண்டும். பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் பணிபுரியக்கூடிய ஆசிரியர்களின் வேலை நிலைமை, சம்பளம், ஆகிய இவைகளுக்கு உத்தரவாதம் கிடைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். தனியார் கல்லூரிகளில் இருக்கின்ற ஆசிரியர்களும், அரசுக் கல்லூரிகளில் இருக்கின்ற ஆசிரியர்கள் பெறக்கூடிய சம்பளம், மற்றும் வேலை நிலைமைகள் ஆகியவற்றைப் பெறுவதற்கான உத்தரவாதம் கிடைக்கும் வகையில் நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, அரிசனங்கள் பற்றிய பிரச்சினை மிக முக்கியமானது. இன்றைய தினம் எவ்வளவு நடவடிக்கைகளை அறிவித்தாலும் அரிசனங்கள் தாக்கப்படுவது தினசரி நிகழ்ச்சியாக இருக்கிறது. திருச்சி, குலப்பாடியில் ஐந்து அரிசன இளைஞர்கள் கிணற்றில் கொல்லப்பட்டார்கள்; இடையாத்தூர் சம்பவம், இன்னும் மற்ற சம்பவங்கள் பற்றி இந்த மன்றத்தில் விவாதிக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே, அரிசனங்களுக்குப் பாதுகாப்பு என்பதைச் சமுதாயப் பிரச்சினையாகக் கொண்டு, அவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்க வேண்டியதற்கு உத்தரவாதம் கிடைப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டியது அவசியம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே, இந்த முறையிலே அதற்காக அரிசன நலப் பிரிவு என்று ஏற்படுத்தப்பட வேண்டும். அரிசனங்களைப் பாதுகாக்க முதலமைச்சரின் பொறுப்பிலே தனியாக ஒரு விசேஷ பிரிவை ஏற்படுத்தி, அரிசனங்களின் நலனைப் பாதுகாப்பதற்கான உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, மக்கள் இன்றையதினம் அன்றாடம் அனுபவிக்கின்ற பிரச்சினை என்னவென்றால், அவர்கள் தாலுக்கா அலுவலகங் களுக்குச் சென்றாலும், பஞ்சாயத்து யூனியன் அலுவலகங்களுக்கு சென்றாலும் மாவட்ட ஆட்சித் தலைவரின் அலுவலகங் களுக்குச் சென்றாலும், அவர்களுடைய பிரச்சினைகளை முறை யாகக் கேட்டு, அவைகளைத் தீர்த்து வைப்பதற்கான நிலைமை இல்லை.

[முற்பகல் 11-40]

எங்கு சென்றாலும் சரி, அவர்கள் நாட்கணக்கிலே, வாரக் கணக்கிலே, ஏன் வருஷக் கணக்கிலே கூட, அலைய வேண்டியிருக் கிறது. ஆகவே, ஒவ்வொரு அலுவலகத்திலும் மக்கள் தொடர்பு அதிகாரி என விசேஷமான அதிகாரிகளை நியமித்து, மக்களுடைய நியாயமான பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இன் றையதினம் நிர்வாகத்திலே இருக்கக்கூடிய மதமதர்ப்பு போக் கப்பட வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதே மாதிரி, இன்றையதினம் நீர்ப்பாசனம் சம்பந்தமாக சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். நீர்ப்பாசனத் திலே ஏற்கனவே போடப்பட்டிருக்கக்கூடிய திட்டங்களை நிறைவேற்றுவதிலே இருக்கக்கூடிய குறைபாடுகள் ஒரு புறம் இருக்க, தொடர்ச்சியாக செய்ய வேண்டிய மராமத்து வேலை களை, எந்தக் காலத்திலே செய்வது, எப்படிச் செய்வது, என்பதிலே இருக்கக்கூடிய பிரச்சினைகளைப் பற்றி மன்றத் திலுள்ள பல அங்கத்தினர்கள் விவாதங்களிலே பேசியிருக் கிறார்கள். காவேரியிலே தண்ணீர் வருவதற்கு முன்பு அந்த மராமத்து வேலைகளைச் செய்ய வேண்டும். வாய்க்கால்களிலே தண்ணீர் வருவதற்கு முன்பு மராமத்து வேலைகளைச் செய்ய வேண்டும். அந்த மராமத்து வேலைகள் குறிப்பிட்ட ஒப்பந்தக் காரர்களிடம் கொடுக்கப்பட வேண்டுமென்ற நிர்ப்பந்தம் அர சுக்கு ஏற்படுகிறது. அவ்வாறில்லாமல் பராமரிப்புக்கு அதிக நிதி ஒதுக்குவதோடு, அதிகபட்ச கான்ட்ராக்டர்களை நியமித்து, அந்தக் காண்ட்ராக்ட் வேலைகளைப் பூர்த்தி செய்து, முறையா கப் பாசனம் கிடைக்க நடவடிக்கைகள் மேற் கொள்ள வேண்டு மென்றும், ஏற்கனவே உள்ள திட்டங்களிலே இருக்கிற குறை களைப் போக்க வேண்டுமென்றும் நாம் கேட்டுக் கொள்கிறோம்.



அடுத்து, மதுமரத் தொழிலாளிகள், இந்த மாநிலத்திலே இலட்சக்கணக்கிலே பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களுடைய சார்பாக, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சரிடத்திலேகூட கோரிக்கை மனு சமர்ப்பிக்கப்பட்டிருக்கிறது. வேலையிழந்து நிற்கும் மதுமரத் தொழிலாளிகள் ஒரு புறத்திலே இருக்க, இன்றைய தினம் அரசினுடைய மது விலக்குக் கொள்கை, மக்களுக்குப் பயன் அளிக்காத முறையிலே இருப்பதை நடை முறையிலே பார்க்கின்றோம். ரூ. 25 கொடுத்து லைசன்ஸ் பெறலாம் என்று இருப்பதாலே, போலீஸ் இலாகாவில் நட வடிக்கைகள் காரணமாக தெருக்கள்தோறும் மதுக் கடைகள் இருக்கக்கூடிய நிலைமை இருக்கிறது. ஆகவே, மதுமரத் தொழி லாளிகள் பயன்பெறும் வகையிலே, மதுவிலக்குக் கொள்கையை அரசு மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய குழித்தலை பகுதியிலே மகளிர் கல்லூரி ஒன்று ஏற்படுத்த வேண்டுமென்றும் அதே மாதிரி, இந்த அரசை நிர் வகிக்கக்கூடிய இலாக்காக்கள் ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு அமைச்சகத்திற்கும் தனித்தனியாக, சப்ஜக்ட்ஸ் கமிட்டி அல்லது ஆலோசனைக் கமிட்டி என்ற பெயரிலே அமைத்து, அந்தந்த இலாக்காக்கள் பிரச்சினைகள் சம்பந்தாக பேசி நடவடிக்கை கள் எடுக்க இந்தக் குழுக்கள் அமைக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

கடைசியாக, நம்முடைய அவை முன்னவர் அவர்கள் நேற் றைதினம், சட்டமன்றத்தில் பணிபுரியக் கூடிய காவலர்களுக் குள்ள படியை ரூ. 2 உயர்த்திக் கொடுப்பதாக அறிவித்திருக் கிறார்கள். அவர்களுக்கு அளித்திருப்பதை நாம் வரவேற் கிறோம். அதே சமயத்திலே, சட்டமன்றத்திலே பணியாற்றும் அனைத்து ஊழியர்களுக்கும், மின்துறை பணியாளர்கள், ஒலி-ஒளி ஏற்பாடு செய்யும் பணியாளர்கள் உட்பட அனைத்து ஊழியர்களுக்கும் நேற்றைய தினம் அறிவித்தபடி உயர்வை அளிக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டு என்னுடைய உரையை முடிக்கிறேன், நன்றி, வணக்கம்.

திரு. இ. முத்துராமலிங்கம்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, பல்வேறுமானியக் கோரிக்கைகள் மீது, தனித்தனி யாக விவாதங்கள் நடைபெற்று, இன்று நடைபெறும் சட்ட முன்வடிவு விவாதத்தில், காந்தி காமராஜ் தேசிய காங்கிரஸ், சார்பாக என்னுடைய கருத்துக்களைக் கூறுகின்றேன். ஏழை, எளிய மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட இந்த அரசு, ஏழை எளிய மக்களுக்காக ஏராளமான திட்டங்களைத் தீட்டியுள்ளது

[திரு. இ. முத்துராமலிங்கம்] [1980 ஜூலை 30

அதனை வாழ்த்தி வரவேற்கின்றோம். நம்மால் தீட்டப்பட்ட திட்டங்கள் அனைத்தும் அந்த ஏழை, எளிய மக்களுக்குப் போய்ச் சேருவதற்கு வேண்டிய வழிமுறைகளை எவ்வளவு விரைவாகச் செய்ய முடியுமோ, அவ்வளவு விரைவாகச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இருப்பினும், என்னைப் போன்ற சாதாரண உறுப்பினர்கள் தெரிவிக்கும் ஒரு சில கருத்துக்களைக் கவனத்திலே கொண்டு, அதனையும் ஆராய்ந்து, பரிசீலனை செய்து, அமுல்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன்.

போக்குவரத்து வசதியைப் பொறுத்த அளவில் இன்னும்கூட ஏராளமான கிராமங்கள் போக்குவரத்து வசதிகள் கிடைக்காமல் மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டு இருக்கின்ற நிலைமைகள் இருக்கின்றன. என்னுடைய தொகுதியைப் பொறுத்த அளவில், இரண்டு பேரூராட்சிகள் இருக்கின்றன. ஒன்று பணகுடி பேரூராட்சி, மற்றொன்று திசையன்விளை பேரூராட்சியாகும். இந்த இரண்டு பேரூராட்சிகளையும் மையமாகக் கொண்டு டவுன் பஸ்கள் விட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் உள்ள களிகுளத்தில் ஒரு கல்லூரி இருக்கிறது. அந்தக் கல்லூரிக்குப் போவதற்கு வேண்டிய போக்குவரத்து வசதிகள் இல்லாததால் ஏழை மாணவர்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். இந்த நிலைமையை மாற்றி அந்தக் களிக்குளம் கல்லூரிக்கு டவுன் பஸ் வசதியைச் செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

நாகர்கோவில், கன்னியாகுமரி போன்ற இடங்களில் இருந்து புறப்படுகின்ற போக்குவரத்து கடற்கரை வழியாக உள்ள எந்த ஒரு பேரூராட்சியையும் தொடாமல் வருகின்ற நிலை இருக்கின்றது. அந்த நிலைமையை மாற்றி நாகர்கோவிலில் இருந்து திருச்செந்தூர் வழியாகப் போகும் திருவள்ளுவர் போக்குவரத்து திசையன்விளை, உடன்குடி வழியாக செல்லும்படி ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து குடிநீர் பிரச்சினையைப் பொறுத்த அளவில், இந்த அரசு ஏராளமான திட்டங்களைத் தீட்டி அனைத்து கிராமங்களுக்கும் குடிநீர் வசதி செய்து கொடுக்க வேண்டும் என்ற கொள்கையை ஏற்றுக் கொண்டிருக்கிறது. இருப்பினும் அரசால் செயல்படுத்தப்படுகின்ற திட்டங்கள் முழு அளவுக்கு நிறைவேற்றப்படாமல் இருக்கின்ற நிலை இருக்கின்றது. குறிப்பாக செட்டிக் குளம் பஞ்சாயத்தில் குடிநீர் திட்டமானது கடந்த 3 ஆண்டுகள் ஆகியும் இன்னும் முழுமை பெறாமல் இருக்கிறது



1980 ஜூலை 30] [திரு. இ. முத்துராமலிங்கம்]

அடுத்து பணகுடி பேரூராட்சி மன்றத்தில் ஒரு பகுதிக்குத்தான் குடிநீர் திட்டம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. இன்னும் ஒரு பகுதிக்கும் நிறைவேற்றித் தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதனை அடுத்து, என்னுடைய தொகுதியில் ஆத்தாங்கள் என்னும் ஊரில் பள்ளிவாசல் இருக்கின்றது. அங்கே பல்வேறு பகுதிகளில் இருந்தும், தமிழ்நாட்டில் இருந்து மட்டுமல்ல, கேரளம் போன்ற மாநிலங்களில் இருந்தும் கூட ஏராளமான முஸ்லீம் யாத்திரீகர்கள் வருகிறார்கள். அவர்களுக்கு வசதி செய்து கொடுக்கும் வகையில், இந்தப் பகுதியில் குடிநீர் வசதி மற்றும் தங்கும் வசதிகளும் செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து நீர்ப்பாசனத்தைப் பொறுத்தவரையில், எங்கள் தொகுதியில் எந்த ஒரு திட்டமும் இல்லை. சுதந்திரம் வந்து, காங்கிரஸ் கட்சி ஆண்டபோது நம்பியாறுத் திட்டம், கொடுமுடியாற்றுத் திட்டம், ஆலங்காறு திட்டம் போன்ற பல திட்டங்களைப் போட்டார்கள். ஒன்றும் நிறைவேறவில்லை. அமைச்சர்கள் எங்களுடைய தொகுதிக்கு வருகின்ற நேரத்திலே எல்லாம் பொது மக்களும், மன்ற உறுப்பினர்கள் எல்லாம் ஏராளமான மனுக்கள் கொடுத்திருக்கிறார்கள். ஆனால் இன்றுவரை அவைகள் நிறைவேறவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

விவசாயிகள் நலனைக் கருத்தில் கொண்டு இந்தத் திட்டங்களை நிறைவேற்றி, புறம்பாக விரிந்து கிடக்கின்ற தரிசு நிலங்களை விளைச்சல் நிலங்களாக மாற்றி அமைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

[முற்பகல் 11–50]

ராதாபுரம் சப்-தாலுக்காவைப் பொறுத்தவரையில், அதை தாலுக்காவாக உயர்த்தவேண்டும் என்று பல ஆண்டுகாலமாக அங்கே உள்ள மக்கள் கேட்டுக்கொண்டு இருக்கிறார்கள். இதை இந்த அரசு கருத்தில் கொண்டு, தற்போது ரெவின்யூ போர்டு சப்-தாலுக்கா என்று இருப்பதை தாலுக்காவாக உயர்த்தலாம் என்று பரிந்துரை செய்துள்ளது, அதை உடனடியாக அமல் நடத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

போக்குவரத்து மானியக் கோரிக்கை விவாதத்தின்போது நான் குறிப்பிட்டதுபோல. தனியார் லாரி, கார், டாக்சி போன்ற வாகனங்களில் விபத்துக்குள்ளானவர் குடும்பங்களுக்கும் முதலமைச்சர் நிதியில் இருந்து 1,000 ரூபாய் வழங்க வேண்டும் என்ற கோரிக்கையை அரசு கருத்தில் கொண்டு அமல்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. இ. முத்துராமலிங்கம்] [1980 ஜுலை 30

ஜனதா இன்ஷூரன்ஸ் திட்டத்தை டிரைவர்கள் மத்தியில் கட்டாயமாக அமல் படுத்தவேண்டும். இதில் அரசாங்கம் ரொம்பக் கண்டிப்பாக இருக்கவேண்டும். அதைக் கண்காணிக்க வாகனங்கள் எப். சி.-க்கு வருகிறபோது அல்லது காவல் துறையிடம் லைசென்சு வாங்க வருகிறபோது, அந்த ஜனதா பாலிசியோடு அந்த லைசென்சு இணைக்கப்பட்டு இருக்கிறதா என்று பார்க்கிற வகையில் அரசு ஆணையிடவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையில் ஒரு இடத்தில் கூட அரிசன, மீனவர்களுக்கு குடியிருப்பு வீடுகள் அமைத்துத் தரப்படவில்லை. ஓரிரு கட்டடங்கள், ஆங்காங்கே வீடுகள் இருந்தபோதிலும் அது முழுமை பெறாமல் இருக்கிறது. ஆகவே, பணகுடி, வடக்கன்குளம், ராதாபுரம், திசையன்விளை போன்ற இடங்களில் வாழும் அரிசன, மீனவ மக்களுக்கு வீடுகள் அமைத்துத் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

காவல் துறையைப் பொறுத்தவரையில், பரகூரில் உள்ள புறக்காவல் நிலையத்தை முழுக்காவல் நிலையமாகவும், கூடங்குளம் என்ற இடத்தில் ஒரு காவல் நிலையமும் அமைத்துத் தரவேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன். அந்தப் பகுதிகள் கடற்கரை பகுதியாக இருப்பதால், அந்தப் பகுதி மக்களுக்கு பாதுகாப்புத் தரும் வகையில் இதனைச் செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

நெல்லையில் ஒரு சுற்றுலா அலுவலகம் அமைக்க வேண்டும். சுற்றுலா வாரிய மானியக் கோரிக்கை மீதே நான் இது குறித்து சொல்லியிருக்கிறேன். அதை ஏற்று, நெல்லையில் ஒரு தகவல் நிலையமும், சுற்றுலா விடுதியும் அமைத்துத் தருவதன் மூலம் அந்த மாவட்டத்திற்கு வருகிற சுற்றுலா பயணிகளுக்கு தங்கும் வசதி நல்ல முறையில் செய்து தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் அரிசன மக்கள் நிறைய இருக்கிறார்கள். ஆகவே, அவர்களுக்கு குடியிருப்புகள் கட்டிக்கொடுக்க மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டு, அவர்களுக்கு மனைப்பட்டா இலவசமாக வழங்கவேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. தா. சாமிக்கண்ணு: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, என்னை வெற்றி பெறச் செய்து இங்கே அனுப்பி வைத்த செங்கம் தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கும், மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவர் அவர்களுக்கும் என் நன்றியை முதலில் தெரிவித்துக்கொள்கிறேன்.



1980 ஜுலை 30] [திரு. தா, சாமிக்கண்ணு]

என்னுடைய செங்கம் தொகுதி மிகவும் வறட்சியான தொகுதியாகும். இங்கே எந்த விதமான நீர்ப்பாசனமும் இல்லை. ஆகவே, என்னுடைய தொகுதியில் உள்ள செய்யாற்றின் குறுக்கே, குப்பநத்தம் என்ற இடத்தில் அணையைக் கட்டித் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இந்த ஆண்டே கட்டி விட்டால் அதனால் ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள் பாசனம் பெறும். அந்தப் பகுதி மக்களுக்கும் குடிநீர் பிரச்னை தீரும், விவசாயிகளும் பயன் அடைவார்கள். ஆகவே, அந்தத் திட்டத்தை நிறைவேற்றித் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் உள்ள ஏரிகளின் கால்வாய்கள் வெட்டி, சீரமைத்து அதன் மூலம் தண்ணீர் விடுவதற்கு ஏற்பாடுகள் செய்யவேண்டும். அரிசன மக்களுக்கு வீட்டுமனை வழங்கி வீடு கட்டித் தர வேண்டும். அதற்காக தனிக் கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த மன்றத்தில் காயிதே மில்லத், முத்துராமலிங்கத்தேவர் டாக்டர் அம்பேத்கார் படங்கள் திறந்து வைக்கப்படவேண்டும். குடிநீர் திட்டமும் சில கிராமங்களுக்குக் கொடுக்கவேண்டும் என்று கேட்டு, என் உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

*திரு. மே. அ. இராசகுமார்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, இந்த சட்டப் பேரவைக்கு மருங்காபு தொகுதியின் சார்பாக என்னை தயார்படுத்தி அனுப்பிய தாய புள்ளங்கள் கொண்ட எனது தலைவர் புரட்சித் தலைவ அவர்களுக்கும், எனக்கு ஆதரவாகவும் வழிகாட்டியாகவு இருந்து வருகிற எனது சீனியர் திருச்சி வழக்கறிஞர் தி ஜி. எம். விருத்தாசல ரெட்டியார் அவர்களுக்கும் எனக் பெருவாரியான வாக்குகள் அளித்து வெற்றியைத் தேடித்தந் இம்மாமன்றத்திற்கு அனுப்பிய மருங்காபுரி தொகுதி வாக் ளர் பெருமக்களுக்கும் முதற்கண் எனது நன்றி கலந்த வணக் தைத் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டுள்ளேன்.

தலைவரவர்களே, எனது தொகுதியான மருங்காபுரி தொ மிகவும் பின்தங்கிய தொகுதி. அங்கு வேலை வாய்ப்புக்க எந்தவித திட்டங்களும் செயல்படுத்தப்படவில்லை. ஆக மருங்காபுரி தொகுதியில், மூலப் பொருளாக பஞ்சு அதி கிடைக்கிறபடியால் துவரங்குறிச்சி பகுதியில் ஒரு பஞ்சாலை ஏற்படுத்தித் தந்து, பல பேர்களுக்கு வேலை வாய்ப்புகள் அளிக்க வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

எனது தொகுதியில் மருங்காபுரி ஒன்றியத்தில் பாலாறு ஓடுகிறது. அவ்வாற்றில் அம்மாபட்டி அருகே ஒரு நீர்த்தேக்கம் கட்டினால் பல ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலம் பாசன வசதி பெற்று பயனடைய முடியும். எனவே அங்கு ஒரு அணைக் கட்டித் தர அரசைக் கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. மே. அ. இராசகுமார் [1980 ஜூலை 30

பல வருடங்களாக எனது தொகுதியில் உள்ள துவரங்குறிச்சி பிர்காவைச் சேர்ந்த வடகாட்டுப்பட்டியில் அரிசனங்கள் நீண்ட காலமாக கோரிவரும் துவரங்குறிச்சி-வடகாட்டுப்பட்டி சாலை வசதியை உடனடியாக ஏற்படுத்தித் தர ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எனது தொகுதி மக்களின் நீண்டகால கோரிக்கையான துவரங்குறிச்சி நத்தம் ரஸ்தாவை ஏற்படுத்தித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இதன் மூலம் மதுரை-திருச்சி தூரத்தை இன்று 20 கிலோ மீட்டர் குறைக்க வாய்ப்பு இருக்கிறது.

கல்லூரியே இல்லாத மணப்பாறை தாலூகாவில் கல்லூரி ஒன்று ஏற்படுத்தித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மற்றும் எனது தொகுதியில் தென்னை மரங்கள் அதிகமாக இருப்பதால் அங்கே தென்னை நாரை அடிப்படையாகக்கொண்ட கயர் மற்றும் இதரப் பொருள்களை தயார் செய்கின்ற தொழிற்சாலை ஒன்றை ஏற்படுத்தித் தர வேண்டுமென்று கேட்டு, பேச வாய்ப்பளித்த தலைவருக்கு நன்றி கூறி, முடித்துக்கொள்கிறேன். நன்றி. வணக்கம்.

திரு. கே. எஸ். ஜி. ஹாஜா செரீப்: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இன்று நம் முன் இருக்கக்கூடிய, 'அப்ராபிரியேஷன் பில்'லில் நான் பேச வாய்ப்பளித்ததற்காக நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

சற்றேறக்குறைய 1396 கோடி ரூபாய் இந்த ஆண்டில் நாம் செலவு செய்யப்போகிறோம். அதில் 436·37 கோடி ரூபாய் புதிய திட்டங்களுக்கும் பழைய திட்டங்களை புதுப்பித்துக் கொள்வதற்கும் செலவு செய்ய ஒதுக்கியிருப்பதாக இந்தக் குறிப்பில் பார்க்கிறேன். இதில் ஒவ்வொரு மேஜர் டிபார்ட்மென்ட்டுக்கும் ஒரு தொகை ஒதுக்கப்பட்டிருக்கிறது.

Electricity Rs. 155·76 crores; Irrigation Rs. 32·74 crores; Agriculture Rs. 78.25 crores இம்மாதிரி ஒதுக்கப்பட்டிருக்கிறது. இந்தத் திட்டங்கள் எல்லாம் சரிவர செயல்படுத்தப்பட்டால்தான் மக்களுக்கு பிரத்தியட்சபலன் அளிக்கும் என்பதை நான் முதலிலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

ஏற்கெனவே இரண்டு, மூன்று தடவைகள் இந்த சட்டசபையில் பேசும்போது ஒவ்வொரு முக்கியமான சப்ஜெக்ட்டுக்கும் ஒரு கமிட்டி அமைக்க வேண்டுமென்று வலியுறுத்தி இருக்கிறார்கள். அதற்கு என்ன பெயர் வைத்தாலும் சரி, ஸ்டாண்டிங் கமிட்டி என்றாலும் சரி, அல்லது செலக்ட் கமிட்டி என்றாலும் சரி, ஒவ்வொரு மேஜர் சப்ஜெக்ட்டுக்கும் ஒருகமிட்டி ஏற்படுத்தினால் அவர்கள் 3 அல்லது 4 மாதத்திற்கு ஒரு முறை கூடி, அந்தந்த



980 ஜூலை 30] [திரு. கே. எஸ். ஜி. ஹாஜா செரீப்]

பார்ட்மென்டில் எப்படி நடக்கிறது. புதிய திட்டங்கள் எப்படி செயல்படுத்தப்பட்டிருக்கின்றன. அதன் பலன் என்ன என்பதை அவர்கள் அறிந்துகொள்வதற்கும், அதை மற்றவர்களுக்கு சொல்வதற்கும் ஒரு சந்தர்ப்பம் ஏற்படும்.

[நண்பகல் 12-00]

அப்படி ஏற்பாடு செய்தால் அவர்கள் நல்ல யோசனைகளை அந்த டிபார்ட்மெண்டுக்குக் கொடுப்பார்கள். அதனால் நல்ல பலன் ஏற்படும் என்று நான் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். பார்லிமெண்ட்டிலே " கன்சல்டேட்டிவ் கமிட்டி " என்று வைத்திருக்கிறார்கள். பக்கத்து மாநிலமாகிய கேரளாவிலே கூட இதை ஸ்டாண்டிங் கமிட்டி என்று வைத்திருக்கிறார்கள். அதே போன்று பொருளாதாரத் துறையில் முற்பட்ட தேசங்களில் பார்த்தோமேயானால் இந்த கமிட்டி இருக்கின்றது. அங்கெல்லாம் அந்தக் கமிட்டி நல்ல முறையில் செயல்பட்டு வருகின்றது. ஆகவே அதே முறையை நாமும் கொண்டுவர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து இப்போது எலக்ட்ரிக்கல் இம்ப்ரூவ்மெண்டுக்காக 155·76 கோடி ரூபாய் செலவு செய்வதாகத் தீர்மானித்திருக்கின்றார்கள். பவர் நமக்கு மிக மிக முக்கியம். எந்தவிதமான காரியமாக இருந்தாலும் பவர் இல்லை என்றால் ஒன்றும் செய்ய முடியாது. பவர் இல்லை என்றால் எந்தவிதமான ஒரு டெவலப்மெண்ட் ப்ராஜெக்ட்டும் எடுத்துக் கொள்ள முடியாது என்பதைத் தெரிவித்துக் கொள்ள ஆசைப்படுகிறேன். இந்த நிலை அனைத்து அங்கத்தினர்களுக்கும் நன்றாகத் தெரியும். இப்போது ஒவ்வொரு வருடமும் மின்சாரத் தட்டுப்பாடு வருகின்றது. அதன் காரணமாக கட் வருகின்றது. அதன் காரணமாக ப்ரொடக்ஷன் குறைகின்றது. அதனால் ஏற்படக்கூடிய கஷ்ட நஷ்டங்கள் மிகுதியாக இருக்கின்றன. ஆகவே பவரைப் பொறுத்த வரையில் எந்தவிதமான நிபந்தனையும் இன்றி கேட்கின்ற அளவுக்குக் கொடுப்பதற்கு நாம் தயாராக இருக்க வேண்டும்.

சென்ற வாரத்தில் மத்திய பவர் அமைச்சர் அவர்கள் கூட ஒரு நிருபருக்குப் பேட்டி அளிக்கின்றபோது ஒன்றைச் சொன்னார்கள். நாட்டிலே இருக்கக்கூடிய பவர் ஸ்டேஷன்கள் எல்லாம் 'Power Station both thermal and hydel' நல்ல விதமாக செயல்பட்டால் நிச்சயமாக தட்டுப்பாடு இருக்காது என்று சொல்லி இருக்கிறார். அதற்காக நாம் என்னென்ன நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமோ அதை எல்லாம் எடுக்க வேண்டும். இப்போது இருக்கக்கூடிய சிக் இண்டஸ்ட்ரீஸ்களை திரும்ப ஹெல்த்துக்கு கொண்டு வருவதற்குரிய முயற்சிகளைச் செய்ய வேண்டும் என்று சொல்லி இருக்கிறார்கள். ஆகவே

[திரு. கே. எஸ். ஜி. ஹாஜா செரீப்] [1980 ஜூலை 30

அந்த வகையிலே நாம் ஏற்பாடு செய்தால் நூற்றுக்கு நூறு
ப்ரொடக்ஷன் வரும் என்று நாம் எதிர்பார்க்க முடியாது. அதன்
காரணமாகத்தான் நான் ஏற்கெனவே இரண்டு மூன்று தடவை
கள் சொல்லி இருக்கிறேன். நம்முடைய மாநிலத்திலே தொழில்
துறையிலே முன்னேற வேண்டும் என்ற முயற்சிகளை செய்துக்
கொண்டிருக்கின்றோம். அதைப்பற்றி நான் மகிழ்ச்சி அடைகின்
றேன். கனம் நிதியமைச்சரவர்கள் கூடச் சொல்லி இருக்கிறார்
கள். அதாவது ஆயிரக்கணக்கான அளவிலே பெரிய தொழிற்
சாலைகள் வரவேண்டும் என்று சொல்லி இருக்கிறார்கள். அது
மாத்திரம் இல்லாமல் ஆயிரக் கணக்கான குடிசைத் தொழில்
களும் வரவேண்டும் என்று சொல்லி இருக்கிறார்கள். ஆனால்
இவற்றிற்கெல்லாம் பவர்தான் மிக அவசியம். ஆகவே நாம்
அவற்றிற்குத் தேவையான அளவிலே பவர் உற்பத்தி செய்வதற்
காக மேலும் பல பவர் ஸ்டேஷன்களை ஏற்படுத்த வேண்டும்
என்று சொல்லி இருக்கிறேன். அவ்வாறு புதிய பவர் ஸ்டேஷன்
களை ஏற்படுத்தி அதைத் தனியார் துறைக்குக் கொடுத்தால்
அவர்கள் அதை நல்ல முறையில் ஏற்று நடத்துவார்கள். அவ்வாறு
ஏற்படுத்தினால் அவர்கள் தங்களுக்கு வேண்டிய பவரை எடுத்துக்
கொண்டு மீதி உள்ளதை கொடுத்துவிடுவார்கள். இதைத் தனி
யார் துறைக்குக் கொடுத்துவிட்டால் மட்டும் போதாது. அதற்கு
வேண்டிய மூலப் பொருளான நிலக்கரியைக் கொண்டுவருவதற்கும்
இந்த அரசு வேண்டிய சௌகரியங்களைச் செய்து கொடுக்க
வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். நிலக்கரி போதிய
அளவுக்குக் கொண்டுவந்து கொடுக்கப்படவில்லை என்றால்
தெர்மல் ஸ்டேஷன்கள் நல்லமுறையில் நடைபெறாது. தற்
போது நம்மிடம் உள்ள சில பவர் ஸ்டேஷன்கள் நிலக்கரி பற்றாக்
குறையினால் சரியாக நடப்பதில்லை. இந்த நிலைமை நமக்கு
நன்றாகத் தெரிகின்றது. இந்த நிலக்கரியைக் கொண்டுவருவதற்கு
சுலபமான ஒரு வழியைச் செய்யலாம் என்று எனக்கு ஒரு அபிப்பி
ராயம் இருக்கின்றது. காரணம் என்னவென்றால் நான் இந்த
வேலைகளில் அதிகமாக ஈடுபட்டிருக்கின்றேன். ஒரு சமயத்தில்
கிட்டத்தட்ட ''ஹாஃப் எ டன்'' நிலக்கரியை நான் ஹாண்டில்
பண்ணி இருக்கிறேன். அப்போது கல்கத்தா, ஹால்டியா
போன்ற நிலக்கரிச் சுரங்கங்களிலிருந்து கொண்டுவரப்பட்ட துறை
முகங்களிலே இருக்கக்கூடிய நிலக்கரியை இங்கிருந்து கப்ப
லில் நான்கைந்து நாட்களில் கொண்டு வந்துவிடுவோம்.
ஆனால் இப்போது கப்பல் போய் பத்து பதினைந்து நாட்கள்
காத்து இருக்க வேண்டி இருக்கின்றது. கப்பல்கள் செல்வதற்கு
முன்பே முன்பெல்லாம் நிலக்கரி வாகன்களில் துறைமுகத்திற்கு
வந்துவிடும். இப்போது கப்பல் எடுப்பதற்காகப் போன பிறகு
தான் நிலக்கரி துறைமுகத்திற்கு வந்து சேருகின்றது. அதன்
காரணமாக நஷ்டம் ஏற்படுகின்றது. அதைத் தவிர்க்கவேண்டும்,



1980 ஜூலை 30] [திரு. கே. எஸ். ஜி. ஹாஜா செரீப்]

பெரிய தேசங்களில் நிலக்கரியை ஆயிரம் மைல்களுக்கு அப்பாலி
ருந்து பைப் லைன் மூலமாகக் கொண்டு வருகின்ற முறைகளை
வைத்திருக்கிறார்கள். அந்த மாதிரி முறைகளை நாமும் கொண்டு
வரலாம். ஆனால் அதற்கு அதிகமான செலவு ஆகக்கூடும்.
ஆனால் இப்போது உடனடியாகக் செய்ய வேண்டியது என்ன
வென்றால் கல்கத்தா, ஹால்டியா போன்ற இடங்களிலிருந்து
நிலக்கரியை எந்த வகையிலே வெற்றிகரமாகக் கொண்டுவர
முடியுமோ அந்த வகையிலே கொண்டுவருவதற்கு ஏற்பாடு
செய்ய வேண்டும். அதற்கான பொறுப்பை மத்திய அரசு எடுத்
துக்கொண்டோ அல்லது மாநில அரசு எடுத்துக் கொண்டோ
கொண்டுவருவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். யார் இதை
வெற்றிகரமாகக் கொண்டுவருவார்களோ அவர்களிடம் இந்தப்
பொறுப்பைக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ள
ஆசைப்படுகிறேன்.

குறைந்த பட்சம் 76-லிருந்து 80 மைலுக்குள்ளாகத்தான்
அவைகள் கொண்டு வரப்பட வேண்டும். 76-லிருந்து 80 மைலுக்
குள்ளே கொண்டு வரவேண்டிய சரக்கே இவ்வளவு தாமதமாக
வருகிறது என்று சொன்னால், அதில் ஏதோ சிக்கல்கள், சங்
கடங்கள் இருக்கின்றன என்று பொருள். அவைகளையெல்லாம்
நீக்குவதற்கான நடவடிக்கையை அரசு எடுக்க வேண்டும் என்று
நான் கேட்டுக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

We should have a pragmatic approach to the problem. We should be anxious to see that the vital subject of electricity should be given stress and importance. At the sametime, I wish to emphasize that the industrial development is very very important.

நேற்று கூட கனம் நிதியமைச்சர் அவர்கள் பேசும்போது
அதைப்பற்றி மிகவும் வலியுறுத்தி, அவருடைய காலத்தில்
எவ்வளவுக்கெவ்வளவு தொழில் அபிவிருத்தி செய்யமுடியுமோ
அவ்வளவு தொழிற்சாலைகளும் கொண்டு வருவதற்கு பாடுபடு
வோம். அவர்களுக்கெல்லாம் முன் நின்று பாதுகாப்பு கொடுப்
போம், தொழில் வளர்ச்சிக்குத் தேவையானதை எல்லாம் செய்துக்
கொடுப்போம் என்று சொல்லியிருக்கிறார்கள். அதைப்பற்றி
மகிழ்ச்சி அடைகிறேன். அப்படி சொல்லிவிட்டால் மட்டும்
போதாது. சொல்லிவிட்டு அதற்கான சூழ்நிலையை ஏற்படுத்
தாமல் இருந்தால் பயன் இல்லை. பெரிய இண்டஸ்ட்ரீசை
கொண்டு வருவதற்கு சென்டிரல் கவர்ன்மெண்டிலே பெரிய
ஸ்கீமைக் கொடுத்துவிட்டால் மாத்திரம் போதாது. இங்கே
உள்ள பெரிய ஆபீஸர்களை அங்கே அனுப்பி எந்தெந்த டிபார்ட்

மெண்டுகளை அணுகி அதைக் கொண்டு வருவதற்கு எப்படி எப்படிச் செய்ய வேண்டுமோ அப்படி எல்லாம் செய்வதற்கான முயற்சிகளையும் செய்தால்தான், பெரிய திட்டங்கள், பெரிய இண்டஸ்ட்ரீஸ்களை நம் மாநிலத்தில் கொண்டு வந்து நிறைவேற்ற முடியும்.

ஸ்கீமை மட்டும் சென்டிரல் கவர்ன்மெண்டிடம் கொடுத்து விட்டு, எந்த வித முயற்சியும் செய்யாமல் இருந்துவிட்டு, வருஷா வருஷம் அவர்களுடைய நிதி ஒதுக்கீடு கம்மியாக இருக்கிறது என்று சொல்வதில் உபயோகம் இல்லை. ஏனென்று சொன்னால் இண்டஸ்டிரியல் டெவலப்மெண்ட் இருந்தால்தான், வேலை வாய்ப்பு அதிகரிக்கும், பொருள் உற்பத்தி அதிகரிக்கும், சராசரி வருமானம் அதிகரிக்கும். ஆகவே அதற்கான முயற்சிகளில் ஈடுபட வேண்டும். அதைவிட்டு, ஒவ்வொரு வருஷமும் சென்டிரல் கவர்ன்மெண்ட் கொடுக்கின்ற நிதி அளவு கம்மியாகிக் கொண்டு வருகிறது என்று கணக்குக் காட்டி கொண்டிருந்தால் நாம் தான் அதனால் பாதிக்கப்பட்டவர்களாக இருப்போம் என்று இந்த நேரத்தில் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

அதே மாதிரி நான் முன்பே சொல்லியிருப்பதுபோல் இண்டஸ்டிரியலைப் பொருத்தவரையில் ஒரு அட்வைசரி கமிட்டி ஒன்று ஏற்படுத்த வேண்டும். இண்டஸ்டிரியல் டெவலப்மெண்ட் கமிட்டி அட்வைசரி கமிட்டி என்று கொண்டு வந்தால் மட்டும் போதாது. It should have some authority to see that the recommendations being carried out அதற்காக ஸ்டேச்சுடரி முறையில் ஒரு கமிட்டியை அமைத்துக்கொள்வோமேயானால் அது மிகவும் நன்றாக இருக்கும். அந்தக் கமிட்டியை அமைத்து, நம்முடைய மாநிலத்திலே இருக்கக் கூடிய வெற்றிபெற்ற இண்டஸ்டிரியலிஸ்ட்களை, திறமை மிக்க இண்டஸ்டிரியலிஸ்ட்களை அந்தக் கமிட்டியிலே பங்கு கொள்ளும் வேண்டிக் கொள்ள வேண்டும். அதன் மூலம் தான் அவர்கள் நல்ல முறையில் செயலாற்றி நமக்கு அவர்களுடைய திறமையான அட்வைஸ்களை கொடுப்பார்கள், அதனால் நாம் நம்முடைய தொழில் துறையில் சில விஷயங்களை விருத்தி செய்துக் கொள்ள முடியும் என்று சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்து இந்த அட்வைசரி கமிட்டியையும் ஸ்டேச்சுடரி கமிட்டியாக பண்ண வேண்டும். அதை ஸ்மால் ஸ்கேல் இண்டஸ்ட்ரீஸ்களுக்கு என்று வைத்தாலும் சரி, பெரிய இண்டஸ்டிரீஸ்களுக்கு என்று வைத்தாலும் சரி, அல்லது இரண்டையுமே சேர்த்து வைத்தாலும் சரி, அதை முடித்துக் கொடுக்கும் வகையில் நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.



அடுத்து இந்த சென்னை மாநகரத்தை எடுத்துக் கொண்டால் அது மிகவும் அசுத்தமான நிலையில் இருக்கிறது என்று சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். அது தமிழ்நாட்டின் தலைநகரமாக இருக்கிறது. தினமும் லட்சக்கணக்கான பேர்கள் வெளியூரிலிருந்தும் வெளிநாட்டிலிருந்தும் வந்துக் கொண்டிருக்கிறார்கள். பார்க்க வேண்டிய இடங்கள் பல இருக்கின்றன. அப்படி பார்க்கும் போது, அத்தகைய இடங்கள் எல்லாம் மிகவும் அசுத்தமான நிலையில் வைக்கப்பட்டிருக்கின்றன. இந்த நாட்டிக்கு வரும் வெளிநாட்டார்கள் நம் தமிழகத்தின் தலைநகரைப்பற்றி ஒரு நல்ல அபிப்பிராயத்தை கொண்டு செல்வார்களேயானால் அது நமக்கு பெருமையாக இருக்கும். ஆனால் இந்த நகரத்தைப் பற்றி, மிக மோசமான நிலையில் ஒரு அபிப்பிராயத்தை அவர்கள் நாட்டிற்கு எடுத்துக் சென்றால் அது நமக்கு மிகவும் மன வருத்தத்தைக் கொடுக்கும் என்று சொல்லிக் கொள்ள ஆசைப் படுகிறேன்.

அப்படி வெளிநாட்டிலிருந்து வந்த சிலரை, (ஓவர்-ஸீ-பீபிள்ஸ்) நான் சமீபத்தில் சந்திக்கும் சந்தர்ப்பம் ஏற்பட்டது. அவர்கள் என்னிடத்தில் இந்த சென்னை நகரத்தைப் பற்றி சொல்கிற போது மிகுந்த வருத்தத்தோடு சொன்னார்கள். நாம் தெருக்களை வைத்துக் கொண்டிருக்கும் அசுத்தமான முறைகளைப்பற்றியும், இன்னும் பெரிய பெரிய இடங்களில், கோவில்கள் இன்னும் வரலாற்று சிறப்புப் பெற்ற இடங்களில் எல்லாம் சரியான மெயின்டெனன்ஸ் இல்லாமல் அசுத்தமாக இருக்கும் நிலையைப் பற்றியும் எடுத்துச் சொன்னார்கள். வருத்தமாக இருக்கிறது. அவர்கள் உணர்ந்து அருவருப்போடு சொல்கிறார்கள். ஆகவே இந்த முறைகளை மாற்ற வேண்டும். அதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

நமது சென்னை நகரத்திலே பல ஸ்லம் ஏரியாக்கள் சாதாரணமாக காலங்களிலேயே மிகவும் மோசமான நிலையில் நரகமாக இருக்கின்றன. நகரம் என்று சொல்வதை விட நரகம் என்று சொல்வது தான் சரியாக இருக்கும் என்கிற நிலையில் சென்னை இருக்கிறது. மழைக்காலம் வந்து விட்டால் தேங்கிக் கிடக்கிற தண்ணீரிலேயே தான் எல்லாமும் நடக்கிறது. அந்த ஜனங்கள் வாழ்க்கையையே அந்தக் தேங்கிக் கிடக்கும் தண்ணீரில்தான் நடத்துகிறார்கள். குழந்தைகளும் அங்கேயேதான் விளையாடுகின்றன. ஆடுகள், மாடுகள், கால்நடைகள் எல்லாம் அங்கேயே தான் வசிக்கின்றன.

(பிற்பகல் 12-10)

இந்த நிலையை, அவசர நிலையை ஏற்படுத்தி இதை நல்ல முறையில் சீர்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஸ்லம்கள் இருக்கக்கூடிய இடங்களில் தண்ணீர் வசதி இல்லை, விளக்கு வசதி இல்லை, ரோடு வசதி இல்லை, சுத்தமாக இருப்பதற்கான எந்தவித வசதியும் இல்லை. ஆகவே இந்த நிலையை அவசரமாக மாற்ற வேண்டும். எனக்கு முன்னால் பேசிய நண்பர் திரு. கபாலி இருந்திருந்தால் அவசியம் அவர்களிடம் இதைப் கேட்டிருப்பேன், நீங்கள் முதலில் இதற்கு முக்கியத்துவம் கொடுங்கள் என்று. இந்த ஸ்லம்மை எடுத்துவிட்டு பெரிய கட்டடங்களாக கட்டி கம்பார்ட்மென்டலைஸ் செய்து கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும். அந்தக் கட்டடங்கள் சுத்தமாக இருக்கக்கூடிய வகையில் ஏற்பாடு செய்து கொடுக்க வேண்டும். இதை முக்கியமாக கவனிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆஸ்பத்திரிகளைப் பொறுத்தவரையில் சென்னையில் இன்னும் இரண்டு பெரிய ஆஸ்பத்திரிகள் வரவேண்டியது மிக மிக அவசியம். காரணம், மக்கள் தொகை பெருகி வருகிறது. தென் பக்கத்தில் ஒரு சர்க்கார் ஆஸ்பத்திரி இல்லை. அதே போல் மேற்குப் பக்கத்திலும் சர்க்கார் ஆஸ்பத்திரி இல்லை. ஆகவே இந்நிலை போக்கப்பட வேண்டும். அதற்கு தகுந்த முறையில் சுகாதார அமைச்சர் அவர்கள் வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ரூரல் ஹெல்த் சென்டர்ஸ் நல்லமுறையில் செயல்பட ஒரு ப்ராக்மாட்டிக் ஸ்கீம் போட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதற்கான ஒரு ஸ்கீம் போடுவதாக பத்திரிகையில் பார்த்தேன். அந்தத் திட்டத்தின் மூலம் ஒவ்வொரு சிறிய கிராமத்திலும் இருக்கக்கூடிய ஹெல்த் சென்டர்களை நல்ல முறையில் இயக்கினால் மக்கள் நல்லமுறையில் பயனடைய முடியும்.

Another impoitant subject I want to say here is about dispersal of industries.

இது மிகவும் முக்கியமானது, இங்கே தலைநகரில் ஒரு பெரிய தொழிற்சாலை வருகிறபோது ஐயாயிரம் பேர்களுக்கு வேலை கிடைக்கிறது என்று சொன்னால் குறைந்தது 15,000 பேர்கள் வெளி ஊர்களிலிருந்து இங்கே வந்துவிடுகிறார்கள். ஆகவே ,அந்த 15,000 பேர்களுக்கும் எல்லாவித வசதிகளும் செய்து கொடுக்க வேண்டிய நிலை இருக்கிறது. தண்ணீர் வசதி போன்ற வசதிகளைக் குறிப்பிடுகிறேன். அப்படி ஏராளமான பேர்கள் நகரத்திற்கு வருவதால் அதுவே ஸ்லம்ஸ் ஏற்பட ஒரு காரணமாக இருக்கிறது. ஆகவே 'டிஸ்பெர்ஸல் ஆப் இன்டஸ்ட்ரீஸ்' இருக்க வேண்டும். ஏன் தலைநகருக்குள்ளேயே இன்டஸ்ட்ரீஸ் இருக்க வேண்டும் ? பின்தங்கிய பகுதிகளில் தொழில்கள், இன்டஸ்ட்ரீஸ் துவக்கினால் சில சலுகைகளை கொடுத்து வருகிறோம். ஆகவே இன்னும் என்னென்ன சலுகைகள் அதிகமாக வேண்டுமோ அந்தச் சலுகைகளை எல்லாம் கொடுத்து பின்தங்கிய பகுதிகளில் பெரிய பெரிய தொழிற்சாலைகள் வருவதற்கு வேண்டிய எல்லா ஏற்பாடுகளையும் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.



முக்கியமாக நான் கேட்டுக் கொள்வது, ஒவ்வொரு முக்கியமான சப்ஜெக்ட்ஸ்க்கும் ஒரு ஸ்டான்டிங் கமிட்டி போடுவதோடு கூட, தொழில் அபிவிருத்திக்கு என்று ஒரு அட்வைசரிக் கமிட்டிக்குப் பதிலாக ஸ்டாச்சூட்டரி கமிட்டி போடுவது அவசியம் என்று சொல்லிக்கொண்டு இது பற்றி கனம் நிதி அமைச்சர் அவர்கள் இன்றே ஒரு வாக்கு கொடுப்பார்கள், கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். வணக்கம்.

திரு. பெ. திருமாறன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சாதாரண மனிதனை சாமானிய மனிதனை தன் குழந்தைகளின் எதிர்காலத்தை நோக்கி ஏங்குகின்ற இம் மனிதனை உயர்த்தும் பணியில் நாம் ஈடுபட வேண்டும். இம் மனிதன் தருகின்ற வரிப்பணத்திலேதான் கோட்டையாய், கொடிமரமாய், பாதையாய், பள்ளிக்கூடமாய் மலர்கிறது. இவர்கள்தான் இச்சமுதாயத்தின் முதுகெலும்பாவார்கள். ஒரு காலத்தில் வெள்ளிச் கரண்டியில் உணவு உண்பவர்கள் தான் படிக்க முடியும் என்ற நிலைமாறி குடிசையில் வாழும் சாமானிய மனிதனின் குழந்தைகளும் படிக்க முடியும் என்ற நிலை இப்போது வந்திருக்கிறது என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்னார்கள். அண்ணா அவர்கள் எண்ணியதை, செய்ய நினைத்ததை செயல்வடிவில் கொண்டு வந்தவர் முதல்வர் புரட்சித் தலைவர் ஆவார்கள். அண்ணா அவர்கள் கண்ட கனவை நம் முன்னால் நினைவாக்கி புதிய சகாப்தத்தை தோற்றுவித்தவர் முதல்வர் புரட்சித் தலைவர் ஆவார்கள். இந்த அரசு ஏழை எளிய, நடுத்தர, விவசாய, பாட்டாளி மக்களின் அரசு என்பதை நிரூபித்துக் காட்டியவர் புரட்சித் தலைவர் ஆவார்கள்.

இந்தக் நிதி ஒதுக்கீடு சட்ட முன்வடிவை பாராட்டும் வாய்ப்பை பெற்ற நான் என்னுடைய ஆலங்குடி தொகுதிக்கான கோரிக்கைகளையும் முன்வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்

[திரு. பெ. திருமாறன்] [1980 ஜூலை 30

ஆலங்குடி தொகுதியில் திருவரங்குளம் ஒன்றியத்திலுள்ள வம்பன், உள்ளிட்ட மாஞ்சன் விடுதி, மலரான்பட்டி, வேப்பங்குடி, மாங்கனாம்பட்டி, இம்மாண்டான்பட்டி, திருக்கட்டளை, தேத்தாம்பட்டி, கொத்தக்கோட்டை, பாப்பான் விடுதி போன்ற இடங்களில் 'மல்லிகை' மலர், தோட்டங்களில் பயிரிடப்பட்டு அதிக அளவில் புதுக்கோட்டை 'பூ' மார்க்கெட்டில் விற்பனை செய்யப்பட்டு வருகின்றது. இம்மலர்களைக் கொண்டு வம்பனில் மல்லிகை மலரிலிருந்து எசன்ஸ் எடுக்கும் தொழிற்கூடம் ஒன்றை அரசு ஏற்படுத்தித் தந்தால் இப்பகுதியிலுள்ள மக்கள் நகர்புறம் நோக்கி வாழ்வு நடத்த செல்வது தடைபடுவதோடு, பலருக்கு வேலை கிடைப்பதோடு, பல ஏக்கர் புன்செய் தோட்டங்கள் சாகுபடிக்கு ஏற்ற நிலமாவதோடு, மக்களின் குறை தீர்க்கப்படுகின்றது. இந்த நல்ல திட்டத்தை அரசு உடன் நிறைவேற்ற வேண்டுகிறேன்.

என்னுடைய ஆலங்குடி தொகுதியில் பல ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலத்தில் 'முந்திரி'யை அரசு சாகுபடி செய்துள்ளது. இவற்றிலிருந்து முந்திரி பருப்பு, முந்திரி எண்ணெய் இன்னும் பல பொருள்கள் தயாரிக்க அரசு தொழிற்சாலை ஏற்படுத்த வேண்டுகிறேன்.

பல ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலத்தில் வேர்க்கடலை சாகுபடி செய்யப்பட்டு, ஆலங்குடியிலுள்ள நூற்றுக்கு அதிகமான 'தனியார்' கடலை மில்களில் உடைக்கப்பட்டு, எண்ணெய் எடுக்கப்பட்டு, நாட்டின் பல பகுதிகளுக்கு அனுப்பப்படுகிறது. இவற்றை அரசு மனதில் கொண்டு, அரசு 'வனஸ்பதி' தொழிற்சாலை ஒன்றை ஏற்படுத்தினால், பலருக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும். மேலும், விவசாயிகள் இத்தொழில் மூலம் நன்மை அடைவார்கள். அரசு இத்தொழிற்சாலைக்கு வகை செய்ய வேண்டுகிறேன். நீண்ட நாள் கோரிக்கையிலுள்ளது இத்திட்டம்.

திருவரங்குள ஒன்றியத்தில் சிலோன் அகதிகளுக்கு இரண்டு காலனிகள் கட்டப்பட்டு அவர்கள் குடியேற்றப்பட்டுள்ளனர். இப்பகுதி மேட்டு நிலமாக இருப்பதால், வெட்டப்பட்ட ஆழ் கிணறுகளில் தண்ணீர் இல்லாமல் உள்ளது. குடிநீர் வசதியில்லாமலும், இவர்களுக்கு தரப்பட்ட நிலங்கள் விவசாயத்திற்குப் பயனின்றி இருப்பதால், அகதிகள் வறுமையால் வாடுவதோடு, உணவின்றி பலர் இறந்திருக்கின்றார்கள். இம்மக்களுக்கு அரசு நல்லெண்ணம் கொண்டு உதவ முன்வர வேண்டுமென்று வேண்டுகிறேன்.



1980 ஜூலை 30] [திரு. பெ. திருமாறன்]

ஆலங்குடி தொகுதியான இப்பகுதிகளில் பாலையூர், பொம்மனாத புரம், கொத்தமங்கலம், ஈசுவுபட்டி, கலிங்கப் பட்டி, செம்படவயல் போன்ற இவ்வூர்களுக்கு குடிநீர் வசதி இல்லை. மேலும் அருகில் கிடைக்கும் தண்ணீர் உப்பு நீராக இருப்பதாலும் பயனற்று உள்ளது. இவ்வூர்களிலிருந்து 4 மைல் தொலைவிலுள்ள முத்துப்பட்டினம் கிராமத்தில் நல்ல நீர் கிடைப்பதால், அங்கிருந்து குழாய் வழியாகத் தண்ணீர் கொண்டு வந்து இம்மக்களின் நெடுநாள் கனவினை நிறைவேற்ற வேண்டுகிறேன்.

ஆலங்குடியிலுள்ள மருத்துவமனையில் போதிய அளவிற்கு படுக்கை அறைகள், படுக்கைகள் இல்லை. மேலும், 'மகப்பேறு' காலத்தில் 20 மைல் தூரத்திலிருந்து புதுக்கோட்டைக்குக் கொண்டு செல்ல வேண்டியுள்ளது. தொகுதி மையத்தில் உள்ள ஆலங்குடியில் அவசரக்கால மகப்பேறு பார்க்கும் அளவில் மருத்துவ மனையை விரிவுபடுத்த வேண்டுகிறேன்.

புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கியிலிருந்து சிலட்டூர், தொழுவங்காடு, சிட்டங்காடு, பரவக்கோட்டை, மரமடக்கி வழியாக ஆலங்குடி வரை பஸ் ஒன்று விடவேண்டும். நீண்ட காலமாக இப்பகுதிகளில் வாழும் மக்கள் போக்குவரத்து வசதியின்றி மிகவும் இன்னல் அடைகிறார்கள். எனவே, அறந்தாங்கியிலிருந்து ஆலங்குடி வரை மேற்சொன்ன ஊர்களின் வழியாக பஸ் போக்குவரத்திற்கு வழிவகை செய்ய வேண்டுமாய் அரசை வேண்டுகிறேன்.

ஆலங்குடி தொகுதியிலுள்ள வடகாடு, மாங்காடு, அணைவயல், செரியலூர், சீர்மங்கலம், நகரம், கொத்தமங்கலம், பனங்குளம், குலமங்கலம், திருநாலூர், மரமடக்கி, கூழையன்காடு, கரம்பக்காடு, நெடுவாசல் முதலிய கிராமங்களில் பனை மரம் அதிகமாயிருப்பதால், இப் பகுதியில் பனை வெல்லம் தயாரித்தல், பனை ஓலை மூலம் கூடை முடைதல், பனை நார் மூலம் பல பொருள்கள் தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்று அமைத்துத் தர வேண்டுகிறேன்.

புதுக்கோட்டையிலிருந்து கறம்பக்குடி வழியாக வந்து ரெகுநாதபுரத்திலிருந்து பாப்பாபட்டி, சிளாங்காடு, முதலிப் பட்டி வழியாக தஞ்சை மாவட்டத்தைச் சார்ந்த ஒரத்தநாடு தாலூகாவிலுள்ள கோட்டைத் தெரு வரை பஸ் போக்குவரத்து தேவை. இதனால், இப்பகுதியிலுள்ள மக்கள் பெரும் பயன் அடைவார்கள்.

[திரு. பெ. திருமாறன்] [1980 ஜூலை 30

கருப்பப்பட்டி, வெள்ளான் விடுதி, வலங்கொண்டான் விடுதி, அதிரான்விடுதி, மீனம்பட்டி, மோளுடையான்பட்டி ஆகிய கிராமங்கள் எந்தவிதமான போக்குவரத்து வசதியும் இன்றி இருப்பதோடு, மருத்துவ வசதியோ, பள்ளி வசதியோ இல்லாமல் மலைவாழ் மக்களைப் போன்று வாழ்கின்றார்கள். இப்பகுதி மக்களுக்கு எல்லா வசதிகளையும் செய்து தர வேண்டு கிறேன்.

புதுக்கோட்டை மாவட்டத்தில் என்னுடைய தொகுதியான ஆலங்குடியைச்சார்ந்த வடகாடு மாங்காடு, கொத்தமங்கலம், அணைவயல், செரியலூர், குலமங்கலம், பணங்குளம் போன்ற கிராமங்களில்தான் தமிழ்நாட்டிலேயே அதிக அளவில் உயர்ந்த ரகமான பலாப்பழம் விளைகின்றது. எனவே, இங்கு பலாப் பழம் ஜூஸ் எடுக்கும் தொழிற்சாலை ஒன்று ஏற்படுத்தினால் இப்பகுதி மக்கள் நல்ல பயன் பெறுவார்கள். வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் சாத்தியக்கூறுகளும் உண்டு. எனவே, ஆலங்குடி தொகுதியில் ஒரு ஜூஸ் எடுக்கும் தொழிற்சாலை அமைத்துத் தரும்படி அரசை வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

திருவோணம் சட்ட மன்ற உறுப்பினர் திரு சிவஞானம் அவர்கள் தன்னுடைய தொகுதியில் மிக பாமர நிலையில் வாழும் முத்தரையர்களது நிலை உயர பாடுபடுவேன் என்று சமீபத்தில் கூறியுள்ளார்கள். என்னுடைய தொகுதியிலும்கூட முத்தரை யர்கள், அரிசன மக்கள் பலர் வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழ்ந்து வருகின்றனர். புதுக்கோட்டை மாவட்டத்திலும், இம்மக்களின் நிலை மிகவும் பரிதாபத்திற்குரியதாகவே இருக் கிறது. பரவலாக தமிழகத்தில் வாழும் முத்தரையர்களின் நிலை மிகச் சாதாரணமாகவே உள்ளது. சுமார் $1\frac{1}{4}$ கோடி மக்கள் தொகையைக் கொண்ட பெரு இனமாக முத்திரையர்கள் இருந்தாலும், மிகப் பெரும்பாலோர் அவல நிலையில் வாழ்ந்து வருகின்றனர். இவர்களின் நிலை உயர அரசு தனிக் கவனம் செலுத்தி முத்தரையர்கள், அரிசனங்கள் நலங்காக்க வேண்டும் என்று வேண்டுகிறேன். நன்றி. வணக்கம்.

[பிற்பகல் 12-20]

திரு. கெ. சொக்கலிங்கம் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1980-81ஆம் ஆண்டுக்கு நிதி ஒதுக்கீடு கோரி மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் நிதி ஒதுக்க மசோதாவைக் கொண்டு வந்திருக்கிறார்கள். நான் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விழைகிறேன். இந்த மாமன்றத்தில் பல தடவை பல பிரச்சினை களைப் பற்றிப் பேசியிருக்கிறோம். கிட்டத்தட்ட மூன்று ஆண்டுகாலமாக அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்து பல பிரச்சினைகளை பல மானியங்களிலே இந்த மாமன்றத்தில் பேசியிருக்கிறேன். பல கோரிக்கைகளை வைத்திருக்கிறேன். ஆனால் பேசிப் பேசி இதுவரை ஒரு பயனும் அடையவில்லை. என் தொகுதியைப் பொறுத்தமட்டில் நான் அப்போதிருந்த சபாநாயகர் அவர்களைச் சுட்டிக் காண்பித்து பேசியிருக்கிறேன். 'ஏற்கெனவே நீங்கள் அந்தப் பகுதியின் சட்ட மன்ற உறுப்பினராக இருந்திருக்கிறீர்கள்' என்று சொல்லி திருப்போரூர் தொகுதி பின் தங்கிய பகுதி என்று அங்குள்ள குறைபாடுகளைச் சுட்டிக்காட்டிப் பேசியிருக்கிறேன். இது வரை பலன் கிடைக்கவில்லை. இப்போது நான் அதிகமாகச் சொல்லாமல் ஒருசில வார்த்தைகளைச் சொல்லி முடிக்கலாம் என்று நினைக்கிறேன்.



1980 ஜூலை 30] [திரு. கெ. சொக்கலிங்கம்]

நம்முடைய அவை முன்னவராக நாவலர் அவர்கள் வந்திருக் கிறார்கள். உள்ளபடியே இந்த நிதி ஒதுக்கீடு விஷயத்தில் என்னுடைய திருப்போரூர் தொகுதிக்குத் தாராளமாக நிதி ஒதுக்குவார் என்று நம்புகிறேன். என்னுடைய தொகுதி பின் தங்கிய தொகுதி. சாலைகள் மிக மோசமாக உள்ளன. பல்லாண்டு காலமாக சாலைகள் புதுப்பிக்கப்படவில்லை. குறிப் பாக ஒன்றை மட்டும் குறிப்பிட விரும்புகிறேன். அடையாற்றி லிருந்து திருப்போரூர் செல்லும் வழியில் கழிப்பட்டுர் என்ற பாலம் இருக்கிறது. அந்தப் பாலம் ஆண்டுக்கு ஒரு முறை இடிந்து விழுகிறது. இடிந்து விழும் பாலத்தை அங்கிருக்கும் துணை அமைப்பாளர் இரண்டு பைகளைப் போட்டு மண்ணைப் போட்டு மூடிவிடுகிறார். இதைப் பற்றிப் போன சட்ட மன்றக் கூட்டத்திலேயும் சுட்டிக்காட்டியிருக்கிறேன். அங்கே ஒரு பெரிய பாலம் கட்ட வேண்டும், நிரந்தரமான பாலம் கட்டினால்தான் தொடர்ந்து சர்க்காருடைய பணம் வீணாகாமல் இருக்கும். ஆண்டுக்கு ஒரு முறை மண்ணைப் போட ஆளுங் கட்சிக்காரருக்கு கொடுப்பதற்காக வேலையைத் தொடருவதற் காக அதை வைத்திருக்கிறார்களா என்று கேட்க விரும்பு கிறேன். இந்த நிலையை இந்த அரசு உடனடியாகப் போக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் திருப்போரூர் ஒன்றியத்தில் பல சாலைகள் இருக்கின்றன. தையூர் கிராமம் அரிசனங்கள், தாழ்த்தப்பட்ட மக்கள் கொண்ட கிராமம். அந்தக் கிராமத் திற்கு சாலைப் போக்குவரத்து வசதியும் இல்லை. மருத்துவ வசதியும் இல்லை. தண்ணீர் வசதியும் இல்லை. பலமுறை அதுபற்றிக் கூறியிருக்கிறேன். அவை முன்னவர் அவர்கள் உடனடியாக அதைப் போக்க எதிர்க்கட்சி சட்டமன்ற உறுப்பினர் என்று கருதாமல் மக்களுக்கு நன்மை கிடைக்கவேண்டு மென்ற வகையில் போதிய நிதி ஒதுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. கெ. சொக்கலிங்கம்] [1980 ஜூலை 30

பள்ளிக்கூடங்களும் அப்படித்தான் இருந்துகொண்டிருக்கின்றன. கல்வி மானியத்தில் புதிய பள்ளிக் கட்டிடங்கள் கட்ட நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது. என் பகுதியில் பஞ்சாயத்து யூனியன் பள்ளிக்கூடங்கள் பழுதடைந்து கிடக்கின்றன. அதை நான் பஞ்சாயத்துத் தலைவராக இருந்த காலத்திலிருந்து பார்த்து வருகிறேன். பல பள்ளிக்கூடங்கள் அப்படித்தான் இருக்கின்றன. நான் அந்தப் பள்ளிக்கூடங்களைப் பார்வையிடச் சென்ற நேரத்தில் பல பள்ளிக்கூடங்களில் கதவு இல்லை, சன்னல் இல்லை, தரை சரியாக இல்லை. இந்த நிலைமைகள் பற்றி நான் மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்தில் கூட விரிவாக எடுத்துரைத்திருக்கிறேன்.

அவைகளையும் இந்த அரசு கவனிக்கவில்லை, அவைகளையெல்லாம் கவனிக்கிற முறையிலே இனிமேலாவது கூடுதல் நிதி ஒதுக்கி செம்மைப்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்

அடுத்து ஏரிகள் பராமரிப்பு, என்னுடைய தொகுதியில் பி. டபிள்யு.டிக்குச் சொந்தமான ஏரிகள் பல இருக்கின்றன. அவைகள் ஆழப்படுத்தப் படுவதில்லை. எந்த ஒரு ஏரியாவது இதுவரையிலே ஆழப்படுத்தப்பட்டு இருக்கிறதா என்றால் இல்லை. அவ்வாறு ஆழப்படுத்தாததின் காரணமாக போதிய தண்ணீர் தேங்குவதில்லை, அதன் காரணமாக விவசாயிகளுக்குப் போதிய தண்ணீர் கிடைக்கவில்லை. திருப்போரூர் ஒன்றியத்தில் மானாமதி என்ற கிராமத்திலே உள்ள ஏரியை ஆழப்படுத்த வேண்டுமென்ற முறையிலே 4 ஆண்டுகளுக்கு முன்னாலே அதற்காக மதிப்பீடும் போடப்பட்டு அதற்காக மனுவும் கொடுக்கப்பட்டு, இன்றுவரையிலே அதற்காக எஸ்டிமேட் தான் போடப்பட்டிருக்கிறதே தவிர வேலை தொடங்கப்படவில்லை. ஏன் என்று அதிகாரிகளைக் கேட்டால் என்ன செய்வது, பணம் இல்லை, பணம் இல்லை என்று சொல்கிறார்கள், எந்த நேரத்திலே கேட்டாலும் பணம் இல்லை, பணம் இல்லை என்று சொல்கிறீர்களே என்று கேட்டால், நாங்கள் என்ன செய்வது அரசாங்கம் ஒதுக்கவில்லை என்று தான் சொல்கிறார்கள். மானாமதி கிராமத்திலே உள்ள ஏரி பெரிய ஏரி. அதை ஆழப்படுத்தினால் ஏறத்தாழ 5, 6 ஆயிரம் விவசாயிகள் பலன் அடைவார்கள், ஆகவே உடனடியாக அவை முன்னவர் அவர்கள் அதற்கு ஆவன செய்வார்கள் என்று நம்புகிறேன்.

அடுத்து, சமூக நலன் பிரச்சினைகளைப்பற்றிப் பேசலாம் என்று இருந்தேன், ஆனால் ஏதோ எனக்கு வாய்ப்புக் கிட்டவில்லை. கலைஞர் காலத்திலே — யார் தொழு நோயாளிகளுக்கு உற்ற நண்பர்களாக இருந்து அவர்களுக்கு இல்லங்களைக் கட்டிக்கொடுத்தாரோ அவரை தங்கள் தலைவராக, துணைவராக அவர்கள் எண்ணிக்கொண்டிருக்கிறார்கள் — என்னுடைய



1980 ஜூலை 30] [திரு. கெ. சொக்கலிங்கம்]

தொகுதியிலே கலைஞர் அவர்கள் 400 தொழு நோயாளிகள் இருக்கின்ற முறையிலே இல்லத்தை உருவாக்கினார்கள். அவர்களுக்கு கலைஞர் காலத்திலே சரியாக உணவு கிடைத்தது, இப்போது உணவுகூட அளவுக்குக் கொடுக்கப்படுவதில்லை, குறைக்கப்பட்டிருக்கிறது அந்த இல்லத்திலே 400 பேர்கள் தான் இருக்கலாம் என்று குறிப்பிலே கூட இருக்கிறது, ஆனால் இன்றைக்கு அங்கே 600 பேர்கள் இருந்து கொண்டிருக்கிறார்கள். 1975 ஆம் ஆண்டிலே ஆரம்பிக்கப்பட்ட இல்லம் தான் இருக்கிறதே தவிர புதிதாக இல்லம் கட்டப்படவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இதையும் அரசாங்கம் கவனத்திலே கொள்ளவேண்டும்.

முட்டக்காடு கிராமத்திலே உடல் ஊனமுற்றோருக்கு கலைஞர் காலத்திலே தொழிற் பயிற்சி நிலையம் ஏற்படுத்தப்பட்டது. ஆனால் அவர்களுக்கு இப்போது சம்பளம்கூட சரியாகக் கொடுக்கப்படுவதில்லை. மாதாமாதம் அவர்களுக்குச் சம்பளம் ஏன் கொடுக்கவில்லை என்று கேட்டால் அவர்கள் வண்டியை விற்றுத்தான் சம்பளம் கொடுக்க வேண்டுமென்று சொல்கிறார்கள். 7 ஆம் தேதி கொடுக்கப்படவேண்டிய சம்பளம், 25 ஆம் தேதிதான் கொடுக்கப்படுகிறது சில நேரங்களிலே 2 மாதம் கழித்துத்தான் கொடுக்கிறார்கள். அந்த நொண்டிகளுக்கு சம்பளம் கொடுக்கமுடியவில்லையாம், வண்டியை விற்றுத்தான் கொடுக்கவேண்டுமென்று சொல்கிறார்களாம் என்ற நிலைமை இருந்தால் அவர்கள் எப்படி வாழமுடியும்? ஆகவே அந்தக் குறையைப் போக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தொழு நோயாளிகள் மட்டுமல்ல, உடல் ஊனமுற்றோர் மட்டுமல்ல, மற்றவர்களும் கூட கஷ்டப்படுகிறார்கள். உடல் ஊனமுற்றோருக்கு தொழில் பயிற்சி நிலையம் கட்டுவதற்காக நிலத்தை பக்கத்திலே ஆர்ஜிதம் செய்தும்கூட கட்டப்படாமல் இருக்கிறது. அதைப்பற்றி அமைச்சரிடம் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அதையும் கவனித்து ஆவன செய்யவேண்டும். அங்கே இருந்து பஸ்ஸிலே அவர்கள் செல்லமுடியவில்லை, மார்கெட்டிற்குச் செல்வதற்குகூட வண்டி இல்லை, வேலைக்குப் போக வேண்டுமென்றால் வண்டியில்லை. ஆகவே இதையெல்லாம் கவனிக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியிலே பஸ் பிரச்சினை. ஒரு பெரிய குறை என்னவென்றால் பெருநகர் பகுதி பாதியாகவும், புறநகர் பகுதி பாதியாகவும், பெருநகர் பகுதி, புறநகர் பகுதி இரண்டும் சேர்ந்து இருக்கிற காரணத்தால் பெரு நகர்ப் பகுதி பஸ், புறநகருக்குள்ளே செல்ல முடியாது என்று புறநகர் பகுதியினர் சொல்கிறார்கள், ஈட்டுக்கு அதிகப் பணம் கொடுக்கவேண்டுமென்ற முறையிலே சொல்கிறார்கள். இதைப்பற்றி

[திரு. கெ. சொக்கலிங்கம்] [1980 ஜூலை 30

நான் அமைச்சர் அவர்களிடமும் கொடுத்திருக்கிறேன். சைதாப்பேட்டை — நாவலூர் ரூட்டிலே 19-பி பஸ் செல்லுகிறது, அதை கேளம்பாக்கம் வரையிலே விடுவதற்கு அரசு ஆவன செய்ய வேண்டும். அதைப்போலவே 51-ஜே மெட்ரோ பாலிட்டன் நகர் வண்டி. அதை குளப்பாக்கம் வரையிலே விடுவதற்கு ஏற்பாடுகளைச் செய்யவேண்டும்.

[பிற்பகல் 12—30]

தற்போழுது மறைமலை நகர் என்பது வளர்ந்து கொண்டிருக்கிறது. அது கலைஞர் காலத்தில் உருவாக்கப்பட்டது. இப்பொழுது பல தொழிற் சாலைகள் உருவாகிக்கொண்டிருக்கின்றது. அந்தத் தொழிற் சாலைகளில் வேலை பார்க்கின்ற தொழிலாளர்கள் போய் வருவதற்கான பஸ் வசதி இல்லை என்பதை அமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

பிராட்வேயிலிருந்து செங்கல்பட்டுக்கும், மதுராந்தகத்திற்கும் செல்கின்ற பஸ்களில் மத்தியிலே இறங்குகின்றவர்கள் போக முடியாத நிலை இருக்கிறது. எனவே 18-ஏ என்ற பஸ்ஸை மறைமலை நகர் வரையில் விட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதற்கு அமைச்சரவர்கள் ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். 51-சி பஸ்ஸை கேளம்பாக்கம் வரையில் விட வேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

* திரு. பொ. விஜயராகவன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவின் மீது என்னுடைய ஒருசில கருத்துக்களைக் கூறிக்கொள்ள நான் முற்படுகிறேன். ஒட்டுமொத்தமாக அரசாங்க இலாக்காக்களுக்கு நாம் இன்றைக்கு நிதி ஒதுக்குவதற்கான சட்ட முன்வடிவை நிறைவேற்றுவதற்காக அமர்ந்திருக்கிறோம். அப்படி வருகின்ற பொழுது இலாக்காக்கள் தங்களுக்கு ஒதுக்கப்படுகின்ற பணத்தைச் சரியாக, முழுமையாகச் செலவழிக்க வேண்டும். அப்படி முழுமையாகச் செலவழித்தால்தான் மக்களுக்கான வளர்ச்சிப் பணிகள் குறித்து சரியானவகையில் மக்களுக்குப் போய்ச் சேருகின்ற நிலைமை வரும். அப்படியில்லாமல், பணத்தை வாங்குவது, வாங்கிய பணத்தை முழுமையாகச் செலவழிக்காமல், சரண்டர் செய்கின்ற நிலைமைகளைப்பற்றிப் பலமுறை சுட்டிக்காட்டப்பட்ட போதிலும், அந்த நிமைலமைகளை இப்பொழுது நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நம்முடைய, Comptroller and Auditor General of India 1977—78 ஆம் ஆண்டு அறிக்கையில் பல விஷயங்களைச் சொல்லியிருக்கிறார்கள். பல இலாக்காக்கள் வாங்கிய பணத்தை, முழுமையாகச் செலவழிக்கவில்லை என்பதை அதிலே சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால்,



1980 ஜூலை 30] [திரு. பொ. விஜயராகவன்]

Milk suply scheme-க்கு 1,05,90,000 ரூபாய் ஒதுக்கப்பட்டதில் 17,70,000 ரூபாய் ஏறக்குறைய 26 சதவீதம் செலவழிக்கப்படாமல் "சரண்டர்" செய்யப்பட்டிருக்கிறது. அதைப்போல, Capital outlay on public health, sanitation and water suply-க்கு 72,90,000 ரூபாய் ஒதுக்கப்பட்டும், 6,22,000 ரூபாய் மட்டும்தான் செலவழிக்கப்பட்டு, 91 சதவீதம் பணம் செலவழிக்கப்படாமல் இருக்கிறது. இன்னும் சொல்லப்போனால், Capital outlay on Irrigation என்று சொல்லப்படும் அந்தக் கணக்கின்படி 31,52,17,000 ரூபாய் ஒதுக்கப்பட்டதில் 13,19,76,000 ரூபாய் செலவழிக்கப்படாமல், ஏறக்குறைய 42 சதவீதம் செலவழிக்கப்படாமல் இருக்கிறது. Capital outlay on public works and Buildings இல் 41 சதவீதம் பணம் செலவழிக்கப்படாமல் சரண்டர் செய்யப்பட்டு இருக்கிறது. Capital outlay on Roads and Bridges-இல் 35 சதவீதம் பணம் செலவழிக்கப்படாமல் சரண்டர் செய்யப்பட்டிருக்கிறது. 1977—78 ஆம் ஆண்டுக்கு, Comptrolar and Auditor General of India அவர்கள் இந்த அறிக்கையில் தெரிவித்திருக்கிறார்கள். அது மட்டுமல்ல, Capital outlay on Agriculture என்ற அந்தக் கணக்கின்மீது 12,34,47,000 ரூபாய் ஒதுக்கப்பெற்று, அதில் 1,92,35,000 ரூபாய் செலவழிக்கப்பட்டு, சுமார் 84 சதவீதம் பணம் செலவழிக்கப்படாமல் இருந்திருக்கிறது. அது அந்த வருஷம் மட்டும்தானா என்றால் அந்த வருஷம் மட்டுமல்ல, 1976—77 இலும் 19,75,18,000 ரூபாய் — ஏறக்குறைய 92 சதவீதம் செலவழிக்கப்படாமல் திருப்பி சரண்டர் செய்யப்பட்டிருக்கிறது. 1975—76 இல் 8,95,09,000 ரூபாய், 1974—75 இல் 2,12,26,000 ரூபாய் என்று இப்படி ஒதுக்கப்பட்ட பணத்தை முழுமையாகச் செலவழிக்காமல் இருக்கிறார்கள். நாம் பணத்தை ஒதுக்கீடு செய்து கொண்டிருக்கிறோம். ஆனால் அவர்கள் இப்படி சரண்டர் செய்யும் நிலைமை வந்து கொண்டிருக்கிறது. இதன் காரணமாக, உண்மையிலேயே பணம் தேவைப்படுகின்ற இலாக்காக்களுக்கு நம்மால் பணத்தை ஒதுக்க முடியாமற் போகிறது. இப்படிச் செய்வதால் மக்களுக்குத் தேவையான உடனடியான வளர்ச்சிப் பணிகள் நின்று போய்விடும் என்பதைச் சர்க்காரின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். அதே நேரத்திலே இதுபோன்ற நிலைமைகள் இனிமேல் வராமல் பார்த்துக்கொள்ள வேண்டுமென்று இந்த அரசாங்கத்தைக் கேட்டுக்கொண்டு, இதில் எச்சரிக்கையாக இருக்க வேண்டுமென்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். Capital cutlay on Agriculture என்பதில் தொடர்ச்சியாக மூன்று, நான்கு வருடங்களாக மிகப் பெரிய அளவிற்குப் பணம்அப்படியே "சரண்டர்" செய்யும் சூழ்நிலை வருகிறது.

ஆகவே, இதற்கான காரணம் என்ன, இதற்கான சூழ்நிலை என்ன என்பதை ஆராய்ந்து தக்க நடவடிக்கை எடுப்பதோடு மட்டும் அல்லாமல், இதுபோன்ற அறிக்கைகள் வைக்கின்றபொழுது

[திரு. பொ. விஜயராகவன்] [1980 ஜுலை 30

நாம் அதை விவாதிப்பது என்று சொன்னால், நாம் போஸ்ட் மார்ட்டம் செய்கிறோம் என்றுதான் பொருள். ஆகவே இலாக்காகளுக்கு வழங்கப்படுகிற பணம், ஒழுங்காக செலவு செய்யப்படுகிறதா, மக்களுக்கு உதவுகின்ற அளவுக்கு அவை செலவு செய்யப்படுகிறதா என்பதைத் கண்காணித்து உற்சாகப்படுத்து வதற்காக, சப்ஜக்ட்ஸ் கமிட்டி என்று சொல்லப்படுகிற அல்லது கன்சல்டேடிவ் கமிட்டி என்று சொல்லப்படுகிற குழுக்கள் அமைத் தால்தான் அவைகள் ஒழுங்காகச் செயல்படுகின்றனவா என்ப தைத் சுட்டிக் காட்டுவதற்கும், நிவாகத்தைத் திறமையாக இயக்கு வதற்கும் சட்டமன்ற உறுப்பினர்கள் உறுதுணையாக இருக்கிறார் கள் என்ற வகையில் அமையும் என்பதை நான் இங்கே சுட்டிக் காட்ட விரும்புகிறேன். Comptroller and Auditor General of India 1977-78 அறிக்கையில் 32-வது பக்கத்தில் ஒரு கருத்து சொல்லி யிருக்கிறார்கள். மத்திய சர்க்காரிடமிருந்து ரூ. 1 கோடியே 78 இலட்சமும், இந்த மாநில சர்க்காரிடமிருந்து ரூ. 2 கோடியே 96 இலட்சமும், பிப்ரவரி மாதம் 29 ஆம் தேதி Directorate of Town Planning கடனாக வாங்கியிருக்கிறது.

கடனாக பெற்ற பணம், ஏறத்தாழ 8, 9 மாதங்கள் இன் னொரு வங்கியில் தூங்கியிருக்கிறது. கடனாக வாங்கிய தொகை யைப் பயன்படுத்துவதற்குப் பதிலாக, வாங்கிய தொகைக்கு வட்டி செலுத்த வேண்டிய சூழ்நிலையில், இன்னொரு பாங்கில் அந்தத் தொகையைப் போட்டு வட்டி வாங்குகிற சூழ்நிலையிருந் திருக்கிறது என்பதைச் சுட்டிக்க காட்டியிருக்கிறார்கள். இலாக் காக்கள் இதுபோன்ற தவறுகளைச் செய்யும்போது, அதைத் திருத்துவதற்கு இந்தச் சர்க்கார் முயற்சி செய்ய வேண்டும். அதற்கு யார் பொறுப்பானவர்களோ, அவர்கள் எவ்வளவு பெரியவர்களாக இருந்தாலும் அவர்கள்மீது தக்க நடவடிக்கை கள் எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

நீர்ப்பாசனத் துறையைப் பொறுத்தமட்டில் ஒரு சில கருத்துக் களை இந்த விவாதத்தில் சொல்லலாம் என்று கருதுகிறேன். சித் தாறு-பட்டணங்கால் அணையிலிருந்து இன்றைக்குத் தண்ணீர் விடப்பட வில்லை. அதில் தண்ணீர் குறைவாக இருக்கிறது என்று காரணம் சொல்லப்பட்டுள்ளது. 4, 5 நாட்களுக்கு அந்த அணை யைத் திறந்து விட்டு, பழைய குளங்கள் நிரம்ப வழிவகைகளைச் செய்ய வேண்டும். காரணம், பாசனத்திற்கு மட்டுமல்லாமல், பல இடங்களில் இந்த அணைத் திறக்கப்படவில்லையென்ற கார ணத்தால், குடி தண்ணீர் பெற வாய்ப்பில்லை. வசதியில்லை. மழையில்லாததால் வறட்சி நிலவுகிறது. ஆகவே, குடிதண்ணீர் இல்லாத நிலைமை அங்கு ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, 4, 5



1980 ஜுலை 30] [திரு. பொ. விஜயராகவன்]

நாட்கள் அந்த சித்தாறு-பட்டணங்கால் அணையைத் திறந்து விட்டால், பழைய குளங்கள் நிரம்பும், குடிதண்ணீர் பிரச்னை வராது என்று இந்தச் சந்தர்ப்பத்திலே சுட்டிககாட்ட கடமைப் பட்டிருக்கிறேன்.

[மாண்யுமிகு மாற்றுத்தலைவர் தலைமை]

சித்தாறு பட்டணங்கால் அணையைத் திறந்து விட்டால், அந்த வெள்ளம் கடைமடைப் பகுதிக்கு வருவது கிடையாது. ஏறத்தாழ 200 கன அடி வெள்ளம் வரவேண்டும். ஆனால், 200 கன அடி கடைமடைப் பகுதிக்கு வராத நிலைமை இருக்கிறது. அந்தத் திட்டம் பல ஆண்டுகளாகச் சரியாக பராமரிக்கப்படாத காரணத்தால், கடைமடைப் பகுதிகளுக்காகத் திறந்து விட்டா லும், கீழ்மடையிலே உள்ள கிராமங்களிலுள்ள விவசாயிகள் தண் ணீர் பெற முடியாமல் மிகுந்த தொல்லைக்குள்ளாகிறார்கள். உதாரணத்திற்கு, மிடாலம், கீழ் மிடாலம், கிள்ளியூர் கீழ்குளம், பைங்குளம், ஆறுதேசம் போன்ற ரெவினியூக்கிராமங்களில் விவசாயி கள் மிகுந்த தொல்லைக்குள்ளாகிறார்கள் என்பதை இந்தச் சந்தர்ப்பத்திலே நான் சொல்ல ஆசைப்படுகிறேன்.

நெய்யாறு, இடதுகரை சானலில் இருக்கிற சூழ்நிலையைநான் சொல்ல விரும்புகிறேன். அந்தச் சானலில் பல இடங்களில், 3, 4 ஆண்டுகளாக தண்ணீர் வரவில்லை. தண்ணீர் திறந்து விட்டா லும் கூட. அந்த சானலை நல்லபடியாக பராமரித்து சிமெண்ட் லைனிங் போட்டால்தான் கடைசிவரை தண்ணீர் செல்ல முடியும். ஆகவே, அந்த சானலை நவீனப்படுத்த வேண்டும். வாவறை, மங்காடு போன்றபகுதிகளில் தண்ணீர் வந்து மூன்று ஆண்டுகளுக்குமேல் ஆகிறது என்று அங்கே சொல்கிறார்கள். அதை நிவர்த்தி செய்யவேண்டும்.

குடிநீர் பிரச்சினையைப் பொறுத்தவரையில், கருங்கல் பேரூராட்சி, கப்பியாறை பேரூராட்சி, பாலூர் ஊராட்சி, திப்பிர மலை ஊராட்சி ஆகிய பகுதிகளுக்கென ஒட்டுமொத்தமான குடி நீர்த் திட்டம் அரசாங்கத்தின் பரிசீலனையில் இருப்பதாக அறிகி றேன். அதை உடனடியாக நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கிள்ளியூர், உசரத்துவளை, ஐரேனிபுரம், முளங்குளி, மங்காடு வாவறை போன்ற பேரூராட்சிகளில் இருக்கிற குடிதண்ணீர் திட் டங்கள் சரிவர செயல்படாமல் இருப்பதை நான் அரசுக்குச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். அதை அரசு சரிசெய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. பொ. விஜயராகவன்] [1980 ஜூலை 30

பொதுவாக, கன்னியாகுமரி மாவட்டம் தொழில் துறையில் மிகவும் பின் தங்கிய மாவட்டம். அம்மக்களுடைய வாழ்க்கைக்கு ஒரே-வழி தொழில் விவசாயம்தான். அந்த விவசாயத்திற்குத் கூட, வழியில்லாத நிலைமை தண்ணீர் பற்றாக்குறை காரணமாக ஏற்பட்டு விடுகிறது. இருக்கிற சானல்களில் ஷட்டர்ஸ் கிடையாது. மடைகள் ஒழுகிக்கொண்டிருக்கின்றன. ஆகவே, அவைகளை எல்லாம் அரசு நிவர்த்திக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

[பிற்பகல் 12-40]

இன்றைக்கு இருக்கக் கூடிய ஒரு சூழ்நிலையை மட்டும் சொல்லி முடித்துக் கொள்கிறேன். கன்னியாகுமரி மாவட்டத்தில்-பிளஸ் 2 கல்வி வந்த பிறகு அங்கே இருக்கின்ற கல்லூரிகளில் 40 சதவிகிதம், 50 சதவிகிதம் சேருகின்ற வாய்ப்புத்தான் கிடைத்திருக்கிறது. அதிகமான பேர்கள் தேறி இருப்பதால் கல்லூரியில் இடம் பற்றாக்குறை இருக்கின்றது. எனவே நான் கேட்டுக் கொள்வதெல்லாம், கல்லூரிகளில் அதிகம் மாவணர்கள் சேர்த்துக் கொள்ளப்படவேண்டும் என்று சர்க்கார் உத்திரவு போடவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அரசு கல்லூரியே இல்லாத மாவட்டம் கன்னியாகுமரி மாவட்டம். எனவே அரசுத் துறையில் ஒரு கல்லூரியை கிள்ளியூர் தொகுதியில் உள்ள கருங்கல்லில் ஏற்படுத்தித் தரவேண்டும் என்று இந்த அரசுக்கு வேண்டுகோள் விடுத்துக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

அடுத்து இந்த இளைஞர் அணியைச் சேர்ந்தவர்கள், பப்ளிக் சர்வீஸ் கமிஷன் பரிட்சை பாஸ் செய்த பின்னர் அவர்களுக்கு இன்னும் வேலை வாய்ப்பு கிடைக்காத நிலை இருக்கிறது. அவர்களுக்கு வேலைகள் போடப்பட்டு பாதியில் நிறுத்தப் பட்டதாக அறிகிறேன். எனவே அவர்கள் எடுத்துள்ள மதிப்பெண்களின் அடிப்படையில், அவர்களுக்கு விரைவாக வேலைவாய்ப்பு கொடுக்க இந்த சர்க்கார் உடனடியாக ஆவன செய்யவேண்டும் என்டு கேட்டு முடித்துக் கொள்கிறேன்.

* திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, நாம் இந்த நேரத்தில் கிட்டத்தட்ட 1500 கோடி ரூபாய்க்குப் பக்கமாக பல திட்டங்களை, இன்று மக்கள் நலன் பெறவேண்டிய அளவுக்கு செய்து முடித்திருக்கிறோம். இன்றைய தினம் ஒட்டுமொத்தமாக இங்கே சாங்ஷன் செய்ய வேண்டும் என்ற காரணத்தால், ஒரு சில கருத்துக்களைச் சோல்ல விரும்புகிறேன்.

எவ்வளவு பெரிய திட்டங்கள் போடுகிறோம். அமைச்ச களும் நல்ல முறையில் பணியாற்றி வருகிறார்கள். இந்த அமைச் சரவை நல்ல முறையில் பணியாற்றி வருகிறது. இருந்தாலுச்



1980 ஜூலை 30] [திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்]

நடைமுறைப்படுத்துகின்ற நேரத்திலே இருக்கக்கூடிய
அதை குறைதவிர்த்து — நீர்ப்பாசனத்துறை அமைச்சர் அவர்கள்சொன்
குறைதவிர்த்து — நீர்ப்பாசனத்துறை அமைச்சர் அவர்கள்சொன்
னதைப்போல—நான் கமிட்டி போடவேண்டும் என்று கூட
சொல்லவில்லை. அந்தந்த ஜில்லாவில் சம்பந்தப்பட்ட அமைச்
சர்கள் வருகின்றபோது, அவர்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகள்,
உதாரணமாக நீர்ப்பாசன துறை அமைச்சர் வருகிறார் என்றால்
அந்த மாவட்டத்தில் இருக்கிற அந்தத் துறை தலைமை எஞ்சி
னியர், அந்தந்த பஞ்சாயத்து கமிஷனர்கள், எம்.எல்.ஏ.-க்கள்
எல்லாம் கூடி மக்களிடம் குறைகளைக் கேட்டு, என்னென்ன
திட்டங்கள் போடப்பட்டன என்னென்ன திட்டங்கள் நிறைவேற
வில்லை. அப்படி என்றால் ஏன் நிறைவேற்ற முடியவில்லை
என்பதை விவாதிக்கவேண்டும். இதை ஒரு அன்எக்கனாமிக்
ஸ்கீம் என்று தள்ளிவிடாமல் பரிசீலிக்க வேண்டும். ஆங்காங்கே
உள்ள அதிகாரிகள் தாசில்தார்கள் பிளாக் கமிஷனர்கள் போன்ற
வர்கள்கூடி விவாதித்துக் காரியங்களை செய்தால், பல காரி
யங்களை தடங்கல் இல்லாமல் செய்ய முடியும்.

அதைப் போன்று இங்கே நாம் நீர்ப்பாசனத்திற்குப் பல
கோடி ரூபாய்களை ஒதுக்கி இருக்கிறோம். சென்ற முறை
கூட நான் பேசினேன். என்னுடைய தொகுதியில் சிறுமலை
ஆறு திட்டம் 30 இலட்சம் ரூபாய் செலவில் போடப்பட்டது.
ஆனால் அது இன்னும் நிறைவேறவில்லை. அந்த பைல் மேலே
போகிறது, பின்னர் கீழே வருகிறது. இப்படி இருக்கின்றது.
தற்போது நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. அதற்கான சம்
பந்தப்பட்ட மனுவை அமைச்சரிடம் கொடுத்திருக்கிறேன். மக்க
ளுக்குப் பயன்படும் காரியங்கள் செய்யும்போது இலாப நட்டக்
கணக்குப் பார்க்காமல் இந்தத் திட்டத்தை அமல் நடத்த வேண்
டும். இதை மறு பரிசீலனை செய்து சாங்ஷன் செய்து கொடுத்
தால் நிச்சயமாக அதன் மூலம் கிடைக்கின்ற தண்ணீர் ஆயிரக்
கணக்கான ஏக்கர்களுக்கு பாசன வசதி கிடைக்க ஒரு வாய்ப்பு
இருக்கும்.

அதே போன்று, விவசாயத்திலே சிறுமலை, கொடைக்கானல்
மலை, பண்ணைக்காடு, தாண்டிக்குடி போன்ற பகுதிகளில் இருக்
கும் வாழைக்கு முடிக்கொத்து வியாதி வந்து, பல ஆயிரக்
கணக்கான ஏக்கர் வாழை பாதிக்கப்பட்டிருக்கிறது. அதற்கு
ஒருவிதமான மருந்தும் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுத்ததாகத்
தெரியவில்லை.

எனவே, நான் தயவு செய்து இந்த அரசைக் கேட்டுக்
கொள்கிறேன், எப்படி அந்த ரிண்டர்பெஸ்ட் நோயை வெளி
யேற்ற விரைவாக மருந்துகள் கண்டுபிடித்தோமோ, அந்த வகை
யில் இந்த முடிகொத்து நோயையும் போக்குவதற்கு உடனடியா

[திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்] [1980 ஜூலை 30

மருந்து கண்டுபிடிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். அந்த வகையில் விவசாயிகளை அந்த நோயின் பாதிப்பில் இருந்து காப்பாற்ற வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

சோழவந்தான் பகுதியில் இருந்து இன்றைக்கு எனக்குத் தந்தி வந்திருக்கிறது. சோழவந்தான் பகுதியில் வரும் வடகரை, தென்கரை கால்வாய்களில் தண்ணீர் வராததால் பயிர்கள் பாழாகிக் கொண்டு இருக்கின்றன. இதற்கு என்ன காரணம் என்று சொன்னால், பெரியார்—வைகை வாய்க்கால்களை சிரமைப்பதற்காக சிமெண்ட் கான்கிரீட் லைனிங் போடுகிறபோது, சற்று உயரமாக போட்டு விட்டதால் அந்தக் கண்மாய்களில் நீர் ஏறாமல், விவசாயம் பாதிக்கப்பட்டு இருக்கிறது என்று சொல்கிறார்கள். ஆகவே, இந்தக் குறைகளை அகற்ற அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

வீடு கட்டும் திட்டம் பற்றி நம்முடைய தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். வீடுகள் கட்டுவதற்கு 3,000 ரூபாய் போதும் என்று சொன்னார்கள். அந்த ரூ. 3,000 இனாமாகக் கொடுத்து விட்டார்கள் என்றால் நான் ஏற்றுக் கொள்கிறேன். ஆனால் நாம் இனாமாகக் கொடுக்கவில்லை. நாம் ரிசர்வ் வங்கியில் இருந்து வாங்கி ஒரு வீட்டிற்கு ரூ. 3,700 வீதம் கடன் பெறுகிறோம். ஆகவே, அந்த வீட்டுக்கு கொடுக்கப்படும் தொகையை ரூ. 5,000 என்று மாற்றினால் நல்லது என்று தெரிவித்துக் கொள்கிறேன். நாம் எல்லாவற்றிலும் இப்போது வளர்ந்து கொண்டு இருக்கிறோம். நாம் கட்டுகின்ற வீடு கொஞ்சம் விஸ்தாரமாக கட்டினால் நல்லது. அது பன்னிக் குடிசை போல் இல்லாமல், சிறு சிறு வீடுகளாக இல்லாமல், கொஞ்சம் விஸ்தாரமாக—பால் மாடு கொடுக்கிறோம்—அதைக் கட்டுவதற்கான இடம்—என்கிற அடிப்படையில் கட்டுவதற்கான முறையில், ரூ. 5,000 கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இப்போது விற்கப்படுகின்ற சிமெண்ட் விலை, கல் விலை, கட்டுகிற கொத்தனார் கூலி போன்றவற்றை கணக்கில் எடுத்துக் கொண்டு பார்த்தால், அதை ரூ. 5,000 என்கிற அளவிற்கு உயர்த்துவது பொருத்தமாக இருக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

கிராமத்தில் வாழும் ஏழை அரிசன மக்களுக்கு வீடுகள் கட்டுவதற்கு 10,000 ரூபாய் வரை கடன் கொடுக்க வேண்டும். அதற்காக 4 சதவீதம் அல்லது 6 சதவீதம் வட்டி வசூலித்துக் கொள்ளலாம். இப்படிப்பட்ட கடன்கள் அரிசனங்களுக்கு மட்டுமல்ல, மற்ற எல்லா ஏழை மக்களுக்கும் அளிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.



1980 ஜூலை 30] [திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்]

இன்றைக்கு நாட்டிலே படித்துவிட்டு பல போர் இருக்கிறார்
ள். எம்.ஏ., பி.ஏ., படித்தவர்கள் இருக்கின்றார்கள். அவர்
ளுக்கு எல்லாம் அரசாங்கம் நடத்துகின்ற தொழிற்சாலை
ளிலோ, தனியார் நடத்துகின்ற தொழிற்சாலைகளிலோ அப்
ரன்டிஸ்சிப் போட்டுக் கொடுத்து, ஸ்டைபண்டு ரூ. 100
காடுத்து, மேலும், நாம் இப்போது கொடுக்கின்ற 50 ரூபாய்
தவித் தொகையும் சேர்த்துக் கொடுத்தால், அவர்களுக்கு ஒரு
. 150 கிடைக்கும். அந்த அடிப்படையில் செய்ய வேண்டும்.
மலும் யூனியனில் இருக்கும் வேலைகளைச் செய்வதற்கும் அவர்
ளை volunteer பேசிஸ்ஸில் சேர்த்துக் கொண்டால்,
வர்களுக்கு வேலை வாய்ப்பும் கிடைக்கும். ஓரளவிற்கு
வர்களுக்கு வருமானமும் கிடைக்கும். அதைச் செய்ய
வண்டும்.

கல்வித் துறையில் இருக்கின்ற நிலைமையை எடுத்துச்சொல்ல
விரும்புகிறேன். கணவன்-மனைவி இருவரும் வேலையில் இருந்
தால் அவர்களை 400 கிலோ மீட்டர், 500 கிலோ மீட்டர் என்று
தூரமான இடங்களில் பிரித்துப் போட்டு விடுகிறார்கள். அவர்
களுடைய நிலை ரொம்பப் பரிதாபகரமானதாக இருக்கிறது.
அவர்கள் குழந்தைகளை வைத்துக்கொண்டு சிரமப்படுகிறார்கள்.
ஆகவே, அரசாங்கம் அத்தகைய நடவடிக்கைகளில் ஈடுபட்ட
அதிகாரிகள் யார் யார் என்பதைக் கண்டறிந்து அவர்களிடத்தில்
இப்படி கணவன் மனைவியைப் பிரித்துப் போடுவது சரியல்ல
என்பதை எடுததுக் கூறினால் நல்லது. மேலும் பக்கத்தில்
10 மைல் சுற்றளவிற்குள் அவர்களை மாற்ற வேண்டும் என்று
சொல்லி, ஒரு சுற்றறிக்கை விட வேண்டும் என்று அந்த ஊழியர்
களின் சார்பில் கேட்டுக் கொள்கிறேன்.

இப்போது பேக்வார்ட் கிளாஸ் லிஸ்ட் ஒன்று வைத்து இருக்கி
றோம். ரெட்டியார், ஈ. கள்ளர் போன்ற சமூகத்தினர்
இன்றைக்கு எல்லோரும் வசதி படைத்தவர்கள் இல்லை. குழந்
தைகளைப் படிக்க வைக்கவும் சர்டிபிகேட் வாங்குவதிலும் பல
சிரமங்கள் அடைகிறார்கள். ஆகவே, கள்ளர், ரெட்டியார்,
வன்னிய கிருஷ்டியன் போன்ற சமூகத்தினரை பேக்வார்ட் லிஸ்
டில் கொண்டுவர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

முன்பு மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் பக்தவத்சலம்
அவர்கள் சொன்னார்கள், பெண்களை எல்லாம் ஜப்பான் அழைத்
துச் செல்கிறேன் என்று. இப்போது நாட்டிலே பல பெண்கள்
படித்து விட்டு வேலை இல்லாமல் இருக்கிறார்கள், அவர்களுக்கு
குடிசைத் தொழில் எப்படி செய்வது என்பதை அறிந்து வந்து
சொல்வதற்காக, தமிழகத்தில் இருக்கும் சமூக நல வாரியத்தின்

மூலமாக இங்கே சட்டமன்றத்தில் உள்ள பெண் சட்டமன்ற உறுப்பினர்களை ஜப்பானுக்கு அனுப்பி வைக்க வேண்டும். இதனை மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் குறித்து வைத்துக் கொள்ள வேண்டும். நிதி ஒதுக்குவதில் அவர் தாராளம் காட்ட வேண்டும். அப்படி செய்தால் நாட்டில் குடிசைத் தொழிலை அபிவிருத்தி செய்ய முடியும் என்று கூறி முடித்துக் கொள்கிறேன்.

[பிற்பகல் 12-50]

திரு. பி. எம். வெங்கடேசன் : மாண்புமிகு மாற்றுத் தலைவரவர்களே, மாமன்றத்தில் பேச வாய்ப்பு அளித்த பெரணமல்லூர் தொகுதி வாக்காளர் பெருமக்களுக்கும் என் இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்களுக்கும் என் இதய பூர்வமான நன்றியை முதற்கண் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ் நாட்டிலேயே வட ஆற்காடு மாவட்டத்தில் பெரணமல்லூர் தொகுதி பிற்படுத்தப்பட்டு, பின் தங்கிய நிலையில் உள்ளது. இதுகாறும் பெரணமல்லூர் தொகுதியில் சட்டமன்றம் ஏற்பட்ட இந்த தேதிவரை எந்த சட்டமன்ற உறுப்பினரும் பெரணமல்லூர் தொகுதி வளர்ச்சி பெற முயற்சி செய்யவில்லை என்பது தெரிய வருகிறது. சில ஆண்டுகளுக்கு முன், தி.மு. கழகம் ஆட்சிக்கு வருவதற்கு முன்னால் மேடைகளில் சிலர் பேசும்போது மத்திய அரசை நோக்கி வடக்கே உள்ளவர்கள் வாழ்கிறார்கள் : தெற்கே உள்ளவர்கள் தேய்கிறார்கள் என்றார்கள். அது போல தமிழ்நாட்டில் வட ஆற்காடு மாவட்டத்திலுள்ள பெரணமல்லூர் தொகுதி தவிர மற்ற எல்லா தொகுதிகளும் வளர்ச்சி பெற்று, பெரணமல்லூர் தொகுதி மட்டும் பிற்படுத்தப்பட்டு, பின்தங்கிய நிலையில் காட்சி அளித்து வருகிறது.

பெரணமல்லூர் தொகுதியில் வன்னியர் சமுதாயத்தினர்கள் அதிகம் உள்ள காரணத்தால் மேற்படி பெரணமல்லூர் தொகுதி பிற்படுத்தப்பட்டு, பின்தங்கிய நிலையில் தள்ளபட்டு உள்ளதோ என்று பொது மக்கள் நடுவில் வதந்திகள் பரவி வருகிறது.

தமிழ்நாட்டில் உள்ள மற்ற தொகுதிகள் வளர்ச்சி பெற இந்த அரசு நடவடிக்கை எடுப்பது போல் பிற்படுத்தப்பட்ட பெரணமல்லூர் தொகுதி வளர்ச்சி பெறவும் அங்குள்ள பொது மக்கள் வாக்களித்து அவர்கள பால் மேற்படி தொகுதியின் குறைபாடுபளை இம்மாமன்றத்தில் எடுத்து வைத்து அங்குள்ள குறைகளை தீர்த்துக் கொள்ளத்தான் பொதுமக்கள் வாக்களித்து என்னை அனுப்பி உள்ளார்களே தவிர, எம்.எல்.ஏ. என்ற





பெயரை வைத்துக் கொண்டு, அரசு கொடுக்கும் சம்பளத்தை பெற்றுக் கொண்டு சட்டமன்றத்திலே நான் அமர்ந்து கொண்டு இருக்கும் போது பெரணமல்லூர் தொகுதி புறக்கணிக்கப்பட்டு மற்ற தொகுதிகளுக்கு வளர்ச்சி பெற அரசு ஆவன செய்வதை பார்த்துக் கொண்டு இருக்க எனக்கு பெரணமல்லூர் தொகுதி மக்கள் வாக்களிக்கவில்லை என்பதை இந்த அரசுக்கு நினைவு படுத்துகிறேன். சட்டமன்றம் ஏற்பட்ட நாட்களில் இருந்து இது நாட்கள் வரை பெரணமல்லூர் தொகுதி என்ற பெயர் ஒன்றைத் தவிர எந்த பெயரும் அங்கு இருப்பதாகத் தெரியவில்லை.

பெரணமல்லூர் தொகுதியில் உள்ள பொது மக்களுக்கும் இந்த நாட்டில் ஏற்படும் நன்மை, தீமையில் பங்கு உண்டு என்பதை நிருபிக்கும் வகையில் இனியாவது மற்ற தொகுதியைப் போல் பெரணமல்லூர் தொகுதி வளர்ச்சி பெற கீழ் வரும் திட்டப் பணிகளை உடனடியாக இந்த அரசு செய்ய முன்வர வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன்.

பெரணமல்லூர் தொகுதியில் உள்ள பொதுமக்கள் விவசாயத்தையே நம்பிவாழும்காரணத்தால் பெரணமல்லூர் தொகுதியில் இருந்து சுமார் 15 கிலோ மீட்டர் தூரத்தில் இருக்கும் தச்சூர் ஆற்றில் இருந்து கால்வாய் எடுத்து வந்து பெரணமல்லூர் பிர்க்காவுக்கும் நெடுங்குணம் பிர்க்காவுக்கும் சுமார் 100 கிராமங்களில் உள்ள விவசாயிகள் பயன்பெற நீர்ப்பாசனம் அமைத்துத் தரும்படி இந்த அரசை கேட்டுக் கொள்கிறேன்.

பெரணமல்லூர் தொகுதி வளர்ச்சி பெற பெரணமல்லூர் நகரத்தில் உள்ள காட்டில் சுமார் 15,000 பேர்கள் வேலை செய்ய ஒரு பெரிய தொழிற்சாலையும், 10,000 பேர்கள் வேலை செய்ய சிறு தொழிற்சாலையும் அமைத்துத் தரும்படிக் கேட்டுக் கொள்கிறேன்.

பெரணமல்லூர் நகரத்திலும் தேசூர் நகரத்திலும் மழையூர், நெடுங்குணம், பெரியகுழப்பலூர் போன்ற இடங்களில் பால் பண்ணை ஏற்படுத்தித் தருமாறு இந்த அரசைக் கேட்டுக் கொள்கிறேன்.

பெரணமல்லூர் ஒன்றியத்தில் உள்ள கிராமங்களில் பசுமாடுகளும், உழவு மாடுகளும் வாங்க கடனுதவி செய்யுமாறு மிகவும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. பி. எம். வெங்கடேசன்] [1980 ஜூலை 30

பெரணமல்லூர் ஒன்றியத்தில் உள்ள சிறு விவசாயிகள் புதிய கிணறு வெட்டவும், பழைய கிணறுகளை ஆழப்படுத்தவும், கடனுதவி செய்யுமாறு அரசை கேட்டுக் கொள்கிறேன்.

பெரணமல்லூர் நகரத்தில் குடிநீர் வசதி இல்லாத காரணத்தால் பெரணமல்லூர் நகருக்கு அருகில் சுமார் 6 கிலோ மீட்டர் தூரத்தில் இருக்கும் அணைக்கட்டு ஆற்றில் இருந்து நீர் கொண்டு வந்து சுமார் 5 லட்சம் காலன் பிடிக்கும் தண்ணீர் தேக்க தொட்டி அமைத்து, அங்குள்ள சுமார் 30,000 குடும்பத்தினர்களுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதியை ஏற்படுத்தித் தருமாறு இந்த அரசை கேட்டுக்கொள்கிறேன்.

பெரணமல்லூர் நகரம், நெடுங்குணம் பிர்க்கா. மழையூர் பிர்க்கா, தேசூர் பிர்க்கா, சேத்துப்பட்டு பிர்க்கா, வாழ்குடை. பிர்க்கா, பெரணமல்லூர் பிர்க்கா ஆகிய ஆறு பிர்க்காக்களுக்கு நடுவில் பெரணமல்லூர் நகரம் இருப்பதால் பெரணமல்லூர் நகரத்தை தனித் தாலூகா ஆக்குமாறு இந்த அரசை கேட்டுக் கொண்டு, இந்த அளவுக்கு பேச வாய்ப்பு அளித்த பெரணமல்லூர் தொகுதி வாக்காளர் பெருமக்களுக்கும் இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்களுக்கும் மாமன்றத் தலைவர் அவர்களுக்கும் நன்றி கூறி விடைபெறுகிறேன். வணக்கம்.

*திரு. பி. எஸ். துரைசாமி : மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவரவர்களுக்கும், என்னுடைய இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்களுக்கும், பர்கூர் வாக்காளப் பொது மக்களுக்கும் எனது நன்றியைக் கூறிக்கொள்கிறேன். இந்த மானியக் கோரிக்கையைப் பற்றி இதுவரையிலும் பேசியிருக்கின்ற சட்ட மன்ற உறுப்பினர்களுக்கும் எனது நன்றியைக் கூறிக்கொண்டு எவ்வளவு கருத்து வேற்றுமைகள் இருந்தாலும் மனிதன் மனிதத் தன்மையோடு நடந்துகொள்ள வேண்டும் என்ற தந்தை பெரியார் அவர்கள் கூறியதை ஞாபகப் படுத்த விரும்புகிறேன். இந்த ஆண்டு மானியக் கோரிக்கைகளை வருக வருக என்று வரவேற்று என்னுடைய தொகுதியின் சார்பில் இரண்டொரு வார்த்தைகளை பேச விரும்புகிறேன்.

பழங்குடி மக்களின் நலனுக்காக 2,468.84 லட்சம் ரூபாய் இந்த மானியக் கோரிக்கையில் ஒதுக்கப்பட்டிருப்பது வரவேற்கத் தக்கது.

மேலும் பழங்குடி மக்கள் பின்தங்கி இருப்பதால் அதிக நிதி ஒதுக்கித் தருவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். எங்களுடைய பகுதியில் மலை ஜாதியினர் அதிகமாக இருப்பதால் அவர்கள் தங்குவதற்கு என்று ஒரு வீடு



1980 ஜூலை 30] [திரு. பி. எஸ். துரைசாமி]

கூட கிடையாது. அந்த நிலையிலே அவர்கள் விறகு வெட்டி ஜீவனம் செய்துகொண்டிருக்கிறார்கள். ஆகவே அந்த மலை ஜாதி மக்களுக்கு ஒரு இடத்தைக் கொடுத்து அவர்களுக்குத் தகுந்த வீடுகளைக் கட்டிக் கொள்வதற்கு அனுமதிக்கும்படி இந்த அரசை அன்புடன் நான் கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

அடுத்து மத்தூர் பகுதியில் பாம்கோலா என்ற தொழிற்சாலை தொடங்குவதற்கு 23 லட்சம் ரூபாய் அனுமதி கொடுத்தும், இதுவரையில் அந்தப் பகுதியில் வேலை தொடங்கப்படவில்லை. அந்த வேலையை உடனடியாகத் தொடங்கி அந்தப் பகுதி மக்களுக்கு வேலைவாய்ப்பு தரும்படி கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து பர்கூர் மருத்துவமனை தற்சமயம் பிரைமரி ஹெல்த் சென்டராக இருக்கின்றது. சுமார் 30 ஆயிரம் பேர் அந்த மருத்துவ மனைக்கு வந்துகொண்டிருக்கிறார்கள். அந்த மருத்துவ மனையை அரசாங்க மருத்துவ மனையாக மாற்றி தரும்படியாக எனது தொகுதியின் சார்பாக நான் கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் பர்கூரில் சப்–ரிஜிஸ்ட்ரார் ஆபீஸ் அமைக்க வேண்டும் என்று வெகு காலமாக கோரியிருந்தும் இதுவரையில் வரவில்லை என்பதை மிக வருத்தத்துடன் தெரிவித்துக்கொண்டு, அந்தப் பர்கூர் எல்லாத் தகுதியும் உள்ள இடமாக இருப்பதால் அந்த இடத்திலே அந்த அலுவலகம் வருவதற்கு ஏற்பாடு செய்து கொடுக்கும்படி எனது தொகுதியின் சார்பாகக் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து என்னுடைய மாவட்டத்தில் திராட்சைத் தோட்டங்கள் அதிகமாக இருக்கின்றன. திராட்சை பயிரிடுவதற்காக ஒவ்வொரு ஏக்கருக்கும் 15 ஆயிரம் ரூபாய் வரை வங்கிகளிலிருந்து கடன் பெற்று திராட்சைத் தோட்டம் போடப்பட்டிருக்கின்றது. இவ்வாறு திராட்சைத் தோட்டம் அங்கே அதிகப் படுத்தப்பட்டிருக்கின்றது. அதை விற்பதற்காக அவர்கள் ஆந்திரா, கேரளா, கர்நாடகா போன்ற இடங்களுக்குச் செல்ல வேண்டியிருக்கின்றது. அங்கே ஒயின் எடுப்பதற்காக அந்தப் பழங்களைக் கொடுக்கிறார்கள். ஆனால் விவசாயிகள் மிகக் குறைந்த விலையில் அங்கு திராட்சையை விற்க வேண்டி உள்ளது. எனவே அப்படிப்பட்ட ஒயின் ஃபேக்டரியை இங்கேயே அமைத்தால் ஆயிரக்கணக்கான விவசாயிகள் பயன் அடைவார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அவ்வாறு அங்கே ஃபேக்டரி அமைப்பதற்கு உடனடியாக ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து என்னுடைய பகுதியில் பனை மரங்கள் அதிகமாக இருக்கின்றன. ஆகவே வெல்லம் செய்கின்ற சொசைட்டி களை அங்கே அதிகப் படுத்தவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். மேலும் குடிசைத் தொழில்களுக்கு முக்கியத் துவம் தருகின்ற வகையில் அதிகமாகப் பணம் ஒதுக்கிட வேண்டும் என்று நான் மிக்க பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து எங்களுடைய பகுதியில் குடிநீர் கஷ்டம் மிகவும் அதிகமாக இருக்கின்றது. எங்கள் தொகுதியில் சுமார் 300 ஊர்களுக்கு குடிதண்ணீர் இல்லை என்பதை மிக வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன். ஒரு குடம் தண்ணீர் 25 பைசா வீதம் கொடுத்து வாங்குகின்ற நிலைமை இருக்கின்றது. உடனடியாக இதற்குத் தகுந்த ஏற்பாடு செய்து கிணறுகளைத் தோண்டுவதற்கோ அல்லது குழாய்களைப் போடுவதற்கோ ஏற்பாடு செய்யும்படியாக கேட்டுக்கொள்கிறேன்.

[பிற்பகல் 1-00]

மேலும் தென்னை உற்பத்திக்காக 54 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பெற்றிருக்கிறது என்பதைக் கண்டு மகிழ்ச்சியடைகிறேன். மிக்க நன்றி. ஏனென்று சொன்னால், என்னுடைய தொகுதி தென்னங்கன்றுகள் அதிகமாக வளரக் கூடிய பகுதி. அப்படி வளரக் கூடிய பகுதிக்கு தேவையான தகுந்த பணத்தையும் அந்த நிதி ஒதுக்கத்திலிருந்து, ஒதுக்கித்தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து தேங்காய் நாரை பயன் படுத்தி பல்வேறு பொருள் கள் செய்யும் திட்டத்திற்காக 15 லட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப் பெற்றிருப்பதாக தெரிகிறது. அதற்காகவும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். பர்கூரிலே இந்த தேங்காய் நார்கள் தொழிற்சாலைகள் 5 இருக்கின்றன. இன்னும் அதிகமான அளவிலே அங்கே தேங்காய் நார்கள் கிடைப் பதினால், பல்வேறு பொருட்கள் செய்யக்கூடிய புதிய தொழிற் சாலைகளில் சிலவற்றையும் அங்கே அமைத்துத் தரும்படி கேட்டுக் கொள்கிறேன்.

பர்கூர், எமக்காலநத்தம் இடயல் குல்ல செட்டி அணை. அவைகள் உடைந்து இரண்டு ஆண்டுகள் ஆகிவிட்டன. அவை களை பழுது பார்த்து புதுப்பித்து தரவேண்டுமாய் மிகப் பணிவன் போடு கேட்டுக்கொள்கிறேன்.





அடுத்து என்னுடைய தொகுதியில் சாலை வசதிகளே அடி யோடு கிடையாது. இணைப்புச் சாலைகளே இல்லை. ஆகவே இந்த ஆண்டாவது என்னுடைய தொகுதி மக்களுக்கு சாலை வசதிகளை செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள் கிறேன்.

....மணி அடிக்கப்பெற்றது.

திரு. த. வீராசாமி: மாண்புமிகு சட்டமன்றப் பேரவை துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1980-81 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க சட்ட முன் வடிவின்மீது எனக்கு பேச வாய்ப்பளித்தமைக்கு உங்களுக்கு முதலில் நன்றியைத் தெரிவித் துக் கொள்கிறேன்.

இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும் இந்த 1980-81ஆம் ஆண்டு நிதி அறிக்கையின் மேல் பேசுகிற போது, இதற்காக ஒதுக்கப்பெற்றிருக்கிற நிதி ஒதுக்கம் போதாது என்ற அடிப்படையில் தங்களுடைய கருத்துக்களைத் தெரி வித்திருக்கிறார்கள். மேலும் பல வசதிகளை செய்து தருகிற வகையில் இந்த அரசினுடைய வருவாய் பெருக்கப்பட வேண்டும் என்கிற அடிப்படையில் சிலர் பேசியிருக்கிறார்கள். இந்த நேரத்தில் ஒன்றை குறிப்பிட்டுக் காட்ட கடமைப்பட்டிருக் கிறேன்.

இப்படி மாநில அரசுகளுடைய நிதி வருவாய் போதாமல் இருக்கக்கூடிய நிலையில் ஏழை எளிய பாட்டாளி மக்களுக்கு நல்ல பல திட்டங்களை நிறைவேற்ற இயலாத சூழ்நிலை மாநில அரசுகளுக்கு, குறிப்பாக தமிழக அரசுக்கு ஏற்பட்டு விடுவதால், அதைப்போக்கும் வகையில் நடவடிக்கைகள் எடுக்கப்பெற வேண்டும் என்ற கருத்தை இங்கே பேசிய மாண்பு மிகு உறுப்பினர்கள் வலியுறுத்தினார்கள்.

இந்த அவல நிலை போக்கப்பட வேண்டும் என்று சொன் னால், பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்னது போல் நம் முடைய இந்திய நாட்டில் மத்திய அரசுக்கும், மாநில அரசு களுக்கும் இடையில் சமஷ்டி நிலை உருவாக வேண்டும் என்பதை இந்த நேரத்தில் குறிப்பிட ஆசைப்படுகிறேன். மத்திய அரசுக்கும் மாநில அரசுகளுக்கும் இடையில் சுமுகமான முறையில் உண்மையான ஜனநாயக அடிப்படையில் உறவு அமைய வேண்

டும் என்று சொன்னால், இந்த நாட்டில் இருக்கிற ஏழை எளிய மக்களுக்கு நல்ல பல திட்டங்கள் உருவாக்கப்பட வேண்டும் என்று சொன்னால், இந்த சமஷ்டி முறை வரவேண்டும் என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்னர்கள்.

வெளிநாட்டு உறவு, பாதுகாப்பு, போக்குவரத்து, நாட்டினுடைய நாணயத்தை அச்சடிப்பது போன்ற முக்கியப் பணிகளை மத்திய அரசு வைத்துக் கொண்டு, மற்றவைகளையெல்லாம் மாநில அரசுகளுக்கு வழங்க வேண்டும் என்ற அடிப்படையில் பேரறிஞர் அண்ணா அவர்கள் சமஷ்டி முறை கொண்டு வரப்படவேண்டும் என்று சொன்னார்கள். பேரறிஞர் அண்ணா அவர்களின் வழி நடக்கும் இந்த அரசு, அந்த அடிப்படையில் உறுதியான கொள்கையை வகுத்து, அதை மத்திய அரசிடம் வலியுறுத்தி செயல்படுவார்களேயானால், இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் கேட்டுக் கொண்டது போல் நல்ல பல திட்டங்களை தீட்டி, ஏழை எளிய மக்களுக்கு வசதிகளை ஏற்படுத்தி தரக்கூடிய நல்ல காரியங்களைச் செய்து முடிக்க முடியும். மாநிலங்களுச்கு அதிக அதிகாரம் வழங்குவதற்கு இந்த அரசு போராடும் என்று மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் முன்பே சொல்லியிருக்கிறார்கள். அதற்காக நான் மனமார தமிழக மக்களின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து இன்றிருக்கிற உறவுமுறையில் பல வீண் விரயங்கள் ஏற்பட்டுக்கொண்டிருக்கின்றன என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

மத்தியில் ஒரு கல்வித் துறை, மாநிலத்தில் ஒரு கல்வித் துறை, மத்தியில் ஒரு சுகாதாரத் துறை, மாநிலத்தில் ஒரு சுகாதாரத் துறை என்றிருக்கின்றன. இப்படிப்பட்ட உறவு முறை இருப்பதன் காரணமாக டூப்ளிகேஷன் ஆப் ஒர்க் என்று சொல்லக்கூடிய அளவில் வீண் விரயக் காரியங்கள் இன்று நம் நாட்டில் நடைபெற்றுக்கொண்டு வருகின்றன. எனவே இந்த முறை ஒழிக்கப்பட வேண்டும் என்று சொன்னால் மாநிலங்கள் அதிக அதிகாரங்கள் பெற வேண்டும். மாநிலங்கள் சுயேச்சையாக செயல்படுகிற ஒரு நிலையை ஏற்படுத்தவேண்டும் என்று நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

நிதிநிலை அறிக்கையில் இந்த அரசின் மொழிக்கொள்கை பற்றி தெளிவாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அண்ணாவின் அரசு, புரட்சித் தலைவர் அவர்களின் தலைமையில் இயங்கும் அரசு இருமொழிக் கொள்கையைக் கடைப்பிடிக்கும்



என்று தெள்ளத்தெளிவாக சுட்டிக் காட்டியிருக்கிறார்கள். அதே நேரத்தில் இன்று மைய அரசு மாநிலங்களில் இந்தியைத் திணிக்கிற அபாய நிலை இருக்கிறது என்பத நாம் உணருகிறோம். ஆகவே இன்று புரட்சித் தலைவரின் அரசு இருமொழிக் கொள்கையை வலியுறுத்திக் கூறி இருப்பதை நான் வரவேற்கிறேன். அதேநேரத்தில் புரட்சித் தலைவரின் அரசு மைய அரசை வற்புறுத்தி இந்தி மொழிக்கு அளிக்கப்பட்டுள்ள அத்தனை சலுகைகளும் இந்திய துணைக்கண்டத்திலுள்ள அத்தனை மொழிகளுக்கும் அளிக்கப்படவேண்டும், மற்றும் அனைத்துச் சலுகைகளும் வழங்கப்படவேண்டும் என்ற முறையில் இந்த அரசு வலியுறுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்று கல்விக்காக மாநில அரசு 29.9 சதவீதம் மொத்த வருவாயில் ஒதுக்கியிருக்கிறது. கல்வியை உயர் கல்வியை கிராமப்புறங்களில் வாழ்கிற ஏழை எளிய மக்கள் பெற்று அவர்கள் தங்கள் வாழ்க்கையை நல்ல முறையில் அமைத்துக் கொள்வதற்காக இந்த அரசு தன் நிதி ஒதுக்கீட்டில் மூன்றில் ஒரு பங்கை ஒதுக்கியிருப்பதற்காக அரசை நான் மனமாற பாராட்டுகிறேன். அதே நேரத்தில் ஒரு கோரிக்கையை நான் என் தொகுதி சார்பாக இங்கே சபைமுன் வைக்கக் கடமைப் பட்டிருக்கிறேன்.

என் தொகுதி ஒரத்தநாடு. என் தொகுதிக்கு தெற்கே இருபது மைல்களுக்கு அப்பால் அதிராமபட்டிணத்தில் ஒரு கலைக் கல்லூரி இருக்கிறது. வடக்கே 18 மைல்களுக்கு அப்பால் தஞ்சை மாநகரில் ஒரு கலைக்கல்லூரி இருக்கிறது. கிழக்கே மன்னார்குடி நகரில் 16 மைல்களுக்கு அப்பால் ஒரு கலைக் கல்லூரி இருக்கிறது. எனவே ஒரத்தநாட்டில் வாழ்கிற விவசாயப் பெருங்குடி மக்கள் தங்கள் பிள்ளைகளைப் படிக்க வைக்க வெகு தொலைவில் உள்ள நகரங்களுக்கு அனுப்பவேண்டிய நிலை இருப்பதால் ஒரத்தநாட்டில் ஒரு கலைக் கல்லூரி ஏற்படுத்தித் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

தஞ்சை மாவட்டம் விவசாயப் பெருங்குடி மக்கள் நிறைந்த மாவட்டம் என்பதை இந்த மன்றம் அறியும்.

Thanjavur is the granary of South India என்று சொல்வார்கள். தென்னகத்துக்கே உணவு வழங்கும் ஒரு மாவட்டம் தஞ்சை மாவட்டம் என்பதை எல்லோரும் நன்கு அறிவார்கள். இன்று மானியக் கோரிக்கைகளை படிக்கிற நேரத்தில் மத்திய அரசுக்கும் மாநில அரசுகளுக்கும் இடையே இருக்கக்கூடிய உறவு முறையில் சிக்கல் இருப்பதைப்

[திரு. த. வீராசாமி] [1980 ஜூலை 30

பார்க்கிறோம். மாநில அரசுகளுக்கு போதுமான அதிகாரங்கள்
இல்லாத காரணத்தால் இன்று விவசாயப் பெருங்குடி மக்கள்
மத்திய அரசு போட்டிருக்கிற வரியினால், மத்திய அரசின்
பற்றாக்குறை பட்ஜெட்டினால், விலைவாசி உயர்வு ஏற்பட்டு
அவர்களின் உற்பத்திச் செலவு அதிகமாக ஆகியிருக்கிறது.
ஆனால் விவசாயிகளுக்கு அவர்களது விளைபொருள்களுக்குக்
கிடைக்கக்கூடிய விலை கட்டுப்படியான விலையாக இல்லை.
நெல்லின் விலையை உயர்த்தவேண்டும் என்று சொன்னால்
மத்திய அரசைக் கேட்கவேண்டியிருக்கிறது. ஆகவே நெல்லை
விளைவிக்கும் மாநிலம், அரிசியை உண்பவர்கள் இருக்கக்
கூடிய மாநிலம், அரிசியை உணவாகக் கொண்டிருக்கிறவர்கள்
அந்த மாநிலத்தில் உள்ள நிபுணர்களைக் கொண்டு நெல்லின்
விலையை நிர்ணயிக்கக் கூடிய ஒரு நிலையை ஏற்படுத்த வேண்டும்
என்று கேட்டுக்கொள்கிறேன். க்வின்டால் நெல்லுக்கு
ரூ. 13 இருக்கவேண்டும் என்று புரட்சித் தலைவர் அவர்கள்
முதல் அமைச்சர்கள் மாநாட்டில் வலியுறுத்தி இருக்கிறார்கள்.
அதை மீண்டும் வலியுறுத்தி தஞ்சை வாழ் ஏழை எளிய விவசாயி
களுக்கு நெல்லுக்கு அதிக விலை பெற்றுத் தர வேண்டும் என்று
கேட்டுக்கொள்கிறேன்.

[பிற்பகல் 1-10]

திரு அ. ரகுமான்கான்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்
களே, 1980 ஆம் ஆண்டு நிதி ஒதுக்கச் சட்டத்தின் கீழ் நான்
சார்ந்திருக்கின்ற திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக
சில கருத்துக்களை இந்த மாமன்றத்தின் கவனத்திற்கு
கொண்டுவர விரும்புகிறேன்.

இங்கே இந்த சட்டமன்றம் வழங்கி இருக்கக்கூடிய பல்வேறு
மானியங்களுக்கான தொகை முறையாக செலவழிக்கப்பட
வேண்டுமென்பதை நான் என்னுடைய பேச்சின் துவக்கத்திலேயே
சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன். காரணம், இங்கே இந்த
சட்டமன்றம் வழங்கி இருக்கக் கூடிய பல்வேறு நிதிகளையெல்
லாம் இந்த அரசு முறையாக செலவழிக்கிறதா அல்லது முழுமை
யாக செலவழிக்கிறதா என்று கடந்தகால கணக்கைப் பார்க்
கின்றபோது, இது முறையாக அல்லது முழுமையாக செலவழிக்கப்
படவில்லை என்ற குற்றச்சாட்டை நான் இந்த மன்றத்திலே
உங்கள் மூலமாக கொண்டு வர விரும்புகிறேன்.

1977-78 ஆம் ஆண்டு ''ரிப்போர்ட் ஆப் தி காம்ப்ட்ரோலர்
ஜெனரல் ஆப் இந்தியா'' என்ற புத்தகத்தை கொஞ்சம்
புரட்டிப் பார்த்தால், அதிலே சில புள்ளி விவரங்கள் கொடுக்
கப்பட்டுள்ளன. 1978 ஆம் ஆண்டு 199 கோடி ரூபாய்



1980 ஜூலை 30] [திரு. அ. ரகுமான்கான்]

சட்டமன்றத்தின் அனுமதி பெற்றிருந்தும் கூட இந்தத் தொகை
செலவழிக்கப்படவில்லை என்று குற்றம் சுமத்துகிறேன். இதே
குற்றச் சாட்டை ஏற்கனவே இந்தப் பேரவையில் டாக்டர்
கலைஞர் அவர்கள் சொல்லி இருக்கிறார்கள்.

இன்னும் சில உதாரணங்களைச் சொல்ல வேண்டுமென்று
சொன்னால், கிருஷ்ணா நதி நீரை சென்னைக்கு கொண்டுவரும்
திட்டத்தை ஆய்வு செய்வதற்காக ஒதுக்கப்பட்ட ரூபாய் 50
லட்சம்; அதுவும் செலவு செய்யப்படவில்லை. சேரிப் பகுதிகள்,
அதாவது அரிசன காலனிகளை சீரமைப்பதற்காக தமிழ்நாடு
வீட்டு வசதி வாரியத்திற்கு ஒதுக்கப்பட்ட தொகை 1 கோடி
ரூபாய்; அதிலே ஒரு பைசா கூட செலவழிக்கப்படவில்லை என்ற
விவரம் இந்தப் புத்தகத்திலே கொடுக்கப்பட்டுள்ள விவரங்களிலே
இருந்து தெரிகிறது. அதைப்போல், கிராமப்புற சாலைகள்,
பாலங்கள் அமைப்பதற்காக இந்த மாமன்றம் ஒதுக்கிய தொகை
8 கோடி ரூபாய். ஆனால், செலவழிக்கப்பட்ட தொகை 3
கோடி ரூபாய்தான். விவசாயத்திற்கு இந்த மன்றம்
அனுமதித்த தொகை 12 கோடி 34 லட்சம் ரூபாய்; ஆனால்
செலவழிக்கப்பட்ட தொகை 1 கோடியே 92 லட்சம் ரூபாய்தான்
எனவே, இந்த அவையிலே அனுமதிக்கப்படுகின்ற நிதி ஒதுக்கம்
முறையாக எதிர்காலத்திலே செலவிடப்படவேண்டும் என்பதை
நான் வலியுறுத்திக் கூற விரும்புகிறேன்.

இதைப்போலவே, இன்னொன்றையும் இந்த மாமன்றத்தின்
கவனத்திற்கு கொண்டு வர விரும்புகிறேன். சட்டமன்றத் தேர்தல்
நடைபெற்ற நேரத்தில், நமது முதலமைச்சர் அவர்கள் மக்களிடத்
திலே பல வாக்குறுதிகளைக் கொடுத்தார்கள். விவசாயிகளுடைய
அனைத்துக் கடன்களும் ரத்து செய்யப்படும் என்று சொன்னார்
கள். அது மாத்திரமல்லாமல், திராவிட முன்னேற்றக் கழகத்தைச்
சார்ந்தவர்கள் விவசாயிகளின் 9 அம்ச கோரிக்கையைப் பற்றி எதை
யும் தெளிவாக கூறவில்லை; குறிப்பாக, விவசாயிகளின் கடனை
ரத்து செய்வது பற்றி சொல்லவில்லை என்று முதலமைச்சர்
அவர்கள் சொல்லிவிட்டு, அன்றைய தினம் அண்ணா தி.மு.க.
வின் தலைவராக இருந்தவர் சொல்லிவிட்டு, நாங்கள் ஆட்சிக்கு
வந்தால், விவசாயிகளுடைய அனைத்துக் கடன்களையும் ரத்து
செய்வோம். மத்திய அரசாங்கத்திடம் இது குறித்து வற்புறுத்து
வோம் மத்திய அரசு மறுத்தால், 5 ஆண்டு காலத்தில் நாங்களே
அதை நிச்சயமாக நிறைவேற்றுவோம் என்று சொல்லியிருக்கிறார்.
ஆனால், இன்றைக்கு ஆட்சிப் பொறுப்பிலே வந்த பிறகு, பட்
ஜெட்டிலே இதுபற்றி விவரக் குறிப்புகள் இல்லை. நம்முடைய
நிதி அமைச்சர் அவர்கள் பட்ஜெட்டிலே ஒரு கருத்தைத்

தெரிவித்திருக்கிறார்கள். கூட்டுறவுக் கடன் மொத்தம் ஏறத்தாழ 42 கோடி ரூபாயும், தக்காவிக் கடன் 16 கோடி ரூபாயும், ஆக மொத்தம் கிட்டத்தட்ட 60 கோடி ரூபாய் விவசாயக் கடன் ரத்து செய்யப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். இது யாருக்குச் சொல்லப்பட்டிருக்கிறது என்று சொன்னால், 5 ஏக்கருக்கும் குறைவாக உள்ளவர்களுக்கு என்று சொல்லப்பட்டது. அந்த நேரத்திலே எங்கள் கட்சித் தலைவர் கலைஞர் அவர்கள் கேட்டார்கள். 5 ஏக்கரா அல்லது 5 ஸ்டாண்டர்டு ஏக்கரா என்று தெளிவுபடுத்த வேண்டுமென்று கேட்டார்கள். ஆனால், நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள் அதற்கு இது வரைக்கும் பதில் சொல்லவில்லை. அதைப் போலவே 5 ஏக்கருக்குக் குறைவாக குத்தகை நிலம் எடுத்து, அப்படி குத்தகை எடுத்தவர்கள் கூட்டுறவுக் கடன் வாங்கியிருந்தால், அந்தக் கடன் ரத்து செய்யப்படுமா என்று கேட்டபோது, அதற்கும் நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள் பதில் சொல்லவில்லை. அதை இங்கே கலைஞர் அவர்களும் கேட்டார்கள். மற்றக் கட்சிகளைச் சார்ந்தவர்களும் கேட்டார்கள்.

மகாராஷ்டிரத்திலே ஏறத்தாழ 49 கோடி ரூபாய் விவசாயக் கடன் ரத்து செய்யப்பட்டு, அதற்கான நிதி ஒதுக்க பட்ஜெட்டிலே முறை செய்யப்பட்டிருக்கிறது.

ஆனால் 60 கோடி ரூபாய் இங்கே ரத்து செய்வதாகச் சொல்லுகிறார்கள். பட்ஜெட்டில் அதற்கான நிதி ஒதுக்கீடு இருக்கிறதா, நிதி ஆதாரம் இருக்கிறதா என்று கேட்டபோது நம்முடைய அமைச்சர் வீரப்பன் அவர்கள் கூட எழுந்து, உரிய நேரத்தில் உரிய இடத்தில் அறிவிக்கப்படும் என்றார்கள். எங்களுடைய துணைத் தலைவர் பேராசிரியர் உடனே எழுந்து உரிய இடம், உரிய நேரம் இதுதான், உடனே சொல்ல வேண்டுமென்று கேட்டார்கள். நிதி அமைச்சர் நாவலர் அவர்கள் எழுந்து என்னுடைய பேச்சின் இறுதியில் சொல்லுகிறேன் என்று சொன்னார்கள். ஆனாலும் பட்ஜெட் விவாத பதிலுரையின்போது சொன்னார்களா என்றால் இல்லை. மகாராஷ்டிரத்தைச் சுட்டிக் காட்டி அங்கே கடன் ரத்து செய்திருக்கிறார்கள், பட்ஜெட்டில் நிதி ஒதுக்கீடு செய்திருக்கிறார்கள், நீங்கள் ஏன் செய்யவில்லை என்று கேட்டபோது பட்ஜெட்டில் அதற்கு நிதி ஒதுக்கீடு செய்தால் மத்திய சர்க்கார் நமக்கு உதவி செய்ய முன்வராது, ஆகையால்தான் தமிழக பட்ஜெட்டில் அந்தத் தொகை ஒதுக்கீடு செய்யப்படவில்லை என்று சொன்னார். திரும்பத் திரும்ப கேட்டோம். நிதியமைச்சர் அவர்கள் டில்லியைக் கேட்டிருக்கிறோம். மத்திய சர்க்காரைக் கேட்டிருக்கிறோம். கடிதம் எழுதியிருக்கிறோம், நிச்சயமாக மத்திய சர்க்கார் உதவி செய்யும் என்றார்கள்.





நம்முடைய முதலமைச்சர் அவர்களும், பண்ருட்டி ராமச்சந்திரன் அவர்களும், நிதியமைச்சர் நாவலர் அவர்களும் டில்லிக்குப் போனார்கள், பிரதமரைச் சந்தித்தார்கள், பிளானிங் கமிஷன் தலைவரைச் சந்தித்தார்கள்—'' நீங்கள் ரத்து செய்திருக்கும் கடனை நாங்கள் ஈடு செய்ய முடியாது '' என்று அவர்கள் தெளிவாகச் சொல்லிவிட்டார்கள். தமிழ்நாட்டில் இருக்கும் என்.ஜி. ஓக்களும் பல்வேறு மாநிலங்களில் இருப்பவர்களும் கூட்டுறவுக் கடனை ரத்து செய்ய வேண்டும் என்று கேட்டு அனுமதிக்கப்பட்டால் அது '' பேட் பிரிசிடென்ட் '' ஆகிவிடும். நான் நிதியமைச்சரைக் கேட்கிறேன்—பட்ஜெட்டில் 60 கோடி ரூபாய் விவசாயக் கடன் ரத்து என்று சொன்னீர்கள். 15 கோடி ரூபாய் தக்காவிக் கடன்—அது வராத கடன், கொடுத்தவனுக்கும் ஞாபகம் இல்லை, வாங்கியவனுக்கும் ஞாபகம் இல்லை. உங்கள் கருணையால் அது ரத்து செய்யப்படவில்லை.

பட்ஜெட்டில் பாக்கி இருக்கக்கூடிய தொகைக்கு அலகேஷன் இல்லாதபோது விவசாயிகளுக்குக் கடன் ரத்து செய்துவிட்டோம் என்று சொல்லுகிறீர்கள். ரிசர்வ் பாங்குக்கு என்ன சொல்லப் போகிறீர்கள் ? மத்திய சர்க்கார் மறுத்துவிட்ட பிறகு என்ன செய்யப் போகிறீர்கள் ? வாக்குறுதி அமலாகுமா ? நிதி அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதில் சொல்ல வேண்டும்.

இன்னொன்றையும் நான் குறிப்பிட விரும்புகிறேன். கடன்கள் ரத்து செய்யப்பட்டிருக்கின்றன என்று சொல்லப்படுகிற சூழ்நிலையில் ஜப்தி நடவடிக்கைகள் தொடரப்படுகின்றன என்பதை மன்றத்தின் மூலம் நிதியமைச்சர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். ஜப்தி நடவடிக்கைகள் ஜரூராக நடைபெற்று வருகிறது. காட்பாடி கந்தாச்சாரி என்ற கந்தசாமிக்கு கடன் ரூ. 1,500·20 ; வட்டி 373 ரூபாய் ; செலவு ரூ. 7·70 காசு ஆக ரூ. 1,900·90 பைசா ஜூலை 10ஆம் தேதிக்குள் பணத்தைக் கட்டியாகவேண்டுமென்பதற்கு சம்மன் அனுப்பப்பட்டிருக்கிறது. விவசாயக் கடன்கள் ரத்து செய்யப்பட்டாகிவிட்டது என்று தெளிவாகச் சொன்னார்கள். ஆனால் கூட்டுறவுக் கடன்களை வசூலிப்பதற்காக கந்தாச்சாரி போன்ற ஆயிரமாயிரம் கந்தாச்சாரிகளுக்கு இது மாதிரி ஜப்தி நோட்டீஸ் அனுப்பப்படுகிறது. இதற்கு நிதியமைச்சர் அவர்கள் என்ன பதில் சொல்லுகிறார்கள் என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : துணைத் தலைவர் அவர்களே, பின்னால் அதற்கு விளக்கம் சொல்லலாம் என்றாலும் இப்போதே சொல்லிவிடுவது நல்லது என்று கருதுகிறேன். கூட்டுறவுக் கடன்கள் ஏராளமான வகைகளிலே

எல்லா விவசாயிகளுக்கும் இருக்கின்றன. நாம் ரத்து செய்தது புயலால், வெள்ளத்தால், பாதிக்கப்பட்டு அவதிப்படுகிற ஐந்து ஏக்கருக்குக் குறைவாக வைத்திருக்கிற அந்த விவசாயிகளுடைய கூட்டுறவுக் கடன்களைத்தான் நாம் நீக்கினோமே தவிர, மற்றைய விவசாயிகள் வேறு வகைகளில் வாங்கிய கடன்களை வசூலிக்கத்தான் செய்வார்கள், விவசாயிகளும் கடனைத் தந்துத்தான் ஆகவேண்டும். கடுமையான முறைகள் இல்லாமல் தவணைகளில் வாங்கலாம் என்பது போன்ற கருத்துக்களைத் கூறலாமே தவிர வசூலிக்கக்கூடாது என்பது சரியல்ல. கூட்டுறவுக் கடன்கள் அத்தனையையும் ரத்து செய்துவிட்டோம் என்று சொல்லவில்லை. ஐந்து ஏக்கருக்குக் கீழே உள்ள விவசாயிகளுக்கு அனைத்துக் கடன்களையும் ரத்து செய்து விட்டோம் என்று சொல்லவில்லை. புயலால் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு ஐந்து ஏக்கருக்குக் குறைவாக இருக்கிற விவசாயிகளுடைய கடன்கள் மட்டும் என்றுதான் சொல்லியிருக்கிறோம். அந்தக் கடனைப் பொறுத்து ஏதாவது மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டுக் காட்டுவார்களானால் அதுபற்றி நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. அ. ரகுமான்கான் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, உங்கள் மூலம் நிதியமைச்சர் அவர்கள் கவனத்திற்கு கொண்டு வருகிறேன். நான் சொல்லுகிற நபர் ஐந்து ஏக்கருக்குக் குறைவானவர், வறட்சியால் பாதிக்கப்பட்டவர். நான் சொல்லுகிற அந்த நபருக்கு ஜப்தி நோட்டீஸ் அனுப்பப்பட்டிருக்கிறது.

(பிற்பகல் 1-20)

**அதனுடைய** காப்பி என்னிடத்திலே இருக்கிறது. அந்த நோட்டீஸ் என்னிடத்திலே இருக்கிறது, தங்களிடத்திலே தரத் தயாராக இருக்கிறேன், பேச்சைத் தொடர வேண்டியிருப்பதால், வேண்டுமானால் பிறகு அதைத் தங்களிடத்திலே தருகிறேன்.

அடுத்து, சர்க்கரை சம்பந்தமாக ஒரு கருத்தைக் கூற வேண்டியிருக்கிறது, இன்றைக்கு மார்க்கட்டிலே சீனி கடுமையான விலைக்கு விற்றுக் கொண்டிருக்கிறது. இந்த செயற்கைப் பஞ்சத்தைச் செய்த சூதாடிகள் யார்? இந்த நாட்டிற்குத் தெரிந்தாக வேண்டும். இந்த சர்க்கார் மீது நான் கடுமையான குற்றஞ்சாட்டுகிறேன். எல்லா ஆலைகளும், அது அரசுத் துறையாக இருந்தாலும் சரி, தனியார் துறையாக





இருந்தாலும்சரி, உற்பத்தி செய்கிற சர்க்கரையில் 65 சதவீதம் அரசுக்குத் தரவேண்டும், 35 சதவீதம் ஒப்பன் மார்க்கட்டிலே அவர்கள் விற்றுக் கொள்ளலாம். ஆனால் 21—7—1980 அன்று டைரக்டர் ஆப் சுகர் பெடரேஷன் ஒரு உத்தரவைப் பிறப்பிக்கிறார். இதனால் ஒப்பன் மார்க்கட்டிலே விற்கப்பட்டு வந்த 35 சதவீதம் சர்க்கரையை இனிமேல் சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷனுக்கு கூட்டுறவு ஆலைகள் கொடுக்க வேண்டும் என்று அவர் உத்திரவை பிறப்பித்திருக்கிறார். அது யாருக்கு, கூட்டுறவுத் துறையிலே உள்ள சர்க்கரை ஆலைகளுக்குத்தான்........

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நிதி ஒதுக்கீட்டு மசோதா மீது பேசிக் கொண்டிருக்கின்றபோது குற்றச்சாட்டுத் தேவையில்லை.

திரு. அ. ரகுமான்கான் : அப்படியொன்றும் விதியிலே இல்லையே.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : விதியிலே இருக்கிறது, நான் படித்துக் காட்டுகிறேன். "நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவின் மீது தான் விவாதம், அச்சட்ட முன்வடிவில் குறிக்கப்பெற்று மானியங்களில் அடங்கியுள்ள பொது முக்கியமான அல்லது நிர்வாகக் கொள்கைகள் பற்றியதாகவும், அவற்றுக்குப் பொருத்தமான மானியக் கோரிக்கைகள் பேரவையின் ஆய்வில் இருக்கும்பொழுது எழுப்பப் பெறாததாகவும் இருத்தல் வேண்டும்".

திரு. அ. ரகுமான்கான் : நான் சொல்வது மானியக் கோரிக்கைகளில் கொடுக்கப்பட்டிருக்கிற நிதி ஆதாரத்தைக் கொண்டு முறையாகச் செலவழிக்கப்படவேண்டுமென்பதற்காகத் தான், ஐ எம் ஸ்பீக்கிங் எபவுட் தி பாலிசி ஆப் தி கவர்ன்மென்ட் அன்ட் இட்ஸ் இம்பிலிமென்டேஷன். மாண்புமிகு இந்த மன்றத்தின் துணைத் தலைவர் அவர்களே, அது தனிப்பட்ட ஆலைகளுக்கு அல்ல, அரசாங்கத்தினுடைய கன்ட்ரோலிலே இருக்கும் கூட்டுறவு ஆலைகளுக்கு மட்டும்தான். அவர்கள் வெளி மார்க்கட்டிலே எவ்வளவு விலைக்கு வேண்டுமானாலும் விற்கலாம், ஒரு மூட்டை விலை 740 ரூபாய்க்கு விற்கலாம். ஆனால் அரசாங்கக் கூட்டுறவு ஆலைகள் 445 ரூபாய்க்கு சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷனுக்கு கொடுக்க வேண்டும். இதனால் கூட்டுறவு சர்க்கரை ஆலைகளுக்கு 43 லட்சம் நட்டம் ஏற்படுகிறது. கூட்டுறவு ஆலைகள் அரசுக்கு 65 சதவீதமும், சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷனுக்கு 35 சத வீதமும்

கொடுத்துவிடுவதால் ஒப்பன் மார்க்கட்டிலே சர்க்கரை தட்டுப் பாடு ஏற்படுகிறது. சர்க்கரையின் விலை அதிகமாகிறது. நான் கேட்கிறேன். தனிப்பட்ட முதலாளிகள் யாருக்கு வேண்டுமானாலும் எவ்வளவு விலைக்கு வேண்டுமானாலும் விற்றுக் கொள்ளலாம், ஒப்பன் மார்க்கட்டிலே அவர்கள் அதிக விலைக்கு விற்றுக்கொள்ளலாம். ஆனால் கூட்டுறவு ஆலைகள் சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷனுக்கு குறைந்த விலையிலே விற்க வேண்டுமென்ற நிலைமை இருக்கிறது. அந்த உத்திரவு கூட்டு றவு ஆலைகளுக்குத்தான் பொருந்தும். காவேரி சுகர் மில் லுக்குப் பொருந்துமா, தனிப்பட்டவர்களுடைய ஆலைகளுக் குப் பொருந்துமா என்றால் பொருந்தாது. நான் கேட்கிறேன், ஏன் தனிப்பட்ட ஆலைகளுக்கு அதை அமல்படுத்தவில்லை, அதிலே மறைந்திருக்கிற மர்மம் என்ன, அதிலே பல லட்சங்கள் கை புரண்டிருக்கிறதா?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: முதலிலேயே நிதி ஒதுக்கம் பற்றிச் சொல்வதாகச் சொன்னீர்கள், இப் போது அப்படிப் பேசவில்லை, குற்றச் சாட்டுகள் கூடாது.

திரு. அ. ரகுமான்கான்: ஏன் ஒதுங்கியிருக்கிறீர்கள் என்ன காரணம்?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் துணைதலைவர் அவர்களே, சர்க்கரை ஒதுக்கீடு பற்றி முடிவு எடுப்பது மத்திய அரசுதான். ஆகவே 65 சதவீதம் சர்க்கரை உற்பத்தியை—அது தனியார் துறையாக இருந்தாலும், கூட்டுறவுத் துறையாக இருந்தாலும்—லெவி முறையிலே விற்கவேண்டும் என்பதுதான் முறை; லெவி முறையிலே விற்பதற்கு தான் 65 சதவீதம் வாங்கி அதை லெவி முறையிலே கொடுக்க முழு உரிமை உண்டு. 35 சதவீதம் தனியார் துறையிலோ அல்லது கூட்டுறவுத் துறையிலோ அவர்கள் விருப்பப்படி விற்றுக்கொள்ளலாம் என்பது இந்திய அரசின் முடிவு. ஆகவே தனியார் துறையிலே அவர்கள் விருப்பப்படி விற்பதன் காரணமாக சர்க்கரை விலை இப்போது வேறு பல மாநிலங்களிலே எல்லாம் 8 ரூபாய், 9 ரூபாய், 10 ரூபாய் அளவுக்குக்கூட சென்றிருக்கிறது. ஆகவே, அவற்றை நாம் அதிகாரம் போட்டு வாங்குகிறோம் என்று அதற்குப் பொருள் அல்ல. நாம் கூட்டுறவு நூற்பாலை வைத்திருப்பதும் சரி, கூட்டுறவுத் துறையிலே சர்க்கரை ஆலை வைத்திருப்பதும் சரி, அது மக்களுக்குப் பயன்பட வேண்டும், தனியார் துறையிலே அந்த அளவுக்குப் பயன்படமுடியாது என்ற காரணத்தாலே தான்





கூட்டுறவுத் துறையிலே ஓரளவுக்குப் பயன்பட வேண்டுமென்ற முறையிலே அந்த நோக்கத்தின் அடிப்படையிலே தான், அவை களிலே உற்பத்தியாவதை அவர்கள் விருப்பப்படி விற்க வேண்டி யது தான்.

நாம் நமக்கே லெவிக்குக் கொடுக்க வேண்டுமென்று கேட்க நமக்கு உரிமை இல்லைதான். ஆனாலும் கூட்டுறவுத் துறையின் மூலம் ஏற்படுகின்ற பலன்கள், பரவலாக மக்களுக்கு ஏற்பட வேண்டுமென்ற நோக்கத்தினுடைய அடிப்படையில்தான் அதை நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கு விற்பதன் மூலமாக இதனுடைய விலையை, ஓபன் மார்க்கெட்டிலே—வெளியிலே விற்கும்பொழுது ஓரளவு குறைத்துக் கொடுக்கலாம் என்ற நோக்கத்தினுடைய அடிப்படையிலே நாம் கேட்டு வாங்குகிறோம். ஆனால் இப்பொழுது நாம் எண்ணியிருப்பது, தனியார் துறையிலே அந்த அளவிற்கு அவர்களோடு ஒப்பந்தம் பேசி அதை வாங்கி நுகர்பொருள் வாணிபக் கழகம் வைத்துக் கொள்ளுமேயானால் கணிசமான அளவிற்கு விலையைக் குறைக்கலாம். மற்ற இடங் களில் எட்டு ரூபாய் பத்து ரூபாய் என்று போகும்பொழுது நம்முடைய மாநிலத்திலே நுகர்பொருள் வாணிபக் கழகம் முக்கிய மானவைகளுக்கு, திருமணங்களுக்கு, மற்றவைகளுக்குக் கொடுக் கப் போகின்றபொழுது ஐந்து ரூபாய் விலைக்குத்தான் நாம் தருகிறோம். அதனுடைய இலாப நஷ்டங்கள் கணக்கை யெல்லாம் நான் பின்னால் தருகிறேன் என்று சொன்னேன். அதிலே எந்த விதத்திலும் இலஞ்சத்திற்கோ மற்றவைகளுக்கோ சிறிதுகூட இடமில்லை. நுகர்பொருள் வாணிபக் கழகம் நேரடியாகச் செய்ததுதான், நம்முடைய கூட்டுறவுத் துறையோடு பேசி முடிவெடுப்பதுதான். அதிலே எந்தக் குற்றமும் இல்லை; களங்கமும் கற்பிக்க வேண்டிய அவசியமில்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்கு நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். நன்மையைக் கருதித்தான் செய்யப்படுகிறது.

உதாரணத்திற்காகச் சொல்கிறேன், ' டைம்ஸ் ஆஃப் இந்தியா பத்திரிகையிலே இரண்டு நாட்களுக்கு முன்பாக வந்திருக்கிறது, டெல்லி பத்திரிகையில் விலைவாசிக் குறிப்பை எடுத்துக் கொள் வோமேயானால் இப்பொழுது அங்கே ஒரு கிலோ சர்க்கரை 8 ரூபாய் 20 காசுக்குப் போகிறது. 8 ரூபாய் 20 காசுக்குத்தான் அங்கே வாங்கக் கூடிய நிலைமைகள் இருக்கின்றன. நுகர்பொருள் வாணிபக் கழகம் வாங்கிவைத்து நாம் விற்பதன் காரணமாக 5 ரூபாய், 5 ரூபாய் 10 காசுக்கு கொடுக்க முடிகிறது. நன்மை ஏற்பட வேண்டுமென்று செய்கிறோமே தவிர, அதைச் செய்ய வேண்டுமென்ற அவசியமும் இல்லை; நமக்குக் கட்டா யமும் இல்லை. தனியார் துறையில் அவர்கள் எப்படி 35 சதவீதத்தை விற்கிறார்களோ அப்படி நீங்களும் விற்றுக்

கொள்ளுங்கள், அதிகமான இலாபத்தைப் பெறுங்கள் என்று கூட சொல்லிவிடலாம். நான் சொல்ல விரும்புவது ஓரளவுக்குக் கூட்டுறவு ஆலைகள் இதன் காரணமாகக் கஷ்டப்படுமேயானால் அதை நாமே நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் மூலமோ அல்லது அரசோ காம்பன்சேஷன் பண்ண வேண்டிய அவசியமோ அல்லது சப்சிடி கொடுக்க வேண்டிய அவசியமோகூட நமக்கு ஏற்படலாம். அந்தக் கட்டங்கள் வந்தால் அதையும் அரசு யோசிக்கும். ஆனால் பொதுவாக மக்களுக்குக் கிடைக்கக் கூடிய பொது விநியோகத்திலே விலை குறைய வேண்டுமென்ற நோக்கமே தவிர, அதிலே களங்கம் கற்பிக்க வேண்டாமென்று மட்டும் மாண்புமிகு உறுப்பினரவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

திரு. துரை முருகன் : துணைத் தலைவரவர்களே, நான் ஒரு விளக்கம் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : பேரவைத் துணைத் தலைவரவர்களே, இப்பொழுது பேசுவது திரு. ரகுமான்கான் அவர்கள். அவருக்கு நான் விளக்கம் தந்தேன். நான் பேசும்பொழுது வேண்டுமானால் திரு. துரைமுருகன் அவர்கள் என்னை விளக்கம் கேட்கலாம். நான் அவர்களுக்கு நேரடியாகப் பதில் சொல்கிறேன். திரு. ரகுமான்கான் அவர்களுக்கு நான் விளக்கம் சொல்கின்றபொழுது ஒவ்வொரு உறுப்பினரும் என்னையே கேட்பார்களேயானால் திரு. ரகுமான்கான் அவர்கள் இருக்கிற இடத்திற்குப் போகாமல் வேறொரு இடத்திற்குப் போய் விடுவார்கள்.

திரு. அ. ரகுமான்கான் : துணைத் தலைவரவர்களே, நான் உங்கள் மூலமாகக் கேட்க விரும்புவதெல்லாம், இந்த 35 சதவீதம் லெவி, சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷனுக்கு சர்க்கரை எடுத்துக் கொள்கிறீர்கள் ; எதன் மூலமாக எடுத்துக் கொள்கிறீர்கள் ? அரசாங்க ஆலைகள், கூட்டுறவு ஆலைகளிடமிருந்துதான். நான் திரும்பவும் கேட்கிறேன், ஏன் தனியார் ஆலைகளிலிருந்து அதை நீங்கள் பெறவில்லை ? பெறாததற்கான காரணம் என்ன ? அங்கேதான் என்னுடைய சந்தேகம் சரியாக நிருபிக்கின்ற சூழ்நிலையில் இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து நான் உங்கள் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புவதெல்லாம், இங்கே அரசு பல்வேறு வாக்குறுதிகளைக் கொடுத்திருக்கிறது. அவைகளையெல்லாம் படிப்படியாகச் செய்வோம் என்று நம்முடைய நிதியமைச்சரவர்கள் சொன்னார்கள். தீப்



பற்றி எரிகிறபொழுது இப்பொழுதுதான் நான் கிணறு வெட்டத் தோண்டுகிறேன் என்ற பாணியில் உங்கள் பதில் இருந்து கொண்டிருக்கிறது.

வறுமைக் கோட்டிற்குக் கீழே இருப்பவர்களுக்கு, வாய்ப்பு வசதி அற்ற ஆண், பெண் யாராக இருந்தாலும் தலைக்கு ஒரு ரூபாய் கொடுப்போம் என்று சொன்னீர்கள். வறுமைக்கோடு பற்றியெல்லாம் இங்கே ஆராய்ச்சிகள் நடைபெற்றன. தமிழகத்தில் 4½ கோடி மக்கள் ஜனத் தொகை இருக்கிறது. நீங்கள் எந்தப் புள்ளி விவரத்தை வேண்டுமானாலும் கொடுங்கள் ; நான் கேட்கிறேன், இரண்டு கோடி பேருக்காவது ஒரு ரூபாய் உண்டா? ஒரு கோடி பேருக்காவது உண்டா ? 80 இலட்சம் பேருக்காவது உண்டா ? யாருக்காவது உண்டா ? ஏன் இதைச் செய்யவில்லை வாக்குறுதி கொடுத்திருக்கிறீர்கள், அதை நிறைவேற்ற வேண்டாமா ?

அதைப்போல ஒவ்வொரு குடும்பத்திற்கும் கட்டாயமாக வேலை—வேலை தரப்படும் என்று கூட அல்ல—கட்டாயமாக வேலை தரப்படும் என்று சொன்னீர்கள். இன்றைக்கு அவ்வாறு கொடுத்து இருக்கிறீர்களா ? வறுமைக் கோட்டிற்குக் கீழே இருக்கின்ற அந்தக் குடும்பங்களுக்குக் கொடுத்திருக்கிறீர்களா ? அதைப்பற்றி ஏதாவது குறிப்பிட்டிருக்கிறீர்களா ? என்பதை நான் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

அதைப்போல, பட்ஜெட்டிலே கூட நிதியமைச்சரவர்கள் பட்ஜெட் உரை நிகழ்த்தியதற்குப் பிறகு பத்திரிகைகாரர்களையெல்லாம் அழைத்து, வேலையற்ற பட்டதாரிகளுக்கு இந்த அரசு 50 ரூபாய் மானியம் வழங்கப் போகிறது, அதற்கான திட்டம் இருக்கிறது, நிதி ஒதுக்கீடு இருக்கிறது என்று சொன்னார்கள். நான் கேட்கிறேன், இப்பொழுது நிதி ஒதுக்கீடு எங்கே இருக்கிறது? சட்டமன்றக் கூட்டத் தொடர் முடிய இருக்கிறது ; அந்த நிதி ஒதுக்கீட்டைச் செய்து விட்டீர்களா ? படித்த பட்டதாரிகளுக்கு 50 ரூபாய், அதற்கு எப்பொழுது நிதி ஒதுக்கீடு செய்யப் போகிறீர்கள் ? இதற்கு நம்முடைய நிதியமைச்சரவர்கள் பதில் சொல்வார்கள் என்று நம்புகிறேன்.

[பிற்பகல் 1-30]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவையின் அனுமதியோடு, அலுவல் முடியும்வரை அலுவல் நேரத்தை நீட்டிக்கிறேன்.

திரு. அ. ரகுமான்கான் : ஆளுநர் ஆட்சியின்போது இதற்கான கோப்புகள் எல்லாம் தயாரிக்கப்பட்டு விட்டன. நாங்கள் இல்லாத காரணத்தினாலேதான் அவைகளை நிறைவேற்ற முடியவில்லை என்று சொன்னார்கள். இப்பொழுது எதுவும் தடையாக இல்லை. எனவே, அதுபற்றி நிதியமைச்சர் பதில் சொல்ல வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

உங்களுடைய வாக்குறுதிகள் எப்படி இருக்கின்றன என்றால் பெரிய பலூனை ஊதிக் கொண்டே போனால், அது கடைசியிலே வெடித்து விடும். அதுபோல், வாக்குறுதிகளை அள்ளி, அள்ளி வீசுகிறீர்கள். ஆனால், வெடிக்கப்பட்ட பலூன்களாக அந்த வாக்குறுதிகள் காட்சியளிக்கின்றன.

அடுத்து, நான் உங்கள் கவனத்திற்குக் கொண்டு வருவது, நவமணி பத்திரிகையில் நட்டம் ஏற்பட்ட காரணத்தினால், 1969ஆம் ஆண்டு கலைஞர் அவர்கள் கூட்டுறவு வங்கியிலே, ரூ. 12 இலட்சம் வாங்கிக் கொடுத்து, அந்தப் பத்திரிகை மீண்டும் நடக்க ஏற்பாடு செய்தார். பள்ளிக்கூட பாடப் புத்தகங்களை அச்சடிப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்தார். இன்றைக்கு அந்தப் பத்திரிகை நின்று விட்டது. பல தொழிலாளிகளுக்கு ரூ. 1 இலட்சம் சம்பளம் பாக்கியிருக்கிறது. அவர்கள் பட்டினியாலே வாடிக் கொண்டிருக்கிறார்கள். நம்முடைய மாண்புமிகு அமைச்சர் இராகவானந்தம் அவர்கள் இது தொழிலாளிகளுடைய சர்க்கார், இது தொழிலாளிகளுடைய பிரச்னைகளைத் தீர்க்கின்ற சர்க்கார் என்று சொன்னார்கள். நான் அவரைப் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். இந்தத் தொழிலாளர் பிரச்னைகளைத் தீர்த்திருக்க வேண்டாமா ? என்று. ஆனால் எனக்குக் கிடைத்திருக்கின்ற தகவலின்படி, அங்கேயிருக்கக் கூடிய இயந்திரங்களைக் கூட, விற்பதற்கு பேசப்படுவதாக நான் கேள்விப்படுகிறேன். முறையான விலைக்குத்தான். அதை வாங்குபவர் யாராக இருந்தாலும், அங்கே இருக்கக்கூடிய பொருள்களை இந்தச் சர்க்கார் முறையாக விநியோகித்து அதைக் கொண்டு அந்தப் பத்திரிகையிலே வேலை பார்த்த தொழிலாளர்களுக்குச் சம்பள பாக்கியைக் கொடுக்க வேண்டுமென்று நான் பணிவோடு இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

அதைப் போலவே, மாநகராட்சியிலே தொழிலாளர்கள் வேலை பார்க்கிறார்கள். மீண்டும் நம்முடைய மாண்புமிகு அமைச்சர் இராகவானந்தம் அவர்கள் தான் நினைவிற்கு வருகிறார். இந்த அரசு தொழிலாளர் அரசு என்று சொன்னால்—கலைஞர் ஆட்சியிலே இருந்தபொழுது, அரசாங்க ஊழியர் பணியிலிருக்கும் பொழுது இறந்து போனால், அவர்களுடைய வாரிசுக்கு,



குடும்பத்திற்கு, ரூ. 10,000 வழங்குகின்ற குடும்ப நலத் திட்டம் கொண்டு வந்தார்கள். ஆனால், நம்முடைய புரட்சித் தலைவர், பொன் மனச் செம்மல் ஆட்சிக்கு வந்தார்—மாண்புமிகு இராகவானந்தம் அவர்கள் அமைச்சராக இருக்கிறார். வந்து என்ன செய்திருக்கிறார்கள்? மாநகராட்சியிலே இருக்கிற தொழிலாளி, வேலை செய்யும்போது இறந்துவிட்டால், அந்தத் தொழிலாளிக்கு ரூ. 10,000 கிடையாது. அந்தத் திட்டத்தை எடுத்து விட்டார்கள். தொழிலாளி வர்க்கம் பற்றி பேசுகின்றவர்கள் , துப்பரவுத் தொழிலாளிக்கு, ஏழை, எளிய தொழிலாளிக்கு அந்த வாய்ப்பைத் தராமல் இருப்பது சரிதானா என்று நான் இந்த நேரத்திலே கேட்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதைப் போல, துணைத் தலைவர் அவர்களே, உங்கள் மூலம், இந்த அரசுக்கு ஒரு தகவல் சொல்லவிரும்புகிறேன். கடலூர் மத்திய சிறைச்சாலையிலிருந்து எனக்கு ஒரு தகவல் கிடைத்திருக்கிறது. அந்தத் தகவல் என்ன வென்று கேட்டால், அங்கே இருக்கக்கூடிய கைதிகள் இரண்டு பேர், ஆசிர்கோன் பிச்சை, அருளப்பன் என்ற இருவர்—அவர்களுடைய வழக்கு திருநெல்வேலி கோர்ட்டிலே பெண்டிங்காக இருக்கிறது. அவர்கள் வாய்தாவிற்காக, இரண்டுமுறை அங்கே அனுப்பப்பட்டார்கள். ஆனால், 24 ஆம் தேதி, திருநெல்வேலி கோர்ட்டுக்கு வாய்தாவுக்கு அவர்கள் போகவேண்டும். ஆனால், அந்தச் சிறை சூப்பரிண்டண்ட் அனுமதிக்காத காரணத்தினாலே, நாங்கள் கோர்ட்டுக்குப் போகவேண்டுமே என்று கைதிகள் கேட்டபொழுது, மற்ற கைதிகளால் அடிக்கப்பட்டு, அந்தக் கண்காணிப்பாளரால் கொடுமைப்படுத்தப்பட்டு, நிர்வாணமாக்கப்பட்டிருக்கிறார். நிர்வாணமாக்கி தனி பிளாக்கில், 8-வது பிளாக்கில், 29-வது நெம்பர் ரூமில் அந்த இருளப்பன் நிறுத்தப்பட்டு, தனிமைச் சிறையிலே தொல்லைபடுத்தப்பட்டிருக்கிறார். அவர் உயிரோடு இருக்கிறாரா? ஏதும் ஆபத்து வந்திருக்கிறதா? தகவல் தெரியவில்லை. சர்க்கார் அதிலே தலையிட்டு முறையான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

நான் இன்னொன்றையும் இங்கே தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த அரசு நேர்மையான அரசு, இது தர்மத்தின் ஆட்சி, நாணயத்தின் ஆட்சி, இலஞ்சத்தை ஒழிக்கக்கூடிய சர்க்கார் என்று சொல்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நிதி ஒதுக்கீடு பற்றி பேசவேண்டும். சிறைச் சாலையிலே அடித்ததைப் பற்றியெல்லாம் பேசுகிறீர்கள். உங்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற நேரத்திலே நீங்கள் நிதி ஒதுக்கீட்டைப் பற்றி பேசவேண்டும். ஒவ்வொரு துறைக்கும் எவ்வளவு நிதி ஒதுக்கியிருக்கிறோமோ, அதைப்பற்றிச் சொல்லாமல், ஒவ்வொரு துறையினுடைய நிர்வாகத்தைப் பற்றி இப்பொழுது விவாதம் நடத்திக் கொண்டிருக்கிறீர்கள். அதைப்பற்றி பேச இப்பொழுது நேரம் இல்லை.

திரு. அ. ரகுமான்கான் : மாமன்றத்தின் துணைத் தலைவர் அவர்களே, இந்த அப்ரோப்பிரியேஷன் பில் விவாதத்திற்கு வருகின்றது என்று தெரிந்த நேரத்தில், கடந்த காலங்களில் நடைபெற்ற எல்லா ப்ரொசீடிங்ஸையும் படித்துவிட்டு, அவைகளில் எந்த விஷயத்தைப் பற்றிப் பேசுவது முறையாக இருக்கும் என்பதைத் தீர்மானம் செய்துவிட்டு வந்து பேசுகிறேன். (குறுக்கீடு) விதியில் policy as well as implementation பற்றிப் பேசலாம் என்றுதான் உள்ளது. அரசின் கவனத்திற்கு கொண்டு வந்து, நிர்வாகம் சிறப்பாக இருக்கவேண்டும். ஒதுக்கப்பட்ட தொகை முறையாக பயன்படுத்தப்பட வேண்டுமென்பதற்காகத்தான் இவைகளைச் சொல்கிறேனே தவிர, வேறொன்றும் அல்ல.

அடுத்து, நான் இன்னொன்றையும் இந்த அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

செங்கை மாவட்டத்தில் திரிசூலம் என்னும் இடத்தில் அரசுக்குச் சொந்தமான கற் குவாரியிலே திருட்டு நடந்திருக்கிறது. இங்கே இருக்கிற கற்களை எல்லாம் எடுத்துக் கொண்டு லாரிகளிலே ஏற்றிக் கொண்டு 2,470 லோடு வெளியே விற்கப்படுகிறது. ஒரு லோடுக்கு கமிஷன் 4 ரூபாய். இவைகளை எல்லாம் அங்கே இருக்கின்ற கலெக்டர் கண்டு பிடித்து ஒரு உத்தரவைப் போட்டார். அந்த உத்தரவை நான் வாசிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். அந்த உத்தரவு ஆர்.சி. 25322/78. அதிலே மிகத் தெளிவாகச் சொல்லப்படுகிறது. அதில் இருக்கக்கூடிய தப்பு கிரேவ் அபன்ஸ். திருட்டு, சட்டத்தை தன் கையிலே எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். மிகவும் கண்டிக்கக் தகுந்த ஒன்று. இந்தத் தப்புக்காக 33,345 ரூபாய்கள் அபராதம் கொடுக்கவேண்டும் என்று சொல்லி, செங்கல்பட்டு மாவட்ட கலெக்டர் உத்தரவு போட்டார். அதற்கு நம்முடைய முதலமைச்சர்—இந்த மாதிரி தவறு நடைபெற்றிருக்கிறது. இந்த மாதிரி ஒரு பொறுப்புள்ள பதவி வகிப்பவரே. அனைத்திந்திய



அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர் இந்தக் காரியத்தைச் செய்திருக்கிறார் என்று அவருடைய கவனத்திற்குக் கொண்டு வநதபோது, நம்முடைய முதலமைச்சர் பதில் சொன்னார். என்ன பதில் சொன்னார், விசாரித்துப் பார்த்தேன். தவறு நடந்திருக்கிறது. கலக்டர் உத்தரவு போட்டிருக்கிறார். அபராத தொகை வசூலிக்கப்படும் என்று நம்முடைய முதலமைச்சர் இதே மன்றத்திலேயே பதில் சொன்னார். இதை நான் குற்றச்சாட்டாகக் கொடுக்கவில்லை. பாலிசி அண்ட் அட்மினிஸ்டிரேஷன் சரியாக இருப்பதற்காகக் கேட்கிறேன். ஒரு கிளின் அட்மினிஸ்டிரேஷன் என்று சொன்னால், இந்த தப்பு செய்து இருக்கிறாரே ஒரு சட்டமன்ற உறுப்பினர்-அவர் இங்கே கூட சட்டமன்ற உறுப்பினராக இருக்கிறார்-நான் அவர் பெயரைக்கூட நீங்கள் விரும்பினால்—சொல்லத் தயாராக இருக்கிறேன். அவர் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன். ஆனால் நேர்மை, நியாயம், லஞ்ச ஒழிப்பு என்பது இந்த ஆட்சியின் கொள்கையாக இருக்கிற காரணத்தினாலே, இந்தக் கட்சியின் கொள்கையாக இருக்கிற காரணத்தினாலே, மக்கள் மத்தியிலே அவர் கூட வெற்றி பெற்று இந்த சட்டசபைக்கு வந்திருக்கிறார்.

அடுத்து உங்களுடைய கவனத்திற்கு நான் கொண்டு வர விரும்புவது குற்றச்சாட்டாக கூட அல்ல—இங்கே மீன் வள மானியத்திற்காக தொகை ஒதுக்கக்கப்பட்டிருக்கிறது. அந்தத் தொகை முறையாக செயல்படுத்தப்படவேண்டும், தவறாகி விடக்கூடாது என்பதற்காக ஒரு மிகப்பெரியவர்..........

திரு. இரா. முத்தையா : மாண்புமிகு பேரவை துணைத் தலைவர் அவர்களே, எதிர்கட்சி உறுப்பினர் திரு. ரகுமான்கான் அவர்கள் இந்த மன்றத்திலே நடந்த ஒரு நிகழ்ச்சியை இன்றைக்குத் திரும்பவும் நினைவுபடுத்துகிறார். அப்போதே கூட எங்கள் கட்சியைச் சேர்ந்த அந்த உறுப்பினர் இதில் தலையிடவில்லை அதற்கும் எனக்கும் சம்பந்தம் இல்லை என்று அவரும் மறுத்து இருக்கிறார். முதலமைச்சரும் சொல்லி இருக்கிறார். அப்படி இருக்கும்போது திரும்பவும் அவருக்கு சம்பந்தம் உண்டு என்று உறுப்பினர் கூறிக் கொண்டிருப்பது சரியா என்பதை உங்கள் மூலமாகக் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

திரு. அ. ரகுமான்கான் : தலைவர் அவர்களே, நம்முடைய முதலமைச்சர் அவர்கள் சட்டமன்றத்திலே பேசிய புரொசிடிங்ஸ் இது. இதை உங்கள் அனுமதியோடு வாசிக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : ரகுமான்கான், நீங்கள் அதற்குப் போகவேண்டாம். பெர்சனல் சார்ஜ் எல்லாம் வேண்டாம் நீங்கள் நேரம் பண்ணுகிறமாதிரி வருகிறது.

திரு. துரைமுருகன் : பாயின்ட் ஆப் ஆர்டர். சார் ஏற்கனவே இந்த மன்றத்திலே பேசி அங்கத்தினர்கள் பேசி, முதலமைச்சர் அவர்கள் பதில் சொல்லி, அவர் பதில் சொன்னதற்கு பிறகு மீண்டும் கிளப்பலாமா என்பது அங்கத்தினர் முந்தையா அவர்களின் வாதம். அதற்கு ஏன் அதை மீண்டும் கிளப்புகிறார்கள். அதில் என்ன உயிரோட்டம் இருக்கிறது என்று பதில் சொல்லவேண்டியது ரகுமான்கான். இடையிலே நான் கிளப்புவது என்னவென்றால், ஏற்கனவே இந்த மாமன்றத்திலே ஒரு முறை முதலமைச்சரால் படிக்கப்பட்டது, பிறகு எதிர்க்கட்சித் தலைவரால் பதில் சொல்லப்பட்டது. அதைக் கொண்டு வந்து தான் பேசியதைப்போல் அன்றைக்கு வின்சன்ட் படித்தாரே, அதை ஒத்துக் கொண்டீர்களே, இது என்ன நியாயம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நீங்கள் அதை அன்று சொல்லவில்லை. அப்போதே சொல்லி இருந்தால் கண்டித்து இருக்கலாம்.

திரு. அ. ரகுமான்கான் : பேசவேண்டும் என்றால் பேசுகிறேன். இல்லை என்றால் உட்கார்ந்து விடுகிறேன். எதிர்கட்சி என்ற முறையிலே கருத்துச் சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன். தனிப்பட்ட முறையிலே யார் மேலும் எனக்குக் கோபம் இல்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இது புரொசிடிங்ஸ். இதைப் படித்தவுடனே அப்படியே உங்கள் கையிலே கொடுத்துவிடுகிறேன். ஆனால் முக்கியமான வரிகளை மட்டும் படித்து விடுகிறேன். சந்தேகப்படுகிறவர்கள் அதைப் புரட்டி சரியாக இருக்கிறதா என்று பார்த்துக் கொள்ளலாம்.

[பிற்பகல் 1-40]

இதிலே தெளிவாக சொல்லப்பட்டு இருக்கிறது. 'இவ்வாறு பரிசீலனையில் உள்ளது' என்று குறிப்பிட்டு இருப்பது கவனிக்கத்தக்கது. யாராக இருந்தாலும் அவர் இன்ன குற்றத்தைச் செய்தார். அதற்கு இன்ன தீர்ப்பு வழங்கப்பட்டு இருக்கிறது என்று அதிகாரிகளோ, சட்டமோ சொல்கிற நேரத்தில் அதனை இந்த அரசு நிச்சயமாக நிறைவேற்றும் என்பதை நான் இங்கே



சொல்லிக்கொள்கிறேன் என்று முதலமைச்சர் அவர்கள் பதில்
சொல்லியிருக்கிறார். (குறுக்கீடு) முடித்து விடுகிறேன். [illegible]
டர் இப்படி ஒரு ஆர்டரைப் போட்டு, அந்த பணத்தை 15
நாட்களுக்குள் கட்டவேண்டும் என்று உத்தரவு போடுகிறார்.
அந்த உத்தரவு 21—6—1978-ல் போடப்பட்டது. [illegible]
சட்டப்பேரவையில் கூறியபோது, முதலமைச்சர் அவர்கள்
அளித்த பதில் அதை முழுவதும் நான் படித்து விடுகிறேன்.

நேரிலே சென்று பார்வையிட வகையிலும், விசாரித்த
வகையிலும் இப்போது புதிதாக ஆரம்பிக்கப்பட்ட திருசூலம்
அறிஞர் அண்ணா புளு மெட்டல் கோவாப்பரேடிவ் சொ
சைடியினர் அதனுடைய தலைவரின் சொற்படி சர்வே எண்
25/2பி என்ற அரசாங்க நிலத்திலும், அரசாங்க ஒப்புதல்
இல்லாமலும், கலெக்டர் ஒப்புதல் இல்லாமலும் கல்வெட்டத்
தொடங்கியிருக்கிறது. அஃதன்னியில், குப்புசாமி ஐயர் குத்த
கைக்கு எடுத்துள்ள இடத்திலேயும் அந்த சொசைடியினர் கல்
லை வெட்டி இருக்கிறார்கள். இந்தத் தவறு நடைபெற்று
இருக்கிறது என்பதை விசாரணையின் போது துணைத் தலை
வர் ஒப்புக்கொண்டு இருக்கிறார். இது முதலமைச்சர் அவர்கள்
சபையில் சொல்லியது. இப்படி அந்த சொசைடியின் தலைவர்
நடந்து கொண்டார்—டிரஸ் பாஸ் செய்தார் என்று முதலமைச்
சர் அவர்களே சொல்கிறார்.

அண்ணா கூட்டுறவு சொசைடியினர் திருசூலத்தில் அரசுக்குச்
சொந்தமான 25/2 பி என்ற சர்வே நிலத்திலும், அதன் அரு
காமையில் குப்புசாமி ஐயர் குத்தகைக்கு எடுத்துள்ள இடத்தி
லும் மாவட்ட ஆட்சித் தலைவரின் உத்தரவின்றி கருங்கல் ஜல்லி
யைத் தோண்டி எடுத்துள்ளனர். அப்படி 2,470 லாரி அளவிற்கு
தோண்டி எடுத்துச் சென்று விட்டார், அவருடைய செய்கை
விதிமுறைக்கு மீறிய செயல். கள்ளத்தனமாக கனிவளத்தை
எடுத்துச் சென்ற குற்றத்திற்காக அந்தக் கனிப்பொருளின் மதிப்
பைப் போல் 18 மடங்கு அபராதம் விதிக்கலாம் என்று விதி
இருக்கிறது. அந்த விவரம் அவருக்குத் தெரிவிக்கப்பட்டபோது,
அவர் அருகில் இருக்கும் மக்களுக்கு வேலை கொடுப்பதற்காகவே
இப்படி செய்தேன் என்று சமாதானம் கூறினார்கள். சூழ்நிலை
யைக் கருத்தில் கொண்டு மாவட்ட ஆட்சித் தலைவர் 2 மடங்கு
அபராதம் விதித்து 1978ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 21ஆம்
நாளில் உத்தரவிட்டார். தொடர்ந்து தனிப்பட்ட முறையில்
கள்ளத்தனமாகக் கனிவளத்தைத் தோண்டி எடுத்த குற்றத்
திற்காக ரூ. 33,345 அபராதத்தை 2 வாரங்களுக்குள் கட்ட
வேண்டும் என்று உத்தரவில் தெரிவிக்கப்பட்டு இருந்தது
ஆனால் இன்னும் தொகை கட்டப்படவில்லை, இந்த அத்து

மீறிய குற்றத்திற்காக வேறு என்ன செய்யலாம் என்பது மாவட்ட ஆட்சித் தலைவரின் பரிசீலனையில் உள்ளது. இதற்காக அந்தத் தலைவர் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு முறையீடு ஒன்றை அனுப்பினார். தொழிலாளர்களுக்கு வேலை கொடுப்பதற்காக அந்தச் செயலில் ஈடுபட்டதாகவும், அபராதம் அதிகம் என்றும் தமிழ்நாடு சிறு தொழில் சலுகை விதி 10ல் கூறியவண்ணம் குத்தகை வசூல் செய்யவேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

அந்த விதி 10-க்கும் விதிக்கப்பட்ட அபராதத்திற்கும் சம்பந்தம் கிடையாது. மேலும் அபராதத் தொகை குறைக்க வேண்டுமென்று சொன்னால், அது சம்பந்தமாக தொழில் வணிக இயக்குநருக்கு மேல் முறையீடு செய்ய வேண்டும். அந்தத் தலைவர் மேல்முறையீடு செய்யாத காரணத்தால் அவர் உடனடியாக மேல் முறையீடு செய்யுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டார் என்று சொல்லிவிட்டு, உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். நான் கேட்க விரும்புவது நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கிறதா? வேறு ஒன்றும் குற்றச்சாட்டு சொல்லவில்லை. நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கிறதா என்று தான் கேட்கவிரும்புகிறேன்.

அடுத்ததாக, மீனளத் துறை --- அதற்காகவும் இங்கே நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு இருக்கிற காரணத்தால், அந்த நிதியும் முறையாகச் செலவழிக்கப்படவேண்டும் என்பதும் இந்த நிதி மசோதாவின் நோக்கம் என்பதால் அது குறித்தும் கருத்து சொல்ல விரும்புகிறேன்.

ஒருவருக்கு மெக்கனைசுடு போட் வழங்கப்படுகிறது. 4 மாதம் ப்ரிமியம் கட்டவேண்டும், அதன்படி ஆயிரம் ரூபாய் அந்தப் பெரிய மனிதர் ப்ரிமியம் கட்டினார். டெபாசிட் கட்டுகிறார். அதுமட்டுமல்ல பிறகு அந்த மெக்கனைசுடு போட் இன்ஜினை விற்றுவிடுகிறார் அந்தப் பெரியவர். மீன் வளத்துறை அவரிடமிருந்து ப்ரிமியம் பாக்கி என்று நோட்டீஸ் கொடுக்கிறது. இதற்கு ஒரு பதிலும் அந்தப் பெரியமனிதரிடமிருந்து வரவில்லை. எனவே மெக்னைசுடு போட்டை அரசு சீஸ் செய்கிறது, கைப்பற்றுகிறது. அப்போது பார்த்தால் அந்த போட்டில் இன்ஜின் இல்லை என்று தெரிய வருகிறது. அதற்குப் பிறகு அந்த போட்டை ஏலத்தில் விற்றுஇருக்கிறார்கள், ரூ. 10,000 வருகிறது. அந்தப் பெரியவர் இந்த அரசுக்கு லட்சகணக்கிலே பாக்கி கட்ட வேண்டியிருக்கிறது. அந்த மிகப் பெரிய மனிதர், அந்த மாவீரன் மீது அரசு என்ன செய்ய இருக்கிறது? போட்டில் இருக்கும் இன்ஜினை விற்றுவிட்டார் என்று வந்த அந்தப் பைல் எங்கே இருக்கிறது. அது



டிஸ்போஸ் செய்யப்பட்டு விட்டதா, அந்தப் பைலின் மீது முடிவு எடுக்கப்பட்டுவிட்டதா? இந்த சர்க்கார் என்ன நடவடிக்கை எடுக்கப்போகிறது என்பதைத் தெரிந்துக்கொள்ள விரும்புகிறேன். ஏனென்றால் அப்ராபிரியேஷன் மிஸ் அப்ராபிரியேஷன் ஆக மாறிவிடக்கூடாது. அதற்காகச் சொல்கிறேனே அல்லாமல் வேறு ஒன்றும் அல்ல ; தனிப்பட்ட முறையிலும் அல்ல.

இன்னொன்று, சுவாமிநாத சுவாமி திருக்கோவில். இதில் ரகுமான்கானுக்கு என்ன வேலை என்று கேட்கவேண்டாம். காரணம் எனக்கு ஒரு தகவல் வந்திருக்கிறது. அது வேறு ஒன்றும் அல்ல. மாண்புமிகு அமைச்சர் வீரப்பன் அவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தில் அறங்காவலர்களை நியமித்ததில் ஊழல் செய்தார்கள் என்று குற்றஞ்சாட்டினார்கள். நான் ஆதாரத்தோடு குற்றஞ்சாட்டுவதற்காகச் சொல்கிறேன். குற்றச்சாட்டு சொல்லக்கூடாது ; ஆனாலும் ஆதாரம் இருக்கிறபோது ஒத்துக்கொள்வார்கள் என்று நம்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இந்த பில்லில் குற்றச்சாட்டு சொல்லக்கூடாது ; சொல்ல வேண்டாம்.

திரு. அ. ரகுமான்கான் : அதை நான் குற்றச்சாட்டாகச் சொல்லவில்லை; ஒரு முறைகேட்டை அரசுக்கு நல்ல யோசனையாகச் சொல்கிறேன். முறைகேடு பற்றி அரசின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். வேறு ஒன்றும் அல்ல. அந்த ஆலயத் தரிசனத்திற்கு டிக்கட் அடிக்கிறார்கள். அது சுவாமிமலை திருக்கோவில், தஞ்சை மாவட்டத்தில் இருக்கிறது. திருக்கோவில் தரிசனத்திற்கு வழங்கப்பட்ட டிக்கெட்டுகளில் ஆலயத்தின் முத்திரை அச்சடிக்கப்பட்டிருக்கிறது. அறங்காவலர்கள் கையெழுத்திடாமல் முறையாக அதிகாரி கையெழுத்திட்டிருக்கிறார். டிக்கட் மூலம் முறையான வருமானம் வந்திருக்கிறது.

அதேநேரத்தில் அங்கே நியமிக்கப்பட்டிருக்கிற சில அறங்காவலர்கள் — அவர்களுடைய பெயர் இருக்கிறது, அவைகளை சொல்லவேண்டுமென்றால் வாசிக்கிறேன் — அவர்கள் அத்தனை பேர்களும் அகில இந்திய அண்ணா தி.மு.க. சகோதரர்கள் என்று கேள்விப்படுகிறேன். என்ன நிலைமை என்றால் கள்ள டிக்கட் விற்கப்பட்டு, 60,000 ரூபாய் நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. அது சம்பந்தமாக 'போட்டோ ஸ்டெட் காப்பி' எல்லாம் இருக்கிறது ; அதை கொண்டுவந்திருக்கிறேன். தலைவரவர்களே, உங்கள் மூலமாக அதை மன்றத்திற்குத் தருகிறேன்; அதை பெற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. அ. ரகுமான்கான்] [1980 ஜூலை 30

நான் இந்த அரசை கேட்டுக்கொள்வதெல்லாம், திராவிட முன்னேற்றக் கழக அரசு நியமித்த அறங்காவலர்கள் கோவிலில் ஊழல் செய்தார்கள் என்று சொன்னீர்களே ! இன்றைக்கு உங்கள் ஆட்சியில் அந்தத் தவறு நடக்கலாமா ? தயவுசெய்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து நான் இன்னொன்று சொல்ல விரும்புகிறேன்: Code of Conduct for Ministers (Both Central and State) இந்தச் சட்டத்தில் செக்ஷன் 64-ல் சொல்லப்பட்டிருக்கிறது. ஒருவர் அமைச்சர் பொறுப்புக்கு வருவாரானால் அவருக்கு என்ன சொத்து, வீட்டில் எவ்வளவு நகை இருக்கிறது, வீட்டில் எவ்வளவு பணம் இருக்கிறது, அவருடைய உறவினருக்கு எவ்வளவு வசதி இருக்கிறது — உறவினர் என்றால் 'பேமிலி' கணவன், மனைவி, குழந்தைகள் அடங்கிய ஜாயின்ட் பேமிலி— யாராவது தொழில் நடத்துகிறார்களா, என்ன தொழில் என்ற விவரங்களைக் கொடுக்க வேண்டும். அதன்படி இங்கே இருக்கிறவர்கள் விவரம் தந்திருக்கிறார்களா என்று தெரிந்துகொள்ள ஆசைப்படுகிறேன்.

இன்னொன்று. முதலமைச்சர் பதவிப் பிரமாணம் ஏற்றார். நான் அதில் குறுக்கிடவில்லை. அது அவர்களுடைய வெற்றி விழா. அதிலே நான் சொல்ல விரும்புவது, இந்த அரசு சிக்கனமாக இருக்கும் என்று சொன்னார்கள். பேரறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சர் பதவி ஏற்றபோது, இராஜாஜி ஹாலில் எடுத்தார்கள். அண்ணா வழியை அப்படியே பின்பற்றுவதாகச் சொல்லக்கூடிய நீங்கள் இவ்வளவு இலட்சக் கணக்கான பணம் செலவு செய்திருக்கிறீர்கள். இதில் ஏன் அண்ணா வழியைப் பின்பற்றவில்லை ? மற்ற விவகாரங்களில் அண்ணா வழி, இதில் உங்கள் சொந்தவழியா ?

இன்னொரு கருத்தையும் சொன்னார்கள். காண்ட்ராக்ட் கொள்கை கூடாது ; யாருக்கும் காண்ட்ராக்ட் விடமாட்டோம் என்று சொன்னார்கள். ஆனால் 'ஓர்க் ஃபார் ஃபுட்' — இதில் காண்ட்ராக்ட் விடப்பட்டிருக்கிறது.

அதைப்போல போலீஸ் துறை பற்றி ஒன்றை குறிப்பிட விரும்புகிறேன். சென்னையில் சத்தியவாணிமுத்து நகரில் பிளாக் 330-ல் சின்ன பொண்ணை கைதுசெய்து, குழந்தைகளையும் கைது செய்து ' லாக்கப்பில் ' வைத்திருக்கிறார்கள். லாக்கப்பில் வைத்த 24 மணி நேரத்திற்குள்ளாக மாஜிஸ்டிரேட் கோர்ட்டுக்குக் கொண்டுபோகவேண்டும். ஆனால் கொண்டு போகவில்லை. இல்லீகல் டிட்டென்ஷனில் வைத்து, அந்தப் பெண்ணை நிர்வாணமாக்கி, அசிங்கப்படுத்தி, கேவலப்படுத்தி, பசிக்கிறது என்று சொல்லிய குழந்தைகள் கையில் மண் பாத்திரத்தைக் கொடுத்து, பிச்சை எடுத்துவரச் சொல்லியிருக்கிறார்கள்.



1980 ஜூலை 30] [திரு. அ. ரகுமான்கான்]

(பிற்பகல் 1–50)

அது சம்பந்தமாக எக்மோர் கோர்ட்டில் ஒரு வழக்கு இருக்கின்றது. அந்த வழக்கின் உள்ளே நான் போக விரும்பவில்லை. அப்படிப் போனால் அது சப்-ஜூடிஸாக இருக்கும். இந்தச் சம்பவம் சென்னை நகரிலே நடைபெற்றிருக்கின்றது. அதுபற்றிய தகவல் வேண்டும் என்றால் தருவதற்குத் தயாராக இருக்கிறேன். இந்த மாமன்றத்தில் இருக்கின்ற அத்தனை உறுப்பினர்களையும் கேட்டுக்கொள்கிறேன். தவறு செய்பவர்கள் யாராக இருந்தாலும் அவர்கள் தண்டிக்கப்பட வேண்டியவர்கள்தான். திண்டுக்கல் மின் வாரிய ஊழியர் * * * காவல் நிலையத்திலே ஒரு புகார் கொடுத்திருக்கின்றார். * * * * * நான் குற்றச்சாட்டு சொல்ல விரும்பவில்லை. யாராக இருந்தாலும் தவறு செய்தால் தண்டிக்கப்பட வேண்டும் என்பதற்காகத்தான் சொல்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: குற்றச்சாட்டுக்கள் இன்றைக்கு வேண்டாம். அப்ரோப்ரியேஷன் பில்லிலே ஒரு துறையைப் பற்றி மட்டும் பேசுங்கள்.

*டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் அவர்கள் குற்றம் சாட்டியவர்களுடைய பெயர்களைக் குறிப்பிட்டார். அதே நேரத்தில் குற்றவாளிகள் என்று சில பெயர்களையும் குறிப்பிட்டார். அந்தப் பெயர்களை அவைக்குறிப்பிலே இருந்து நீக்கிவிடலாம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அவற்றை அவை நடவடிக்கைக் குறிப்பிலிருந்து நீக்கும்படி உத்திரவிடுகிறேன்.

திரு. அ. ரகுமான்கான் : தலைவரவர்களே, பாதிக்கப்பட்டவர்கள் கம்ப்ளெயின்ட் கொடுத்திருக்கிறார்கள். ஆகவே தவறு செய்கின்றவர்கள் எந்தக் கட்சியைச் சேர்ந்தவராக இருந்தாலும் தண்டிக்கப்பட வேண்டும். இதைப்போன்று இன்னொரு கருத்தையும் நான் இங்கே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். நான் ஊரைச் சொல்ல விரும்பவில்லை. சேலம் மாவட்டத்திலே இருக்கின்ற ஒரு இடம். அங்கே ஒருவருடைய மகள் கடத்தப்படுகிறார். இன்னார்தான் கடத்தினார். இன்னார்

*மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

துணையோடு என்று சொல்லி அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் மீது போலீசிலே புகார் கொடுக்கப்பட்டிருக்கின்றது. முதலமைச்சருக்கும் புகார் கொடுக்கப்பட்டது. ஆளும் கட்சிக்காரர் என்பதற்காக நடவடிக்கை எடுக்கப்படவில்லையா? அதற்குரிய விபரம் வேண்டுமானால் கொடுப்பதற்குத் தயாராக இருக்கிறேன்.

அடுத்து நடிகை பிரமீளா கைது செய்யப்பட்டிருக்கிறார். இதை நான் இங்கே சொல்கின்றபோது நான் பிரமீளாவுக்காக வாதாடுகிறேன் என்று பத்திரிகைகள் போட்டுவிடக்கூடும். ஆனால் அப்படி விபசாரக் குற்றம் செய்கின்றவர்கள் யாராக இருந்தாலும் தண்டிக்கப்படவேண்டியதுதான். ஆனால் அதே நேரத்தில் மதுரையை மீட்ட சுந்தர பாண்டியன் படத்திலே நடித்த ஒரு நடிகையும்........

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அப்ரோப்பிரியேஷன் பில்லிலே பேசுங்கள். நீங்கள் பேசுவது நோ கான்பிடன்ஸ் மோஷனிலே பேசுவது போன்று இருக்கின்றது.

திரு. அ. ரகுமான்கான் : தலைவரவர்களே, அப்ரோப்ரியேஷன் என்று சொல்கின்றபோது அதிலே எல்லா மானியங்கள் சம்பந்தமாகவும் பேசலாம். ஆனால் அதுபோன்ற வேண்டியவர்கள் வேண்டாதவர்கள் என்று நடவடிக்கை எடுப்பதும் எடுக்காமல் இருப்பதும் ஆகிய நிலைமைகள் மாறவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து நான் இன்னொன்றையும் உங்கள் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். இந்த மதுவிலக்கு சம்பந்தமாக இந்தச் சர்க்காருடைய கொள்கை தெளிவாக்கப்பட வேண்டும். நம்முடைய நாவலர் அவர்கள் சேலத்திலே பேசுகின்றபோது சாராயத்தை பாட்டிலில் அடைத்து விற்பனை செய்வது பற்றி பரிசீலிக்கப்படுகின்றது என்று சொல்லி இருக்கின்றார். பேரன்ட்ஸ் ஆக்ட் என்ற கடுமையான சட்டம் ஊர் கடத்துகின்ற சட்டம் ஒரு பக்கத்திலே இருக்கின்றது. அதே சமயத்திலே 25 வயது நிரம்பியவர்கள் மது பெர்மிட் பெற்றுக் கொள்ளலாம். என்று ஒரு சட்டமும் இருக்கின்றது. அதற்கு 25 ரூபாயைக் கட்டிவிட்டால் போதும் பெர்மிட் பெற்றுக்கொள்ளலாம். சாராயம் சாப்பிடுகின்றவர்களின் நிலைமையைப் புரிந்துகொண்டு ஒருவேளை நல்ல சாராயத்தை அவர்கள் சாப்பிடவேண்டும் என்று கருதி சாராயத்தை பாட்டிலிலே அடைத்து விற்கின்ற திட்டத்தை





இந்த சர்க்கார் கொண்டுவர முயற்சிக்கின்றதா? நாவலர் அவர்கள் பேசியது பத்திரிகைகளிலே வந்திருக்கிறது. மதுவிலக்கு பற்றி இந்தச் சர்க்காரின் கொள்கை என்ன என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் திரு. இரா. நெடுஞ்செழியன்: பேரவைத் துணைத் தலைவரவர்களே, இப்போதே அந்த விளக்கத்தைத் தந்துவிடுவது நல்லது என்பதால் சொல்லிவிடுகிறேன்.

நல்ல சாராயத்தைக் காய்ச்சி விற்பனை செய்யவேண்டும் என்று நான் சொன்னதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகிறார்கள். ஆனால் நான் அதைச் சொல்லவில்லை. குடிப்பழக்கம் உடையவர்களைத் தண்டித்தால் ஏற்கெனவே குடிப்பழக்கம் வராது என்ற காரணத்திற்காக கடுமையான சட்டம் கொண்டுவரப்பட்டு அந்த சட்டத்தின் மூலம் குடிப்பழக்கம் உடையவர்களைத் தண்டிக்கின்றபோது அவர்கள் 6 மாதம், 8 மாதம், ஓராண்டு என்று சிறையில் இருக்கவேண்டிய நிலை ஏற்படுவதன் காரணமாக அவர்களுடைய குடும்பங்கள் அதிகமாக கஷ்டப்படுகின்ற நிலைமை ஏற்படுகிறது. மேலும் உலகத்தில் பழக்கம் நல்லதா கெட்டதா என்ற பிரச்சினைகள் எல்லாம் இருந்துகொண்டிருக்கின்றன. குடிப்பது குற்றமா இல்லையா என்ற பிரச்சினைகளும் இருந்துகொண்டிருக்கின்றன. ஆனால் நம்முடைய மாநிலத்திலும், குஜராத் மாநிலத்திலும் குடிப்பது குற்றம் என்ற வகையில் சட்டம் கொண்டுவரப்பட்டு நிறைவேற்றப்பட்டுக் கொண்டிருக்கின்றது. ஆனால் குடிப்பழக்கம் உடையவர்கள் தண்டிக்கப்படுவதால் அவர்களுடைய குடும்பங்கள் கஷ்டப்படுகின்றன என்ற காரணத்தினால் 25 ரூபாய் கொடுத்து பெர்மிட் பெற்றுக்கொள்ளலாம் என்ற முறை ஏற்படுத்தப்பட்டிருக்கின்றது. ஆகவே நிருபர்கள் என்னிடத்திலே இதுபற்றி கேட்டனர். ஆனால் இந்த அரசு மதுவிலக்குக் கொள்கையைப் பொறுத்தவரையில் முன்பு என்ன கொள்கையை கடைப்பிடித்ததோ அதே கொள்கையைத்தான் கொண்டிருக்கின்றது. அதை அவர்களிடத்திலே விளக்குகின்ற சூழ்நிலையில் கள்ளாக இருந்தாலும் சாராயமாக இருந்தாலும் அல்லது எதுவாக இருந்தாலும், எந்தக் காலத்திலே யாவது அதைக் கடையிலே வைத்து விற்கின்ற சூழ்நிலை ஏற்படுமேயானால் பாட்டிலில் அடைத்து விற்பனை செய்ய வேண்டிய அவசியம் ஏற்படும் என்ற கருத்தைத் சொன்னேனே தவிர அரசாங்கத்தினுடைய திட்டம் அது என்று நான் சொல்லவில்லை. நிருபர்கள் கேட்ட கேள்விக்குப் பதிலாகச் சொன்னேனே தவிர இந்த அரசாங்கத்தினுடைய கொள்கையாக நான் சொல்லவில்லை.

[1980 ஜூலை 30

திரு. அ. ரகுமான்கான் : நம்முடைய முன்னவர் அவர்கள் விளக்கம் சொல்லியிருக்கிறார்கள். அதற்கு நன்றி. அடுத்து நான் சொல்லவருவது..........

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நமது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பிரமீளா அவர்களுடைய வழக்கைப் பற்றியும், மதுரையை மீட்ட சுந்தர பாண்டியனைப் பார்த்த அவர், அதிலே நடித்த ஒரு நடிகையைப் பற்றியும் பிரச்னையை இங்கே குறிப்பிட்டிருக்கிறார்கள்.

அவர்களுக்கு நான் சொல்ல விரும்புவது, சிறைச்சாலை அல்ல, காவல் நிலையத்தில் இரவில் பெண்களை அழைத்துச் சென்று வைத்திருக்கக்கூடாது என்பதைப் பற்றித்தான் நான் சொல்லியிருக்கிறேனே தவிர, விபச்சார தடையின்மீது, தவறு செய்தால் கைது செய்ய வேண்டாம் என்று நான் சொல்லவில்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் தெரிந்திருக்கிறார்கள். இருந்தும் ஏன் அப்படி பேசுகிறார்கள் என்பதை நான் புரிந்துக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. அ. ரகுமான்கான் : துணைத் தலைவர் அவர்களே, மதுரையை மீட்ட சுந்தர பாண்டியன் சினிமாப்படத்திலே நடித்த, கைது செய்யப்பட்ட அந்த நடிகையின் மீது என்ன வழக்கு இருக்கிறது என்று அறிய............

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அந்தப் பெண் கைது செய்யப்படவில்லை. விசாரணைக்கு காவல் நிலையத்திற்குதான் அழைத்துச் செல்லப்பட்டார்.

திரு. அ. ரகுமான்கான் : துணைத் தலைவர் அவர்களே, ஒன்றை நான் உங்கள் மூலம் முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு கொண்டுவர விரும்புகிறேன். அன்றைக்கு போலீஸ்காரர் சஸ்பென்ட் செய்யப்பட்டதற்கு காரணம் அந்தப் பெண்ணை 6 மணிக்கு மேல் காவல் நிலையத்திற்கு அழைத்து வந்ததற்காகத்தான்................

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்னொன்றையும் நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். பிரமீளா அவர்கள் அன்றைய தினமே கமிஷனர் அவர்கள் முன்னால் அழைத்துச் செல்லப்பட்டு, ஜாமீனிலே விடுதலை செய்யப்பட்டிருக்கிறார்கள்.



1980 ஜூலை 30]

திரு. அ. ரகுமான்கான் : துணைத் தலைவர் அவர்களே, நான் சொல்ல விரும்புவது எல்லாம், அந்தப் பெண்மணி விபச்சாரம் செய்கிறார் என்ற தகவலின்படி போலீசார் வீட்டிற்கு போகிறார்கள். அங்கே அவர்கள் விசாரணை நடத்த முடியவில்லை. ஆகவே அழைத்துக் கொண்டு காவல் நிலையத்திற்கு ...............

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் உண்மையைச் சொல்ல எழுந்திருக்கிறேன். குறுக்கிடுவதற்காக அல்ல என்பதை முதலிலேயே சொல்லி விடுகிறேன். அங்கு ஏதோ நடைபெறுவதாக கடிதம் வந்தது என்று சந்தேகப்பட்டுதான் போலீசார் அங்கே சென்றிருக்கிறார்கள். கேள்விபட்டும் அல்ல, நேரிடையாக தெரிந்தும் அல்ல. ஒரு அனாமதேய கடிதத்தை நம்பிக் கொண்டு சென்றிருக்கிறார்கள். உள்ளே பார்த்தபோது எந்த குற்றமும் செய்ததாக எந்தவித அடையாளமும் இல்லை. ஆள் யாரும் இல்லை. அப்படி இருந்தும் காவல் நிலையத்திற்கு அழைத்துக் கொண்டு சென்றதினால்தான் அந்த தலையீடு ஏற்பட்டது.

திரு. அ. ரகுமான்கான் : பேரவைத் துணைத்தலைவர் அவர்களே, (Befc c the Law all a e equal) ஒரு தகவல் தவறு என்று ஒரு இடத்தில் தெரிகிறது. ஒரு தகவல் சரி என்று இன்னொரு இடத்தில் தெரிகிறது. இதில் முறையாக இருக்க வேண்டும் என்பதுதான் நான் சொல்ல விரும்பிய கருத்து.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : தகவல் சரியா இல்லையா என்பது பற்றி அல்ல பிரச்னை. நேரிடையாக தெரிந்துதான் அழைத்துச் சென்றிருக்கிறார்கள். நேரிடையாக தெரிந்தும் தவறாக அழைத்துச் சென்றிருக்கிறார்கள்.

திரு. அ. ரகுமான்கான் : நான் மேலும் முதல்வர் அவர்களிடத்திலே இது பற்றிய விவாதத்தை நீட்டிக்க விரும்பவில்லை. நான் கேட்க விரும்புவது எல்லாம் ...............

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரும்பவும் அந்தப் பிரச்னை வேண்டாம். அப்ரோப்பிரியேஷன் பில்லின் மீதான விவாதத்திற்கு வாருங்கள்.

திரு. அ. ரகுமான்கான் : துணைத் தலைவர் அவர்களே, வேறு ஒரு பிரச்னையில் ஒன்றை மட்டும் நான் கேட்க ஆசைப்படுகிறேன். அண்ணா திராவிட முன்னேற்றக் கழக சர்க்கார் கலைக்கப்பட்ட அந்த நேரத்தில், அதை கண்டித்து காமராசர்

சிலையிலிருந்து சீரணி அரங்கம் வரை ஊர்வலம் நடத்தினார்கள். நமது முதலமைச்சர் அவர்கள் வர்ணித்ததைப் போல் சமூக விரோதிகள் அதிலே கலந்துக் கொண்டு தவறுகள் செய்து விட்டார்கள் . . . . . . . . . . . . . . . (மணியடிக்கப்பெற்றது).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இன்றைக்கு அந்த சப்ஜெக்ட் இல்லை. இன்றைக்கு சப்ஜெக்ட் அப்புரோப்பிரியேஷன் தான் . . . . . . . . . . . . . . .

திரு. அ. ரகுமான்கான் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அப்புரோப்பிரியேஷன் பில்லிலே எதைப் பேசலாம் என்பதும், நான் பேசுவது இர்ரெலவண்டாக இருக்கிறதா என்பதையும் நீங்கள் புரொசீடிங்ஸ்ஸை பார்த்து, விதிகளைப் பார்த்து முடிவு செய்தால் சரியாக இருக்கும் என்று கருதுகிறேன் . . . . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : புதிதாக வந்து இருக்கிற உறுப்பினர்கள் சிலர் பேச விவரம் இல்லாமல், பேசுகிற வாய்ப்பாக முதலில் பேசும்போது எதையாவது பேசியிருக்கலாம். ஆனால் நீங்கள் இரண்டாவது தடவையாக வந்திருக்கிறீர்கள். உங்களுக்கு எல்லாம் தெரியும். இந்த அப்புரோப்பிரேஷன் பில்லிலே ஒவ்வொரு துறைக்கும் எவ்வளவு நிதி ஒதுக்கியிருக்கிறதோ அதிலே இருக்கிற பாதகங்களை, சாதகங்களை எடுத்துப் பேசலாம். ஆனால் இப்பொழுது நீங்கள் சொல்வது எல்லாம் அலிகேஷன்ஸ்தான். அது இன்றைக்கு நிகழ்ச்சி நிரலில் வரவில்லை. அது அப்புரோப்பிரியேஷன் பில்லுக்கு தேவை இல்லாத ஒன்று. உங்களுக்கு ஒதுக்கப்பெற்ற 45 நிமிடங்கள் முடிந்து விட்டன. ஆகவே அத்தோடு நிறுத்திக் கொண்டு முடித்துக் கொள்ளுங்கள்.

திரு. அ. ரகுமான்கான்: அந்த ஊர்வலத்தில் சமூக விரோதிகள் கலந்து கொண்டார்கள் என்று முதல் அமைச்சர் அவர்கள் சொன்ன். வழக்கை வாபஸ் வாங்கிக் கொண்டார்கள். நான் தங்கள் மூலம முதல் அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு ஒன்றைக் கொண்டுவர விரும்புகிறேன். மதுரையில் இந்திரா காந்தி அம்மையாரை கொலை செய்ய முயற்சி செய்தார்கள் என்று சொல்லி . . . . . .

[பிற்பகல் 2—00]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : உங்கள் தலைவரே அதைப்பற்றி பேசியாகிவிட்டது. மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.





மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தத் திங்கள் 2-ம் நாள் இந்தப் பேரவை முன் வைக்கப்பட்ட நிதிநிலை அறிக்கையின் மீது பல்வேறு மானியக் கோரிக்கைகளின் அடிப்படையில் இங்கே ஆய்வுகள் சிறப்புற நடைபெற்றன. அவைகள் எல்லாம் ஒரு வழியாக முடிவுற்று இன்று நிதி ஒதுக்கீடு முன்வடிவினை நிறைவேற்றி வைக்க வேண்டிய கட்டத்திற்கு நாம் வருகை தந்திருக்கிறோம்.

இந்த நிதிநிலை அறிக்கை மீதும் அதனைத் தொடர்ந்து இந்தப் பேரவை எடுத்துக் கொண்ட பல்வேறு மானியக் கோரிக்கைகளின் மீதும் இந்த மன்றத்தைச் சேர்ந்த உறுப்பினர்கள் பலரும் தங்களுடைய கருத்துக்களை வழங்கியிருக்கிறார்கள். நான் மிக்க மகிழ்ச்சியோடு ஒன்றைத் தெரிவித்துக் கொள்வேன். இந்த முறை ஓரளவிற்கு சில சமயங்களில் சூடு இருந்தாலும் சில சமயங்களில் காரசாரமான விவாதங்கள் இருந்தாலும் சில பேர்கள் தங்களுடைய உணர்ச்சியைக் கட்டுப்படுத்த முடியாத அளவிற்கு உணர்ச்சி வயப்பட்டிருந்தாலும் அந்த உணர்ச்சி இரு பக்கத்தையும் மீறி நின்றாலும் ஆனால் சுமுகமாக இங்கே விவாதங்கள் நடைபெற்று ஒவ்வொரு மானியக் கோரிக்கையும் நிறைவேற்றப்பட்டு வெட்டுத் தீர்மானங்கள் ஒன்றிரண்டு ஒலி மூலமாக இங்கே வற்புறுத்தப்பட்டாலும் அதை வோட்டு எடுக்கிற முறைக்குக் கொண்டுவராமல் நாம் எல்லா மானியக் கோரிக்கைகளையும் சிறப்புற நிறைவேற்றுவதற்கு ஒத்துழைப்பு தந்த எதிர்கட்சிகளைச் சார்ந்த அத்தனை பேர்களுக்கும் என் நன்றியையும் பாராட்டுதல்களையும் தெரிவித்துக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

நேற்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் தாம் ஆற்றிய உரையில் எடுத்துச் சொல்லியதைப் போல் இங்கே குற்றங்கள், குறைகள் ஆகியவற்றை எடுத்துச் சொல்ல வேண்டியது எதிர்க்கட்சிகளை சார்ந்தவர்களின் நீங்கா கடமையாக இருக்கின்றன. ஆகவே குற்றங்கள் குறைகளை எடுத்துச் சொல்கிறபோது ஆட்சியில் இருக்கிற அமைச்சரவையைச் சேர்ந்தவர்கள் அவற்றிற்கு செவிமடுத்து அவற்றின் உண்மை நிலைமைகளை அறிந்து அவற்றைக் களைய வேண்டிய கடப்பாடு உடையவர்களாக இருக்கிறார்கள். அந்த வகையில், எடுத்துச் சொல்லப்பட்ட குற்றங்களைச் சொல்லக் கூடாது என்றோ குறைகளைச் சொல்லக் கூடாது என்றோ நான் கருதவில்லை. குற்றங்களை, குறைகளை சுட்டிக் காட்டத்தான் இங்கே எதிர்க்கட்சியைச் சார்ந்தவர்கள் அமர்ந்திருக்கிறார்கள். அவர்கள் எடுத்துச் சொன்னால் தான் குற்றங்கள், குறைகள் தெரிய வரும். அந்தக் குற்றங்

களை முறைப்படி களைவதற்கான வழிமுறைகளை காணவும் முடியும். அது மட்டுமல்லாமல், எங்களுக்கு, அமைச்சரவையில் இருக்கிற முதல் அமைச்சர் அவர்களுக்கும் மற்ற அமைச்சர் களுக்கும் கூட தெரியாமலே பல்வேறு நிகழ்ச்சிகள் நிகழ்கின்ற போது அவைகள் அத்தனையையும் அந்தந்த இடத்திலே இருந்து கண்காணிக்கின்ற தன்மை எங்களுக்கு ஏற்பட வழி இல்லை.

குறைபாடுகள் நடைபெறக் கூடும். குற்றங்கள் ஆங்காங்கே நடக்கக்கூடும். ஆனால் அவற்றைக் களைவதற்கான முயற்சியை இந்த அரசு எடுத்துக் கொண்டதா என்பதும் அவற்றைக் களைந்து குறைபாடுகள் நடைபெறாமல் இருப்பதற்கான வழிவகையைக் கண்டதா என்பதும்தான் மிக மிக முக்கியமானது. அந்த வகையில் இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துச் சொல்லிய கருத்துக்கள் அத்தனையையும் பல்வேறு துறைகளைச் சார்ந்த வர்கள் அவ்வப்போது கூர்ந்து கவனித்துக் கொண்டு வருகிறார்கள். அந்தக் குறைகளைப் போக்குவதற்கும் குற்றங்களைக் களை வதற்கும் அந்தத் துறையைச் சேர்ந்தவர்கள் எடுத்துக் கொள்ள வேண்டிய நடவடிக்கைகளை முறைப்படி எடுத்துக் கொள்வார்கள் என்று கூற விரும்புகிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் சொல் வதை எல்லாம் சாதாரணமாக சொன்னார்கள்; கேட்டார்கள் என்ற அளவில் விடாமல் அவற்றை எல்லாம் ஆராய்ந்து பார்த்து ஒவ்வொரு துறையைச் சார்ந்த அதிகாரிகளும் அலுவலர்களும் அந்த குறைபாடுகள் எதிர் காலத்தில் நிகழாமல் தடுப்பதற்கும் நிகழ்ந்தவை பற்றி நடவடிக்கைகள் எடுப்பதற்கும் அவர்கள் முயற்சி செய்வார்கள் என்பதை கூறிக் கொள்ள விரும்புகிறேன். ஆகவே ஜனநாயகம் என்ற போது, பாராளுமன்ற ஜனநாயகம் என்கிறபோது ஆளும் கட்சி எதிர் கட்சி இரண்டும் சேர்ந்து தான் மக்களுக்கு நன்மை செய்யும் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக் கிறார்கள். ஆங்கிலத்தில் அழகுபடச் சொல்வார்கள்.

'The Opposition Party must have a say and the Ruling party must have a way.'

என்று சொல்வார்கள். ஆகவே எதிர்க்கட்சியில் இருப்பவர்கள் குற்றங்கள், குறைகளை சுட்டிக்காட்ட வேண்டிய கடப்பாடு உடையவர்களாக இருக்கிறார்கள். அவற்றை எல்லாம் கேட்டு அறிந்து இவை இவற்றை செய்ய வேண்டும் என்று பரிந்துரைகள் செய்வதைக் கேட்டறிந்து அவற்றிற்கு வழி வகைகள் காண வேண்டிய பொறுப்பு ஆளும் கட்சியைச் சார்ந்தவர்களுக்கு இருக் கிறது.



அந்த முறையிலேதான் எடுத்துச் சொல்லப்பட்ட சில பல கருத்துக்கள் மிகைப்படுத்தப்பட்டு சொல்லியிருந்தாலும், சில பல குற்றங்களை மிகைப்படுத்தி சொல்லியிருந்தாலும், அதிலே சிறிதளவாவது உண்மையிருக்கலாம், அந்த உண்மையைக் கண் டறிந்து, அதன்மேல் தக்க நடவடிக்கை எடுப்பதற்கு இந்த அரசு முன்நிற்கும் என்பதை நான் இங்கே கூறிக் கொள்ள விரும்பு கிறேன்.

நேற்று இங்கே எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் இங்கே ஒரு குற்றத்தைச் சொல்லுகின்ற போது, மாண்புமிகு முதலமைச் சர் அவர்கள், அதிலே உண்மை இருக்குமானால் நிச்சயமாக நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் சொன்னார்கள். ஆகவே, எதிர்க்கட்சியிலே இருக்கின்றவர்கள் எங்களுடைய கவனத்திற்கு வராத, எங்கள் கண்களுக்குப் படாத, எங்கள் காதுகளுக்கு வந்து சேராத அத்தகைய கருத்துக்களை எடுத்துச் சொல்வார் களேயானால், அது இந்த நாட்டுக்கும், நாட்டு மக்களுக்கும் மிகமிகப் பயன்படும்.

ஒருவர் எந்தக் கட்சியிலே இருந்தாலும், அவர் தனிப்பட்ட முறையிலே அதாவது இன்டிவிஜுவல் கெப்பாசிடியிலே தவறுகள் செய்யக்கூடும். தனிப்பட்ட முறையிலே அவர் ஈடுபடுகிறார் என்பதற்காக, அந்தக் கட்சியிலே இருக்கின்றவர்கள் அத்தனை பேர்களும் குற்றவாளிகள் என்று கூறிவிட முடியாது; அதை ஒப்புக் கொள்ளவும் முடியாது. எல்லாக் கட்சியிலும் நல்லவர் களும் இருப்பார்கள்; அதே போல் எல்லாக் கட்சியிலும் தீய நோக்கங்கள் படைத்தவர்களும் இருப்பார்கள். ஆகவே, இப்படிப் பட்டவைகளை யெல்லாம் நல்ல முறையிலே சுட்டிக் காட்டும் போது, அதை ஏற்றுக் கொண்டு, அப்பேர்ப்பட்ட குறைபாடுகள், நாட்டின் முன்னேற்றத்தைத் தடுத்து நிறுத்தக் கூடியதாக இருக்கு மேயானால், அதை நாங்கள் கட்டாயம் தடுத்து நிறுத்துவோம். அந்த வகையிலே இங்கே எடுத்துச் சொல்லப்பட்ட குற்றங் குறைகளை யெல்லாம் இந்த அரசு, எல்லாத் துறைகளும் முறைப் படுத்தி, பல்வேறு மானியங்களிலே எடுத்துச் சொல்லப்பட்ட குறைகளை அந்தந்தத் துறையினர் நிறைவு படுத்த நடவடிக்கை எடுத்துக் கொள்வார்கள். அவற்றையெல்லாம் இந்த அரசு மன திலே வைத்து, எதிர்காலத்திலே திட்டங்களை வகுக்கும்போது, அவற்றுக்கான வழிமுறைகளைத் தொகுக்கும்போது, அவற்றை நிறைவேற்ற முயற்சிக்கும் என்று நான் கூறிக் கொள்ள விரும்பு கிறேன்.

நெல் கொள்முதல் விலையை உயர்த்த வேண்டுமென்று கேட் டனர். அதற்கு இந்த மாநில அரசு பெரு முயற்சி செய்து கொண்டிருக்கிறது என்பதைச் சுட்டிக் காட்டினேன். அந்த

(டாக்டர் இரா. நெடுஞ்செழியன்) [1980 ஜூலை 30

விலையை நிர்ணயிப்பது பற்றி, இரண்டு தினங்களுக்கு முன்பு புது டெல்லியில் மத்திய உணவு அமைச்சர் தலைமையில், மாநில முதல் அமைச்சர்கள், மாநில உணவு அமைச்சர்கள், மாநில விவசாய அமைச்சர்கள் ஆகியோர் அடங்கிய ஒரு மாநாட்டைக் கூட்டினார்கள். அதிலே தமிழக அரசின் சார்பாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், நானும், விவசாயத் துறை அமைச்சரும் மின்சார அமைச்சரும் கலந்துக் கொண்டு, நம் மாநிலத்தின் கோரிக்கையை எடுத்துச் சொன்னோம். மாண்புமிகு உறுப்பினர் திருவேங்கடம் எடுத்துச் சொன்னதைப் போலவும், இன்னும் பல உறுப்பினர்கள் எடுத்துச் சொல்லியதைப் போலவும், நெல்லின் கொள்முதல் விலையை உயர்த்த வேண்டுமென்று எடுத்துச் சொன்னோம். நம்மைப் போலவே ஆந்திர மாநிலமும் எடுத்துச் சொன்னார்கள். அதைப்போலவே பஞ்சாப், அரியானா மாநிலமும் எடுத்துச் சொன்னார்கள். இன்னும் பல மாநிலத்தைச் சார்ந்தவர்களும் எடுத்துச் சொன்னார்கள். ஆனால், உணவு பற்றாக்குறையாக இருக்கின்ற சில மாநிலங்கள், உணவுப் பொருள்களின் கொள்முதல் விலையை உயர்த்தினால், தங்களுடைய வாங்குகின்ற விலை உயர்ந்து விடும் என்பதால், கொள்முதல் விலையை உயர்த்தக் கூடாது என்று சொன்னார்களே தவிர, உற்பத்தியிலே ஈடுபடுகின்ற மாநிலங்கள் எல்லாம் நெல்லின் கொள்முதல் விலையை உயர்த்துவதற்கான காரணங்களை எடுத்துச் சொன்னார்கள்.

தமிழ்நாட்டைப் பொறுத்த வரைக்கும், இன்றைய தினம் உரத்தின் விலை உயர்ந்திருக்கின்றது போன்ற பல்வேறு சான்றுகளை தொகுத்து, எங்கள் கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறோம். இந்த புள்ளி விவரங்களை எடுத்துச் சொல்லி, நம் மாநிலத்தைப் பொறுத்த வரையில், குறைந்த அளவு கணக்கெடுத்துப் பார்த்தாலும், உற்பத்திச் செலவு குவிண்டால் ஒன்றுக்கு 124, 125 ஆகிவிடுகின்றது என்பதைக் கோடிட்டுக் காட்டி, அவர்களுக்கு அதற்குமேல் 6 ரூபாய் லாபம் என்கின்ற அளவிலே, ஒரு குவிண்டாலுக்கு 130 ரூபாய் கொள்முதல் விலை நிர்ணயிக்க வேண்டுமென்று வற்புறுத்தினோம். அதன் அடிப்படையிலேதான் ஆந்திர மாநில முதல் அமைச்சர் அவர்களும், குறிப்பிட்டார்கள். இன்னும் சில மாநில முதலமைச்சர்கள் 135 ரூபாய் என்றுகூட எடுத்து சொன்னார்கள். இன்னும் சிலர் 125, 115 என்று சொன்னார்கள். நெல்லுக்கு இந்த விலை கொடுக்காவிட்டால், இந்தத் தொழிலிலே ஈடுபடுபவர்கள் பெரும் கஷ்டத்தை அனுபவிக்க வேண்டிய அவசியத்தையும் வலியுறுத்தி இருக்கிறோம்.

மற்றும், தொடர்ந்து புள்ளி விவரங்களைக் காட்டினோம். ஏதோ ஒரு காலத்தில் கோதுமைப் பயிரிடுகின்ற பகுதியின ஆதிக்கத்தில் இருந்த காரணத்தினால், அதற்கு அதிகம் செ



(டாக்டர் இரா. நெடுஞ்செழியன்)

1980 ஜூலை 30]

வாகின்றது என்ற அடிப்படையில் அதிக விலை நிர்ணயிக்கப்பட்டது. அந்த அடிப்படையே பாழ்படுத்தப்பட்ட காரணத்தினால்தான், நெல்லுக்கு இந்த நிலை. அதற்குப் பிறகு கோதுமைக்கு ரூ. 10 உயர்த்தினால், நெல்லுக்கு ரூ. 8 என்று உயர்த்துகிறார்கள். எனவே, இந்த அடிப்படையிலேயே தவறு இருக்கின்ற இந்த நிலையையும் சுட்டிக் காட்டினோம். இதை வைத்துக் கொண்டு, இப்போது கோதுமைக்கு கொள்முதல் விலை 117 என்றும், நெல்லுக்கு கொள்முதல் விலை 95 என்றும் நிர்ணயித்திருக்கிறார்கள். ஆனால், செலவைக் கணக்கிடும்போது, கோதுமையை விட நெல்லுக்குத்தான் அதிகமாகின்றது என்பதை, அதற்கான ஆய்வுக் குழு அறிக்கையின் பரிந்துரையையும் எடுத்துத் தெரிவித்திருக்கிறோம். கோதுமைக்கு குறைவான தண்ணீர் இருந்தால் போதும்; ஆனால், நெல்லுக்கு அதிகமான தண்ணீர் வேண்டும் என்பதையும் எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது.

(பிற்பகல் 2–10)

கோதுமைக்குப் பயன்படுத்துகிற உரத்தின் அளவையும், நெல்லுக்குப் பயன்படுத்துகிற உரத்தின் அளவையும் அங்கே எடுத்துச் சொல்லியிருக்கிறோம். அதை நாம் எடுத்துச் சொல்லுகிறோம் என்று இல்லாமல் வல்லுநர் குழுக்கள் ஆய்வு நடத்திய அறிக்கையிலிருந்து தெளிவு படுத்தியுள்ளோம். நெல்லுக்கு உரத்தின் விளைவு அதிகமாக ஆகிறது, செலவினம் அதிகமாக ஆகிறது—இதையெல்லாம் காண்கிறபோது கோதுமைக்கு என்ன விலை நிர்ணயிக்கிறார்களோ அந்த அளவுக்காவது நெல்லுக்கு விலை நிர்ணயிக்க வேண்டுமென்று வாதிட்டு வந்திருக்கிறோம். என்ன முடிவை மத்திய அரசு எடுக்கிறது என்று தெரியவில்லை. இந்த மன்றத்தின் ஒட்டு மொத்தமான பரிந்துரையோடு மத்திய அரசை வற்புறுத்தி வருகிறோம்.

விவசாயிகள் கடனை ரத்து செய்ததை ஈடு கட்ட வேண்டுமென்று எடுத்துச் சொல்லியிருக்கிறோம். விவசாயிகளின் அவல நிலையை எடுத்துச் சொல்லியிருக்கிறோம். திட்ட அமைச்சராகவும், திட்டக்குழு துணைத் தலைவராகவும் உள்ள திரு. திவாரி அவர்களிடத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், நானும், மின்துறை அமைச்சர் அவர்களும் மூன்றரை மணி நேரத்திற்கு மேல் பல்வேறு நிலைமைகளை வாதிட்டோம். சிறு விவசாயிகள், கடனைத் தாங்க முடியாத விவசாயிகள், கடனை எந்த வகையிலும் திருப்பிச் செலுத்த முடியாத விவசாயிகள், அடிப்படை உடைமைகள், மற்றவற்றை விற்றுத்தான் கடனைச் செலுத்த வேண்டுமென்ற நிலையில் உள்ள விவசாயிகள் கடனை ரத்து செய்வதால் ஏற்படுகின்ற பொறுப்பை

மாநில அரசிடம் மட்டும் விட்டால் நல்லதல்ல, மத்திய அரசும் அந்தப் பொறுப்பை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று சொன்னோம். அப்போதுதான் எதிர்காலத்திலே நெல் உற்பத்திச் செய்யும் விவசாயிகள் கஷ்டத்தைப் போக்கும் பொறுப்பில் மாநில அரசுக்கு மத்திய அரசு உதவ முன் வராவிட்டால் எதிர் காலத்திலே அது விவசாயப் பிரச்சினையாக இல்லாமல், கொள் முதல் விலை உயர்வுப் பிரச்சினையாக இல்லாமல் சட்டம் ஒழுங்கு பிரச்சினையாக மாறிவிடும். இந்நிலை உருவாகி வருகிறது. இன்றைக்கே கூட மத்திய அரசு அதற்கு ஈடு கொடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது. நம்முடைய மாநிலத்தின் நிலை பற்றியும் மற்றைய மாநிலங்களின் நிலை பற்றியும் 'டைம்ஸ் ஆப் இந்தியா' பத்திரிகை இரண்டு நாட்களுக்கு முன்னால் அந்தப் புள்ளி விவரங்களை மிகத் தெளிவுபட எடுத்துச் சொல்லியிருக்கிறது. இதையும் கூட திட்டக்குழு துணைத் தலைவரிடத்தில் தெளிவுபட எடுத்துக் காட்டினோம்.

மகாராஷ்டிராவில் கூட்டுறவுச் சங்கங்களில் விவசாயிகள் வாங்கியிருக்கும் கடன் அளவு 294.47 கோடி ரூபாய்; காலம் கடந்த கடன்களாக இருப்பது 157.52 கோடி ரூபாய். உத்தர பிரதேசத்தில் கடன்கள் 191.92 கோடி ரூபாய்; காலம் கடந்த கடன்கள் 91.35 கோடி ரூபாய். குஜராத்தில் கடன்கள் 218.01 கோடி ரூபாய்; காலம் கடந்த கடன்கள் 90.32 கோடி ரூபாய். மத்தியப் பிரதேசத்தில் 121.38 கோடி ரூபாய்; காலம் கடந்த கடன் 75.31 கோடி ரூபாய். தமிழ்நாட்டில் கடன்கள் 270.26 கோடி ரூபாய்; காலம் கடந்த கடன் 68.58 கோடி ரூபாய். கர்நாடகத்தில் கடன்கள் 129 கோடி ரூபாய்; காலம் கடந்த கடன்கள் 63.42 கோடி ரூபாய். கர்நாடகத்தில் இந்தப் பிரச்சினை எந்த அளவுக்குப் போயிற்று என்று நேற்றுக் கூடச் சுட்டிக் காட்டினார்கள். அங்கு அது சட்டம் ஒழுங்குப் பிரச்சினையாக இதுவரை 17 பேர் உயிரிழக்கக்கூடிய அளவுக்கு துப்பாக்கிப் பிரயோகம் நடந்திருக்கிறது. எல்லா மாநிலங்களும் புள்ளி விவரங்களைக் கொடுத்திருக்கிறது. மகாராஷ்டிராவும் அந்த உதவியைக் கோருகிறது.

மற்றவற்றுக்கு மத்திய அரசு உதவி தராமல் இருக்கிறதா என்றால் இல்லை. ஆலைகள் என்று வரும்போது பல்வேறு சிக் மில்கள் நடைபெறாத நிலை ஏற்படும்போது மத்திய அரசே ஏற்று கடனின் பெரும்பகுதியை பல கோடி ரூபாயைத் தள்ளுபடி செய்திருக்கிறது. பெரிய பெரிய தொழில்கள் மூட வேண்டிய கட்டம் வரும்போது அந்தத் தொழிலை எடுத்து நடத்தும் வகையில் யாரோ பட்ட கடனை மத்திய அரசினர் தள்ளுபடி செய்கிறார்கள். அந்த நிலைமையில் மத்திய அரசு இருக்கிறது. தொழில்களுக்குப் பட்டிருக்கிற கடனை





ஏற்றுக்கொள்ளுகிற பொறுப்பு மத்திய அரசுக்கு வரும்போது விவசாயிகள் கடனை தள்ளுபடி செய்கிற பொறுப்பை மாநில அரசுதான் ஏற்றுக் கொள்ள வேண்டும். மத்திய அர சுக்கு அந்தப் பொறுப்பு இல்லையென்று சொல்லுவது நியாயமில்லை என்ற வாதங்களை எல்லாம் எடுத்து வைத்தி ருக்கிறோம். அவர்கள் உடனடியாக ஏற்றுக் கொள்கிற நிலை இல்லை. ஒரு தடவைக்கு பல தடவை வற்புறுத்த வேண்டுமென்று இந்த அரசு கருதி அதற்கான முயற்சிகளில் ஈடுபட்டுக்கொண்டிருக்கிறது என்பதைக் குறிப்பிட விரும்பு கிறேன்.

மின் உற்பத்தியைப் பற்றி இங்கே மாண்புமிகு உறுப்பினர் ஹாஜா செரிப் அவர்கள் குறிப்பிட்டார்கள். நாம் போட்டி ருக்கிற திட்டங்களிலே இந்த ஆண்டு 5 திட்டங்களிலே அதிக மான தொகை மின் உற்பத்திக்குத் தந்திருக்கிறோம். தொடர்ந்து வந்திருக்கிற அரசும், இதற்கு முன்னாலேயும் சரி மின் உற்பத்திக்கு அதிகமான முக்கியத்துவம் கொடுத்து வந்திருக்கிறோம். இருந்தாலும்கூட நம்முடைய மாநிலத் திலே சிறு தொழில்கள் வளர்ச்சி, மற்ற வளர்ச்சிகளிலே ஈடு படக்கூடிய அளவிற்கு மின் உபயோகம் அதிகமாக இருக்கிறது. இந்தியாவிலேயே அதிகமானஅளவுக்கு கிணற்று நீர்ப்பாசனத்தை மின் இறைவையின் மூலமாக வைத்துப் பாசனம் செய்கிற நிலைமை தமிழகத்திலே தான் அதிகமாக இருக்கின்றது. தமிழகத்திலே 9 லட்சத்து சில்லரை கிணறுகளுக்கு மின் இணைப்புத் தந்திருக்கிறோம். ஆகவே இது ஆண்டுக்காண்டு அதிகமாகி, உணவு உற்பத்தி அதிகமாகிக் கொண்டு வருவதற்குக் காரணம் நாம் மின் துறையை அதிகமாக வளர்த்தது, அது மட்டுமல்லாமல் மின் இணைப்பு அதிகமாகக் கொடுத்து வந்தது, அதன் மூலமாக பாசனமும் ஏற்பட்டது. ஆகவே தான் மின் துறைக்கு அதிகமான இடம் தரப்பட வேண்டு மென்ற நோக்கத்தை நிறைவேற்றி வருகிறோம். ஆனால் இந்தக் கட்டத்திலே செலுத்தவேண்டிய கடனை செலுத்தா மல் இருக்கிற விவசாயிகள் உணர்ந்து உற்பத்திக்கு ஆகிற செலவைத்தான் நாம் தரவேண்டியிருக்கிறது. இப்போது கேரளாவில் நாம் 28 காசுக்கு வாங்கி 12 காசுக்கு விற்கி றோம் என்றால் அவர்களுக்கு நாம் சலுகையோடு தான் விற்கிறோம். அதையெல்லாம் விவசாயத் தொழிலிலே ஈடுபட்டிருக்கக்கூடியவர்கள் உணர்ந்து, அது செலவழிக்கப் பட்டு உற்பத்தியாக்கப்படுகிற ஒன்று, ஆகவே அதற்குக் கட்டணம் செலுத்தாமல் இருக்கிற போக்கு கூடாது. ஆகவே பயன்படுத்துகின்ற மின்சாரத்திற்குக் கட்டணம் செலுத்த வேண்டுமென்ற உணர்வு வந்தால்தான் இன்றைய நிலையில் மட்டுமல்ல, எதிர்காலத்திலேயும் ஒரு நிம்மதியான நிலைமை

ஏற்படும், யார் ஆட்சி பீடத்திற்கு வந்தாலும் சரி, ஆட்சியை அமைதியாகவும் முறைப்படியும் நியாயத்தின் அடிப்படையிலே யும் நடத்திச் செல்வதற்கு வழிவகை ஏற்படும். ஆகவே அதற்கு மன்ற உறுப்பினர்களும் மற்றவர்களும் ஒத்துழைப்புத் தரவேண்டும். நாம் அதிகமான அளவுக்குச் செலவு செய்து, சப்ஸிடியோடு அவர்களுக்கெல்லாம் தந்துகொண்டிருக்கிறோம். அதைக் கூட செலுத்த மறுக்கிற அளவுக்கு பிரச்சாரங்கள் நடைபெறுகின்றன. ஆங்காங்கு இருக்கிறவர்களைத் தடுத்து நிறுத்துவதற்கு பெருமுயற்சிகள் நடைபெறுகின்றன என்பதைக் கூறிக்கொள்கிறேன்.

இங்கே பல்வேறு உறுப்பினர்கள் அவரவர்களுடைய தொகுதியினுடைய நிலைமைகளைப்பற்றியெல்லாம் எடுத்துச் சொன்னார்கள்...............

<u>டாக்டர் மு. கருணாநிதி:</u> வேறு பிரச்சினைகளுக்கு அவை முன்னவர் அவர்கள் பதில் அளிக்கத் தொடங்கிவிட்ட காரணத்தால் ஒரு விளக்கம் பெற விரும்புகிறேன். டெல்லிக்குச் சென்று வந்ததைப் பற்றி அவர்கள் குறிப்பிட்டார்கள். விவசாயிகளுடைய பிரச்சினைகளைப்பற்றி பேசியதையும் கொள் முதல் விலைப்பற்றி பேசியதையும் அதிலே ஏற்பட்ட முடிவுகளையும் முடிவு பெறாத சூழ்நிலைகளையும் விளக்கியிருக்கிறார்கள். ஆண்டுத் திட்டம் பற்றியும் அவர்கள் அங்கே பேசியிருக்கிறார்கள் என்று அறிகிறேன். 'அதிலே மத்திய திட்டக் குழு ஏற்கனவே 383 கோடி ரூபாய் அளவில்தான் 1980–81 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாட்டு ஆண்டுத் திட்டம் இருக்க வேண்டும் என்று விரும்பியதாகவும் அதற்குக்கூட ரிசோர்சஸ், நிதி ஆதாரத்தில் 15 கோடி ரூபாய் பற்றாக்குறை நிலை இருந்ததால் அந்த நிதி ஆதாரத்தை தமிழக அரசு-மாநில அரசு எப்படி சரிக்கட்டப் போகின்றது என்பதை விளக்கவேண்டுமென்று கூறியதாகவும் அதற்கு நேர்மாறாக நீங்கள் தயாரித்துத் தந்திருக்கிற நிதிநிலைக் குறிப்பில், இங்கே வைக்கப்பட்டிருக்கிற பட்ஜெட்டிலே 436·37 கோடி ரூபாய்என்று குறிப்பிட்டிருக்கிறீர்கள். 383 கோடிக்கே 15 கோடி ரூபாய் ரிசோர்ஸ் திரட்டவேண்டும், ' அதற்கு என்ன என்ன வழிமுறைகளை வைத்திருக்கிறீர்கள் என்று மத்திய திட்டக் குழு கேட்கிற சூழ்நிலையில் 436·37 கோடி ரூபாய் என்று முன் கூட்டியே எப்படி அறுதியிட்டு பட்ஜெட்டிலே அறிவித்தீர்கள் என்ற சந்தேகத்தை விளக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

<u>மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:</u> மாண்புமிகு பேரவைத் துணை தலைவர் அவர்களே, முன்பு மத்திய அரசு ஒப்புக்கொண்டது 383 கோடி ரூபாய் இந்த மாநிலத்தினுடைய





ஆண்டுத் திட்டத்திற்கு ஒதுக்கித் தந்தார்கள். அதற்குப் பிறகு
வேறு பலவகைகளில், அவற்றையெல்லாம் விவரமாகச்
சொல்ல எனக்கு இயலாமல் இருக்கிறேன். அவர்களிடத்
திலே எடுத்துத் தெரிவித்து, கூடுதலாக வருமானம் வருகிற
சூழ்நிலைகளையெல்லாம் அவர்களிடத்திலே எடுத்துக்காட்டி ஓர
ளவுக்கு அவர்களும் வந்திருக்கிறார்கள். ஆனால், மேற்
கொண்டு மத்திய அரசு அதிகமான பொறுப்பை எடுத்துக்
கொள்ள வேண்டுமென்று நாம் வற்புறுத்தினோம். இருந்
தாலும் நாம் 431 கோடிகளை தரவேண்டுமென்று வற்புறுத்து
கின்ற அளவுக்கு வற்புறுத்திக்கொண்டுதான் இருக்கிறோம்.
அவர்கள் அந்த அளவுக்கு வராவிட்டாலும் ஓரளவுக்கு
நடுவிலே வந்து நிற்பார்கள் 412 கோடிக்கோ அல்லது
415 கோடிக்கோ அந்த பேச்சு வார்த்தைகளிலே அவர்கள்
வரக்கூடும். அவர்கள் 436 கோடி என்ற அளவுக்குத்
திட்டம் தரப்படுமானால் நம்முடைய திட்டச் செலவு பெர்கேப்
பிட்டா எக்ஸ்பென்டிச்சர் ஓரளவுக்கு அதிகமாக இருக்கும்.
குறைந்துகொண்டு வருகிறது என்ற குறைபாடு இல்லாமல்
இருக்கும் என்பதற்காகத்தான் திட்டத்தை போட்டோம்.
கடைசியிலே மத்திய அரசு எதை ஒத்துக்கொள்ளுகிறதோ அந்த
அளவுக்குத்தான் நாம் வந்து நிற்க வேண்டிவரும். நாம்
கூடுதலாகச் செலவழிக்கவேண்டிய கட்டம் வந்தால் நாம் வேறு
வகையிலே நம் நிதி ஆதாரத்தைத் தேட வேண்டி வருகிறது.
அப்படி நாம் தேடுவது என்று முடிவு செய்துவிட்டால் தேடுவ
தற்கான வழிவகைகளைப் பெற்றுகொண்டு இந்த அவையின்
முன் வைத்துத்தான் தேடுவதற்கான சூழ்நிலைகளைப் பெற
வேண்டி வரும். 383 கோடி என்று வைத்தாலும் கூட இப்
போது பேச்சு வார்த்தையின் மூலமாக ஓரளவுக்கு கணிசமான
அளவுக்கு உயர்ந்திருக்கிறது, அவர்களும் ஒப்புக்கொள்கிற
அளவுக்கு.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

[பிற்பகல் 2-20]

ஆனால் மேற்கொண்டும் நாம் செலவழித்து, 436 கோடியைச்
செலவழிப்பது பற்றாக்குறையாக இருக்கிற நிதி ஆதாரத்தை
நாமே தேடுவது என்றால் அதற்கு வழிவகைளை நாம்தான் காண
வேண்டும். அதற்கு அவர்கள் ஏற்றுக்கொள்ள மாட்டேன்
என்று சொல்லிவிட்டால் நாம் தான் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

<u>டாக்டர் மு. கருணாநிதி:</u> தலைவரவர்களே, நம்முடைய
மாநிலத்தினுடைய ஆண்டுத் திட்டம் 500 கோடி ரூபாய் அள
விற்கு வர வேண்டும் என்கிற ஆசை உடையவன் நான் என்பதும்
அதிலே திராவிட முன்னேற்றக்கழகத்திற்கு இருவேறு கருத்துக்

கள் இல்லை என்பதும் அவை முன்னவருக்கு நன்றாகத்
தெரியும் எனவே, ஏற்கனவே இருந்த அனுப
வத்தின் காரணமாகச் சொல்கிறேன். நான் கேட்க விரும்புவது,
383 கோடி ரூபாய் ஆண்டுத் திட்டத்திற்கே 15 கோடி
ரூபாய் பற்றாக்குறை ஏற்படும்; அதற்கு ரிசோர்ஸ் என்ன?
என்ன கண்டுபிடிக்கப் போகிறீர்கள் என்று கேட்டிருக்கிறார்கள்.
436 கோடி ரூபாய் என்று அவர்கள் ஒருவேளை ஒத்துக்கொண்
டாலும் கூட அதற்கு என்னென்ன ரிசோர்சஸ். எந்த அளவிற்கு
அதிலே பற்றாக்குறை ஏற்படும் என்பதெல்லாம் கணக்கிடப்
பட்டிருக்கிறதா?

<u>மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:</u> தலைவரவர்
களே, முடிவு ஏற்பட்டதற்குப் பிறகு திட்டவட்டமாக நான்
தெரிவிக்கிறேன். ஆனால் ஓரளவுக்குக் கணிசமாக உயர்வ
தற்கு வேறு பல கூறுகளெல்லாம் நமக்கு ஏற்பட்டிருப்பதன்
காரணமாகவும், அவர்களிடத்திலே எடுத்துத் தெரிவித்து
அவர்களும் ஒப்புக்கொண்டிருப்பதன் காரணமாகவும் ஓரளவுக்கு
ஒத்து வரக்கூடும் வந்ததற்குப் பிறகு 436 கோடியிலே வந்து
நிற்பதா அல்லது இருவரும் ஒத்துக்கொண்டு, புதிய
ஆதாரம் தேடாத அளவிற்கு அந்த அளவிலே நிற்பதா
என்பதைத் திட்டவட்டமாக இந்த அவைக்கு
நான் தெரிவிக்கிறேன். இந்த ஐயப்பாட்டை அவர்கள் எழுப்
பியது உள்ளபடியே விளக்கங்கள் தருவதற்கு வாய்ப்பாக இருந்
தது. ஏனென்றால் 383 கோடிக்கும் 436 கோடிக்கும்
இருக்கிற இடைவெளி எப்படி நிறைவேற்றப்படும் என்ற
ஐயப்பாடு எழுவது இயற்கைதான். ஆனால் ஓரளவுக்கு நாம்
வந்து சேர்ந்திருக்கிறோம்; அது இன்னும் திட்டவட்டமாக
முடியவில்லை. மேற்கொண்டும் நாம் பேச்சுவார்த்தை
நடத்த வேண்டியதிருப்பதன் காரணமாக, நடத்திமுடித்த
தற்குப் பிறகு நல்லதொரு சூழ்நிலை ஏற்படும் என்று நான்
கருதுகிறேன்.

பல்வேறு துறைகளைப்பற்றி எடுத்துச் சொன்ன கருத்துக்
களெல்லாம் இங்கே குறிக்கப்பட்டிருக்கின்ற காரணத்தினா
லும், அவற்றைப் பற்றிய முடிவுகளெல்லாம், இங்கே முறைப்
படி எடுக்கப்பட்டு, நடைமுறைப் படுத்தப்படும் என்கிற நிலைமை
இருப்பதன் காரணமாகவும், அவற்றையெல்லாம் ஒவ்வொன்
றாக எடுத்துச் சொல்ல வாய்ப்பு இல்லை என்று நான் கூறிக்
கொள்ள விரும்புகிறேன்.



சொன்னார்
வேறு பல பிரச்சினைகளைப் பற்றியெல்லாம்
கள். சம்பந்தப்பட்ட மசோதாக்கள் வருகின்றபொழுது
அந்தந்தத் துறை அமைச்சர்கள் விவரங்களைக் தெளிவாகத்
தருவார்கள். நில உச்ச வரம்பு, மற்றவைப் பற்றியெல்லாம்
இங்கே எடுத்துச் சொன்னார்கள். அதுபற்றிய மசோதாக்
கள் பலவும் வரவிருக்கின்ற காரணத்தினால் அவற்றைப்
பற்றி நடைபெறுகின்ற ஆய்வின் பொழுது விரிவாகக் கருத்துக்
களை எடுத்துப் பரிமாறவும், அதற்குப் பதிலுரைக்கவும் வழி
யேற்படும் என்ற காரணத்தினால் அவற்றில் எல்லாம் நான்
இறங்க விரும்பவில்லை.

நேற்று நான் இங்கே அவையிலே எடுத்துச் சொல்கின்ற
பொழுது உறுப்பினர்களுக்கு அளிக்கப் பெறும் தொலை பேசி
வசதிகள் பற்றி அறிவித்தேன். மாண்புமிகு உறுப்பினர்கள்
தங்கள் சொந்த உபயோகத்திலுள்ள தொலைபேசி ஒன்றிற்
கான வாடகைகள் கட்டணத்தை அரசு ஏற்கின்றது ; ப்ரீ
காலுக்கு மேல் உள்ள கால் சார்ஜஸ், டிரங்க் கால் சார்ஜஸ்
உறுப்பினர்களே ஏற்க வேண்டும், இது ஜூலை ஒன்றாம்
தேதி முதல் அமலுக்கு வரும் என்று தெரிவித்தேன். மேலும்
மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தொலைபேசி படியாக தற்
பொழுது ரூபாய் 150 வழங்கப் பெற்று வருகிறது. தொலை
பேசி வைத்துக் கொள்ளாத உறுப்பினர்கள் இந்தத் தொலைபேசிப்
படி 150க்குப் பதிலாக அவர்கள் மட்டும் ரூபாய் 200-ஐ
மேற்கண்ட தேதியிலிருந்து பெறுவார்கள் என்று இப்பொழுது
நான் அறிவிக்க விரும்புகிறேன். தொலைபேசி வைத்திருப்பவர்
கள் 150 ரூபாய் அவர்கள் தொலைபேசி படி என்று வாங்கு
கிறார்கள். அவர்களுக்கு இந்த வாடகைக் கட்டணம் மூன்று
மாதத்திற்கு ஒரு தடவை 175 ரூபாய் கட்ட வேண்டும். அதை
அரசு ஏற்றுக்கொள்ளும் என்று சொல்லியதன் காரணமாகத்
தொலைபேசி வைக்காதவர்களுக்கு என்ன பலன் என்று கேட்
டார்கள் ; கேட்டார்கள், ஆகவேதான், தொலைபேசி வைக்
காதவர்களுக்கு என்ன பலன் என்று கேட்டால் அவர்களுக்கு
200 ரூபாய் —50 ரூபாய் கூடுதலாக அலவன்ஸ் தரப்படும்.
தொலைபேசி வைத்து இருப்பவர்களுக்கு 150 ரூபாய் அலவன்ஸும்
இந்த வாடகையையும் இந்த அரசு கட்டும் என்பதை இப்பொழுது
தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

சைக்கிள்களுக்கு முன் பணம் வேண்டும்
கிராம வசதிகளுக்கு
என்கின்ற ஒரு கோரிக்கை நீண்ட பெரும் காலமாக வைத்திருந்
தார்கள். கிராம அதிகாரிகளின் நீண்ட நாள்கோரிக்கைகளில் ஒன்று
சைக்கிள் வாங்க முன்பணம் வேண்டும் என்பது. முதல் கட்டமாக

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1980 ஜுலை 30

கிராம முன்சீப், கர்ணம் ஆகியோருக்கு சைக்கிள் முன் பணமாக ரூபாய் 600 வழங்கப்படும். தொடர்ந்து ஐந்தாண்டுக் காலத்திற்குப் பணியில் இருக்கக் கூடியவர்களுக்கு மட்டுமே இது வழங்கப்படும். அவர்களின் சம்பளம் குறைவு என்ற காரணத்தினால் கடனை மற்றவர்களுக்கு விதிப்பது 36 திங்களிலே அவர்கள் தவணை முறையிலே செலுத்த வேண்டும். ஆனால் இவர்களுடைய சம்பளம் 136, 135 என்று இருப்பதன் காரணமாக அதை 36 தவணைகளிலே கட்டுவது கடினம் என்கின்ற காரணத்தினால் இவர்களுக்கு மட்டும் 48 திங்களிலே இவர்கள் திருப்பி, தவணையில் செலுத்தலாம். ஆனால் அரசினுடைய வட்டி விகிதம் சாதாரண வட்டி விகிதமாக அமையும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, நேற்றைய தினம் முதல்வரவர்கள் இந்தக் கர்ணமெல்லாம் ஒழிக்கப்பட்டு விடும் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அவர்களை ஒழிப்பதாக ஒரு திட்டமிட்டு, இன்னும் இரண்டு மாதங்களிலோ ' மூன்று மாதங்களிலோ '' ஒழிக்கிற நேரத்தில், அவர்களுக்கு என்று இப்படி சைக்கிள் போன்ற சலுகைகளை அளித்து, அதை 48 மாத தவணைகளிலே கட்டலாம் என்று சொன்னால் இந்த மூன்று மாத காலத்திற்குள் அவர்கள் ஒழிக்கப்பட்டு விட்ட பிறகு, அந்தக் கடனையும் ரத்து செய்ய வேண்டிய அவசியம் இந்த அரசுக்கு ஏற்படுமா என்று அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அதனால்தான் 5 ஆண்டுகாலம் இருக்கக் கூடியவர்களாகப் பார்த்து தர வேண்டுமென்று நாம் சொல்லியிருக்கிறோம். ஆகவே, வயதானவர்களைப் பற்றி அல்ல. 49 மாதங்கள் என்று வருகின்றபொழுது 4 ஆண்டுகள் என்று ஆகிவிடுகிறது. 5 ஆண்டாக இருந்தால் அதைக் கட்ட முடியும், இல்லாவிட்டால் கட்ட முடியாது என்பதற்காக, 5 ஆண்டுகள் என்ற விதியைப் போடுகிறோம்.

சைக்கிள்கள் மீதான விற்பனை வரியை 6 சதவீதத்திலிருந்து 3, சதவீதமாக அரசு குறைத்ததை மன்ற உறுப்பினர்கள் அறிவார்கள். அதனையொட்டி, சைக்கிள் ரிக்ஷா, 3 சக்கர சைக்கிள் வண்டிகள், அதன் உறுப்புப் பகுதிகள், டையர், டியூப், ஆகியவை உட்பட அனைத்து உறுப்புப் பகுதிகள் ஆகியவற்றின் மீதான விற்பனை வரியை 6 சதவீதத்திலிருந்து 3 சதவீதமாகக் குறைக்க அரசு முடிவு செய்துள்ளது. சைக்கிள் மீதான விற்பனை வரி குறைப்பு அளிக்கப்பட்ட 3 –7 –1980 முதல் இது செயல்படுத்தப்படும். இடைக்



1980 ஜுலை 30] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

காலத்தில், கூடுதல் வரி பொது மக்களிடத்திலிருந்து வசூலிக்கப்பட்டிருப்பின் அதனை அரசே பெறுவதற்கான ஏற்பாடும் சட்டத்திருத்தத்தில் செய்யப்படும் என்பதையும் நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

வரவு–செலவு திட்டத்தின் பொழுது, பல முனை வரி ஒரு முனை வரியாக பல பொருட்களுக்கு மாற்றி அமைக்கப்பட்டது. பொதுவாக, இந்தப் பொருள்களின் விற்பனை இரண்டு கட்டங்களில் நடைபெறுவதால், 4 சதவீத பல முனை விற்பனை வரி 8 சதவீத ஒரு. முனை விற்பனை வரியாக மாற்றி யமைக்கப்பட்டது. எனினும், ''பாலித்தீன் பைகள், பாலித்தீன் பிரம்புகள், அதாவது, ஃபர்னிச்சருக்கு, பாலி ப்ரொஃப்லின் பைகள், பாலித்தீன் –பாலி ப்ரொஃப்லினில் நெய்யப்பட்ட சாக்குகள், ஆகியவைகள் ஒரு கட்டமாகவே விற்பனையாகிற காரணத்தாலே, எனவே, 4 சதவீதம் தான் நாங்கள் செலுத்தி வந்தோம். இப்பொழுது, ஒருமுனையாக்கி 8 சதவீதம் ஆக்கிவிட்டதன் காரணமாக, எங்களுடைய வியாபாரம் கெட்டுவிடுகிறது. மற்றைய மாநிலங்களிலிருந்து போட்டியும் இருக்கிறது'' என்று அவர்கள் எடுத்துத் தெரிவித்ததன் காரணமாக, அவைகளைப் பொறுத்தவரையில், ஒரு முனை என்று ஆக்கி 8 சதவீதம் என்று ஆக்கினோம். அதை மாற்றி ஒரே ஒரு கட்டத்தில் மட்டுமே விற்பனை பொதுவாக நடைபெறுவதால், இந்த 4 இனங்களின் மீதான ஒரு முனை விற்பனை வரியை 8 சதவீதத்திலிருந்து 4 சதவீதமாக ஆகக் குறைக்க அரசு முடிவு செய்துள்ளது. அதுவும் 3 –7 –1980 முதல் செயல்படும். இடையில், கூடுதல் வரி வசூலிக்கப்பட்டிருப்பின் அரசு அதனைப் பெறுவதற்கான ஏற்பாடும் சட்டத்திருத்தத்தில் தெரியும்.

சின்னஞ்சிறு தொழில்கள் உற்பத்தி செய்யும் மெழுகுவர்த்தி மீதான விற்பனை வரி 8 சதவீதம் ஒரு முனை வரியிலிருந்து 4 சதவீதம் ஒருமுனை வரியாகக் குறைக்கப்படும். அது நாளை முதல் அமுலுக்கு வரும். 8 சதவீதம் ஆக இருப்பதன் காரணமாக, அது கிட்டத்தட்ட குடிசைத் தொழிலாக இருப்பதன் காரணமாகவும், அது பாதிக்கிறது, போட்டி போட முடியவில்லையென்று சொன்னதன் காரணமாக, 8 சதவீதமாக இருக்கிற ஒரு முனையிலிருந்து 4 சதவீதம் ஒரு முனை வரியாக்கித் தரப்படும். இது நாளை முதல் அமுலுக்கு வருகின்றது.

பிளாஸ்டிக் பொருள்கள் செய்வதற்கான அடிப்படைப் பொருள்களான Polythene granules high density and low density Polythelene koylene (Poly-Propylene)

ஆகியவற்றின் மீது தற்பொழுது விற்பனை வரி 8 சதவீதம், ஒருமுனை வரியாக இருந்து வருகிறது. இதன் விளைவாக, அவற்றைப் பயன்படுத்தும் உற்பத்தியாளர்கள் அண்டை மாநிலங்களில் அவற்றை வாங்கி, தமிழ் நாட்டிற்குக் கொண்டு வருகின்றனர். அதனால் தமிழ் நாட்டில் நடைபெறக்கூடிய வியாபாரம் மற்ற மாநிலங்களுக்குச் செல்வதோடு, விற்பனை வரியும் தமிழ் நாட்டிற்குக் கிடைக்காது குறைந்து விடுகிறது என்றும் எடுத்துக் கூறப்பட்டு வந்துள்ளது. அதன் அடிப்படையில், இந்த மூலப் பொருள்களுக்கான விற்பனை வரியை, 8 சதவீதத்திலிருந்து 4 சதவீதம் ஆகக் குறைக்க அரசு முடிவு செய்துள்ளது. இது நாளை முதல் அமுலுக்கு வரும். இதன் விளைவாக மீண்டும், இம்மாதிரி பொருள்களின் விற்பனை தமிழ் நாட்டிலே நடைபெற வாய்ப்புகள் ஏற்படும் என்பதையும் நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, அகில இந்திய நுகர்வோர் குறியீட்டு எண் 352 புள்ளியை எட்டியதை ஒட்டி, அரசு தனது அலுவலவர்களுக்கு கடந்த மே மாதம் முதல் அகவிலைப்படி உயர்வு ஒன்றைஅளித்தது. குறியீட்டு எண் 360 புள்ளியை எட்டியதன் அடிப்படையில் மத்திய அரசு அகவிலைப்படி உயர்வினை அண்மையில் அறிவித்துள்ளது. தமிழக அரசு 360 புள்ளிகள் அடிப்படையில் 1 7 1980 முதல் அகவிலைப்படி உயர்வு ஒன்றை அளிக்க முடிவு செய்தது. முன்பு அளிக்கப்பட்டதைப் போன்று இந்த உயர்வு ரூ. 6 முதல் ரூ. 30 வரையில் அமையும்.

அரசு அலுவலர்கள், உள்ளாட்சி நிறுவன அலுவலர்கள், பள்ளி—கல்லூரி ஆசிரியர்கள், கல்வி நிறுவனங்களில் பணி புரியும் அலுவலர்கள் இவர்கள் அனைவருக்கும் இந்தச் சலுகை அளிக்கப்படும். முழு ஆண்டில் ரூ 12 கோடி செலவில் அளிக்கப்படும் இந்த அகவிலைப்படி உயர்வு மொத்தம் சுமார் ஏழு இலட்சத்து 60 ஆயிரம் பேருக்குப் பயன்தரும். அதனை ஒட்டி ஓய்வூதியம் பெறுகிறவர்களுக்கும், ஏற்ற அகவிலைப்படி உயர்வு 1–7–1980 முதல் அளிக்கப்படும் என்பதையும் நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன் (பலத்த மேசையைத் தட்டல் ஒலி), ஆக இந்த நிதிநிலை அறிக்கையைப் பொறுத்தவரையிலும் இவ்வளவுதான் முடிந்தவைகள் என்றாலுங்கூட, மன்ற உறுப்பினர்களுடைய முழு ஆதரவோடு இந்த மானியக் கோரிக்கைகள் எல்லாம் நிறைவேற்றப்பட்டு வந்திருக்கின்றன இந்த நிதி ஒதுக்கீட்டுச் சட்ட முன் வடிவையும் நிறை வேற்றித் தருமாறு மன்ற உறுப்பினர்கள் அத்தனை பேரையும் நான் மீண்டும் கேட்டுக் கொண்டு, என் உரையை முடித்துக் கொள்கிறேன்





[பிற்பகல் 2–30]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன் உள்ள கேள்வி :—

'' தமிழ்நாடு, 1980ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 2) சட்ட முன் வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண் 32/1980) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற்றது

பிரிவு 2—விவர அட்டவணை பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று நிறைவேற்றப் பெற்றது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந் தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று நிறைவேற்றப் பெற்றன.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

'' தமிழ்நாடு 1980 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 2) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண் 32/1980 நிறைவேற்றப் பெற வேண்டும் ''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று நிறைவேற்றப் பெற்றது.

மாண்புமிகு பேரவை துணைத் தலைவர் : பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை (31-7-1980) காலை 9-00 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 2.31 மணிக்கு ஒத்தி வைக்கப் பெற்றது.

## 5. பேரவை முன் வைக்கப் பெற்ற ஏடுகள்.

### அ. சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்.

69. சென்னை—25, கிண்டியிலுள்ள பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பப் பல்கலைக் கழகத்தின் கல்விக் கழகம் தனது அலுவல்களைத் தொடங்கும் தேதி குறித்து கல்வித் துறையின் 1—4—1980 ஆம் தேதியிடப் பெற்ற 616 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [1978ஆம் ஆண்டு பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பப் பல்கலைக் கழகச் சட்டத்தின் (தமிழ் நாடு சட்டம் 30/1978) 43(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

70. சென்னை, மணலியிலுள்ள இந்தியன் ஆர்க்கானிக் கெமிகல் நிறுவனத்தில் தாயாரிக்கப் பெறும் செயற்கை இழை விற்பனையின் மீது செலுத்தத் தக்க விற்பனை வரியை நான்கு சதவிகிதத்திலிருந்து இரண்டு சதவிகிதமாகக் குறைப்பது குறித்து, வணிக வரிகள், சமய அறக்கட்டளைகள் துறையின் 3—5—1980 ஆம் தேதியிடப் பெற்ற 421 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ் நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ் நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

71. வருவாய்த் துறையில் 26—4—1971 ஆம் தேதியன்று வெளியாகி, 12—5—1971 ஆம் தேதியிடப் பெற்ற தமிழ்நாடு அரசிதழின் பாகம் III பக்கம் 588-ல் (ஆங்கிலத்தில்) வெளியான III, 91 ஆம் எண் அறிவிப்பில் திருத்தமொன்று செய்வது குறித்து, வணிக வரிகள்—சமய அறக்கட்டளைகள் துறையின் 30—11—1979 ஆம் தேதியிடப் பெற்ற 1971 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ் நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ் நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

### (ஆ) அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

எதுவும் இல்லை.

## LIST OF AGENTS FOR THE SALE OF TAMIL NADU GOVERNMENT PUBLICATIONS IN MADRAS CITY.

1 Account Test Institute, Egmore, Madras-8.
2 The City Book Company, Madras-4.
3 Higginbothams (Private) Limited, Madras-2.
4 P. Varadachary and Company, Madras-1.
5 C. Subbiah Chetty and Company, Madras-5.
6 The Universal Book House, Moore Market, Madras-3.
7 C. Sitharaman and Company, Madras-14.
8 Mohan Pathippagam and Book Depot, Madras-5.
9 C. Venkatesan Chetty and Company, No. 8-C, Pycrofts Road, Madras-5.
10 The South India Saiva Siddhanta Works Publishing Society, (Tirunelveli), Limited, Madras 1.
11 The Sangam Publishers, No. 11, Sunkurama Chetty Street Madras-1.
12 New Century Book House (Private), Limited, Madras-2.
13 Kalaivani Book Centre, No. 1, Ponnaiamman Koil Street, Egmore Madras-8.

### IN MOFFASIL OF TAMIL NADU.

1 A. Venkatasubban and Company, Vellore (North Arcot) District.
2 Bharathamatha Book Depot, Thanjavur (Tanjore District).
3 P. V. Nathan and Company, Kumbakonam (Tanjore District).
4 Appar Book Stall, Thanjavur.
5 P. N. Swaminathan and Company, Bazaar Street, Pudukkottai.
6 Palaniappa Brothers, Tiruchirappalli-2.
7 S. R. Subramania Pillai, Tirunelveli Junction.
8 B. Aruldoss, Villupuram (South Arcot District).
9 Vasantham Stores, Booksellers, 9/31, Cross Cut Road, Coimbatore-12.
10 Mercury Book Company, 20, Karuppa Gounder Street, Coimbatore-1.
11 S. M. Jegannatham Book House, 35, Nandhi Koil Street, Tiruchi-1.
12 Ganesh Stores, South Car Street, Sivakasi.
13 Mary Martin, Booksellers, Kotagiri (The Nilgiris).
14 A. K. Chandriah Chettiar and Sons, Salem-1.
15 Parameswari Book Shop, No. 45-D, Old Market Street, Salem.
16 Meenakshi Pathippagam, Pudukkottai.
17 K. V. Narayana Iyer and Sons, Dindigul, Madurai District.
18 Jayakumari Stores, Nagercoil (Kanyakumari District).
19 Baby Stores, Booksellers, Villupuram (South Arcot District).
20 Dinamani Stores, No. 3/1, Old Post Office Road, Coimbatore-18.
21 Kumaran Book Depot, Book-sellers, Erode-1.
22 Vela Book Company, No. A. Annaji Rao Street, Erode-1.
23 Radhamani Stores, 6-A, Raja Street, Coimbatore-1.
24 Ajentha Book Centre, Salem -1.
25 Sri Vidya, 63, Tennure High Road, Tiruchy-2.
26 Sri Ramavilas Book Shop, 90, Amman Sannathi, Madurai-1.

### IN OTHER STATES.

1 Jain Book Agency, New Delhi-1.
2 International Book House, Trivandrum.
3 The Book Syndicate, Hyderabad-1.
4 Labour Law Publications, Hyderabad.
5 Puthaghalayam, Pondicherry.
6 Prabu Book Service, Gurgaon, Haryana.
7 K. P. Bogchi and Company, 286, B. B. Ganguli Street, Calcutta-17

Published under Rules 234 and 237 of the Tamil Nadu Legislative Assembly Rules and Printed by the Director of Stationery and Printing, Madras

வெளியீடு 24-1-1981] [Issued 24 1-1981

1534

தமிழ் நாடு
சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்

# TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY DEBATES

பணித்துறை வெளியீடு—OFFICIAL REPORT

வியாழக்கிழமை 1980 ஜூலை 31—தொகுதி VI—எண் 5
Thursday 31st July 1980—Volume VI No. 5

©
தமிழ் நாடு அரசு—GOVERNMENT OF TAMIL NADU
1981

சட்டமன்றப் பேரவைத் துறை, சென்னை—600 009
Assembly Department, Fort, St. George, Madras-600 009.

விலை 3-15 காசுகள்] [Price 3-15 Paise

உள்ளடக்கம்.

31—7—1980,


பக்கங்கள

வினாக்கள்—விடைகள்—
உடுக்குறியிட்ட வினாக்கள் 727—758

ஒத்திவைப்புத் தீர்மானம்—
மதுரைப் பல்கலைக் கழக ஆசிரியர்கள் போராட்டம் .. .. .. 759—768

கவன ஈர்ப்புகள்—
(அ) திருப்போரூர் ஒன்றியப் பகுதி குப்பங்களில் கோஷ்டித் தகராறு காரணமாக ஒருவர் கொலைசெய்யப்பெற்றுள்ளது. 769—774
(ஆ) மாணவர்கள் சாதிச் சான்றிதழ் பெறுவதில் உள்ள இன்னல்கள் .. 774—778

அறிவிப்புகள்—
(அ) மேலவைத் தலைவரிடமிருந்து வந்துள்ள செய்தி .. .. 778
(ஆ) மதிப்பீட்டுக் குழு தேர்தல்—நடைமுறை. .. .. 779
(இ) பேரவையின் அலுவல் .. 846—847

அரசினர் தீர்மானம்—
மதிப்பீட்டுக் குழு தேர்தல் .. 778

தனியார் அலுவல்கள்—
தனித் தீர்மானம்-மாநிலங்களுக்குக் கூடுதல் அதிகாரம் வழங்கல் .. .. 779—846

பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் .. 848


D-II A 198—1

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

வியாழக்கிழமை, 1980 ஜூலை 31.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

இன்சொலால் ஈத்தளிக்க வல்லார்க்குத் தன்சொலால்
தான்கண் டனைத்திவ் வுலகு.

இனிய சொற்களைச் சொல்லி வேண்டுவோர்க்கு வேண்டியதைச் செய்யும் ஆற்றலும், செயல் திறமும் வாய்ந்த மக்கள் தலைவர்கள் தங்களுடைய சொல்லின் ஆற்றலாலேயே இவ்வுலகை எளிதில் இயக்குவர்.

## 1. வினாக்கள்—விடைகள்.

### உடுக்குறியிட்ட வினாக்கள்.

### மீனவர்களுக்கு ஒதுக்கப்படும் படகுகள்

* வினா எண் 78—திரு. த. வேணுகோபால்: மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழக மீன்வளர்ச்சிக் கழகத்தின் படகு கட்டும் நிறுவனங்களில் படகுகள் கட்டப்பெற்றும் அவைகள் மீனவர்களுக்கு ஒதுக்கப்படாமல் இருப்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில், ஒதுக்கப்பட்ட எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :

(அ) உண்மை அல்ல.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

திரு. த. வேணுகோபால் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆங்காங்குள்ள படகு கட்டும் நிலையங்களில் நூற்றுக் கணக்கான படகுகள்—பல லட்சம் பெறுமானவை—மீனவர்களுக்கு வழங்கப்படாமல் இருக்கின்றன என்று நாங்கள் மதிப்

பீட்டுக் குழுவில் சென்றபோது தெரிவித்து இருக்கிறார்கள். ஆகவே, அப்படி பல படகுகள் அங்கே தேங்கி இருக்கின்றன என்பது அரசுக்குத் தெரியுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, 1979-80 ஆம் ஆண்டு தமிழ்நாடு மீன வளர்ச்சிக் கழகம் தனது படகு கட்டும் தளங்களின் மூலம் 30 அடி நீளமுள்ள படகுகள் 92-ம், 32 அடி நீளமுள்ள படகுகள் 115-ம் கட்டி முடிப்பதற்கான இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. இவற்றைத் தவிர 30 அடி நீளமுள்ள விசைப்படகு ஒன்றும், 32 அடி நீளமுள்ள விசைப்படகு இரண்டும் தனியார் மற்றும் கூட்டுறவு படகு கட்டும் தளங்களிலிருந்து வாங்கப்பட்டன.

185 மீனவக் குழுக்களிடமிருந்து கிடைக்கப்பெற்ற கடன் விண்ணப்பங்கள் நிதி உதவி அளிக்கும் 8 வணிக வங்கிகளுக்கு அனுப்பப்பட்டன. இந்த வணிக வங்கிகளுக்கு விவசாய நிதி மேம்பாட்டுக் கழகத்திடமிருந்து, மறு நிதி உதவி கிடைக்கப்பெற்றன. மேற்படி 185 கடன் விண்ணப்பங்களில் 149 கடன் விண்ணப்பங்களுக்கு 9 வங்கிகள் மூலம் நிதியுதவி கிடைக்கப் பெற்றன. மீதி விண்ணப்பங்களில் 29 மீனவக் கடன் விண்ணப்பங்கள் வங்கிகளால் நிராகரிக்கப்பட்டன. மேலும் 7 விண்ணப்பங்களுக்கு வங்கிகளிடமிருந்து நிதி உதவி கிடைக்கப்பெறவில்லை. கடன் உதவி கிடைக்கப்பெற்ற 149 மீனவக் குழுக்களுக்கு படகு டெலிவரி ஆர்டர் அளிக்கப்பட்டுவிட்டது. இவற்றில் மீனவக் குழுக்களுக்கு படகு கூடுகள் வந்தவுடன் டெலிவரி செய்யப்படும்.

திரு. த. வேணுகோபால்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆண்டுதோறும் ஆங்காங்கே உள்ள படகு கட்டும் நிலையத்தில் எத்தனை படகுகள் தயார் செய்கிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, 1979-80 ஆம் ஆண்டில் 30 அடி படகுகள் 81-ம், 32 அடி படகுகள் 69-ம் ஆக மொத்தம் 150 படகுகள் கட்டப்பட்டு இருக்கின்றன.

திரு. உ. சுப்பிரமணியன்: பேரவைத் தலைவர் அவர்களே, அரசு தரப்பில் செய்யப்படுகின்ற படகுகள் விலை அதிகமாக இருக்கிற காரணத்தால் மீனவர்கள் அதை வாங்க முடியவில்லை என்ற குறை இருக்கிறது. அது உண்மையா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, அதுபற்றிய விவரமான குறிப்புகள் இல்லை. ஆனால் 30 அடி விசைப்படகு ரஸ்டன் ரூ. 1,20,728.50. அதற்கு அரசு மானியமாக 10 சதவிகிதம் தருகிறது. அது ரூ. 12,072.85.



ஆகவே, மீனவருக்கு விற்கப்படும் விலை ரூ. 1,08,655.65 ஆகும். அந்த அளவிலே தான் கிட்டத்தட்ட மற்ற கம்பெனிகளின் எஞ்சின் பொறுத்திய படகுகளின் விலை வருகிறது—

| எஞ்சின் பெயர். | மொத்த விலை. | அரசு சதவீதம் மானியம். | மீனவருக்கு விற்கப்படும் விலை. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | ரூ. | ரூ. | ரூ. |
| 30 அடி விசைப்படகு | | | |
| கிர்லோஸ்கர் | 1,17,423.29 | 11,742.32 | 1,05,680.97 |
| பிரிமியர் மாரினர் | 1,14,210.00 | 11,421.00 | 1,02,789.00 |
| 32 அடி விசைப்படகு | | | |
| அசோக் லேலாண்டு | 2,04,524.67 | 20,452.46 | 1,84,072.21 |
| ரஸ்டன் | 1,92,611.46 | 19,261.14 | 1,73,350.32 |
| கிர்லோஸ்கர் | 1,81,558.13 | 18,155.81 | 1,63,402.32 |

திரு. ரா. உமாநாத்: தலைவரவர்களே, 4 படகு கட்டும் கூடங்களிலும் ப்ரொடக்ஷன் கபாசிட்டி 200ஆக இருக்கிறது. ப்ரொடக்ஷன் கபாசிட்டி 200 ஆக இருக்கிறபோது, நூற்றுச் சொச்சம், தொன்னூற்றுச் சொச்சம், அதிகபட்சமாக 150 தான் ப்ரொடக்ஷன் ஆகியிருப்பதாக அமைச்சரவர்கள் சொன்னார்கள். இப்படி குறைந்த அளவில் உற்பத்திச் செய்வதற்கான காரணம் என்ன?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, அதுபற்றிய விவரக் குறிப்பு இல்லை. கபாசிட் அளவை கூட்ட முடியாமல் இருப்பதற்கான காரணத்தை கண்டறிந்து, நீக்க முடியுமா என்பது யோசிக்கப்படும்.

திரு. பொ. உத்திராபதி: தலைவரவர்களே, தமிழ்நாட்டில் எத்தனை இடங்களில் படகு கட்டும் வேலை நடக்கிறது? கட்டி முடிக்கப்பட்ட படகு எத்தனை இதுவரையில் இருப்பில் இருக்கிறது? அரசு நிறுவனம் வழங்கும் படகு விலையைவிட தனியார் வழங்கும் படகின் விலை குறைவாக இருப்பதாகச் சொல்லப்படுகிறது. அப்படியிருந்தால் தனியார் விற்பனை செய்யும் படகு விலையைவிட குறைந்த விலைக்கு விற்க அரசு ஏற்பாடு செய்யுமா?

[1980 ஜூலை 31

<u>மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:</u> தலைவரவர்களே, தமிழ்நாட்டில் மீன்வளர்ச்சிக் கழகத்தின் சார்பாக 4 இடங்களில் படகு கட்டப்படுகிறது என்று முன்பு குறிப்பிட்டேன். எத்தனை படகுகள் உற்பத்தி செய்யப்பட்டன என்ற விவரத்தையும் சொன்னேன். தனியார் படகுக்கும் இந்த படகுக்கும் எந்த அளவுக்கு விலையில் வேறுபாடு இருக்கிறது என்ற விவரம் இல்லை. தனிக் கேள்வி போட்டால் விவரம் அளிக்கப்படும். இலக்கு நிர்ணயிக்கப்பட்ட 210 விசைப்படகுகளில் 20 சதவீதம் திட்டம் மற்றும் இரண்டாவது கட்ட விவசாய மறுநிதி உதவி திட்டங்களின் மூலம் 8 விசைப்படகுகள் மீனவர்களுக்கு வழங்கப்பட்டன. எப். ஏ. ஓ. மற்றும் சி. எம். எப். ஆர். ஐ. நிறுவனங்களுக்கு 4 விசைப்படகுகள் வழங்கப்பட்டன. எஞ்சியுள்ள 49 படகு கூடுகளில் 30 அடி படகு கூடுகள் 7–ம், 32 அடி படகு கூடுகள் 42–ம் பல்வேறு நிலைகளில் படகு கட்டும் தளங்களில் கட்டப்படுகின்றன. இந்தப் படகுகள் அடுத்த கட்ட படகு விநியோகத் திட்டத்தின் மூலம் மீனவர்களுக்கு வழங்கப்படும்.

<u>திரு. ப. பொன்னுரங்கம்:</u> தலைவரவர்களே, மாண்புமிகு நிதி அமைச்சரவர்கள் 4 படகு கட்டும் இடங்கள் தமிழ்நாட்டில் இருப்பதாகச் சொன்னார்கள். திரு. உமாநாத் அவர்கள் குறிப்பிட்டது போல உற்பத்தித் திறனைவிட குறைவாக 79, 80 படகுகள்தான் கட்டப்படுகின்றன. இதைவிட கூடுதலாக முன்பும் இல்லை, பின்பும் இல்லை. அது அரசாங்கத்தின் தவறு அல்ல. டிப்பார்ட்மெண்டிலிருந்து கார்ப்பரேஷன் ஆனதால் படகின் விலை 60,000 ரூபாய் 70,000 ரூபாய் ஏறியிருக்கிறது. இந்த கார்ப்பரேஷன் 'ப்யூர்லி கமர்ஷியல் சென்டர்' என்ற முறையில் செயல்படுகிறதே தவிர சமூதாய அபிவிருத்திக்காக இல்லை. விலை அதிகமாக இருப்பதால் மீனவர்கள் படகு கேட்டு அப்லிகேஷன் போடவில்லை. தனியார் துறைகளிலிருந்து, வங்கிகள் மூலம் வாங்கினால் 60,000 ரூபாய் 70,000 ரூபாய் குறைவாக இருக்கிறது. ஆகவே இந்த கார்ப்பரேஷனை மீண்டும் டிப்பார்ட்மெண்டுக்குக் கொண்டுவர அரசு முயற்சி செய்யுமா? அதோடு நிதியமைச்சர் அவர்கள் மானியக் கோரிக்கையின்போது இந்த கார்ப்பரேஷனில் பணியாற்றுகிறவர்களுக்கு மாற்று வேலை தரப்படும் என்று சொன்னார்கள். அந்தத் தொழிலாளர்களை வேறு இடங்களுக்கு அனுப்புவதற்குப் பதிலாக அவர்கள் எங்கிருந்து கார்ப்பரேஷனுக்கு வந்தார்களோ அங்கேயே அனுப்ப, அதாவது இந்த டிப்பார்ட்மெண்டிலேயே மீண்டும் அவர்களை சேர்த்துக்கொள்ள அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :</u> தலைவரவர்களே, பொதுவாகவே துறையின் மூலமாக ஒரு செயலை செய்வதைவிட வாரியம் அல்லது கழகத்தின் மூலம் செய்வது



1980 ஜூலை 31]

எளிதாக இருக்கும். அதேநேரத்தில் காலதாமதம் இல்லாமல் விரைவாகவும் செய்ய முடியும் என்ற அடிப்படையில்தான் பலவற்றை நாம் கழகத்தின் மூலமாகச் செய்கிறோம். கடன் வசதி, மற்ற பிற வசதிகளைப் பெறுவது கூட கழகம் என்றால் சுலபமாகக் கிடைக்கிறது. துறையின் மூலம் என்றால், சுற்றாணைகள் மூலம் ஆணை பெறுவதில், சட்டமன்றத்திற்கு வந்து நிதி ஒதுக்கீடு செய்வதில், நிதி பெறுவதில் காலதாமதம் ஏற்படும். இந்த காலதாமதத்தை தவிர்க்கவும், நிதி வசதிகளை எளிதில் பெறவும் இப்படிப்பட்ட கார்ப்பரேஷன்கள் அமைக்கப்படுகின்றன. இந்த குறிப்பிட்ட கார்ப்பரேஷனைப் பொறுத்தமட்டில் உறுப்பினர்கள் எடுத்துக்காட்டியமாதிரி குறைபாடுகள் இருந்தால், அந்த குறைபாடுகளைக் கண்டறிந்து, அவைகளை நீக்க முயற்சி செய்யலாம். ஆனால் கார்ப்பரேஷனாக இருப்பதை மீண்டும் துறைக்கு மாற்றுவது என்பது சரியல்ல.

[முற்பகல் 9–10]

இப்போது நானே ஒன்றை எண்ணிக்கொண்டிருந்தேன். அதாவது எல்லோரும் இவ்வாறு வற்புறுத்துவதன் காரணமாக ஒரு வல்லுநர் குழுவை அமைத்து மிக விரைவில் அதிலுள்ள குறைபாடுகளைக் கண்டறிந்து அந்தக் குறைபாடுகளை உடனடியாக நீக்குவதற்கும் படகு கட்டும் துறையைப் பொறுத்த வரையில் அதைச் செம்மையாக நடத்துவதற்கும் தொழிலாளர்கள் வேலைவாய்ப்பை இழக்காத அளவுக்குப் பார்த்துக்கொள்ள வேண்டும் என்பது பற்றியும் யோசித்துக் கொண்டிருக்கிறேன். விரைவில் அதுபற்றிய நடவடிக்கையை அரசு எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

<u>இடைப்பாடி நகரில் 'மீன்வளம்' பெருக்குத் திட்டம்</u>

* <u>வினா எண். 79 — திரு. இ. கணேசன் :</u> மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம் இடைப்பாடி நகரிலுள்ள பெரிய ஏரியில் 'மீன்வளம்' பெருக்கத்திட்டம் செயல்படுத்தப்பட உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

<u>மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் ;</u>

(அ) சேலம் மாவட்டம் இடைப்பாடி நகரிலுள்ள பெரிய ஏரியில் 'மீன்வளம்' பெருக்கும் திட்டம் மீனளத் துறையின் பரிசீலனையில் தற்போது இல்லை.

(ஆ) இவ் வினாவிற்கு இடமில்லை.

[1980 ஜுலை 31

திரு. இ. கணேசன் : பேரவைத் தலைவரவர்களே, இது போன்ற ஏரிகளிலே மீன் வளர்த்தைப் பெருக்கும் திட்டம் செயல் படுத்தப்பட்டால் அந்தப் பகுதியில் மீன் பிடிக்கும் ஜாதியினர் சுமார் 10 ஆயிரம் பேர்களுக்கு மேற்பட்டவர்கள் பயன் பெறு வார்கள். ஆகவே அந்த ஏரிகளும் மீன் வளர்க்கும் திட்டத்திலே சேர்த்துக்கொள்ளப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அரசு மீன்வளத்துறை பெரிய நீர்த்தேக்கங்களில்தான் மீன் வளர்க்கும் திட்டத்தை செயல் படுத்தி வருகின்றது. அரசுடைமையாக்கப்பட்ட பெரும் நீர்ப் பாசன குளங்களில் மீன்வளத் துறையின் மூலம் மீன் குஞ்சுகள் விடப் பட்டு வளர்க்கப்படுகின்றன. அவைகளில் உள்ள மீன்களை மீனவர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு குத்தகைக்கு விடப்படுகின்றது. அதாவது வருவாய்த் துறை, பொதுப்பணித்துறை, ஊராட்சி நிறுவனங்கள் ஆகியவற்றைச் சேர்ந்த உள்நாட்டு குளங்களில் உள்ள மீன்களைப் பொறுத்தவரையில் அது மீனவர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு குத்தகைக்கு விடப்படுகின்றன. அப்படி மீனவர் கூட்டுறவுச்சங்கங்களில் இருந்து யாரும் குத்தகை எடுக்க வர வில்லை என்றால் பொது ஏலத்தில் விடப்படுகின்றது. ஆகவே மீனவர் கூட்டுறச் சங்கங்கள்தான் அவற்றை குத்தகைக்கு எடுத்து அதைப் பயன்படுத்த முன்வரவேண்டும். அவ்வாறு அந்த சங்கங்கள் முயற்சிகளைச் செய்ய முன்வருமேயானால் மீனளத் துறை போதுமான அளவு உதவி செய்ய முன்வரும்.

திரு. தி. அன்பழகன் : பேரவைத் தலைவரவர்களே, ஊராட்சி ஒன்றிய ஏரிகளில் மீன் வளர்க்கின்ற திட்டங்களைப் பொறுத்த வரையில் அரசு மீன்வளத் துறையின் மூலமாக அதை வளர்ப்பதற்கு ஏற்பாடு செய்யப்படுமா? ஊராட்சி ஒன்றியங்கள் தனிப்பட்ட முறையிலே அவற்றை சரியாக நிர்வகிக்க முடியாத காரணத்தால் மீன்வளத் துறையின் மூலமே அதை எடுத்துக் கொண்டு அந்த ஏற்பாட்டை செய்ய அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : பேரவைத் தலைவரவர்களே, பொதுவாக ஊராட்சி ஒன்றியங்கள் அவற்றை ஏற்று நடத்த வேண்டும் என்ற வகையிலேதான் கோரிக்கைகள் வந்து கொண்டிருக்கின்றன. மீனவர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு இவைகள் எல்லாம் உதவியாக இருக்கவேண்டும் என்பதற்காகத் தான் அவர்கள் குத்தகைக்கு எடுக்கவேண்டும் என்று சொல்லப் படுகின்றது. மீனவர் கூட்டுறவு சங்கத்தினர் எடுக்க வராத சமயத்திலேதான் மற்றவர்களுக்குத் தரவேண்டும். ஆகவே மீனவர் கூட்டுறவு சங்கத்தினர் அதைக் குத்தகைக்கு எடுக்க முன் வரவேண்டும். அவர்களுக்கு உதவி செய்து ஊக்குவிக்கத்தான் இவ்வாறு ஊராட்சி ஒன்றியங்கள் மூலம் அவர்களுக்கு



1980 ஜுலை 31]

குத்தகைக்கு விடவேண்டும் என்ற நிலை இருக்கிறது. ஆகவே மீனவர் கூட்டுறவுச் சங்கங்கள் மீன் வளத்தைப் பெருக்குவதற் கென, முயற்சிகளில் ஈடுபடுவதுதான் நலன் பயப்பதாக அமையும்.

திரு. க. பாலசுப்பிரமணியன் ; தலைவரவர்களே, இடைப் பாடி பகுதியில் மீன் வளர்க்கின்ற திட்டம் புதிதாக எதுவும் இல்லை என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். கடந்த காலங் களில் பல ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள குளங்களுக்கு அதிக மான பணம் செலவு செய்யப்பட்டு சிமெண்ட் தரைகள் போடப் பட்டிருக்கின்றன. அவைகள் எல்லாம் பயன்படுத்தப்படாமல் வீணே கிடக்கின்றன. ஆகவே மீண்டும் அந்தக் குளங்களை நல்ல முறையில் செப்பனிட்டு அதிலே மீன் வளர்ப்பு திட்டத்தைக் கொண்டுவர அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர் களே, அதுபற்றிய செயற்குறிப்பு என்னிடத்திலே இல்லை. தனிக் கேள்வி போட்டால் விளக்கமாகப் பதில் தரப்படும்.

## அருள்மிகு அதிதீஸ்வரர் ஆலயம், வாணியம்பாடி.

*வினா எண். 80— திரு. இரா. தாமரைக்கனி ; மாண்புமிகு செய்தி-அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா :—

(அ) வாணியம்பாடி அருள்மிகு அதிதீஸ்வரர் ஆலயத் திருப்பணி செய்யும் திட்டம் ஏதும் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :

(அ) & (ஆ) வாணியம்பாடி அருள்மிகு அதிதீஸ்வரர் கோயிலுக்குத் திருப்பணி செய்யும் பொருட்டு திருப்பணிக்குழு அமைக்க வேலூர் உதவி ஆணையாளரால் நடவடிக்கை எடுக்கப் பட்டு வருகிறது.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவர் அவர் களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு வந்தாலே அடுத்த ஆண்டில் நிச்சயமாக திருப்பணி நடைபெற்று விடும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. வாணியம்பாடி அருள்மிகு அதிதீஸ்வரர் ஆலயம் மட்டுமல்லாமல், மற்ற தமிழக கோவில்கள் அனைத்திலும், திருப்பணி செய்கிற நேரத்தில் பெரும்பாலான மக்கள் செல்கிற இடம் என்ற கருத்தை மனத்தில்

கொண்டு, நல்ல சிற்பக் கலைஞர்களை அழைத்து சிலை செதுக்க வேண்டும். நாம் குடும்பத்தோடு கோவிலுக்கு போகிறபோது, குழந்தைகளுக்கு ஒவ்வொரு சாமியாக காட்டி, விளக்கிக் கொண்டு வரும்போது, 'சாமி என்ன இப்படி இருக்கிறது' என்று கேட்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சாமியைப் பற்றிய விளக்கங்கள் வேண்டாம். உரையாக நிகழ்த்துவதை தவிர்த்து, கேள்வியாக கேட்க முற்படுங்கள்.

திரு. இரா. தாமரைக்கனி : ஆகவே சிற்பக் கலைஞர்களைக் கொண்டு, திருப்பணிகள் செய்யும் நேரத்திலாவது, கோவிலில் இருக்கும் சிலைகளுக்கு ஆடைகள் அணிவிக்கும்படியான நடவடிக்கையை அரசு எடுத்துக் கொள்ள முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமரைக்கனி அவர்கள் ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதியில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு வந்தவர். ஆனால் அவர் வாணியம்பாடி தொகுதியில் இருக்கிற ஒரு கோவிலைப் பற்றி வெகு அக்கறையாக கேள்வி கேட்டார். நானும் பதிலைச் சொன்னேன். அதுவுமல்லாமல் அவர் பல்வேறு கருத்துக்களையும் தெரிவித்திருக்கிறார்கள். அதை சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடத்திலே சம்பந்தப்பட்ட நிகழ்ச்சிகள் வருகிறபோது, தெரிவித்தால் அவர்கள் அதை பரிசீலனை செய்வார்கள் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ந. குலசேகர பாண்டியன் : பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய வாணியம்பாடி தொகுதியிலே உள்ள அந்தக் கோவில் மிகவும் பிரசித்தி வாய்ந்த கோவில் என்று சொல்லப்படுகிறது. அதிலிருக்கும் பழங்காலச் சின்னங்கள் அழிந்து போய்க் கொண்டிருக்கிறது. அதனால் விரைவாக திருப்பணிக் குழு அமைப்பது மட்டுமல்லாமல், திருப்பணியை பெரிய அளவில் நடத்துவதற்கும் அரசு ஆவன செய்யுமா? அதற்கான மதிப்பீடுகள் ஏதாவது அரசுக்கு வந்திருக்கிறதா என்றும் அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த ஆலயத்தின் ஆண்டு வருமானமே 3855 தான், அந்தத் தொகையை வைத்துக் கொண்டு அன்றாடம் நிர்வாகச் செலவு, பூஜை, நைவேத்திய செலவுகளை நிர்வகிப்பதே மிக கடினமாக உள்ளது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் விரும்பியது போல், மிகப் பெரிய அளவில் திருப்பணி செய்வதனால், பொது மக்களிடமிருந்து நன்கொடைகள் வரும்



செய்து மேற்கொள்ள முடியுமா என்பதைப்பற்றி பரிசீலனை செய்து திருப்பணிக் குழு அமைக்கலாம் என்று உதவி ஆணையாளருக்கு அனுமதியை அறநிலையத் துறை வழங்கியிருக்கிறது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

கன்னியாகுமரியை சுற்றுலா மையமாக மேம்படுத்தல்.

*வினா எண் 81— திரு. சு. முத்துக்கிருஷ்ணன் : மாண்புமிகு செய்தி-அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரியை சுற்றுலா மையமாக மேம்படுத்த அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : கன்னியாகுமரிக்கு வருகை தரும் குறைந்த வருவாய்ப் பிரிவு பயணிகளுக்கு தங்குமிட வசதிகள் மிகக் குறைவாக உள்ளதால், துயிலக விடுதி ஒன்றினை ரூ. 5·00 இலட்சம் செலவில் 1980-81 ஆம் ஆண்டில் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேலும், ரூ. 1·00 இலட்சம் செலவில் புதிதாக ஒரு சுற்றுலா அலுவலகம் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. கன்னியாகுமரியை ஒரு சிறந்த உலகச் சுற்றுலா மையமாக மேம்படுத்த வேண்டும் என்ற உத்தேசத்தில் அரசு, டாக்டர் ஜே. கிருஷ்ணசுவாமி அவர்களை "பெருந்திட்ட அறிக்கை (Master Plan)" ஒன்று தீட்டித்தர வேண்டுமென்று கேட்டுக்கொண்டுள்ளது. அவர்களின் திட்ட அறிக்கை கிடைத்த பின் மேல் நடவடிக்கை குறித்த திட்டங்கள் (Schemes) நிறைவேற்ற உத்தேசிக்கப்பட்டுள்ளது.

திரு. சு. முத்துக்கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. கன்னியாகுமரி, உள்நாட்டு பயணிகளும் வெளிநாட்டு பயணிகளும் அதிகமான அளவில் வருகிற ஒரு சுற்றுலா பிரதேசம். ஆகவே மத்திய அரசிடம் சொல்லி அங்கே ஒரு விமான தளம் அமைக்க அரசு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன். அடுத்து, மியூசியம். அக்குவேரியம் போன்றவைகளையும் கன்னியாகுமரியில் அமைக்க நடவடிக்கை எடுக்க முடியுமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : பேரவைத் தலைவர் அவர்களே, ஆண்டுதோறும் 10,000 வெளிநாட்டு பயணிகளும் 5 லட்சம் உள் நாட்டு பயணிகளும் கன்னியாகுமரிக்கு வருகிறார்கள் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது. அதை ஒட்டி அங்கே பல்வேறு சிறப்பான திட்டங்களை நிறைவேற்ற வேண்டும் என்று அரசு உத்தேசித்துள்ளது. ஆனால் விமான தளம் அமைப்பதைப் பற்றி சொல்ல வருகிறபோது, அருகிலேயே திருவனந்தபுரத்தில்

ஒரு விமான தளம் இருக்கிற காரணத்தினாலும், திருநெல்வேலியின் பக்கத்தில் ஒரு விமான தளம் வேண்டும் என்று ஏற்கெனவே கேட்கப்பட்டிருப்பதாலும் கன்னியாகுமரியில் விமான தளம் அமைக்க அனுமதி கிடைக்குமா என்பது சந்தேகம்.

[முற்பகல் 9-20]

திரு. ப. நெடுமாறன் : கன்னியாகுமரியில் திருவள்ளுவர் சிலை எழுப்புகிற திட்டம் எந்தளவில் உள்ளது? விரைவில் நிறைவேற்றப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தனிக் கேள்வி போட்டால் அதுபற்றிய விவரமான தகவல்கள் இருக்கின்றன, அதைத் தயாரித்துத் தருவதற்கு சௌகரியமாயிருக்கும்.

திரு. டி. மணி : கன்னியாகுமரியில் சுற்றுலா வாரியம் மூலமாக அரசு புதிதாக கட்டடங்கள் எழுப்புவதற்கு முன்னால் தனியார் பெருவாரியான இடங்களை ஆக்கிரமித்துக்கொண்டு இருக்கிறார்கள்—குறிப்பாக சூரியோதயம் காண்பதற்காகத்தான் அந்தப் பகுதிக்கு ஏராளமான மக்கள் வருகிறார்கள். இன்று சூரியோதயம் பார்க்கமுடியாத அளவிற்கு தனியார் பெரிய பெரிய கட்டிடங்களை எழுப்பியுள்ளார்கள். ஆகவே அதைத் தடுப்பதற்கு ஏதாவது நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமா? அதோடு கூட அது ஒரு சுற்றுலாப் பகுதியாக இருப்பதால் அங்கே லட்சக்கணக்கான மக்கள் வந்து போகிறார்கள். அந்த இடத்தில் குடிநீருக்கு எந்த விதமான வசதியும் இல்லை. ஆகவே அங்கு குடிநீர் வசதியை செய்துதரமுடியுமா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : சுற்றுலாத் துறை சம்பந்தப்பட்ட கேள்விகளுக்குத்தான் பதில் அளிக்கமுடியும். உள்ளாட்சித்துறை சம்பந்தப்பட்ட கேள்விகள் பொறுத்தவரையில் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களிடம் கேட்டால் தகுந்த பதில்கள் பெறமுடியும்.

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : பல ஆயிரக்கணக்கான பிரயாணிகள் வந்து போய்க் கொண்டிருக்கிற கன்னியாகுமரியில் போதுமான பப்ளிக் லெட்ரீன்ஸ் இல்லாத காரணத்தால் கடலோரப் பகுதியை அசுத்தப்படுத்துகிறார்கள். ஆகவே போதுமான பப்ளிக் லெட்ரீன்ஸ் கட்டுவதற்கு சுற்றுலாத்துறை நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : நகரியத்தைக் கலந்துகொண்டு அத்தகைய கழிப்பிட வசதிகள் செய்யவேண்டுமென சுற்றுலாத்துறை நடவடிக்கைகள் எடுக்க உத்தேசித்துள்ளது.



திரு. பெ. சு. திருவேங்கடம் : சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் சார்பாக ஐம்பது லட்சம் ரூபாய் செலவில் விடுதிகள் கட்டுவதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். நாங்கள் அங்கே சென்றிருந்தபோது அங்குள்ள மக்கள், வெளிநாட்டுப் பயணிகளிடமிருந்தும், வெளி மாநிலங்களிலிருந்து வருகிற பயணிகளிடமிருந்தும் தனிப்பட்டவர்கள் ஏராளமாக வாடகை வசூலித்து கொள்ளையடிக்கிறார்கள் என்று பரவலாக சட்டமன்ற உறுப்பினர்களான எங்களிடம் சொன்னார்கள். ஆகவே அதைப் போக்குகிற வகையில் அதிகமான நிதி ஒதுக்கி தேவையான அளவிற்கு தங்கும் விடுதிகள் அரசு சார்பிலோ அல்லது சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் சார்பிலோ கட்டுவதற்கு அமைச்சர் அவர்கள் நடவடிக்கைகள் எடுத்துக்கொள்வார்களா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : சுற்றுலாப் பயணிகளிடம் இப்படி அதிகமான வாடகை வசூலிக்கப்படுகிறது என்று குற்றச்சாட்டு வந்ததையொட்டி அந்த நகரியத்தினுடைய தலைவராக இருக்கிற மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் கவனத்திற்கு இது ஏற்கெனவே கொண்டுசெல்லப்பட்டிருக்கிறது. அவர்தான் தக்க நடவடிக்கைகள் எடுக்கவேண்டும். இவைகளை எல்லாம் மனதில் வைத்துத்தான் இதற்கான ஒரு பெரும் திட்ட அறிக்கை, மாஸ்டர் ப்ளான் பெற்று அதையொட்டி பல்வேறு துறைகளும் நடவடிக்கைகள் எடுத்து அங்குள்ள பல்வேறு பிரச்னைகளைத் தீர்த்து ஒரு மிகச் சிறந்த ஒரு சுற்றுலா தலமாக்க அரசு உத்தேசித்துள்ளது.

திரு. ஜி. கே. சுப்பிரமணியன் : கன்னியாகுமரியில் சுற்றுலா மையம் அமைக்கிற முயற்சி எடுப்பதுபோல் பெரியார் மாவட்டத்திலுள்ள பவானிசாகர் இயற்கைச் சூழ்நிலை......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது கன்னியாகுமரியைப் பொறுத்தது. நீங்கள் பெரியார் மாவட்டத்தைப் பற்றிக் கேட்டால் தமிழ்நாடு பூராவும் பற்றிய கேள்விகள் வரும்.

திரு. ஜி. கே. சுப்பிரமணியன் : மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கலைத் துறையில் ஈடுபாடு உடையவர்கள். அன்னக்கிளி, திசை மாறிய பறவைகள் போன்ற வெற்றிகரமான படங்களை அங்கே எடுத்திருக்கிறார்கள். அங்கே நல்ல இயற்கைச் சூழ்நிலை நிறைந்த பகுதி. இயற்கை வளம் கொழிக்கக்கூடியது. அங்கு பயிற்சி நிலையம் இருக்கிறது. ஏற்கனவே மனு கொடுக்கப்பட்டிருக்கிறது. பெரியார் மாவட்டத்தின் சார்பாக எல்லா சட்டமன்ற உறுப்பினர்களும் கொடுத்திருக்கிறார்கள். அங்கே ஒரு சுற்றுலா மையம் அமைக்கப்பட வேண்டும் என்று அங்குள்ள மக்கள் விரும்புகிறார்கள். ஆகவே பவானிசாகரில் ஒரு சுற்றுலா மையம் ஏற்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ள உத்தேசமாவது இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் ; பவானிசாகர் தொகுதி உறுப்பினர் அவர்கள் கன்னியாகுமரி தொகுதி உறுப்பினருடைய கேள்விக்குள்ளே நுழையாமல் அவர் தனியாக அவருடைய தொகுதி பற்றி ஒரு வினாவை இந்த அவையில் வைத்தால் நல்ல முறையில் தக்க விவரங்களோடு நான் பதிலளிக்க வசதியாக இருக்கும்.

திரு. என். எஸ். வி. சித்தன் : கன்னியாகுமரி ஆண்டுதோறும் லட்சக்கணக்கில் வெளிநாட்டு, உள்நாட்டு யாத்திரிகள் வரும் இடமாகும். கன்னியாகுமரி கடற்கரை சென்னை கடற்கரையை விட நீளம் குறைவாக இருக்கிறது. ஆகவே அங்கு வருகிற யாத்திரிகர்களுக்கு வசதியாக கிருஷ்ணசாமி கமிட்டியால் கன்னியாகுமரி கடற்கரையை விரிவாக்குவது பற்றியும் அழகுபடுத்துவது பற்றியும் ஏதாவது கோரிக்கை விடப்பட்டிருக்கிறதா? அதுபற்றிய செயற்குறிப்பு ஏதாவது அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடற்கரையை விரிவுபடுத்துவது பற்றி அவர்கள் எந்தப் பொருளில் கேட்கிறார்கள் என்பது புரியவில்லை. ஆனால், கடற்கரையை அழகுபடுத்துவது போன்ற எல்லாத் திட்டங்களையும் இணைத்துத்தான் ஒரு மாஸ்டர் பிளான் தயாரிக்கும்படி அரசு கேட்டிருக்கிறது.

திரு. சு. முத்துகிருஷ்ணன் : தலைவர் அவர்களே, நான் முதலிலேயே கன்னியாகுமரியில் மியூசியம், அக்குவேரியம் அமைக்கப்படுமா என்று கேட்டேன். அதற்கு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லவேண்டுகிறேன். அடுத்து, சென்னையிலே கலை அரங்கம் இருப்பதைப் போல், கன்னியாகுமரியில் கலை அரங்கம் ஒன்றை அமைத்து, சுற்றுலாத் துறையின் மூலமாக நிகழ்ச்சிகள் நடத்த ஏற்பாடு செய்யப்படுமா என்று வினவுகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : பேரவைத் தலைவர் அவர்களே, அக்குவேரியம் மற்றும் கண்காட்சிக் கூடங்கள் எல்லாம் பல்வேறு துறையினரால் நிறுவப்படவேண்டிய ஒன்று; ஏற்படுத்த வேண்டிய ஒன்று. என்றாலும், இவைகளை எல்லாம் கவனத்தில் கொண்டு, அவைகளை எல்லாம் ஏற்கிற வகையில் பல்வேறு துறையைச் சேர்ந்தவர்கள், பொது அடிப்படையிலே இந்தத் திட்டத்தைத் தயாரிக்க திட்ட நிபுணரிடம் கேட்டிருக்கிறோம். அந்தத் திட்டத்தை அவர்கள் தருகின்றபோதுதான் அந்த திட்ட அறிக்கையை பார்த்த பிறகுதான், எப்படிப்பட்ட திட்டங்கள் நிறைவேற்றப்படும் என்பதைத் தெரிவிக்க இயலும்.



திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரியிலிருந்து சுற்றுலாப் பயணிகள் நேராக வேளாங்கன்னிக்கு வருகிறார்கள். அப்படி வருகின்றவர்களுக்கு அங்கே தங்குவதற்கு இட வசதி இல்லை. எனவே, அங்கே அந்தப் பயணிகள் தங்கக்கூடிய அளவிலே ஒரு சுற்றுலா பயணிகள் விடுதி கட்டுவதற்கு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா?

மாண்புமிகு திரு ஆர். எம். வீரப்பன் : பேரவைத் தலைவர் அவர்களே, தனியாகக்கேள்வி போட்டால் தகவல் தர முடியும்.

## மணலி புகைவண்டி நிலையத்திற்கு அருகே உயர்நிலைப் பள்ளி கட்டிடம்.

* வினா எண் 82— திரு. பொ. உத்திராபதி : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா.

(அ) திருத்துறைப்பூண்டி ஒன்றியம் மணலி புகைவண்டி நிலையத்திற்கு அருகில் உயர்நிலைப்பள்ளி கட்டிடம் கட்டும் வேலை முடிந்து விட்டதா?

(ஆ) ஆம் எனில், எப்போது திறக்கப்படும்?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) மற்றும் (ஆ): கட்டிட வேலை முடிவடைந்துள்ளது. இந்த புது கட்டிடத்தில் வகுப்புகள் ஆகஸ்டு முதல் வாரத்திலிருந்து நடத்தப் பெற இருக்கின்றன.

திரு. பொ. உத்திராபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மணலியில் உயர்நிலைப்பள்ளி 64ஆம் ஆண்டு முதல் தனியார் கட்டிடத்தில் இருந்து வந்தது. கம்யூனிஸ்ட் கட்சித் தலைவராக இருந்தவர் மணலி கந்தசாமி இறக்கின்றபோது, நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இறுதிச் சடங்கில் கலந்து கொண்ட நேரத்தில் பொது மக்கள் வேண்டுகோளுக்கு இணங்க மணலியில் உயர்நிலைப் பள்ளிக் கட்டிடத்தைக் கட்டிக் கொடுப்பதாக வாக்குறுதி கொடுத்தார்கள். அந்தக் கட்டிடத்தைக் கட்டிக் கொடுத்ததற்காக அந்த மக்கள் சார்பில் நன்றி சொல்வதோடு, இப்போது கட்டியிருக்கக்கூடிய கட்டிடத்தில் 4 வகுப்புகளே நடத்தலாம் என்றாலும், மீதியுள்ள வகுப்புகளுக்கு இடமில்லை. மாவட்ட கல்வி அதிகாரியாக இருக்கிறவர் அதை காலி செய்யவேண்டும் என்று சொல்வதாக அறிகிறேன். அப்படி இருக்கக்கூடிய முறையிலே, பாக்கியுள்ள பகுதியில் துரிதமாக கட்டிடத்தைக் கட்டுவதற்கு எவ்வளவு தொகை ஒதுக்கப்பட்டுள்ளது என்பதை அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, இப்போது கட்டப்படுகின்ற கட்டிடம் ஒரு லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் டிசம்பர் 1978-லே அனுமதிக்கப்பட்டு, பொதுப் பணித் துறையினரால் 1979-80-லே துவங்கப்பட்டது.

திரு. மு. அம்பிகாபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது திருத்தமில்லாத இடத்தில் இருப்பதால், ஆகஸ்ட் 21ஆம் தேதி காலி செய்யவேண்டும். தற்சமயம் உள்ள கட்டிடத்தில் 4 வகுப்புகள் தான் நடத்த முடியும். மீதியுள்ள வகுப்புகளுக்கு இடம் கிடையாது. எனவே, டெம்பரரி ஷெட்டுகள் அமைப்பதற்கு அரசாங்கம் உத்தரவிடுமா? அந்த வகையிலே அங்கே வகுப்புகள் துவங்கப்படுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, இது குறித்து அரசு பரிசீலிக்கும்.

## வடஆற்காடு மாவட்டத்தில் மதிய உணவு விநியோகம்

* வினா எண் 83—திரு பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) வட ஆற்காடு மாவட்டத்தில் மதிய உணவை எடுத்துச் செல்ல எத்தனை ஒன்றியங்களில் வேன்கள் உபயோகப்படுத்தப் படுகின்றன?

(ஆ) அவைகள் போதுமானதாக உள்ளதா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) 36

(ஆ) ஆம்.

[முற்பகல் 9·30]

திரு. பெ. சு. திருவேங்கடம்: ஊராட்சி ஒன்றியங்களில் சமுதாயக் கூடங்களில் வான்கள் மூலமாக துவக்கப் பள்ளிகளில் படிக்கும் குழந்தைகளுக்கு உணவு எடுத்துச் செல்லப்படுகிறது. அடிக்கடி வான்கள் பழுதடைந்து மாதக் கணக்கில் பழுது பார்க்காமலே நிறுத்திவிடுகிறார்கள். சைக்கிள்களில் மாட்டு வண்டிகளில் எடுத்துச் செல்வதன் காரணமாக உணவு தரமாக இல்லாமல் குழந்தைகள் உடல் நலம் பாதிக்கக்கூடிய நிலைமை ஏற்படுகிறது. அதைப் போக்க அமைச்சர் அவர்கள் என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறார்கள்?



மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: வேன்கள் மூலமாகவும்
மதிய உணவு அனுப்பப்பட்டு வருகிறது. நெடுந்தொலைவு காரண
மாக கண்டிப்பாக உந்து வண்டிகளைப் பயன்படுத்தித் தீரவேண்டிய
இடங்களிலும் இன்றியமையாத் தேவை அளவுக்கு மட்டும் உந்து
வண்டிகள் இனி பயன் படுத்தப்படும். இப்புதிய முறையை
முழுவதும் செயல்படுத்தியபின் மைய சமையற்கூடங்களில் பெரும்
அளவு சிக்கனம் ஏற்படும் என்ற குறிப்பைத் தந்திருக்கிறார்கள்.
இதன்படி சைக்கிள்களையும் மாட்டு வண்டிகளையும் தக்க
முறையில் பயன்படுத்த நாம் நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்
கிறோம். வேன்கள் ரிப்பேர் ஆகி பல நாட்கள் பழுது பார்க்கப்பட்டு
வர காலம் ஆகிற காரணத்தால் இவைகளைப் பயன்படுத்துவது
நல்லது என்ற கருத்தின் அடிப்படையிலும் இந்தத் திட்டத்தை
அமுல்படுத்தியிருக்கிறோம். குறிப்பிட்ட பள்ளிக்கு ஒரு வண்டி
என்ற முறை வருகிறபோது வேலை வாய்ப்பும் ஏற்படுகிறது.
எண்ணெய், டீசல் நெருக்கடி ஏற்பட்டு வருகிற சூழ்நிலைகளில்
இதுபோன்ற முறைகளை நாம் ஊக்குவிக்க வேண்டியவர்களாக
இருக்கிறோம்.

திரு. ந. குலசேகர பாண்டியன்: பெட்ரோல் வண்டிகள் ஓடுவ
தால் அதிகச் செலவு அரசுக்கு ஏற்படும் என்ற காரணத்தால் டீசல்
வேன்களாக மாற்ற அரசு உத்தேசிக்குமா? விரைவாக இந்தப்
பணியை மேற்கொள்ள அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: இப்போது இருக்கின்ற
வேன்கள் பழுதடைந்திருக்கின்றன என்றால் அவற்றைச் சரி
செய்யவும் மற்றக் காரியங்களைச் செய்யவும் அரசு கவனம்
செலுத்திக் கொண்டிருக்கிறது. நாம் இப்போது சொல்வது புதிய
திட்டத்தைக் கொண்டு வரவேண்டுமென்பது. புதிய திட்டத்தின்
மூலம் வேன்களைப் பயன்படுத்துவதற்குப் பதிலாக மாட்டு வண்டி
கள், சைக்கிள்களைப் பயன்படுத்துவதால் பல பேருக்கு வேலை
வாய்ப்புத் தருவதோடு டீசல், பெட்ரோல் உபயோகத்தையும்
குறைக்க வழி ஏற்படும்.

திரு. த. வேணுகோபால்: தற்போது பள்ளிகளுக்கு மதிய
உணவு காலம் கடந்து எடுத்துச் செல்லப்படுகிறது. மாட்டு வண்டி
கள் மூலம் எடுத்துச் சென்றாலும் அல்லது சைக்கிள் மூலம் எடுத்துச்
சென்றாலும் துரிதமாக காலதாமதம் இன்றி வழங்க வழிவகை
செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: ஒரு பள்ளிக்கு ஒரு
வண்டி என்ற வீதத்தில் ஏற்பாடு செய்ய விரும்புகிறோம். அந்தந்த
ஊர்களில் இருக்கும் வண்டிகளைப் பயன்படுத்த விரும்புகிறோம்.
எங்கிருந்து எடுத்துக் கொண்டு போக வேண்டுமோ அங்கே பக்கத்தி
லிருந்தே எடுத்துக் கொண்டு போகவும் ஏற்பாடு செய்கிற

காரணத்தால் தாமதமாகப் போவது தவிர்க்கப்படும். தாமதமாகப் போவதைத் தவிர்க்க அரசு வேறு பல முயற்சிகளையும் எடுத்துக்கொள்ளும்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : இப்படி வேன்களில் உணவை எடுத்துக் கொண்டு போகிற முறை நீண்ட காலமாக இருக்கிறதா? இந்த முறை எங்களைப் போன்றவர்களுக்குப் புதிதாகத் தெரிகிறது. மற்ற ஜில்லாக்களில் அமல் நடத்தப்படுகிறது என்றால் எந்த அடிப்படையில் இந்தத் திட்டம் அமல் நடத்தப்படுகிறது?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : செங்கற்பட்டு, வட ஆற்காடு, தென்னாற்காடு ஆகிய மூன்று மாவட்டங்களில் மைய சமையற் கூடங்கள் இருக்கின்றன. அந்த மாவட்டங்களிலே 97 மைய சமையற்கூடங்கள் இருக்கின்றன. அங்கிருந்து உணவு எடுத்துச் செல்ல இந்த வேன்கள் பயன்படுத்தப்படுகின்றன.

திரு. மு. ஜான் வின்செண்ட் : மதிய உணவு வழங்குவதில் ஊராட்சி ஒன்றியங்களுக்கு வழங்கப்படுகிற செக்குகள் கால தாமதம் ஆகிறது. உடனடியாக செக்குகளை வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அதுபற்றி விவரங்கள் இல்லையென்றாலும் அரசு தாமதத்தைத் தவிர்க்க நடவடிக்கை எடுக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. தி. கா. நல்லப்பன் : மதிய உணவுக்கு ஒரு குழந்தைக்கு ஒரு வேளைக்கு 15 பைசா கொடுக்கப்படுவதாகச் சொல்லப்படுகிறது. அதை உயர்த்திக் கொடுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மதிய உணவை வேன்களில் எடுத்துச் செல்வதைப் பற்றிய கேள்வி இது.

திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதிலிலிருந்து வேன்களை அறவே நிறுத்தி மாட்டு வண்டிகளிலும் சைக்கிள்களிலும் இந்த மதிய உணவை அனுப்பலாம் என்று அரசு யோசித்திருப்பதாகத் தெரிகிறது. தற்காலிகமாக அப்படி சைக்கிள்களிலும் மாட்டு வண்டிகளிலும் உணவை எடுத்துச் சொல்லும்போது உணவு கெட்டுவிடுகிறது என்று நாங்கள் சொல்லுகிறோம். ஆகவே புதிய திட்டத்தைக் கைவிட வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வியைக் கேளுங்கள். புதிய திட்டத்தைக் கைவிடவேண்டும் என்று உத்திரவு போடாதீர்கள்.



திரு. பெ. சு. திருவேங்கடம் : 15 மைல்கள் தூரத்திற்கு எடுத்துச் செல்லவேண்டியிருக்கிறது, மாட்டு வண்டியிலே எடுத்துச் செல்லப்படுவதால் விடியற்காலையிலேயே எடுத்துச் செல்கிறார்கள், அதன் காரணமாக உணவே கெட்டுவிடுகிறது. ஆகவே வேன் திட்டத்தையே நல்ல முறையிலே செயல்படுத்த அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே. நாம் ஒரு திட்டத்தின் அடிப்படையில் ஒரு புதிய முறையைக் கையாண்டு வருகிறோம். காலப்போக்கிலே அதிலே குறைபாடுகள் இருந்தால் அவற்றைக் களைய முன்வருவோம். மாண்புமிகு உறுப்பினர் கூறியபோது 15 மைல்கள் போவதால் உணவு கெட்டுவிடுகிறது என்ற நிலையைப்பற்றிச் சொன்னார்கள். அப்படி எடுத்துச் செல்கிறபோது அந்த உணவில் சூடு பாதுகாக்கப்படுகிற வசதிகளையெல்லாம் செய்துதான் அனுப்பிக் கொண்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சு. பாலன் : தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தின் அடிப்படையில் உலக சுகாதார கழகம் இத்த உணவை எடுத்துச் செல்வதற்கு ஏதாகிலும் வசதிகள் கொடுத்து உதவி செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அதைப்பற்றி என்னிடத்திலே குறிப்பு இப்போது இல்லை.

## ஒன்றியங்களில் விதைப்பொருட்கள் வழங்கல்

*வினா எண் 84—திரு. தி. கா. நல்லப்பன் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பல ஒன்றிய அலுவலகங்களிலுள்ள விவசாய அபிவிருத்தி நிலையங்களில் உரிய காலத்தில் பருவத்திற்கு தகுந்தாற்போல் விதைப்பொருட்கள் வினியோகிக்கப்படுவதில்லை என்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில், அதனைப் பரிசீலித்து அந்தந்த பருவத்திற்கு தகுந்த விதைப் பொருட்கள் கிடைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :

(அ) இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

திரு. தி. கா. நல்லப்பன் : தலைவர் அவர்களே, விவசாயிகளுக்கு ஏற்ற பருவகாலத்திலே விதையைக் கொடுக்காத காரணத்தால் வேறு தனியாரிடம் வாங்கி விதைக்கின்ற காரணத்தால் பயிர்கள் சரியாக முளைக்காத நிலைமை இருப்பதால் வேளாண்மையும் கெட்டுவிடுகிறது. ஆகவே அரசு விதைப் பண்ணைகளிலிருந்து உரிய பருவத்திலே கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, திட்டமிட்டபடி உரிய பருவத்திற்கு ஒரு மாத காலத்திற்கு முன்னாலேயே வித்துக்கள் அனுப்பப்பட்டு டெப்போக்களில் வைக்கப்படுகின்றன. எந்த பருவகாலத்திலே, எந்த விதை எந்த டெப்போவிலே கிடைக்கவில்லை என்ற விவரத்தைத் தெரிவித்தால் உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. தி. கா. நல்லப்பன் : கடலைக்காய் ஆடிப்பருவத்திலே விதைக்க வேண்டுமென்றால் சித்திரை, வைகாசி மாதங்களிலே வித்துக்கள் கிடைக்கவேண்டும். ஆனால் பொருந்துறை ஒன்றியத்திலே கேட்டால் வரவில்லை என்று சொல்கிறார்கள். அதை தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, எண்ணை வித்துக்களான நிலக்கடலை, எள், சூரியகாந்தி, ஆமணக்கு போன்ற விதைகள் கரீப் பருவத்திலே 3927 டன்களும், ராபி பருவத்திலே 1505 டன்களும் முறைப்படி அனுப்பிவைக்கப்பட்டதாகத் தகவல் வந்திருக்கிறது. குறிப்பிட்ட அந்த ஒன்றியத்திலே வந்து சேரவில்லை என்றால் தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. வ. சத்தியமூர்த்தி : விதைப்பண்ணைகளில் கொடுக்கப்படும் விதைகள் பருவத்திற்குத் தகுந்தாற்போல் கொடுக்கப்படுதல் வேண்டும். முதுகளத்தூர் விவசாயப் பண்ணையில் கோடை காலத்திலே ஏ.டி.டி. 31 என்ற விதையைக் கொடுத்தார்கள். முகவை மாவட்டத்திலே கோடைகாலத்திலே அது விவசாயம் செய்வதற்கு லாயக்கற்றது என்று அதிகாரிகள் கூறினார்கள். அந்த விதை எப்படி விநியோகிக்கப்பட்டது என்று கேட்டபோது எப்படியோ தவறுதலாக வந்து விட்டது என்று கூறினார்கள். இந்த மாதிரி தவறுகள் நடைபெறாமல் இருக்க அரசு சுற்றறிக்கை அனுப்பி நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தவறுகள் களையப்படும்.

திரு. மு. ப. முனுசாமி : தலைவர் அவர்களே, பாலக்கோடு ஊராட்சி ஒன்றியத்திலே விதைகள் இல்லை என்று அரசுக்கு எழுதப்பட்டிருக்கிறது. அமைச்சர் அவர்கள் அதைப்பற்றி நடவடிக்கை எடுத்திருக்கிறார்களா ?



மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : அதுபற்றித் தகவல் இல்லை.

திரு. உ. சுப்பிரமணியன் : தலைவர் அவர்களே, விவசாயக் கிட்டங்கிகளில் முந்தைய பருவ காலத்திலே அனுப்பப்பட்ட விதைகளை வைத்திருக்கின்ற காரணத்தால் வரக்கூடிய பருவ காலத்திற்கு அதையே கொடுக்கிறார்கள். அதை தடுக்க அரசு முன்வருமா ? ஒவ்வொரு கிட்டங்கியிலும் அப்படிப்பட்ட விதைகள் வைக்கப்பட்டு விநியோகிக்கப்படுவதால் அவைகளின் முளைப்புத் திறன் பர்செண்டேஜ் ஆப் ஜெர்மினேஷன் சரியாக இல்லை, ஆகவே அதைப் பார்த்து விநியோகம் செய்வதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: டெப்போக்களுக்கு அனுப்பி வைக்கப்படுகிறபோது அந்த விதைகளுக்கான விதைச் சான்றிதழ்கள் பெற்றுத்தான் அனுப்பிவைக்கப்படுகின்றன; பருவகாலங்களிலே கொடுக்காமல் அங்கேயே இருப்பிலே வைக்கப்பட்டு, அந்த விதைகள் பின்னாலே கொடுக்கப்படுவதாக புகார் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அப்படிப்பட்ட தவறுகள் இருந்தால் அவை நீக்கப்படும்.

[முற்பகல் 9-40]

திரு. செ. இராமலிங்கம்: பேரவைத் தலைவரவர்களே, கடந்த ஒரு மாதகாலமாக திருவிடைமருதூர், திருப்பனந்தாள் ஒன்றியங்களில் விதை டெப்போக்களில் குறுவைப் பட்டத்திற்கு நெல் விதை கிடைக்கவில்லை. இது சம்பந்தமாக ஒரு குறுகிய கால வினாவைக்கூட மூன்று வார காலத்திற்கு முன்பு நான் கொடுத்திருந்தேன். ஆனால் இதுவரையில் அது வரவில்லை. இந்தச் சந்தர்ப்பத்திலாவது, அந்த ஒன்றியங்களில் குறுவைப் பட்டத்திற்குத் தேவையான நெல் விதைகள் விநியோகிக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, தகவல் கேட்டு நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. ந. சிவஞானம் : பேரவைத் தலைவரவர்களே, தஞ்சை மாவட்டத்தில் எல்லா டெப்போக்களிலும் ஐ. ஆர். 20 விதை நெல் கிடைக்கவில்லை. இது சம்பந்தமாக சரியான நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, மூலக் கேள்வி பொதுவானது. தனிப்பட்ட முறையில் சில விவரங்களைத் தெரிந்து கொள்ள விரும்பும் உறுப்பினர்கள் தனியாகக் கேள்வி போட்டால் அதைத் தர முடியும்.

திரு. எஸ். சிவராமன்: தலைவரவர்களே, பஞ்சாயத்து யூனியன்களில் விதைகள் கொடுக்கிறார்கள். அந்த விதைகள் தேர்வு பெற்ற, ஐ.எஸ்.ஐ. முத்திரையோடு கொடுக்கப்படுகிறது. அப்படி கொடுக்கின்ற விதைகள் சரியாக முளைப்பது இல்லை. இதனால் மகசூல் பாதிக்கப்படுகிறது; முளைப்பது பாதிக்கப்படுகிறது. அப்படிப்பட்ட நேரங்களில் யார் அந்த ஐ.எஸ்.ஐ. முத்திரை கொடுத்தார்களோ அவர்கள் மீது தக்க நடவடிக்கை எடுக்கப்படுமா அல்லது விவசாயிகளுக்கு நஷ்டயீடு கொடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவரவர்களே, இப்படிப் பட்ட புகார்கள் அரசுக்கு இதுவரையில் வரவில்லை. வந்தால் கவனிக்கப்படும்.

திரு. பெ. சு. திருவேங்கடம்: பேரவைத் தலைவரவர்களே' இந்த விதைகளை விவசாயத் துறையில் ஒரு பிரிவில் வாங்கி' அதை ஒன்றியங்களுக்குக் கொடுத்து விற்கச் சொல்லுகிறார்கள். வடார்க்காடு மாவட்டத்தில் நான்கூட பொன்னி நெல் விதை கேட்டேன். விவசாயிகளிடமிருந்து சரியாக வாங்காமல், ஒன்றியங்களுக்குக் கொடுத்து விற்கச் சொல்வதால் சரியாக முளைப்பதில்லை. அதனால் ஒன்றியங்களுக்குக் கெட்டபெயர் ஏற்படுகிறது. பண்ணைகளில் இருந்து வரும் விதைகள் கிடைப்பது இல்லை. எனவே, அரசாங்கம் அதற்காக பண்ணைகளிலிருந்து கிடைக்க நடவடிக்கை எடுக்குமா? அமைச்சரவர்கள் அதற்குத் தக்க நடவடிக்கைகளை எடுத்துக் கொள்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவரவர்களே' பண்ணைகளிலே, அனைத்து இடங்களுக்கும் உரிய விதைகளை நாம் நிச்சயமாக உற்பத்தி செய்ய முடியாது. விதைப் பண்ணைகள், விதை மையம், தனியார் பண்ணைகள் என்று இந்தக் கூட்டு முயற்சிகளின் மூலம்தான் உற்பத்தி செய்து கொடுக்க முடியும். விதைப்பண்ணைகளிலிருந்து உற்பத்தி செய்து அனைத்து இடங்களுக்கும் அனுப்புவது என்பது நடைமுறையிலே இயலாத ஒன்று.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: பேரவைத் தலைவரவர்களே, இந்த 'சீட் ஃபார்ம்ஸ்'-இலிருந்து கிடைக்கும் விதைகள் நல்லதாக இல்லை. எதைப் போட்டாலும் முளைப்பது இல்லை. இதற்கெல்லாம் காரணம் அதிகாரிகளின் கவனக் குறைவுதான் என்பது அரசுக்குத் தெரியுமா? எனவே, இந்தக் குறைபாடுகள் இல்லாமல் பார்த்துக் கொள்ளப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவரவர்களே, குற்றச்சாட்டு பொதுவாக இருக்கிறது. தனிப்பட்ட முறையிலே எங்கே கெட்டுப் போவதைக் கொடுத்தார்கள் என்று குறிப்பிட்டால் நடவடிக்கை எடுக்கலாம்.

ஜோலார்பேட்டைக்கு குடிநீர் வழங்கும் திட்டம்.

*வினா எண் 85— திரு ப. சுந்தரம்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வட ஆற்காடு மாவட்டம், திருப்பத்தூர் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள ஜோலார்பேட்டைக்கு பாலாற்றிலிருந்து திருப்பத்தூருக்கு போகும் குடி தண்ணீர் குழாயிலிருந்து குடிநீர் வழங்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இந்த திட்டம் எப்போது ஆரம்பிக்கப்படும்?

மாண்புமிகு திரு எஸ். இராகவானந்தம்:

(அ) தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் பரிசீலனையில் உள்ளது.

(ஆ) திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டவுடன் மாவட்ட ஆட்சியாளர் ஊரக வளர்ச்சி இயக்குநர் பரிந்துரையுடன் அரசு ஒப்புதலுக்கு அனுப்பி, ஒப்புதல் பெற்றவுடன் மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு த. வேணுகோபால்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, பரிசீலனையில் உள்ளதாக மாண்புமிகு அமைச்சரவர்கள் கூறினார்கள். இது நீண்ட நாட்களாகப் பரிசீலனையில் இருப்பதாகத் தெரிய வருகிறது. இதை உடனடியாக நிவர்த்தி செய்ய அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு எஸ். இராகவானந்தம்: பேரவைத் தலைவரவர்களே, பரிசீலனையைத் துரிதப்படுத்தச் சொல்லுகிறேன்.

திரு தி. அன்பழகன்: பேரவைத் தலைவரவர்களே, ஜோலார்பேட்டை பத்தாயிரம் மக்களுக்கும் அதிகமான மக்கள் தொகையைக் கொண்ட பேரூராட்சியாகும். இது அந்தப் பகுதியில் நீண்ட நாள் கோரிக்கையாக இருப்பதாலும், இதற்குப் போட வேண்டிய தொகையையும் இந்த பேரூராட்சி கட்டுவதற்குத் தயாராக இருப்பதாலும், இந்தத் திட்டத்தை உடனடியாகச் செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு எஸ். இராகவானந்தம்: பேரவைத் தலைவர
வர்களே, நான் முன்பே சொன்னதுபோல், அறிவுப்படுத்தச்
சொல்கிறேன்.

திரு வ. சத்தியமூர்த்தி: பேரவைத் தலைவரவர்களே, இந்த
மதிய உணவுத் திட்டத்தை.....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது ஜோலார்பேட்டைக்கு
குடிநீர் வழங்கும் திட்டம் பற்றிய கேள்வி.

## சிவகங்கைப் பகுதியிலுள்ள நெட்டூர் கண்மாய்.

*வினா எண் 86—திரு செ. சிவசாமி: மாண்புமிகு நீர்ப்பாசன
துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முகவை மாவட்டம் சிவகங்கை டிவிஷனில் உள்ள
நெட்டூர் கண்மாய் வெட்டு மராமத்து இல்லாமலும் கரைகள்
பலப்படுத்தப்படாமலும் இருப்பது உண்மையா ?

(ஆ) ஆம் எனில், அது பற்றி என்ன நடவடிக்கை எடுத்
துள்ளது?

மாண்புமிகு திரு கே. இராஜா முகமது: (அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு செ. சிவசாமி: பேரவைத் தலைவரவர்களே, சிவகங்கை
டிவிஷனில் உள்ள நெட்டூர் கண்மாய் கிட்டத்தட்ட 3,000 ஏக்கர்
பாசனத்திற்கு உதவி செய்யக்கூடிய மிகப் பெரிய கண்மாய் ஆகும்.
அந்தக் கண்மாயில் ஒரு தடவை இயற்கையின் மூலம் தண்ணீர்
நிரம்பிவிட்டால் ஒரு போகம் தாராளமாகப் பயிர் செய்வதற்குப்
பயன்படக்கூடிய கண்மாய். அந்தக் கண்மாய் நீண்ட நாட்களாகச்
சரியான முறையில் ரிப்பேர் செய்யப் படாமல் இருந்து கொண்டி
ருக்கிறது. தற்பொழுது நவீனப் படுத்தும் முறையிலே, உலக
வங்கியிலிருந்து பெறக்கூடிய நிதியிலிருந்து அந்தக் கண்மாயை
நவீனப் படுத்துவதற்கு எற்பாடு செய்யப்படுமா என்று தெரிந்து
கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு கே. இராஜா முகமது: தலைவர் அவர்களே
உலக வங்கியினுடைய நிதி உதவி பெற்று கண்மாய்களைப் பரா
மரிக்கின்ற பணிகள் இன்னும் செயல்வடிவிற்கு வரவில்லை. ஆனால்
இந்த நெட்டூர் கண்மாயைப் பொறுத்த வரையிலே, மடைகள்
எண் 2, 5 ஆகியவைகள்தான் பழுதடைந்திருந்தன. அவை மார



மத்து செய்யப் பட்டுவிட்ட காரணத்தினாலே, தற்பொழுது
கரைகளைப் பலப்படுத்த வேண்டிய சூழ்நிலையில்லாத வகையில்
நன்றாக இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு செ. சிவசாமி: தலைவரவர்களே, அந்தக் கண்மாயினு
டைய தண்ணீர் கொள்ளளவை அதிகப்படுத்தும் முறையிலே 'சில்ட்
கிளியரன்ஸ்' செய்யப்படுமா என்று கேட்கிறேன்.

மாண்புமிகு திரு கே. இராஜா முகமது: தலைவரவர்களே,
கரைக்கு ஆபத்து ஏற்படக் கூடிய அளவுக்கு நீர்ப்பெருக்கு சமீப
காலத்திலே இருந்திருக்கிறது. எனவே, இனிமேல் கரை உடை
யாத அளவு இரண்டு மடைகள் பலப்படுத்தப்பட்டிருக்கின்றன.
அதற்குப் பிறகு, ஒரு வேளை, நீர்ப்பிடிப்புகளுடைய பரப்பளவை
அதிகப்படுத்த வேண்டிய அவசியம் இருக்குமானால், அரசு அது
பற்றி பரிசீலிக்கும்.

திரு. உ. சுப்பிரமணியன்: பேரவைத் தலைவரவர்களே,
நெட்டூர் கண்மாயைப் பொறுத்தவரையிலே, டி.டி.சி. கூட்டத்திலே
மதிப்பிற்குரிய மாண்புமிகு சிவசாமி விவர்கள் எழுப்பினார்கள். வீது
அதற்கு அங்கு சால்ஜாப்பு பதில்தான் சொல்லப்பட்டது. பராமரிக்க
பெரிய கண்மாய். அந்தக் கண்மாயை ஒழுங்காகப் பலப்படுத்த வேண்
வேண்டுமென்றால், ஒன்று அதன் கரைகளைப் ஆழப்படுத்துவதவசியம். ஆகவே
டும், இன்னொன்று கண்மாயை அதிகப் படுத்த வேண்டு
ஆழப்படுத்தி, தண்ணீர் கொள்ளளவை அங்கு மடைகள், கலுங்குகள் பெரும்
மென்று கேட்கிற நேரத்திலே, நிவர்த்தி செய்ய
ஆழத்திலே பாதிக்கப்பட்டிருக்கின்றன. அதை நடவடிக்கையும்
வேண்டுமென்று கேட்டும் இன்னும் எந்தவித வந்துள்ளதா ?
எடுக்கவில்லை. அது அரசினுடைய கவனத்திற்கு என்பதை
அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது
அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு கே. இராஜா முகமது: தலைவர் அவர்களே,
கரையைப் பழுது பார்ப்பது பற்றித்தான் இங்கே கேள்வி கேட்கப்
பட்டிருக்கிறது. 'கரைகள் பலப்படுத்தப்படாமல் இருப்பது
உண்மையா' என்ற மூலக் கேள்விக்குத்தான் நான் பதில் சொல்லி
இருக்கிறேன். இரண்டு மடைகள் இருந்த பகுதியிலேதான்
சேதாரம் இருந்தது. அவை சரிசெய்யப்பட்ட காரணத்தினாலே
கரைகள் இப்பொழுது பலமாக இருக்கின்றன. கண்மாயை
ஆழப்படுத்த வேண்டும். கலுங்குகளை ஆழப்படுத்துவதிலே
பிரச்னை இல்லாமல் இருக்குமானால். அதையெல்லாம் எப்
பொழுது செயல்படுத்துவீர்கள் என்று மாண்புமிகு உறுப்பினர்
அவர்கள் இப்பொழுது கேட்கிறார்கள். அதற்கு தனிக் கேள்வி
போட வேண்டும், இல்லையென்றால், இதையே குறிப்பாக
வைத்துக்கொண்டு மேலும் நடவடிக்கை எடுக்க நாங்கள் முயற்சி
செய்வோம்.

[1980 ஜூலை 31

## நெசவாளர் கூட்டுறவு சங்கம் சோமனூர்

*வினா எண் 87—திரு. பி ஈஸ்வர மூர்த்தி என்கிற சொரணம்: மாண்புமிகு கைத்தறி—கதர்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டம் பல்லடம் தாலூகா, சோமனூரில் நெசவாளர் கூட்டுறவு சங்கத்தில் சுமார் இரண்டு இலட்சத்திற்கு மேல் கையாடல் நடந்துள்ளதென்பது உண்மையா ?

(ஆ) ஆம் எனில் கையாடல் செய்தவர்கள் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன்: பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம். ரூ. 2.32 இலட்சம் அளவிற்கு கையாடல் நடந்துள்ளது.

(ஆ) மேற்கண்ட கையாடல் தொடர்பாக தமிழ்நாடு கூட்டுறவு சட்டம், பிரிவு 65–ன் கீழ் விசாரணை நடத்தப்பட்டு, அதன் அடிப்படையில் காவல் துறைக்கு புகார் செய்யப்பட்டது. குற்றம் சாட்டப்பட்ட திரு. எஸ். மதலைமுத்து, திரு. தேவ சகாயம், திரு. ரூசையப்ப செட்டியார் ஆகியவர்கள் கைது செய்யப்பட்டுள்ளார்கள். தவிர குற்றவாளிகள் மீது நீதிமன்றத் தில் வழக்கு தொடரப்பட்டுள்ளது. கையாடல் தொகை சட்டப்படி வசூல் செய்வதற்கும் குற்றவாளிகளின் அசையாச் சொத்துக்கள், தீர்ப்புக்குமுன் ஜப்தி செய்யப்பட்டு, தமிழ்நாடு கூட்டுறவு சட்டம், பிரிவு 71—ன் கீழ் வசூல் நடவடிக்கையும் தொடரப்பட்டுள்ளது.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: பேரவைத் தலைவர் அவர்களே, ரூ. 2 இலட்சத்திற்கு மேல் அந்த சொசைட்டியிலே கையாடல் செய்யப்பட்டிருப்பதாக அமைச்சர வர்கள் ஒத்துக் கொண்டார்கள். எந்தத் தேதியிலே கையாடல் நடைபெற்றது? எப்பொழுது வழக்கு தொடரப்பட்டது? இப் பொழுது வழக்கு என்ன நிலையிலே இருக்கிறது என்பதை நான் தெரிந்துகொள்ள விரும்புவதோடு, இதுவரை பணம் பூராவும் வசூலிக்கப்பட்டு விட்டதா? இன்னும், ஏதாவது பாக்கி இருக் கிறதா? பாக்கி இருந்தால் பாக்கியை வசூலிப்பதற்கு அரசு என்ன நடவடிக்கை எடுக்க உத்தேசித்துள்ளது?

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன்: பேரவைத் தலைவர் அவர்களே, 14–2–1978–ல் தகவல் வந்து, விசாரணை அறிக்கை 9–1–1979 அன்று கிடைக்கப்பெற்று, கூட்டுறவு



1980 ஜூலை 31]

சங்கத்தின் ஜவுளிகள், மூலப் பொருள் மற்றும் கொடுபட வேண்டிய இனங்களில் கையாடல் நடைபெற்று நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. அதில், அரசுக்கு வரவேண்டிய பணமும் இல்லை, வங்கிகளுக்கு வரவேண்டிய பணமும் இல்லை. தனி மூலதனச் சொத்தை வைத்து செய்தபடியால் அவர்களுக்குள்ளே நடந்த சமாச்சாரம்.

(முற்பகல் 9–50.)

திரு. இல. பலராமன்: தலைவர் அவர்களே, இரண்டு இலட்சத்துக்கு மேல் இந்த சங்கத்திலே கையாடல் நடந்திருக்கிறது. இதை காலங்கடந்து கண்டுபிடிக்கக் கூடிய சூழ்நிலை ஏன் ஏற்பட்டது? அதற்காக நியமிக்கப்பட்ட அதிகாரிகள் என்ன செய்து கொண்டிருந்தார்கள்? கூட்டுறவு விதி 65–ன்படி நடவடிக்கை எடுப்போம் என்று கூறினார்கள். இந்த 65-வது விதி திருத்தப்படுமா? இன்றைக்கு கூட்டுறவு சட்டங்கள் திருத் தப்படும்போது இந்த 65–வது விதியின் நிலை என்ன? அப்படி இந்த விதி மேலும் திருத்தப்படுகின்ற நிலையில் என்ன தண்டனை விதிக்கப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன்: தலைவர் அவர்களே, நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. கோர்ட்டிலே வழக்கு நடந்து கொண்டிருக்கிறது. இந்த விதியை திருத்துவதற் கான தேவை இருந்தால், அது பற்றி பரிசீலிக்கப்படும்.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: தலைவர் அவர்களே, இந்தக் கையாடல் ஏற்பட்ட பணம் அரசுக்கும் பங்கிற்கும் சம்பந்தம் இல்லை என்று சொன்னார்கள். ஆனால் மூலதனத்தையே சாப்பிட்டிருக்கிறார்கள். அதை அந்த நபரிடம் இருந்து வசூலித்து, அந்த சொசைட்டிக்கு சேர்ப்பிக்க அரசு முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன்: தலைவர் அவர்களே, நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

## மேல் நிலைப் பள்ளிகளில் தொழிலாசிரியர்கள்

*கு. கா. வி. எண் 52—திரு. ரா. கு. பெருமாள்: மாண்பு மிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா:

(அ) மேல் நிலைப்பள்ளிகளில் முழு நேர தொழில்கல்வி ஆசிரியர்களை நியமிக்க அரசுக்கு உத்தேசம் உண்டா?

(ஆ) ஆம் எனில், எத்தனை பேர்?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :

(அ) இல்லை ; ஏனெனில் முழு நேரத் தொழிலாசிரியர்களை நியமிப்பதைவிட தொழிலைச் சார்ந்தவர்கள் பகுதிநேர ஆசிரியராக இருப்பது மிகுந்த பயனைக் கொடுக்கிறது.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. எம். ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேல்நிலைப் பள்ளிகள் ஆரம்பித்ததற்குப் பின்னாலே பி. யு. சி. வகுப்புகளில் பாடம் சொல்லிக் கொண்டு வந்த ஆசிரியர்கள் மேல்நிலைப் பள்ளிகளில் வேலை கொடுக்கப்படாமல் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறார்கள். இப்போது அவர்களுக்கு மேல்நிலைப் பள்ளிகளில் வேலை அளிக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, பி.யு.சி. வகுப்பில் பாடம் சொல்லிக் கொடுத்துக் கொண்டிருந்த ஆசிரியர்களுக்கு நாம் அங்கேயே பணிப் பாதுகாப்பு கொடுத்து, அவர்களுக்கு வேலை அளிக்கின்ற முயற்சிகளை மேற்கொண்டு இருக்கிறோம்.

திரு. க. பாலசுப்பிரமணியம் : தலைவர் அவர்களே, மேல் நிலைப் பள்ளிகளில் இருக்கின்ற தொழில் ஆசிரியர்கள் பகுதி நேரம் வேலை செய்வது சிறந்தது என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அவர்கள் பகுதி நேரமே வேலை செய்தாலும் முழு நேர ஊழியர்களுக்குக் கிடைக்கின்ற சலுகைகள் அத்தனையும் அவர்களுக்கும் வழங்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அப்படிப்பட்ட உத்தேசம் அரசுக்கு இல்லை.

திரு. பீ. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொர்ணம் : தலைவர் அவர்களே, இது மேல்நிலைப் பள்ளியிலே தொழில் கல்வி ஆசிரியர்களைப் பற்றிய கேள்வி. அந்தத் தொழில் கல்வி ஆசிரியர்களுக்கு வழிகாட்டும் ஆசிரியர்கள் என்ற முறையிலே எல்லா மாவட்டத்திற்கும் நியமிக்கும் வகையில், டிரெயினிங் கொடுக்கப்பட்டு 3 பேர்களை டெல்லிக்கு அனுப்பினார்கள். அவர்கள் டிரெயினிங் முடிந்து வந்துவிட்டார்கள். அப்படி டிரெயினிங் முடித்து வந்தவர்கள் வேலைக்கு நியமிக்கப்பட்டு விட்டார்களா ? அப்படி நியமிக்கப்படாததற்கு என்ன காரணம் என்பதை அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, அது பற்றிய குறிப்பு என்னிடத்திலே இல்லை.

## மேட்டுப்பாளையம் அரசு உயர்நிலைப்பள்ளிக் கட்டிடம்

*கு. கா. வி. எண் 53—திரு. ரா. பெரியசாமி: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) திருச்சி மாவட்டம், தொட்டியம் தொகுதி மேட்டுப்பாளையத்தில் அரசு உயர்நிலைப்பள்ளிக்குப் பொறியியல் கட்டிடம் கட்ட 1962-63ஆம் ஆண்டில் நிதி ஒதுக்கீடு செய்து 1964-ம் ஆண்டில் பொறியியல் கட்டிடம் கட்ட ஆரம்பித்து 6 அடி உயரம் கட்டிடம் கட்டி முடிவு அடையாத நிலையில் நிறுத்தப் பட்ட கட்டிடம் மிகவும் ஆபத்தான பழுதடைந்த நிலையில் இருப்பதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், அது குறித்து எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) மற்றும் (ஆ)*: 1964ஆம் ஆண்டில் அக்கட்டடம் கட்டத் தொடங்கி பின்னர் அதனைக் கட்டி இருந்து நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாகவும், முடிக்க பொதுப்பணித் துறையிடம் மதிப்பீடுகள் கோரப்பட்டுள்ளதாகவும், மதிப்பீடுகள் வந்தவுடன் அவ்வேலையை முடிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும், திருச்சிராப்பள்ளி தலைமைக் கல்வி அலுவலர் தெரிவித்துள்ளார். இது பற்றி முழுமையான விவரங்களை அரசு பெற்று தேவையான மேல் நடவடிக்கை எடுக்கும்.

திரு. ரா. பெரியசாமி: 1962-63ஆம் ஆண்டில் நிதி ஒதுக்கீடு செய்து, 1964 ஆம் ஆண்டில் அது கட்ட ஆரம்பித்து, இந்த 16 வருஷம் ஆன பிறகும் அந்தக் கட்டிடம் 6 அடி உயரத்திற்கு மேல் கட்டப்படவில்லை, அந்தக் கட்டிடம் இடிந்து போகும் நிலையில் இருக்கிறது. அந்தக் கட்டிடம் கட்டி முடிக்க இன்னும் 32 வருஷம் ஆகுமா அல்லது உடனடியாகக் கட்டி முடிக்க அரசு முன் வருமா என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, மதிப்பீடுகள் வந்தவுடன் அந்த வேலையை முடிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. ரா. பெரியசாமி : தலைவர் அவர்களே, 1962-63-ம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, 1964-ல் 20,000 ரூ. செலவு செய்து 6 அடி உயரம் வரை கட்டியிருக்கிறார்களே அது மதிப்பீடு இல்லாமலா கட்டினார்கள் ? எதனால் அந்தப் பணி நிறுத்தப்பட்டது என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, பழைய மதிப்பீட்டில் இப்போது கட்டிடம் கட்டித் தர யாரும் தயாராக இருக்க மாட்டார்கள்.

திரு. ரா. பெரியசாமி : தலைவர் அவர்களே, இந்த ஆண்டிலேயே அந்த திட்டத்தைச் செயல்படுத்த அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, இந்த வருஷத்திலேயே அதைக் கட்டுவதற்கான ஆர்வம் அரசுக்கு இருக்கிறது. ஆகவே, அந்த மதிப்பீடுகள் வந்தவுடன் அந்த மதிப்பீடுகளுக்கு ஏற்ப அந்தப் பணிகள் மேற்கொள்ள முயற்சி எடுக்கப்படும். விலைவாசி ஏறியிருக்கிற காரணத்தால் பழைய மதிப்பீடுகளின் அடிப்படையில் அந்தக் கட்டடத்தை இந்த ஆண்டு கட்ட முடியாது.

திரு. எஸ். சிவராமன்: தலைவர் அவர்களே, அரசாங்கம் நிதி ஒதுக்கீடு செய்து, வேலைகள் ஆரம்பிக்கப்பட்ட பிறகு, 16 ஆண்டுகாலமாக அது கட்டப்படவில்லை என்று சொன்னால் அதற்குக் காரணம் என்ன? சில ஒப்பந்தக்காரர்கள் சரிவர வேலைகளைச் செய்யாமல் காலத்தை கடத்திக் கொண்டு வந்து, பிறகு அது லாபகரமாக இருக்காது என்று தெரிகிறபோது அதை நிறுத்தி விட்டு, மறுபடியும் சிலகாலம் கழிந்து புதிய மதிப்பீடுகள் கொடுத்து அதை முடிக்கவேண்டும் என்று நினைக்கிறார்கள், இது வரவேற்கத் தக்கதல்ல. இப்படி சரிவர செயல்படுத்தாத ஒப்பந்தக்காரர்கள் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது? அந்த ஒப்பந்தம் ரத்து செய்யப்பட்டு விட்டதா அந்த ஒப்பந்தக்காரர்கள்மீது நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, அந்தக் கட்டிடம் கட்டும் பணியை நாம் பொதுப்பணித்துறையிடம் தந்து விடுகிறோம். அவர்கள் அந்தக் காரியங்களைச் செய்து, கட்டிடத்தைக் கட்டிக்கொடுக்கிறார்கள். அதற்காக ஆகும் செலவைத்தான் கல்வித் துறையில் தருகிறார்கள். நாமே இன்னொரு துறையிடம் புள்ளி விவரங்களைப் பெற்றுத்தான் தரவேண்டி இருக்கிறது. ஆனால் கல்வித் துறையினரைப் பொறுத்தவரையில், அதை உடனடியாகக் கட்டித் தருவதற்கு முயற்சிகள் எடுத்து, அந்தத் துறை அதிகாரிகளோடு கலந்து பேசி அதை விரைவாக முடிக்க தக்க நடவடிக்கைகள் எடுத்து வருகிறது.





திரு. என். எஸ். வி. சித்தன் : தலைவர் அவர்களே, இந்தக் கேள்வியின் முக்கியநோக்கமே ஏறத்தாழ 16 ஆண்டுகளுக்கு முன்னால் ஆரம்பிக்கப்பட்ட அந்தப்பள்ளிக் கட்டிடம் இன்னும் முடிவுறாத நிலையில் இருப்பதற்காக உள்ள காரணம் என்ன என்பதை அறியவும், திருத்திய மதிப்பீடுகள் வாங்குவது என்று சொன்னால் அதை 1 அல்லது 2 அல்லது 3 ஆண்டுகளுக்குள் வாங்கிவிட முடியும் என்கிற நிலை இருப்பதால், அதைச் செய்யாமல், இவ்வளவு ஆண்டுகாலமாக அது தாமதப்பட்டு வருவதற்காக உள்ள நிலைமைகள் என்ன என்பதை அறியவும், அதே நேரத்தில் எஸ்டிமேட் தொகை குறைவாகப்போடப்பட்டதா, பல ஆண்டு காலமாக அது எடுக்கப்படாமல் இருப்பதற்காக காரணம் என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 16 ஆண்டுகாலத்தில் நாங்கள் ஆட்சியில் இருந்தது 2½ ஆண்டுகள். அதற்கு முன்னாலே கிட்டத்தட்ட 14 ஆண்டுகாலம் எங்களைவிட மிகப் பெரியவர்கள் பொறுப்பில் இருந்து இருக்கிறார்கள். அவர்களால் சாதிக்க முடியாததை விரைவாகச் சாதிக்கவேண்டும் என்று இப்போது கேள்விகள் கேட்டுக்கொண்டு இருக்கிறார்கள். நாம் நிச்சயம் அதை விரைவில் சாதித்துத் தருவோம் என்றுக் கூறிக்கொள்கிறேன்.

## மாவட்ட நீதிபதி பதவிகள்

*கு. கா. வி. எண் 54—திரு. வ. சத்தியமூர்த்தி : மாண்புமிகு கூட்டுறவு—சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) மாவட்ட நீதிபதி பதவிக்கான நேரிடைத் தேர்வு எப்போது நடந்தது ?

(ஆ) தற்போது மாநிலத்தில் மொத்தம் எத்தனை மாவட்ட நீதிபதிகள் நிரந்தரமாக நியமிக்கப்பட வேண்டியுள்ளது ?

(இ) இரண்டாம் வகுப்பு நடுவர் வேலையில் எத்தனைப்பேர் வேறு துறையிலிருந்து தற்காலிகமாக நியமிக்கப்பட்டுள்ளார்கள்?

(ஈ) இரண்டாம் வகுப்பு நடுவர்கள் சங்கம் மாவட்ட நீதிபதிகள் தேர்வு நடத்துவதற்கு நீதிமன்ற தடைவாங்கியுள்ளார்களா?

(உ) எப்போது மாவட்ட நீதிபதிகள் தேர்வு நடத்தப்படும்?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :

(அ) மாவட்ட நீதிபதி பதவிக்கான நேரிடைத்தேர்வு கடைசியாக ஜனவரி, 1976-ம் ஆண்டு நடைபெற்றது.

(ஆ) தற்போது இரண்டு மாவட்ட நீதிபதிகள் நேரடி நியமனம் மூலம் நியமிக்கப்பட வேண்டியுள்ளனர்.

(இ) 111 பேர் தற்காலிகமாக இரண்டாம் வகுப்பு நடுவர்களாக வேறு துறையிலிருந்து நியமிக்கப்பட்டுள்ளனர்.

(ஈ) இது சம்பந்தமாக அரசுக்கு எந்த தகவலும் இல்லை.

(உ) தற்போது நிரப்பப்படவேண்டிய இரண்டு மாவட்ட நீதிபதி பதவிகளுக்கு நியமனம் செய்யவேண்டி, 15-7-1980 -க்குள் மனுக்கள் அனுப்பலாம் என்று விளம்பரம் கொடுக்கப்பட்டுள்ளது. வந்துள்ள மனுக்களை பரிசீலனை செய்து உயர் நீதிமன்றம் தேர்வு நடத்தும்.

(முற்பகல் 10.00)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவையின் அனுமதியுடன் கேள்வி நேரத்தை சிறிது நீட்டிக்கிறேன்.

திரு. வ. சத்தியமூர்த்தி : தலைவரவர்களே, 111 பேர்கள் வேறு துறையிலிருந்து இரண்டாம் வகுப்பு நடுவர்களாக நியமிக்கப்பட்டுள்ளதாக அமைச்சரவர்கள் சொன்னார்கள். நீதித் துறை வேறு, நிர்வாகம் வேறு என்ற தத்துவத்தையே சந்தேகிக்கும் வகையில் இது இருக்கிறது. வேறு துறைகளிலிருந்து வருபவர்களை இரண்டாம் வகுப்பு நடுவர்களாக நியமிப்பதால் நீதிமன்றத்தில் தனித் தன்மைக்கு பாதகம் ஏற்படுகிறது. அது மட்டுமல்ல. அவர்கள் வேறு பல துறைகளில் கிளார்க் போன்ற வேலைகளில் இருந்திருக்கிறார்களே தவிர, வழக்கறிஞர்களாக இருந்து வேலை பார்த்த அனுபவம் அவர்களுக்கு இல்லை. ஆகவே, நீதிமன்றத்தில் வழக்குகளை எப்படி நடத்த வேண்டும் என்பது தெரியவில்லை. வழக்கறிஞர்களை நடத்தி அனுபவம் இல்லாததால் எப்படி தீர்ப்பு எழுதுவது என்பதை அங்குள்ள சில எழுத்தர்களை கேட்டு எழுதவேண்டியிருக்கிறது. ஆகவே, உடனடியாக வேறு துறைகளிலிருந்து நீதிமன்றத்திற்கு நியமிக்கும் வழக்கத்தை நிறுத்த ஏற்பாடு செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவரவர்களே, இந்த நிலை இன்று ஏற்பட்டதல்ல. 1965-லிருந்தே இதற்குள்ள பணி விதிமுறைகள் நீதிமன்றத்தில் தனித்தன்மையிலிருந்து



தள்ளப்பட்டு, தள்ளப்பட்டு, இந்த நிலைக்கு வந்திருக்கிறது. தற்போது நாங்கள் நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறோம். நீதித் துறையில் இரண்டாம் வகுப்பு நடுவர்களாக இருப்பவர்களை முதல் வகுப்பு நடுவர்களுக்கு சமமாக உயர்த்தி, டிஸ்டிரிக்ட் முன்சீப் பதவியையும் அதோடு இணைத்து, ஒருங்கிணைப்பு செய்தால் இந்த பிரச்சனை தீர்ந்துவிடும் என்று நாங்கள் உறுதியாக நம்புகிறோம்.

திரு. எஸ். ரெத்தினராஜ் : தலைவரவர்களே, இப்போது வழக்கறிஞர்களில் ஏராளமானவர்களுக்கு போதிய வருமானம் வரவில்லை. வேலை இல்லாமல் இருக்கிறார்கள். ஆகவே அனைத்து இரண்டாம் வகுப்பு நடுவர் பதவிகளுக்கும் வழக்கறிஞர்களிலிருந்து நியமனம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவரவர்களே, ஏற்கெனவே சொன்னேன். இரண்டாம் வகுப்பு நடுவர்களை முதல் வகுப்பு நடுவர்கள் தரத்திற்கு உயர்த்தி, டிஸ்டிரிக்ட் முன்சீப்களையும் அவர்களோடு இணைத்து, இன்டகிரேஷன் செய்ய இருக்கிறோம். அதற்கு இந்தத் தொடர் கூட்டத்திலேயே சட்டம் இயற்ற இருக்கிறோம். அதன் பிறகு இந்தப் பிரச்சனை தீர்ந்துவிடும்.

திரு. ஜி. மூர்த்தி : தலைவரவர்களே, இந்த டிஸ்டிரிக்ட் முன்சீப், ஜூடிஷியல் ஃபர்ஸ்ட் கிளாஸ் மாஜிஸ்ட்ரேட் இந்த இரண்டையும் ஒன்றாக இணைக்கும்போது சிவில் பவர் எல்லாம் கிரிமினல் கோர்ட்டில் இருக்கிற மாஜிஸ்ட்ரேட்டுக்கும் தரப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்,

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவரவர்களே, இந்த ஒருங்கிணைப்பு திட்டத்தின் ஒரு முக்கியமான நோக்கமே அதுதான்.

திரு. என். குப்புசாமி : தலைவரவர்களே, இந்த குற்றவியல் இரண்டாம் வகுப்பு நடுவர்களை முதல் நிலை நடுவர்கள் தரத்திற்கு உயர்த்தி, அவர்களையும் மாவட்ட உரிமையியல் நடுவர்களையும் ஒன்றாக இணைக்கும்போது முதல் வகுப்பு குற்றத்தை விசாரிக்கும் அதிகாரம் இந்த குற்றவியல் நடுவர்களுக்கு கொடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. சி: பொன்னையன் : தலைவரவர்களே, அதையும் கருத்தில் கொண்டுதான் இந்த இணைப்பு ஏற்படுத்தப்படுகிறது: அவர்களுக்கு அதிகாரம் அளிக்கப்படும்.

திரு.என்.எஸ். வி. சித்தன்; தலைவரவர்களே, இந்த நடுவர்கள் வேலையில், தற்காலிகமாக வேலையில் இருப்பவர்களை நிரந்தரமாக்கும் போது அத்தனை பேர்களையும் சர்வீஸ் கமிஷன் மூலம் தேர்வு வைத்து, எடுக்க அரசு ஏற்பாடு செய்யுமா? இதில் காலவரையறை வைத்து, அதற்கு பின்னால் வந்தவர்கள்தான் சர்வீஸ் கமிஷன் மூலம் தேர்வு செய்யப்படுவார்கள் என்று அறிவித்திருப்பதாக கேள்விப்படுகிறேன். அப்படி இல்லாமல் தற்காலிகமாக இருக்கிற அத்தனை பேர்களும் சர்வீஸ் கமிஷன் மூலமாக தேர்வு செய்யப்பட்டு, நியமிக்கப்படுவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவரவர்களே, நிரந்தரமாக்கும்போது, எத்தனை பதவிகள் நிரந்தரமாக்கப் படுகிறதோ அத்தனைப் பேர்களும் சர்வீஸ் கமிஷன் மூலமாகத் தான் கண்டிப்பாக நியமிக்கப்படுவார்கள்.

திரு. வ. சத்தியமூர்த்தி : தலைவரவர்களே, தற்காலிகமாக நியமிக்கப்பட்டிருக்கிற இரண்டாம் வகுப்பு நடுவர்கள் அத்தனை பேர்களும் நிரந்தரமாக்கப்படுவார்களா? அவர்கள் வழக்கறிஞர் களாக பணியாற்றிய அனுபவம் பெற்றவர்கள் அல்ல. ஆகவே இந்த இரண்டாம் வகுப்பு நடுவர்களை முதல் நிலை நடுவர்கள் தரத்திற்கு உயர்த்தி, ஒருங்கிணைப்பு செய்யும்போது, தற்காலி கமாக நியமிக்கப்பட்டவர்கள் டிஸ்டிரிக்ட் முன்சீப் வரை உயர்ந்திருக்கிறார்கள், அவர்களை, அவர்கள் ஏற்கெனவே பணி யாற்றிய அலுவலகத்திற்கு திருப்பி அனுப்ப நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : பேரவைத் தலைவர் அவர்களே, இதுபற்று ஆலோசித்தோம். நிரந்தரமாக்கப் பட்டவர்கள் சர்வீஸ் கமிஷன் மூலமாக ஒரு தேர்வு நடத்தப் பட்டு அந்தத் தேர்விலே தகுதி பெற்றவர்கள் நிரந்தரமாக்கப் பட்டிருக்கிறார்கள். ஆனால் அவர்களை மீண்டும் பழைய துறைகளுக்கு அனுப்புகின்ற உத்தேசம் இல்லை. அதற்கு வழி முறைகளும், விதிமுறைகளும் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்,

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு :—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்].



## 2. ஒத்திவைப்புத் தீர்மானம்.

### மதுரைப் பல்கலைக்கழக ஆசிரியர்கள் போராட்டம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மதுரைப் பல்கலைக்கழக ஊழியர்களை வேலைக்குச் செல்லவிடாமல் தடுத்து ஆர்ப்பாட்டம் நடத்திய 32 ஆசிரியர்கள் கைது செய்யப்பட்டுள்ளது குறித்தும், மதுரைப் பல்கலைக்கழகம் மூடப்பட்டுள்ளது குறித்தும் விவாதிக்கப் பேரவையின் இதர அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டுமென்று கேட்டு திரு. ப. நெடுமாறன், திரு. என். எஸ். வி. சித்தன், திரு. கே. எம், தங்கமணி, திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், திரு. ரா. கிருஷ்ணன், திரு. மு. அம்பிகாபதி, திரு. எஸ். அழகர்சாமி, திரு. இரா. கருப்பையா, திரு. தி. கா. நல்லப்பன், திரு. செ. சிவசாமி, திரு. அ. ரகுமான்கான், திரு. எம். அப்பாதுரை, திரு. எஸ். ஆண்டித்தேவர், திரு. ப. பொன்னுரங்கம், திரு. ஏ. சந்திரசேகரன் ஆகியோர் தீர்மானங்கள் கொடுத்துள்ளனர். இது எப்படி அவசர முக்கிய மானது என்பது குறித்து சுருக்கமாக கூறும்படி கேட்டுக் கொள் கிறேன்.

திரு. ப. நெடுமாறன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர் களே, மதுரைப் பல்கலைக்கழக ஆசிரியர்கள் சென்ற 24 ஆம் தேதியிலிருந்து போராட்டம் நடத்தி வருகிறார்கள். 7 நாட்களிலே ஏறத்தாழ 750-க்கு மேற்பட்டோர் கைது செய்யப் பட்டு சிறையிலே வைக்கப்பட்டிருக்கிறார்கள். சிவகாசி ஐயநாடார் கல்லூரியைச் சேர்ந்த பேராசிரியர் திரு. ஜகதீசன் என்பவர் திடீரென்று வேலையிலிருந்து நீக்கப்பட்டார். அவர் மீது அந்தக் கல்லூரி நிர்வாகம் பொய்யான குற்றச்சாட்டுகளைக் கூறி நடவடிக்கை எடுத்து இருக்கின்றது. அவருக்கு பயிற்றுவிக்கும் திறமை இல்லை என்பது போன்ற அபத்தமான குற்றச்சாட்டுக்களைக் கூட அந்த நிர்வாகம் அவர்மீது சுமத்தி இருக்கின்றது. அவரைப் பொறுத்தவரையிலே பல்கலைக்கழக மானியக் குழுவினரால் சிறந்த பேராசிரியர் என்று தேர்ந்தெடுக்கப் பட்டு ஆராய்ச்சி நிதியுதவியும் பெற்றவர். பல்வேறு வகையிலே பல்வேறு சிறப்புப் பட்டங்களைப் பெற்றவர் அவர். ஆனால் அவர் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்திலே பங்குகொண்டிருக் கிறார் என்ற ஒரே காரணத்திற்காக அவர் மீது இந்த நிர்வாகம் பழிவாங்கும் போக்கிலே இந்த நடவடிக்கையை எடுத்திருக்கின்றது. இதிலே பல்கலைக்கழக துணைவேந்தர் அவர்களும் ஆட்சிக் குழுவும் உடனடியாக தலையிட்டு அவரை மீண்டும் வேலைக்கு வைக்கவேண்டும் என்று சொல்லியும் கூட அந்த நிர்வாகம் அவருக்கு மீண்டும் வேலை கொடுக்க மறுக்கிறது. இதையொட்டி மதுரைப் பல்கலைக் கழகத்திலுள்ள சகல ஆசிரியர்களும் இன்றைக்கு போராட்டத்திலே ஈடுபட்டிருக்கிறார்கள். இந்தப் போராட்டத்தின் விளைவாக பல்வேறு கல்லூரிகள் இன்றைக்கு அடைக்கப்படும் சூழ்நிலை ஏற்பட்டிருக்கின்றது. இந்த மாமன்றத்

திலே நம்முடைய மதிப்பிற்குரிய கல்வியமைச்சரவர்கள் கூட இந்தப் போராட்டத்தில் நியாயம் இருக்கின்றது என்று குறிப்பிட்டார்கள். ஆகவே அரசாங்கம் மிக நியாயம் என்று கருதுகிற இந்தப் போராட்டத்தில் உடனடியாகத் தலையிட்டு அந்த நிர்வாகத்தின்மீது நடவடிக்கை எடுத்து அந்த ஆசிரியர் திரு. ஜகதீசன் அவர்களை மீண்டும் பணியிலே அமர்த்துவதற்கு உத்தரவிட வேண்டும் என்றும் இந்தப் போராட்டத்தை உடனடியாக நிறுத்துவதற்கு ஆசிரியர் பிரதிநிதிகளை அழைத்துப் பேச வேண்டும் என்று நான் உங்கள் வாயிலாக அமைச்சரவர்களிடம் வேண்டிக் கொள்கிறேன். பேராசிரியர் ஜகதீசன் அவர்கள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் எந்த வகையிலேயும் நியாய மற்றது என்று விளக்குகின்ற குறிப்புகள் நிறைய இருக்கின்றன. அதை இந்த அவையிலே எடுத்துச் சொல்வதற்கு அவகாசம் இல்லை. ஆகவே இவற்றை உங்களுடைய அனுமதியுடன் அமைச்சரவர்களிடம் நான் அளிக்கிறேன். மேலும் இந்த முக்கிய மான பிரச்சினை குறித்து விவாதிக்க அவையின் இதர அலுவல் களை ஒத்தி வைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

(பிற்பகல் 10–10)

**திரு. என். எஸ். வி. சித்தன்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. கசடற கற்பனை கற்பிக்க வேண்டிய ஆசிரியப் பெருமக்கள், இன்றைக்கு மதுரை காமராசர் பல்கலைக் கழகத்தின் கீழே இருக்கக் கூடிய 82க்கும் அதிகமான கல்லூரி களில் இருக்கிற ஆசிரியப் பெருமக்கள், போராட்டத்தில் இறங்கி யுள்ளனர். கல்லூரிகள் முறையாக திறக்கப்பட்டு, பாடங்கள் சரியாக ஆரம்பிக்கப்பெறாத இந்தச் சூழ்நிலையிலேயே, (மாண வர்கள் ஒரு புறம் இருக்க, ஆசிரியப் பெருமக்களே போராட்டத்தில் இறங்கியிருப்பது துரதிருஷ்ட வசமானது. வருந்தத் தக்கதும் கூட.

அப்படி அவர்கள் போராட்டத்தில் இறங்கியிருப்பதற்கு காரணம், நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. நெடுமாறன் அவர்கள் சொன்னதைப் போல, சிவகாசி கல்லூரியில் பணி யாற்றிக் கொண்டிருந்த பேராசிரியர் ஜகதீசனை அந்த நிர்வாகம் வேலையிலிருந்து நீக்கியது தான். பல்கலைக்கழகம் தலையிட்டும் கூட திரும்ப அவரை வேலைக்கு எடுத்துக் கொள்ளாத காரணத் தினால், அந்த 82-க்கும் அதிகமான கல்லூரி ஆசிரியர்கள் இப்படிப் பட்ட போராட்டத்தில் ஈடுபட்டிருக்கின்றனர். அத்தனை கல்லூரிகளும் மூடப்பட்டிருக்கின்றன. ஒன்றிரண்டு கல்லூரிகளைத் தவிர. அவைகளும் இன்றோ அல்லது நாளையோ மூடப்பட்டு விடும் தருவாயில் இருப்பதாகவே செய்திகளை நாளேடுகள் நமக்கு சொல்லி வருகிறது.





மதுரை பல்கலைக்கழகத்தின் ஆளுகையில் உள்ள அனைத்து
கல்லூரி ஆசிரியர்களில் பெரும்பாலானவர், கிட்டத்தட்ட
2,000-க்கும் அதிகமான ஆசிரியர்களில் பெரும்பான்மையினர்
இதிலே பங்கேற்று சிறைபடுத்தப்பட்டிருக்கிறார்கள் என்கிற
செய்தியும் வருத்தத்தை தருகிறது. மாணவர்களுடைய கல்வி
பாதிக்கப்படுகிறது. இது மிகவும் அவசியமான அத்தியாவசிய
மான விஷயம். இதை விட வேறு முக்கியமான அலுவல்
எதுவும் இன்றைக்கு இந்த அவைக்கு இருந்து விட முடியாது
என்பதைக் கூறி, இது பற்றி மேலும் விவாதத்தை நடத்த,
பேரவையின் இதர அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டும்
என்று கேட்டு, அமர்கிறேன்.

***திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்**: பேரவைத்
தலைவர் அவர்களே, மதுரை காமராசர் பல்கலைக் கழகத்தின்
கீழ் இருக்கக்கூடிய சிவகாசி ஐய நாடார் கல்லூரி ஆசிரியர்
ஜகதீசனை வேலை நீக்கம் செய்தது பற்றி இந்த போராட்டம்
தொடங்கியிருக்கிறது. அவர் எப்படிப்பட்டவர், எத்தகைய
தகுதி வாய்ந்தவர் என்றெல்லாம் மாண்புமிகு உறுப்பினர்
நெடுமாறன் அவர்கள் எடுத்துக் காட்டி விட்டதினால், அவரைப்
பற்றி நான் அதிகம் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை.
ஆனால் இப்படிப்பட்ட ஒரு திறமையான, நல்ல ஆசிரியரை,
அவர் சங்கம் அமைத்தார், அல்லது சங்கம் அமைக்க உறுதுணை
யாக இருந்தார் என்ற ஒரே காரணத்திற்காக, அந்த நிர்வாகத்
தினர் அவரை வேலையிலிருந்து நீக்கியிருக்கிறார்கள்.

அப்படி வேலை நீக்கம் செய்தது சரியல்ல என்று கல்லூரி
ஆட்சிக் குழுவே தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறது. ஆட்சிக்
குழு மாத்திரம் அல்ல, மதுரை காமராசர் பல்கலைக் கழகமே
கூட அவருக்கு திரும்ப வேலை கொடுக்க வேண்டும் என்று
சொல்லியிருந்தும்கூட, அந்தக் கல்லூரி நிர்வாகம் அவரை
திரும்ப வேலைக்கு எடுத்துக் கொள்ள எந்தவித நடவடிக்கையும்
எடுத்துக் கொள்ளவில்லை. அதன் விளைவாகத்தான், அந்த
மதுரை பல்கலைக்கழகத்தின் கீழே இருக்கக் கூடிய 82 கல்லூரி
களுமே, அதில் ஒன்றிரண்டு பெண்கள் கல்லூரியைத் தவிர,
கிட்டத்தட்ட அனைத்துக் கல்லூரி ஆசிரியர்களுமே இந்த
வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டு, அதன் விளைவாக கல்லூரி
நிர்வாகங்களே கல்லூரிகளை மூடிவிடக் கூடிய அளவிற்கு அந்தச்
செயல் போய்விட்டது. அப்படி போகாத அளவிற்கு முன்பே
இதில் அரசாங்கம், தலையிட்டு மானியத்தை நிறுத்தி நடவடிக்கை
எடுத்து அந்த ஆசிரியருக்கு வேலை கிடைக்கும்படி செய்
திருந்தால், இந்த நிலை ஏற்பட்டிருக்காது. இப்படி கல்லூரிகள்
மூடப்பட்டிருக்கிற நிலைமைகளும் ஏற்பட்டிருக்காது.

[1980 ஜூலை 31
[திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்]

அதனுடைய விளைவாக இன்று தமிழகத்தில் இருக்கக்கூடிய அனைத்துக் கல்லூரிகளிலும் உள்ள ஆசிரியர்களும், அவர்களுக்கு ஆதரவு தெரிவித்து வேறு வகையான இயக்கங்களை நடத்தக்கூடிய அளவிற்கு முடிவுகள் எடுக்கத் தயாராக இருக்கின்றனர். ஆகவே அதன் விளைவாக ஏற்படக்கூடிய போராட்டங்களையும், விளைவுகளையும், மாணவர்கள் அதனால் பாதிக்கப்படுவதையும் கருத்தில் கொண்டு, இந்த முக்கியமான பிரச்னை குறித்து, விவாதிக்க இந்த அவையின் பிற அலுவல்களை ஒத்திவைத்து, இதற்கு இன்றே ஒரு முடிவு ஏற்படுத்தும் வகையில் அரசு நடவடிக்கை எடுக்க முற்பட வேண்டும் என்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே கேட்டுக் கொள்கிறேன்.

திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சம்பவம் மிக முக்கியமான சம்பவம். மதுரை காமராஜ் பல்கலைக்கழகத்தின்கீழ் இயங்குகிற சிவகாசி ஐய நாடார் ஜானகி அம்மாள் கல்லூரியில் மூன்று ஆண்டு காலம் வேலை பார்த்து வந்த திரு. ஜெகதீசன் எம். எஸ்ஸி. எம்.ஃபில். படித்தவரை எந்தவிதமான குற்றச்சாட்டுமின்றி பணி புரிந்தவரை உனக்குப் பயிற்சி அளிக்க தகுதி இல்லை என்ற காரணத்தைக் காட்டி அந்த நிர்வாகம் அவரை வெளியேற்றவிருக்கிறது. இதை ஒரு தனிப்பட்ட ஆசிரியரின் பிரச்சனையாக ஆசிரியர் சமுதாயம் பார்க்கவில்லை. ஒரு போராட்டம் வெடிக்கும், இப்பிரச்சனை ஓங்கும் நிலைதான் இருக்கிறது. காரணம், தனிப்பட்ட நிர்வாகத்தில் இருக்கக்கூடிய கல்லூரிகளைச் சார்ந்த ஆசிரியர்கள் இந்த மாதிரி ஜெகதீசனைப் போன்று தொடர்ந்து பழி வாங்கப்படலாம் என்ற அச்சம் தனியார் கல்லூரி ஆசிரியர்களிடையே ஏற்பட்டிருக்கிறது. அதன் விளைவாகத்தான் இத்தகைய மாபெரும் போராட்டம் நடக்கிறது, தொடர்ந்து நடக்கிறது. உதாரணமாக, 24-ம் தேதி 32 பேர்கள், 29-ம் தேதி 9 பேர்கள், 26-ம் தேதி 33 பேர்கள், 28-ம் தேதி 33 பேர்கள் 29-ம் தேதி 200 பேர்கள், 30-ம் தேதி 72 என்று ஆக மொத்தம் 759 ஆசிரியர்கள் கைதாகியிருக்கிறார்கள் என்று சொன்னால் இந்தப் பிரச்சனையின் முக்கியத்துவத்தை உணரவேண்டும். ஆசிரியர் ஜெதீசன் என்பதல்ல. தமிழ்நாட்டிலிருக்கிற தனிப்பட்ட கல்லூரிகளில் பணியாற்றும் அனைத்து ஆசிரியர்களும் பழிவாங்கப்படலாம் என்ற அபாயகரமான, பயங்கரமான, கொடூரமான நிலை ஏற்பட்டிருக்கிறது. எனவே இப்பிரச்சனை குறித்து விவாதிக்க அவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து விவாதிக்க வேண்டும் என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. அ. ரகுமான்கான் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிவகாசி ஐய நாடார் ஜானகி அம்மாள் கல்லூரி கணிதத் துறை உதவிப் பேராசிரியர் திரு. ஜெகதீசன் அவர்கள்



1980 ஜூலை 31] [திரு. அ. ரகுமான்கான்]

5—7—80 முதல் அநியாயமாக சட்டவிரோதமாக அவருக்கு பாடம் கற்பிக்கத் தெரியவில்லை, அவரது நடத்தை திருப்திகரமாக இல்லை என்ற காரணத்தைக் காட்டி இன்றைக்கு அவர் வேலைநீக்கம் செய்யப்பட்டிருக்கிறார். அதைக் கண்டித்து இன்று மதுரை காமராஜ் பல்கலைக் கழகத்தைச் சார்ந்த பல ஆசிரியர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். போராட்டம் நடந்து கொண்டிருக்கிறது. இது சம்பந்தமாக தங்கள் மூலம் இந்த அரசின் கவனத்திற்கு நான் கொண்டு வர விரும்புவதெல்லாம் ஜெகதீசன் போன்ற ஆசிரியர்கள் அந்தக் கல்லூரியில் மூன்று ஆண்டுகளாகத் தொடர்ந்து வேலை செய்து கொண்டு வருகிறார்கள். இந்த அரசு உத்தரவு பிறப்பித்தது. கவர்ன்மென்ட் மெமோ 23331 டேட்டட் 12—3—79. அந்த அரசாணைப்படி கல்லூரியில் 26—2—79 அன்று பணியாற்றிக்கொண்டிருப்பவர்கள் அத்தனை பேர்களுக்கும் பாதுகாப்பு வேண்டும், அவர்கள் நிரந்தரமாக்கப்படவேண்டும் என்று அந்த ஆணை பிறப்பிக்கப்பட்டது. திரு. ஜெகதீசன் மூன்று ஆண்டுகளாகத் தொடர்ந்து அந்தக் கலலூரியில் பணியாற்றுகிறார். ஆனால் அவருக்கு அந்த வேலைப் பாதுகாப்பு உண்டா என்றால் வேலைப் பாதுகாப்பு இல்லை. அவரது பணி நிரந்தரமாக்கப்பட்டிருக்கிறதா என்றால் நிரந்தரமாக்கப்படவில்லை. இதுபோன்று வேலை நிரந்தரமாக்கப்படாமல், ஆசியர்களுக்குப் பாதுகாப்பு இல்லாமல் இந்த அரசு உத்தரவு பிறப்பித்தும்கூட அதை அமுல்படுத்தாத சூழ்நிலையில் இந்த அரசு ஆசிரியர்களுக்காக என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்றால் கவனத்திற்கு கொண்டுவந்தும் எந்த விதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை.

இந்த திரு. ஜெகதீசன் அவர்களை வேலைநீக்கம் செய்திருப்பது சட்டவிரோதமானதாகும். எப்படி என்றால், ஒரு தனியார் கல்லூரி பல்கலைக்கழகத்தின் முன்அனுமதி பெற்றுத்தான் ஒரு ஆசிரியரை கல்லூரியிலிருந்து நீக்கமுடியும். ஆனால் மதுரை காமராஜ் பல்கலைக்கழகத்தின் முன் அனுமதி பெறாமலே இன்று அந்தக் கல்லூரிநிர்வாகத்தினர் அந்த பேராசிரியரை நீக்கியிருக்கிறார்கள். தனியார் கல்லூரிகள் ஒழுங்கு படுத்தும் சட்டத்தை அது மீறிய தாகும். இன்று அந்தப் பல்கலைக்கழகம் இதுகுறித்து எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. அரசாங்கமும் எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை. மாறாக இன்று போராட்டம் முற்றிக்கொண்டிருக்கிறது. எனவே இந்த அவையின் பிற அலுவல்களை ஒத்திவைத்து இது குறித்து விவாதிக்கவேணடும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பாக இந்த அரசைப் பொறுத்தவரையில் நான் கேட்டுக்கொள்வதெல்லாம் இன்று அவர் மீது சொல்லப்பட்டிருக்ககூடிய குற்றச்சாட்டு ப்ரைமா பேஸி, மேல்பார்வையாகப் பார்த்தால் சரியில்லாத குற்றச்சாட்டாகும். அவருக்கு பாடம் கற்பிக்கத் தெரியவில்லை என்று சொல்கிறார்கள். அப்படி அவருக்கு பாடம் கற்பித்துக்கொடுக்கத் தெரியவில்லை என்று சொல்வது

ஆசிரியர்கள் சமுதாயத்தையே அவமானப்படுத்துவதாகும். சொல்லப்போனால் அவர் செயிண்ட் சேவியர்ஸ் கல்லூரியில் பர்ஸ்ட் க்ளாஸ் வாங்கியிருக்கிறார்கள். அவர் தகுதியான மாணவர்களைப் பயிற்றுவித்திருக்கிறார்கள். மேலும் அவரது நடத்தை திருப்திகரமாக இல்லை என்று சொல்கிறார்கள். அந்தப் பேராசிரியரின் நடத்தை திருப்திகரமாக இல்லை என்று சொல்வது எந்த அளவிற்கு பொருத்தமானது என்று தெரியவில்லை. அவர் நடத்தை திருப்திகரமாகஇல்லை என்றால் எப்படி திருப்திகரமாக இல்லை என்பதை விளக்கியிருக்கிறார்களா என்றால் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சுருக்கமாகப் பேசுங்கள்.

[முற்பகல் 10-20]

திரு. அ. ரகுமான்கான்: ஆகவே, இந்த துணைப் பேராசிரியர் கல்லூரியிலிருந்து நீக்கப்பட்டிருந்து வேலைக்கு பாதுகாப்பு தராதது சர்க்காரின் கொள்கையானாலும், இது சட்ட விரோதமாக ஏற்பட்டிருக்கிறது.

புறநானூற்றிலே ஒரு வரி உண்டு.

“உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும்
பிற்றை நிலை முனியாது கற்றல் நன்றே”

ஆசிரியர்கள் இப்படியெல்லாம் பயன்படுத்திக்கொள்ளப்பட வேண்டுமென்று அந்தக் காலத்திலேயே சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே இது ஒரு முக்கியமான பிரச்சனை. இந்த வாத்தியார் பிரச்சனையைக் காட்டிலும், வேறு பிரச்சனை இந்த சர்க்காருக்கு இருக்க முடியாது. எனவே, இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து, இதைப்பற்றி விவாதிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு செ. அரங்கநாயகம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, திரு. எஸ். ஜெகதீசன், உதவி விரிவுரையாளராக, சிவகாசி ஐய நாடார் ஜானகி அம்மாள் கல்லூரியில் நேரடியாக, இரண்டாண்டு தகுதிகாண் பருவத்தினராக 5—7—78 அன்று பணிக்கு அமர்த்தப்பட்டார். அவருடைய தகுதி காண் பருவத்தில் பணிவின்மை, நன்னடத்தையின்மை ஆகிய காரணங்களுக்காக கல்லூரி முதல்வர் அவரைப் பணியிலிருந்து நீக்கலாமென





கல்லூரி நிர்வாகக் குழுவிற்குப் பரிந்துரை செய்தார். இதன் அடிப்படையில். திரு. ஜெகதீசன் அவர்கள், கல்லூரி நிர்வாகத்தினரால் 4—7—80 அன்று பணி நீக்கம் செய்யப்பட்டார். இதனைக் கண்டித்து. மதுரைப் பல்கலைக் கழக ஆசிரியர்கள் சங்கம், ஊர்வலம், தர்ணா, மறியல், உண்ணாவிரதம் ஆகியவற்றை மேற்கொள்வது என முடிவு செய்தது. சிவகாசி கோட்டாட்சித் தலைவர், கல்லூரி நிர்வாகத்தினரையும், மதுரைப் பல்கலைக் கழக சங்க உறுப்பினரையும் அழைத்து, பிரச்சனையைத் தீர்த்துவைக்க முயற்சி செய்தார், ஆனால், கல்லூரி நிர்வாகத்தினர் பணிநீக்கம் செய்யப்பட்ட உதவி விரிவுரையாளரான திரு. ஜெகதீசனை மீண்டும் பணியில் அமர்த்த மறுத்துவிட்டார். இதனால் மதுரைப் பல்கலைக்கழக ஆசிரியர்கள் சங்க உறுப்பினர்கள், ஐய நாடார் ஜானகி அம்மாள் கல்லூரி முன்னர் தர்ணாவும், ஊர்வலமும் 16—7—80 அன்று நடத்தினர். மேற்கண்ட போராட்டத்திற்கு ஆதரவாக, சிவகங்கை ராஜா துரைசிங்கம் கல்லூரி, காரைக்குடி அழகப்பா அரசு கலைக் கல்லூரி, திருப்பத்தூர் ஆறுமுகப் பிள்ளை சீதை அம்மாள் கல்லூரி, இளையாங்குடி டாக்டர் ஜாகீர் உசேன் கல்லூரி ஆசிரியர்களும் 16—7—80 அன்று ஒட்டுமொத்தமாக சிறுவிடுப்பை மேற்கொண்டனர். 17—7—90 முதல் மதுரைப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்க உறுப்பினர்கள் சிவகாசி கோட்டாட்சி அலுவலகம் முன்பாக தொடர் உண்ணாவிரதத்தை மேற்கொண்டனர். 18—7—80 அன்று, ஐய நாடார் ஜானகி அம்மாள் கல்லூரி மாணவர்கள், சிவகாசி கோட்டாட்சி தலைவர் அலுவலகம் முன்புகூடி மேற்க்கண்ட போராட்டத்திற்கு ஆதரவாக கோஷமிட்டனர். ஐய நாடார் ஜானகி அம்மாள் கல்லூரியும், விடுதியும் 21—7—80 முதல் மூடப்பட்டது. 22—7—80 அன்று சிவகங்கை ராஜா துரைசிங்கம் கல்லூரி மாணவர்களும், சாத்தூர் எஸ். ஆர். நாயுடு கல்லூரி மாணவர்களும் போராட்டத்திற்கு ஆதரவாக ஊர்வலங்களை மேற்கொண்டனர். 23—7—70 அன்று ஆசிரியர் மற்றும் ஆசிரியரல்லாத ஊழியர்கள், திருப்பத்தூர் அருப்புக்கோட்டை, விருதுநகர், தேவகோட்டை ஆகிய ஊர்களில் ஊர்வலங்களை மேற்கொண்டனர்.

போராட்டக் குழுவினர் கூடி, 24—7—80 முதல் 26—7—80 வரை மதுரைப் பல்கலைக்கழகத்தின் முன்னர் மறியல் நடத்துவதென்றும், 27—7—80 அன்று மதுரை பேருந்து நிலையத்தில் உண்ணாவிரதம் இருப்பதென்றும். 28—7—80 அன்று இராமநாதபுரம், மதுரை, கன்னியாகுமரி, திருநெல்வேலி ஆகிய நகரங்களில், மாநில அரசு அலுவலங்கள் முன் மறியல் செய்வது என்றும் தீர்மானித்தது.

[திரு. செ. அரங்கநாயகம்] 1980 ஜூலை 31

இதனடிப்படையில், 24—7—80 அன்று மதுரைப் பல்கலைக் கழகத்தின் முன் மறியல் செய்த 34 மதுரைப் பல்கலைக்கழக ஆசிரியர்கள் சங்க உறுப்பினர்கள், நாகமலைப் புதுக்கோட்டை காவல் நிலையத்தினரால் கைது செய்யப்பட்டு, காவலில் வைக்கப்பட்டனர். இதே போன்று, 25—7—80 அன்று 9 பேர்களும், 26—7—80 அன்று 32 பேர்களும் கைது செய்யப் பட்டு காவலில் வைக்கப்பட்டுள்ளனர். 26—7—80 அன்று மதுரை காமராஜர் பல்கலைக்கழகத்தின் செனட் உறுப்பினர் களின் கூட்டம் நடைபெற இருந்ததால், மதுரை (தெற்கு) தாசில்தாரர்களிடம், அப்பகுதியில் பாதுகாப்பு பந்தோபஸ்துக் களை மேற்கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்பட்டது. தகுந்த பந்தோபஸ்து ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

28—7—80 அன்று மதுரைப் பல்கலைக்கழக ஆசிரியர்கள் சங்க உறுப்பினர்கள் தங்கள் தீர்மானத்தின்படி மேற்படி போராட்டத்தின் தொடர்ச்சியாக, மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி மாவட்டங்களில் அரசு அலுவலகங்களின் முன்னர் மறியல் செய்துள்ளனர். 28—7—80 அன்று மறியல் செய்து கைது செய்யப்பட்ட கல்லூரி ஆசிரியர்களின் விவரம் வருமாறு—

மதுரை மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகம் முன் மறியல் செய்த 35 சங்க உறுப்பினர்கள், மதுரை பி5 காவல் துறை யினரால் கைது செய்யப்பட்டனர்.

இராமநாதபுரம் மாவட்டத்தில், சேவுகன் அண்ணாமலை கல்லூரி ஆசிரியர்கள். தேவகோட்டை உதவி மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலம் முன்னால் 24 போ் மறியல் செய்து கைதா யினர்

திருப்பத்தூர் வட்டாட்சியார் அலுவலகம் முன்னால் 30 ஆசிரியர்கள் மறியல் செய்து கைதாயினர்.

விருதுநகர் வட்டாட்சியர் அலுவலகம் முன்பு 15 ஆசிரியர்கள் மறியல் செய்து கைதாயினர்.

சிவகங்கை கோட்டாட்சித் தலைவர் அலுவகம் முன்னால் மறியல் செய்து 13 ஆசிரியர்கள் கைதாயினர். சிவகாசி உதவி ஆட்சித் தலைவர் அலுவலகம் முன் மறியல் செய்து 12 ஆசிரியர்கள் கைதாயினர்.

அருப்புக்கோட்டை வட்டாட்சியர் அலுவலகம் முன் மறியல் **செய்து 22 ஆசிரியர்கள் கைதாயினர்.**



1980 ஜூலை 31 [திரு. செ. அரங்கநாயகம்]

அழகப்ப செட்டியார் அரசு கலைக் கல்லூரியைச் சேர்ந்த 20 ஆசிரியர்கள், எந்தவிதமான விடுப்பும் இன்றி வேலைக்கு வரவில்லை.

திருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம முன் மறியல் செய்த 33 ஆசிரியர்களும், தூத்துக்குடி துணை ஆட்சித் தலைவர் அலுவலகம் முன் மறியல் செய்த 29 ஆசிரியர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேலும் 29—7—80 அன்றும் திருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம் முன் மறியல் செய்த 42 மதுரைப் பல்கலைக்கழக ஆசிரியர்கள் சங்க உறுப்பினர்களில் 41 பேர் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டுள்ளனர். ஒருவர் ஜாமீனில் சென்றுள்ளார். தூத்துக்குடி துணை ஆட்சித் தலைவர் அலுவலகம் முன் மறியல் செய்த 46 ஆசிரியர்கள் கைது செய்யப் பட்டுள்ளனர். திருநெல்வேலி மாவட்டத்தில் 11 கல்லூரிகள் மூடப்பட்டுள்ளன. இதன் தொடர்ச்சியாக எந்த விதமான அசம்பாவிதமான நிகழ்ச்சிகளும் நடைபெறவில்லை.

இந்தக் குறிப்பிட்ட ஆசிரியர் தொடர்பாக நடைபெறுகிற போராட்டத்தில் இப்படிப்பட்ட நிலைமைகள் ஏற்பட்டு வளர்ந்து வருகின்றன. மேற்படி ஆசிரியரைத் தொடர்ந்து வேலைக்கு எடுத்துக் கொள்ள வேண்டும் என்று பல்கலைக் கழகம் கேட்டுக் கொண்டிருக்கிறது. அரசு சார்பிலும் அந்த ஆசிரியரை திரும்ப வேலைக்கு எடுத்துக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கிறோம். இப்போது இந்த மன்றத்தின் மூலமாகவும் கேட்டுக்கொள்கிறோம். அப்படி அவர்கள் அந்த ஆசிரியரைச் சேர்த்துக்கொள்ளத் தவறுவார்களானால் அரசு அந்தக் கல்லூரிக்குத் தரும் மானியத்தை நிறுத்துவது போன்ற தீவிரமான நடவடிக்கைகளை எடுக்கவேண்டி வரும் என்பதை இந்த மன்றத்தின் மூலமாக அந்தக் கல்லூரி நிர்வாகத்திற்குத் தெரிவிக்க விரும்புகிறேன்.

ஆனால் இந்த நேரத்தில் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். இப்படிப்பட்ட நிலைமைகள் வரத்தான் செய்யும். ஏதாவது ஒரு கல்லூரி ஆசிரியர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டி வரும். அப்போது இப்படிப்பட்ட நடவடிக்கையில் ஆசிரியர்கள் இறங்க வேண்டுமா என்பதை ஆசிரியப் பெருமக்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். இன்றைய தினம் பல ஆசிரியர்கள் ஜெயிலில் இருக் கிறார்கள். பல கல்லூரிகள் மூடப்பட்டு மாணவர்கள் படிப்புக்குக் குந்தகம் ஏற்பட்டிருக்கிறது. ஒரு பிரச்சினையில் தீர்வு காண முடியாத கட்டத்தில் எடுக்கப்பட வேண்டிய நடவடிக் கையை ஆரம்பத்திலேயே எடுப்பது மாணவர்கள் படிப்புக்கு மிகப்

பெரிய கேடு விளைவிக்கக் கூடியது என்பதை ஆசிரியப் பெரு மக்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். இத்தகைய முறையில் தங்களுடைய கோரிக்கைகளை அதுவும் இது போன்ற தனிப்பட்ட ஆசிரியர் பிரச்சினையிலான கோரிக்கையை நாம் நிறைவேற்றிக் கொள்வதற்கான முயற்சி இருக்கக் கூடாது என்பதுதான் என்னுடைய வேண்டுகோள் ஆகும். நடந்தது நடந்து விட்டது. இது போன்ற நிலைமைகள் மீண்டும் ஏற்படாதவாறு பார்த்துக் கொள்ள வேண்டும். இந்தப் பிரச்சினையைப் பொறுத்தவரை அரசாங்கம் நிச்சயமாக நடவடிக்கை எடுக்கும் என்பது அவர்களுக்கும் தெரியும். கடந்த இரண்டரை ஆண்டு காலமாக ஆசிரியர் சங்கத்தினர் அரசு எடுத்து வருகிற நடவடிக்கைகளைச் சந்தேகிக்கிற எந்தச் சூழ்நிலையும் உருவாகவில்லை. அப்படி இருக்கும்போது இப்படிப்பட்ட பெரிய அளவில் போராட்டத்தை நடத்த வேண்டிய அவசியம் இல்லையென்று கூறுகிறபோது அரசாங்கம் இந்தப் பிரச்சினை குறித்து எடுத்துக் கொண்டு முறையாகச் செயல்படுத்த ஆரம்பித்திருக்கும் நேரத்தில் போராட்டத்தைக் கைவிட்டு கல்லூரிகளுக்குத் திரும்ப வேண்டுமென்று கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து இதைப் பற்றி விவாதிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் அப்படி ஒத்தி வைப்பதால் ஏற்படக்கூடிய நிலைமை என்னவென்றால் இன்று மாண்புமிகு உறுப்பினர்கள் மத்திய மாநில அரசு உறவு, மாநில அரசின் உரிமைகள் போன்ற மிகப் பெரிய பிரச்சினைகளை எல்லாம் கொண்டுவர இருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர்கள் அதைப் பற்றியெல்லாம் பேச வேண்டியவர்களாக இருக்கிறார்கள். ஆகவே, அவையை ஒத்தி வைத்து இப்படிப்பட்ட பெரிய பிரச்சினைகளை விவாதிக்கின்ற வாய்ப்பை இழந்துவிடக் கூடாது. ஆகவே, முக்கியப் பிரச்சினைகளைப் பேச வேண்டியிருக்கும் காரணத்தால் இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து விவாதிக்க வேண்டிய அவசியம் இல்லையென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்களின் விளக்கத்திற்குப் பின் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து இத் தீர்மானம் குறித்து விவாதிக்க வேண்டிய தேவை இல்லையென்பதால் இதற்குஇசைவு மறுக்கப் பெறுகிறது.



## 3. கவன ஈர்ப்புகள்,

### (அ) திருப்போரூர் ஒன்றியப் பகுதி குப்பங்களில் கோஷ்டித் தகராறு காரணமாக ஒருவர் கொலை செய்யப் பெற்றுள்ளது.

திரு கெ. சொக்கலிங்கம்: பேரவைத் தலைவர் அவர்களே, செங்கல்பட்டு மாவட்டம் திருப்போரூர் ஒன்றியப் பகுதியில் கோவளம் குப்பம், செம்மஞ்சேரி குப்பம், ஆகிய கிராமங்களைச் சேர்ந்த இரு கோஷ்டிகளுக்கிடையே ஏற்பட்டுள்ள தகராறு காரணமாக 7—7—1980 அன்று ரங்கநாதன் என்பவர் கொலை செய்யப் பட்டதைக் குறித்தும் அதைத் தொடர்ந்து அங்கு ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்தும் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

(முற்பகல் 10–30)

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, செங்கற்பட்டு மாவட்டம் திருப்போரூர் ஒன்றியத்தில் அமைந்திருக்கும் கோவளம் குப்பம் கிராமமும் செம்மஞ்சேரி குப்பம் கிராமமும் இடையே மூன்று கிலோ மீட்டர் தூரமுள்ள அண்டை கிராமங்களாகும். திருப்போரூர் காவல் நிலையத்திலிருந்து 14 கிலோ மீட்டர் கிழக்கே உள்ளது. கடலில் மீன் பிடிக்கும் காரணமாக இரு குப்பத்து மீனவர்களுக்கும் இடையே 5—4—78 அன்று சச்சரவு உண்டாயிற்று. இது சம்பந்தமாக திருப்போரூர் காவல் நிலையத்தில் இந்திய தண்டனைச் சட்டத்தின் கீழ் வழக்கு பதிவு செய்யப் பட்டது. இடையூறு விளைவித்தவர்கள் என்று கருதி கோவளம் குப்பத்தைச் சார்ந்த 24 மீனவர்கள் கைது செய்யப்பட்டனர். இது சம்பந்தமான வழக்குகள் செங்கற்பட்டு நீதிமன்றத்தில் நடவடிக்கையில் இருந்து வருகிறது. அந்த நேரத்தில் ஆயுதம் தாங்கிய சேமக் காவல்படையினரும், காவல்துறை பந்தோபஸ்துகளும் மூன்று மாதங்களுக்கு இரு குப்பங்களுக்கிடையே அமைதி நிலவ அமர்த்தப்பட்டனர்.

அவரவர் குப்பங்களுக்கு எதிரில் உள்ள கடலில் மீன் பிடித்துக் கொள்ளும்படி வருவாய்த்துறையைச் சேர்ந்த அதிகாரிகள் சமரசம் செய்து வைத்தனர். பிறகு செம்மஞ்சேரிக் குப்ப மீனவர்கள் கேளம்பாக்கம் அங்காடியிலும், கோவளம் குப்ப மீனவர்கள் கோவளம் அங்காடியிலும் அவர்வர் மீன்களை விற்க ஆரம்பித்தனர்.

அவர்களுக்குள் மனக்கசப்பு இருந்த போதிலும் 24—6—80 வரை அசம்பாவிதங்கள் எதுவும் நடைபெறவில்லை. 25—6—80 அன்று கோவளத்தில் படத்திற்கு சென்று திரும்பிக்கொண்டிருந்த

கோவளம் குப்பத்தைச் சார்ந்த சில இளம் பெண்களை, செம்மஞ்சேரி குப்பத்தைச் சேர்ந்த கடும்பாடியும் மற்றும் ஒரு இளைஞனும் கேலி செய்ததை முன்னிட்டு, அவ்விளம் பெண்களின் உடன் வந்து கொண்டிருந்தவர்களால் அவ்விருவரும் கோவளம் குப்பத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டனர். கோவளம் குப்பத்திற்கு அழைத்துச் சென்றபின் அவர்களைக் கைகளால் அடித்து விரட்டி விட்டனர். திருப்போரூர் காவல் நிலையத்தில் ராஜு செட்டியார் மகனாகிய கடும்பாடி புகார் செய்ததின் பேரில் வழக்கு ஒன்று கோவளம் குப்பத்தைச் சேர்ந்த மாரிமுத்து மற்றும் ஆறு நபர்கள் மீது பதிவு செய்யப்பட்டது. ஏழு நபர்களும் கைது செய்யப்பட்டு பிறகு ஜாமீனில் விடப்பட்டனர்.

7—7—80க்கு நான்கு நாட்களுக்கு முன்னர், செம்மஞ்சேரி குப்பத்தைச் சேர்ந்த பூபதி அம்மாள், வயது 45, கோவளம் பேருந்து நிலையத்தில் மீனை விற்றுக் கொண்டிருந்த பொழுது இறந்துபோன ரங்கநாதன் என்பவர் அந்த அம்மாளை அவ்விடத்தை விட்டு விலகி செல்லுமாறு எச்சரித்தார். இச்சம்பவம் விளைவாக செம்மஞ்சேரி குப்பம் மீனவர்கள் ஆத்திரமடைந்தனர்.

7—7—80 அன்று மாலை 5 மணியளவில் ரங்கநாதனும் ராஜு செட்டியும் கோவளம் பேருந்து நிலையத்திலுள்ள சுப்பிரமணிய செட்டியார் டீ கடைக்கு டீ அருந்தச் சென்றனர். அதே நேரத்தில் செம்மஞ்சேரி குப்பத்தைச் சேர்ந்த சுகுமாரன், ஜெயபால், கணேசன், சின்ன பையன் ஆகியோர் அதே டீ கடைக்குச் சென்று முன் விரோதம் காரணமாக ரங்கநாதன், ராஜு செட்டி ஆகிய இருவரிடத்தில் வாய்ச் சண்டை போட்டனர். ரங்கநாதனும் ராஜு செட்டியும் டீக்கடையை விட்டு அகன்றவுடன், சுகுமாரனும் மற்ற மூவர்களும் அவர்களைத் தொடர்ந்து சென்று 'சில்லக்கோலாலும்', விறகுக் கட்டையாலும் தாக்கி இருவருக்கும் ரத்தகாயம் ஏற்படுத்தினர். படுகாயம் அடைந்த ரங்கநாதன் கேளம்பாக்கம் மருத்துவமனைக்குச் செல்லும் வழியில் இறந்து விட்டார். இது சம்பந்தமாகக் காயம் அடைந்த ராஜு செட்டி திருப்போரூர் காவல் நிலையத்தில் 7—7—80 அன்று இரவு 9·00 மணிக்குப் புகார் செய்ததின் பேரில் வழக்கு பதிவு செய்யப்பட்டது.

ரங்கநாதனின் சடலம் பிரேத பரிசோதனை செய்யப்பட்டு அவரது உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. சம்பந்தப்பட்ட குற்றவாளிகள் நால்வரும் 10—7—80 அன்று செங்கற்பட்டு நீதி மன்றத்தில் சரணடைந்தனர்.



காவல் துறையினர் பந்தோபஸ்தும், இரண்டு பிரிவு ஆயுதம் தாங்கிய ஷேமக் காவல் படையினரும், இரு குப்பங்களிடையே அமைதிகாக்கும் பொருட்டு நிறுத்தி வைக்கப்பட்டனர். இச் சம்பவத்திற்குப் பிறகு அமைதி நிலவிவருகிறது. இந்த வழக்கு புலனாய்வில் உள்ளது.

திரு கெ. சொக்கலிங்கம்: தலைவர் அவர்களே, செம்மஞ் சேரி குப்பம் கோவளம் குப்பங்களைச் சேர்ந்தவர்களுக்கு இடையே இப்படித் தகராறு இரண்டு ஆண்டுகாலமாக தொடர்ந்து நடை பெற்றுக் கொண்டு இருக்கிறது. அது மட்டுமல்ல, பட்டப்பகலில் செம்மஞ்சேரி குப்பத்தைச் சேர்ந்தவர்கள் கோவளம் குப்பத்தாரை தாக்கி, அதன் காரணமாக ஒருவர் கொலை செய்யப்பட்டிருக் கிறார். செம்மஞ்சேரி குப்பத்திலே இருக்கின்ற மீனவப் பெருங்குடி மக்களில் ஒரு சிலர் கள்ளக்கடத்தலிலே ஈடுபட்டு கிராம்பு போன்ற பொருட்களைக் கடத்தியதின் காரணமாக தகராறு ஏற்பட்டு அந்தக் கொலை ஏற்பட்டிருக்கிறது. இதற்குத் தூண்டுதலாக சென்னையிலே இருக்கிற மீனவர் தலைவர் ஒருவர் ஆளுங்கட்சிக்கு வேண்டியவர் ஒருவர் தூண்டுதல் செய்து இந்தத் தகராறு நடந்து கொண்டிருக்கிறது. நேற்றைக்குக்கூட அவர்கள் கட்டுமரத்திலே செல்கிற நேரத்திலே இந்தத் தகராறு நடைபெற்றிருக்கிறது. செம்மஞ்சேரியிலே மக்கள் தொகை குறைவு. கோவளம் குப்பத் திலே மக்கள் தொகை அதிகம், இவர்கள் அவர்களை அடிக்கடி தாக்குகிறார்கள். உடனடியாக அரசு தலையிட்டு ஆவன செய்ய வேண்டும், ஆளுங்கட்சிக்காரர் ஒருவர், பெரிய பொறுப்பிலே இருக்கிறவர் என்று அறிகிறேன். அவர் சென்னையிலிருந்து அங்கே இருப்பவர்களைத் தூண்டுகிற முறையிலே நீங்கள் எல்லாம் தி.மு.க.வுக்கு ஓட்டுப் போட்டீர்கள் என்ற காரணத்திற்காக இப்படிப்பட்ட தகராறு நடைபெற்றது. இப்போதும் நடை பெற்றுக் கொண்டிருக்கிறது. அதற்கு போலீஸ் துணை போகி றார்கள், கைது செய்தவர்களை உடனடியாக விடுதலை செய்து விட்டார்கள். அமைச்சர் அவர்களும் அரசும் தலையிட்டு சம்பந் தப்பட்ட பெரியவர்களைக் கண்காணித்து நடவடிக்கை எடுக்க முன்வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, கோவளம் கிராமம், செம்மஞ்சேரி கிராமம் ஆகிய வற்றிலே இருக்கிற மீனவர்களிடையே 2, 3 ஆண்டுக்காலமாக சச்சரவுகள் ஏற்பட்டு அடிக்கடி தகராறுகள் ஏற்படுகின்ற நிலை மைகள் ஏற்படுகின்றன. மாண்புமிகு உறுப்பினர் சொன்னதைப் போல அரசியல் கட்சி மாச்சரியத்தின் காரணமாக அப்படி இருப் பதாக நிலைமைகள் இல்லை. அவர்கள் எந்தக் கட்சியைச் சேர்ந் தவர்களாக இருந்தாலும், குப்பம் என்ற அளவுக்குத்தான் அவர் கள் பிரிந்து கடலில் மீன்பிடிக்கும் காரணத்தினால் அவர்களுக்கு இடையே 5—4—78 அன்று சச்சரவு உண்டாகி அது தடுக்கப் பட்டிருக்கிறது. அப்போது 24 மீனவர்கள் கைது செய்யப்பட்டனர்

அது சம்பந்தமாக வழக்குத் தொடரப்பட்டு, செங்கற்பட்டு நீதி மன்றத்தில் நடவடிக்கையில் இருந்து வருகிறது. அந்த நேரத்திலே வருவாய்த் துறை அதிகாரிகளும் மற்றவர்களும் அமைதியை நிலைநாட்டினார். அந்த 3 மாத காலத்திலே சேமக் காவல் படையினரும் காவல் துறையினரும் இரு குப்பங்களிடையே அமைதியை நிலை நாட்ட அமர்த்தப்பட்டனர். அவர்களுக்கு இடையே அதற்குப் பிறகு 24—6—80 வரையிலே எந்தத் தகராறும் ஏற்படவில்லை. ஆனால் 25—6—80 அன்றும் அதற்குப் பிறகு 7—7—80 அன்றும் தகராறுகள் ஏற்பட்டன. 7—7—80 அன்று மாலை 5 மணியளவில் ரங்கநாதனும், ராஜு செட்டியும் கோவளம் பேருந்து நிலையத்திலுள்ள சுப்பிரமணிய செட்டியார் டீ கடைக்கு டீ அருந்தச் சென்றனர். அதே நேரத்தில் செம்மஞ்சேரி குப்பத்தைச் சேர்ந்த சுகுமாரன், ஜெயபால். கணேசன், சின்னபையன் ஆகியோர் அதே டீ கடைக்கு சென்று முன்விரோதம் காரணமாக ரங்கநாதன், ராஜு செட்டி ஆகிய இருவர் இடத்தில் வாய்ச்சண்டை போட்டனர். ரங்கநாதனும், ராஜு செட்டியும் டீக்கடையைவிட்டு அகன்றவுடன், சுகுமாரனும் மற்ற மூவர்களும் அவர்களைத் தொடர்ந்து சென்று சில்லக்கோலாலும் விறகுக் கட்டையாலும் தாக்கி இருவருக்கும் ரத்தகாயம் ஏற்படுத்தினர். படுகாயம் அடைந்த ரங்கநாதன் கேளம்பாக்கம் மருத்துவ மனைக்குச் செல்லும் வழியில் இறந்துவிட்டார். இது சம்பந்தமாக காயம் அடைந்த ராஜு செட்டி திருப்போரூர் காவல் நிலையத்தில் 7—7—80 அன்று இரவு 9·00 மணிக்கு புகார் செய்ததின் பேரில் வழக்குப் பதிவு செய்யப்பட்டது. ரங்கநாதன் சடலம் பிரேத பரிசோதனை செய்யப்பட்டு அவரது உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. சம்பந்தப்பட்ட குற்றவாளிகள் நால்வரும் 10—7—80 அன்று செங்கற்பட்டு நீதி மன்றத்திலே சரண் அடைந்தனர். ஆகவே காவல் துறையினர் வழக்குத் தொடர்ந்திருக்கிறார்கள்., வழக்கு புலனாய்வில் இருந்து வருகிறது. இரு குப்பத்தாருக்கும் இடையே ஒரு சமரச நிலையை ஏற்படுத்த வேண்டுமென்பதிலே அரசு ஈடுபட்டு வருகிறது. தனிப்பட்ட விரோதம் காரணமாகத்தான் நிலைமை இந்த அளவிலே அமைந்திருக்கிறது. அந்த நான்கு பேர்கள் சரணடைந்த காரணத்தினாலேயும் வழக்கு தொடரப்பட்டு இருக்கிற காரணத்தினாலேயும் தொடர்ந்து வழக்கு நடைபெறுகிற காரணத்தினாலேயும் குற்றவாளியாகக் கருதப்படுகிறவர்கள் கடுமையாகத் தண்டிக்கப்பட நடவடிக்கை எடுக்கப்படும். மேலும் அமைதியை நிலைநாட்டக்கூடிய வகையிலே வருவாய்த் துறையினரும் காவல் துறையினரும் நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள், காவல் துறையினர் பாதுகாப்பும் தந்து வருகிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.





திரு. கெ. சொக்கலிங்கம் : தலைவரவர்களே, அவை முன்னவரவர்கள் விளக்கம் அளித்ததற்காக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அந்த வழக்கு வழக்கு மன்றத்திற்குச் சென்றிருக்கிறது. அந்த நேரத்தில் கூட சென்ற வாரம் அதுபற்றி முதலமைச்சரவர்களுக்குக் கூட ஒரு மனு அனுப்பப்பட்டு இருக்கிறது. சம்பந்தப்பட்ட விவரங்களைக் கேட்டால் கொடுப்பதற்கு நான் தயாராக இருக்கிறேன். சம்பந்தப்பட்ட எஸ். பி. யிடம் நான் போன் மூலம் கேட்ட நேரத்தில் அவர் பேசுகின்ற வார்த்தைகளைக் கேட்கும் பொழுது அவர் ஒழுங்காகப் பேசவில்லை. செங்கல்பட்டு மாவட்ட பெரிய போலீஸ் அதிகாரி தொடர்ந்து இம்மாதிரி நடந்து கொள்கிறார். இது மட்டுமல்ல. சென்ற முறை திருக்கழுக்குன்றத்தில் இப்படிப்பட்ட தகராறுகள் நடந்திருக்கின்றன. இன்னும் பதட்ட நிலை இருந்து கொண்டிருக்கிறது. ஆளுங்கட்சித் தலையீடு இல்லை என்பது போன்ற கருத்தில் அமைச்சரவர்கள் சொன்னார்கள். நான் நிச்சயமாக ஆதாரத்தோடு நிரூபிக்கிறேன். பேரவைத் தலைவர் அவர்களுக்கு வேண்டுமானாலும் சொல்கிறேன். மீனவத் தலைவர்களே கொடுத்திருக்கிறார்கள். திருவல்லிக்கேணியிலுள்ள பெரியவர் ஒருவர்—பாலன் என்பவர் தலையிட்டு இருக்கிறார் என்ற தகவலை என்னிடத்தில் கொடுத்திருக்கிறார்கள். எனவே, அந்தத் தகராறுகள் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும். இப்படிப்பட்ட தகராறுகள் இனியும் நடக்காதவாறு பார்த்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கூறுவது போன்று அங்கே இருக்கின்ற காவல் துறை அதிகாரிகள் தவறாகவோ அல்லது முறைகேடாகவே நடந்து கொண்டிருப்பார்களேயானால் தனியாக அதுபற்றி மாண்புமிகு உறுப்பினரவர்கள் எழுதி மாண்புமிகு முதலமைச்சரவர்களிடத்தில் தருவார்களேயானால் அது பற்றி நடவடிக்கை எடுப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்ளலாம்.

ஆனால் ஆளுங்கட்சி தலையீடு என்று சொன்னதைப் பொறுத்த வரையில், இத்தனை பேர்களும் ஏதேனும் ஒரு அரசியல் கட்சியைச் சார்ந்தவர்களாக இருக்கக்கூடும்; முன் விரோதம் காரணமாக இருக்கலாம்; சில பேர் கட்சியைச் சேர்ந்தவர்களாகவும் இருக்கலாம், கட்சியைச் சேர்ந்தவர்களாக இல்லாமலும் இருக்கலாம். ஆளுங்கட்சி என்று கட்சியின் அடிப்படையிலே இந்தத் தகராறுகள் நடைபெறவில்லை என்று குறிப்பிட்டேன். இந்தந்தக் கட்சியைச் சேர்ந்த தலைவர்களாக இருக்கலாம் அல்லது உறுப்பினர்களாக இருக்கலாம்; அல்லது அவ்வாறு இல்லாமலும் இருக்கலாம். அவர்கள் தூண்டி விட்டவர்களாகவும் இருக்கலாம், இல்லாமலும் இருக்கலாம், எனவே, யார் தவறு செய்தாலும், யார் குற்றம் செய்தாலும் கண்டிக்கத் தக்கது தான். ஆனால்

அரசியல் சார்பான தன்மையிலே நடைபெறவில்லை என்று சொன்னேன். வழக்கு இருப்பதன் காரணமாகவும், இந்த மன்றத்திலே அது பற்றி எழுப்பப்பட்டிருப்பதன் காரணமாகவும், இந்த மன்றத்திலே அரசின் சார்பாகப் பதில் சொல்லியிருப்பதன் காரணமாகவும், கடுமையான வகையிலே இந்த வழக்கை நடத்தவும், உண்மையான குற்றவாளிகளைக் கண்டு பிடிப்பதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டு, தண்டனை பெறத் தக்க முயற்சிகளும் முறைப்படி மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## (ஆ) மாணவர்கள் சாதிச் சான்றிதழ் பெறுவதில் உள்ள இன்னல்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, திரு. ப. பொன்னுரங்கம் அவர்கள் ஒரு அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்கள்,

திரு. ப. பொன்னுரங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, "மாணவர்களுக்கு வழங்கப்படும் மாற்றல் சான்றிதழ்களில் (Transfer Certificate) சாதி பற்றிய சான்று இருப்பினும், தாசில்தார் அலுவலகத்திலிருந்து சாதிச்சான்றிதழ் பெற வேண்டும் என்பதால் மாணவர்களுக்கு ஏற்படும் இன்னல் குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்:

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, கல்லூரி மாற்றச் சான்றுகளில் சில இடங்களில் மதம், சாதிப் பெயர்கள் தரப்படுவதில்லை. அண்மைக்கால வழக்கங்களின்படி புள்ளிவிவரத் தொகுப்புக்கு மட்டுமே பயன்படும் சாதி பற்றிய விவரங்கள் எஸ். எஸ். எல். சி. சான்று முதல் பக்கத்திலும் இடம் பெறுவதில்லை. மாணவர்கள் அட்டவணைச் சாதியாராய் இருந்தால் மட்டுமே சாதி விவரம் "மற்ற சாதியினர்", "பின்னிலை வகுப்பார்" என்று மட்டுமேகுறிப்பிட்டாற் போதுமானது.

எனவே, கல்விச் சலுகைகளைப் பெறுவதற்கு உதவும் வண்ணம் வருவாய்த்துறை அலுவலர்களிடமிருந்து சான்று பெறும் முறை இருப்பதாய் தெரியவருகிறது. இதனை ஒழுங்கு செய்ய வேண்டுமாயின், மாணவர்கள் பள்ளியில் முதன் முதலாகச் சேரும் போதே மதம்,—சாதி பற்றியக் குறிப்புகளைத் தரச் செய்து, அவற்றையே தொடர்ந்து மாற்றச் சான்றிதழ்களில் இடம்



பெறுமாறு வகை செய்யலாம் என்றும் இதுவரை சாதி விவரம் தரப்படாத மாணவர்களைப் பொறுத்த வரை, பள்ளி இறுதி வகுப்பு முடிக்குமுன் உரிய சான்றுகள் பெற்று அப்பதிவுகளைப் பள்ளி பதிவேடுகளிலேயே இடம் பெறச் செய்வது பற்றி அரசு முடிவு செய்யலாம் என்றும் கல்லூரிக் கல்வி இயக்குநர் கூறியுள்ளார்.

பின்னிலை வகுப்பார், அட்டவணைச் சாதி பழங்குடியினர், மிகவும் பின்தங்கிய வகுப்பார் இவர்களைப் பொறுத்தவரை மட்டும் இந்தச் சாதி விவரங்கள் மாற்றச் சான்றிதழில் இடம் பெறச் செய்தால் போதுமானது.

(அ) தற்போதைய நிலவரப்படி, உடனடி நடவடிக்கையாக, எல்லாக் கல்லூரிகளும் பள்ளிகள் வழங்கும் மாற்றச்சான்றில் உள்ள சாதி விவரங்களையே அறுதியானதாய் கொள்ளவும்,

(ஆ) அவ்வாறு சாதிப் பெயர் குறிப்பிடாத இடங்களில் மட்டும் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலிருந்து சான்று பெறும் முறையைப் பின்பற்றவும்—முதல்வர்களுக்கு அறிவித்து விடலாம் என்று கல்லூரிக் கல்விஇயக்குநர் கூறியுள்ளார். இதுகுறித்து அரசு பரிசீலிக்கும்,

கல்லூரிகளில் இட ஒதுக்கீடுகள் சாதி அடிப்படையிலே செய்யப் பட வேண்டியிருப்பதால், மாணவரின் சாதி பற்றிய சரியான விவரங்களைப்பெற வேண்டுவது அவசியமானதாய் உள்ளது.

எனவே, மாணவர்கள் பள்ளிகளை விட்டு விலகும் போதே அவர்களுடைய மாற்றச் சான்றுகளில் மிகச் சரியான சாதி விவரம் இடம் பெறுமாறு செய்ய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு பள்ளிக் கல்வித்துறைக்கு அறிவிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. ப. பொன்னுரங்கம் : தலைவரவர்களே, விவர அறிக்கையில் அமைச்சரவர்கள் நன்றாகத்தான் விளக்கத்தைக் குறிப்பிட்டிருக்கிறார்கள். இந்த முடிவை அரசாங்கம் ஏற்கனவே தெரிவித்திருந்தால் நலமாக இருந்திருக்கும். டிரான்ஸ்பர் சர்ட்டிபிகேட்டில் அந்தக் காலத்தில் போடப்பட்ட ஜாதியே இறுதியானது என்று முடிவெடுத்திருந்தால் பல்வேறு பகுதியைச் சேர்ந்தவர்கள் தொல்லைக்கு உள்ளாகியிருக்கமாட்டார்கள். தாசில்தார் ஆபீஸ்களிலே பெரிய வரிசையாகப் பெற்றோர்கள் நின்று கொண்டிருப்பதை இப்பொழுதுகூடப் பார்க்கலாம். இந்தச் சங்கடங்களின் காரணமாக பெற்றோர்களும், படித்த மாணவர்களும், மேற்கொண்டு கல்லூரிகளிலோ, டெக்னிக்கல் இன்ஸ்டிட்யூட்களலோ சேரவிருக்கின்ற மாணவர்களும் கஷ்டப் படுகிறார்கள். இந்த இடங்களில் சேர்க்கின்ற பொழுது இது போன்று கேட்கிறார்கள்.

[திரு. ப. பொன்னுரங்கம்] [1980 ஜுலை 31

இவ்வாறு கேட்கப்படுவது டெக்னிக்கல் இன்ஸ்டிடியூஷன்களிலே மட்டுமல்ல, வேலையிலே அமர்த்துகின்ற இடத்திலே கூட இதைக் கேட்கிறார்கள். எனவே, வேலைக்கு அமர்த்தும் இடத்தில் கூட டி. சி.-யில் இருக்கும் அந்தக் குறிப்பே போதுமானது என்ற முறையை ஏற்படுத்தினால் சிறப்பாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். நான் ஒரு சம்பவத்தைச் சொல்ல விரும்புகிறேன். ஜாதிச் சான்றிதழ் இல்லாததால் மாணவர்கள் படிக்க முடியாத சூழ்நிலை ஏற்படுகிறது என்பதற்கு ஒரு சம்பவத்தைச் சொல்ல விரும்புகிறேன்,

செங்கல்வராயன் இன்ஸ்டிடியூட்டில் ஒரு மாணவர் சேர விரும்பினார். அதற்காக 13 ஆம் தேதி தாசில்தார் அலுவலகத்திற்குத் தன் தந்தையோடு அவர் சென்றிருக்கிறார். ஆனால் 13-ஆம் தேதி அந்தச் சான்றிதழைப் பெற முடியவில்லை. தாசில்தார் என்ன காரணத்தினாலோ வரவில்லை. அவர் மேல் தப்பில்லை.

[முற்பகல் 10-40]

ஃபையர் ஆக்சிடென்ட் நடந்து விடுகிறது. ஆகவே தாசில்தார் அங்கு போய் விடுகிறார். 15—ஆம் தேதி ஞாயிற்றுக் கிழமை. 16 ஆம் தேதி திங்கட்கிழமை, சான்றிதழ் பெறுகிறார். ஆனால், Last date for receipt of the applicaticns is 14th June அப்படியிருக்கும்போது, அந்த மாணவன் சேர முடியவில்லை. இப்படிப்பட்ட சங்கடமான நிலைமைகள் எல்லாம், டிரான்ஸ்ஃபர் சர்ட்டிஃபிகேட்டில், ஜாதி குறிப்பிட்டிருந்தும் தனியாகக் கேட்கப்படுவதால் ஏற்படுகிறது. அதில் குறிப்பிடப்படாவிட்டால் பரவாயில்லை. 90% டிரான்ஸ்ஃபர் சர்ட்டிஃபிகேட்டுகளில், ஜாதியைக் குறிப்பிடுகிறார்கள். எனவே, கல்விக்கூடங்களுக்கும் தொழில் கூடங்களுக்கும் டி. சி. யில் இருப்பதே போதும் என்ற முறையில் அவர்களுக்கும் அறிவிக்க அரசு முன் வருமா என்று அறியவிரும்புகிறேன்.

<u>மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :</u> மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்த ஜாதிச் சான்றிதழ் தருவது என்பது தாராளமாக, மிக எளிதாகக் கிடைக்கும் வகையில் ஆக்கப்பட வேண்டுமென்று சொல்வது நமக்குப் பெருமையாக இருக்காது. காரணம் யார் வேண்டுமானாலும், எதை வேண்டுமானாலும் சொல்லி, பிற்பட்ட ஜாதியினர், தாழ்த்தப்பட்ட ஜாதியினர் என்று சான்றிதழ் பெற்று விடுவார்களேயானால், உண்மையிலே பிற்பட்ட ஜாதியினருக்கு, தாழ்த்தப்பட்ட ஜாதியினருக்கு வழங்குகின்ற சலுகைகளை மற்றவர்கள் அனுபவிக்கின்ற நிலைமைகள் ஏற்படும். இப்பொழுது வந்திருக்கிற முறையில் ஏதாவது ஒரு கட்டத்தில், தாசில்தார் ஆஃபீசில் வாங்க வேண்டுமென்று சொல்வது, அவர்கள் சர்டிஃபிகேட்டில் கொடுத்திருக்கின்ற ஜாதி உண்மையாகவே, அவர்கள் சார்ந்திருக்



1980 ஜுலை 31] [திரு. செ. அரங்கநாயகம்]

கின்ற ஜாதிதானா என்பதை அறிந்து கொள்வதற்கு
அத்தாட்சியாகத்தான் வைத்திருக்கிறோம். அப்படியில்லை
என்றால், அவர்கள் சொல்வதே ஜாதி என்று வைத்து
விடுவோமேயானால், எல்லோரும் பிற்பட்ட ஜாதி, தாழ்த்தப்பட்ட
ஜாதி என்று சொல்வார்கள், டி. சி.-யிலே அதுதான் வரும்.
டி. சி.—யை வைத்துக்கொண்டுதான் நாம் அட்மிட் செய்வது
என்று சொன்னால், பிறகு எல்லோருமே அந்தப் பலன்களை
அனுபவிக்கக்கூடிய நிலைமை வரும்.

<u>திரு. ப. பொன்னுரங்கம்:</u> தலைவர் அவர்களே, அமைச்சர்
சொல்வதுபோல், யார் வேண்டுமானாலும் ஜாதிச்சான்றிதழ்
தருவது என்பது அல்ல. காலேஜ், ஸ்கூல், பிரின்சிப்பால்
ஹெட்மாஸ்டர்தான் வழங்குகிறார்கள். அதை வேறு யாரும்
கொடுக்க முடியாது. அப்படி ஜாதிச் சான்றிதழ் வாங்கித்தான்
ஆக வேண்டுமென்றால், இப்பொழுது பாஸ்போர்ட்டில் முன்பு
ஐ. ஏ. எஸ். அதிகாரிகள் வழங்கலாம் என்று இருந்ததை மாற்றி...

<u>மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :</u> மாண்புமிகு
உறுப்பினர் ஒன்றைப் புரிந்து கொள்ள வேண்டும். ஹெட்மாஸ்டர்
தருகிறார் என்றால், பெற்றோர் தந்ததைத்தான் அவர்
தருகிறார். பெற்றோர்கள் அட்மிஷன் நேரத்தில் என்ன ஜாதி
சொல்கிறார்களோ, அதை எழுதி வைத்து, மாணவன் வெளியேறும்
போது, அதைக் குறிப்பிட்டுத் தருகிறார். ஆகவே, பெற்றோர்
சொல்கிற ஜாதிதான் ஜாதி. அதை எல்லோரும் ஏற்றுக்கொள்ள
வேண்டுமென்ற நிலை வருமேயானால், பிற்பட்ட ஜாதியும்
இருக்காது, தாழ்த்தப்பட்ட ஜாதியும் இருக்காது.

<u>திரு. ப. பொன்னுரங்கம் :</u> பெற்றோர்கள் சொல்வதெல்லாம்
ஜாதி என்று சொல்கிறார். தாசில்தார் ஆஃபீசுக்குப்
போகிறோம். போனவுடன், பெற்றோர்கள் சொல்லி, ஸ்கூல்
சர்ட்டிஃபிகேட்டிலே என்ன ஜாதி போடப்பட்டிருக்கிறதோ,
அதைத்தான் தாசில்தார் ஆஃபீசிலே வெரிஃபை பண்ணிக்
கொடுக்கிறார்கள். இதற்கென தனியாக விசாரணை நடைபெற
வில்லை. பெற்றோர், ஜாதியைச் சொல்லி, அந்த டி. சி.யிலே
இருப்பதை வெரிஃபை பண்ணித்தான் புதிதாக சான்றிதழ்
தருகிறார். ஆகவே. நான் கேட்டுக் கொள்வதெல்லாம்,
பாஸ்போர்ட்டுகளுக்கான சான்றிதழ்களிலே முன்பு ஐ. ஏ. எஸ்.
ஆஃபீசர்கள் கையெழுத்துப் போடலாம் என்ற நிலையிருந்தது.
இப்பொழுது, அதை மாற்றி, எம். பி. க்கள், எம். எல். ஏ.-க்கள்
கையெழுத்துப் போடலாம் என்ற நிலையிருந்தது. ஆகவே,
எம். எல். ஏ.—க்கள் சர்ட்டிஃபிகேட் கொடுத்தால் போதும்
என்ற நிலையிருக்குமா என்று கேட்க விரும்புகிறேன்.

அத்துடன், சதர்ன் ஸ்டேட்ஸில் ரெட்டியார்கள் இருக்கிறார்கள். அவர்கள் நேட்டிவிட்டி சர்ட்டிஃபிகேட்டில் . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 'ரெட்டியார், என்று ஆரம்பித்தால், ஒவ்வொரு ஜாதியாக வரும். முதல் கேள்வியோடு நிறுத்திக்கொள்ளுங்கள்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, பிற்பட்ட ஜாதியைச் சேர்ந்தவர்களுக்கும், தாழ்த்தப் பட்ட ஜாதியைச் சேர்ந்தவர்களுக்கும் அரசு சில நன்மைகளைச் செய்ய வேண்டுமென்று விரும்புகிற நேரத்தில், இந்த நன்மைகள் அவர்களுக்கு ஒழுங்காகப் போய்ச்சேரவேண்டுமென்ற காரணத் தால்தான் இத்தகைய ஏற்பாடுகளைச் செய்திருக்கிறோம். தாசில் தார் அவர்கள் முறையாக விசாரித்து அந்தச் சான்றிதழைத் தர வில்லையென்றால், முறையாக விசாரித்துத் தருவதற்கான ஏற் பாடுகளைச் செய்வதுதான்முறையே தவிர, அது அப்படி இருக்கிற காரணத்தாலே, பிறகு எம்.எல்.ஏக்கள், பிறகு எம்.பிக்கள், பிறகு வேறு யார் வேண்டுமானாலும் தரலாம் என்ற முறையைக் கொண்டு வருவது நாம் எடுத்துக்கொண்ட முயற்சிக்குக் குந்தகம் விளைவிக்கும். அது யாருக்குப் பயன்பட வேண்டுமென்று நினைக்கிறோமோ, அவர்களுக்கு நிச்சயமாக அது பயன் அளிக்காது என்று நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

## 4. அறிவிப்புகள்

### (அ) மேலவைத் தலைவரிடமிருந்து வந்துள்ள செய்தி

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு 1980 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண்.2) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 32/1980) ஆய்வு செய்யப்பெற்று பரிந்துரைகள் ஏதுமின்றி திருப்பி அனுப்பப் பெற்றுள்ளது என்று மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களிடமிருந்து செய்தி வரப்பெற்றுள்ளது.

## 5. அரசினர் தீர்மானம்

### மதிப்பீட்டுக் குழு தேர்தல்

மாண்புமிகு டாக்டர். இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் 210-வது விதியின்கீழ், 1980-81-ஆம் ஆண்டிற்கான மதிப்பீட்டுக் குழுவில் ஒரு வெற்றிடத்தை நிரப்ப ஒரு உறுப்பினரை மாண்புமிகு பேரவைத் தலைவர் குறிப்பிடும் நாளன்று இப்பேரவை தேர்ந்தெடுக்கும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறை வேற்றப் பெற்றது.



## 4. அறிவிப்புகள்—தொடர்ச்சி

### (ஆ) மதிப்பீட்டுக் குழு தேர்தல்—நடைமுறை

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. ஒற்றை மாற்று வாக்குமுறைப்படி தேர்தல் நடத்துவதற்கு பேரவைத் தலைவர் வகுத்துள்ள விதிமுறைகளின் கீழ், மதிப்பீட்டுக் குழுவிற்கு (Estimates Committee) ஒரு உறுப்பினரைத் தேர்ந்தெடுக்க வேட்பாளர்கள் வேட்புத் தாள்கள் 5-8-1980 செவ்வாய்க் கிழமை பிற்பகல் 3-00 மணிக்குள் சட்டமன்ற பேரவைச் செயலாளரிடம் சேர்ப்பிக்க வேண்டும். வேட்புத் தாள் செயலரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

வேட்புத்தாள்கள் 6-8-1980 புதன் கிழமை பிற்பகல் 3-00 மணிக்கு ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படும். விலகிக் கொள்ள விரும்பும் வேட்பாளர்கள் 7-8-1980 வியாழக்கிழமை பிற்பகல் 3-00 மணிக்குள் விலகிக் கொள்ளலாம்.

நியமனம் செய்யப்பட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கை நிரப்பப்படவேண்டிய இடத்தின் எண்ணிக்கைக்கு, அதாவது ஒன்றுக்கு மேற்படுமாயின் 8-8-1980 வெள்ளிக் கிழமை காலை 9-00 மணிக்கும் பகல் 1-00 மணிக்கும் இடையே சென்னை கோட்டையில் இருக்கும் சட்டமன்றக் குழுக்கள் கூடும் அறையில் வாக்கெடுப்பு நடைபெறும்.

## 6. தனியார் அலுவல்கள்

### தனித் தீர்மானம்—மாநிலங்களுக்கு கூடுதல் அதிகாரம் வழங்கல்.

திரு. ரா. உமாநாத்: பேரவைத் தலைவர் அவர்களே கீழ்க்கண்ட தனித் தீர்மானத்தை நான் மொழிகிறேன்:

"மாநிலங்களையும், ஒட்டு மொத்தமாக இந் நாட்டினையும் முழுமையாகவும் விரைவாகவும் மேம்படுத்துவதற்கு தற் போதுள்ள அரசியலமைப்புச் சட்டத்தில் மாநிலங்களுக்கு வழங் கப்பெற்றுள்ள அதிகாரங்கள் போதுமானதல்லவென்று இந்த அவை கருதுகின்றது. எனவே, உடனடியாக மாநிலங்களுக்கு நிதி மற்றும் ஏனைய இனங்களில் கூடுதல் அதிகாரம் வழங்க அரசியலமைப்புச் சட்டத்தில் தகுந்த திருத்தங்கள் செய்யும் வகையில் அவசர நடவடிக்கை எடுக்க, அனைத்து மாநில மற்றும் யூனியன் பிரதேச முதல் அமைச்சர்களின் மாநாடு ஒன்றினை இந்தியப் பிரதமர் கூட்டவேண்டும் என்று மத்திய அரசிற்குப் பரிந்துரை செய்கின்றது."

திரு. மு. அம்பிகாபதி: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் தோழர் உமாநாத் அவர்கள் மொழிந்த தீர்மானத்தை நான் வழிமொழிகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத்—தலைவர்—தலைமை)

திரு. ரா. உமாநாத்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்று மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் என்பது, சில கட்சிகளின் கொள்கை என்ற வட்டத்தைத் தாண்டிவிட்டு இருக்கிற நேரம் இது என்று நான் குறிப்பிட விரும்புகிறேன். இது ஒரு வெறும் தத்துவார்த்தப் பிரச்சினை என்று பல ஆண்டுகளுக்கு முன்பாக இருந்த நிலையை விட்டு, அந்தக் கட்டத்தைத் தாண்டி இருக்கக் கூடிய பிரச்சினையாக இன்றைக்கு இருக்கிறது. அந்தப் பிரச்சினையில் தீர்வுகாணாமல் இருப்பது, அபாயகரமான விளைவுகளை ஒவ்வொரு நாளும் நாட்டுக்கே, மாநிலத்திற்கு என்று மட்டுமல்ல, நம்முடைய நாட்டுக்கே உண்டாக்கி இருக்கக் கூடிய நிலைமை இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்ளுகிறேன். மத்தியில் அதிகாரம் குவிந்ததனால் இன்று நம்முடைய நாட்டில் சுயாதிபத்திய உரிமைக்கு ஆபத்து எதிர்நோக்கி இருக்கிறது என்று நீங்கள் அறிவீர்கள். நாட்டின் ஒருமைப்பாடு துண்டாடப்படும் பேரபாயம் ஏற்பட்டு உள்ளது என்று சொல்ல விரும்புகிறேன். நாட்டின் பொருளாதார வளர்ச்சி குன்றிவிட்டது.

இதை சாதாரண மக்களுடைய அகராதியில் சொல்ல வேண்டுமானால், அம்போ என்று தெருவில் நிற்கிற நிலையை நாட்டின் பொருளாதார நிலைமை எட்டி இருக்கிறது என்பதைக் கூற விரும்புகிறேன்.

ஆகவே, நம் நாட்டில், பல்வேறு மொழிகளையும் கலாச்சாரங்களையும், பல்வேறு மாநில மக்களின் தனித் தன்மையையும் காத்து, நாட்டின் ஒருமைப்பாட்டைப் பாதுகாக்க, அதிக அதிகாரம் வேண்டும் என்ற பிரச்சினை, அவசரத் தன்மை வாய்ந்த, நடைமுறைக்கு தேசிய பிரச்சினையாக இன்றைக்கு மாறி இருக்கிறது என்பதைச் சொல்ல விரும்புகிறேன்.

[முற்பகல் 10.50]

இப்பிரச்னை பற்றி கடந்த காலத்தில் தீவிரமாகப் பேசி வந்த நமது எதிர்க்கட்சித் தலைவர், மாநிலத்தில் சுயாட்சி என்பதும், அதிக அதிகாரம் வேண்டும் என்பதும், எங்கள் உயிர் மூச்சு என்று முழக்கமிட்டு வந்த நமது எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் தற்போது இந்தப் பிரச்னை முன்னைவிட அதிகமாக முற்றி இருக்கிற நேரத்தில் அதைப் பற்றி மௌனம் சாதித்தாலும், அதைப் பற்றிய ஆவேசம் மறைந்து இருந்தாலும்....

* டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. உமாநாத் அவர்கள் ஒரு தவறான தகவலைத் தருகிறார்கள். இது பற்றி முழக்கம் எழுப்பி வந்த





எதிர்க்கட்சித் தலைவர் என்று சொன்னார்கள். 'எழுப்பி வருகிற' என்று அவர் திருத்திக் கொள்ளவேண்டும். மாநிலத்திலே சுயாட்சி, மத்தியிலே கூட்டாட்சி என்பது திராவிட முன்னேற்றக் கழகத்தின் உயிர்க்கொள்கைகளில் ஒன்று. 1974–ம் ஆண்டு திராவிட முன்னேற்றக் கழக அரசு இந்த அவையில் மாநில சுயாட்சி தீர்மானம் கொண்டு வந்து நிறைவேற்றியது என்பதையும், இன்றைய தினம் ஆளும் கட்சியாக இருப்பவர்கள் அன்றைய தினம் அதை எதிர்த்தார்கள் என்பதையும் நண்பர் உமாநாத் அவர்களுக்கு நான் சுட்டிக் காட்டக் கடமைப்பட்டு இருக்கிறேன். இப்போது கொண்டு வரப்பட்டு இருக்கிற இந்தத் தீர்மானம் கூட நாங்கள் ஏற்கனவே, இந்த அவையில் கொண்டு வந்து நிறைவேற்றிய மாநில சுயாட்சித் தீர்மானத்திற்கு உள்ளடங்கிய விவரங்களைத்தான் கொண்டுள்ளது என்பதைச் சுட்டிக்காட்டுவதோடு, அரசாங்கத்தின் சார்பிலேயே இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வருவதற்கு திரு. உமாநாத் அவர்கள் அவர்களுக்குள்ளே இருக்கிற தோழமையைப் பயன்படுத்துவார்களானால், நாங்களும் அதை இரு கையேந்தி வரவேற்று இந்த சட்டமன்றத்தில் அதை ஆதரித்து நிறைவேற்றுவதற்கு சாதகமாக இருப்போம். அதைச் செய்வார்களா?

திரு. மு. அம்பிகாபதி: மாண்புமிகு கலைஞர் அவர்கள் ஆட்சியில் இருந்தபோது நிறைவேற்றிய தீர்மானத்தை இப்போது எடுத்துப் பார்த்தேன். மத்தியிலே கூட்டாட்சி, மாநிலத்தில் சுயாட்சி என்பது உயிர் மூச்சு என்று சொன்னார்கள். கடந்த தேர்தலில் மத்தியில் ஒரு கட்சி ஆட்சி, மாநிலத்தில் கூட்டாட்சி என்று சொன்னார்கள்......

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நீங்கள் பேசும் போது இவற்றையெல்லாம் பேசுங்கள். இப்படி ஒவ்வொரு கேள்வியாக ஒவ்வொரு உறுப்பினரும் கேட்டுக்கொண்டு இருக்கக் கூடாது.

டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, இதைக்கூட நண்பர் திரு. அம்பிகாபதி அவர்கள் புரிந்து கொள்ளாததற்கு நான் மிகவும் வருத்தப்படுகிறேன். கூட்டாட்சி என்பது வேறு, ஒரு கட்சி ஆட்சியா? பல கூட்டணி ஆட்சி என்பது வேறு. வருகிறபோது, அது கூட்டணி கட்சி ஆட்சியா? என்ற பிரச்னை கூட்டாட்சி ஆகாது. பெடரல் செட்-அப் ஆட்சி என்று ஆகிறது. கூட்டாட்சி என்பது வேறு. நாம் கேட்பது என்பது வேறு. கூட்டாட்சி 'பெடரேஷன் அண்டு ஸ்டேட் அடானமி'.

திரு. ரா. உமாநாத்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, என்னுடைய பாயின்ட் அப்படிப்பட்ட திராவிட முன்னேற்றக் கழகம், அதனுடைய தலைவர், இங்கே எதிர்க் கட்சித் தலைவருமாக இருக்கக்கூடிய அவர்-விளக்கினார் அல்லவா, 'எங்களுடைய' கொள்கை இது தான், இது தான் என்று—அப்படிப்

பட்ட திராவிடமுன்னேற்றக்கழகமும், எதிர்க் கட்சித் தலைவரும் 1974-லே இது சம்பந்தமாக விரிவான தீர்மானம் கொண்டு வந்து அதன் மீது கர்ஜனை என்ற முறையில் பேசி இருக்கிற திராவிட முன்னேற்றக் கழகம், இன்று அதைப்பற்றி ஆவேசம் சற்று குறைந்து இருக்கிறது என்றாலும்—குறுக்கீடு— அதைத்தான் சொல்கிறேன், அதைப்பற்றி ஆவேசம் குறைந்து இருக்கிறது. அதைப் பற்றிய வேகம் கொஞ்சம் குறைந்திருக்கிறது ......

டாக்டர் மு. கருணாநிதி: அவர் உள்ளபடியேதான் இங்கே கொண்டு வந்த தீமானத்தை விளக்குவதற்காக விரும்புகிறார்களா அல்லது திராவிட முன்னேற்றக் கழகத்தின் பக்கம் பாய்வதற்காகத் தீர்மானம் கொண்டு வந்தார்களா என்று எனக்குத் தெரியவில்லை. நான் இன்னும்கூட அவருக்குச் சொல்வேன். அவருடைய கட்சித் தலைவர் திரு. பாலசுப்பிரமணியம் அவர்கள் 17-ஆம் தேதி மதுரையில் 'மாநில சுயாட்சி மாநாடு' நடத்தப் போவதாகவும், அதற்கு நான் வரவேண்டும் என்றும் எனக்கு அழைப்பு அனுப்பியிருக்கிறார். நான் அவருக்கு எழுதிய பதில் கடிதத்திலே கூட எழுதி இருக்கிறேன். 'மாநில சுயாட்சி' தீர்மானம் எங்களுக்கு முழுக்க முழுக்க உடன்பாடான ஒன்று. ஆனால், நான் 17—ம் தேதி பல நிகழ்ச்சிகளில் பங்கேற்க முன்பே' ஒப்புக்கொண்டு இருக்கிற காரணத்தால், அந்த நாளில் வர முடியாது. வேறு நாள் என்றால் வர சௌகர்யமாக இருக்கும் என்று எழுதி இருக்கிறேன். அவர்களுக்கு உள்ளபடியே எங்களை அழைக்கவேண்டும் என்று எண்ணம் இருக்குமானால், கருணாநிதியைத்தான் அழைக்க வேண்டும் என்ற எண்ணம் இல்லாமல் திராவிட முன்னேற்றக் கழகத்திலே வேறு ஒரு தலைவரை அவர்கள் அழைப்பார்களானால், அந்த மாநாட்டிற்கு நாங்கள் வரக்கூட தயாராக இருக்கிறோம். எனவே, நாங்கள் அந்தக் கொள்கையிலே பின் வாங்கி விட்டோம் என்று திரு. உமாநாத் அவர்கள் எண்ண வேண்டாம். நாங்கள் சந்தர்ப்பத்திற்குத் தகுந்தபடி எங்களுடைய கொள்கைகளை மாற்றிக் கொள்பவர்கள் அல்ல.

திரு. ரா. உமாநாத்: கொள்கையை மாற்றிக்கொண்டீர்கள் என்று நான் சொல்லவில்லை. வேகம் கொஞ்சம் குறைந்து இருக்கிறது. அதைத்தான் நான் சொல்கிறேன். எனக்கு மனதில் பட்டதைச் சொல்கிறேன். (சிரிப்பு) அது தான் முந்தாநாள் சொன்னீர்கள். இப்போது நான் எதிர்க்கட்சித் தலைவர் கரெக்ட்டான பாயின்ட்டுக்கு வருகிறார்.

டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, காட்டப்பட வேண்டிய நேரத்தில் வேகங்கள் காட்டப்பட வேண்டும். இதே அவையிலே திரு. உமாநாத் அவர்கள் வழங்கிய முழக்கங்களை சென்ற ஆண்டு நாம் பார்த்திருக்கிறோம். ஆதலால், தேவைப்படுகிற நேரத்தில் தான் வேகம் வரும். எல்லா நேரத்திலும் வேகம் இருந்தால் நல்லது அல்ல.



திரு. ரா. உமாநாத்: அதற்குத்தான் நான் வருகிறேன். எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் போலீஸ் மானியத்தில் பேசுகிறபோது இப்போது தான் சந்தர்ப்பம் கிடைத்ததா என்னைப் பற்றிப் பேசுவதற்கு நேரம் கிடைத்ததா என்று நான் கேட்கலாம் அல்லவா, நான் இப்போது கேட்கவில்லை. அவர்கள் குறிப்பிட்டதை அவர் பேசுகிறபோது அவர் நன்றாகச் சொன்னார்கள் அதற்கு நேற்றைக்கு எங்களுடைய தலைவரும் பதில் சொன்னார்கள். இப்போது இந்த சப்ஜெக்டில் டிபேட் வருகிறபோது நான் எதிர்க்கட்சித் தலைவர் பற்றி கூறுகிறேன். ஆகவே, நான் சொல்லவிருப்புவது, அதிலே கொஞ்சம் வேகம் குறைந்து இருக்கிறது, சுருதி குறைந்து இருக்கிறது. ஆகவே, அவருக்கும் சேர்ந்து நான் இந்தச் சப்ஜெக்டில் இங்கே பேசுகிறேன் என்று சொல்லிக் கொள்கிறேன்.

நமது அரசியல் சட்டதிட்டம் சமஸ்டி தன்மை வாய்ந்தது என்று கூறி வந்தாலும்-அப்படித்தான் கூறப்படுகிறது, இருந்தாலும்—சாராம்சத்தில் அது சமஸ்டி தன்மைக்கு நேர் மாறானது யூனிட்டரி தன்மை வாய்ந்ததாக இருக்கிறது என்று நாங்கள் கருதுகிறோம். In essence it is of unitary character என்று கூற விரும்புகிறேன். மாநில சுயாட்சி அதிகாரத்தை பலிகொடுத்து, நம்முடைய அரசியல் சட்டதிட்டம் மத்திய அரசிடம் அதிகாரத்தை குவித்துள்ளது. கடந்த 20 ஆண்டு காலமாக மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் வேண்டுமென்று குரல் ஓங்க, ஓங்க இருக்கிற குறைந்த அதிகாரங்களைக்கூட மையத்திலிருந்து காங்கிரஸ் கட்சி அரசு அரித்து எடுத்துக் கொண்டிருக்கிறது. even the existing limited power have been eroded, more and more.

ஜனாதிபதி திரு. சஞ்சீவரெட்டி அவர்கள் கூட 'லிங்க்' பத்திரிகைக்கு கொடுத்திருக்கிற ஒரு பகிரங்க பேட்டியில் அதை அவர்கள் பகிரங்கமாக ஒப்புக்கொண்டார்கள். அவர் லிங்க் பத்திரிகைக்கு கொடுத்த பேட்டியில் கூறியிருப்பது.

''நமது அரசியல் சட்டதிட்டம் வரையறுத்துள்ள சமஸ்டித் தன்மை ஓரளவு அரிக்கப்பட்டுள்ளது. சிலர் கல்வி, பொதுச் சுகாதாரம், காட்டு இலாகா எல்லாம் மைய அரசின் அதிகார வரம்புக்குள் கொண்டுவர வேண்டுமென்று கூறுகிறார்கள்''. ஜனாதிபதி மேலும் கூறுகிறார். ''என்னமோ அத்துறைகளில் எல்லாம் சென்று, எல்லாவற்றையும் சரிபடுத்த, தெய்வீக சக்தி படைத்த அதிகாரிகள் என்னமோ மையத்தில் இருப்பதுபோல் பேசுகிறார்கள். 20 ஆண்டுகளுக்கு முன் நான் ஆந்திர மாநிலத்தின் முதலமைச்சராக இருந்தபொழுது, மார்ஷல் டிட்டோ அவர்கள் ஆந்திராவுக்கு வந்தபோது என்னிடம் கூறினார், 'மிஸ்டர் ரெட்டி, உங்களுடைய மாநிலம் என் நாட்டைவிட இரண்டு மடங்கு பெரிதாக அல்லவா இருக்கிறது' என்று மார்ஷல் டிட்டோ கூறினார். ஆனால் அப்படிப்பட்ட மாநிலத்தின்

முதலமைச்சரான என்னால் சிறு விஷயங்களைக்கூட ஒரு சுகாதாரத் திட்டம், ஒரு காட்டு வளர்ச்சித் திட்டம் அல்லது அதைப்போன்ற சில விஷயங்களைக்கூட செய்ய முடியவில்லை. மத்தியில் இருக்கும் அதிகாரிகள் தாங்கள் டெல்லியிலிருந்து நேராக ஆந்திராவுக்கு சென்று செய்து கொடுத்தால்தான் முடியும் என்று நினைக்கிறார்கள்'' என்று இன்றைய ஜனாதிபதி ரெட்டி அவர்கள் கூறியிருக்கிறார்கள் (குறுக்கீடு) I am not yielding.

DR. K. SOURIRJAN —He says often 'I quote', and finally says it is his view. Is it his view or the view of the President-I want to know....

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நீங்கள் குறுக்கிடுவதை அவர்கள் ஒத்துக் கொள்ளவில்லை. உங்கள் கட்சியின் சார்பாக பேசும்போது அதைக் கேளுங்கள். இது ஒரு விவாதம், இந்த விவாதத்தில் ஒருவருக்கொருவர் குறுக்கிடு வேண்டாம். உட்காருங்கள்.

திரு. ரா. உமாநாத்: இந்த நிலை எப்போது ஆரம்பித்தது? அதாவது இருக்கக்கூடிய குறுகிய அதிகாரங்களைக் கூட அரிப்பது என்ற ஒரு நிலை எப்போது ஆரம்பித்தது என்று சொல்லும் போது மிக அழகாக 'ஸ்டேட்ஸ்மென். பத்திரிகை 6-1-78 கூறுகிறது: —

''நமது அரசியல் சட்டம் தேவைக்கும் சந்தர்ப்பத்திற்கும் தகுந்தாற்போல் சமஸ்டித் தன்மை வாய்ந்ததாகவும், யூனிட்டரி தன்மை வாய்ந்ததாகவும் இருக்கிறது என்று டாக்டர் அம்பேத்கார் அவர்கள் பறைசாற்றியதை டெல்லியின் ஒன்றன் பின் ஒன்றாக ஆண்டு வந்த காங்கிரஸ் ஆட்சிகள் அர்த்தமற்றதாக்கிவிட்டனர், வருவாய்க்கான வாய்ப்புகளை, படிப்படியாக மைய அரசிற்கு மாற்றியதன் மூலம் மாநிலங்களை, பிரதமர் என்னும் நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்ட வாதிகளுடைய பரிதாபகரமான அந்தஸ்திற்கு தாழ்த்திவிட்டது. மேலும் தாழ்ந்த அரசியல் சட்டத்தில் மாநிலங்களுக்கு என்று தனியாக ஒதுக்கப்பட்ட அதிகாரங்களை பல ஆண்டு காலத்தில் மைய அரசு கைப்பற்றியது அல்லது மைய அரசு உத்தரவினால் அமைக்கப்பட்ட திட்டக் கமிஷன் கைப்பற்றியதை, தேசிய அபிவிருத்திக் கமிஷன் கைப்பற்றியது.''

இப்படிப்பட்ட நிலைமை அது என்று அந்த பத்திரிகையில் தெளிவாக எடிட்டோரியலில் குறிப்பிட்டிருக்கிறார்கள். இப்படி மாநில அரசுகளுடைய இந்த அதிகாரத்தை குறைத்து, குறைத்து இருக்கிற அதிகாரத்துக்கும் மத்திய அரசினிடைய கோர்ட்டிலே போய் நிற்கிற வாதிபோன்ற நிலைமைதான் இருக்கிறது What was the modus operandi? என்பதை நிச்சயமாக நாம் புரிந்து கொள்ளவேண்டும்.



[முற்பகல் 11-00]

அது நேரு அவர்கள் பிரதமராக இருந்தபோதே ஆரம்பித்தது. மத்தியிலேயும் மாநிலத்திலேயும் ஒரே கட்சி ஆட்சி நடத்தி வந்ததால்தான் அது சாத்தியமாயிற்று என்று கூறும் கே. கே. கத்தியால் என்பவர் இந்து பத்திரிகையில் 5-12-1977 அன்று எழுதுகிறார். அவர் நல்ல முறையில் அந்த விஷயத்தை வருணிக்கிறார். யாராலும் மீறமுடியாத மிகுந்த செல்வாக்குடன் 1947 முதல் 1962 வரை ஆட்சி நடத்திய நேரு காலத்தில் அகில இந்திய காங்கிரஸ் கட்சி தனது மாநிலக் கிளைகளை நடத்தியது போல் மாநில அரசுகளையும் நடத்தினார்கள். நேருவின் டெல்லி அமைச்சரகத்திலிருந்து ஒரு தொலைபேசி தகவல், அல்லது ஆள் மூலம் தகவல், அல்லது காங்கிரஸ் வட்டாரங்களிலிருந்து சில அறிகுறிகள் போனால் போதும். புது டெல்லியின் விருப்பங்கள் என்ன என்று மாநில முதலமைச்சர்கள் புரிந்து கொள்வார்கள். அதன்படி உடனே நடந்து கொள்வார்கள். இப்படித்தான் மாநிலங்களின் குறுகிய அதிகாரங்களை, மையத்தில் காங்கிரஸ் கட்சி இருந்துகொண்டு தனது மைய அதிகாரத்தைப் பயன் படுத்தி குறைத்தது அல்லது பறித்தது அல்லது அழித்தது என்று நான் சொல்ல விரும்புகிறேன். ஆகவே இந்த ஸ்டேஜிலே இந்த அனுபவத்தை வைத்துக்கொண்டு பார்க்கவேண்டும் என்று கூற விரும்புகிறேன். மத்தியிலேயும் மாநிலத்திலேயும் ஒரே கட்சி ஆட்சி நடத்தினால்தான் நாட்டுக்கு நல்லது என்று கூறக்கூடியவர்கள் கடந்த கால அனுபவத்தைப் பார்த்தாவது புரிந்து கொள்ள வேண்டும். மத்தியிலேயும் மாநிலத்திலேயும் ஒரே கட்சி ஆட்சி இருந்தால்தான் அரசியல் சட்டத்தில் இருக்கக்கூடிய குறுகிய அதிகாரத்தைக்கூட மைய அரசு பறிக்கின்றபோது மாநிலத்திலும் அதே கட்சி இருந்த காரணத்தால் அதைத் தட்டிக் கேட்க அவர்களால் முடியாமல் அதை அனுமதித்துக்கொண்டிருந்த நிலையில் இப்படிப்பட்ட கதி நமக்கு வந்திருக்கின்றது. ஆகவே அந்த அமைப்புத்தான் அதற்குக் காரணம் என்று சொல்ல விரும்புகிறேன்.

ஆனால் இன்று நிலைமை வேறு. இன்று மத்தியிலே ஒரு கட்சியினரும் சில மாநிலங்களிலே வெவ்வேறு கட்சிகளும் ஆட்சியில் இருப்பதால் அந்த மாநிலங்களிலே இருக்கின்ற மாற்றுக் கட்சி அரசுகளும் அவர்களைத் தேர்ந்தெடுத்த மக்களும் இந்திரா காங்கிரசின் கிளைகள் போல் நடத்தப்படுவதற்குத் தயாராக இல்லை என்ற கான்டெக்ஸ்ட் இப்போது சில ஆண்டுகளுக்கு முன்னாலிருந்து சில இடத்திலே ஏற்பட்டிருக்கக்கூடிய நிலைமை. இன்றைக்கும் இருக்கக்கூடிய நிலைமை அதுதான். ஆகவேதான் மாநிலங்களிலே வெவ்வெறு கட்சி அரசாங்கங்கள் அமைந்திருக்கின்றன என்ற நிலையில் அந்த கான்டெக்ஸ்ட் பின்னணி மாறியவுடனே இந்திரா காங்கிரஸ் மைய அரசு தனது அதிகாரப்

பிடிப்பை இன்னும் முடுக்கிவிட்டது. கடந்த 10 ஆண்டுகாலமாக இந்தத் திசையில் நிலைமை இன்னும் மோசமாகி இருக்கின்றது என்று சொல்ல விரும்புகிறேன். மைய அரசின் டென்டக்கில்ஸ் அதாவது கொடுக்குகள் முழுக்க முழுக்க மாநில அரசின் அதிகார வரம்புக்குட்பட்ட லா அன்ட் ஆர்டர் அதாவது சட்ட அமைதி என்ற துறையினையும் கவ்வியது. சட்ட அமைதி மாநிலத்தின் முழு வரம்புக்குள் உள்ளது தெரியும். சட்டம் அமைதியைப் பாதுகாப்பதற்காக மாநில அரசுகளின் முழு வரம்புகளின்கீழ் இருக்கக்கூடிய அந்தத் துறையை நல்ல முறையில் மேலும் செயல்படுத்துவதற்கு மாநில அரசுகளுக்கு மைய அரசு மேலும் அதிக நிதியுதவி கொடுப்பதற்குப் பதிலாக தானே சட்டம் அமைதியைக் காக்கும் என மைய அரசு தனக்கென சொந்தக் கருவிகளை அவர்கள் தேடினார்கள். அதன் மூலம் தான் மத்திய ரிசர்வ் போலீஸ், எல்லைப் பாதுகாப்புப் போலீஸ், சி.ஐ.எஸ்.எஃப். என்ற தொழில் பாதுகாப்பு போலீஸ் என்ற பெயர்களில், மாநில அரசினுடைய முழு அதிகார வரம்பின் கீழ் இருக்கக்கூடிய லா அண்ட்ஆர்டரை மெயின்டெய்ன் பண்ணுவதற்கு அவர்களுக்கென்று தனியான கருவிகளை இந்தப் பெயர்களில் அவர்கள் உருவாக்கினார்கள். அதாவது மாநில அரசுகளின் அனுமதி பெறாமலேயே இந்தப் போலீசை மாநிலங்களுக்கு அனுப்பலாம் என்று 42-வது அரசியல் சட்ட திருத்தத்தின் மூலமாக இந்தப் போலீஸ் அமைப்பின் உண்மை நோக்கம் அம்பலமாயிற்று. சட்டம் அமைதித் துறையும் மைய அரசிடம் தான் இருக்கவேண்டுமென்று மறைந்த திரு. சஞ்சைகாந்தி அவர்கள் கூட நாடாளுமன்றத்தில் கூறியது இந்தப் பேரபாயத்தை மேலும் ஊர்ஜிதப்படுத்தி இருக்கின்றது. அது மட்டுமல்ல அந்த விவாதத்தின்போது அவர் குறிப்பிடுகின்ற போது மாநிலங்களுக்குத்தான் இன்றைக்கு அதிக அதிகாரங்கள் இருக்கின்றன என்றும் மையஅரசுக்கு இருக்கக்கூடிய அதிகாரங்கள் போதாது என்றும் ஆகவே மைய அரசின் அதிகாரங்களை இன்னும் அதிகமாக்கவேண்டும் என்றும் அவர் பேசி இருப்பதானது உண்மையிலே நம்நாடு பூராவும் சந்திக்கக்கூடிய ஒரு ஆபத்து என்று நான் கூற விரும்புகிறேன்.

[மாண்புமிகு பேரவை மாற்றுத்தலைவர் தலைமை]

கல்வித் துறை மாநிலத்தின் அதிகாரத்திலிருந்து கன்கரண்ட் லிஸ்டுக்கு மாற்றியமைக்கப்பட்டு விட்டது. அலுமினிய வினியோகத்தையும் இப்போது, மைய அரசு எடுத்துக் கொண்டு உள்ளது. மின் துறையையும் எடுக்கப்போவதாக ஒரு மைய அமைச்சர் அச்சுறுத்திக் கொண்டிருக்கிறார். குடிசை மாற்று வாரிய அதிகாரத்தைக்கூட எடுப்போம் என்று மத்திய அமைச்சர் திரு. சேத்தி அவர்கள் சமீபத்தில் அச்சுறுத்தியிருக்கிறார். நிலைமை எங்கே எப்படி கொண்டு போய் விட்டிருக்கிறது என்று சொன்னால். நம்மை மைய அரசின் உள்துறை செயலகத்தின் மேல்



பார்வையின்கீழ் செயல்படும் துறைகளாக, சபார்டினேட் டிபார்ட்மெண்டுகளாக செயல்படும் அபாய நிலைக்கு கொண்டு போய் விட்டிருக்கிறது. அதை நாம் அனுமதிக்கக் கூடாது என்று கூறிக் கொள்ள விரும்புகிறேன். சென்டிரல் கவர்ன்மெண்டினுடைய சபார்ட்டினேட் டிபார்ட்மெண்டுகளாக மாநில அரசுகள் செயல் படுவதை அனுமதிக்கலாமா?

அரசியல் சட்டத்திலே அதிகார ஒதுக்கீடு 3 விதமாக பிரிக்கப் பட்டு இருக்கிறது.

(1) முழுக்க முழுக்க மத்திய அரசின் அதிகார வரம்பிற்குட் பட்டது—யூனியன் லிஸ்ட்.

(2) மைய-மாநில அரசுகளின் பொது அதிகார வரம்பிற்கு உட்பட்டது—கன்கரண்ட் லிஸ்ட்.

(3) மாநில அரசுகளின் தனி அதிகார வரம்பிற்கு உட்பட்டது. ஸ்டேட் லிஸ்ட்.

அதில் மைய அரசின் அதிகார வரம்பிற்குள் 97 அயிட்டங்கள் அதிகாரங்களுக்கான பிரிவுகளாக விஷயங்களாக, அடங்கியிருக் கிறது. இரண்டிற்கும் பொதுவான அதிகார வரம்பிற்கு உட்பட்ட கன்கரண்ட் லிஸ்டிலே 47 அயிட்டங்கள் அதிகாரங்களாக கொடுக்கப்பட்டிருக்கின்றன. முழுக்க முழுக்க மாநில அரசுகளின் வரம்பில் இருக்கிற அயிட்டங்களாக 66 அதிகாரங்கள் கொடுக்கப் பட்டிருக்கின்றன. இந்த ஒதுக்கீடுகள் உண்மையிலேயே மைய அரசிற்கு உள்ள ஏராளமான அதிகாரங்களை மறைக்கக் கூடிய ஒரு ஸ்கீரினாகத்தான் இருக்கிறது. அவற்றை கவர் பண்ணியிருக் கிறது என்று தான் நான் சொல்ல விரும்புகிறேன்.

ஏனென்று சொன்னால், மைய அரசின் அதிகார வரம்பிற்கு உட்பட்டு இருக்கும் விஷயங்களில். சப்ஜெக்டுகளில் எந்த மாநில அரசும் எந்த சட்டத்தையும் இயற்ற முடியாது. முழுக்க முழுக்க அவைகள் அவர்களை சேர்ந்தது. ஆனால் கன்கரண்ட் லிஸ்டிலே இருக்கிற சப்ஜெக்ட்டுகளில், இரண்டுக்கும் பொதுவாக இருக்கிற மைய—மாநில அரசுகளுக்கு பொதுவான அதிகார வரம்பில் இருக்கிற அந்த 47 அயிட்டங்களில், மைய அரசும், சட்டம் இயற்றலாம், மாநில அரசும் சட்டம் இயற்றலாம் என்று இருக் கிறது

ஆனால் இதில் குறிப்பிட்டிருக்கிற ஒரு முக்கியமான விஷயம் என்னவென்று சொன்னால், இந்த கன்கரண்ட் லிஸ்டிலே இருக்கக்கூடிய விஷயங்களில் ஏதாவது ஒன்றில், மக்களால் தேர்ந் தெடுக்கப்பட்டிருக்கிற உறுப்பினர்களைக் கொண்டு, மாநில அரசு ஒரு சட்டம் இயற்றினால், அதே விஷயத்தில், அல்லது அதே

சப்ஜெக்ட்டில் மத்திய அரசும் சட்டம் இயற்றியிருந்தால், மாநில அரசின் சட்டம் மைய அரசின் சட்டத்திற்கு மாறுபட்டிருந்தால், அதை ஏற்க முடியாது. அதாவது மாநில அரசு இயற்றிய சட்டத்தை ஏற்க முடியாது என்று சொல்லக் கூடிய அதிகாரம் மைய அரசிற்கு இருக்கிறது. அப்படி என்றால் இது என்ன கண் துடைப்பு அதிகாரம்?

இப்படி ஒரு விஷயத்திலே, மத்திய அரசும், மாநில அரசும் முரண்பட்டு சட்டம் இயற்றியிருந்தால், முடிவான அதிகாரம் அவர்கள் கையில் இருக்கிறது என்பது ஒன்று. அந்த விஷயத்திலே மைய அரசு சட்டமே இயற்றாமல் இருந்தால், மாநில அரசு மட்டுமே சட்டம் இயற்றியிருந்தால், அப்படி மாநில அரசு இயற்றிய சட்டம் மத்திய அரசுக்கு பிடிக்காவிட்டால், மாநில அரசு இயற்றிய சட்டத்தை அங்கீகரிக்காத ஒரு நிலையும் கூட, ஒரு அதிகாரமும் கூட அவர்களுக்கு இருக்கிறது என்பது இன்னொன்று.

உதாரணத்திற்கு சொல்ல வேண்டுமானால், மேற்கு வங்காளத்திலே இருக்கிற கம்யூனிஸ்ட் சர்க்கார் அப்படி ஒரு நடவடிக்கையை எடுத்தபோது, காங்கிரஸ் ஆட்சி அதை அனுமதிக்க மறுத்தது. (Interruption) We are talking about the whole Nation and I am proud that West Bengal and Kerala have taken up the case very strongly.

அதாவது கன்கரண்ட் லிஸ்டில் லேபர் இருக்கிறது. அந்த லேபர் என்கிற சப்ஜெக்டில், தொழிலாளர்கள் சச்சரவில் பார்கைனிங் ஏஜண்ட் என்று, அதாவது பேரம் பேசக்கூடிய தொழிலாளர்களின் பிரதிநிதி பேலட் முறையிலே தேர்ந்தெடுத்து நிர்ணயிக்சப்பட வேண்டும் என்று ஒரு சட்டத்தை மேற்கு வங்காள அரசு இயற்றி, அது கன்கரன்ட் லிஸ்டில் இருக்கிற காரணத்தினால் மத்திய அரசுக்கு அனுமதிக்காக அனுப்பியது. மத்திய அரசு அதை அங்கீகரிக்க மறுத்து விட்டது. ஏன் மறுத்து விட்டார்கள். தொழிலாளர்களின் பிரதிநிதியை ஓட்டுமுறையில் நிர்ணயம் செய்ய வேண்டும் என்று நீண்ட நாட்களாக ஐ.என்.டி.யூ.சி. சங்கம் விடாமல் வற்புறுத்திக் கொண்டு வருகிறது. பழைய முறையை எதிர்த்து வருகிறது. ஆகவே காங்கிரஸ் கட்சியினரும் அதை தங்களுக்கு எதிரான கொள்கையாக பாவித்து அந்தச் சட்டத்தை ஏற்றுக் கொள்ள மறுத்திருக்கிறார்கள். அதை எதிர்த்திருக்கிறார்கள்.



[முற்பகல் 11.10]

ஆகவே, தொழிலாளி வர்க்கத்திற்கு இப்படி செய்வோம் என்று வாக்குறுதி அளித்து அந்த வாக்குறுதியின் அடிப்படையில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு அரசாங்கம் வந்து கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றுகிற விதத்தில் ஒரு சட்டத்தை நிறைவேற்றுகிறபோது அந்தக் கொள்கையைப் பிடிக்காத ஒரு அரசியல் கட்சி மத்தியில் இருந்தால் அந்த அரசியல் கட்சி அதை மறுப்பது என்ற ஒரு நிலை எங்கே கொண்டுபோய் விடுகிறது என்று சொன்னால் காங்கிரஸ் கட்சியின் கொள்கைகளைத்தான் மாநிலங்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட மற்ற கட்சிகள் அமுல்படுத்த வேண்டும் என்ற நிலையை ஏற்படுத்தும். அதற்காகவா நாம் தேர்தலில் நின்றோம்? காங்கிரஸ் கட்சியின் தேர்தல் அறிக்கையில் சொல்லப்பட்டுள்ளதை அமல்படுத்துவோம் என்று சொல்லியா நாம் மக்களின் வோட்டுக்களை வாங்கினோம்? இல்லை. அந்தந்தக் கட்சியின் தேர்தல் அறிக்கையின் அடிப்படையில் மக்களின் வாக்குகளைப் பெற்று வருவதற்குத்தான் அரசியல் அமைப்புச் சட்டம் வழி ஏற்படுத்தியிருக்கிறது. மக்களின் வாக்குகளைப் பெற்று ஒரு கட்சி ஆட்சிக்கு வரும்போது சட்டம் கொண்டு வந்தால் அதை மத்தியில் இருக்கிற கட்சியின் ஆட்சி மறுக்கிறது என்றால் மத்தியில் இருக்கிற ஆட்சியின் கட்சிக் கொள்கைகளைத்தான் மாநில மக்களின் தலையில் திணிக்க அது இடமளிக்கிறது. (குறுக்கீடு)

I am not yielding. He did not yield to my Leader Mr. Sankariah There was a convention between us. But he broke the convention. So, I won't yield.

ஆகவே, இருவருக்கும் பொதுவான அதிகார வரம்பு உடைய லிஸ்ட் கண்கரன்ட் லிஸ்ட். மாநிலங்களைப் பொறுத்தவரையில் கண்கரன்ட் லிஸ்ட் என்பது கானல் நீராகும். ஆக, எவ்வளவோ விஷயங்கள் இருக்கின்றன. மைய அரசின் வரம்பிற்குள் எவ்வளவோ விஷயங்கள் இருக்கின்றன. யூனியன் லிஸ்டில் உள்ளவை 97. கண்கரன்ட் லிஸ்டில் இருப்பது 47. ஆக, 144 ஐட்டங்கள். அதிகாரக் குவியல் இருக்கிறது என்பதைக் காட்டுவதற்காகத்தான் இதைச் சொல்கிறேன். மொத்தம் 210 ஐட்டம்ஸ் இருக்கின்றன. அதில் 144 ஐட்டம்ஸ் மைய அரசின் வரம்பில் உள்ளது என்பது பொருள்.

முழுக்க முழுக்க மாநில அரசின் வரம்பிற்குள் உள்ள அதிகாரங்கள் என்ன? கண்கரன்ட் லிஸ்ட் என்றிருக்கிறது ஸ்டேட் லிஸ்ட் என்றிருக்கிறது இந்த அவை ஒரு சட்டத்தை இயற்றினால் இது இங்கே இயற்றப்பட்ட பிறகு, மேலவையில நிறைவேற்றப் பட்ட பிறகு அதை சட்டமாக அங்கீரிக்கப்பதற்கு கவர்னரது அங்கீகாரத்திற்கு அனுப்ப வேண்டும். அவர் நாம் இயற்றிய

சட்டத்தை நிராகரித்து அவர் விரும்பும் முறையில் திருத்தி திருப்பி நமக்கே அனுப்புவதற்கு கவர்னருக்கு அதிகாரம் அரசியலமைப்பு சட்டத்தில் உண்டு. நான் கேட்கிறேன். தேர்ந்தெடுக்கப்பட்ட இந்த அவை தனது வரம்பிற்குட்பட்ட அதிகாரப்படி ஒரு சட்டத்தை இயற்றுமானால் தேர்ந்தெடுக்கப்படாத ஒரு தனி நபர், மைய அரசால் நியமனம் செய்யப்பட்டு பதவியில் இருக்கக்கூடிய ஒரு நபர் அதை மறுப்பதற்கு அந்தப் பதவிக்கு அல்லது அந்த நபருக்கு என்ன அருகதை? (குறுக்கீடு)

I am not yielding. So long as he does not change his policy; I also will not change.

தேர்ந்தெடுக்கப்பட்ட இந்த அவை அதன் அதிகாரத்திற்கு உட்பட்டிருக்கக்கூடிய லிஸ்டிலுள்ள சப்ஜெக்ட்ஸ் பற்றி ஒரு சட்டம் நிறைவேற்றினால் நேர்ந்தெடுக்கப்படாத ஒரு நபருக்கு இது சரிப்படாது என்று மறுத்து ரீகன்ஸிடர் செய்யச் சொல்ல என்ன அதிகாரம் அவருக்கு இருக்கிறது? இந்த அவையை விட, கவர்னர் பதவி என்பது தேர்ந்தெடுக்கப்பட்ட இந்த அவையை விட மேலானதா என்று கேட்கிறேன்.

மக்களைப் பொறுத்தவரையில் இப்படிப்பட்ட நிலை நீடித்தால் மக்கள் கதி என்ன? அவர்கள் வோட்டு போட்டு என்ன பிரயோஜனம்? மக்கள் வோட்டு போட்டு அனுப்பி இந்த அவையின் அதிகாரத்திற்கு உட்பட்ட விஷயத்திற்கு கவர்னர் அனுமதி பெற வேண்டுமென்று சொன்னால் எப்படி?

கவர்னர் விரும்பினால் நம் அதிகாரவரம்பிற்கு உட்பட்டு நாம் இயற்றுகிற சட்டத்தை ஜனாதிபதியின் பரிசீலனைக்கு அனுப்பலாம். நம் அதிகாரத்திற்கு உட்பட்டுள்ளதை அவர் ஜனாதிபதிக்கு ரெஃபர் செய்கிறேன் என்று சொல்லி அனுப்பலாம். இங்கே காங்கிரஸ் கட்சி மைனாரிட்டி. ஆனால் மத்தியில் அவர்கள் கட்சி மெஜாரிட்டியாக இருக்கிறது. இங்கே மைனாரிட்டியாக இருக்கிற கட்சி அங்கே மெஜாரிட்டியாக இருந்து ஆட்சி நடத்துகிறது.

இங்கே காங்கிரஸ் கட்சி மைனாரிட்டியாக இருக்கிறது. ஆனால், இங்கே நாம் இயற்றக்கூடிய சட்டத்தை, மத்திய அரசிலே அந்தக் கட்சி மெஜாரிடியாக இருக்கின்ற காரணத்தினால் அந்தச் சட்டத்திற்கு பிரசிடென்ட் அனுமதி கொடுப்பதைத் தாமதப்படுத்தலாம் அல்லது காங்கிரஸ் கட்சியின் திருத்தத்துடன் இங்கே மைனாரிடி கட்சியாக இருக்கக்கூடியவர்கள் சொல்லக்கூடிய திருத்தத்துடன் அங்கே இருந்து நமக்கு ரெஃபர் பண்ணலாம். அது மட்டுமல்ல, அந்த திருத்தத்தை ஏற்றுக்கொண்டால் அனுமதி தருகிறோம் என்ற நிலையை பிரசிடென்ட் எடுக்கலாம் அல்லது அனுமதி மறுக்கலாம் என்கிற நிலை இருப்பது உங்களுக்குத் தெரியும்.



நிலச் சீர்திருத்தம் என்பது உங்களுக்குத் தெரியும். இது எக்ஸ்குளுசிவ்லிஅண்டர் தி ஸ்டேட் லிஸ்ட். நிலச் சீர்திருத்தம் என்பது மாநில அவையின் அதிகாரத்திற்குள் வருவது உங்களுக்குத் தெரியும். 1957 ஆம் ஆண்டு கேரள மாநில அவையில் ஒரு நிலச் சீர்திருத்தச் சட்டத்தை இயற்றினார்கள். லாண்ட் ரிபார்ம்ஸ் ஆக்ட். அதற்கு மைய அரசு $1\frac{1}{2}$ ஆண்டுகளாக அனுமதி தர வில்லை. என்னமோ, 20 அம்சத் திட்டம் ஏழை விவசாயிகளுக் காக போடப்பட்ட சட்டத்தைவிட, பெத்த பெத்த திட்டம் என்று சொல்லப்படுகிறது. இந்த 20 அம்சத் திட்டத்தைப் பற்றி பேசக் கூடிய கட்சிக்கு இதை அனுப்பினார்கள். ஆனால், அந்தக் கட்சி தங்களுடைய அதிகாரத்தைப் பயன்படுத்தி $1\frac{1}{2}$ ஆண்டுகளாக அதற்கு அனுமதி கொடுக்க மறுத்தார்கள். பிறகு எப்படி அனுமதி கொடுத்தார்கள்? பெரிய கிளர்ச்சி நடத்தப்பட்டது. கேரளாவில் அந்த சட்டத்தை ஆதரித்து நிறைவேற்றிய அத்தனை கட்சிகளும் ஒன்றுபட்டு, எல்லோரும் பிரம்மாண்டமான கிளர்ச்சி நடத்தியபிறகுதான் அனுமதி தந்தார்கள் என்பதைச் சொல்ல விரும்புகிறேன். இதிலிருந்து நீங்கள் புரிந்துகொள்ள வேண்டியது, நமக்கு என்று ஒதுக்கிவைத்துள்ள அதிகாரத்திலே கூட பரம அதிகாரம் நமக்கு இல்லை என்பதை நாம் உணரவேண்டும்.

இன்னொரு புரொவிஷன் கான்ஸ்டிடியூஷனிலே இருக்கிறது. 'டைரக்டிவ்' என்ற ஷரத்து இருக்கிறது. அதாவது கட்டளை. மத்திய அரசு நமக்கு அப்படி ஒரு டைரக்டிவை, கட்டளையை அனுப்பலாம் என்ற சட்டம் இருக்கிறது. இதை காங்கிரஸ் பார்டி எப்படி மிஸ்-யூஸ் பண்ணுகிறது என்று சொன்னால் மாநிலத்தில் ஒரு கட்சி, மத்தியிலே இன்னொரு கட்சி என்றிருந் தால், இருவருக்கும் கொள்கை வித்தியாசம் இருக்கிறது. மத்தி யிலே இருக்கக்கூடிய அரசியல் கட்சி தன்னுடைய கொள்கைகளை மாநிலத்திலே இருக்கக்கூடிய அரசியல் கட்சியின் மீது திணிப்பதற்கு இந்த, டைரக்டிவ்'வை துர் உபயோகம் செய்கிறது, இந்த ,டைரக்டிவ்'வை சட்டத்திலே இருந்து எடுக்கவேண்டும்.

1968 ஆம் ஆண்டு மத்திய சர்க்கார் ஊழியர்கள் ஒரு நாள் வேலை நிறுத்தம் செய்வதென்று முடிவு செய்தார்கள். வேலை நிறுத்தம் சம்பந்தமாக அப்போது கேரளாவிலே இருந்த கூட்டணி அரசாங்கம் ஒரு அப்ரோச் எடுத்தது. மத்தியிலே இருக்கக்கூடிய காங்கிரஸ் கட்சியின் அணுகுமுறை ஒன்று. ஆக இரண்டும் மாறுபட்டது. கேரள அரசாங்கத்தின் பார்வை என்னவென்று சொன்னால், தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தை அனுமதிப் பது; அதற்காக தடுப்புக் காவல் சட்டத்தை உபயோகப்படுத்தக் கூடாது என்பது. ஆனால், மத்திய அரசாங்கத்தின் கொள்கை அந்த ஒரு நாள் வேலை நிறுத்தத்தை உடைப்பது; அதற்கு

தடுப்புக் காவல் சட்டத்தை உபயோகித்து கைது செய்வது என்பது. இது அவர்களுடைய அணுகுமுறை. They are justified to have their own approach. But we do not agree with them. இதைக் கேரள அரசாங்கம் ஒப்புக் கொள்ளவில்லை. தடுப்புக் காவல் சட்டத்தை உபயோகப்படுத்த மாட்டோம் என்று சொன்னார்கள். அதற்கு மத்தியில் இருந்து மிரட்டல் வந்தது. ஈ.எம்.எஸ். நம்பூதிரிபாட் அவர்களுக்கு ஒரு டைரக்டிவ்வை அனுப்பினார்கள். மீறினால் தகுந்த நடவடிக்கை எடுப்போம் என்றார்கள். அப்படியென்றால் மறைமுகமாக டிஸ்மிஸ் செய்வோம் என்று அர்த்தம். ஆனால், அதற்கு சீப் மினிஸ்டர், டிஸ்மிஸ் பண்ணினாலும் பரவாயில்லை, ஜனங்கள் எந்தக் கொள்கைக்காக எங்களைத் தேர்ந்தெடுத்தார்களோ, அந்தக் கொள்கைக்காக நிற்போம் என்று உறுதியாகச் சொன்னார்கள். ஆனால் அந்தச் சட்டம் அப்போது உபயோகப்படுத்தவில்லை.

இதே மாதிரி, இப்போது இருக்கிற இந்திரா காங்கிரஸ் அரசாங்கத்திலே, 'கள்ள மார்க்கெட், ஹோர்டிங்'. இது சம்பந்தமாக இரண்டுவிதமான அணுகுமுறை உண்டு. எங்களைப் பொறுத்தவரையில், எங்களுடைய அணுகுமுறை என்னவென்று சொன்னால்,

[முற்பகல் 11·20]

எங்களுடைய அணுகுமுறை—கள்ள மார்க்கட்டுக்கு எதிராக, ஹோர்டிங்குக்கு எதிராக பல லட்சக்கணக்கான மக்களை எல்லாக் கட்சியினரும் சேர்ந்து மொபிலைஸ் பண்ண வேண்டும். வெகுஜன ஸ்தாபன ஒத்துழைப்போடு அதிகாரிகள் 'டிஹோர்டிங்' நடவடிக்கை எடுக்கவேண்டும். இரண்டாவது, டிஸ்ட்ரிப்யூஷன் சிஸ்டத்தைப் பலப்படுத்த வேண்டும். மூன்றாவது, இருக்கிற சட்டங்களைப் பயன்படுத்தி ஹோர்டிங் செய்பவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும். யார் யார் கள்ளமார்க்கெட்காரர்கள் என்று பார்த்து அவர்கள் மீது நடவடிக்கை எடுத்துக் கொள்ளவேண்டும். இதுதான் சட்டசபைத் தேர்தலில் இடதுசாரி கொடுத்த வாக்குறுதிகள்.

'Preventive Detention Act,—தடுப்புக் காவல் சட்டம் எந்தக் காரணத்திற்காகவும் யாருக்கு எதிராகவும் உபயோகப்படுத்தக் கூடாது. 'ஆன் பிரின்சிபிள்' அதைக் கூறுகிறோம். ஒரு பிரஜை குற்றம் செய்தால் கோர்ட்டில் கொண்டு போய் நிறுத்தி தண்டனை கொடுக்க நடவடிக்கை எடுக்கவேண்டுமே தவிர, எந்தவித விசாரணையும் இல்லாமல் ஒருவரை சிறையில் அடைக்க மாட்டோம் என்று வாக்குறுதி அளித்து அதன் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறோம். ஆனால் காங்கிரஸ் கட்சியின் பார்வை வேறு.—



Strengthening distribution system ஒன்றுதான் இருக்கிறது.

Our principle is to take popular action with the co-operation of the officials.

எங்கள் கட்சி இருக்கிற சட்டத்தை வைத்துத்தான் நடவடிக்கை எடுப்போம்.' தடுப்புக் காவல் சட்டத்தைப் பயன்படுத்த மாட்டோம் என்று சொன்ன நேரத்தில் எத்தனை மத்திய அமைச்சர்கள் அந்த மாநிலத்திற்குச் சென்று மிரட்டினார்கள். அதை உபயோகப்படுத்தவில்லை என்றால் கட்டாயமாக நடவடிக்கை எடுக்க வேண்டியிருக்கும் என்றார்கள். ஆனால் அந்த அரசாங்கம் உறுதியாக அந்த விஷயத்தில் நின்றது என்று சொல்ல விரும்புகிறேன். எதற்காகச் சொல்லுகிறேன் என்றால் பி.டி. ஆக்ட் என்பது மத்தியில் பாஸ் பண்ணியது. அது——

After all it is an enabling measure மாநில அரசு விரும்பினால் உபயோகப்படுத்தலாம், விரும்பவில்லை என்றால் உபயோகப்படுத்த வேண்டியதில்லை. ஆனால் அது எனேப்லிங் மெஷராகவா இருந்தது? அது கடந்த காலத்தில் எப்படி தவறாக உபயோகப்படுத்தப்பட்டது என்பது தெரியும். சட்டப்படி ஃபஸ்ட் லிஸ்ட், செகண்ட் லிஸ்ட் தேர்டு லிஸ்ட், என்றெல்லாம் வைத்திருப்பது மத்தியில் அதிகாரக் குவியல் காரணமாகத்தான். மாநிலத்தில் உள்ள அந்த மக்களுக்கு எந்த வாக்குறுதிகளை அளித்து அவர்கள் அதிகாரத்திற்கு வந்தார்களோ அந்த மாநில மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதிகளை மீறக்கூடிய நேர்மாறான முறையிலே மத்திய அரசாங்கம் தன்னுடைய கொள்கையைத் திணிக்கக்கூடிய அந்தப் பாதையில் போய்க் கொண்டிருக்கிறார்கள். மத்திய அரசு மாநில அரசுகளின் அதிகார வரம்புகள்—Central and State Governments தெளிவாக அரசியல் சட்டத்தில் வரையறுக்க வேண்டும். கிளியராக இருக்கவேண்டும். எங்கள் கருத்துப்படி 'கன்கரண்ட் லிஸ்ட்'— இருவருக்கும் பொது அதிகார வரம்பு என்று இருப்பதை எடுத்து விட வேண்டும். — No concurrent list.

மத்திய அரசு தன்னுடைய முழு அதிகாரத்தை பாதுகாப்பு, வெளிநாட்டுக் கொள்கை, ரயில், விமானம் போன்ற போக்குவரத்துகள், தபால், தந்தி, கரன்சி நோட்டு அச்சடிப்பது—கள்ள நோட்டு அல்ல, நல்ல நோட்டு— வெளிநாட்டு வியாபாரம் உட்பட பொருளாதார வளர்ச்சித் திட்டங்களை இணைப்பது—co-ordination of Planning by various States, ஆகியவற்றை வைத்து கொள்ளலாம். இந்த அதிகாரங்கள் மட்டுந்தான் மத்திய அரசின் வரம்பில் இருக்கவேண்டுமென்று நாங்கள் கருதுகிறோம். இந்த அதிகாரங்கள்தான் மத்திய அரசின் அதிகார வரம்பில் இருக்க வேண்டுமென்று நாங்கள் கருதுகிறோம். அதே சமயத்தில் ஒரு

மாநிலச் சம்பந்தப்பட்ட தொழில்கள், மின்சாரம், பாசனத் திட்டங்கள்—— cutting across States என்ற நிலைமை இருந்தால் அந்தக் குறிப்பிட்ட ஐட்டங்கள் அவர்களுடைய வரம்பில் இருக்கலாம். ஆனால் அது சம்பந்தப்பட்ட திட்டங்கள் ஃபைனலைஸ் ஆன பிறகு அந்தந்தத் திட்டங்களை அந்தந்த மாநிலங்களே அமல் நடத்தும் அதிகாரம் நிச்சயமாக மாநில அரசாங்கங்களுக்கு தான் இருக்க வேண்டுமே தவிர மத்திய அரசுக்கு இருக்கக்கூடாது.

இதைத்தவிர மற்ற அதிகாரங்கள், அதாவது மத்திய அரசுக்கு என்று ஒதுக்கப்பட்டு இருக்கிற அந்த அயிட்டங்களைத் தவிர மற்ற அதிகாரங்கள், முழுவதும் மாநிலங்களுடையதாக இருக்க வேண்டும். வரையறுக்கப்படாத அதிகாரம் ஏதாவது இருந்தால் அதாவது ரெஸ்டியுவரி பவர்ஸ்—தங்களுக்குக் கூட அப்படிப்பட்ட ரெஸிடியுவரி பவர்ஸ் இருக்கிறது—இருந்தால், அப்படிப்பட்ட வரையறுக்கப்படாத மிச்ச அதிகாரம் இருந்தால்—— இன்றைக்கு அந்த அதிகாரம் மத்திய அரசிடத்திலே அரசியல் சட்டத்தின்படி இருக்கிறது—அது கூடாது. அந்த அதிகாரம் மாநில அரசுக்குத்தான் இருக்கவேண்டும்.

இப்படி வரையறுக்கப்பட்ட பிறகு மாநிலங்கள் சட்டமியற்றும் அதிகாரத்திலே மத்திய அரசு தலையிடக்கூடாது. அப்படித் தலையிடுகிற முறையிலே கவர்னருக்கும், ஜனாதிபதிக்கும் அதிகாரம் அளிக்கக்கூடிய விதிகள் 200, 201 ஆகியவை அரசியல் சட்டத்திலிருந்து நீக்கப்பெறவேண்டும்.

தேசிய நலனுக்காக மாநில அரசு பட்டியலிலே உள்ள அந்த சப்ஜெக்டிலே மத்திய அரசு சட்டமியற்றலாம் 'இன் தி நேஷனல் இன்டரஸ்ட், என்று கொடுக்கப்பட்டிருக்கிற விதி இருக்கிறது அதையும் எடுத்து விட வேண்டும் என்பதை நான் வற்புறுத்த விரும்புகிறேன்.

அதேபோல் மத்திய அரசின் அதிகார வரம்பில் மாநிலங்கள் தலையிடக் கூடாது. வரையறுக்கப்பட்ட பிறகு States also should not encroach.

<u>மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. சி. வி. வேலப்பன்)</u> : சீக்கிரம் முடிக்கவேண்டும், 14 பேர்கள் பெயர் கொடுத்திருக்கிறார்கள்.

<u>திரு. ரா. உமாநாத்</u> : நான் தான் 'மூவர்' பேசவேண்டும் பி.ஏ.சி.யில் அடுத்த வியாழக்கிழமையும் இந்த விவாதத்தை வைத்துக்கொள்ளலாம் என்று முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, எல்லோரும் ஃப்ரீயாகப் பேசலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



மத்திய அரசுக்கு என்று ஒதுக்கப்பட்ட அதிகாரங்கள் வரையறுக்கப்பட்ட பிறகு மத்திய அரசு அதிலே செயல்படுவதற்கு மாநில அரசுகள் அதைப் பலப்படுத்த வேண்டும், சகல ஒத்துழைப்பையும் கொடுக்கவேண்டும் என்பது எங்களுடைய கருத்து.

திட்டங்கள் வகுப்பது சம்பந்தமாக நாடு பூராவும் ஏற்றதாழ்வு இல்லாத வளர்ச்சித் திட்டங்கள் உருவாக்கப்பட வேண்டுமானால் அந்த அந்த மாநில அரசுகள் தங்களுடைய மாநிலங்களின் இயற்கை வளங்களையும் மனித சக்தியையும் அதிக பட்சமாகப் பயன்படுத்தும் வகையிலே அந்த அந்த மாநில அரசுகளே கணக்கிட்டு திட்டங்களை முதலிலே வகுக்கவேண்டும். பிறகு அவற்றை திட்டக் கமிஷனும் தேசிய அபிவிருத்திக் கவுன்சிலும் விவாதித்து ஒருங்கிணைக்க, கோஆர்டினேட் பண்ண வேண்டும். ஆனால் இன்றைக்கு உள்ள நிலைமையில் அப்படி இல்லை. ஆகவே தான் எல்லா மாநிலங்களுக்கும் மத்திய அரசுக்கும் பிரதிநிதித்துவம் அளிக்கக்கூடிய முறையிலே தேசிய அபிவிருத்தி கவுன்சில் திட்டக் கமிஷனை உருவாக்க வேண்டுமென்று நாங்கள் கூறுகிறோம். இப்போது திட்டக் கமிஷன் மத்திய அரசினுடைய எக்ஸிகியூடிவினுடைய ஆர்டரால் அமைக்கப்படுகிறது. தேசிய அபிவிருத்திக் கவுன்சிலில் எல்லா மாநில அரசுகளுக்கும் பிரதிநிதித்துவம் கொடுத்து அது தான் திட்டக் கமிஷனை உருவாக்கவேண்டுமென்று நாங்கள் சொல்கிறோம். என்.டி.சி. நிர்ணயிக்கும் வழிகாட்டுதலின் அடிப்படையில்தான் திட்டக் கமிஷன் மாநிலத் திட்டங்களை கோஆர்டினேட் செய்ய வேண்டுமென்பது எங்களுடைய கருத்து. அப்படி ஜனநாயக ரீதியில் இல்லாமல் மத்திய அரசிலிருந்து திணிக்கப்பட்ட திட்டங்களாக இப்போது இருந்துகொண்டிருக்கிறது. அதன் விளைவு என்ன? சென்ரல் கவர்ன்மென்ட் ஓவர்ஆல் பிளான் தயார் பண்ணுகிறார்கள். புரடக்ஷன், டார்கட் எல்லாம் தயார் செய்கிறார்கள். அதற்குப் பிறகு மாநில அரசுகள் தயாரிக்கிறார்கள். அப்படி இருக்கக்கூடாது. பேசிக்கலி இங்கிருந்து அங்கே போகவேண்டும். அதுதான் முறை. 30-4-80 இந்துஸ்தான் டைம்ஸ் பத்திரிகையிலே ஒரு விசேஷ கட்டுரை வந்திருக்கிறது. அதை நான் படிக்கிறேன். எல்லாத் திட்டங்களுக்கும் ஒரு பொதுவான அம்சம் தெரிகிறது. அதாவது அந்தத் திட்டங்கள் அனைத்தும் தோல்வி அடைந்ததுதான் பொது அம்சம். இரண்டாவது திட்டம் முதல் ஒவ்வொரு திட்டத்திலும் போட்ட குறிக்கோளுக்கும் அடைந்த குறிக்கோளுக்கும் மிகப்பெரிய இடைவெளி இருக்கிறது. குறிக்கோள் அளவு வீழ்ச்சி தான் அடைந்திருக்கிறது. எங்களுடைய எக்ஸ்பிரியன்ஸ் இதுதான். அதை அந்தப் பத்திரிகையிலே பொருத்தமாகச் சொல்லியிருக்கிறார்கள். திட்டங்கள் கீழே இருந்து போடப்பட்டு மேலே இருந்து கோஆர்டினேட் செய்யப்பட வேண்டும்.

[திரு. ரா. உமாநாத்] [1980 ஜூலை 31

[முற்பகல் 11-30]

அதேபோல் திட்டம் நிறைவேற்ற நிதி ஆதாரம் சம்பந்தமாக எடுத்துக்கொண்டால் ஒரு முக்கியமான விஷயம். அந்தக் கயிற்றை வைத்துக் கொண்டுதான் மத்திய அரசாங்கம் மற்ற கட்சி ஆட்சியிலுள்ள மாநிலங்களை நிர்ப்பந்தப்படுத்தி இழுக்கிறார்கள். ஆகவே, நாங்கள் கூறுவது, மைய அரசு எல்லா வகையிலும் வசூல் செய்யும் வருமானத்தில் through all the sources 75 சதம் தொகையை மாநிலங்களுக்கு என்று ஒதுக்க வேண்டும். மீதித் தொகையை--25 சதத்தைத்தான் மத்திய அரசாங்கம் வைத்துக் கொள்ள வேண்டும். இப்பொழுதுள்ள அரசியல் சட்டத்திட்டப் படி. ஃபைனான்ஸ் கமிஷனுக்கு உள்ள பொறுப்பு என்னவென்றால் வசூல் செய்வதில் மைய அரசுக்கு எவ்வளவு கொடுப்பது, மாநில அரசாங்கங்களுக்கு எவ்வளவு கொடுப்பது என்பது அந்த வேலை ஃபைனான்ஸ் கமிஷனுக்கு இருக்கக் கூடாது. மைய அரசுக்கும் மாநில அரசுகளுக்கும் எவ்வளவு என்று பிரிப்பது ஃபைனான்ஸ் கமிஷனின் அதிகாரத்தில் இருக்கக் கூடாது. 75% for the States, 75 சதம் மாநில அரசாங்கங்களுக்கும் 25 சதம் மத்திய அரசாங்கத்திற்கும் என்று ஒதுக்கிய பிறகு, ஃபைனான்ஸ் கமிஷனின் வேலை என்னவாக இருக்கவேண்டு மென்றால், மாநிலங்களுக்கு என்று ஒதுக்கப்பட்ட 75 சதத்தைப் பல்வேறு மாநிலங்களுக்கிடையில் எப்படிப் பிரிப்பது என்ற நார்ம்ஸ்--வரையறைகளை உருவாக்கி, அதன் அடிப்படையிலே மாநிலங்களுக்கு எப்படிப் பிரித்துக் கொடுப்பது என்ற வேலை தான் இருக்க வேண்டும். இதற்குத் தகுந்த முறையில் அரசியல் சட்டத்தில் ஃபைனான்ஸ் கமிஷனுடைய பவரைக் குறைப்பதற் கான வழிமுறைகளைக் கொண்டு வர வேண்டும்.

இன்று மாநிலங்களில் செயல்படும் ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ்., போன்ற அனைத்திந்திய சர்வீசுகளை மைய அரசு துர்உப யோகப்படுத்துகிறது. மாநிலங்களில் செயல்படும் ஐ,ஏ.எஸ்., ஐ.பி.எஸ்,, அதிகாரிகள் தப்பு அல்லது குற்றம் செய்தால் அவர்கள் மீது நடவடிக்கை எடுப்பதற்கான அதிகாரம் மாநில அரசாங்கத்திற்குக் கிடையாது. மைய அரசிடம்தான் அந்த அதிகாரம் இருக்கிறது. அந்த அதிகாரிகள் மாநில அரசாங்கத்தில் தான் வேலை செய்கிறார்கள். அவர்கள் தவறு செய்தால் நடவடிக்கை-என்கொயரி செய்து நடவடிக்கை எடுப்பதற்கான அதிகாரம் மாநில அரசாங்கத்திற்குக் கிடையாது. ஏனென்று சொன்னால் அந்த சர்வீஸ் மத்திய சர்வீஸ். அவர்கள் மாநிலங் களில் வேலை செய்வார்கள், ஆனால் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கின்ற அதிகாரம் மத்திய அரசாங்கத்திடம்தான் இருக்கிறது. இந்த அதிகாரம், மத்திய அரசாங்கம் அந்த அதிகாரிகளைத் துர்உபயோகப்படுத்துவதற்குப் பயன்படுகிறது.



1980 ஜூலை 31] [திரு. ரா. உமாநாத்[

சமீபத்திலேகூடப் பார்த்தோம், ஒரு பெரிய பிரச்னை வந்தது. கேரளாவில் ஒரு மத்திய அமைச்சர் போய், சட்டம் அமைதி என்று மத்திய அமைச்சர் போய் அங்கே உள்ள முதலமைச்சரைப் பார்க்கவில்லை, போலீஸ் அமைச்சரைப் பார்க்கவில்லை, யாரையும் பார்க்காமல் Behind the backs of the Government தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கத்திற்குப் பின்னால் அங்கேயிருக்கும் ஐ.பி.எஸ். அதிகாரிகளோடு தனியாக போய்ப் பேச்சு வார்த்தை நடத்தி வந்திருக்கிறார்கள். இது என்ன ஏற்பாடு? தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கங்களைக் கவிழ்ப்பதற்கான சரியான கருவிதானே, அதிகாரத்தைத் துர் வினியோகம் செய்கின்ற முறை தானே அது? அங்கே யிருக்கின்ற முதலமைச்சர்கூட ப்ரொட்டஸ்ட் செய்தார் எனவே, இந்த நிலைமைகளைத் தடுப்பது எப்படி? மைய அரசுப் பணிகளுக்கு யூனியன் சர்வீஸ் என்று தனியாக இருக்க வேண்டும்; மாநில அரசுகளுக்கு மாநில சர்வீஸ் என்று தனியாக இருக்க வேண்டும். இப்படித் தனித்தனியாக வைத்து ரெக்ரூட் செய்ய வேண்டும். அந்தந்த சர்வீஸ்களைக் கட்டுப் படுத்துகின்ற அதிகாரம் அந்தந்த அரசாங்கங்களுக்குத் தான் இருக்க வேண்டும். யூனியன் சர்வீஸைக் கட்டுப்படுத்துவதற்கான அதிகாரத்தை மைய அரசு வைத்திருக்க வேண்டும்; ஸ்டேட் கவர்ன்மெண்டில் உள்ள ஸ்டேட் சர்வீசுக்கு ரெக்ரூட் செய்யப் பட்டவர்களைக் கட்டுப்படுத்துகின்ற அதிகாரம் அந்தந்த ஸ்டேட்டுகளுக்கு இருக்க வேண்டும். அந்த மாதிரி செய்ய வேண்டும்.

மாநில அரசையோ, சட்டப் பேரவையையோ கலைப்பதற்கு மைய அரசுக்கு அதிகாரமளிக்கும் விதிகள் 356, 357 பூரணமாக நீக்கப்பட வேண்டும். அதேமாதிரி, 360, அதிலே

Threat to financial stability

அதாவது, நிதித் துறை நிலையிலே ஆபத்து ஏற்பட்டதாக ஜனாதிபதி கருதினால் தலையிடலாம் என்று அதிகாரம் இருக்கிறது. இதெல்லாம், Democracy—ஐ Suppress பண்ணு வதற்கு, மக்களின் வாக்குரிமைக்குள்ள மதிப்பை உடைக்கவும், அடைக்கவும்தான் இருக்கிறதே தவிர, வேறொன்றும் அல்ல.

கடந்த கால அனுபவத்தைக்கொண்டு பார்த்தால், நேரு காலத்திலே, 1957-இலே அங்கே எங்கள் சர்க்காரிலே ஆரம்பித் தார்கள், அதற்கு திறப்பு விழா அப்பொழுது நடந்தது. அப்படிப்பட்ட மிஸ் யூஸ் அதற்குப் பிறகுதான் பல்வேறு மாநிலங்களுக்குப் போனது.

இந்த மாநிலத்திலே. தேர்ந்தெடுக்கப்பட்ட திராவிட முன்னேற்றக் கழக அரசாங்கத்தை, 1976ஆம் ஆண்டு அவர்கள் டிஸ்மிஸ் செய்தார்கள். இதே ஷரத்துக்களைப் பயன்படுத்தி சட்டசபையையும் கலைத்தார்கள். இப்பொழுது, 1980-வது ஆண்டிலே, தேர்ந்தெடுக்கப்பட்ட அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசாங்கத்தை, இதே செக்ஷன்களை வைத்துத்தான்—துர் உபயோகப்படுத்தி அவர்கள் டிஸ்மிஸ் செய்தார்கள். ஆகவே நான் சொல்ல விரும்புவது, அந்த செக்ஷன்களை நீக்கிவிட வேண்டும். ஒரு மாநிலத்தில் அரசாங்கம் மெஜாரிட்டி இழக்கிறதென்றால். அரசாங்கம் நடத்த முடியவில்லை என்று சொன்னால், மத்தியிலே என்ன செய்கிறார்கள் மத்தியிலே கேர் டேக்கர் கவர்ன்மெண்ட் வைத்து, எலக்ஷன்ஸ் டிக்ளேர் பண்ணுகிறார்கள் அவ்வளவுதானே. அதே மாதிரி, மாநிலத்திலேயும் மெஜாரிட்டி இழந்து, இங்கே அரசாங்கம் நடத்த முடியவில்லையென்றால், உடனடியாக, எலக்ஷன்ஸ் டிக்ளேர் பண்ணவேண்டும். ஒரு புதிய அரசாங்கத்தை ஜனங்கள் தேர்ந்தெடுத்து, அவர்களை அதிகாரத்தில் வைப்பதற்கு மத்தியில் என்ன ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறதோ அதே மாதிரி ஏற்பாடு மாநிலத்திலும் இருக்க வேண்டும்.

அதேபோல், இன்னொரு முக்கியமான விஷயம் மொழி. அரசியல் சட்டம் அங்கீகரித்த எல்லா மொழிகளிலும் மைய அரசின் எல்லா வட்டங்களிலும், அந்தந்த மாநில அரசின் எல்லா வட்டங்களிலும் செயல்பட வாய்ப்பிருக்க வேண்டும். எந்தப் பிரஜையும் எந்த அரசுடனும் தனது தாய்மொழியில் கடிதப் போக்குவரத்து நடத்துவதற்கு எந்தப் பிரஜைக்கும் இந்த நாட்டில் உரிமை இருக்க வேண்டும். அதற்கான ஏற்பாடு செய்ய வேண்டும்.

அதே மாதிரி. நாடாளுமன்றத்தில் பேசக்கூடிய நேரத்தில், விவாதத்தில் கலந்துக்கொள்ளக்கூடிய நேரத்தில், நம் அரசியல் சட்ட திட்டத்தில் அங்கீகரித்திருக்கக்கூடிய 8-வது ஷெட்யூலில் உள்ள எல்லா மொழிகளிலும் ஏக காலத்தில் மொழி பெயர்ப்பதற்கான கருவிகள் அங்கே பொருத்தப்பட ஏற்பாடு செய்ய வேண்டும்.

இந்தி பேசாத பகுதியில் வாழும் மக்கள் விரும்பும் காலம் வரை, அது எந்தக் காலமாக, இருந்தாலுள் சரி. அதுவரைக்கும் ஆங்கிலத்தை, மைய அரசின் வேலைகளில் தொடர்ந்து உபயோகப்படுத்த வேண்டும். அரசியல் சட்ட வடிவம் அந்த உத்தரவாதத்தைக் கொடுக்க வேண்டும். ஆனால், இப்பொழுது என்ன நடக்கிறது என்றால், 1972 முதல் மைய அரசு தனது அலுவலகங்களில் மறைமுகமாக இந்தியைத் திணித்துக் கொண்டிருக்கிறார்கள்.





Indirect forcing compulsion-ல் திணித்துக் கொண்டிருக்கிறார்கள். நான் முன்பு ஒரு புத்தகம் படித்தேன். Evaluation, அதாவது, 1972 ஆம் ஆண்டு முதல்இந்தியை அதிகாரப் பூர்வமான மொழியாக ஆக்குவது பற்றி யளவாலு வேஷன்—மத்திய அரசாங்கத்தினுடைய ரிப்போர்ட். அந்த ரிப்போர்ட்டில் குறிப்பிடப்பட்டிருப்பது 'கோப்புகளில்' இந்தியில் குறிப்பு எழுதத் தெரிந்திருக்கக்கூடிய அதிகாரிகள் இந்தியில் குறிப்பு எழுத வேண்டும். அப்படி அதிகாரிகள் இந்தியில் குறிப்புகள் எழுதுவதன் மூலமாகத் தங்கள்கீழ் இருக்கக்கூடிய இந்தித் தெரிந்திருக்கக்கூடிய ஸ்டாஃப்—அவர்களும் இந்தியில் எழுதுவதற்கு you must yourselves set an example. நீங்களே, உதாரணமாக இருக்க வேண்டுமென்று சொல்லி அதிலே அதற் கான கணக்கைக் காட்டுகிறார்கள்.

அதே மாதிரி, Public Sector, Undertakings, பொது நிறு வனங்கள். இந்திப் பகுதியிலே பொதுத் துறை நிறுவனங்கள் இருந்தாலும் அந்த நிறுவனங்களிலே கடிதப் போக்குவரத்து இந்தியில் இருக்க வேண்டும். நமக்குத் தெரியும், தமிழ் பேசக் கூடிய மக்கள் மத்திய பிரதேசத்தில் இருக்கக்கூடிய போபாலில் இருக்கக்கூடிய நிர்வாகத்தில்-பெல் நிர்வாகத்தில்-இருக்கிறார்கள். அங்கே அந்தத் தொழிலாளர்களிடையே இந்தியிலேதான் கடிதப் போக்குவரத்து நடத்துவது என்று சொன்னால்—ரீஜியன் இந்தி ரீஜியன்—ஆனால் அங்கே இருக்கக்கூடிய கிளார்க்குகளோ, ஸ்டாஃப்களோ இந்தி தெரியாதவர்கள். அவர்கள் எப்படி செயல்படுவார்கள், ஆகவே, அந்த முறையிலே, இந்த வேலை எப்பொழுது ஆரம்பிக்கப்பட்டிருக்கிறதென்றால், எவாலுவேஷன் ரிப்போர்ட்டில் பார்த்தேன், 1972 முதல் ஆரம்பித்து, படிப்படியாக இந்த எண்ணிக்கையை உயர்த்திக் கொண்டே வந்திருக்கிறார்கள் என்று நான் குறிப்பிட விரும்புகிறேன்.

கடைசியாக, இந்த மாதிரி நான் சொல்லியிருக்கக்கூடிய விஷயங்களுக்கு எதிர்ப்பு வருகிறபொழுது, அடிக்கடி சொல்லக்கூடிய வாதம் ஒன்றுதான், மக்களுக்கு அதிக அதிகாரங்கள் என்று இப்படி வரையறுத்துக் கூறுகிறபொழுது, குறிப்பாக, நம்முடைய மாண்புமிகு இந்திரா காங்கிரசைச் சேர்ந்தவர்கள், இப்படி அதிக அதிகாரம் கேட்பதானது பிரிவினைப் போக்கை வளர்க்கும் மக்கள் எண்ணத்தில், ஒருமைப்பாட்டிற்கு ஆபத்து உண்டாகும்; ஆகவே அரசியல் சட்டத்தில் இன்றைக்கு இருக்கக்கூடிய ப்ரவிஷன்ஸ் போதும் என்று அவர்களுடைய தலைவர்கள் அடிக்கடி சொல்கிறார்கள். நான் கேட்கிறேன்— 33 ஆண்டுகளின் அனுபவம் என்ன?

What is the experience of 33 years? அதிக அதிகாரமா கொடுத்தோம்? அதிக அதிகாரம் கொடுத்தால், என்னமோ பிரிவினை மனப்பான்மை வருமாம். 33 ஆண்டுகள் ஆயிற்று, அதிக அதிகாரங்களா கொடுத்தோம், நமது மாநிலங்களுக்கு. அரசியல் சட்டமே சமஷ்டிக்கு மாறானது—அதை அமுல் நடத்தினார்கள். அந்த முறையிலே நான் ஏற்கனவே சொன்னமாதிரி அதற்குமேல் இருக்கிற குறுகிய அதிகாரங்களையும் மத்திய அரசே கைப்பற்றி, கிட்டத்தட்ட முழுக்க, முழுக்க அதிகாரக் குவியலோடு மத்திய அரசாங்கம் 33 ஆண்டுகளாக ஆட்சி நடத்துகிறது.

[முற்பகல் 11.40]

நான் கேட்கிறேன், இப்படி அதிக அதிகாரம் கொடுக்காமல் இருக்கிற அதிகாரத்தையும் பிடுங்கி, மத்தியிலே குவிக்கப்பட்ட பிறகு 33 ஆண்டுகளுக்குப் பிறகு இன்று என்ன ஒருமைப்பாடு வளர்ந்து இருக்கிறதா? இல்லையே—பிரிவினை மனப்பான்மை தானே அதனுடைய விளைவாக வளர்ந்திருக்கிறது. நாகாலாந்திலே அதன் விளைவாக கலவரம். மிசோரத்தில் கலகம் இப்போது வடகிழக்கு மாநிலங்களில் மலை ஜாதி மக்கள், மத்தியிலே பெரிய அளவில் பிரிவினை உணர்வுதானே வளர்ந்திருக்கின்றது. பயங்கரமான பிரிவினை உணர்வு. அந்தப் பிரிவினை உணர்வானது ஏகாதிபத்தியத்தையும் ஊடுருவுவதற்குத் தானே இடம் கொடுத்திருக்கிறது. அதற்கு யார் பொறுப்பு? என்று இந்திரா காங்கிரஸ் தலைவர் திரு. ஹாஜாஷெரிப் அவர்கள் கேட்கிறார்கள். அவர்கள் முந்திக் கொள்ள வேண்டாம் என்று சொல்கிறேன். அந்த கேள்விக்குத்தான் நானும் வருகிறேன். வேறு எதை விட்டாலும் இதை விட மாட்டேன், இதற்கு மத்தியில் அதிகாரக் குவியல் அந்த மக்களின் கலாசாரத்தை, அந்த மக்களின் மொழியை Indian identity in the context of being an Indian citizen, இந்திய பிரஜை என்ற கட்டுக்கோப்புக்குள், தங்களுடைய மொழி கலாச்சாரம், நடை, உடை, பாவனை அடிப்படையில் இருக்கக் கூடிய தனித் தன்மை அழிக்கப்படுமோ என்ற அச்சம்தான் இந்த 33 ஆண்டு காலத்தினுடைய அதிகாரக் குவியலினுடைய விளைவைத்தான் நாம் பார்க்கிறோம்.

திரு. நா. சுந்தரராஜ்; தலைவர் அவர்களே, இன்றைய தினம் திரிபுராவிலே நடைபெறுகின்ற இந்தப் போராட்டமானது அங்கே ஆட்சி நடத்துகின்றவர்கள் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சார்ந்திருக்கின்ற மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சிதான். அவர்கள் ஏன் அந்த நிலையை மாற்றுவதற்கு முயற்சிகள் எடுத்துக் கொள்ளக் கூடாது. காரணம் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி அங்கே நடத்துகின்ற அந்த ஆட்சியானது



அந்தப் பகுதி மக்களுக்கு நம்பிக்கை ஊட்டவில்லை. அவர்கள் தான் இதற்கு தூண்டுதலாக இருக்கிறார்கள் என்ற ஐயப்பாட்டின் காரணமாகத்தான் இந்த வடகிழக்குப் பகுதியிலே அந்தப் போராட்டம் வெடித்திருக்கிறது என்பதை நான் அவருக்குத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

திரு. ரா. உமாநாத்: தலைவர் அவர்களே, இந்த திரிபுரா மாநிலத்திலே மலைஜாதி மக்களும், வங்காள மக்களும், இருக்கிறார்கள். அங்கே இருக்கக்கூடிய அந்த மக்களிடம் இவ்வளவு நேரம் ஒற்றுமையை ஏற்படுத்துவதற்கு யாராவது காரணமாக இருக்கிறார்கள் என்று சொன்னால், அது நாங்கள் தான். அந்த நம்பிக்கையின் அடிப்படையில்தான் அந்த மக்கள் எங்களை அங்கே தேர்ந்தெடுத்திருக்கிறார்கள், நாடாளுமன்றத் தேர்தலிலும் சரி, 4 சட்ட மன்றத் தேர்தலிலும் சரி, அந்த மக்களுக்கு இதுவரை அவர்களுக்கும் நம்பிக்கை ஊட்டக்கூடிய முறையிலே, ஒற்றுமை ஏற்படுத்தக் கூடிய முறையிலே இருக்கின்ற ஒரே ஒரு பார்டி மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி என்பதால்தான் இத்தனை நாள் அந்த வண்டி அங்கே ஓடிற்று.

அதற்கப்புறம் உள்ள நாகாலாந்திலே ஏற்பட்ட விளைவு, மிசோரத்தில் ஏற்பட்ட விளைவு, அசாமிலே ஏற்பட்ட விளைவு இவை அத்தனைக்கும் காரணம் அங்கே இருக்கக்கூடிய அமர பெங்காலி என்ற ஸ்தாபனம்தான். அதை ஊக்குவிக்கின்ற வர்கள் நண்பர் சுந்தரராஜ் அவர்கள் சார்ந்திருக்கிற இந்திரா காங்கிரஸ் கட்சியும் அதேமாதிரி மறைந்த சஞ்சய் காந்தி அவர் களும்தான். அதேமாதிரி அந்த மலைஜாதியினரின் பேரால் சிறு பான்மை ஆர்கனைசேஷன், அதை ஊக்குவிப்பதும் நீங்கள்தான். இந்தப்பக்கம் இவர்களைத் தட்டிவிடுகிறார்கள், அந்தப்பக்கம் அவர்களைத் தட்டிவிடுகிறார்கள். அவ்வளவையும் சமாளித்து மெயின்டெயின் பண்ணினோம். அதற்கு மேல் அந்தப் போராட்டம் வருகிறபோது அந்தமாதிரி நிலைமை ஏற்படுகிறது. ஏன், இப்போதும் மத்திய அரசாங்கத்திற்கு சான்ஸ் கிடைத்தால் அதைக்காட்டியே எங்களை டிஸ்மிஸ் செய்திருப்பார்கள். ஏன் செய்யவில்லை? எங்களிடம் இருக்கின்ற அனுதாபத்தின்பேரில் அவர்கள் டிஸ்மிஸ் செய்யாமல் இல்லை. நாங்கள்தான் இரண்டு செக்ஷன்களிலும் மோஸ்ட் இன்புளுயன்ஸ் பார்ட்டி. அந்த அதிகாரத்திலே இருந்து அவர்களை வெளியேற்றினால் அவர் களுக்கும் இன்புளுயன்ஸ் இல்லை, அப்போது அங்கே ஒரு பெரிய யுத்தமே நடக்கும். பயங்கரமான விளைவு—இன்று நடப்பதை விட 10 மடங்கு—நடக்கும். அந்தப் பாவம் பூராவும் தங்கள் தலையிலே வரும் என்பதனாலேதான் டிஸ்மிஸ் பண்ணவில்லையே தவிர, எங்கள் மீது இருக்கின்ற சிம்பதியால் அல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. நா. சுந்தரராஜ்: தலைவர் அவர்களே, இன்றைய தினம் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மத்தியிலே அதிகாரக் குவியல் என்று சொல்லியிருக்கிறார்கள். வடகிழக்குப் பகுதியில் இன்றையதினம் தேவையான நடவடிக்கைகளை மத்திய அரசு எடுக்கவேண்டும். அங்கே நடைபெறுகின்ற கலவரங்கள் கட்டுப் படுத்தப்படவேண்டும். அங்கே இருக்கும் சமூக நலன்கள் பாது காக்கப்படவேண்டும் என்று சொல்லி நடவடிக்கை எடுக்கவேண்டும் என்பதற்காக திரிபுரா முதலமைச்சர் அவர்கள் பல தடவை டெல்லிக்குச் சென்று திருமதி இந்திரா காந்தி அவர்களையும் மத்திய அரசையும் கேட்டுக்கொண்டார். மத்திய அரசாங்கம் எடுக்கும் நடவடிக்கைகளுக்கு எங்களுடைய ஆட்சி முழு ஆதரவு தருகிறது என்பதையும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் முதலமைச்சராக இருக்கும் திரு. ஜோதி பாசு அவர்கள் பட்ட வர்த்தனமாகத் தெரிவித்து இருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ரா. உமாநாத்: எப்படி ஏற்பட்டது என்று கேட் டார்கள். அதற்கு பதில் சொன்னேன், இப்போது ஏதோ அவர்களுடைய கட்சிக்கு முழு ஆதரவு என்று சொல்கிறார்கள். அங்கே நிலைமை பயங்கரமாக வளர்கிறது, அதைத் தடுக்க பாதுகாப்பு சக்திகள் வேண்டும் என்று மத்திய அரசாங்கத்திடம் பல தரம் கேட்டு அனுப்பாதவர்கள் தான் இந்திரா காங்கிரஸ் கட்சி. இப்போது நிலைமை இப்படி வந்தபிறகு, நான் ஏற்கனவே சொன்னமாதிரி, இப்போது கையில் இருக்கும் அஸ்ஸாமே சுட்டுக்கொண்டு இருக்கிறபோது, வடகிழக்கு மாநிலம் பூராவும் இப்போதுள்ள நிலைமையில் ஏகாதிபத்திய சக்திகள் மக்களின் இந்த நிலைமையைப் பயன்படுத்தி அதிலே ஊடுருவிக்கொண்டு நாட்டைத் துண்டாடும் முயற்சிக்கு வந்திருக் கிற நிலைமைக்குப் பிறகு தான் அவர்கள் இப்போது ஒத்துழைக் கிறார்கள். நாங்கள் எப்போதும் போல் ஒத்துழைக்கிறோம்.

இந்த 33 ஆண்டுக்கால மத்தியில் அதிகாரக் குவியல் அந்த மக்களின் கலாச்சாரத்தை, மொழியை. தனித்தன்மையை அழித்து விடுமோ என்கிற அச்சத்தின் காரணமாக, இந்த 30 ஆண்டுகால காங்கிரஸ் ஆட்சியில் அந்தப் பகுதியில் எந்தவிதமான வளர்ச்சியும் இல்லை. 'யுகேன் நாட் டினை ஏட்' 'அன்–ஈவன் டெவலப் மென்ட்' இருக்கிறது. அதைத்தான் சொல்கிறோம். அசமத்துவம் தான் அங்கே வளர்ந்து இருக்கிறது. அந்த நார்த் ஈஸ்ட் ரீஜியனில் எந்தவிதமான வளர்ச்சியும் இல்லை. ஐ அஸ்ஸர்ட். இன்றைக்கு அந்தப் பகுதியில் உள்ள கிராமங்களில் உள்ள ஏழைகள், விவசாயிகள் நாடோடிகளாகத்தான் இருக்கிறார்கள். விவசாயம் எந்த சீசனில் எங்கே நடக்கிறதோ அங்கே தான்



சென்று பிழைத்துச்கொண்டு வருகிறார்கள். இந்த 30 ஆண்டு கால ஆட்சியின் விளைவாக அந்தப் பகுதி மக்களுக்கு எந்த விதமான வளர்ச்சியோ, நன்மையோ ஏற்பட்டு இருக்கிறதா? அதற்காக நடவடிக்கை எடுக்கப்படவே இல்லை.

உடனே நம்முடைய காங்கிரஸ் நண்பர்கள் கேட்பார்கள். வெள்ளைக்காரன் காலத்துடன் ஒப்பிட்டால் சுதந்திரத்திற்குப் பின் தொழிற்சாலைகள் கட்டப்படவில்லையா? விவசாயம் பெருகவில்லையா? வளர்ச்சியின் அளவுகோல் என்ன என்பதைப் பற்றி சுரேந்திர ஜே. படீல் ஐ. நா. மாநாட்டில் செயல்பட்ட இந்தியப் பொருளாதார நிபுணர் அழகாகக் கூறுகிறார். ஐ கோட்...''கடந்த கால நூற்றாண்டில் நாம் அடைந்த முன்னேற்றம், காலனி ஆதிக்கத்தின் ஒரு நூற்றாண்டு வளர்ச்சியுடன் ஒப்பிட்டுப் பார்த்தால், கடந்த 4,000 ஆண்டுகளில் நமது நாட்டின் நிலைமையுடன், காலனி ஆதிக்க காலத்தை ஒப்பிட்டால் காலனி ஆதிக்க கால முன்னேற்றம் எவ்வளவோ மகத்தானது.'' ஆகவே, வளர்ச்சியை அப்படியல்ல கணிப்பது. (குறுக்கீடு) உங்களுடைய கம்பேரிசனுக்கு–ஒப்புநோக்கிற்கு–அவர் பதில் சொல்கிறார். ஆகவே, வளர்ச்சியை நாம் எப்படி கணிக்க வேண்டும். அவர் சொல்கிறார்—'இன்றைய உலக வளர்ச்சியுடன் நமக்குச் சுற்றுப்புறமுள்ள உலக நாடுகளின் வளர்ச்சியுடன் ஒப்பிடவேண்டும். 1950–ல் இருந்து உலக உற்பத்தியில் நமது நாட்டுப் பங்கு 2.1 சதத்திலிருந்து 1.3 சதத்திற்கு வீழ்ந்துள்ளது. நமது சராசரி தனி நபர் வருமானம் உலக சராசரியின் எட்டிலொரு பங்கிலிருந்து பன்னிரண்டில் ஒரு பங்காக குறைந்துள்ளது. தொழிற்சாலை உற்பத்தி உலக உற்பத்தியில் ஒரு சதத்திலிருந்து 0.8 சதமாக குறைந்துள்ளது. உலக வியாபாரத்தில் நமது பங்கு 2 சதத்திலிருந்து 1 சதத்தைவிட குறைந்து விட்டது. சமீபத்தில் விடுதலை அடைந்த நாடுகளின் மொத்தத்துடன் ஒப்பிட்டால் நிலைமை இதை விட மோசம்—இதற்குப் பிரதான காரணம்....is the increasing feebleness of our economic muscle, the setting in of economic arthritis at a relatively young age of our development. அழகாக இல்லை. அமைச்சர் ஒப்புக்கொள்வார் என்று நினைக்கிறேன். அதாவது—தமிழ் மொழிபெயர்ப்புச் சொல்கிறேன்—''இதற்குப் பிரதான காரணம், நமது பொருளாதார அமைப்பு எனும் சதையின் தளர்ச்சியும், நமது வளர்ச்சியின் இளமைப் பருவத்திலேயே நமது வளர்ச்சிக்கு வாத நோய் பிடித்து விட்டது.'' ஆகவே, 30 ஆண்டு கால காங்கிரஸ் ஆட்சி மத்தியில் அதிகாரக் குவியல் நாட்டுக்கு என்ன கொடுத்து இருக்கிறது. 'பொருளாதார சதையும், வாதநோய் பிடித்த பொருளாதாரமும் தான்'. (குறுக்கீடு) பிஞ்சில் பழுத்ததா? அதை ஏற்றுக்கொள்கிறேன். 'இளம் பிள்ளை வாதம், பிஞ்சில் பழுத்தது. இத்தகைய ஒரு பொருளாதாரத்தைத்தான் அவர்கள் கடந்த 30 ஆண்டு கால ஆட்சி காலத்தில் கொடுத்து இருக்கிறார்கள்.

[முற்பகல் 11.50]

[மாண்புமிகு பேரவை துணைத் தலைவர்—தலைமை]

திரு. நா. சுந்தரராஜ்: தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் உமாநாத் அவர்கள் 4,000 ஆண்டுகளை ஒட்பிட்டு, காலனி ஆதிக்கக் காலத்திலே இந்தியா முன்னேறியிருக்கிறது என்ற தொனிப்பட கூறினார்கள். அவர்களுடைய பார்வையிலே சுதந்திரத்திற்குப் பின் இந்தியா முன்னேறவில்லையா என்று கேட்க ஆசைப்படுகிறேன்.

திரு. ரா. உமாநாத்: காலனி ஆதிக்கத்தில் இந்தியா வளர்ச்சி பெற்றது என்று நான் கூறியதாகச் சொல்கிறார்கள். அது கொச்சைப் படுத்தி அல்லது திரித்து கூறுவதாகும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்திய பொருளாதார நிபுணர் ஒருவர் கூறியதை படித்துக்காட்டினேன். வெள்ளைக்காரன் காலத்தில் இருந்ததை ஒப்பிட்டுப்பார்த்தால் முன்னேற்றமா இல்லையா என்பதை நீங்கள் முடிவுசெய்து கொள்ளுங்கள்.

திரு. எல். இராஜசேகரன்: சார், பாயின்ட் ஆப் ஆர்டர், அவர்கள் பேசும்போது பிஞ்சிலே டமுத்தது என்று சொன்னார்கள். அது சரியா?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அது பாயின்ட் ஆஃப் ஆர்டர் அல்ல; உட்காருங்கள்.

திரு. ரா. உமாநாத்: எனவே, நாட்டின் நிலைமை இது தான் என்றால் கடந்த 30 அல்லது 33 ஆண்டு காலத்தில் அந்த வடகிழக்கு மாநிலத்தின் கதி எப்படி இருந்திருக்கும் என்பதை இதிலிருந்து ஊகிக்கலாம். மாநிலங்களுக்கு அதிகாரம் இல்லை. மத்தியிலே அதிகாரக் குவியல். அதனால்தான் பிரிவினை மனோபாவத்தை உண்டாக்கியது. மத்தியிலே இருக்கும் அதிகார குவியலினால்தான் வடகிழக்கு பிராந்தியத்தில் பிரிவினை மனோபாவம் ஏற்பட்டது; ஜம்மு—காஷ்மீர் பிரிவினைக்கு இடம் அளித்தது; தமிழகம் போன்ற இடங்களில் மொழிப் போராட்டங்கள் உண்டாக்கியுள்ளது. அதிகார குவியல்தான் ஏகாதிபத்திய ஊடுருவலுக்கு வாய்ப்பளித்துள்ளது.

மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் அளிப்பது பல்வேறு மாநில மக்கள் மத்தியில் அச்சத்தை நீக்கும், நம்பிக்கையை உண்டாக்கும்; திட்ட வளர்ச்சிக்கு வாய்ப்பும் சுதந்திரமும் அளிக்கும். அத்துடன் மாற்றுப் பொருளாதாரக் கொள்கைளையும் மேற்கொண்டால் நாட்டின் முன்னேற்றத்திற்கும் வழிகோலும். ஆகவே மாநிலங்களும் மையமும்— இந்த இரண்டும் பலமாக



இருக்க வேண்டும்; அவரவர்களுக்கு வரையறுக்கப்பட்ட அதிகார வரம்பில் பலமாக இருக்க வேண்டும். அப்படி இருப்பது ஒன்றுக்கொன்று பலத்தின் ஊற்றாக இருக்குமே தவிர முரணாக இருக்காது.

இந்தியத் தொழிலாளி வர்க்கம் இந்த நாட்டின் ஒற்றுமைக் காகவே நிற்கிறது. பன்னாட்டு முதலாளிகள் கையிலும், இந்நாட்டு பெரும் முதலாளிகளின் கையிலும், நிலபிரபுக்களின் கையிலும் இந்த நாட்டுப் பொருளாதாரம் சிக்கியிருக்கிற பொழுது அந்த பிடிப்பை உடைக்க, பன்னாட்டு முதலாளிகளை எதிர்த்துப் போராட, இந்நாட்டு முதலாளிகளை, நில பிரபுக்களை எதிர்த்துப் போராட தமிழகத் தொழிலாளிகளால் மட்டும் முடியாது; ஆந்திர தொழிலாளிகளால் மட்டும் முடியாது; அல்லது மகாராஷ்டிர தொழிலாளிகளால் மட்டும் முடியாது, மேற்குவங்க தொழிலாளிகளால் மட்டும் முடியாது, தனித்தனியாக எந்த மாநிலத் தொழிலாளிகளாலும் முடியாது, அனைத்திந்திய தொழிலாளி வர்க்க ஒற்றுமையினால்தான், இந்திய நாடு பூராவும் இருக்கிற ஜனநாயக சக்திகள் எல்லாம் ஒன்றுபட்டு போராடினால்தான் முடியும் என்று நாங்கள் கருதுகிறோம்.

நாடு துண்டாக்கப்பட்டால் நேர்மாறாக இருக்கும்: வர்க்க ஒற்றுமையும் துண்டாக்கப்படும். துண்டிக்கப்பட்ட நாடு சிறு சிறு துண்டுகளாகப் பிரிக்கப்பட்டால் நிச்சயமாக ஏகாதிபத்தியங்களுக்கு வேட்டைக்காடாக மாறும்; அதற்கு இடம் கொடுக்கக்கூடாது. அகவே மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் என்கிறபோது மையமும் பலமாக இருக்க வேண்டுமென்று நாங்கள் விரும்புகிறோம். இது ஒன்றுக்கொன்று முரணானதல்ல. ஆகவே, இந்த தீர்மானத்தை அனைவரும் நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திருமதி. டி. யசோதா: 1977-லே ஜனதாக் கட்சி ஆட்சியிலே இருந்தபோது மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கட்சி அதிகாரக் குவிப்பைப் பரவலாக்குவதற்கு எடுத்த முயற்சிகள் ஏதேனும் உண்டா? அதற்கு ஏதேனும் பலன் கிட்டியதா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

திரு. ரா. உமாநாத்: தலைவரவர்களே, மாண்புமிகு அங்கத்தினர் அவர்களுக்கு மிக்க நன்றி. அதிகாரத்தைப் பரவலாக்க வேண்டும் என்பதற்காகத்தான் எங்களுடைய கட்சியைச் சேர்ந்த திரு. ஜோதிபாசு அவர்கள் முயற்சி எடுத்தார்கள். அதேபோன்று கேரள மாநிலத்திலேயும் இடதுசாரி முன்னணி அரசாங்கத்திலே இருக்கின்ற போதும் அதற்கு முன்பு இருந்த போதும் ஒரு மகஜரை அந்த அடிப்படையிலே தயார்

செய்து அது மத்திய அரசுக்குக் கொடுக்கப்பட்டது. ஜனதா அரசு மத்தியிலே இருக்கின்றபோதும் மாநில முதலமைச்சர்களின் கூட்டத்தைக்கூட்டி விவாதித்து அதுபற்றிப் பேசவேண்டும் என்று கேட்கப்பட்டது. அதை அவர்கள் மறுத்தபோது அது சம்பந்தமாக விடாமல் பாடுபட்டு மாநில மத்திய அரசினுடைய அதிகாரங்கள் சம்பந்தமாக விவாதித்து கலந்து பேசி முடிவு எடுக்கவேண்டும் என்பதைப்பற்றி எங்களுடைய கட்சி விடாமல் தொடர்ந்து கேட்டு வந்திருக்கின்றது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருமதி. டி. யசோதா: அதனால் பலன் ஏதாவது கிட்டியதா என்று நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இது பாயின்ட் ஆஃப் ஆர்டர் அல்ல, தாங்கள் அமருங்கள். அடுத்து திரு. அம்பிகாபதி அவர்களைப் பேச அழைக்கிறேன்.

திரு. மு. அம்பிகாபதி: துணைத் தலைவரவர்களே, இந்தத் தீர்மானத்தை மொழிந்தது திரு. உமாநாத் அவர்கள். அதை நான் வழிமொழிந்திருக்கிறேன், ஆகவே, நான் பேசியதற்குப் பிறகுதான் மற்றவர்கள் பேசவேண்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: சரி நீங்கள் பேசுங்கள்.

திரு. மு. அம்பிகாபதி: துணைத் தலைவரவர்களே, மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் வேண்டும் என்ற தீர்மானத்தை மாண்புமிகு உறுப்பினர் தோழர் திரு. ரா. உமாநாத் அவர்கள் மொழிந்து பேசியிருக்கிறார்கள். அதை வழிமொழிந்த நான் அடுத்துப் பேசுவதற்கு எனக்கு சந்தர்ப்பம் அளித்து எனது உரிமையை நல்லவேளையாக துணைத் தலைவரவர்கள் காப்பாற்றி இருக்கிறார்கள். நன்றி.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: உங்கள் எல்லோருடைய உரிமையையும் காப்பாற்றிக்கொண்டுதான் இருக்கிறேன். இன்னும் நன்றாகக் காப்பாற்றுவேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. க. அன்பழகன்: துணைத் தலைவரவர்களே, திரு. அம்பிகாபதி அவர்கள் வழிமொழிந்து பேசுவதில் எனக்கு எந்தவித மாறுபாடும் இல்லை. ஆனால் அவையிலே ஒரு தீர்மானம் கொண்டுவரப்படுகின்றபோது வழிமொழிகிறேன் என்று சொல்லவேண்டிய அவசியம் இருப்பதால் அது ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கின்றதே தவிர வழிமொழிந்தவர் தான் முன்மொழிந்தவருக்கு அடுத்தாற்போல் பேசுவதற்கு அனுமதி கொடுக்கப்படுகின்றது என்ற எண்ணத்தைத் துணைத் தலைவரவர்கள் ஏற்படுத்திவிட்டால் பிறகு வருகின்ற எல்லா தீர்மானங்



களிலும் எல்லாப் பிரச்சினைகளிலும் வழிமொழிந்தவர் பேசித்தான் மற்றவர்கள் பேச வேண்டும் என்ற நிலை ஏற்படும். ஆகவே இந்த முறை இதற்கு முன்பு இந்த மன்றத்தில் இடம் பெறவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ரா. உமாநாத்: துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு திரு. சுப்பு அவர்கள் இங்கே அங்கத்தினராக இருந்தபோது ஒரு முறை அவர் ஒரு தீர்மானத்தை வழிமொழிகின்றபோது வழிமொழிந்த தனக்கு முதலிலே வாய்ப்பு கொடுக்கவேண்டும் என்று கேட்டு அவ்வாறு அவருக்கு பேசுகின்ற உரிமையும் கொடுக்கப்பட்டிருக்கின்றது. விதிகளிலே பார்த்தால் கூட The seconder can choose any time for such a thing என்று இருக்கின்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: 7-வதாக பேச இருந்த உறுப்பினர் திரு. அம்பிகாபதி அவர்களை இரண்டாவதாகப் பேச அழைக்கிறேன்.

திரு. மு. அம்பிகாபதி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, நம்முடைய தேசத்தில் மாநிலங்களுக்கு அதிகமான அதிகாரம் தேவை என்கிற பிரச்சினை சூடு பிடித்திருக்கக்கூடிய ஒரு சூழ்நிலையாகும் இது. இந்தப் பிரச்சினையின் மீது இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் சில முக்கியமான விஷயங்களைச் சொல்ல நான் விரும்புகிறேன்.

நம்முடைய அரசியல் சட்டம் உருவாக்கப்பட்டபோது இருந்த கால நிலை, அன்றைக்கு இருந்த நம்முடைய தேசத்தினுடைய பூகோள அமைப்பு வேறு. இன்றைக்கு இருக்கின்ற அமைப்பு என்பது வேறு. அன்றைக்கு மன்னர்களுடைய ஆட்சிகள் எல்லாம் நடந்தது. பரோடா மன்னர் இருந்தார், மைசூர் மகாராஜா இருந்தார், ஹைதராபாத் நிஜாம் இருந்தார். பல மன்னாதி மன்னர்கள் எல்லாம் இருந்த காலம் அது. அந்தக் காலத்தில் அப்படிப்பட்ட ஒரு சட்டம் தேவைப்பட்டது. இந்திய அரசியல் சட்டம் தேவை என்று அன்றைக்கு வகுத்த நிபுணர்கள் கருதி இருக்கலாம். நம்முடைய தேசத்தினுடைய ஒருமைப்பாட்டைக் காக்கவும் நிதியாதாரங்களை அமல் படுத்தவும், கலாசாரங்களை வளர்க்கவும் அன்றைய நிலையில் அத்தகைய ஒரு சட்டம் தேவை என்று கருதி இருக்கலாம்.

[திரு. மு. அம்பிகாபதி] [1980 ஜூலை 31

[நண்பகல் 12·00]

ஏனென்றால், பல்வேறு சமஸ்தானங்களும், ஜமீன்தார்களும் இருந்த காலம் அது. அத்தகைய காலத்தில் அத்தகைய சட்டம் தேவை என்று கருதியிருந்தாலும், இன்றைக்கு காலம் மாறியிருக்கிற நேரத்தில் அத்தகைய சட்டம் தேவையில்லை. இந்திய அரசியல் சட்டத்தில் பல்வேறு மாற்றங்கள் கொண்டு வரப்பட வேண்டும். மாநிலங்களுக்கு அதிகமான அதிகாரம் தேவை என்ற நிலைமை இன்றைக்கு உருவாக்கப்பட்டு இருக்கிறது.

குறிப்பாக நம்முடைய நடைமுறையில் அரசியல் அதிகாரம் என்பது மத்திய அரசுக்கு மேலோங்கி, மாநில அரசுகளின் அரசியல் அதிகாரம் என்பது பலவீனபட்டும் இருக்கிறது. இன்றைக்கு மாநில அரசுகளின் அரசியல் அதிகாரம் பலவீனப் படுத்தப்பட்டதின் விளைவாக பல்வேறு பிரச்னைகள் எழுந்திருக்கின்றன.

மத்திய அரசின் மொழிக் கொள்கையால் பல சிக்கல்கள் உண்டாக்கப்பட்டுள்ளன. அந்தக் கொள்கைகள் மாநிலங்களிலே பல சிக்கல்களை ஏற்படுத்தியிருக்கின்றன. அது ஒரு உணர்வையும் தூண்டியிருக்கிறது. வடபாகத்திலே நடைபெறுகிற பல்வேறு போராட்டங்களைப் பார்க்கும்போது அது நன்கு விளங்கும். தங்களுடைய மொழிக்கு வரி வடிவம் வேண்டும் என்ற அளவிற்கு அது வளர்ந்திருக்கிறது. மொழி சமத்துவம் என்பதற்குப் பதிலாக ஒரு மொழிக்கு அதிக ஆதிக்கம் என்ற நிலை வளரக் கூடிய போக்கு உள்ளது. குறிப்பாக கல்வி, நிர்வாகம், நீதி இவற்றில் ஒரு முறைப் படுத்த வேண்டிய நிர்பந்தமும் ஏற்பட்டிருக்கிறது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மாநில உரிமைகள் நிலைநாட்டப் படவேண்டிய அவசியம் இப்பொழுது ஒரு முக்கிய கருத்தாக மாறக்கூடிய நிலைமையையும் உருவாக்கியிருக்கிறது என்பதையும் சுட்டிக்காட்ட ஆசைப் படுகிறேன். குறிப்பாக சட்டமன்றத் தேர்தலுக்கு மக்கள் தனியாக வாக்களிக்கிறார்கள். தமிழகத்தைப் பொறுத்த வரையிலும் சரி, மற்ற பிற மாநிலங்களைப் பொறுத்தவரையிலும் சரி, சட்டமன்ற தேர்தலுக்கு மக்கள் தனித்து வாக்களிக்கிறார்கள். பாராளுமன்ற தேர்தல் என்று வருகிறபோது, பாராளுமன்றத்திற்கு ஏற்ப, அப்போதுள்ள பிரச்னைகளுக்கு ஏற்ப மக்கள் வாக்களிக்கிறார்கள். எனவே, பெருவாரியாக வாக்களித்திருக்கிறார்கள் என்ற அந்த ஒரு தன்மையை மட்டும் வைத்துக்கொண்டு, மாநில அரசாங்கங்களை கலைப்பது என்பது சரியல்ல என்பதை நான் சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன்.



1980 ஜூலை 31] [திரு. மு. அம்பிகாபதி]

நமது அரசியல் சட்டத்தின் 356-வது பிரிவில், 356 (1) ஒரு ராஜ்யத்தின் ராஜ்யபாலரிடமிருந்தோ ராஜப்பிரமுகரிடமிருந்தோ அறிக்கை ஒன்றைப் பெற்றதன்பேரில் அல்லது வேறு வகையில், இந்த அரசியலமைப்பின் ஷரத்துக்களின்படி அந்த ராஜ்யத்தின் ஆட்சியை நடத்தமுடியாத நிலை ஒன்று ஏற்பட்டுள்ளது என்று ராஷ்டிரபதிக்கு நன்கு விளங்கினால், ராஷ்டிரபதி பிரகடனத் தினால்—

(அ) அந்த ராஜ்யத்தின் சர்க்காரின் அலுவல்கள் எல்லா வற்றையும் அல்லது அவைகளில் எவற்றையும், சந்தர்ப்பத்திற்கு ஏற்ப, அந்த ராஜ்யபாலர் அல்லது ராஜப்பிரமுகரிடம் அல்லது அந்த ராஜ்யத்தின் சட்டமன்றம் அல்லாத அந்த ராஜ்யத்திலுள்ள மற்றெந்த நிலையம் அல்லது அதிகாரியிடம் நிலைபெற்றிருக்கும் அல்லது அவர்களால் செலுத்தப்படத்தக்க சக்திகள் எல்லா வற்றையும் அல்லது அவைகளில் எவற்றையும் தாமே மேற் கொள்ளலாம்.', என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது.

அந்த 356 வது பிரிவினை நம்முடைய அரசியல் சட்டத்தில் இருந்து எடுத்துவிடவேண்டும் என்று எங்களுடைய கட்சியினுடைய தேசீய கவுன்சில் தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறது. தேர்ந்து எடுக்கப்பட்ட அரசை டிஸ்மிஸ் செய்கிற அதிகாரம் மத்திய அரசுக்கு இருக்கக்கூடாது என்கிற நிலையை எங்களுடைய கட்சியின் கருத்தாக நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

இன்றைக்கு மத்திய அரசு மறைமுகமாக பல வரிகளை போட்டிருக்கிறது. பெட்ரோலுக்கு அண்மையில் விலையை உயர்த்தியிருக்கிறார்கள். மண்ணெண்ணெய்க்கு உயர்த்தியிருக் கிறார்கள். உரத்திற்கு விலையை உயர்த்தியிருக்கிறார்கள். என்பது எல்லாம் அல்லாமல், இது வேறு தனியாக மறைமுகமாக வரிகளை போட்டிருக்கிறார்கள். பிச்சை எடுக்கிற ஒரு பிச்சைக்காரன் டீ குடித்தால் கூட; அதற்கு வரி கொடுக்க வேண்டும். சர்க்கரைக்கு வரி போட்டிருக்கிறார்கள். இப்படி பிச்சை எடுப்பவனைக் கூட விட முடியாத அளவிற்கு மறைமுக வரிகளை போட்டு கசக்கியிருக்கிறார்கள் மக்களை. இப்படி மறைமுக வரி போடுகிற அதிகாரம் அவர்கள் கையில் இருக்கிறது. கம்பெனிகளுக்கு வரி போட்டிருக்கிறார்கள். இப்படி தனியார் கம்பெனிகளுக்கு, கார்ப்பரேஷன்களுக்கும் மறைமுக வரி போடுகிற அதிகாரம் மத்திய அரசின் கையிலே இருக்கிறது.

அடுத்து நீர் பாசனம், சாலை வசதி, விவசாயம் தொழில் வளர்ச்சி போன்றவைகளுக்கு மிகவும் நிதி பற்றாக்குறை ஏற்பட்டு இருக்கிறது.

உதாரணமாக, தமிழகத்தில் இருக்கிற விவசாயிகளுக்கு தண்ணீர் வழங்குகிற பொறுப்பை தமிழக அரசு ஏற்றிருக்கிறது. விவசாயத்திற்கு தேவையான விதைகள், பூச்சிமருந்துகள் இவைகளை வழங்குகிற பொறுப்பை தமிழக அரசு ஏற்றிருக்கிறது. ஆனால் அதே நேரத்தில் அவர்களுக்கு விலை நிர்ணயம் செய்கிற

பொறுப்பை அதாவது நெல்லுக்கு விலை நிர்ணயம் செய்கிற பொறுப்பை மத்திய அரசு ஏற்றிருக்கிறது. இப்படிப்பட்ட விலை நிர்ணயம் செய்கிற பொறுப்பு மட்டுமல்லாது அதிகமான விலை வேண்டும் என்று மாநில அரசுகள் கேட்டாலும் அதைத் தட்டிக் கழிக்கிற நிலையும் மத்திய அரசிடம் இருக்கிறது.

சாதாரணமாக தமிழ்நாட்டில் தொழிற்சாலைகள் இருக்கும். தொழிற்சாலைகளில் சர்க்கரை உற்பத்தி செய்வார்கள். அப்படி உற்பத்தி செய்கிற சர்க்கரை மீது அவர்கள் வரி விதித்து மத்திய அரசு வசூலித்துக் கொள்ளும். அதேநேரத்தில் கரும்புக்கு கட்டுபடியான விலை வேண்டுமென்று கரும்பு உற்பத்தி செய்கிற விவசாயிகள் போராடினால் அதை மத்திய அரசு கவனித்துப் பார்க்காது. ஆக இப்படி ஒவ்வொரு நிலையிலும் மத்திய அரசின் போக்கு, அதிகாரக்குவியல் மத்திய அரசின் கையில் இருப்பதால் இன்றைக்கு ஏற்பட்டிருக்கிறது.

தொழில்களைப் பொறுத்தவரையில் தொழில் அமைச்சர் அவர்கள் சட்டமன்றத்தில் குறிப்பிட்டார்கள். புதிய தொழில்களை துவங்க நூற்றுக்கணக்கான விண்ணப்பங்கள் மத்திய அரசின் பரிசீலனைக்காக தேங்கிக் கிடக்கின்றன என்று கூறினார்கள், தமிழகத்தில் தொழில்கள் துவங்க மத்திய அரசை நாம் கேட்க வேண்டும். 1965 என்று நினைக்கிறேன். ஒரு தொழில் துவங்க வேண்டுமென்றால் மத்திய அரசின் அனுமதி பெற வேண்டுமென்று ஒரு ஆணை இருப்பதாகக் கருதுகிறேன். இப்படி தொழில்கள் துவங்க வேண்டுமென்று அதற்கான அனுமதி பெற நூற்றுக் கணக்கான விண்ணப்பங்கள் மத்திய அரசிடம் தேங்கிக் கிடக்கின்றன. தண்ணீர், மின்சாரம், சாலைவசதி இவற்றிற்கு மாநில அரசு ஏற்பாடு செய்தாலும் மத்திய அரசின் பிடியில் எது இருக்கிறது என்றால் ஒரு தொழிற்சாலை துவங்க தேவையானது நிதி. அந்த நிதியைக் கொடுப்பது தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள். அதோடு அந்தத் தொழிற்சாலைகளுக்கு தேவையானது நிலக்கரி, இதைக் கொடுப்பதும் மத்திய அரசின் கையில் இருக்கிறது. அனுமதி வழங்குவதும் மத்திய அரசின் கையில் இருக்கிறது. நிதி வழங்குவதும் மத்திய அரசின் கையில் இருக்கிறது. நிலக்கரி வழங்குவதும் மத்திய அரசின் கையில் இருக்கிறது. அந்த நிலக்கரியை ஏற்றிச் செல்ல வாகன்கள் கொடுப்பதும் மத்திய அரசின் கையில் இருக்கிறது. மாநிலத்தில் தனக்கு பிடிக்காத ஒரு கட்சி இருக்குமானால் ஒரு அனல் மின் நிலையத்திற்கு நிலக்கரி அனுப்புவதில் 15 நாட்கள் தடை, வாகன்கள் கொடுப்பதில் 20 நாட்கள் தடை என்று இருக்குமானால் நிலக்கரியால் இயங்கக்கூடிய அந்த அனல் மின்நிலையம் செயல்பட தடைபடுமானால் அந்த மாநிலத்தின் மின்சார உற்பத்தி குறைந்து தொழிற்சாலைகள் முடமாக்கப்படுகிற சதி வேலையைக் கூட மத்திய அரசு செய்ய முடியும்.



அதிகாரக்குவியல் மத்திய அரசிடம்
ஆக, இப்படிப்பட்ட வெளிநாட்டுக் கடன்கள்
நிறைந்து கிடக்கிறது என்பது மட்டுமல்ல. கொடுக்கிற அதிகாரம் மத்திய
பெறுவதில் இருந்து அதைப் பகிர்ந்து புயல் வீசிவிடுகிறது.
அரசின் கையில் இருக்கிறது. சாதாரணமாக மோசமான நிலைகள்
வறட்சி ஏற்படுகிறது, இப்படிப்பட்ட அதற்குரிய நிதி உதவிகளை
வருகின்றன என்று சொன்னால் இல்லை என்பதை நாம்
செய்வதற்கான மனம் மத்திய அரசிடம் குழு பரிந்துரையில்
பார்க்கவேண்டும். மதிப்பிற்குரிய ராஜமன்னார் கொடுத்திருக்கிறார்கள். அதை
அதற்கான சில குறிப்புக்களைக் ஆசைப்படுகிறேன். இயற்கை இடர்
நான் இங்கு குறிப்பிட தீர்ப்பதற்காக ஒவ்வொரு
களினால் ஏற்படும் இன்னல்களை இருக்கவேண்டும். சீரமைப்புப்
மாநிலத்திலும் இடர் உதவி நிதி பயன்படுத்தலாம் என்று
பணிகள் செய்வதற்காக இந்த நிதியைப் குழு பரிந்துரைகள் இந்த
சொல்லியிருக்கிறார்கள். ராஜமன்னார் உதாரணத்திற்காக சொல்
அவையில் வைக்கப்பட்டது 16-4-74-ல்; பசலியின்போது தமிழ்நாட்டில் புயல்
கிறேன், 1385, 1386, 1387 வெள்ளம் வந்தது, உண்மை.
வீசியது, வறட்சி வந்தது,

[பிற்பகல் 12.10]

தெரியுமா என்றால், தெரியும். அதற்கு
இது மத்திய அரசுக்குத் இருந்ததா என்றால், இல்லை. 1385,
நிதி ஒதுக்குகின்ற எண்ணம் பசலிகளிலேயும் புயல், வெள்ளம்,
1386, 1337 ஆகிய இந்த 3 காரணமாக, மரங்கள் வீழ்ந்தன.
வறட்சி ஏற்பட்டது. இதன் அணைக்கட்டு உடைந்து, நீர்
ஏரிகள் தகர்ந்தன; குடகனாறு ஒரு கொடுமையான
பெருக்கெடுத்து ஓடியது. இப்படிப்பட்ட என்றால், தெரியும்.
நிலை ஏற்பட்டது மத்திய அரசுக்கு தெரியுமா ஏதாவது செய்ய
இது சம்பந்தமாக தமிழக அரசு உடனடியாக மத்தியிலே இருந்து
முடியுமா என்றால், முடியாது. ஏன் முடியாது? உடைந்திருக்கிறதா என்று
ஒரு 7 மாதங்கள் கழிந்து வரும். அவர்கள் பரிந்துரை செய்ய
பார்க்கவேண்டும். அதன் பின்னர் அரசு அமைச்சரின்
வேண்டும். அந்த பரிந்துரை மத்திய அவர் நிதி ஒதுக்க
பார்வையிலே விழவேண்டும். அதற்குப் பின் வந்துவிடும். அப்போது
வேண்டும். அதற்குள் மீண்டும் மழை எனவே, இந்த மாநில
ஏரியோ, அணைக்கட்டோ இருக்காது. அணைக்கட்டு உடைப்பு
அரசின் சேதாரம் பற்றி, பாதிப்பு பற்றி, குறிப்பு அனுப்பினால்,
பற்றி, சட்டிட சேதாரங்கள் பற்றி செய்து நிதி ஒதுக்குகின்ற
அதற்கு உடனடியாக பரிசீலனை மாநிலத்திற்கே அத்தகைய
நிலைமை இருக்கவேண்டும். அல்லது இருக்கவேண்டும். அந்த
நிதியை ஒதுக்குகின்ற அதிகாரம் அளிக்காது என்பதை நான்
அதிகாரத்தை மத்திய அரசு பகிர்ந்து ஆசைப்படுகிறேன்.
இந்த நேரத்திலே சுட்டிக்காட்டுவதற்கு

(திரு. மு. அம்பிகாபதி) [1980 ஜூலை 31

இன்றைக்கு அரசியல் நிலையில் பல்வேறு முறைகள் இருக்கின்றன. இன்றைக்கு மாண்புமிகு தோழர் உமாநாத் அவர்கள் குறிப்பிட்டதைப்போல், டெல்லிக்கு இருக்கின்ற அதிகாரம் போதாது என்று, இன்றைக்கு குடிசை மாற்று வாரியம் வரை அவர்கள் தங்களுடைய அதிகாரத்தை விரிவுபடுத்திக் கொண்டு போகக்கூடிய ஒரு நிலையில் மத்திய அரசாங்கம் இறங்கி இருக்கிறது. வடகிழக்கு மாநிலத்தைப் பற்றி தோழர் உமாநாத் அவர்கள் குறிப்பிட்டார்கள். அங்கே ரத்த ஆறு ஓடுகிறது மத்திய அரசாங்கம் முறையாக நிதி ஒதுக்காததன் காரணமாக, அந்த மாநிலத்தில் தொழில் வளர்ச்சியும், சமுதாய, பொருளாதார, கலாச்சார வளர்ச்சிகளில் பின்தங்கியதன் விளைவாக அந்த மாநிலத்தில் இன்றைக்கு மாபெரும் போராட்டம் வெடித்து, வங்காளிகள் என்றும், திரிபுரா, அஸ்ஸாமியர், நாகாலாந்துக்காரர்கள் என்றும் அங்கே இனக்கலவரமாக மாறியதற்குக் காரணம், மத்திய அரசின் போக்கும் நிதிஒதுக்காத நிலையும்தான் என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

நம்முடைய மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்த பட்ஜெட்டில், ஒவ்வொரு ஆண்டும் நம்முடைய தமிழகத்திற்கு எந்த அடிப்படையில் நிதி குறைந்திருக்கிறது என்பதைக் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஒரு மாநிலம் பின்தங்கிய நிலையில் இருக்கிறது என்பதை, அங்கே வாழக்கூடிய மக்கள் தொகை, அவர்களுடைய வாழ்க்கை முறை ஆகியவற்றைப் பரிசீலித்து, நிதி ஒதுக்கம் செய்கின்ற காலத்தில் நிதி ஒதுக்கம் செய்யப்பட வேண்டும். அப்படி செய்வதற்கு டில்லியிலே இருக்கின்ற அரசு தவறி இருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

1961 ஆம் ஆண்டு பண்டித நேரு அவர்களால் தூத்துக்குடியிலே துறைமுகத்திற்கு கல்நாட்டப்பட்டது. இந்தத் துறைமுக வேலையிலே இன்னும் தயக்கம். கல்பாக்கம் அனல் மின்நிலையத்திற்கு ஹெவி வாட்டர் வேண்டுமென்று முதலமைச்சர் அவர்கள் கேட்டிருக்கிறார்கள். அந்த ஹெவி வாட்டர் கொடுப்பதிலே சுணக்கம். அதேபோல், கல்பாக்கம் வேலையை துவக்குவதிலே தேக்கம்; மின்சாரம் கிடைப்பதிலே சிக்கல். லட்சக்கணக்கான மனுக்கள் மத்திய அரசாங்கத்திற்கு அனுப்பப்பட்டதிலே ஏக்கம் ..

*திரு. நா. சுந்தரராஜ் : கல்பாக்கத்திற்கான ஹெவி வாட்டர் நமது நாட்டிலே இல்லை. அமெரிக்காவிலே இருந்து வர வேண்டும். அப்படி வராததன் காரணமாக, தாராபூர் மின் நிலையத்திலே கூட தேக்க நிலை இருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.





திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு உறுப்பினர் சுந்தரராஜ் அவர்கள் குறிப்பிட்டதைப் போல், அமெரிக்காவிலே இருந்து நமக்கு யூரேனியம் வருவதிலேயும் தயக்கம் இருக்கிறது. சோவியத் யூனியன் போன்ற சோஷயலிச நாடுகளோடு தொடர்பு கொண்டால் உடனடியாக கிடைப்பதற்கான ஏற்பாட்டை எங்கள் மூலமாகச் செய்யத் தயாராக இருக்கிறோம் என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. நா. சுந்தரராஜ் : சோவியத் யூனியன் கொடுக்கத் தயாராக இல்லை.

திரு. மு. அம்பிகாபதி : கல்பாக்கத்திற்குத் தேவையான முக்கியமான உறுப்பை கனடா நாடு கொடுக்க மறுத்த நேரத்தில் சோவியத் யூனியன்தான் கொடுத்தது என்பதையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

இத்தகைய நிதி ஒதுக்கத்தில் இருக்கக்கூடிய ஒரு மோசமான நிலை நம்முடைய இந்தியாவினுடைய ஒட்டு மொத்தமான வளர்ச்சியினைப் பாதித்திருக்கிறது என்பதை நம்முடைய தமிழகம் இன்றைக்கு உணரத் தலைப்பட்டிருக்கிறது என்பதைச் சுட்டிக் காட்ட ஆசைப்படுகிறேன். குறிப்பாக, நம்முடைய அரசியல் சட்டத்தில் மூன்று பிரிவுகளாக பிரித்துப் வைத்திருக்கிறார்கள். மத்திய அரசுக்கு மட்டும் அதிகாரம். மாநில அரசுக்கு மட்டும் அதிகாரம், மத்திய அரசுக்கும் மாநில அரசுக்கும் இணைந்த அதிகாரம். அதுபற்றிய விவரங்களை மாண்புமிகு உறுப்பினர் உமாநாத் அவர்கள் குறிப்பிட்டார்கள். மாநில அரசுக்கு என்று இருக்கக்கூடிய அதிகாரத்தில் கூட மத்திய அரசு தலையிடமுடியுமா என்றால் தலையிட முடியும். செங்கல்பட்டு அருகே ஒரு பஞ்சாயத்து, அந்த பஞ்சாயத்து நேஷனல் ஹைவேசுக்கு இரண்டு பக்கத்திலும் இருக்கிறது. தென்புறத்தில் வாட்டர் டாங்க் கட்டுகிறது, தமிழக அரசு, வடக்கே இருக்கிற பகுதிக்குத் தண்ணீர் கொடுக்க வேண்டும். இடையிலே நேஷனல் ஹைவேஸ்-நேஷனல் ஹைவேசுக்குக் கீழே பைப் லைன் போட வேண்டுமென்று சென்ட்ரல் கவர்ன்மெண்டுக்கு எழுதி அவர்கள் சொன்னால் அந்தப் பேப்பரை என்றைக்குப் பார்த்து அனுமதிக்கிறார்களோ அப்போதுதான் பைப் லைன் போடும் நிலை இருக்கிறது. இப்படிப் பட்ட சிறு விஷயங்களில் கூட மாநில அரசுக்கு உரிமை இல்லை.

குறிப்பாக, மாநிலத்திற்கு அதிக அதிகாரம் என்ற நிலையில் காங்கிரஸ் கட்சியினுடைய தீர்மானம் ஒன்றை இங்கே நான் சுட்டிக்காட்டுவதற்கு விரும்புகிறேன். 1972 ஆம் ஆண்டு மைசூர் மாநில ஸ்தாபன காங்கிரஸ் கட்சி வெளியிட்ட தேர்தல் அறிக்கையில் 'மத்திய அரசு காட்டும் மாற்றாந்தாய் மனப்

பான்மையை, பாரபட்சம் காட்டும் நிலையை எதிர்க்கவும், மாநிலத்திற்கு அதிகமாக அதிகாரம் சுய ஆட்சி பெறுவதற்காகவும் காங்கிரஸ் கட்சி உறுதியாகப் போராடும், என்று குறிப்பிட்டிருக்கிறார்கள்.

அப்படி மத்திய அரசு மாற்றாந்தாய் மனப்பான்மை காட்டுவதாக இருக்கிறது என்று காங்கிரஸ் கட்சியினுடைய தீர்மானம் வருகிற அளவுக்கு மத்தியில் அதிகாரம் குவிந்திருக்கிறது என்பதை சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன்.

[மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர்—தலைமை]

ஒரு வலிமையான மாநில அரசு வேண்டாமா? வேண்டும். மத்திய அரசு வலிமையாக இருக்க வேண்டாமா? வேண்டும். எதற்காக அப்படி இருக்க வேண்டும். ஒருவனுக்கு உடல் வலிவோடு இருக்க வேண்டுமென்று சொன்னால் அவன் வாழ வலிவோடு இருக்க வேண்டுமே தவிர ஊரில் இருப்பவர்களை உதைப்பதற்காக அல்ல. மத்திய அரசு வலிவோடு இருக்க வேண்டும். புயல் வருகிறது என்று சொன்னால் ராக்கெட்டுகளை அனுப்பி அதைத் தடுக்க நடவடிக்கை எடுக்கவேண்டும். மாநில அரசைக் கலைக்கவா வலிமை வேண்டும்? நாட்டைக் காக்க, எல்லையைக் காக்க வலிமை வேண்டும். அதற்கு படை வலிமை தேவை. மாநில அரசாங்கங்களைக் கலைக்கவா வலிமை தேவை? அரசியல் சட்டத்திலுள்ள 356-வது செக்ஷனையே க்ளோஸ் பண்ண வேண்டும். மத்திய அரசு வலிமையோடு இருக்கவேண்டும். இந்தியாவில் இருக்கும் தொழில்கள் அனைத்தையும் தேசியமயமாக்க, டாட்டா, பிர்லா, கோயங்கா, பஜாஜ் ஆகியவர்களைக் கொழுக்க வைக்க மத்திய அரசு வலிமையாக இருக்க வேண்டிய அவசியம் இல்லை. அப்படிப்பட்ட வலிமை அந்நியர் படையெடுப்பைத் தடுக்க, எதிர்த்து மோத தேவையே தவிர மாநில அரசைக் கலைப்பதற்கு வலிமை தேவையில்லை. அந்த அதிகாரம் தவிர்க்கப்பட வேண்டுமென்று இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் நான் குறிப்பிட ஆசைப்படுகிறேன்.

சுதந்திர காலத்தில் இருந்த நிலைமைகள் வேறு, இன்று இருக்கும் நிலைமைகள் வேறு. 1952-ஆம் ஆண்டில் ஒரு தொழில் கொள்கை அறிவிக்கப்பட்டது.

[பிற்பகல் 12–20]

அந்தத் தொழில் கொள்கையில் மத்திய அரசின் அனுமதி பெற்றுத்தான் எல்லாத் தொழில்களையும் செய்ய வேண்டுமென்ற அதே நிலைதான் இன்றைக்கும் நடக்கிறது என்பதுதான்



நம்முடைய கண்ணுக்கு முன்னே உள்ள விஷயம். ஒரு மாநில அரசு, அவர்களுடைய கொள்கையை ஏற்றுக்கொள்ளவில்லையென்றால் காங்கிரஸ் கட்சியினுடைய கொள்கையை ஏற்றுக்கொள்ளவில்லையென்றால் காங்கிரஸ் கட்சி ஆளாத மாநிலங்களில் தொழிற்சாலைகள் ஏற்படாமலேயே இருக்கலாம். லைசென்ஸ், மின்சாரம், நிலக்கரி, ரெயில்வே வேகன் இவ்வளவையும் செய்துவிட்டு பாராளுமன்றத்திலே அறிக்கையிலே தமிழகத்திலே தொழில் வளர்ச்சி ரொம்பவும் பின்தங்கியிருக்கிறது என்பதை ரொம்ப வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம் என்று வருத்தத் தீர்மானம் கூடப் போடலாம். இத்தகைய வாய்ப்புகள் மத்திய அரசுக்கு இருக்கின்றன. மத்திய அரசுக்கு இத்தகைய வாய்ப்புக்களை உருவாக்குவதைத் தவிர்க்க வேண்டும் என்பதுதான் எங்களுடைய நிலைமை.

அவர்கள் இப்போது, காட்டு இலாகாவையும், குடிசை மாற்று வாரியத்தையும் எடுத்துக் கொள்கிறோம் என்று அறிவித்திருக்கிறார்கள். நமக்கு இருப்பது எல்லாம், சாக்கடை, மீன்பிடி, குடிநீர், கழிவுநீர் இவைகள் தான். இவைதான் ஸ்டேட் கவர்மெண்டிற்குத் தேவையா? சாக்கடை, மீன்பிடி, கழிவுநீர், குடிநீர் இவைகளையும் மாநில அரசிடமிருந்து மத்திய அரசு எடுத்துக்கொண்டாலும் எடுத்துக்கொள்ளும் என்ற நிலைமை இருக்கிறது. மத்திய அரசாக இருந்தாலும், மாநில அரசாக இருந்தாலும் இது ஒரு இந்திய அரசு என்ற நினைப்பு வேண்டும், எந்த நிலையில் இருந்தாலும் இது இந்திய அரசு என்கின்ற நினைப்பு மத்தியிலிருக்கிறவர்களுக்கு வேண்டும் என்பதை சுட்டிக் காட்டுவதற்கு நான் ஆசைப்படுகிறேன்.

குறிப்பாக நிதி ஒதுக்கீடு, திட்டங்கள் இவற்றிலே பாரபட்சம் மத்திய அரசு காட்டுகிறது என்பது மட்டுமல்ல, எஜமானத்துவப் போக்கு, புயல் அடித்தாலும் வெள்ளம் வந்தாலும் இங்கேயிருந்து டெல்லிக்குப் போக வேண்டும், அவர்கள் வர வேண்டும், அவர்களிடத்திலே விளக்கவேண்டும், விளக்கினால்தான் நிதியைக் கொடுப்பார்கள் என்ற எஜமானத்துவப் போக்கு இருக்கிறது. ராஜமன்னார் அறிக்கையை அவையின் முன்னாலே வைத்துப் பேசுகின்ற நேரத்திலே மதிப்பிற்குரிய எதிர்க்கட்சித் தலைவர் கலைஞர் அவர்கள் ஒரு முக்கியமான விஷயத்தைக் குறிப்பிட்டிருக்கிறார்கள். ''சிறையிலிருந்து நாடு விடுதலை பெற்றுவிட்டது. பூட்டிய இரும்புக் கூட்டிலேயிருந்து கைதி கதவு திறந்தது. புன்னகை மலர வெளியே வருகிறான். தந்தையைக் காணாமல் தவித்துக் கொண்டிருந்த தளிர்நடைச் செல்வம், இளங்கரம் தூக்கி, தாவியோடுகிறது, அவனைத் தழுவிக்கொள்ள! அவனும் அடக்க முடியாத மகிழ்ச்சி வெள்ளம் கரைபுரள மகனைத் தூக்கி முத்தமிடக் கரங்களை நீட்டுகிறான். கைகள் இயங்க முடியாமல் தவிக்கின்றன. சிறையிலிருந்து தான் விடுபட்டு விட்டானே; இன்னும் என்ன தடை? தன்னை யார் தடுப்பது? சுற்றும்

முற்றும் பார்க்கிறான். அவன் சிறையில் இல்லை; சுதந்திர பூமியில் தான் இருக்கிறான். பிறகு யார், தன் குழந்தையைக் கூடத் தழுவிட முடியாமல் அவனைக் கட்டுப்படுத்துவது? யாருமல்ல: அவன் சிறையிலிருக்கும்போது அவன் கைகள் இரண்டையும் காலையும் சேர்த்து ஒரு விலங்கு மாட்டியிருந்தார்கள். விடுதலை அடைந்த பூரிப்பில், விலங்குகளைக் கழற்ற வேண்டுமென்ற நினைப்புக்கூட இல்லாமல் அவன் வெளியே வந்துவிட்டான். அவன் சுதந்திர மண்ணில் தான் இருக்கிறான். கை, கால் விலங்கு மட்டும் கழற்றப்படவில்லை. மனிதன் விடுதலையாகி விட்டான். கை, கால்கள் மட்டும் கட்டுண்டு கிடக்கத் தேவையில்லையே; இந்தியா, விடுதலை பெற்று விட்டது. அதன் அவயவங்களைப் போன்ற மாநிலங்கள் மட்டும் மத்திய அரசுக்குத் தேவையில்லாத அதிகாரக் குவியல்கள் என்னும் விலங்குகளால் கட்டுண்டு கிடப்பானேன்?'' என்று 16—4—74 அன்று மதிப்பிற்குரிய இன்றைய எதிர்க்கட்சித் தலைவர் கூறியிருக்கிறார். இந்த நிலைமைதான் நாட்டிலே இன்றைக்கு ஏற்பட்டிருக்கிறது. ஒரு பக்கம் தொழில் வளர்ச்சி, மறுபக்கம் தொழில் வளர்ச்சி இல்லை, மத்தியில் குவிந்திருக்கிற அதிகாரம் ஒரு தலை வீங்கிப் போன மனிதனைப் போல இருக்கிறது. சில பேர்களுக்கு தலை மட்டும் வீங்கியிருக்கும். மத்திய அரசாங்கத்திற்கு அம்மாதிரி வீக்கம் ஏற்பட்டிருக்கிறது. எந்த எந்த அதிகாரம் எங்கே இருந்தால் நல்லது என்று சரியாகப் புரிந்து கொள்கிற காலம் நெருங்கியிருக்கிறது. யார் எதைச் செய்ய வேண்டும், மாநில அரசிலே தேவையான வளர்ச்சிகளை மாநில அரசே செய்ய வேண்டும். பல்வேறு சமுதாயப் பிரச்சினைகள், மொழிப் பிரச்சினைகளை மாநில அரசே கவனிக்க வேண்டும், மொழியை அந்த மாநிலமே வளர்க்க வேண்டும், சோவியத் யூனியன் மாதிரி, அந்த அந்த மாநில மொழிகள் அந்தந்த மாநிலங்களாலேயே வளர்க்கப்பட வேண்டும். அந்த நிலை நம்முடைய நாட்டிலே இல்லை என்பதற்கு உதாரணமாக ஒரு சிறு விஷயத்தை நான் கூற ஆசைப்படுகிறேன்.

ஒரு மனிதன் ஒரு கழுதையையும், ஒரு நாயையும் வளர்த்திருக்கிறான். ஒரு நாள் இரவு திருடுவதற்காக ஒருவன் வந்திருக்கிறான். அவனைப் பார்த்த நாய் குலைக்காமல் இருந்தது. உடனே கழுதை கேட்டது, ஏன் குலைக்க மாட்டேன் என்கிறாய் என்று. அதற்கு அந்த நாய், என்னுடைய எஜமானன் எனக்குச் சரியாகச் சாப்பாடு போடவில்லை, ஆனால்தான் குலைக்க முடியவில்லை என்று சொன்னது. உடனே அந்தக் கழுதை சொன்னது, சரி, அந்த வேலையை நான் செய்கிறேன் என்று சொல்லி கத்தி விட்டது. கழுதையின் சத்தத்தைக் கேட்ட அந்த மனிதன் தன்னுடைய தூக்கத்தைக் கலைத்து விட்டது என்று சொல்லி கழுதையை உலக்கையைக் கொண்டு அடித்தான்; திருடனும் ஓடிப் போய்விட்டான். எனவே, இன்னார் வேலையை இன்னார் தான் செய்ய வேண்டுமென்று இருக்கிறது. மாநில அரசாங்கத்தில் உள்ள பல்வேறு பிரச்னைகள் தீர்க்கப்படவில்லை.



பல்வேறு நிலைமைகள் இருக்கின்றன. யார் வேலையை யார் செய்வது? கழுதை பொதி சுமக்க வேண்டும். அந்த வேலையைக் தான் அது செய்ய வேண்டும். மத்திய அரசு இராணுவத்தை வைத்துக் கொண்டு நாட்டைப் பாதுகாக்கின்ற வேலையைச் செய்ய வேண்டும். மக்கள் அந்தப் பொறுப்பைத்தான் கொடுத்திருக்கிறார்கள். மத்திய அரசிடம், நீ தேசத்தைக் காப்பாற்று என்று சொல்லியிருக்கிறார்கள்.

திருமதி டி. யசோதா : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள், மத்திய அரசாங்கத்தைக் கழுதையோடு ஒப்பிடுகிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

திரு. மு. அம்பிகாபதி : தலைவரவர்களே, நிரம்பச் சுமை இருப்பதால் உதாரணத்திற்காகச் சொல்வது பாவம் இல்லை என்று கருதுகிறேன்.

திரு. அ. ரகுமான்கான் : தலைவரவர்களே, அப்படியானால் திரு. அம்பிகாபதி அவர்கள் மாநிலங்களை நாய்க்கு உவமையாகக் கூறுகின்றார்களா?

திரு. மு. அம்பிகாபதி : ஆமாம். கலைஞர் அவர்களே வீட்டு நாய் மிகவும் நன்றி உள்ளது என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். எனவே மக்களுக்கு ஏதாவது செய்ய, மக்கள் என்கின்ற தோழனைப் பாதுகாப்பதற்காக நாயாக இருப்பது நல்லது என்று கருதுகிறேன்.

திரு. அ. ரகுமான்கான் : இது எந்த வகையான நாய்?

திரு. மு. அம்பிகாபதி : வீட்டு நாய் என்று மாண்புமிகு கலைஞரே கூறியுள்ளதை நானும் படித்திருக்கிறேன். நான் குறிப்பிட்டது வீட்டு நாயைத் தான்.

டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, நண்பர் திரு. அம்பிகாபதி அவர்கள் இங்கே தான் பேசுகின்ற நீண்ட பேச்சுக்கு இடையிலே நான் ஏற்கனவே எழுதியவைகளையும், சொன்னவைகளையும் ஆதாரங்களாக எடுத்துப் படித்ததற்காக, சொன்னதற்காக நன்றியைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். மாநில சுயாட்சி பற்றி நான் ஏற்கனவே எழுதியவைகளைப் படித்துக் காட்டினார்கள். அதைக் கேட்டுக் கொண்டுதான் வந்தேன். ஆனால், இதே விஷயத்தை, இதே அவையிலே 1974-ஆம் ஆண்டு எடுத்து வைத்து விவாதித்த பொழுது அவர்களுடைய கட்சியினர் அதை ஏற்றுக் கொள்ளாமல், வாக்களிக்கக் கூட மறுத்து விட்டார்கள் என்பதையும், ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

திரு. மு. அம்பிகாபதி: தலைவரவர்களே, மாண்புமிகு கலைஞர் அவர்கள் இதைக் கேட்கத்தான் வருகிறார்கள் என்று எனக்கு நன்றாகத் தெரியும். நீங்கள் பேசிய பேச்சையும் படித் தேன், கே. டி. கே. தங்கமணி அவர்களின் பேச்சையும் படித் தேன். நீங்கள் இதைக் கேட்க வருவீர்கள் என்பது எனக்குத் தெரியும். அன்று அந்த நிலை; இன்று இந்த நிலை. பிரபஞ்சம் என்பது இடைவிடாமல் மாறிக் கொண்டிருக்கிறது.

திரு. நா. சுந்தரராஜ்: தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. அம்பிகாபதி அவர்கள் அன்று அந்த நிலை, இன்று இந்த நிலை என்று சொல்கிறார்கள். இன்றைய தினம் மாநில சுயாட்சியை ஏற்றுக்கொண்டு இருக்கிறார்களா அல்லது அதிக அதிகாரம் என்பதை ஏற்றுக்கொண்டு இருக்கிறார்களா? எது என்பதைத் தெளிவாகச் சொல்ல வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. மு. அம்பிகாபதி: மாநிலத்திற்கு அதிக அதிகாரம் வேண்டும் என்கின்ற நிலையில் எங்களுக்கு மாற்றம் இல்லை. பிரபஞ்சம் இடைவிடாமல் மாறிக் கொண்டேயிருக்கிறது. எங்கள் இரண்டு கட்சிகளும் சேர்ந்து மத்தியிலே அதிகாரத்திற்கு வந்தால் இப்பொழுது போல் பேசிக் கொண்டா இருப்போம்? அப்பொழுதே அதிகாரங்களைப் பிரித்துக் கொடுத்து விடு வோம்.

திரு. அ. ரகுமான்கான்: மாண்புமிகு தலைவரவர்களே, நம்முடைய அருமை நண்பர் திரு. சுந்தரராஜ் அவர்கள் கேட்டது மிகவும் முக்கியமான கேள்வியாகும். காரணம் "more powers" is different fr m st te aut nomy. அதிக அதிகாரங்கள் வேண்டு மென்று சொல்வது வேறு. பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் இருந்த பொழுது கூட மாநிலங்களில் இருந்த கவர்னர்கள் அதிகாரம் போதாது போதாது என்று சொல்லுகின்ற நிலையிருந்தது.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்—தலைமை)

இப்பொழுது கூட அதிகாரங்கள் போதாது என்று கேட்கின்ற நிலைதான் இருக்கிறது. இது 'more powers' வேண்டுமென்று கேட்பது. ஆனால் ஸ்டேட் அட்டானமி என்பது வேறு. அரசியல் சட்டத்திலே சொல்லப்பட்டிருக்கிறது, மத்திய அரசாங்கத்திற்கு இன்ன அதிகாரங்கள், மாநில அரசாங்கத்திற்கு இன்ன அதிகாரங் கள், பொதுப்பட்டியலில் இன்ன அதிகாரங்கள் என்று சொல்லப் பட்டிருக்கிறது. எனவே, மாநிலங்களுக்கு இன்னின்ன அதிகா ரங்கள் என்று வரையறுக்கப் பட்டிருக்கிறது. ஆகவே, ஸ்டேட் அடானமி என்பது வேறு. கலைஞர் முதலமைச்சராக இருந்த பொழுது இங்கே மாநில சுயாட்சித் தீர்மானம் நிறைவேற்றி னார்கள். அதை எதிர்த்தார்கள். எனவே, இப்பொழுது கேட்பது அதிக அதிகாரமா அல்லது மாநில சுயாட்சியா ? விளக்கம் தேவை.



திரு. மு. அம்பிகாபதி: தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் அவர்கள் கேட்டார்கள். அவர்கள் இதை வலியுறுத்துகின்ற நேரத்தில் மாண்புமிகு டாக்டர் கலைஞரை முஜிபுர ரகுமானுக்கு ஒப்பிட்டார்கள் என்பது என்னு டைய நினைவு. மாநிலத்திற்கு அதிக அதிகாரம் தேவை என்பதும், மாநிலத்திற்கு அதிக சுயாட்சி தேவை என்பதும் மக்களுக்கு நன்மை செய்வதற்கான வழிவகைகள்தான் என்று நான் கருதுகிறேன். பிரிந்து போகின்ற நிலையை எதிர்ப்போம், ஏற்றுக்கொள்ள மாட்டோம். சுயாட்சி என்றாலும், அதிக அதிகாரம் என்றாலும் மாநிலத்தில் உள்ள மக்களுடைய நலன்களைப் பூர்த்தி செய்வதற் கான வழி என்று தான் நாங்கள் கருதுகிறோம்.

[பிற்பகல் 12–30]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. அம்பிகாபதி அவருடைய கருத்துக்களைச் சொல்கிறார். மற்றவர்கள் பேசும போது அவரவர்களுடைய கருத்துக்களைச் சொல்லலாம். இரண்டு உறுப்பினர்களுக்குள்ளே வாதம் போய்க்கொண்டிருந்தால் வேறு யாரும் பேச முடியாது. (திரு. நா. சுந்தரராஜ் நின்று கொண்டி ருந்தார்). உங்களுக்கு வாய்ப்பிருக்கிறது. அந்த வாய்ப்பிலே நீங்கள் நன்றாகப் பேசுங்கள். ரஷியாவைப் பற்றி அவர் சொல் கிறார். சொல்லட்டும். அதற்குப் பிறகு நீங்கள் இந்தியாவைப் பற்றிச் சொல்லுங்கள். இப்பொழுது விவாதமாக்க வேண்டாம்.

திரு. கே. எஸ். ஜி. ஹாஜாஷெரீப்: பாயிண்ட் ஆஃப் ஆர்டர், உதவி சபாநாயகர் அவர்களே, கனம் அங்கத்தினர் அவர்கள் பேசும்பொழுது, சுயாட்சி வேறு, அதிக பவர் வேறு என்று சொன்னார். எதைக் குறிப்பிடுகிறார்? சுயாட்சி வேண்டு மென்று குறிப்பிடுகிறாரா? அல்லது அதிக பவர்ஸ் வேண்டுமென்று குறிப்பிடுகிறாரா ? அதை அவர் விளக்கமாகக் கூற வேண்டும்.

திரு. மு. அம்பிகாபதி: எங்களுக்கு அதிக அதிகாரமும் மாநிலத்திற்குச் சுயாட்சி இரண்டும் ஒன்றுதான். பிரிவினை என்பது இல்லை என்கிறபொழுது, எங்களுக்கு இரண்டும் ஒன்று தான் என்பதை நான் கூறிக்கொள்கிறேன்.

டாக்டர் மு. கருணாநிதி: துணைத் தலைவர் அவர்களே, இது தன்னிலை விளக்கம் தான். ஏனென்றால், நானே அதிக மாக அவருடைய உரைக்குப் பயன்படுத்தப்பட்டிருக்கிறேன். ஆதலால் தன்னிலை விளக்கம். இன்றைக்குப் பேசுவதற்கு எனக்கு வாய்ப்பில்லை. அதனால் தன்னிலை விளக்கமாக அவரிடத்திலே சொல்ல விரும்புகிறேன். பிரிந்து போகும் உரிமை, பிரிந்து போகும் உரிமை என்று சொல்கிறார். மாநில சுயாட்சி கேட்கின்ற யாரும் பிரிவினை கொள்கையை அதிலே உள்ளடக்கி மாநில சுயாட்சி கேட்கவில்லை. மாநில சுயாட்சி என்று கேட்கின்ற

பொழுதே இந்தியாவிலே இருக்கிற எல்லா மாநிலங்களுக்கும் சுயாட்சி என்றுதான் கேட்கிறோமேயல்லாமல், தமிழ்நாட்டிற்கு மாத்திரம் சுயாட்சி என்று அல்ல. சுயாட்சி என்றாலே, தன் ஆட்சி என்று பொருள் படுமே தவிர, தனிஆட்சி என்கிற பொருள் படாது. ஆனால், மாண்புமிகு உறுப்பினர் அம்பிகாபதி அவர்களுக்கு ஞாபகப்படுத்த விரும்புகிறேன், சோவியத் ரஷ்யாவில், அங்கே ஸ்டேட் அட்டானமி, மாநிலத்திற்கான சுயாட்சி, பிரிந்து போகும் உரிமையோடு கூடிய மாநில சுயாட்சி, சோவியத் ரஷ்யாவிலே அளிக்கப்பட்டிருக்கிறது.

திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கலைஞர் அவர்கள்....

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நீங்கள் 11.55-க்கு ஆரம்பித்திருக்கிறீர்கள். இப்பொழுது சற்றேறக்குறைய 12—30 ஆயிற்று. நீங்களே ஓரளவுக்கு, உங்கள் மனதிற்குள் கட்டுப்பாடு வைத்து, முடிந்து விடுங்கள். ஏனென்றால் முழுநேரமும் பேசிக் கொண்டே போய் விடலாம் என்றால், மற்ற உறுப்பினர்களுக்கு வாய்ப்பு கொடுக்க வேண்டும்.

திரு. மு. அம்பிகாபதி : ரொம்ப நன்றி. மாண்புமிகு கலைஞர் அவர்கள் சொன்னது சரியானது தான். நான் சோவியத் கான்ஸ்டிடியூஷனை வைத்திருக்கிறேன். அதிலே, அது இருக்கிறது. ஆனால், அந்த நிலைமை அந்த ஸ்டேட்டஸ் நம்முடைய நாட்டிலே இல்லை. அங்கு யாரும் பிரியவில்லை. கத்தி இருக்கிறது என்பதற்காக யாரும் அதை எடுத்துக் குத்திக் கொள்வதில்லை. அங்கே யாரும் பிரியவில்லை. ஆகையினாலே,..

திரு. அ. ரகுமான்கான் : தவறான தகவல் தருகிறார், சோவியத் ரஷ்யாவிலிருந்து மாநிலங்கள் பிரியவில்லையென்று சொல்கிறார். போலந்தும், பின்லாந்தும் சோவியத் ரஷ்யாவிலிருந்து பிரிந்திருக்கிறது......

மாண்புமிகு பேரவைத் துணை தலைவர் : உறுப்பினர் திரு. அம்பிகாபதி சொல்வதை நீங்கள் கேளுங்கள். நீங்கள் பேசும் பொழுது உங்களுடைய கருத்தைச் சொல்லுங்கள்.

திரு. அ. ரகுமான்கான் : தவறான தகவல் தருகிறார் ....

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அவர் பிராசிக்யூஷன் தரப்பில் வாதாடுகிறார். நீங்கள் டிஃபென்ஸ் 'தரப்பில் வாதாடுகிறீர்கள். பிறகு, நீங்கள் பேசும்பொழுது, உங்கள் கருத்தைக் குறிப்பிடுங்கள். அவருடைய கருத்தை அவர் சொல்லட்டும்.



திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தோழர் லெனின் பிரிந்து போகும் உரிமையை அளித்தார். ஒரு ஸ்டேட் பிரிந்து போயிற்று. பிரிந்தது மீண்டும் சேர்ந்து விட்டது. பிரிந்து போகிற உரிமை உண்டு. ஆனால், அங்கே யாருக்கும் பிரிந்து போக வேண்டுமென்கிற மனப்பான்மை கிடையாது.

திரு. அ. ரகுமான்கான் : போலந்தும், பின்லாந்தும் பிரிந்திருக்கின்றன. ஐ.நா. வில் அவை தனியாக உட்கார்ந்திருக்கின்றன.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. ரகுமான்கான், அவர் சொல்வதை முழுவதும் கேளுங்கள். அவர் கருத்தை முழுவதும் சொல்லட்டும். பிறகு, நீங்கள் முழுவதையும் வேண்டுமானாலும் மறுத்துச் சொல்லுங்கள். நீங்கள் பேசும் பொழுது, பதில் சொல்லுங்கள்.

திரு. மு. அம்பிகாபதி : இந்தியா என்பது சோவியத் யூனியன் அல்ல. இங்கேயிருக்கிற பெருமுதலாளிகளைப் பற்றி எங்களுக்குத் தெரியும். டாடாவும், பிர்லாவும், கோயாங்காவும் சோவியத் யூனியனில் கிடையாது. இந்த நாட்டைத் துண்டாடுகின்ற அமெரிக்க ஏகாதிபத்தியமும், 'நியூ காலனீயிசம்', புதிய காலனி ஆதிக்க சக்திகளும் இன்றைக்கு இருக்கின்ற மல்ட்டி நேஷனல் கார்ப்பரேஷன் இவைகள் ஊடுருவி இருக்கக்கூடிய இந்தியா போன்ற நாட்டில், பிரிந்து போகும் உரிமை பேரபாயத்தை அளிக்கும் என்கிற காரணத்தால், இந்திய அரசியல் சட்டத்தில் பிரிந்து போகின்ற உரிமை கொடுக்க வேண்டுமென்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சி வலியுறுத்திக் கேட்காது. ஆனால், மிகுந்த அதிகாரம் தேவை என்று கேட்போம். மாநிலத்திற்கு நிதி வசதிகளிலே, வேளாண்மை, மற்றும் தொழில் வளர்ச்சி போன்றவற்றிலே, அதிகமான அதிகாரம் தேவை என்பதை இந்திய கம்யூனிஸ்ட் கட்சி வலியுறுத்துமே தவிர, சோவியத் யூனியனிலே இருப்பதைப் போல, இங்கே இருக்க வேண்டுமென்று நாங்கள் சொல்லமாட்டோம். அது சோவியத் யூனியன், இது இந்தியா. அது சோஷலிச நாடு, இது முதலாளித்துவ நாடு. எனவே, அப்படிப்பட்ட நிலை நமக்கு ஒத்து வராது. (திரு. நா. சுந்தரராஜ் எழுந்து நின்றார்) ஐ எம் நாட் யீல்டிங்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. சுந்தரராஜ், நீங்கள் பேசும்பொழுது அதுபற்றி சொல்லுங்கள். இடையிலே குறுக்கிட்டுப் பேச ஆரம்பித்தால், நீங்கள் 3 பேர்கள்தான் இன்று இந்த அவையிலே பேசுகின்ற நிலையிருக்கும். மற்ற உறுப்பினர்களுக்கெல்லாம் வாய்ப்பு கொடுக்கவேண்டும். நான் தெளிவாகச்

சொல்லிவிடுகிறேன், எல்லோருக்கும் வாய்ப்பு வேண்டும், நீங்கள் தயவு செய்து உட்காருங்கள். முன்னாலே இருப்பவர்கள் மட்டும் எழுந்து கொண்டிருந்தால், பின்னால் இருப்பவர்களுக்கு யார் சான்ஸ் கொடுப்பது?

திரு. நா. சுந்தரராஜ்: அவர் பேசிக் ஸ்ட்ரக்கரையே....

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. சுந்தரராஜ் உட்காருங்கள். இங்கே 20 பேர்கள் பேசவேண்டும். நீங்கள் 3 பேர்கள் மட்டுமே பேசிக்கொண்டு இருந்தால் மற்றவர்களுக்கு வாய்ப்பில்லாமல் போய்விடும்.

திரு. நா. சுந்தரராஜ்: தயவு செய்து நான் என்ன சொல்ல வருகிறேன் என்று கேளுங்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நீங்கள் என்ன பேசப்போகிறீர்கள் என்பது எனக்குத் தெரியும். (குறுக்கீடு) (திருவாளர்கள் நா. சுந்தரராஜ், மு. அம்பிகாபதி, பொ. உத்திராபதி, ஜி. மூர்த்தி, என். ஏ. பூங்காவனம் ஆகியோர் நின்று கொண்டிருந்தார்கள்.)

தயவு செய்து அனைவரும் உட்காருங்கள். எல்லா உறுப்பினர்களுக்கும் வாய்ப்பு கொடுக்கவேண்டும். காலத்தைப் பார்க்காமல் நேரத்தைக் கொடுத்துக் கொண்டிருக்கிறேன். இடையிலே இன்டர்வென்ஷன் வந்து விட்டால், மற்ற உறுப்பினர்களுக்கு வாய்ப்பு இல்லாமல் போய்விடும். நீங்கள் முன்னாலே இருந்து எழுந்து பேசுகிறீர்கள். பின்னாலே இருப்பவர்களும் சட்ட மன்ற உறுப்பினர்கள்தான். அவர்களுக்கும் வாய்ப்புக் கொடுக்கவேண்டும். நீங்கள் பதில் சொல்லும்போது உங்களுடைய கருத்துக்களை சொல்லுங்கள். (குறுக்கீடு) இது முறையல்ல. எல்லா உறுப்பினர்களுக்கும் வாய்ப்பு தரவேண்டும். திரு. சுந்தரராஜ் ரெலவன்டாக இருந்தால் பேசுங்கள்.

திரு. நா. சுந்தரராஜ்: துணைத் தலைவர் அவர்களே, இங்கே இரண்டு நாட்டைப் பற்றிச் சொன்னார்கள். சோவியத் நாடு சோசலிச நாடு என்றும், இந்தியா முதலாளித்துவ நாடு என்றும் சொன்னார்கள். இந்திய நாடு Democratic Socialistic என்பதுதான் அதனுடைய பெயர். அந்த வகையிலே நம்முடைய நாடு மதசார்பின்மை என்று சொல்லியிருக்கிறார்கள். அதை அடிப்படையிலே மாற்றுவதற்கான முயற்சியிலே நம்முடைய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி நண்பர் கூறியதை நீங்கள் அனுமதிக்கப் போகிறீர்களா என்பதை கேட்க விரும்புகிறேன்.



திரு. ஜி. மூர்த்தி: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்திய நாட்டு அரசியல் சட்டத்திலே இப்படித்தான் எழுதி இருக்கிறது. முதலாளித்துவ நாடு மட்டுமல்ல. இந்த நாடு ஜாதி வெறி பிடித்த நாடு. அதற்கு வக்காலத்து வாங்குவதற்காக நான் வெட்கப்படுகிறேன்.

திரு. மு. அம்பிகாபதி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாநிலத்துக்கு சுயாட்சி வருகிறதோ இல்லையோ, என்னைக் கொஞ்சம் காப்பாற்றுங்கள். இன்றைக்கு மாண்புமிகு உறுப்பினர் சுந்தரராஜ் சொன்னால், டெமாக்ரடிக், செக்குலர், சோசிலிஸ்ட் ரிபப்ளிக்கா? இது ஜனநாயக, மத சார்பற்ற, சோசிலிச குடியரசு அல்லவா? எங்கு பார்த்தாலும் கலவரம், மதத்தின் பேரால் கலவரம், ஜாதியின் பேரால் கலவரம், பணத்தின் பேரால் கலவரம், இத்தனை கலவரங்களும் நடைபெறுகின்றதே; சர்க்கரை என்று எழுதி இருக்கிறது. அது இனிக்குமா, போர்டு போட்டிருக்கிறது. ஆனால் கீழே பஞ்சம் இருக்கிறது, வறுமை இருக்கிறது. சோசலிசம் என்றால் சகல பேருக்கும் வேலை இந்த நாட்டிலே உண்டா? 33 வருடங்களுக்குப் பிறகு. below the poverty line. வறுமையின் எல்லைக் கோட்டிற்குக்கீழே என்று கேட்கிறேன். டாக்டர் கலைஞர் அவர்கள் ஒத்துக் கொள்வார்களா? சோசலிசம் என்று போர்டிலே போட்டிருக்கிறதே தவிர, வறுமை இல்லை, பஞ்சம் இல்லை, பசி இல்லை, விபச்சாரம் இல்லை, இந்த நாட்டில் வேலையில்லா திண்டாட்டம் இல்லை என்று காங்கிரஸ் நபர்கள் சொல்லத் தயாரா? லட்சக்கணக்கான பேர்கள் பிச்சை எடுக்கிறார்கள். தஞ்சாவூரில் தான் பெற்ற பிள்ளையும் தானும் தூக்குப் போட்டுக்கொண்டு செத்திருக்கிறார்கள். வெட்கம் கெட்ட நாடு, இதை மறுக்க முடியுமா?

(திருவாளர்கள் கே. எஸ். ஜி. ஹாஜாசெரீப், நா. சுந்தரராஜ், கே. எம். தங்கமணி நின்றார்கள்.)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: ஒவ்வொருவராக எழுந்து கேளுங்கள். உங்கள் கட்சியிலே எல்லோரும் எழுந்து நிற்கிறார்கள். உங்களுக்குள் ஒரு முடிவெடுத்து எழுந்து நில்லுங்கள்.

திரு. கே. எஸ். ஜி. ஹாஜாசெரீப்: On a point of order, I want to know whether there is no unemployment problem even in Socialistic countries like China or Soviet Russia or any other country.

திரு. மு. அம்பிகாபதி: சோவியத் யூனியனில், சோசிலிச நாடுகளில் வேலையில்லாத் திண்டாட்டம் என்பதே இல்லை. மாண்புமிகு திரு. ஹாஜாஷெரிப் அவர்கள் நிரூபிக்கத் தயார். (குறுக்கீடு) டாக்டர் கலைஞர் அவர்களும் என்னோடு வரத்தயாரா என்று கேட்க என்னுடன் புறப்பட்டு வரத்தயாரா விரும்புகிறேன்.

[பிற்பகல் 12-40]

(மாண்புமிகு பேரவைத் தலைவர் —தலைமை).

டாக்டர் . மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, அருமையான சந்தர்ப்பம். குறுக்கிட்டு கெடுத்து விடாதீர்கள். எங்களை எல்லாம் ரஷ்யாவுக்கு அழைத்துப்போக திரு. அம்பிகாபதி அவர்கள் முன் வந்து இருக்கிறார்கள். எத்தனை பேரை அழைத்துக்கொண்டு போகத் தயாராக இருக்கிறார்களோ அவ்வளவு பேர் வருவதற்குத் தயராக இருக்கிறோம்.

திரு. மு. அம்பிகாபதி ; தலைவர் அவர்களே, எதிர்க்கட்சித் தலைவரும், காங்கிரஸ் கட்சித் தலைவர் திரு. ஹாஜா ஷெரிப் அவர்களும் அந்த நாட்டைச் சுற்றிப் பார்க்க விரும்புவார்களானால் அதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்வதற்கு, அங்கே போவதற்கு ஏற்பாடுகளைச் செய்யலாம். நானும், திரு. கண்ணதாசன் அவர்களும் போய்விட்டு வந்து இருக்கிறோம். (குறுக்கீடு) ஆளும் கட்சி சார்பில் மதிப்பிற்குரிய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சென்று வந்து இருக்கிறார்கள். எனவே நீங்கள் அங்கே சென்று வந்தால் நல்லது. ஏனெனில் அந்த நாட்டின் கான்ஸ்டிடியூஷனிலேயே, அந்தத்தேசத்தின்குடிமகனுக்கு வேலை கொடுக்கவில்லை என்றால், அவர் கோர்ட்டுக்குப் போகலாம் என்று இருக்கிறது. வேலை கொடுக்கவேண்டும் என்பது 'பர்த் ரைட்'. வேலை என்பது பிறப்புரிமை. சோவியத் அரசியல் சட்டத்திலேயே அந்த உரிமை கொடுக்கப் பட்டு இருக்கிறது. இந்திய நாட்டின் அரசியல் சட்டத்தில் அந்த உரிமை கிடையாது. அந்த நாட்டு அரசியல் சட்டத்தில் தொழில் செய்ய உரிமை உண்டு.

டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, நான் முக்கியமான ஒரு விளக்கத்தை இங்கே சொல்லியாகவேண்டும். நான் ஏதோ சோவியத் ரஷ்யாவைப் பற்றி பெருமை குறைவாக பேசியது போலவும், அழைத்துச் சென்று காட்டினால் தான் தெரியும் என்பது போலவும் திரு. அம்பிகாபதி அவர்கள் நினைப்பது சரியல்ல. சோவியத் ரஷ்யா மீது எனக்கு மிகுந்த பெருமையான எண்ணங்கள் உண்டு என்பதை நான் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. மு. அம்பிகாபதி : ரொம்பவும் நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. அம்பிகாபதி, டாக்டர் சொல்லியிருக்கிறார், நீங்கள் உணர்ச்சி வசப்பட்டு பேசக் கூடாது என்று. அமைதியாகப் பேசுங்கள்.



திரு. மு. அம்பிகாபதி : தலைவர் அவர்களே, ரொம்பவும் நன்றி. மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் கலைஞர் அவர்கள் சோவியத் யூனியன் மீது ரொம்பவும் அன்பும், ஈடுபாடும் உள்ளவர்கள் என்பது எனக்குத் தெரியும். அவரைக் குறைத்துச் சொல்லவில்லை. சாட்சியமாகத்தான் அவர்களை அழைத்துப் போகவேண்டும் என்று சொன்னேன். எனவே சோவியத்யூனியனில் வேலைக்கு உத்தரவாதம் கொடுத்து இருக்கிறது என்பது சட்டத்திலேயே இருக்கிறது. அதுமட்டுமல்ல எல்லா சோசிலிச நாடுகளிலும் இருக்கிற அரசியல் சட்டங்களில் வேலைக்கு உத்தரவாதம் கொடுக்கபபட்டு இருக்கிறது. அப்படிப்பட்ட அரசியல் சட்டம் நம்முடைய நாட்டிலே உருவாக்கப்படவேண்டும். மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் வேண்டும் என்று நாம் கேட்கிற முறையிலே, இந்தத் தீர்மானத்தை இன்றைக்கு மாண்புமிகு உறுப்பினர் தோழர் உமாநாத் அவர்கள் முன்மொழிந்து இருக்கிறார்கள். மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் வேண்டும் என்பதை நாம் வலியுறுத்துவதற்காக இங்கே இருக்கும் அனைத்துக் கட்சிகளும் தமிழகத்தில் தொழில் வளர்ச்சி அடையவும், விவசாய மேம்பாடு அடையவும், பாசன வசதிகள் மேம்பாடு அடையவும், பல்வேறு துறைகளில் தமிழகம் வளர்ச்சி அடையவும் என்கிற முறையில் மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் இருக்குமானால் அத்தகைய அதிகாரத்தைக் கொண்டு சிறப்பான வகையில் திட்டங்களை நிறைவேற்ற முடியும் என்ற அடிப்படையில், இந்தத் தீர்மானத்தை ஏகமனதாக நிறைவேற்றுகிற முறையில் அனைத்துக் கட்சியைச் சேர்ந்தவர்களும் முன் வரவேண்டும் என்று கேட்டு முடித்துக் கொள்கிறேன். நன்றி.

தி . இரா. தாமரைக்கனி : பாயின்ட் ஆப் ஆர்டர் சார். இந்த நாட்டில் பிறந்து விட்டு அவர் இந்த நாட்டையே குறைத்துப் பேசலாமா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நம்முடைய சுதந்திர நாடு. அந்த உரிமை உண்டு. இதிலே பாயின்ட் ஆப் ஆர்டர் இல்லை.

டாக்டர் கே. சமரசம் : பேரவைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. உமாநாத், மு. அப்பிகாபதி, ரா. கிருஷ்ணன், பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் ஆசியவர்களால் தனியார் அலுவல்கள் என்ற தலைப்பில் தனி நபர் தீர்மானம் என்ற வகையில் கொண்டுவரப் பட்டுள்ள தீர்மானத்தின் மீது, அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் இந்த நாட்டு மக்களின் உணர்வுகளை எதிரொலிக்கும் வகையில் நான் சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

பொதுவாகவே, இந்தக் கொள்கையைப்பற்றி சொல்கிற போது, எங்கள் அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக்

கழகத்தின் கொள்கை—கட்டுண்டு வாழோம், பிரிவினை நாடோம், சமநிலையில் இணைவோம் என்ற கருத்தாகும். அது தான் எங்களுடைய ஆட்சிக்கட்சியின் கொள்கை என்று கூறிக் கொள்கிறேன். அந்த அடிப்படையில் மாநில அரசு இல்லை என்றால், மத்திய அரசு ஒன்றேது? அதைப் போலவே இந்தியத் துணைக் கண்டத்தின் நிலைமையைப் பார்க்கிறபோது, மத்திய அரசு என்று ஒன்று இல்லாவிட்டால், மாநில அரசுகளுக்குப் பாதுகாப்பு ஏது என்பதையும் நாம் ஏற்றுக் கொண்டாகவேண்டும். உறவுக்குத் துணையிருப்போம்; உரிமைக்கு உயிர் கொடுப்போம் என்று சொல்லக்கூடிய அண்ணாயிசத் தத்துவத்தின் கருத்துப்படி, பிறர் வலிவையும், மாற்றான் வலிவையும், தனது வலிவையும் துணை வலிவையும் தூக்கிச் செல்லக்கூடிய வகையில் இந்த நாட்டின் உணர்வுகளை இங்கே வெளிப்படுத்துவது நல்லதாக இருக்கும் என்று நான் நம்புகிறேன்.

இந்தத் தீர்மானத்தைப்பற்றி இங்கே பேசும்போது இதை நிறைவேற்றுவதற்கு முன்பாக, மத்திய அமைச்சர்களை அல்லது பிரதமரைக் கண்டு கேட்பதற்கு முன்பாக, பிற மாநில முதலமைச்சர்களை அல்லது அரசியல் தலைவர்களை அல்லது மேதைகளை எல்லாம் கருத்து கேட்பதற்கு முன்பாக, தமிழகத்தினுடைய அரசியல் கட்சித் தலைவர்கள், ஏற்கெனவே அனுபவம் பெற்றவர்கள், இந்த நாட்டின் மேதைகள் இவர்களை எல்லாம் ஒன்று திரட்டி அவர்களுடைய கருத்துக்களை நாம் கேட்பது சாலச் சிறந்ததாக இருக்கும். அப்போதுதான் இது ஒரு, ஆட்சியின் கொள்கையாக இல்லாமல், ஒரு கட்சியின் கொள்கையாக இல்லாமல் இந்த நாட்டின் உணர்வுகளாக இருக்க முடியும் என்பது என்னுடைய தாழ்மையான, திடமான கருத்தாகும்.

அந்த அடிப்படையில் இன்றையதினம் தமிழக அரசு இந்தத் தீர்மானத்தை பரிசீலிப்பதற்கு முன்பாகவே, ஏற்கெனவே இந்த அரசை இது வரையிலே ஆண்டு அனுபவித்தவர்களுடைய நல்ல அனுபவங்களை நாம் பெறவேண்டும். மேலும் ஒரு அரசு எவ்வாறு இருக்க வேண்டுமென்று மேதைகள் எடுத்துச் சொல்லியிருக்கிறார்களோ அதை பரிசீலனை செய்ய வேண்டும். இந்தியத் துணைக் கண்டத்தில் இருக்கிற ஒரு மாநிலம் எப்படி வாழ வேண்டுமென்று யார் யார் என்னென்ன வகையில் ஒரு வரைகோடு அமைத்திருக்கிறார்களோ அதைப்பற்றி தெளிவாகப் புரிந்துகொண்டு இந்தத் தீர்மானத்தைப்பற்றி பரிசீலிப்பது மிக நல்லதாக இருக்கும் என்பது என்னுடைய தாழ்மையான அபிப்பிராயம் ஆகும்.

இங்கே பேசும்போது திரு. உமாநாத் அவர்களும், திரு. மு. அம்பிகாபதி அவர்களும் பலபல கருத்துக்களைச் சொன்னார்கள். அதிலே பல கருத்துக்கள் நமக்குக்கூட உடன்பாடு உடையது தான்; இல்லை என்று மறுக்கவில்லை. இந்தியாவுக்கு வந்த ஒரு பெரிய அறிஞர் சொன்னார்: நான் இந்தியா முழுவதும் சுற்றிப்பார்த்தேன்; ஆனால் இந்தியனைக் காணவில்லை என்று சொல்கிறார்.



இங்கே சுலோகங்கள் இருக்கின்றன. இந்தியராக வாழ்வோம், இந்தியராக ஒன்றுபடுவோம் என்றெல்லாம் சொல்லுகிறார்களே தவிர, இந்தியாவில் இந்தியன் இருக்கிறானா என்பது கேள்விக் குறியாக, ஆச்சரியக் குறியாக இருக்கிறது என்று சொன்னால் அது மிகையாகாது. இந்தியாவைச் சுற்றிப்பார்த்த ஒருவர் சொன்னார்: நான் கேரளாவுக்குப் போனேன்; கேரளியனைப் பார்த்தேன்; நான் கர்நாடகத்திற்குப் போனேன்; அங்கே கன்னடியனைக் கண்டேன்; வங்காளத்திற்குப் போனேன்; ஒரு வங்காளியைப் பார்த்தேன்; தமிழ்நாட்டுக்குப் போனேன் அங்கே தமிழனைப் பார்த்தேன்; ஆனால் இந்தியாவில் நான் இந்தியனைக் காணவில்லை என்று சொல்லியிருக்கிறார். நாம் பேசுகிறோம். காஷ்மீரத்திலிருந்து கன்னியாகுமரி வரை ஒன்றே, நாம் இந்தியராக இருப்போம், வாழ்வோம் என்று சொல்லுகிறோமே தவிர, சர்க்கரை என்று ஏட்டில் இருக்கிறதே தவிர அது நாட்டில் நம்முடைய உள்ளத்தில் இனிக்கவில்லை என்பதை நாம் ஒத்துக் கொண்டு ஆகவேண்டும். அந்த வகையில் இன்று இருக்கக்கூடிய இந்தப் பிரச்சினையை நாம் அணுகுவது சாலப்பொருத்தமாக இருக்கும் என்பது என்னுடைய கருத்தாகும்.

[மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் தலைமை.]

அதுமட்டுமல்ல. சுதந்திரம் எதற்காகப் பெறப்பட்டதோ, இந்திய நாடு விடுதலை பெறவேண்டுமென்று எதற்காக போராடினோமோ அந்த போராட்டம் இன்று நமக்கு சுபிட்சம் பெறத் தக்க வகையில் 33 ஆண்டுக்கால வாழ்வு, அரசியல் வாழ்வு இந்தியத் துணைக் கண்டத்தின் நிலை இல்லை என்பதை யாரும் மறந்துவிட முடியாது. அந்த நிலையில்தான் இருக்கிறது. இன்னும் சொல்லப்போனால் வேங்கையிடமிருந்து மீட்ட மானை வேடன் அபகரித்துக் கொண்டதைப்போல ஒரு உணர்வு மாநில மக்களுக்கு பொதுவாக, தென்னக மக்களுக்கு குறிப்பாக இருக்கிறது என்று சொன்னால் அது மிகையாகாது. 'வடக்கு வாழ்கிறது தெற்கு தேய்கிறது' என்று முன்னால் ஒரு சுலோகம் சொன்னோம். அது வளர்ச்சி, வறட்சி என்ற தத்துவத்திலே இல்லாவிட்டாலும் கூட, அதிகார வரம்பு என்ற வகையிலே இன்றையதினம் வடக்கு வாழக்கூடிய வகையில், மாநில உணர்வுகள் ஸ்தம்பிக்கக்கூடிய வகையில் மத்திய அரசு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்பதை யாரும் மறுக்கமாட்டார்கள் என்பது என்னுடைய கருத்தாகும்.

அது மட்டுமல்ல. இந்தியா முன்னேறியிருக்கிறது என்று சொல்கிறார்கள். இந்தியனுடைய செல்வம் இன்றையதினம் எப்படி இருக்கிறது, பொருளாதாரம் எப்படி இருக்கிறது என்று பார்த்தால் வலிவாக உள்ள இரண்டு காளைகளை விட்டு, 8 பசு மாடுகளை கட்டிவைத்த நிலையிலேதான் இந்திய பொருளாதாரமும் இருக்கிறது. இதைச் சொன்னால் யாரும் கோபித்துக் கொள்ளமாட்டார்கள் என்று நம்புகிறேன். இந்த நிலையை நாம் நிச்சயமாக பரிசீலனை செய்தாக வேண்டும்.

அது மட்டுமல்ல. இன்றையதினம் மொழிப் பிரச்சினை இருக்கிறது. மொழிப் பிரச்சினை என்று வருடபோது இருமொழித் திட்டம் என்று நாம் சொல்கிறோம். உலகத் தொடர்புக்கு ஆங்கிலம் போதும். நாம் வீட்டை விட்டு வெளியே போகும் போது எல்லாயிடத்திலும் ஆங்கிலத்தைப் பயன்படுத்தலாம் எனறு சொல்கிறோம். அது மாநில மக்களுடைய உரிமை என்று சொல்கிறோம். ஆனால் மும்மொழித்திட்டம் தேவை என்று அவர்கள் சொல்கிறார்கள் என்று சொன்னால் இது நியாயம்தானா? மாநில மக்களை அவமதிக்கக்கூடிய செயல் ஆகாதா? எதற்காக சுதந்திரம் பெற்றோமோ அந்த உணர்வுகளைக்கூட நம்மால் உணர்ந்துகொள்ளமுடியாமல், அனுபவிக்க முடியாமல் இன்னொரு கொத்தடிமைக்கு அல்லது வேறு ஒரு அடிமை வாழ்வை ஏற்படுத்துவதற்குள்ள சூழ்நிலை இருக்கலாமா என்பதைப்பற்றி அனைவரும் சிந்தித்தாக வேண்டும் என்று நான் இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

[பிற்பகல் 12—50]

மொழி என்று வருகின்றபோது பலர் பல மொழிகளைக் கற்றிருப்பது பெருமைப்படக்கூடிய ஒன்றுதான். பலர் பல மொழிகளைக் கற்று இருப்பதை பெருமையாகக் கருதக்கூடியவன் நான். பன்மொழிப் புலவராக ஒருவர் இருப்பதைப் பற்றி எனக்குக்கவலை இல்லை. ஆனால், இந்த மொழியைப் படித்தால் தான் இந்தியனாக இருக்க முடியும், வாழ முடியும், பதவி பெற முடியும், உயர முடியும் என்று சொன்னால் அது தேவைதானா, நியாயம் தானா? இதை சம்பந்தப்பட்டவர்கள் நிச்சயமாக பரிசீலனை செய்ய வேண்டும். தங்களுக்கு கருத்துகளை விளக்குவதற்கு இந்த நேரத்தைப் பயன்படுத்தி விளக்கவேண்டும் என்று கூட நான் அவர்களைக் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். மத்திய அரசு, மாநிலஅரசு இதுவரையிலும் பல கொள்கைகளிலே ஒற்றுமையில் வேற்றுமை, வேற்றுமையில் ஒற்றுமை என்று எப்படி எப்படியோ இருந்து வந்திருக்கின்றன. இப்போது நாள் ஆக ஆக நிலைமை எப்படிப் போகிறது என்று சொன்னால் மாநிலத்தின் உரிமைகளை மைய அரசு பறிக்கக்கூடிய சூழ்நிலை ஒவ்வொன்றாக வந்துகொண்டிருக்கின்றது. கல்வியை மத்திய அரசு எடுத்துக்கொள்ளலாமா, மின்சாரத்தை மத்திய அரசு எடுத்துக்கொள்ளலாமா, அலுமினியத்தை மத்திய அரசு எடுத்துக் கொள்ளலாமா, தொழில்களை மத்திய அரசு எடுத்துக்கொள்ளலாமா, உள்ளாட்சி நிர்வாகத்தையே மத்திய அரசு எடுத்துக் கொள்ளலாமா என்று சொல்லக்கூடிய நிலைமை படிப்படியாக போய்க்கொண்டிருக்கின்ற ஆபத்தினை தமிழக மக்கள் நிச்சயமாக உணருவார்கள். தமிழக மக்களின் மீது உரிமை கொள்ளக் கூடிய, அரசியல் கட்சித் தலைவர்களும் தெளிவு பெறுவார்கள் என்றும், அந்த வகையிலே முன்னின்று போராட முன்வருவார்கள் என்றும் நான் நம்புகிறேன். அந்த வகையில் இப்படிப்பட்ட சூழ்நிலையில் அப்படிப்பட்ட ஒரு நிலையை மாற்றி அமைப்பதற்கு





நம்முடைய உணர்வுகளை, தேவைகளை நாமே எந்த வகையில் ஒருவருக்கொருவர் புரிந்துகொண்டு ஆட்சி செய்யவேண்டுமோ அப்படிச் செய்வதற்குரிய வகையில் நாம் இருக்கவேண்டும், அப்படிப்பட்ட அதிகாரத்தை பெறத்தக்க வகையில் நாம் ஈடுபட வேண்டும் என்பதுதான் என்னுடைய கொள்கையாகும்.

இன்றைய தினம் மின்சாரம் மத்திய அரசுக்குத் தேவை என்ற நிலை வந்தால் மாநில அரசின் கதி என்னவாகும்? அது எங்கே போய் முடியும்? அவர்கள் ஒதுக்கித் தருகின்ற கோட்டா சிஸ்டத்தைக் கொண்டு வந்துவிட்டால் நம்முடைய தொழில் நிலைமை என்ன? இந்த நாடு இருளில் மூழ்காதா என்பதைப் பற்றி நீங்கள் சிந்தித்தேயாகவேண்டும். மேலும் அவர்கள் அரிசன நலத்துறையைக் கூட எடுத்துக் கொள்ளலாமா என்று இருக்கிறார்கள். ஒரு நாடு என்று சொல்லும்போது இந்தியா முழுவதும் ஒரே மொழி, ஒரே கலாசாரம், ஒரே பண்பாடு, ஒரே நாகரிகம் கொண்டதாக இல்லை. "சீர்கொண்ட நெடிய கடல் சூழ்கின்ற உலகத்தில் ஜெயஹிந்து வாழ்கின்ற சுயஹிந்து தேசத்தில், சிந்தை தமகிழ் அங்கமொடு, வங்கம், கலிங்கம், கொந்தளம், குடகு, காஷ்மீரம், சிங்கார மலையாள நேபாள மாளவம், செப்பறியும் ஆந்திரம் திராவிடம், மராடம், பற்பரம், கூர்ஜரம், விதற்பம், விராடம், தீதில்லாக் கர்நாடக காம்போஜர் முதலான ஓதும் 56 தேசங்கள் என்று விக்டோரியா மகாராணி நம் நாட்டுக்கு விடுத்த அறிக்கைக்கு முன்பு பிரிந்து இருந்தது. கலாசாரம், பண்பாடு, நாகரிகம், மொழி இவைகள் எல்லாம் வெவ்வேறாக இருந்தன. ஆட்சிக் கட்டிலில் வந்து அமர்ந்த காரணத்தால் அதை ஒன்றாக இணைத்தார்கள். அதற்குப் பிறகு அந்தக் கொள்கைகளுக்கு சட்டதிட்டங்களுக்கு உட்பட்டு நாம் இயங்கிக்கொண்டிருக்கிறோம். ஆனால், அதே நேரத்தில் ஒரு நாட்டினுடைய கலாசாரத்தை இன்னொரு நாடு அடிமைப்படுத்த வேண்டிய நிலைமை வந்தால் பாதிக்குமா பாதிக்காதா? அரிசன் என்று சொன்னால்கூட அவர்களுடைய நடையுடை பாவனை வடக்கே இருப்பதற்கும் இங்கு இருப்பதற்கும் வேறு வேறாகத்தான் இருக்கும். இன்னும் சொல்லப் போனால் மாநிலங்களில் இருக்கக்கூடிய நீதிபதிகளைக்கூட மத்திய அரசு நியமனம் செய்யலாம் என்று சொல்லக்கூடிய ஒரு நிலைமை வந்திருக்கின்றது. அப்படி ஒரு நிலைமை வந்தால் நீதி எப்படி இருக்கும் என்பதை நீங்கள் உணர்ந்துகொள்ளவேண்டும். ஆங்கிலத்தை என்னால் புரிந்து கொள்ள முடியும், பேச முடியும். ஆனால், உணர்ச்சிகளைப் பகிர்ந்துகொள்ள முடியாது. தமிழிலே உணர்வுகளைப் புரிந்து கொள்ளுவதுபோல் ஆங்கிலத்திலே பேசக்கூடிய பேச்சினாலும், எழுத்தினாலும் என்னுடையஉணர்ச்சிகளைவெளிப்படுத்துவதற்கு என்னால் முடியாது. ஆகவே, அப்படிப்பட்ட நிலையில் தமிழ் நாட்டில் நீதிபதியை இந்திய அரசு நியமனம் செய்யலாம் என்ற நிலை வந்தால் மராட்டியத்திலே, வங்காளத்திலே, காஷ்மீரிலே யிருக்கக்கூடியவர்களைப் போட்டால் அவர்களுக்கு தமிழ் உணர்வு,

தெரியாத காரணத்தினால், இவர் என்ன சொன்னார், அவர் என்ன சொன்னார் என்ற நிலை தெரியாமல் இடையிலே சொல்லக்கூடியவர்களின் கருத்தை வைத்து நீதி வழங்கினால் நீதி நிலைக்குமா என்பதை சம்பந்தப்பட்டவர்கள் நினைத்துப் பார்க்க வேண்டும். அந்த வகையில் இப்படிப்பட்ட மிகத் தெளிவான அடிப்படையான, நியாயமான நம்முடைய உணர்வுகளை வெளிப்படுத்தி, நம்முடைய ஆட்சியை நாம் நடத்திச் செல்லத்தக்க வகையில் நாம் சில உணர்வுகளைப் பெற்றிருக்கின்ற இந்த நேரத்தில் இப்படிப்பட்ட உரிமைகளை விட்டுக் கொடுக்கலாமா கூடாதா என்பதைப் பற்றி ஒரு மாநில முதல்வர், ஒரு கட்சி, ஒரு அணி — அப்போது கம்யூனிஸ்ட் கட்சி, காந்தி காமராஜ் காங்கிரஸ் போன்ற கட்சிகள் சேர்ந்து அமைக்கப்பட்டிருந்த மாதிரி ஒரு அணி — என்று இல்லாமல் எதிர் அணி, புதிர் அணி என்று இல்லாமல் எல்லோரும் சேர்ந்து பேசி ஒரு முடிவுக்கு வரவேண்டும். அப்போதுதான் இது நல்லமுறையில் தீர்வு காண முடியும். அப்போதுதான் உட்பூசல் இல்லாத ஒரு நிலையை உருவாக்கிக்கொள்ள முடியும் என்பது என்னுடைய சொந்தக் கருத்தாகும்.

ஆகவே, அந்த அடிப்படையில் எது எதை எப்படிச் செய்ய வேண்டுமோ அப்படிச் செய்வதற்கு நாட்டு மக்கள் மத்தியிலே பல்வேறு அறிவாற்றல் பெற்ற, பிரசித்தி பெற்ற அரசியல் தலைவர்களும் முன்னோடிகளும் முன் வர வேண்டும் என்று நான் இந்த நேரத்தில் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அது மட்டும் அல்லாமல், மத்திய அரசையும் மக்கள் தான் தேர்ந்தெடுக்கிறார்கள். மாநில அரசுகளையும் மக்கள் தான் தேர்ந்தெடுக்கிறார்கள். அப்படி மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மாநில அரசுகளை மத்திய அரசு நினைத்தால் கலைக்கும் என்கிற ஒரு நிலை தேவைதானா என்று கேட்க விரும்புகிறேன். அவர்களையும் மக்கள் தான் ஓட்டுப்போட்டு தேர்ந்தெடுக்கிறார்கள், இவர்களையும் மக்கள் தான் ஓட்டுப்போட்டு தேர்ந்தெடுக்கிறார்கள். இப்படி அதற்குரிய காலங்கள் முடியுமுன்பே ஒரு அரசை மத்திய அரசு நினைத்தால் கலைக்கலாம் என்ற ஒரு நிலை ஒரு அரசியல் வாதியின் அரசியல் வாழ்க்கைக்கு தேவைதானா ? அல்லது அரசியல் கட்சிக்கு தேவைதானா என்பதை இங்குள்ள எல்லாக் கட்சிக்காரர்களும் எண்ணிப் பார்க்க வேண்டும்.

இன்றையதினம் ஆட்சிப் பொறுப்பில் நாங்கள் இருக்கலாம், கால கட்டங்களில் வேறு ஒருவர் இருந்திருக்கலாம். இன்னும் அப்படி வரக்கூடியவர்கள் பலர் 20 ஆண்டுகளுக்கு பிறகுகூட இருக்கலாம். ஆனால், யார் வந்தாலும், அவர்கள் என்னென்ன மக்களுக்குச் செய்ய வேண்டும் என்று நினைக்கிறார்களோ அதை



செய்து முடிக்கக்கூடிய அளவில் உரிமை பெற்றவர்களாக இருக்க வேண்டும். அந்த உரிமை பெறாதவர்கள் யார் ஆட்சியில் இருந்தாலும் நாட்டு மக்களுக்கு நல்லதை செய்ய முடியாது என்பது என்னுடைய தாழ்மையான கருத்தாகும். அந்த அடிப்படையில், அந்த உணர்வினை பெறத்தக்க வகையில், நாம் மத்திய அரசோடு, பல்வேறு விஷயங்களில் முக்கிய முடிவுகளை எடுத்துச் சொல்லும் வகையில் நாம் ஒன்றுபட்டு நிற்க வேண்டும் என்பதை இந்த நேரத்தில் வலியுறுத்திக் கூற கடமைப்பட்டிருக்கிறேன்.

ஆகவே, ''வாங்கிய தாய்க்கே மகன் என்றால், அதை தாங்கிய தாயின் பெயர் என்ன'' என்று சொல்லக் கூடிய வகையில் பொது மக்கள் கண்ணீர் வடித்த காட்சியினை நாம் இடையிலே பார்த்தோம். அதிகாரத்தை அதிகமாக கொடுத்த காரணத்தினால், இன்னொரு அதிகாரம் தவறாகப் பயன்படுத்தப்பெற்ற காரணத்தினால் இடையிலே ஏற்பட்ட இன்னல்கள் என்னவென்று நாட்டுக்கு தெரியும். ஆகவே, அது போன்ற இன்னல்கள் தொடர்கதையாக இல்லாமல், நல்லமுறையில் முடிக்கத்தக்க வகையில் நாம் நம்முடைய உணர்வுகளை பகிர்ந்து கொள்ள வேண்டும் என்று இந்த நேரத்தில் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அது மட்டும் அல்லாமல், நிதி ஒதுக்கீடு என்று சொன்னால், 1947-க்கும் 1980- க்கும் இடையே உள்ள வித்தியாசத்தைப் பார்க்கிறபோது வரிகள் பெருகியிருக்கின்றன. ஆனால், அதே அடிப்படையில் மாநிலங்களுக்கு கொடுக்கக் கூடிய உதவித் தொகை குறைந்து கொண்டிருக்கிறது. மத்திய அரசு மாநிலங்களிலிருந்து வரக்கூடிய வருவாயை மிகப் பெரிய அளவில் வாங்கி வைத்துக் கொண்டு, திருப்பிக் கொடுக்கிறபோது, கொஞ்சம் கொஞ்சமாக குறைத்துக் கொண்டே போகக்கூடிய நிலைமை உருவாகியிருக்கிறது என்பதையும் இங்கே உள்ள சர்வகட்சித் தலைவர்களும் ஏற்றுக் கொள்வார்கள் என்று நம்புகிறேன்.

வேடிக்கையாக ஒன்றை சொல்வார்கள். பூஜை செய்யக் கூடிய ஒருவரிடம், கோயிலுக்கு ஒரு வெல்ல உருண்டையை எடுத்துக் கொண்டு போய் கொடுத்தால், அபிஷேகம் செய்து விட்டு, ஒரு துளியை நைவேத்தியம் காட்டிவிட்டு, இந்தா பிரசாதம் என்று திருப்பிக் கொடுத்து விடுவார்கள் என்று சொல்வார்கள். அதைப்போல நாட்டிலே ஒரு பெரிய உருண்டை அளவு வருவாய் என்கிற வெல்லத்தை மத்திய அரசு வாங்கிக் கொண்டு, மாநிலங்களுக்கு பிரசாதமாக ஒரு துளியைக்கொடுத்து அனுப்புவதைப்போன்று நிதி ஆதாரங்கள், ஒதுக்கீடுகள் இருகின்றன என்பதையும் மறந்து விட முடியாது.

ஆகவே, நேர்மையான முறையில் ஒரு மாநிலத்திலிருந்து எவ்வளவு நிதி வசூலிக்கிறோம், எத்தனை சதவீதம் அதன் அடிப்படையில் அந்த மாநிலத்திற்கு திருப்பித் தரவேண்டும் என்று வரையறுக்க வேண்டும். அப்படிச் செய்தால் அது தமிழகத்திற்கு மட்டும் அல்லாமல், இந்திய துணைக் கண்டத்திலே இருக்கக்கூடிய எல்லா மாநிலங்களுக்கும் பொருந்தக்கூடியதாக இருக்கும் என்பது என்னுடைய கருத்து. ஆகவே அந்த வகையில் நிதி ஒதுக்கீடுகளை அமைத்துக் கொள்வது நல்லதாக இருக்கும் என்று இந்த நேரத்திலே சொல்லிக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

அது மட்டுமல்லாமல், ஆக்கபூர்வமான பல திட்டங்களை நாம் இங்கே பேசியிருக்கிறோம். இந்தியா ஒற்றுமையாக இருக்க வேண்டுமானால் என்னென்ன வழிகளைக் கையாளலாம். இந்திய துணை கண்டத்தில் வறுமை நீங்கி வாழ்வு மலர்ந்திட வேண்டும் என்று சொன்னால் எந்தெந்த வகையில் திட்டங்களைத் தீட்ட வேண்டும் என்று எண்ணிப் பார்க்க வேண்டும்.

> ''காவிரி தென்பெண்ணை பாலாறு, வைகை தாமிரபரணி
> பொருனை நதி, என மேவிய ஆறு பல ஓட நல்ல
> மேனி செழிந்த தமிழ்நாடு''

என்று நாம் புகழ்ந்து பாடுகிறோமே அந்த தமிழ்நாட்டின் நிலை இப்பொழுது எப்படி இருக்கிறது. தண்ணீரே இல்லாத நிலையில் இருக்கிறது. தமிழ்நாட்டில் தண்ணீர் வளம் வேண்டும் என்று சொன்னால், பஞ்சம் ஒழிந்து பசுமை ஏற்பட்டிட வேண்டும் என்று சொன்னால், கங்கை காவிரி இணைப்புத் திட்டம் வர வேண்டும். கங்கை-காவிரி இணைப்பு மிகமிகத் தேவையான ஒன்று. நம்முடைய நாட்டில் ஒற்றுமை வளர வேண்டும் என்று சொல்கிறவர்கள், நாங்கள் எந்த ஒரு மாநிலத்தையும் அடிமைப் படுத்தவில்லை என்று சொல்லக் கூடியவர்கள், அதி வேகமாக செயலாற்ற வேண்டிய ஒரு திட்டம், இந்த கங்கை-காவிரி இணைப்புத் திட்டமாகும்.

அப்படி கங்கை-காவிரி இணைப்புத் திட்டம் வேண்டும் என்று சொல்கிறபோது பொருளாதார குறைவு பற்றி பேசப்படுகிறது. 12 ஆயிரம் கோடி ரூபாய்க்கு மேல் செலவு ஆகும் என்று கணக்கிட்டிருக்கிறார்கள். நான் என்னுடைய ஆலோசனையாகத் தெரிவித்துக் கொள்ள விரும்புவது; இந்தியதுணைக் கண்டத்திலே ராணுவம் பலப்படுத்தப்பட்டிருக்கிறது. ராணுவத்தை நாம் உண்மையிலேயே கங்கை-காவிரி இணைப்புத் திட்டத்திற்குப்பயன் படுத்துவோமேயானால் அது மிக நன்மையாக இருக்கும். ராணுவத்தை ஏதோ ஒரு புயல் காலங்களில், ஏதோ ஒரு வெள்ளக் காலங்களில் யாரோ மாண்டு மடிந்தபோது பயன்படுத்துவதைப் போல, ஆக்கபூர்வமான திட்டங்களுக்கு



இந்திய துணை கண்டத்தின் பாதுகாப்பிற்காக மட்டுமல்லாமல், வளர்ச்சிக்கும் ஆக்கபூர்வமான திட்டங்களுக்கும் ராணுவத்தைநாம் பயன்படுத்துவோமேயானால் கங்கை-காவிரி முழுமையாகப் இணைப்புத் திட்டம் சிறந்ததாக அமையும், வெகு சர்வ சாதாரணமான அளவிலேயே முடித்துவிட முடியும் என்பதே என்னுடைய தாழ்மையான அபிப்பிராயம் ஆகும்.

[பிற்பகல் 1.00]

இன்றைக்கு இருக்கக்கூடிய பிரச்னைகள் ஏராளம் உண்டு. திரு. காமராஜ் அவர்கள் தமிழ்நாட்டிலிருந்து தேர்ந்தெடுக்கப் பட்டவர்தான். அவர்கள் எப்போதும் தமிழர் என்ற உணர்வோடுதான் இருந்தார்கள். ஆனால் அவரால் இந்திய துணைக்கண்டத்திற்கு ஆபத்து வந்ததில்லை. இது மிகத் தெளிவாகத் தெரியும். பேரறிஞர் அண்ணா அவர்கள்கூட ஏற்கனவே திராவிட நாடு திராவிடருக்கே என்று பேசியவர்தான். ஆனால் அவர்கள் முதல் அமைச்சராக வந்த பிறகு தமிழ்நாட்டின் தனித்தன்மை கெடாமல், திராவிட கலாசாரம் பாழ்படாமல், இந்திய தேசிய ஒருமைப்பாடு உருக்குலையாமல் எப்படி வாழ்வது என்பதுபற்றித்தான் அவர்களுடைய அரசியல் இருந்தது என்பதை யாரும் மறந்துவிட முடியாது.

யாதும் ஊரே யாவரும் கேளீர் என்பது நம்முடைய கொள்கையாக இருந்தாலும், நம் நாடு நம் வீடு என்று வருகிற போது கொள்கைகளை நாம் வரையறுத்துக் கொள்வதில் விட்டுக் கொடுத்து பெற வேண்டியதைப் பெறத்தக்க வகையில் அமைத்துக் கொள்ளல் வேண்டும் என்பது என் கருத்து....

இன்னும் சொல்லப்போனால் இன்றையதினம் சமய நெறி— ஏற்கனவே இந்த நாட்டினை சமய நெறியும் சமூக நெறியும் தான் ஆட்சி செய்தன. சமய நெறியும் சமூக நெறியும் பலவீனமடைந்த காரணத்தால்தான் சட்ட நெறி இன்றையதினம் ஆட்சி செய்கிறது. சட்ட நெறி ஆட்சி செய்கிற காரணத்தாலே ஒரு நாட்டின் ஒற்றுமை அல்லது வளர்ச்சியைக் கட்டம்போட்டு தடுத்துவிட முடியாது என்பதை அனைவரும் புரிந்து கொண்டிருப் பார்கள். ஆகவே சட்டம் போட்டு ஆளுகிற நேரத்தில்கூட சமயத்தையோ அல்லது சமூகத்தையோ பாதிக்காத வகையில் அதையும் காப்பாற்றக்கூடிய வகையில் அது இருக்கவேண்டும் என்பதில் யாருக்கும் இரண்டுவிதக் கருத்துக்கள் இருக்கமுடியாது என்பது என்னுடைய தாழ்மையான—கருத்தாகும். ஆகவே அந்த வகையில் இருக்க வேண்டும்.

இன்றையதினம் மத்திய மாநிலச் சட்டங்கள் பல வகைகளில் பலவீனப்பட்டிருக்கிறது. மொட்டை அடித்துக்கொள்ளவேண்டும் என்று சட்டமிருக்கிறது, ஆனால் உணர்வுகள் பூ வைத்துக் கொள்வதில் தவறு இல்லை என்று சமூக நெறி கூறுகிறது என்று சொன்னால் பொதுமக்கள் கணக்கு என்ன? நிலை என்ன? தெரிந்து கெட்டான் இராவணன், தெரியாமல் கெட்டான் துரியோதனன் என்று சொல்வார்கள். இரண்டும் கெட்டான் நிலையில் இன்று நாட்டு மக்கள் தவிக்கிறார்கள் என்பதை நாம் மறந்துவிடமுடியாது. இந்த நிலையில் எந்த உறவை ஏற்படுத்திக்கொண்டாலும்கூட அன்று எதிர்க்கட்சித் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள் கூட மாநில சுயாட்சி பற்றி பேசுகிறபோது சொன்னார்கள். பலமுள்ளது பலவீனமானதோடு இணைந்தால் அது பஸ்பமாகிவிடுகிறது, க்ஷீணித்துவிடுகிறது என்று சொன்னார்கள். ஏற்கனவே நடைபெற்ற தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகம் காங்கிரஸ் கட்சியோடு இணைந்து 48, 38 ஆயிற்று, அது 20 என்பது 30 ஆயிற்று. இது அங்கே போய்விட்டது.

டாக்டர் மு. கருணாநிதி : மாநிலச் சுயாட்சியை விட்டு விட்டு எங்கேயோ போய்விட்டார்கள். அதாவது இந்திரா காங்கிரஸோடு திராவிட முன்னேற்றக் கழகம் சேர்ந்த காரணத்தால் 48, 38 என்றாகிவிட்டது என்றார்கள். நேற்று ராஜ்ய சபாவிற்கு இந்திரா காங்கிரஸோடு சேர்ந்து வாக்களித் தீர்களே, அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் என்னவாகும்?

டாக்டர் கே. சமரசம் : எதற்காக வாக்களித்தோம் என்பதும் எதற்காக கூட்டு அமைத்தோம் என்பதும் கலைஞர் அவர்களுக்குத் தெரியும். ஆகவே நான் அதைப்பற்றி விளக்கவேண்டிய அவசிய மில்லையென்று கருதுகிறேன்.

ஆக இன்றிருக்கக்கூடிய நம் நாட்டு நிலையை நாம் தெளிவாக புரிந்து கொள்ளக்கூடியவர்களாக இருக்கிறோம். இங்கே பேசுகிறபோது, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் அண்ணன் அம்பிகாபதி, திரு. உமாநாத் ஆகியோர் பேசுகிற போது இடையிடையே சில கருத்துக்களைச் சொன்னார்கள். நான் அப்போது எழுந்து பதில் அளிக்க விரும்பவில்லை,

மத்தியில் கூட்டாட்சி, மாநிலத்தில் சுயாட்சி என்று இந்த மன்றத்தில் நாங்களெல்லாம் பேசுகிறபோது, இன்றையதினம் மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் தேவை. மாநிலச்சுயாட்சி அல்லது தன்னாட்சி என்று பேசுகிறபோது அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஒத்துழைக்கவில்லை என்று சொன்னார்கள். நாங்கள் மறுக்கவில்லை. ஒத்துழைத்தோம் என்று சொல்லவில்லை. காரணம் என்ன? நீங்கள் மத்தியில் கூட்டாட்சி, மாநிலத்தில் சுயாட்சி என்று சொல்கிறபோது எடுத்து வைத்த வாதங்கள் என்ன? மிகத் தெளிவாக இருக்கிறது. அவர்கள் சொன்ன



வாதங்கள் ஒன்றல்ல, இரண்டல்ல. இந்தியாவிற்கு ஆபத்து தரைவழியாகவும் வரலாம், கடல் வழியாகவும் வரலாம் என்று சொன்னார்கள். திராவிட முன்னேற்றக் கழகம் பதவியில் இருந்தால் தண்ணீர் இருக்கக் கூடிய பாஸ்பரஸ், அது கீழே இறங்கிவிட்டால் கூரைக்கு மேல் இருக்கும் பாஸ்பரஸ். தனி நாடு வேண்டும். தனி கொடி வேண்டும். ஷேக் முஸ்பீர் ரக்மான், இப்படியெல்லாம் சொன்னார்கள். இருந்தால் முதல்வர், இறங்கிவிட்டால் பிரதமர் என்றார்கள். இந்த நிலைக்கு அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஒத்துவரவில்லை. அதை ஒத்துக்கொள் கிறேன். அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் கொள்கையை விட்டு அன்று போனதில்லை, இன்றும் போகவில்லை, நாளையும் போகாது.

டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, மாநில சுயாட்சி தீர்மானத்தினுடைய விவாதம் இந்த அவையிலே இரண்டு, மூன்று நாட்கள் நடைபெற்றிருக்கிறது. பல உறுப் பினர்கள் தங்களுடைய கருத்துக்களை மிக ஆழமாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். உறுப்பினர் சொன்னதைப்போல், இந்த அவையிலே நடைபெற்ற விவாதத்தில் கொள்கையை முதலாக வைத்து விவாதம் நடைபெற்றதே அல்லாமல், அதிலே முஜிபூர் ரகுமான் இவைகள் எல்லாம் இடம் பெறவில்லை. முஜிபூர் ரகுமான்கூட மாநில சுயாட்சி கேட்டார் என்ற மேற் கோள் எடுத்துக்காட்டப்பட்டிருக்கலாம், இன்னும் சொல்லப் போனால், எடுத்துக்காட்டியவரே இன்றைக்கு மின்சாரத்துறை
அமைச்சராக அமர்ந்திருக்கின்ற நண்பர் பண்ருட்டி
இராமச்சந்திரன் அவர்கள்தான். மாநில சுயாட்சி
கேட்ட முஜிபூர் ரகுமான் அவர்கள் வேறு பல
முற்போக்கான சீர்திருத்தங்கள் செய்திருப்பதை எடுத்துக்
காட்டினார்கள். ஆகவே, பிரிவினை நோக்கத்தோடு மாநில
சுயாட்சி தீர்மானம் இ[...]கே வைக்கப்படவில்லை என்பதை
நான் மாண்புமிகு உறுப்[...]னர் சமரசம் அவர்களுக்குத் தெளிவு
படுத்த விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவர்
அவர்களே, மாண்புமிகு [...] எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்
ஏற்கெனவே இந்த சட்ட[...]ப் பேரவையில் நடந்த மாநில
சுயாட்சி பற்றிய தீர்மா[...]ன விவாதத்தைச் சொன்னார்கள்.
அதிலே நான் தலையிட்டு[...] பேசியது முஜிபூர் ரகுமான் அவர்
களைப் பற்றிய குறிப்பு [...]அல்ல. மாநில சுயாட்சியைப்பற்றி
அறிஞர் அண்ணா அவ[...]ர்கள் எடுத்துச் சொன்னார்களா,
இல்லையா என்பதைப் ப[...]ற்றி விவாதம் வந்தபோது, மாநில
சுயாட்சிக் கொள்கைக்கு [...]அறிஞர் அண்ணா அவர்கள் பேசியதைத்
தான் நான் சொல்லியிருக்[...]கிறேன். முஜிபூர் ரகுமான் அவர்
களைப் பற்றி நான் குறிப்[...]பிடவில்லை. இதை என் நினைவின்
[...]ப்படையிலே நான் தெ[...]ரிவிக்கிறேன்.

டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, நான் அவருடைய நினைவுக்கு ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். நான் சொன்னது, இந்த அவையிலே நடந்த விவாதத்தைப் பற்றி அல்ல என்று சமரசம் அவர்கள் குறிப்பிட்டார்கள். அதைப்பற்றிக் குறிப்பிட்டேன். வெளியிலே யார்யாரோ பேசுவதை வைத்து, அதையெல்லாம் ஒரு கொள்கையாக வைத்து அந்தக் கொள்கைக்கு ஏற்ப நாங்கள் ஒரு முடிவெடுத்தோம் என்று குறிப்பிட்டார்கள். அதற்கு நான் சொன்னேன்; முஜிபூர் ரகுமான் செய்த முற்போக்கான சீர்திருத்தங்களை இங்கே அவர் குறிப் பிட்டதைத்தான் குறிப்பிட்டேன். அதாவது தொழிலாளர்களுக்கு நிர்வாகத்திலே பங்கு, அவர்களுக்கு லாபத்திலே பங்கு என்பது போன்ற அந்தக் கொள்கைகளை வங்கத்திலே முஜிபூர் கொண்டு வந்திருக்கிறார். அந்த வழியைப் பின்பற்றி இங்கே அந்த அறிவிப்பைத் தருகிறோம் என்று இந்தக் குறிப்பை நம்முடைய மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அன்றைய தினம் போக்குவரத்துத் துறை அமைச்சராக இருந்தபோது அறிவித்ததைத் தான் நான் இங்கே குறிப்பிட்டேனே அல்லாமல், முஜிபூர் ரகுமான் என்ற பெயரைக் குறிப்பிடுகின்ற காரணத்தி னாலேயே மாநில சுயாட்சித் தீர்மானம் ஆபத்தானது என்று கருதிவிடக் கூடாது.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர் களே, விடுதலை நாள் வெள்ளி விழாவின்போது, சில திட்டங்கள் அறிவிக்கப்பட்டபோது, சட்ட மன்றக் கூட்டத்தொடர் நடு நிசியில் நடந்தது. அப்படி சில திட்டங்களை அறிவித்தபோது இது முஜிபூர் ரகுமான் அவர்கள் ஆட்சிக்கு வருவதற்கு முன்னால், தேர்தல் அறிக்கையிலே அறிவித்த சில திட்டங்களையும் எடுத்துக்காட்டி, அந்த திட்டங்களை நாம் அறிவித்திருக்கிறோம் என்ற வகையிலே அதை அறிவித்தோம். அதற்கும், மாநில சுயாட்சி விவாதத்திற்கும் சம்பந்தமில்லை.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பெ. சு. திருவேங்கடம்) : டாக்டர் சமரசம் அவர்கள் மேற்கொண்டு பேசலாம். விரைவாக முடித்துக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறேன்

டாக்டர் கே. சமரசம் : தலைவர் அவர்களே, எப்படியோ, அப்பேர்ப்பட்ட சேக் முஜிபூர் ரகுமான் நிலை நம்முடைய நாட்டிலே இருக்கக்கூடிய யாருக்கும் வரக்கூடாது என்ற எண்ணத்தினால்தான், அதை எதிர்த்தோம் என்பது மட்டும் தான் எங்களுடைய கருத்து என்பதைச் சொல்லிக்கொள் கிறேன்.



(மாண்புமிகு பேரவை துணைத்தலைவர் தலைமை)

இங்கே பஞ்சாயத்துத் தேர்தலை எப்போது நடத்தியாக வேண்டும் என்று மத்தியிலே இருந்து ஒரு அமைச்சர் கடிதம் எழுதி, 6 மாதங்களுக்குள் முடித்துவிட வேண்டும் என்று இங்கே பேசப்பட்டது. என்னைப் பொறுத்த வரையில் ஒரு மத்திய அரசு மாநில அரசுக்கு கடிதம் எழுதவில்லை. உள்ளாட்சித் துறை நிலையிலே இருக்கின்ற மத்திய அமைச்சர் மாநில அரசுக்கு கடிதம் எழுதவில்லை. ஆனால், வேறு ஒரு துறையிலே பணியாற்றுகின்ற ஒருவர் மாநில அரசுக்கு கடிதம் எழுது கிறார் என்றால் என்ன அர்த்தம்? பரமன் கழுத்திலே இருக் கின்ற பாம்பு கருடனைப் பார்த்து, கருடா சவுக்கியமா என்று கேட்டதாம். அதைப்போல், அங்கே இருந்தாலேயே இந்தக் கேள்வியை எழுப்பலாம் என்ற நிலையை மத்திய அரசு அமைத்திருக்கின்ற காரணத்தினாலே, மாநிலத்தில் இந்த அடிப்படையிலே அச்சநிலைக்கு வருகின்றபோது, நம்முடைய உணர்வுகளை தெளிவாக்கிக் கொள்ள வேண்டியக் கட்டத்திலே இருக்கிறோம் அடிப் படையிலேதான் மாநில அரசு என்னென்ன உரிமைகளை உணர்வுகளைப் பெற்றிருக்கிறதோ அவைகளை மாநிலங்கள் பெற்றாக வேண்டும். இந்த வகையில் மாநில அரசுக்கு என்னென்ன தேவை என்று தமிழகம் மட்டும் சொல்லவில்லை. இந்தியத் துணைக் கண்டத்திலே இருக்கக்கூடிய அத்தனை மாநிலங்களும் மிக நல்ல முறையில் அவர் அவர்களுடைய உணர்வுகளை பகிர்ந்து கொண்டு, நாட்டில் என்ன நினைக் கிறார்களோ, எதைச் செய்வதற்காக இங்கே அவர்களை மக்கள் தேர்ந்தெடுத்தார்களோ, அப்படி தேர்ந்தெடுக்கப்பட்டு அனுப்பப்பட்டார்களோ. அந்த கொள்கைகள் நிறைவேற்றத்தக்க வகையில் நிறைவேற்றுவதற்கு ஏதுவாக இருக்கும். அந்த அடிப் படையிலே தமிழகத்திலே உள்ள சில கட்சித் தலைவர்கள், மேதைகள், அனுபவசாலிகள் ஆகியோர்களுடைய ஆலோசனை களை முதல் முதலிலே கேட்டு, ஒரு முடிவுக்கு வந்ததற்கு பிறகு இந்த தீர்மானத்தைப் பற்றி பரிசீலனை செய்வது: அரசுக்கு நல்லது என்று சொல்லி முடிக்கிறேன். வணக்கம்,

[பிற்பகல் 1–10]

* திரு. ஜே. எஸ். இராசு : சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் உமாநாத் அவர்கள் கொண்டு வந்திருக்கிற தீர்மானத்தை விமர்சித்தும், அதையொட்டி வேறுபல உறுப்பினர்கள் கொண்டு வந்திருக்கிற மைய மாநில உறவு குறித்த தீர்மானங்களை ஒட்டியும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில், திராவிட முன்னேற்றக் கழகத்தின் பார்வையில், சில கருத்துக்களை இந்த மன்றத்தில் தெரி விக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தீர்மானத்தை முதலில் முன்மொழிந்த மதிப்புக்குரிய நண்பர் உமாநாத் அவர்கள் இந்தத் தீர்மானம் ஏன் இங்கே வைக்கப்படுகிறது என்றால், நாட்டுக்கு அபாயகரமான நிலை உண்டாகக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. இந்தியப் பொருளாதாரம் 'அம்மோ' என்று நடுத் தெருவுக்கு வந்துவிட்ட நிலையில் தவித்துக் கொண்டிருக்கிறது. இதனால் இன்றைக்கு இந்தத் தீர்மானம் மிக அவசரமான தேசியப் பிரச்சனையாக ஆகிவிட்டது. ஆகவேதான் இந்தத் தீர்மானத்தை இந்த அவையில் வைக்கிறேன் என்ற கருத்தை தன்னுடைய நீண்ட சொற்பொழிவுக்கு முன்னுரையாக அமைத்துக் கொண்டார். அதே நேரத்தில் தன்னுடைய முன்னுரையிலேயே கூட, எப்போதும் மாநில சுயாட்சி என்றும், மத்திய மாநில உறவுகள் சீரமைக்கப்பட வேண்டுமென்றும் சொல்லிக் கொண்டிருக்கும் திராவிட முன்னேற்றக் கழகம் ஏன் இந்த நேரத்தில் சற்று அமைதியாக அல்லது அதிகமாக அதை வலியுறுத்தாமல் இருக்கிறது என்று தெரியவில்லை என்றெல்லாம் வினா எழுப்பினார். அதற்கு எங்களுடைய கழகத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள் அழுத்தந்திருத்தமாக பதில் கூறியிருக்கிறார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தின் அரசியல் முழக்கம் மத்தியில் கூட்டாட்சி. மாநிலத்திலே சுயாட்சி என்பதுதான். எந்தெந்த நேரத்தில் அவைகளை எழுப்ப வேண்டுமென்று இயக்கத்திற்குத் தெரியும் என்று அதற்குப் பதிலிறுத்திருக்கிறார்கள்.

ஆனால் திரு. சமரசம் அவர்கள்—எனக்கு முன்னால் பேசியவர், ஏதோ இந்தியாவில் மத்திய அரசே இருக்கக்கூடாது என்று தீர்மானம் வந்திருப்பது போலவும், இந்தத் தீர்மானத்தைத் தருவதே தவறு என்று கருதுகிற அளவிலும் தன்னுடைய வாதத்தை வைத்தார்கள். இந்தத் தீர்மானத்தில் இருப்பது—மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் தேவை என்று இருப்பதற்குக் காரணம் மாநிலங்களை உள்ளடக்கிய மத்திய அரசு—இந்தியத் திருநாடு இருக்கிறது இந்திய நாடு இருப்பதை ஒப்புக் கொண்டிருக்கிறோம். அந்த இந்திய நாட்டுக்குள்ளே இருக்கும் மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் தேவை, அல்லது மாநில சுயாட்சி தேவை என்ற அடிப்படையில் தான் இந்தப் பிரச்சனையை அணுகவேண்டுமே தவிர மத்திய அரசு கூடாது என்ற கருத்து அனேகமாக இந்தியாவில் இருக்கும் எந்த அரசியல் கட்சிக்கும் இல்லை, எந்த அரசியல் தத்துவவாதியும் சொல்லவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

திரு. சமரசம் அவர்கள் ஒன்றைக் குறிப்பிட்டார்கள். மத்திய மாநில உறவுகள் குறித்துப் பேசுவதற்காக மேதைகள் கொண்ட குழுவை அமைத்தால் பரவாயில்லை என்று மிகவும் கவலைப்பட்டு அக்கறையாகக் குறிப்பிட்டார்கள். மேதைகள் எல்லாம் இதைப் பற்றி ஆராய்ந்து பார்த்தாகிவிட்டது. கல்வியாளர்கள், ச



இயல் நிபுணர்கள், அரசியல் ஆர்வம் கொண்டவர்கள், நாட்டுக்காக உழைத்தவர்கள் ஆகியோர் அனைவரும் இந்த நாட்டினுடைய தற்கால நிலையை உத்தேசித்து முறைப்படி ஆராய்ந்து

மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் தேவை என்ற கருத்தில் முழுமையான முடிவுக்கு வந்து விட்டார்கள். நிச்சயமாக மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் தேவை. அதற்கு புதிதாக நிபுணர் குழுவைப் போட வேண்டிய அவசியம் இல்லை. இந்த பிரச்சினையில் நாம் நீண்ட தொலைவுக்கு வந்து விட்டோம்.

டாக்டர் கே. சமரசம்: பேரவைத் தலைவரவர்களே, ஒரு குழுவை அமைக்கவேண்டுமென்று சொல்லவில்லை. இருக்கின்றவர்கள் இணைந்து அப்படிப்பட்ட பரிசீலனை செய்வது மிக நல்லதாக இருக்குமென்று சொன்னேன். ஒரு காலத்தில் உருவாகக்கூடிய நீதி பின்னொரு காலத்தில் மாறுபடுகிறது. இன்றைக்கு இருக்கக்கூடிய அரசியல் சூழ்நிலையில் மத்திய மாநில ஆட்சியின் உறுதியான சூழ்நிலை ஏற்பட கலந்து பேசவேண்டுமென்று சொன்னேன். தனியாகக் குழு அமைக்கவேண்டுமென்று சொல்லவில்லை.

திரு ஜே. எஸ். இராசு: ஒரு காலத்தில் உருவானது என்ற கருத்தை வைக்கிறார். ஏற்கனவே ராஜமன்னார் குழு இதுபற்றி முடிவு கூறியதைக் குறிப்பிடுகிறாரா அல்லது ஏற்கனவே அமைக்கப்பட்ட அரசியல் நிர்ணய சபையைக் குறிக்கிறாரா என்று தெரியவில்லை. மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் தேவை—அதற்கு மாநில சுய ஆட்சி தேவை என்ற பிரச்சினை பேரறிஞர் அண்ணா காலத்திலேயே எழுப்பப்பட்டது.

1967 இல் அறிஞர் அண்ணா அவர்கள் தமிழகத்தினுடைய அரியணையை அலங்கரித்தபோது மிகுந்த ஆர்வத்தோடு மிகுந்த நம்பிக்கையோடு ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டார்கள். அப்படி ஏற்றுக்கொண்ட நேரத்திலே தமிழ் நாட்டுக்கான பல்வேறு திட்டங்களை நிறைவேற்றவேண்டுமென்று கருதி அதற்காக முனைப்பாக அவர் பணியாற்றிய நேரத்திலே சட்டதிட்டங்களால் அரசியல் அமைப்பில் இருக்கிற விதிகளால், நடைமுறைகளால் இந்தத் திட்டங்களை நிறைவேற்ற முடியாத சூழ்நிலை இருக்கிறது என்பதை மிகுந்த வருத்தத்தோடு குறிப்பிட்டார்கள்:

Although I am the Chief Minister and although I am interested to do enormous good for my people, my hands are tied. More powers are necessary for the State. To get those powers we have to fight with the Central Government.

நான் முதல்வராக இருந்தாலும்கூட மக்களுக்கு அதிகமான நன்மைகள் செய்யவேண்டுமென்று விரும்புகிறேன், என்றாலும்கூட, நிச்சயமாக அதற்கான திட்டங்களை எல்லாம் என்னால் நிறைவேற்ற முடியாது. ஒரு மாநிலத்திற்கு வழங்கப்பட்டிருக்கிற அதிகாரத்தை வைத்துக்கொண்டு அந்தத் தேவைகளை என்னால் பூர்த்தி செய்யமுடியாது, அந்தத் தேவைகளை நிறைவேற்றவேண்டுமானால் அதற்கான அதிகாரங்களை மத்திய அரசிடமிருந்து போராடிப் பெற்றாகவேண்டும் என்று அண்ணா அவர்கள் குறிப்பிட்டார்கள்.

நான் பழைய நிகழ்ச்சிகளைப்பற்றி எடுத்துச் சொல்வதற்குப் பெருமைப்படுகிறேன். அண்ணா இயற்கை அடைந்து நம்முடைய டாக்டர் கலைஞர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பிற்கு வந்தார்கள். பிப்ரவரி 9 ஆம் நாளன்று அவர்கள் ஆட்சிப் பொறுப்பிற்கு வருகிறார்கள். 17 அல்லது 19 ஆம் நாளன்று என்று கருதுகிறேன். முதல் முறையாக முதல்வர் என்ற முறையிலே டாக்டர் கலைஞர் அவர்கள் டெல்லிக்கு செல்கிறார்கள். அந்த நேரத்திலே 50க்கும் மேற்பட்ட பத்திரிக்கையாளர்கள் டெல்லியிலே டாக்டர் கலைஞர் அவர்களிடத்திலே வினாக்களைத் தொடுக்கிறார்கள். இந்திய அரசியல் பற்றி, இந்திய நாட்டுப் பொருளாதாரத்தைப்பற்றி, இந்திய நாட்டு அரசியல் சட்டத்தைப்பற்றி எல்லாம் அந்த ஒரு மிகப் பெரிய கூட்டத்தில் டாக்டர் கலைஞர் அவர்களை கேள்விகள் கேட்டார்கள். அப்போதுதான் நம்முடைய இந்திய நாட்டு அரசியலமைப்புச் சட்டம் மறுபரிசீலனை செய்யப்பட வேண்டும், இன்றைய சூழ்நிலையில் மாநிலங்களுக்கு இருக்கின்ற அதிகாரங்கள் போதாது, ஆகவே அதுபற்றி ஆராய ஒரு குழு தமிழகத்திலே அமைக்கப்படும். சட்ட அறிஞர்கள், கல்வியாளர்கள் அடங்கியதாக அந்தக் குழு இருக்கும் என்று கலைஞர் அவர்கள் டெல்லியில் தெரிவித்தார்கள். அதன்படி ராஜமன்னார் தலைமையிலே அந்தக் குழு அமைக்கப்பட்டது. கல்வித் துறையிலே அனுபவம் பெற்ற ஏ. எல். முதலியார் அவர்களும், நீதித்துறையிலே பணியாற்றிய சந்திரா ரெட்டி அவர்களும் அந்தக் குழுவிலே உறுப்பினர்களாக இருந்து மிகப் பெரிய அறிக்கையைத் தயாரித்துத் தந்தார்கள். அந்த அறிக்கையின் மீது திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே திரு மாறன் அவர்கள் தலைமையிலே ஒரு குழு அமைத்து விவாதித்து ஒரு தீர்மானத்தை வடித்தெடுத்தனர். அந்தத் தீர்மானம் இந்த அவையின் முன்பு வைக்கப்பட்டது. அப்படி வைக்கப்பட்ட நேரத்திலே இந்த மன்றத்திலே அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஒருபெரும் தலைவராக இருந்த நம்முடைய மதிப்பிற்குரிய தற்போதைய முதல்வர் "மாநில சுயாட்சி வேண்டாம், மக்கள் சுயாட்சி வேண்டும்" என்று கூறினார். மக்கள் சுயாட்சி என்றால் என்ன என்று அன்றும் கேட்டோம், இன்றும் கேட்டோம், இதுவரையிலே விளக்கம் [illegible]வில்லை. மாநில சுயாட்சி தேவையில்லை. மக்கள் சுயாட்சிதான் தேவை என்று இன்று கூட பேசப்படுகிறது. [illegible]



அதற்கான முழுமையான விளக்கத்தை இன்னும் திராவிட முன்னேற்றக் கழகம் பெறவில்லை. ஆனால் மாறனின் மாநில சுயாட்சித் தீர்மானம் இந்த மன்றத்திலே நிறைவேற்றப்பட்டு டெல்லிக்கு அனுப்பப்பட்டது. அனுப்பப்பட்ட பிறகு அந்தத் தீர்மானத்தைப்பற்றி தெரிந்துகொண்டு அகில உலகமும் வரவேற்றது என்று சொன்னால் மிகையாது. நிச்சயமாக மாநில சுயாட்சி பற்றி, கழக அரசு நிறைவேற்றிய தீர்மானம் இந்திய அரசியலுக்கு திராவிட முன்னேற்றக் கழகம் வழங்கிய மிகப் பெரிய நன்கொடையாகும். அறிஞர் அண்ணா அவர்கள் கோடிட்டுக் காட்டிய மாநில சுயாட்சி கொள்கைக்கு திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே டாக்டர் கலைஞர் அவர்கள் ஒரு மிக பெரிய வடிவத்தைத் தந்தார்கள். கழக அரசின் நிபுணர் குழு அறிக்கையினை பாபு ஜகஜீவன்ராம் அவர்கள் பாராட்டினார்கள். அப்போது காங்கிரஸ் தலைவராக இருந்த அசோக்மேத்தா அவர்கள் பாராட்டினார்கள், வீரேந்திர பாட்டீல் பிஜு பட்நாயக் ஆகியோர் பாராட்டினார்கள். மறைந்த பெரியவர்கள் ஜெயப்பிரகாஷ் நாராயணன் அவர்கள் பாரட்டினார்கள். நாட்டிலே உள்ள பல்வேறுபட்ட தலைவர்களும்கூட அத்தீர்மானத்தைப்பார்த்து ''மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள்தரப்படவேண்டும்'' என்ற கருத்துக்காக ஒரு நல்லகாரியம்என்று அந்தக் காலத்திலே ஒப்புக்கொள்ளப்பட்டது. அப்படி ஒப்புக்கொள்ளப்பட்டது திராவிட முன்னேற்றக் கழகத்திற்குக் கிடைத்த மிகப்பெரிய மரியாதை, டாக்டர் கலைஞர் ஆட்சிக்கு கிடைத்த மிகப் பெரிய வெற்றி என்பதை நான் பெருமையோடு தெரிவித்துக்கொள்கிறேன். அதைத் தொடர்ந்து இன்றைக்கு இந்தப் பிரச்சினையை நான் வேறு ஒரு கோணத்திலே ஆராய விரும்புகிறேன்.

[பிற்பகல் 1-20]

இந்தியத் திருநாட்டிற்கு ஒரு அரசியல் சட்டம் போட்டார்கள், ''கான்ஸ்டிடியூஷன் ஆஃப் இண்டியா'' அதை எழுதுவதற்கு முன்னால் நிச்சயமாக அமெரிக்க ஐக்கிய நாடுகள் சட்டத்தைப் போலவோ, சோவியத் ரஷ்யா சட்டத்தைப் போலவோ, மாநில சுயாட்சியைப் பொறுத்தவரையில் அமைந்திருக்குமேயானால் இந்த விவாதமேகூட இந்த மன்றத்திலே வந்திருப்பதற்கான வாய்ப்பில்லை. பண்டிதநேரு அவர்களும், சந்தானம் அவர்களும், கண்ணியத்திற்குரிய மறைந்த காயிதே மில்லத் இஸ்மாயில் அவர்களும், பொது வாழ்க்கையிலே ஈடுபட்ட தேசியத் தலைவர்களும் நாட்டிலே ஃபெடரல், ஃபெடரலிசம், கூட்டாட்சியியல் அரசியலமைப்பு இந்தியாவிலே உருவாக வேண்டுமென்று அன்றைக்கே எழுதினார்கள். ஆனால் அவைகளையெல்லாம் ஒட்டுமொத்தமாக நிராகரித்துவிட்டு, இந்திய அரசியலமைப்புச் சட்டத்தைத் தயாரித்த வரைவாளர்கள் 1935-ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட இந்தியச் சட்டம், மத்திய அரசுக்குத் தந்திருந்த அதிகாரங்களைவிட மிகக் கூடுதலான அதிகாரத்தை, மிக

வலிவு வாய்ந்த அதிகாரங்களையெல்லாம் புதிய சட்டத்திலே உருவாக்கி டெல்லியிலே— மத்திய அரசாங்கத்தின் கையிலே கொடுத்து விட்டார்கள். அதனால்தான் விடுதலை பெற்ற உடனே இந்தியாவினுடைய, அரசியல் சட்டம் வகுக்கப்பட்ட நேரத்தில் அப்பொழுது இந்திய அரசாங்கத்தினுடைய தலைமைச் செயலாளராக இருந்த வி. பி. மேனன் இந்தச் சட்டத்தை மனத்திற்கொண்டு. அதிகாரம் இலண்டனிலிருந்து டெல்லிக்கு மாறியிருக்கிறதே தவிர மற்றபடி இந்தச் சுதந்திரந் தாலோ, இந்திய அரசியல் சட்டத்தாலோ இந்திய நாட்டுக்கு எந்தவிதமான நன்மையும் இல்லை என்ற கருத்தை அன்றைக்கு அவர் தெரிவித்தார்.

நான் வேறொரு கருத்தையும் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். நம்முடைய சட்டமேகூட திருப்தியளிக்கக்கூடிய சட்டமாக அப்பொழுதே போடப்படவில்லை. ஐவர் ஜின்னிங்ஸ் என்பவர் அரசியல் சட்டத்தை ஆராய்ந்து பார்க்கக்கூடிய ஆற்றல் மிக்கவர்; விடுதலை பெற்ற நாடுகள் தங்களுடைய சட்டங்களைப் புதிதாக நிறைவேற்றும்பொழுது அவரிடம் காட்டி எப்படியிருக்கிறது என்று விளக்கம் கேட்கத் தக்க அளவிற்கு ஆற்றல் மிக்கவர். அரசியல் சட்டத்திற்கு அவர் ஓர் உரைகல். அவரை இந்தியாவிற்கு வரவழைத்து, பண்டித நேரு அவர்கள், 1950 ஆம் ஆண்டிலே உருவாக்கிய இந்திய அரசியல் சட்டத்தை அவர் கையிலே எடுத்துக் கொடுத்து "எப்படியிருக்கிறது இந்தச் சட்டம், படித்துப் பாருங்கள்" என்று கொடுத்தார். அதைப் படித்துப் பார்த்த ஐவர் ஜின்னிங்ஸ் ஒரே வரியில் சொன்னார்,—

It is uncommentable

என்று இதில் இரண்டு அர்த்தங்கள் இருக்கின்றன. "இதைப் பற்றி ஒன்றும் சொல்ல முடியாது" என்றால் அது ரொம்பப் பிரமாதம் என்று அர்த்தம்: அல்லது "இதிலே என்ன இருக்கிறது இதைப்பற்றி அபிப்பிராயம் சொல்வதற்கு" என்று ஒரு அர்த்தம். ஆகவே எந்த அர்த்தத்திலே சொன்னார் என்று தெரியவில்லை. இரண்டு அர்த்தத்திலேயும் அவர் சொல்லி விட்டுப் போனார். என்ன காரணம் என்றால், இந்திய நாட்டுக்கு உகந்த அரசியல் சட்டமாக அது அவருக்குப்படவில்லை. தேவைப்படுகிற நியாயங்களை மாநிலங்களுக்கு வழங்குகின்ற சட்டம் அல்ல என்ற பொருளிலேதான் ஐவர் ஜின்னிங்ஸ் அன்றைக்கு அப்படிச் சொல்லிவிட்டுச் சென்றார்.

ஆகவே, அரசியல் சட்டத்தை எழுதுகிறபொழுது சொன்ன அறிவுரைகளையும் சட்டவரைவாளர்கள் கேட்கவில்லை. அதற்குப்பிறகு விவரம் தெரிந்தவர்கள், அனுபவம் மிக்கவர்கள், சிலநேரங்களில் ஆட்சி புரிந்தவர்கள் சொன்ன நல்ல கருத்துக்



களையும் அதற்குப் பிறகு வந்த ஆட்சியாளர்கள் கவனிக்கவில்லை. அப்படிக் கவனிக்கப்படாத காரணத்தினால்தான் திரு. உமாநாத் அவர்கள் சொல்லியதைப்போல இன்றைக்கு ஒரு தேசீயப் பிரச்னையாக அவசரப் பிரச்னையாக இந்தப் பிரச்னை மக்கள் மத்தியிலே வந்து விட்டிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

நம்முடைய இந்திய அரசியல் சட்டம் அல்லது இந்தியத் திருநாட்டுக்கு இருக்கின்ற சட்டம் என்ன தன்மையுடையது என்பதை நாம் ஆராய்ந்து பார்த்தால் அதிலேதான் இவ்வளவு தகராறுகள் வருகின்றன. இது பெயரளவிற்கு ஃபெடரலிசம், ஃபெடரல் செட்-அப், அவ்வளவுதான். அதாவது கூட்டாட்சியியல் என்பது ஒரு அரசியல் ஆட்சி முறை தத்துவம் அந்த முறைப்படி இந்திய அரசியல் சட்டம் தரப்பட்டிருப்பதாக நாம் நம்புகிறோம். ஆனால், உண்மையிலே அது ஃபெடரல் செட்-அப் அல்ல; ஃபெடரல் அல்ல. இந்தத் தத்துவம் உண்மையிலேயே ஃபெடரலிசம்—கூட்டாட்சி இயல் அரசியல் முறை ஒரு நாட்டிலே செயல்பட வேண்டுமானால் இரண்டு முக்கியமான அம்சங்கள் கவனிக்கப்பட வேண்டும். ஒன்று, கூட்டாட்சி அமைப்புகள்,

That is Federal Machinery, அதாவது Parliament, Assembly and Panchayat Union

போன்ற பல்வேறு அமைப்புகள் ஜனநாயக ரீதியாக இருக்கின்றனவே அதாவது ஃபெடரல் மெஷினரி இந்தியாவில் இருக்கிறது; சட்டத்தில் தரப்பட்டிருக்கிறது. ஆனால் ஃபெடரல் ஸ்பிரிட், கூட்டாட்சி இயலினுடைய உண்மையான தன்மை, உண்மையான உணர்வு, இன்னும் சொல்லப்போனால் அதன்மூலம் வருகிற உரிமை உணர்வு இந்த அரசியல் சட்டத்திலே வழங்கப்பட்டிருக்கிறதா என்றால் நிச்சயமாக இல்லை.

இந்த இரண்டும் முழுமையாகச் செயல்பட்டால்தான் அது முழுக் கூட்டாட்சியாக இருக்க முடியும். ஆனால் நம் நாட்டில் மத்திய அரசிடம் அதிக அதிகாரங்கள் குவிந்து விட்ட காரணத்தால் மாநிலங்கள் பிற்போக்கான நிலையை ஒவ்வொருநாளும் எய்தி வருகிற காரணத்தால், நம்மை ஆண்டு கொண்டிருக்கிற இந்திய அரசியல் சட்டம் அரசியல் விற்பன்னர்களால் "குவாஸி ஃபெடரல்" என்றுதான் இன்றைக்கு அழைக்கப்படுகிறது.

அண்ணா அவர்கள்கூட இதைத் தெளிவாகக் குறிப்பிட்டார்கள். இந்தியாவிற்கு ஒரு ஃபெடரல் செட்-அப் இருக்கிறது ஒரு ஃபெடரல் மெஷினரி இருக்கிறது; ஆனால் ஒரு ஃபெடரல் ஸ்பிரிட்-ஃபெடரல் உணர்வு நிச்சயமாக இந்தச் சட்டத்திலே இல்லை என்று அண்ணா அவர்கள் குறிப்பிட்டார்கள்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

நான் துவக்கத்திலே சொல்லியபடி அண்ணா அவர்கள் ஆட்சிக்கு வருகிறார்கள். ஆட்சிக்கு வந்தவுடன் பல்வேறு திட்டங்களை நிறைவேற்ற இயன்றாலும், விரும்பினாலும் முடியாமல் அவர்கள் அல்லல் படுகிறார்கள். மக்களுடைய குறைகளைத் தீர்ப்பதற்கு முடியாமல், இதற்கு மாற்று வழி என்ன என்று பார்க்கிறார்கள். அந்தக் காலகட்டத்திலே அண்ணா அவர்கள் மாநில சுயாட்சியை மீண்டும் மிகத் தீவிரமாக எழுப்ப ஆரம்பிக்கிறார். அதற்குப் பிறகு, நான் ஏற்கனவே சொன்னதைப் போல், கலைஞர் அவர்கள் ஆட்சிக்கு வந்தார்கள். ஆளுகிற பாறுப்பை அவர் ஏற்றவுடன், அதிக அளவுக்கு அதிலே அக்கறை காட்டிய ஒரு சூழ்நிலையில் கலைஞர் அவர்கள் மிக மனம் வெதும்பிச் சொன்னார்கள். மாநில அரசு அதிகாரம் இல்லாத அரசாக இருக்கிறது.

We have no power to set up Industries

We have no power to collect Income tax;

We have no right to fioat loans for developmental purpose; and

We have to get consen from the President for all such measures passed in the State Assembly.

நமக்கென்று ஒரு மன்றம்— சட்டமன்றம் இருக்கிறது, உயர்ந்த அதிகாரத்தை உடைய மன்றம் என்று நாம் பெருமைப்படுகின்றோம் என்றாலும் ஒருமுற்போக்கான திட்டத்தை, பஸ் தேசியமயமாக்கும் திட்டமாக இருந்தாலும். அர்ச்சகர்கள் யாராக இருந்தாலும், எந்த ஜாதியராக இருந்தாலும் கோயில்களிலே படைக்கலாம் என்ற எந்தச் சட்டமாக இருந்தாலும், மொழி ஆதிக்கத்தை எதிர்க்கின்ற சட்டமாக இருந்தாலும் குறைந்தபட்சம் நம்முடைய நாட்டிலே இருக்கிற வரலாற்றுச் சின்னங்கள், கோயில்கள், ஆகியவற்றின் மீது நாம் ஆதிக்கம் செலுத்துவதாக இருந்தாலும், நம்முடைய தமிழ் மன்னன் ராஜராஜன் கட்டிய தஞ்சாவூர் பெருவுடையார் கோயிலுக்கு முன்னால், அவனுடைய சிலையை வைப்பதற்கு விரும்பினாலும் அதைக் கூட நம்மாலே நிறைவேற்றிக் கொள்ள முடியாத அளவுக்கு உபயோகமில்லாத சட்டங்கள். அதிகாரமில்லாத சூழ்நிலையிலே நாம் இருக்கிறோம் சன்பதை கலைஞர் அவர்களும் மிகத் தெளிவாகச் சொன்னார் எள். மிகச் சாதாரண காரியங்களுக்குக் கூட மத்திய அரசாங்கத்தினுடைய கையை எதிர்பார்க்க வேண்டிய அளவுக்கு அதிகாரமில்லாத சூழ்நிலை உருவாகியிருப்பதை கலைஞர் அவர்கள் வேதனையோடு குறிப்பிட்டார்கள்.





மத்திய அரசாங்கத்திற்கு எத்தனை அதிகாரங்கள்? 90: மாநில அரசாங்கத்திற்கு எத்தனை அதிகாரங்கள்? இரண்டிற்கும் சேர்த்து எத்தனை அதிகாரங்கள் என்று நம்முடைய உமாநாத் அவர்கள் குறிப்பிட்டதால் நான் அவைகளைப் பற்றி அதிகமாகக் குறிப்பிட விரும்பவில்லை. ஆனால், அவைகளைப் பற்றி ஒரு கருத்து என்னவென்றால், இந்த மூன்று அதிகாரத்திலேயும். மத்திய அரசாங்கத்திற்குச் சொந்தமான அதிகாரங்கள், மாநிலங்களுக்கு ஒப்படைக்கப்பட்ட அதிகாரங்கள், இரண்டிற்கும் அப்பாற்பட்டு மிச்சம் இருக்கிற அதிகாரங்கள், இந்த 3 அதிகாரங்களிலே, மாநில அரசாங்கத்திற்கு என்ன உரிமை இருக்கிறது என்பதை ஆழமாகச் சிந்தித்துப் பார்க்க வேண்டுகிறேன்.

மாநில அரசாங்கத்திற்கு உண்டான சட்டத்தின்படி ஒரு மாநில அரசாங்கம் இணங்க ஆரம்பித்தாலுங்கூட, அதைப் பயன்படுத்துகிற நேரத்திலே, அதற்கும் மத்திய அரசாங்கத்திடைய அனுமதி தேவைப்படுகிறது. அல்லது மிச்சம் இருக்கிற அதிகாரம்—ரெசிடுரி பவர்ஸ்—அதையும் நாம் பயன்படுத்த முற்பட்டாலும், அதற்கும் மத்திய அரசாங்கத்தினுடைய ஒப்புதலைப் பெற வேண்டி இருக்கிறது. ஆனால், மத்திய அரசாங்கம் மிகப் பெரிய அரசாங்கம், எல்லா அதிகாரங்களையும் உள்ளடக்கிய அரசாங்கம். தன்னுடைய அதிகாரத்தையும் பயன்படுத்திக் கொள்ளும், மாநில அரசாங்கம் தன்னுடைய அதிசாரத்தின்படி காரியம் ஆற்றினாலும், அதற்கும் மத்திய அரசாங்கத்தினுடைய அனுமதி பெறவேண்டுமென்ற ஆணையைப் பிறப்பித்துவிடும். எஞ்சிய அதிகாரங்களின் மீது மாநில அரசாங்கம் இயங்க ஆரம்பித்தாலுங்கூட, அதற்கு மத்திய அரசு தன்னுடைய அனுமதி தேவை என்று சொல்லிவிடும்.

ஆகவே, உமாநாத் அவர்கள் கொண்டு வந்திருக்கிற தீர்மானம் இருக்கிறதே அதிக அதிகாரம் தேவை என்ற தீர்மானம், அதைப்பற்றி சரியாகச் சொன்னால் நமக்கு அதிகாரமே இல்லை. இருந்தால்தானே கூடுதலாக அதிகாரம் கேட்க முடியும். ஆகவே, இப்பொழுது இருப்பது முழுமையான அதிகாரம் அல்ல. ஏதோ மேலுக்கு இருக்கிறது. எனவே இருக்கிற அதிகாரத்திற்கு மேலும் வேண்டுமென்று கேட்பது வாதத்திற்கு நியாயமாக இருக்குமே தவிர, We are powerless. We are totally powerless. அண்ணா அவர்கள் மனம் வெதும்பி சொன்னார். கடலிலே விளைகிற மீன்—அண்ணா அவர்கள் இலக்கிய ரீதியாக

[திரு. ஜே. எஸ். இராசு] [1980 ஜூலை 31

சொன்னார்-கடலிலே விளைகிற கனி என்று—அந்தக் கனியை வெளிநாட்டிற்கு அனுப்ப நமக்கு அதிகாரம் இருக்கிறதா? மிளகாய் நிறைய விளைகிறது, வெங்காயம் நிறைய விளைகிறது. மிளகாயும், வெங்காயமும் தேவைப்பட்டால் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யக் கூடிய அளவுக்கு மாநில அரசுக்கு அதிகாரம் இருக்கிறதா என்றால் இல்லை. மிகச் சாதாரண விஷயங்கள். ஆகவே, சின்ன விஷயங்களில்கூட, உரிமையற்ற நிலையில், இன்றைக்கு இந்திய நாட்டு அரசியல் சட்டம் நம்மை ஆட்டிப் படைத்துக் கொண்டிருக்கிறது.

ஆகவே, இந்தச் சூழ்நிலையில் ரஷியா, அமெரிக்கா போன்ற நாடுகள் திட்டங்களை வகுத்திருக்கின்றன......

மாண்புமிகு பேரவைத் தலைவர்:—திரு. ராஜு, அடுத்த, தனிநபர் அலுவல் நாளன்று தொடர்ந்து பேசுவார்.

[பிற்பகல் 1.30]

## 4. அறிவிப்புகள் (தொடர்ச்சி).

### (இ) பேரவையின் அலுவல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு.

இன்று கூடிய அலுவல் ஆய்வுக்குழுவில் எடுத்த முடிவுகளின் படி ஏற்கனவே அறிவிக்கப்பட்ட பேரவை நிகழ்ச்சிகளில் கீழ்க் கண்ட மாறுதல்கள் செய்யப்பட்டுள்ளன என்பதைப் பேரவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

| | |
|---|---|
| 1-8-1980 (வெள்ளிக்கிழமை) | அரசினர் சட்ட முன்வடிவுகள்—ஆய்வு செய்தலும் நிறைவேற்றுதலும் ஏற்கனவே அறிவிக்கப்பட்ட இனங்களுடன் கீழ்க்கண்ட சட்ட முன்வடிகளும் எடுத்துக் கொள்ளப்படும்.<br>(1) தமிழ்நாடு 1980 ஆம் ஆண்டு வணிகப் பயிர்கள் வரி விதிப்பு (ரத்து) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 18/1980).<br>(2) தமிழ்நாடு 1980 ஆம் ஆண்டு கூடுதல் நன்செய் தீர்வை கூடுதல் தண்ணீர் மேல்வரி, தனி நன்செய் தீர்வை தனித்தண்ணீர் மேல்வரி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 24/1980) |



1980 ஜூலை 31]

பேரவைத் தலைவர்

| | |
|---|---|
| 2-8-1980 சனிக்கிழமை முதல் 4-8-1980 திங்கட்கிழமை முடிய | ஏற்கனவே அளிக்கப்பட்டபடி பேரவைக் கூட்டம் இல்லை. |
| 15-8-1980 செவ்வாய்க்கிழமை 6-8-1980 புதன்கிழமை | ஏற்கனவே அறிவிக்கப்பட்ட இனங்களில் 1-8-80 எடுத்துக் கொள்ளப்படும் இரண்டு இனங்கள் தவிர மற்ற இனங்களும் மற்றும் இரண்டு அரசினர் சட்ட முன்வடிவுகளும் எடுத்துக் கொள்ளப்படும். |
| 7-8-1980 வியாழக்கிழமை 8-8-1980 வெள்ளிக்கிழமை | ஏற்கனவே அளிக்கப்பட்டபடி |
| 9-8-1980 சனிக்கிழமை | பேரவைக் கூட்டம் இல்லை. காலை 11.00 மணிக்கு சட்டமன்றப் பேரவையில்—<br>1. தந்தை பெரியார்<br>2. டாக்டர் அம்பேத்கார்<br>3. திரு. காய்தே மில்லத்<br>4. திரு. பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர்<br>ஆகியோரின் திருஉருவப் படங்கள் திறந்து வைக்கப்படும். |
| 10-8-1980 ஞாயிற்றுக் கிழமை | விடுமுறை |
| 11-8-1980 திங்கட்கிழமை 12-8-1980 செவ்வாய்க்கிழமை | அரசினர் சட்ட முன்வடிவுகள்—ஏற்கனவே அறிமுகம் செய்யப்பட்டனவும் இனி அறிமுகம் செய்யப்பட இருப்பனவும் ஆய்வு செய்தலும், நிறைவேற்றுதலும். |

பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று நாளை (1-8-1980) காலை 9.00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1.31 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

## 7. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

### அ. சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்.

72. தமிழ்நாடு 1956 ஆம் ஆண்டு பாசன (மேம்பாட்டுப் பங்குத் தொகை விதித்தல்) விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து, வருவாய்த் துறையின் 26-11-1979 ஆம் தேதியிடப் பெற்ற 2553-ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு (தமிழ்நாடு 1955 ஆம் ஆண்டு பாசன (மேம்பாட்டுப் பங்குத் தொகை விதித்தல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 3/1955) 1 (2) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

### ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய. தாள்கள்

எதுவுமில்லை.

123070

## LIST OF AGENTS FOR THE SALE OF TAMIL NADU GOVERNMENT PUBLICATIONS

### IN MADRAS CITY.

1 Account Test Institute. Egmore. Madras-8.
2 The City Book Company, Madras-4.
3 Higginbothams (Private) Limited. Madras-2.
4 P Varadachary and Company, Madras-1.
5 C. Subbiah Chetty and Company, Madras-5.
6 The Universal Book House, Moore Market. Madras-3.
7 C. Sitharaman and Company, Madras-14.
8 Mohan Pathippagam and Book Depot, Madras-5.
9 C. Venkatesan Chetty and Company No. 8-C, Pycrofts Road Madras-5
10 The South India Saiva Siddhanta Works Publishing Society, (Tirunelveli) Limited. Madras-1.
11 The Sangam Publishers, No. 11, Sunkurama Chetty Street, Madras-1.
12 New Century Book House (Private) Limited, Madras-2.
13 Kalaivani Book Centre. No. 1, Ponniamman Koil Street. Egmore. Madras-8

### IN MOFFASIL OF TAMIL NADU.

1 A. Venkatasubban and Company, Velore (North Arcot) District
2 Bharathamatha Book Depot, Thanjavur (Tanjore District).
3 P. V. Nathan and Company, Kumbakonam (Tanjore) District
4 Appar Book Stall, Thanjavur.
5 P. N. Swaminathan and Company, Bazaar Street, Pudukkottai.
6 Palaniappa Bros., Tiruchirappalli-2.
7 S. R. Subramania Pillai, Tirunelveli Junction.
8 B. Aruldoss, Villupuram (South Arcot District).
9 Vasantham Stores, Booksellers, 9/31, Cross Cut Road Coimbatore 17
10 Mercury Book Company 20, Karuppa Gounder Street, Coimbatore-1
11 S. M. Jegannatham Book House, 35, Nandhi Koil Street, Tiruchi-1.
12 Ganesh Stores, South Car Street, Sivakasi.
13 Mary Martin, Booksellers, Kotagiri (The Nilgiris).
14 A. K. Chandriah Chettiar and Sons, Salem-1.
15 Parameswari Book Shop, No. 46D, Old Market Street, Salem.
16 Meenakshi Pathippagam, Pudukkottai.
17 K. V. Narayana Iyer and Sons, Dindigul, Madurai District.
18 Javakumari Stores. Nagercoil (Kanyakumari District).
19 Baby Stores. Booksellers, Villupuram (South Arcot District)
20 Dinamani Stores, No 3/1. Old Post Office Road. Coimbatore 18
21 Kumaran Book Depot, Booksellers, Erode-1.
22 Vela Book Company, No. A. Annaji Rao Street, Erode-1
23 Radhamani Stores, 6-A, Raja Street, Coimbatore-1.
24 Ajentha Book Centre, Salem-1.
25 Sri Vidya, 63, Tennure High Road, Tiruchy-2.
26 Sri Ramavilas Book Shop, 90, Amman Sannathi Madurai-1.

### IN OTHER STATES

1 Jain Book Agency, New Delhi-1.
2 International Book House, Trivandrum.
3 The Book Syndicate, Hyderabad-1
4 Labour Law Publications, Hyderabad.
5 Puthaghaleyam, Pondicherry.
6 Prabu Book Service, Gurgaon, Haryana.
7 K. P. Bagchi and Company, 286, B. B. Ganguli Street, Calcutta-17.

PUBLISHED UNDER RULES 234 AND 237 OF THE TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY RULES AND PRINTED BY THE DIRECTOR OF STATIONERY AND PRINTING, MADRAS.